
தருமை
கனகாபிஷேக விழா மலர் 1961

உ

குருபாதம்

கனகாபிஷேக விழா மலர்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகளின்
பொன்னார் திருவடிகளில் மலர் தூவிச்செய்துகொள்ளும்

சமர்ப்பணம்

உ

குருபாதம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்

தருமபுரம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காதேவி



252

உ


குருபாதம்

குருவணக்கம்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்துமெரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணியன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணியெவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியுமிரு கடைக்கணுளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமனிரு சரணமலர் பரவி வாழ்வாம்.

வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான சித்திநெறி
காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றருமை வாழ்ஞான சம்பந்தக்
குரவன் மேலாஞ்
சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடூழி
தழைக மாதோ.



தருமையாதீனக் குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்

கனகாபிஷேக விழா மலர்

சகம் 1882, சார்வரி - மாசி 29

12—3—1961

வெளியிடுவோர்:-

கனகாபிஷேக விழாக் குழுவினர்

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

குருபாதம்

முன்னுரை

"குரவனே அயன்அரி குரவ னேசிவன்
குரவனே தந்தைதாய் குரவ னேயெலாம்
குரவனே என்றுநூல் கூறும் உண்மையைக்
குரவனே என்னிடை இன்று காட்டினுய்" —காஞ்சிப்புராணம்.

இறைவன் நமக்குச் சற்குருவாக வந்து அருள் வழங்குகிருன். அந்தச் சற்குருவே நமக்குக் கடவுள். கடவுளுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகள் முதலிய எல்லாவற்றையும் நாம் நம் ஆசாரியருக்கே செய்தல்வேண்டும். நம் குரவருக்குச் செய்யும் வழிபாடுகள் எல்லாம் இறைவனுக்கே செய்ததாகும் என்று அருள்நூல்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன.

இறைவனை நாம் வழிபடும் முறையில், அபிஷேகம், அர்ச்சனை, நிவே தனம் செய்து தோத்திரித்து வணங்குதல் வேண்டும் என்பது நம்முன்னேர் வகுத்த விதியாகும். அவற்றுள் கனகாபிஷேகம் என்பது இறைவனுக்குச் செய்யும் சிறப்பு அபிஷேகங்களில் ஒன்று. நமது பெருநூல்கள் இறைவனுக்கும் ஆசாரியப் பெருமக்களுக்கும் அரசனுக்கும் பெரும் புலவர்களுக்கும் கனகாபி ஷேகம் செய்தல் சிறப்பு என்று சொல்கின்றன. இறைவனுக்குச் செய்யும் வழிபாடு அர்ச்சனை என்ற வடமொழிச்சொல்லால் வழங்கப்படுகிறது. 'அர்ச்சனை'[1] என்ற சொல்லுக்கு 'வழிபாடு' என்று பொருள். அர்ச்சனை என்ற சொல் சிறப்பாகப் பெருமான் புகழ் சொல்லி மலர் தூவி வழிபடுதலைக் குறிப்பதாக இப்பொழுது வழக்கில் அமைந்துவிட்டது. பெருமானுக்கு விதித்தவற்றுள் சிறந்த மலர்களால் செய்யும் அர்ச்சனையைவிடப் பொன்மலரால் செய்யும் அர்ச்சனை பதின்மடங்கு பயனைத் தரும் என்று யஜுர் வேதத்தில்[2] சொல்லப்பட்டிருக்கிறது.

---

[1] அர்ச் - என்ற வேர்ச்சொல்லுக்குப் பூஜாயாம் என்பது பொருள்.

[2] अलाभे तु स पुष्पाणां पत्राण्यपि निवेदयेत् ।
पत्राणामप्यलाभे तु तृणगुल्मौषधीरपि ॥
औषधीनामलाभे तु भक्त्या भवति पूजनम् ।
यत् पुण्यं प्रतिपुष्पे तद्दशधा स्वर्णनिर्मिते ॥

காமிகாகமத்தில் பின்னர் வரும் விதிமுறைகள் கூறப்பெற்றுள்ளன. “ உலகின்கண் உண்டாகும் சர்வ உத்பாதங்களும் நீங்கி உலகம் நன்மையடைதற் பொருட்டுச் சுப முகூர்த்தத்தில் செய்யவேண்டிய அபிஷேகமுறை பின்வருமாறு ” என்று கூறத்தொடங்கி, “ தேவாலயம் நந்தவனம் முதலிய ஏதாவதொரு நல்ல இடத்தில் தோரணங்களால் அலங்கரித்துப் பொன் வெள்ளி பால்மரம் முதலிய வைகளால் செய்யப்பெற்ற பீடத்தில் புஷ்பத்தைப் பரப்பி, அதன்மேல் பொன்னைப் பரப்பி, நீராடித் தூய ஆடையலங்காரத்துடன் விளங்கும் கர்த்தாவை அதில் அமர்த்தி, அமைச்சர், புரோகிதர், சோதிடர், பரிசனங்கள் முதலியோர் புடைசூழ வாத்யங்கள் முழங்க “ சுராஸ்த்வா மபிஷிஞ்சந்து ” “ ஹிரண்யவர்ண ” என்பன முதலிய மந்திரங்களால் அபிஷேகம் செய்யவேண்டும். பின்னர் ஆடை அணிகலன்களால் அலங்காரம் செய்யவேண்டும். ”

இந்தத் தருமையாதீனத்தில் 10-ஆவது பட்டத்தில் எழுந்தருளி அற்புதங்கள் பல நிகழ்த்திய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமி களுக்கு மலைநாட்டு அரசன் துங்கன் கனகாபிஷேகம் செய்வித்தான் என்றும், ஆதீன அடியவர் திருக்கூட்டத்துள் ஸ்ரீமத் சம்பந்த சரணாலய சுவாமிகளுக்கு மைசூர் மன்னன் கனகாபிஷேகம் செய்வித்தான் என்றும், சாரங்கித் தம்பிரான் என்ற அருளாளருக்குத் திருவனந்தபுரத்து அரசன் கனகாபிஷேகம் செய்வித்தான் என்றும் ஆதீன வரலாறு கூறுகிறது. ஸ்ரீமத். அப்பைய தீக்ஷித ருக்கு அப்பொழுது இருந்த சின்னபொம்மன் என்ற மன்னன் கனகாபிஷேகம் செய்வித்தான் என்பது வரலாறு.

நமது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் ஆட்சியேற்றது முதல் அன்பர்களை அழைத்து அறிவுரை வழங்கியும், இறைபணி, மக்கள்பணி, கல்விப் பணி முதலியவற்றைச் சிறக்கச்செய்தும், பாரதபூமியில் உள்ள பெருந்தலங்கள் தீர்த்தங்கள் எல்லாவற்றையும் வழிபட்டும் வந்த பெருமையோடு இமயத்திலும் அதற்கு அப்பாலும் உள்ள தலங்களையும் (மகாகயிலாயம் மானசசரோவரம்) சென்று வழிபட்டு வந்த தனிச்சிறப்பு உடையவர்கள்.

‘ அன்பு மிக்கவர்களாய் நல்லன தீயனவற்றை அறியும் அறிவும் நிலையின இவை நிலையாதன இவை எனப் பகுத்துணரும் விவேக ஞானமுமுடைய வர்களாய், தத்தமக்குற்ற வினைகளைப் போக்கிக்கொள்ளும் எண்ணமுடையவ

களாய் இன்ப நிறைவான இறைவன் திருவருளைப் பெறும் வேட்கை உடையவர் களாய் ஓடிவரும் அடியார்களுக்கு உபதேசம் அருளுக' என்ற அக்கால வழக்கத்தில் காலத்திற்கேற்ற ஒருசில மாற்றங்கள் செய்துகொண்டு மக்களை நாடிச்சென்று நல்வழிப்படுத்தி அருளுரை வழங்கும் தன்மையும் கண்டு, நன்றிசெலுத்தும் எண்ணத்தோடு கயிலைக்குருமகாசந்நிதானத்திற்கு ஒருசிறு அளவில் கனகாபிஷேகம் செய்விக்க மாயூரம் நகரச் சைவப்பேரன்பர்கள் கூடி முதலில் முடிவு செய்தோம். அச்செய்தி வெளிமாவட்டங்களில் உள்ள மெய்யன்பர்களுக்கும் எட்டிவிட்டது. அதன்பயனாகத் திட்டம் மிகவிரிவடைந்து இப்போழுது மிகப்பெரிய அளவில் மக்களின் ஆர்வத்தின் பெருமையைக் காட்டக் கூடியதாக அமைந்திருக்கிறது.

1008 அரைப்பவுன் அளவுள்ள போன்மலர்களைக் கோண்டு கனகாபி ஷேகம் செய்யுமளவுக்குத் திட்டம் பெருகியிருக்கிறது. சிலர் இடத்தையும், அபிஷே கிக்கப்பெறும் குருமகாசந்நிதானத்தின் பெருமையையும் அருமையையும் கருதி இன்னும் சிறிது காலத்தைத் தள்ளிவைத்தாவது நவரத்னாபிஷேகம் செய்யலாம்; அதுவே போருத்தம் என்றும் எண்ணினார்கள். ஆனாலும் தோடங்கிய நல்ல காரியங்களை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் செய்துமுடித்தலே சிறப் பாகும். மனித முயற்சி வீணாபோகக்கூடாதல்லவா? இந்தக் கனகாபிஷேகம் மாயூரம் அன்பர்களின் விழாவாக நடத்த நினைத்த ஒன்று, இப்போது தமிழ் நாட்டு விழாவாகத் தமிழர் பெருவிழாவாக விரிவடைந்துவிட்டது.

இந்த நிலையில் கனகாபிஷேகம் 12—3—1961 ஆகிய இன்று நடைபெறுகிறது. விழாவில் வழங்க இந்த நன்மலரும் உருவாகிவிட்டது. விழா மலர் வெளியிடும் செய்தி வெளிவந்தவுடன் பேரறிஞர்கள் பலரும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை ஆர்வத்தோடு அனுப்பியுதவினர். சமயம், இசை, இலக்கியம் முதலிய பலவகையான ஆராய்ச்சிக் கட்டுரைகளை உதவி இம்மலர் எப்போழுதும் எங்கணும் மணம் வீசும்படிச் செய்திருக்கிறார்கள். சமய ஞானி களும், நாட்டு ஆட்சிப்பெருந்தலைவர்களும், அன்பர்களும் வாழ்த்துரை தந்து சிறப்பித்துள்ளனர். எல்லோருக்கும் எங்கள் நன்றி.

இந்த நல்விழாவில் முழுமனத்தோடு பேரார்வம் கோண்டு பணிசெய்த கோவைப் பெருவணிகர் PL. கண்ணப்பச் சேட்டியார் அவர்கள் இதே சிந்தனை யோடு முருகன் அழைக்க அவன் திருவடியில் கலந்துவிட்டார்கள். அவர்கள்

ஊனுடல் நம்மோடு இப்போது இல்லாவிட்டாலும் அந்த நல்லுயிர் நாம் செய்யும் பணி முற்றுப்பெறவேண்டுமென்று நம்மோடு உடனாக நின்று ஊக்குவிக்கிறது.

இம் மலர்க்குழுவில் அங்கம் வகித்துப் பொறுப்பேற்று முடித்துக் கொடுத்த நண்பர்களுக்கும் ஒப்புநோக்கிப் பிழை திருத்தி மலரை உருவாக்கிய ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் நன்றி. குறுகியகாலத்தில் அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த ஞானசம்பந்தம் அச்சகத்தினருக்கும் நன்றி. விழா எல்லாவகையாலும் சிறப்புற அமைய உதவிய அன்பர்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றி.

வாழ்க உலகெலாம்! வளர்க நலமெலாம்!!

இன்னணம்,

மாயூரம்,
12—3—61.

கனகாபிஷேக விழாக்குழுவினர்.

உள்ளுறை


பகுதி 1

பகுதி 2

பகுதி 3

பட அட்டவணை

உனக்குப் பணிசெய்ய உன்றனையெந் நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா—மனக்கவலை
நீக்குகின்ற தென்மதுரை நின்மலனே எவ்வுலகும்
ஆக்குகின்ற சொக்கநா தா.



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

குருபாதம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளியவை

[illegible]

1. பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

[illegible] 1

[illegible] 2

[illegible] 3

[illegible] 4

உ

குருபாதம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்

25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாயத் திருப்பதிகங்கள்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளியவை

1. பண் — தக்கேசி

திருச்சிற்றம்பலம்

பொடிகொளுருவர் புலியினதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர் கறைசேர்கண்டத்தர்
இடியகுரலா லிரியுமடங்கல் தொடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார் கயிலை மலையாரே. 1

புரிகொள்சடைய ரடியர்க்கெளியார் கிளிசேர் மொழி மங்கை
தெரியவுருவில் வைத்துகந்த தேவர்பெருமானர்
பரியகளிற்றை யரவுவிழுங்கி மழுங்கவிருள்கூர்ந்த
கரியமிடற்றர் செய்யமேனிக் கயிலை மலையாரே. 2

மாவினுரிவை மங்கைவெருவ மூடி முடிதன்மேல்
மேவுமதியு நதியும்வைத்த விறைவர் கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர் திரங்கன் முகவன்சேர்
காவும்பொழிலுங் கடுங்கற்சுனைசூழ் கயிலை மலையாரே. 3

முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட முதல்வர் மதனன்றன்
தென்னீருருவ மழியத் திருக்கண் சிவந்தநுதலினர்
மன்னீர்மடுவும் படுகல்லறையி னுழுவை சினங்கொண்டு
கன்னீர்வரைமே லிரைமுன்தேடுங் கயிலை மலையாரே. 4

ஒன்றும் பலவு மாய வேடத் தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்து நாடற்குரியார் கூடித் திரண்டெங்கும்
தென்றியிருளிற் றிகைத்தகரிதண் சார னெறியோடிக்
கன்றும்பிடியு மடிவாரஞ்சேர் கயிலை மலையாரே. 5

தாதார்கொன்றை தயங்குமுடியர் முயங்குமடவாளைப்
போதார்பாக மாகவைத்த புனிதர் பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனு யறநான் கருள் செய்த
காதார்குழையர் வேதத்திரளர் கயிலை மலையாரே. 6

• • • • • 7

தொடுத்தார்புரமூன் றெரியச்சிலைமே லெரியொண்பகழியார்
எடுத்தான்திரள்தோண் முடிகள்பத்தும் மிடியவிரல் வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக் குறுகி வருங் கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார் கயிலை மலையாரே. 8

ஊணாப்பலிகொண் டுலகிலேற்று ரிலகு மணிநாகம்
பூணாணாரமாகப்பூண்டார் புகழு மிருவர்தாம்
பேணாவோடி நேடவெங்கும் பிறங்குமெரியாகிக்
காணாவண்ண முயர்ந்தார்போலும் கயிலை மலையாரே. 9

விருதுபகரும் வெஞ்சொற்சமணர் வஞ்சச் சாக்கியர்
பொருதுபகரு மொழியைக் கொள்ளார் புகழ்வார்க் கணியராய்
எருதொன்றுகைத்திங் கிடுவார்தம்பா லிரந்துண் டிகழ்வார்கள்
கருதும்வண்ண முடையார்போலுங் கயிலை மலையாரே. 10

போரார்கடலிற் புனல்சூழ்காழிப் புகழார் சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற் கயிலை மலையார்மேல்
தேராவுரைத்த செஞ்சொன்மாலை செப்புமடியார்மேல்
வாராபிணிகள் வானேருலகின் மருவு மனத்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

2. திருவிராகம். பண் — சாதாரி

திருச்சிற்றம்பலம்

வாளவரி கோளபுலி கீளதுரி தாளின்மிசை நாளுமகிழ்வர்
ஆளுமவர் வேளநகர் போளயில கோளகளி றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ மீளிமிளிர் தூளிவளர்பொன்
காளமுகின் மூளுமிருள் கீளவிரி தாளகயி லாயமலையே. 1

புற்றரவு பற்றியகை நெற்றியது மற்றொருக ணொற்றைவிடையன்
செற்றதெயி லுற்றதுமை யற்றவர்கள் நற்றுணைவ னுற்றநகர்தான்
சுற்றுமணி பெற்றதொளி செற்றமொடு குற்றமில தெற்றெனவினாய்க்
கற்றவர்கள் சொற்றொகையின் முற்றுமொளி பெற்றகயி லாயமலையே. 2

சிங்கவரை மங்கையர்க டங்களன செங்கைநிறை கொங்குமலர்தூய்
எங்கள்வினை சங்கையவை யிங்ககல வங்கமொழி யெங்குமுளவாய்த்
திங்களிரு ணொங்கவொளி விங்கிமிளிர் தொங்கலொடு தங்கவயலே
கங்கையொடு பொங்குசடை யெங்களிறை தங்குகயி லாயமலையே. 3

முடியசடை பிடியதொரு வடியமழு வுடையர்செடி யுடையதலையில்
வெடியவினை கொடியர்கெட விடுசில்பலி நொடியமகி ழடிகளிடமாம்
கொடியகுர லுடையவிடை கடியதுடி யடியினொடு மிடியினதிரக்
கடியகுர ணொடியமுகின் மடியவத ரடிகொள்கயி லாயமலையே. 4

குடங்கையி னுடங்கெரி தொடர்ந்தெழ விடங்கிளர் படங்கொளரவம்
மடங்கொளி படர்ந்திட நடந்தரு விடங்கன திடந்தண் முகில்போய்த்
தடங்கட றொடர்ந்துட னுடங்குவ விடங்கொளமி டைந்தகுரலால்
கடுங்கலின் முடங்கலை நுடங்கர வொடுங்குகயி லாயமலையே. 5

ஏதமில பூதமொடு கோதைதுணை யாதிமுதல் வேதவிகிர்தன்
கீதமொடு நீதிபல வோதிமற வாதுபயி னாதனகர்தான்
தாதுபொதி போதுவிட வூதுசிறை மீதுதுளி கூதனலியக்
காதன்மிகு சோதிகிளர் மாதுபயில் கோதுகயி லாயமலையே. 6

சென்றுபல வென்றுலவு புன்றலையர் துன்றலொடு மொன்றியுடனே
நின்றமர ரென்றுமிறை வன்றனடி சென்றுபணி கின்றநகர்தான்
துன்றுமலர் பொன்றிகழ்செய் கொன்றைவிரை தென்றலொடு சென்றுகமழக்
கன்றுபிடி துன்றுகளி றென்றிவைமுன் னின்றகயி லாயமலையே. 7

மருப்பிடை நெருப்பெழு தருக்கொடு செருச்செய்த பருத்தகளிறின்
பொருப்பிடை விருப்புற விருக்கையை யொருக்குட னரக்கனுணரா
தொருத்தியை வெருக்குற வெருட்டலு நெருக்கென நிருத்தவிரலால்
கருத்தில வொருத்தனை யெருத்திற நெரித்தகயி லாயமலையே. 8

பரியதிரை யெரியபுனல் வரியபுலி யுரியதுடை பரிசையுடையான்
வரியவளை யரியகணி யுருவினெடு புரிவினவர் பிரிவினகர்தான்
பெரியவெரி யுருவமது தெரியவுரு பரிவுதரு மருமையதனுல்
கரியவனு மரியமறை புரியவனு மருவுகயி லாயமலையே. 9

அண்டர்தொழு சண்டிபணி கண்டடிமை கொண்டவிறை துண்டமதியோ
டிண்டைபுனை வுண்டசடை முண்டதர சண்டவிருள் கண்டரிடமாம்
குண்டமண வண்டரவர் மண்டைகையி லுண்டுளறி மிண்டுசமயம்
கண்டவர்கள் கொண்டவர்கள் பண்டுமறி யாதகயி லாயமலையே. 10

அந்தண்வரை வந்தபுன றந்ததிரை சந்தனமொ டுந்தியகிலும்
கந்தமலர் கொந்தினெடு மந்திபல சிந்துகயி லாயமலைமேல்
எந்தையடி வந்தணுகு சந்தமொடு செந்தமிழி சைந்தபுகலிப்
பந்தனுரை சிந்தைசெய வந்தவினை நைந்துபர லோகமெளிதே. 11

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு நாயனூர் அருளியவை

3. திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

கனகமா வயிரமுந்து மாமணிக் கயிலைகண்டும்
உனகனு யரக்கனேடி யெடுத்தலு முமையாளஞ்ச
அனகனுய் நின்றவீச னூன்றலு மலறி வீழ்ந்தான்
மனகனு யூன்றினேன் மறித்துநோக் கில்லையன்றே. 1

கதித்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
அதிர்த்தவ னெடுத்திடல்லு மரிவைதா னஞ்சவீசன்
நெதித்தவ னூன்றியிட்ட நிலையழிந் தலறி வீழ்ந்தான்
மதித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லையன்றே. 2

கறுத்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையைக்கையால்
மறித்தலு மங்கையஞ்ச வானவ ரிறைவ னக்கு
நெறித்தொரு விரலாலூன்ற நெடுவரை போலவீழ்ந்தான்
மறித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லையன்றே. 3

கடுத்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
எடுத்தலு மங்கையஞ்ச விறையவ னிறையேநக்கு
நொடிப்பள விரலாலூன்ற நோவது மலறியிட்டான்
மடித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லையன்றே. 4

கன்றித்தன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
வென்றித்தன் கைத்தலத்தா லெடுத்தலும் வெருவமங்கை
நன்றுத்தா னக்குநாத னூன்றலு நகழவீழ்ந்தான்
மன்றித்தா னூன்றினேன் மறித்துநோக் கில்லையன்றே. 5

கனித்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
நெளித்தவ னெடுத்திடல்லு நேரிழை யஞ்சநோக்கி
வெளித்தவ னூன்றியிட்ட வெற்பினு லலறிவீழ்ந்தான்
மளித்திறை யூன்றினேன் மறித்துநோக் கில்லையன்றே. 6

சுருத்தனய்க் கண்சிவந்து கயிலைநன் மலையைக்கையால்
எருத்தனை யெடுத்தவாறே யேந்திழை யஞ்சவீசன்
திருத்தனய் நின்றதேவன் றிருவிர லூன்றவிழ்ந்தான்
வருத்துவா னூன்றினனேன் மறித்துநோக் கில்லையன்றே. 7

கடியவன் கண்சிவந்து கயிலைநன் மலையையோடி
வடிவுடை மங்கையஞ்ச வெடுத்தலு மருவநோக்கிச்
செடிபடத் திருவிரல்லா லூன்றலுஞ் சிதைந்துவிழ்ந்தான்
வடிவுற வூன்றினனேன் மறித்துநோக் கில்லையன்றே. 8

கரியத்தான் கண்சிவந்து கயிலைநன் மலையைப்பற்றி
இரியத்தா னெடுத்திடல்லு மேந்திழை யஞ்சவீசன்
நெரியத்தா னூன்றுமுன்ன நிற்கிலா தலறிவிழ்ந்தான்
மரியத்தா னூன்றினனேன் மறித்துநோக் கில்லையன்றே. 9

கற்றனன் கயிலைதன்னைக் காண்டலு மரக்கனேடிச்
செற்றவ னெடுத்தவாறே சேயிழை யஞ்சவீசன்
உற்றிறை யூன்றுமுன்ன முணர்வழி வகையால்விழ்ந்தான்
மற்றிறை யூன்றினனேன் மறித்துநோக் கில்லையன்றே. 10

திருச்சிற்றம்பலம்

4. போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி யுள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 4

ஊராகி நின்ற உலகே போற்றி ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையா துயிரா திருந்தாய் போற்றி என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாக மாகத் தணைத்தாய் போற்றி ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவாய் அடியேனுக் கெல்லாம் போற்றி அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 9

நெடிய விசும்போடு கண்ணே போற்றி நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலிப் போற்றி யங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொற் கேட்டாய் போற்றி பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 11

திருச்சிற்றம்பலம்

5. போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி பூதப்படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 1


முன்பாகி நின்ற முதலே போற்றி மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கனியாய் போற்றி ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி யென்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மாலை யெழுந்த மதியே போற்றி மன்னியென் சிந்தை யிருந்தாய் போற்றி
மேலை வினைக ளறுப்பாய் போற்றி மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக்கரும்பின் தெளிவே போற்றி அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 3

உடலின் வினைக ளறுப்பாய் போற்றி ஒள்ளெரி வீசும் பிரானே போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலி லொளியாய முத்தே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 4


மைசேர்ந்த கண்ட முடையாய் போற்றி மாலுக்கும் ஓராழி யீந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால்வெண்ணீ றாடி போற்றி மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசே ரனலேந்தி யாடி போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 5

கயிலைநதிக்கரையில் :




கயிலாயநாதர், நந்தி பிரதிஷ்டையும் வழிபாடும்

கயிலை வழியில் :




கௌரிகங்கை உற்பத்தி
திரிசூலிச்சிகர அடிவரை பனி உறைவுகள்

கயிலாயம் :



கிழக்குமுகம்

கயிலாயம் :



வடக்குமுகம்

ஆறேறு சென்னி முடியாய் போற்றி அடியார்கட் காரமுதாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனி யுடையாய் போற்றி நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை * மணவா போற்றி கொள்ளுங் கிழமையே ழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 6

அண்டமே ழன்று கடந்தாய் போற்றி ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி தொழில்நோக்கி யாளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 7

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி பேராநோய் பேர விடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் உள்ளாய் போற்றி ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி ஆரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 8

செய்ய மலர்மேலான் கண்ணன் போற்றித் தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ்சுண்டபொறையேபோற்றிபொருளாகவென்னையாட்கொண்டாய்போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 9

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச் சிலையெடுக்க வாயலற வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 10

திருச்சிற்றம்பலம்

6. போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பாட்டான நல்ல தொடையாய் போற்றி பரிசை அறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 1

* மழுவா என்றும் பாடம்.

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி சாம்பர் மெய்பூசுந் தலைவா போற்றி
எதிரா வுலகம் அமைப்பாய் போற்றி என்றும் மீளாவருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 2

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி செல்லாத செல்வ முடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி ஆகாய வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியாய் அணியாய் போற்றி வேளாத வேள்வி யுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 3

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 4

முன்னியா நின்ற முதல்வா போற்றி மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி ஏழின் இசையே உகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி மந்திரமுந் தந்திரமு மானாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 5

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி உணர்வென்னும் ஊர்வ துடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி ஏசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியா யமரர்கட் கெல்லாம் போற்றி அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 6

எண்மேலும் எண்ண முடையாய் போற்றி ஏறரிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி பண்ணொடி யாழ்வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி மேலார்கள் மேலார்கள் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 7

முடியார் சடையின் மதியாய் போற்றி முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியார் அடிமை அறிவாய் போற்றி அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்று மெய்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி. 8

போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான்மே லிருந்தாய் போற்றி எண்ணு யிரநூறு பெயராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி நான்முகற்கும் மாற்கும் அரியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார் அருளியது

7. பண் — பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 1

ஆனை உரித்தபகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலஞ்செய்தெனை ஏறவைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 2

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயுந் தொண்டனெனை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே. 3

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்
டாழ முகந்தஎன்னை அதுமாற்றி அமரரெல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரம்அல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 4

மண்ணுல கிற்பிறந்து நும்மை வாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே.

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் ஞடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்பரம் அல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 6

நிலைகெட விண்அதிர நிலம்எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானைஏறி வழியேவரு வேன்எதிரே
அலைகட லால்அரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. 7

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந் தெதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 8

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரனென்றான் நொடித்தான்மலை உத்தமனே. 9

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்தேத்திய பத்திவையும்
ஆழி கடலரையா அஞ்சையப்பர்க் கறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்

கனகாபிஷேக மலர்

தருமையாதீன முதற்பெருங்குரவர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருள் வரலாறும்

வாழ்த்துச் செய்திகளும்

பகுதி 1

உ
குருபாதம்

தருமையாதீன முதற்பெருங்குரவர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருள் வரலாறு

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டில் நீர்வளமும், நிலவளமும் ஒருங்குமிக்க ஸ்ரீவில்லிபுத்தூரிலே சுமார் 450 ஆண்டுகட்கு முன்னர், சிறப்புமிக்க கார்காத்த சைவ வேளாளர் குலத்தில், சிவபக்தியில் தலைநின்ற சுப்பிரமணியப் பிள்ளை என்பவர்க்கும், அவர் வாழ்க்கைத் துணைவியாகிய வான்தருகற்பின் வரந்தரு சிறப்புடைய மீனாட்சியம்மையார்க்கும் தாம் செய்த சிவபூசனைத் தொண்டின் புண்ணியப் பயனால் மங்கள நல்முகூர்த்தங்கூர்ந்த திங்கட்கிழமையன்று ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருவவதாரஞ் செய்தருளினர். தாய்தந்தையர் கழிபேருவகையுற்று அன்னாருக்கு ஞான சம்பந்தன் எனுந்திருப்பெயரிட்டு அழைக்கவும், பதினாறும் ஆண்டிற்குள் தமிழ்மொழி வடமொழிகள் இரண்டினும் மிக வல்லுநராய், ஆகம சாத்திரங்களெல்லாம் கற்றுத் தெளிந்து சிவஞானச் செம்மலாய்த் திகழ்ந்தார்.

இங்ஙனமிருந்து வருங்காலத்தில் ஒருநாள் ஞானசம்பந்தருடைய தாய் தந்தையர்கள், தங்களுடைய ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளை வழிபடும் அவாமிக்கு மதுரையம்பதிக்குப் புறப்படுங்கால் தம் அருமை மகனாராகிய ஞானசம்பந்தரையும் உடன் அழைத்துச்சென்றார்கள். சென்று, ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானையும் அங்கயற்கண்ணியையும் வழிபட்டுக்கொண்டு காட்சியின்பத்தில் மூழ்கி அங்கேயே சிலநாள் தங்கியிருந்தனர். பின்னர், தங்களூருக்குத் திரும்பும் நிலையில் தம் புதல்வராகிய ஞானசம்பந்தரையும் அழைக்கவே, அதற்கவர் தாய் தந்தையர்களைப் பார்த்து, "என் தாய்தந்தையர்கள் இவ்வாலயத்தின்கண்ணே இருக்கையில், அவர்களைவிட்டுப் பிரிந்து உங்களுடன் வாரேன்" என்று சாத்திர வாயிலாக அமைதியும் ஏதுவுங்கூற, அவர்கள் ஒருவாறு மனம்தேர்ந்து தெளிந்து மதுரையிலேயே இருக்குமாறு அவரைவிட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் சென்றனர்.

பின்னர், ஞானசம்பந்தர் பூவினுக்கருங்கலமாம் பொற்றாமரைப் பொய்கையிற் குளித்துக் காதற்கசிவொடு நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு அழகர் ஆலவாயனையும் அங்கயற்கண்ணியையும் வழிபட்டுக் கைதொழுது பரவிப் பணிந்து பன்னாள்

வதிந்துவருகையில், ஒரு நன்னளிலே பொற்றமரைப் பொய்கைக்கரையிற் சிவனடியே சிந்திக்கும் அடியார்கள் சிலர், சிவபூசனை புரிந்து ஆனந்தக்கண்ணீர் அருவியாகப் பண்ணிடிய பதிகம் பல ஓதுதலைக் காது பெற்ற பயனைக் கேட்கலுற்றார். உறவே அவர்க்கும் அவ்வண்ணம் சிவபூசனை புரிதல்வேண்டும் என்னும் எண்ணம் தழைத்தது. உடன் ஆலவாயார் திருமுன்சென்று நின்று பண்ணிசையால் பணிந்து வேண்டித் தம் உறைவிடம் புக்கு அன்றிரவு துயிலமர்ந்தார். 'கடம்பமர்செல்வர்' கனவின்கண் எழுந்தருளி 'ஞானசம்பந்தா! நாம் சிவலிங்கரூபத்தில் பொற்றமரைப்பொய்கையின் ஈசான மூலையில் கங்கைக்குள்ளிருக்கின்றேம். காலையில் அங்குச்சென்று மூழ்கியெடுத்து உன் விருப்பப்படிப் பூசிப்பாயாக!' என்று அருளாணையிட்டு மறைந்தருளினர். ஞானசம்பந்தர் திடுக்கிட்டெழுந்து, என்னேவிந்தை! என வியப்புற்றுக் கண்ணுதலின் பாதம் நண்ணும் ஆசையால் ஆனந்தக்கூத்தாடிப் பாடிப் பரவியவண்ணமாக, வைகறைப் போதிலே பொற்றமரைத் தீர்த்தத்திற்குச் சென்று நீரில்மூழ்கிக் காணுங்கால் பெட்டகக் கோயிலொடும் தமதுகையில் வந்தெழுந்தருளிய சிவலிங்கப்பெருமானைக் கைப்போதால் ஆர எடுத்தணைத்துக் களிப்புமிக்கூர ஆடிக்கொண்டு சந்நிதானத்திற்போந்து, ஆலவாய்ச் சொக்கரை அலர்விழி அன்புநீர் சொரிய வழுத்தி,

"கண்ணுக் கினிய பொருளாகி யேயென் கரத்தில் வந்தாய்
விண்ணும் பரவிடும் அற்புத மேயென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட என்னையும் பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுரா புரிச்சோக்க நாயகனே"

என்னும் சொக்கநாதக் கலித்துறையைப்பாடி, "அடியேன் விழைந்த வண்ணமே அருள் செய்தீர்; இனி, இச்சிவலிங்கத்தை வழிபட்டு உய்தற்கேதுவாகிய சிவஞானேபதேசஞ் செய்தருளும் ஞானசாரியரையும் தந்தருளல் வேண்டும்" என்று விண்ணப்பித்து விடைபெற்றுக்கொண்டு தம்மிருக்கையிற்புக்குத் துயில் மருவுவாராயினர். மதிசூடிய அவ்வழகரே மீட்டும் கனவில் தோன்றியருளி "ஞானசம்பந்தா! திருவாரூரின்கண்சென்று நமது உபதேச பரம்பரையில் வந்த ஞானப்பிரகாச தேசிகரிடத்தில் ஞானேபதேசம் பெற்று நம்மை வழிபட்டு வருவாயாக!" என்று அருளிச் செய்து, அவ்வண்ணமே திருவாரூரில் "ஞானப்பிரகாசனே! சோமவாரத்தன்று உன்மாட்டு வருகிற நமது ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானேபதேசஞ் செய்து சிவலிங்க பூசையும் எழுந்தருளப்பண்ணிவைப்பாயாக!" எனக் கட்டளையிட்டுக் கரந்தருளினர்.

ஞானப்பிரகாச தேசிகர், சோமசுந்தரக்கடவுள் தம்மேல் கருணைகூர்ந்து கனவில் தோன்றிக் கட்டளையிட்டருளியவாறு திங்கட்கிழமையில் காலையிலெழுந்து போந்து கமலாலயத்தில் நீராடி நாளுஞ் செய்துவரும் அருள் ஒழுக்கமான சிவ பூசாதிகளை முடித்துக்கொண்டு, சிவாலயத்திற் சென்று, தியாகராசப் பெருமானைக் கண்களிப்பக்கண்டு வழிபட்டுச் சித்தீச்சரத்திலுள்ள தமது உபாசனமூர்த்தியாகிய

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் சந்நிதானத்தில் கிழக்குநோக்கி வீற்றிருந்து, ஞானசம்பந்தர் வருகையை விரும்பி எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். இவர் இவ்வாறிருக்க,

மல்லல் மதுரைப் பெருநகரின்கண் ஞானசம்பந்தர் தமக்குக் கனவில் சோமசுந்தரக்கடவுள் கட்டளையிட்டருளியதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் துயில்விட்டெழுந்து மெய்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி உள்ளம் நெக்குருகிக் கண்களில் நீராடத் தோத்திரித்து வணங்கி, வைகறையிலெழுந்து சிவாலயத்திற்குச்சென்று, பொற்றாமரைப் பொய்கையிலே மூழ்கி நித்திய கர்மானுஷ்டானங்களையெல்லாம் முடித்துக்கொண்டு ஆலவாயிறைவனையும் அங்கயற்கண்ணியையும் வழிபட்டு வணங்கி அருள்விடைபெற்றார். பின்னர், அங்கு நின்றும் புறப்பட்டுவருங்கால், இடையிலுள்ள திருவானைக்காவில் திருவெண்ணாவலுறை செஞ்சடையப்பரை வழிபட்டும், மற்றும் பல திருத்தளிகளை வழிபட்டும் குறிப்பிட்ட சோமவாரத்தன்று திருவாரூரையடைந்தார். கமலாலய தீர்த்தத்தில் மூழ்கி நாளுஞ் செய்யும் நல்லருளொழுக்கங்களை ஆற்றிக் கொண்டு, சிவாலயம் புக்குத் தொழுது வணங்கிக் குருநாதனுடைய அருட்காட்சி என்று கிட்டுமோவென ஆசையால் தாழ்ந்து கவற்சியுற்றவராய் வலம் வருகையில் சித்தீச்சரத்தின்கண் எழுந்தருளி ஆலமர் செல்வனின் (தக்ஷிணாமூர்த்தி) சந்நி தானத்தில் கிழக்குத்திசை நோக்கிப் பெருங்கருணைத் திறத்தொடும் வந்து மலஇருள் நீக்கியருளும் ஞான ஞாயிறேயென வீற்றிருக்கும் குருமூர்த்தியாகிய ஞானப்பிரகாசரைக் கண்டவுடன் தனக்குக் கனவில் உணர்த்தியருளப்பட்ட ஞானகுரவர் இவரேயெனத் தெளிந்து தாயைக்கண்ட கன்றுபோல விரைந்துசென்று திருவடி மலர்களில் வீழ்ந்து வணங்கி வழிபட்டார்.

அப்போது ஞானப்பிரகாச தேசிகர் ஆராவன்பின் அருளோடும் ஞானசம் பந்தரைத் தம் இருகைம்மலர்களாலும் ‘ தழுவியெடுத்து ஞானசம்பந்தா! அஞ்சற்க! ’ என்று அபயங்கொடுத்து, சந்நிதானத்தில் வடக்குமுகமாய் அமரவைத்துத் திருவருள் நோக்கத்தால் ஞானதீக்கை செய்து, தலைமேற்றிருவடிக் கமலஞ் சூட்டி, சிவஞானோ பதேசஞ் செய்து சொக்கலிங்கப்பெருமான் பூஜையையும் எழுந்தருளச்செய்து கொடுத் தருளினர். அச்சொக்கலிங்கப்பெருமானை ஞானபூஜா முறைப்படிவழிபட்டு, ‘சொக்கநாத வெண்பா’ என்னும் செந்தமிழ்ப்பாமாலை சூட்டியும் தங்குருநாதனாகிய ஞானப் பிரகாசதேசிகரை “ஞானப்பிரகாச மாலை” என்னும் நற்றமிழ் நூலாற்புகழ்ந்து திருவடிகளில் வீழ்ந்து வணங்கியும் வழிபட்டுநின்றார்.

இவ்வாறாக, திருவாரூரில் ஞானசம்பந்தர் குருநாதரின் திருவடி நீழலில் வைகிக் குருபணிவிடையை அன்பின் மலர்ச்சியால் ஆற்றிக்கொண்டு வருங்கால் ஒருநாள் சீடர் பலர் புடைசூழக் குருமூர்த்தியோடு கோயில்புக்கு அர்த்தயாம தரிசனஞ் செய்துகொண்டு திரும்புகையில் கைவிளக்குப்பணிவிடை செய்வோன் தூங்கிவிட்டமை

அறிந்து ஞானசம்பந்தர் தாமே சென்று கைவிளக்கையெடுத்துக்கொண்டு, இன்று இத் திருப்பணி செய்யும்பேறு கிட்டியதையெண்ணி மகிழ்ச்சி கூர்வாராய்க் குருநாதனுக்கு முன்சென்ருர். மடத்திற்குள் புகுமுன் ஞானப்பிரகாச தேசிகர் ஞானசம்பந்தரைநோக்கி ‘ நிற்க ’ எனப் பணித்துத் தாம் உட்சென்று துயில்வாராயினர்.

ஞானசம்பந்தரும் குருநாதனின் அருள்வண்ணப்படி கைவிளக்கைப் பிடித்த வாறே தமக்குபதேசித்தருளிய சிவஞானேபதேச நிலேயிலேயே விடியுங்காறும் நின்ருர். அன்றிரவு, பெருமழை பொழிந்தது. திருவருணேக்கால் அவர் திருமேனி யில் ஒரு துளியும் படாது ஒருகஜதூரம் வரைச் சுற்றிலும் சிறையமைத்ததுபோல் மண்ணகத்தும் நீர்புகாமல் நின்றது. மறுநாள் வைகறைப்போதில் சாண ந்தெளிக்க வந்த குருபத்தினியார் அப்பெற்றிமை கண்டு மனங்கவன்று வியப்பிலாழ்ந்தவராய் உள்ளே திரும்பியோடி ஞானப்பிரகாசருக்கு அறிவித்தார். அவர் சட்டென எழுந்து விரைந்து ஒடிவந்து பார்த்துத் திருவருளின் ஆற்றலேச் சிந்தித்துக் கண்களில் நீர் சோர ஞானசம்பந்தருழைச்சென்று தம் இருகைகளாலும் இறுகப்புல்லிக்கொண்டு “ அப்பனே ! நீர் நாமும் வணங்குங் குருநாதராகிவிட்டீர் ” எனத் திருவாய்மலர்ந்து, “ இனி நீர் உமது விருப்பின்படி வேண்டியவிடத்திற் சென்றிருந்து கொண்டு, உம்மை வந்தடைந்த பக்குவர்களுக்குச் சிவஞானேபதேசம் செய்து சமய பரிபாலனம் நடாத்திவருவிராக ” எனக் கட்டளேயிட்டருளினுர். கேட்ட குருஞானசம்பந்தர் மனம் மாழ்கிப் பதைத்து “ அடியேனெங்ஙனம் தேவரீரை விட்டுப் பிரிந்திருக்கவியலும் ? ” என்று பலவாறு விண்ணப்பித்துநின்று “ அடியேனுக்குச் சுதந்திரமுண்டோ ? ” எனும் கருத்தினே உட்கொண்ட,

“ கனக்கும் போதிக்கு மேருதுக்குந் தன்னிச்சை கண்டதுண்டோ
வேனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலேயுண் ஞானப்ர காச சிதம்பரவின்
றுனக்கிச்சை யேப்படி யப்படி யாக வுரைத்தருளே ”

என்னுங் கட்டளேக் கலித்துறையால் தம்முடைய கருத்தைத் தெரிவித்துக்கொண்டார். அதனேக் கேட்டருளிய ஞானப்பிரகாச தேசிகர் உளங்கனிந்து “ ஞானசம்பந்தரே ! நமதூருக்கு வடக்கே இரண்டுயோசனே தூரத்துக்கப்பாலுள்ள மாயூரத்திற்குக் கிழக் குத்திக்கில் ஒரு குரோசத்துக்குள், எமதருமனுல் வழிபடப்பட்டதும், அகத்திய முனிவர் முதலிய முனிபுங்கவர்களால் வழிபடப்பெற்றதுமான வில்வாரண்யமாகிய தருமபுரத் தைச் சென்றடைந்து பக்குவிகட்கு ஞானேபதேசஞ் செய்து சைவ சித்தாந்த சமய பரிபாலன பீடாதிபதியாய் வாழ்வீர் ” என்று ஆணே தந்தருளினர்.

அவ்வண்ணமே குருஞானசம்பந்தரும் திருவாரூரை அரிதின் நீங்கி, ஸ்ரீவாஞ்சியம் முதலிய தலங்களே வழிபட்டுக்கொண்டு தருமபுரத்தையடைந்து அங்கிருந் தருளும் ஸ்ரீ தருமபுரீசுவரரையும் ஸ்ரீ அபயாம்பிகையையும் தரிசித்து வணங்கினர்.

அக்கோயிலின் மேற்புறத்திலுள்ள கூவிளந்தோப்பில் ஓர் ஆசிரமம் அமைத்துக் கொண்டுஅதில் வதிந்துவந்தனர். அங்குச் சொக்கநாதப்பெருமானை எழுந்தருளு வித்துப் பூசித்தும், தம்மையடைந்த பக்குவர்கட்கு ஞானதீக்கை புரிந்து ஞானோபதேசம் செய்தும், பற்பல அற்புதங்களால் திருவருளை விளக்கிக்கொண்டும் எழுந்தருளி யிருந்தனர். சிவபோகசாரம், முத்திநிச்சயம், திரிபதார்த்தரூபாதிதசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத ஷட்கம்:முதலிய அனுபவ நூல்களாகிய ஞானசாத்திரங்களையும் பல தோத்திர நூல்களையும் செய்தருளினர்.

அகத்தியருடைய மாணாக்கர்களாகிய முனீந்திரர்கள் ஆங்குள்ள ஸ்ரீ தருமபுரீ சுவரருக்கு நித்திய நைமித்திக பூசனை முதலியவைகளை நடாத்திக்கொண்டு இருந் தார்கள். அன்னோர் ஞானசம்பந்த தேசிகரது பேரருட் குணங்களைக்கண்டு பெருமகிழ்வு கொண்டவர்களாய்த் தமக்குரிய ஆசிரமங்களையும் சிவாலயத்தையும் அவரிடம் ஒப்பு வித்தனர். அவைகளைக் காத்தோம்பி வர இரசவாதம் முதலிய பல சித்திகளையும் உபதேசித்து, எங்களைப்போலவே இவைகளை நீரும், உமக்குப்பின் வரும் சந்ததி யாரும் பரம்பரையாய்ப் பரிபாலித்து வருவீர்களாக'' என்று ஆசீர்வதித்துத் தம் இருப்பிடஞ் சென்றனர்.

ஞானசம்பந்தர் அவ்வண்ணமே சிவத்தளியையும் சிவனடியார்களாகிய பூசு நீறுபோல் உள்ளம் புனிதர்களையும் தமது பெருங்கருணைத் திறத்தாற் காத்தோம்பிச் சிவாலயத் திருப்பணி, திருவிழா முதலியவைகளை நடாத்திக்கொண்டு வந்தார்கள். ஒரு சமயம் தில்லைக்கூத்தப்பிரானைக்கண்டு வழிபடும் அவா மிக்கு அவண் போந்தருளி ஆயிரக்கால் மண்டபத்திலே இரவும் பகலுமாய் ஆனந்த நிட்டை கூடியிருந்தனர்; ஒருநாள் ஆடவல்லானின் அருட்பாங்கால் சிவகாமியம்மையார் அன்பர்க்கு அருளிச் செய்யும் விருப்பில் நள்ளிரவிலே தமது பள்ளியறையில் வைத்துள்ள வெள்ளிவள்ளத்தி லுள்ள பாயசத்தையும் பொன் வள்ளத்திலுள்ள திருவமுதத்தையும், கங்கை நீரையும் கொடுபோந்து அளித்தருளினர். இக்குருமூர்த்திகள் ஞான நாட்டத்தால் ஆவும் புலியும் தம்முள் மாறின்றி ஒரே குளத்தில் நீர்பருகி, ஒரே பொழிலிற் களித்து விளை யாடும்படிச் செய்தனர்*. இவ்வண்ணம் ஞானவரசு ஓச்சிய குருமூர்த்திகள் ஸ்ரீ தரும புரீசுவரர் ஆலயத்துக்கு மேற்கே திருக்கோயில் கட்டிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்தார்.

---

* குருமூர்த்திகளது திருவுருவப் படத்தில் இவ்வுண்மை புலப்பட வரையப் பெற்றிருப்பதைக் காணலாம்.

'' புலியுமோ ராவும் நட்போடுவாவீ புகுந்துநீ ருண்டுடனடந்து
நலிவிலா வகையி லோர்பொழிற் சேக்கை நயந்து வாழ்ந்திருந்தன கண்ட
வலியவரன்று முதலுபசார வகையினி னிற்கவே செய்தாய்
... ... '' என்பதும் அதற்குச் சான்று.

தமக்கு அண்மையில் பரிபூரணதசை வருதலைத் திருவருளுணர்த்த வுணர்ந்து அச் சிவலிங்கப்பெருமான் திருவடி நிழலிற் சமாதிகூடத் திருவுளங்கொண்டு தமது அடியார் களில் ஆனந்தபரவசருக்கு ஞானோபதேசஞ் செய்து, தமது பீடாதிபத்தியத்தையும் சொக்கலிங்க பூசையையுங் கொடுத்தருளி, “நீர் நமது பீடத்திலிருந்து கொண்டு ஞானோபதேசஞ் செய்து சொக்கநாதரைப் பூசித்து, சிவாலயத்தையும் சைவ சமயத் தையும் பரிபாலித்து வருவீராக” எனப் பணித்தருளிச் சிவசமாதியெய்தினர்.

ஆனந்தபரவசர் அருள் ஒழுக்கத்தில் தலைநின்ற பெருந்துறவியாதலான் குருவருள் ஒன்றையே நாடிநின்றார். அதை எய்தியதும் சிவஞானமிக்கோங்கியதால் ஆனந்தக்கண்ணீர் ததும்பத் தம் குருவின் சமாதி முன்னிலையில் வீழ்ந்து பரவி வணங் கினர். அதன் மேற்பக்கலிற் சென்று, தம் குருமூர்த்தியின் திருக்கோயிற் சிகரத்தைத் தரிசித்தவண்ணம் கிழக்குமுகமாயிருந்து, சமாதிகூடி, சிவானந்தாத்வைத முத்திநிலை யெய்தினார்.

ஆனந்தபரவசர் முத்தியெய்தியதைக் கண்டு உணர்ந்த பெரிய அன்பின் அடியார்கள் அனைவரும் “பிறவிப் பெருங்கடல் கடக்கப் புணையருளும் குருமூர்த்தியின் திருவடிமலர் நிழலை யிழந்தோமே” எனக் கவற்சியுற்றனர். சமாதி கூடியிருந்தருளும் குருஞானசம்பந்த தேசிகரது சந்நிதானத்தையடைந்து, “குருநாதர் மீளவும் எழுந் தருளிப்போந்து வாழையடி வாழையென வரும் ஒழுகலாற்றினையும், அடியேங்களையும் ஓம்பியருளல் வேண்டும்” எனக் கசிந்துருகி வேண்டினர். ஞானதேசிகரும் அருளிச் செயலால் உணர்ந்து, மீட்டும் சமாதியினின்று எழுந்தருளித் தம்மடியார்களில் ஒருவ ராகிய சச்சிதானந்தருக்குத் திருவடிமலர் சூட்டி ஞானநீராட்டி சொக்கநாதபூசையையுங் கொடுத்தருளினர். அவ்வாறு செய்தும் அவருக்கு ஞானசமாதி கூடிவாராமையான் குருஞானசம்பந்தர் திருவருணோக்கஞ்செய்து,

“தானந்த மாதிநடு வில்லா தோங்கும் சச்சிதா னந்தமயந் தானே யாய
ஆனந்த பரவசனைக் கண்டுங் கண்டு மந்தந்தோ பரகதியை யறிந்தீ ரில்லை
மானந்தான் வடிவாகி நிற்ற லாலோ மலமாயை கன்மமிவை மடியா தாலோ
ஞானந்தா னுமதுளத்தி லுதியா தாலோ நாமறியோ முமதுமய னவிற்று வீரே”

என்ற கன்னலின் இனிய செந்தமிழ்ப் பாடலைத் திருவாய்மலர்ந்தருளவே அந்நிலை யினையெய்தினர்; அஃதுணர்ந்து மகிழ்வுகூர்ந்தருளிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த மூர்த்திகள் “இனி, நீர் நமது பீடாதிபதியாய் விற்றிருந்துகொண்டு, செந்தமிழ்ச் சொக்கரை வழிபட்டு, பற்றற்று பற்றற்றான் பற்றினையே பற்றிநிற்கும் பக்குவிகட்குச் சிவஞானோபதேசஞ்செய்து வருவீராக” என அருளாணையிட்டு, வைகாசித்திங்கள் அமரபக்க சப்தமி நன்னாளிலே சிவசமாதி கூடினார்கள்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமரபில் 25 ஆவது குருமகாசந்நிதானமாக இன்று எழுந்தருளி அருளாட்சி செய்தருளுபவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். வாழ்க கயிலைக் குருமணி.

வாழ்த்துச் செய்திகள்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்

காஞ்சிபுரம்.

கயிலாய பரம்பரை என்று இதுவரைக்கும் ஐதிகத்திலும், பெயரளவிலும் இருந்துவந்ததை நிரூபித்துக்காட்டும் வகையில் இவர்கள் செய்த மகாகயிலாய யாத்திரை அமைந்தது. இதுவரை ஏழைகளும் பைராகிகளும்தான் கயிலாய யாத்திரைக்குப் போவது வழக்கமாயிருந்தது. அதைப் பெருமளவில் மாற்றி இவர்கள் மகா கயிலாய யாத்திரை, அமரநாத யாத்திரை, பசுபதிநாத யாத்திரை முதலிய பெரிய யாத்திரைகளைச்செய்து உலகிற்கே வழிகாட்டியிருக்கிருர்கள். முதன்முதலில் நம் நாட்டிலிருந்து மைசூர் சமஸ்தானம் மகாராஜாதான் லௌகிகமான முறையில் கயிலாய யாத்திரைக்குப் போய்வந்தார்கள். பெரிய ஆதீனத் தலைவர்களாயிருப்பவர்கள் இதுவரை யாருமே போய்வந்ததில்லை. மற்றவர்கள் லௌகிகமாகப் போய்வந்ததைவிட ஒரு ஆதீனத் தலைவர் யாத்திரை செய்ததைப் பாராட்டவேண்டும். கயிலாய பரம்பரையை நிரூபித்து இந்திய நாட்டின் வடகோடிக்கும் தென் கோடியான காவிரி, தாமிரபரணி தீரங்களுக்கும் பெரிய புண்ணிய ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

வடநாடு தென்னுடு என்ற பிரிவினை உணர்ச்சி சமய நெறியில் கிடையாது. வடநாட்டில் காஷ்மீரத்தில்தான் சைவம் ஓங்கியிருக்கிறது. காஷ்மீரம், நேப்பாளம் இவைஎல்லாவற்றின் குறிக்கோளாக வடக்கே மகாகயிலாயம் விளங்குகிறது. அருள் சம்பந்தமான தொண்டுகளே நாட்டை ஒன்றுபடுத்துவன. லௌகிகமான தொண்டுகள் பிரிவினைக்குக் காரணமாயிருப்பன. அருள் சம்பந்தமான தொண்டே நம்மை நல்வழிக்குக் கொண்டு செல்லும்.

இவர்கள் செய்த யாத்திரையில் துவாதசஜோதிர்லிங்க யாத்திரையும் மிகச் சிறந்தது. இந்தத்தலச்சிறப்புக்களை எழுதச்செய்து நூலாகவும் வெளியிட்டிருக்கிருர்கள். ஆதி சங்கரர் மூன்று சுலோகங்களில் துவாதச ஜோதிர்லிங்கங்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்திருக்கிருர்கள். ஒரு ஸ்லோகத்தில் நான்கு வரிகள். ஒரு வரிக்கு ஒரு ஜோதிர் லிங்கம். மேலும் ஒரு ஸ்லோகத்தில் ஒரு ஜோதிர்லிங்கமாகப் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களையும் பாடியிருக்கிருர்கள்.

வங்காளத்திலே தக்ஷிணேஸ்வரம், இராமகிருஷ்ண ஆசிரமம், கல்கத்தா முதலிய இடங்களில் காளிகோயிலில் காளிக்கு இரண்டு பக்கங்களிலும் ஆறு ஆறு

ஜோதிர்லிங்கங்களாகப் பிரதிஷ்டைசெய்திருக்கிறுர்கள். இப்படி இராமர் கோயிலாயிருந்தாலும் சரி, கிருஷ்ணன் கோயிலாக இருந்தாலும் சரி ஜோதிர்லிங்கப் பிரதிஷ்டை இல்லாமல் இல்லை. இமய முதல் கன்யாகுமரி வரை ஒரே நாடு என்ற அடிப்படையில் ஜோதிர்லிங்கங்கள் அமைந்துள்ளன. நம் நாட்டில் பல்லவர் கோவிலான காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலில் த்வாதச ஜோதிர்லிங்கங்கள் இருக்கின்றன. ஸ்ரீசைலம், இராமேஸ்வரம் முதலிய இடங்கள் தென்னுட்டின் ஜோதிர்லிங்க ஸ்தலங்கள். இப்படி நம்நாடு முழுவதும் ஈஸ்வரனுடைய ஒரே நாடாக விளங்குகிறது.

மகா கயிலாய யாத்திரை சென்ற நினைவாக இவர்கள் எழுப்பிய ஞாபகார்த்த வளைவுகள் மகாகயிலாய நிலையம் முதலியவற்றைப் பார்த்தேன். நாள்தோறும் கயிலாய நிலையத்தில் திருக்கயிலாயத் தேவாரத் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்து வருகிறுர்கள் என்பதைக் கேட்க மிக்க சந்தோஷம்.

நான் இவர்களைப் போல மகாகயிலாயம் வரை செல்லவில்லை. நடந்தும் பல்லக்கிலுமாகப் பல தலங்களைத் தரிசித்துள்ளேன். அதுவும் பூர்த்தியாகவில்லை. இவர்கள் செய்த சிறந்த சிவபுண்ணிய யாத்திரையினுல் நமக்கு ஏற்பட்ட ஒரு ஆனந்தம் பெருமிதம் இவைகளைச் சொல்லாமலிருக்கக் கூடாது. சிவபுண்ணியமான இந்த செயலைச் சொல்லாமலிருப்பது குற்றமாகும். சொன்னுல் நமக்கும் சிறந்த சிவ புண்ணியம் உண்டாகும். இவர்களுக்கு வாழ்த்துக்களும் பாராட்டுகளும் சொல்வது கடமையாகும். இதனுல் சித்தாந்தம், வேதாந்தம் முதலிய சமய நெறிகளெல்லாம் செழித்தோங்கி நம் நாடு சிறந்து விளங்கிச் செழித்து ஈஸ்வரனுடைய அருளைப்பெற்று எல்லாவற்றுலும் ஓங்கி விளங்குவதாக.

" காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் சேகத்தீரே "

என்று தாயுமானவர் சொல்லியதுபோல எல்லோரும் ஒன்ருகத் திருவருளைப் பெற்று ஓங்கவேண்டும். பல மூர்த்திகளுக்குச் சுவர்ண கவசங்களும், கோடி அர்ச்சனைகளும் செய்துள்ளார்கள். சைவ சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டுகள் பல சிறப்பாகச் செய்துள்ளார்கள். இந் நற்பணிகளின் எதிரொலியே " கனகாபிஷேகமாக " அமைந்து உள்ளது. எல்லாம் வல்ல சந்திரமௌளீஸ்வரருடைய அநுக்கிரகம் அவர்களுக்குப் பூரணமாக ஏற்படப் பிரார்த்திக்கிறேம்.

விஜய யாத்ராஸ்தானம், மன்னுர்குடி,
சார்வரி, மாசி 19

நாராயணஸ்மரணை

Srimath Sankaracharya Swamigal, Sringeri.

His Holiness wishes the celebration all success.

உ

சிவ சிவ

ஸ்ரீ காசிமடம்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள்

திருப்பனந்தாள்

மெய்ப்பொருள்

இன்பம்

உலகிலுள்ள உயிர்கள் யாவும் இன்பத்தையே விழைகின்றன. ஆறறிவு படைத்தவர்களிலும் சிலர் பிறவிக்கு வித்தாகிய உலக இன்பத்தை மட்டும் விழைகின்றனர். ஆனல் பக்குவான்மாக்கள் வாக்கு மனங்களுக்கு எட்டாத நிரதிசய இன்பமாகிய பேரின்பத்தையும் விழைந்து அதற்குரிய நெறியில் செல்லுவது உலகறிந்தது.

போன்

உலக இன்பங்களைப் பெறப் பொன் வேண்டும். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்" என்பது திருக்கோவையார். "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில் நடுவணதெய்த இருதலையும் எய்தும்" என்றார் நாலடி பாடிய புலவர். அப்பொன்னையும் "நான் ஈட்டுகிறேன்" என்று கருதுவதாயின் அதுவும் பொய்படும். அப்பொன்னைத் தருபவனும் இறைவனே என்று உலகு அறியவேண்டும். "இம்மையே தரும் சோறும் கூறையும்" என்றார் சுந்தரர். ஆனல் இப்பொன்னும் நிலையற்றது, அழிதன்மாலையது, நிறைந்த இன்பம் தருவது அன்று. ஆகவே நிலையானதாய், அழியாததாய், நிறைந்த இன்பம் தருவதாய் வேறு ஒன்று உளது.

மெய்ப்போருள்

அதுவே மெய்ப்பொருள் என்பது. அம்மெய்ப்பொருளையும் இறைவனே அருளுகிறான். "பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை" என்றார் சுந்தரர். இம் மெய்ப்பொருளைப் பெறப் பலவழிகள் உண்டு. எளியவழி திருமுறை ஓதுதலாகும்.

திருமுறை

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன முதற்குரவர் குருஞானசம்பந்தப் பெருமான். அந்நற்றவமுனிவர் அருளிய அநுபவ நூல்களுள் ஒன்று சிவபோகசாரம் என்பது; அதனுள் ஒரு பாடலுள் "பல நற்பணிகளைச் செய்க" என்பது அவர் ஆணை.

" ஆசையறுய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணுய்
நேசமுடன் அஞ்செழுத்தை நீ நினையாய் — சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய் "

என்பது அத்திருப்பாடல். மனத்தை நோக்கி "இன்ன இன்ன நற் செயல்களைச் செய்யா திருக்கின்றனையே " என்று இப்பாடலில் கூறுகிறவர், இப் பாடலிலேயே "ஆசையறுக, பாசம் விடுக, சிவபூசை பண்ணுக, அஞ்செழுத்தை நினைக, சினம் தவிர்க, திருமுறைகள் ஓதுக " என்று உலகினர்க்குத் தாம் பணித்தவாற்றையும் பெற வைத்தார்.

இகபர சௌபாக்கியம்

எனவே 'பொன்னும் மெய்ப்பொருளும் தருபவன் இறைவனே. அம் மெய்ப் பொருளைப் பெற எளியவழி திருமுறைகள் ஓதுதலே' என்பது தெளிவு. பொன்னால் இம்மையின்பமும், மெய்ப்பொருளால் மறுமையின்பமும் கிடைக்கும். அவற்றைப் புணர்த்துபவனும் இறைவன்தான். இதனைப் 'பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப் போகமும் திருவும் புணர்ப்பானை' என்றார் சுந்தரர். அருணகிரியார் இவ் விரண்டையும் பின் வருமாறு வேண்டுகிறார் :—

வசன மிகவேத்தி மறவாதே
மனதுதுய ராற்றில் உழலாதே
இசைபயில் சடாக்ஷர மதனாலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே.

வழிகாட்டி

'இகபர சௌபாக்கியம் அருளுபவர் இறைவனே. அவை தாமும் திருமுறை ஓதலினால் பெறல்கூடும்' என்பதை மன்பதைகள் அறிந்துய்யும் வண்ணம் அறியக் காட்டுபவர்கள், இற்றை ஞான்று குருஞானசம்பந்தராக விளங்கும் தருமபுர ஆதீன 25 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களேயாவர். கயிலைமலைவரையாவது காசினிமருங்கு எவராலும் எய்துதற்கு அரிது. அத்தகைய கயிலை இறைக் காட்சியை நேரில் போந்து நனவிற்கண்டு தரிசித்து ஞானசம்பந்தராய் ஆனந்த பரவசராய் 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற திருக்கருணையால் நன்மக்கள் யாவரும் மெய்ப்பொருளை உணருமாறு தம்முடைய ஒவ்வொரு சொல்லாலும், செயலாலும் தருமையாதீன ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் யாவர்க்கும் வழிகாட்டியாயுள்ளார்கள்.

பரவுக திருமுறை உலகெலாம் !
ஸ்ரீலஸ்ரீ கயிலை மகாசந்நிதானம் அவர்கள் திருவடி வாழ்க !!
கயிலை மலையானே போற்றி போற்றி !!

சிவ சிவ
23—1—61

கேதார யாத்திரை (ஸ்ரீ காசிகேதாரேஸ்வரர் ஆலயத்தில்)




ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்களும் வழிபடுதல்



பத்தாண்டு ஆட்சி விழா விஸ்வநாதருக்குப் பாலபிஷேகம்



ஸ்ரீ விஸ்வநாதராலயம்



நடராஜாவும் அன்னபூரணுவும் (அர்த்தநாரீஸ்வரர்)

Srimath SWAMI SIVANANDA SARASWATHI MAHARAJ,
Rishikesh, 18—1—1961.

It is with great joy I send you this short message for the Kanakabhisekam festival of His Holiness Sri-la-Sri Kailai, Subramanya Desika Gnanasambandha Paramacharya Swamigal Avergal.

It is not necessary for me to enumerate here, the wonderful services rendered by the great Mahasannidhanam and the institution, Dharmapuram Adheenam. They are too many and so extensive that every Hindu today in this Great Country knows the most useful and humanitarian services rendered by the great Adheenam. Even a child in Tamil-Nad knows the great work of the Adheenam.

The Oriental College, the Agama Pathashala, institutions for imparting instructions in Thevaram, Tirumurais, other educational institutions, orphanages, hospitals etc, work wonderfully well. Thousands of students get free training here. Annadana is another great activity of the Adheenam and the Mahasannidhanam takes great interest in it. The systematic worship in the Mutts and temples attached to the Adheenam go a long way to promote devotion and faith in God. The work of these organsiations working under the Dharmapuram Adheenam is greatly laudable.

The disciplined band of workers at the Sannidhanam of the great Adheenam of Dharmapuram do not fail to impress even casual visitors to the Mutt. I had the great privilege of paying a visit to this great Adheenam in 1950 during my All-India Tour.

I was greatly impressed by the devotion, discipline, sense of duty, sacrifice and love of the different workers and the great attention and love of the Mahasannidhanam himself.

I wish the Kanakabhisekam wonderful success! I am sure all the devotees will join together and make the function a great success and pay due homage to the great Maha Sannidhanam.

With my deepest regards, Prem and Om and good wishes for the success of the unique function.

252

ஸ்ரீமத். ஞானனந்தகிரி சுவாமிகள்

தபோவனம், மணம்பூண்டி.

ஸ்ரீ கயிலையம்பதியாகிய கருணைமூர்த்தி மக்களிடையே இரக்கங்கொண்டு தொன்றுதொட்டு நமது நாட்டில் திருவுருவம் தாங்கித் திருவருளால் ஆட்கொண்டு வருவதும் இயல்பு. மாற்றறியாத செழும் பசும் பொன்னய் மாணிக்கச் சுடரொளியாய் ஜீவசாட்சியாய் உயிர்க்குயிராய் நிறைவுற்றுளது. எனினும், பக்தர்களின் ஊனக் கண்ணுக்கு ஒருருவந்தாங்கி நமது தமிழகத்தில் பல நூற்றுண்டுகளுக்கு முன்னம் கயிலையம்பதி விட்டுத் தென் கயிலையம்பதிக்கு வந்துள்ள பரம்பரையில் தற்போது சில நூற்றுண்டுகளாகவே மக்கள் பரிபக்குவ நிலைமை யறிந்து, வினையகற்றி, அருளொளி தாங்கி நம்மை அன்புருவாக்கி, ஆட்கொண்டருளுவதற்கேற்ற வல்லமை பொருந்தி சந்தான குருபரம்பரா மூர்த்திகளாகவே தோன்றியுள்ளனர். தற்சமயம் மகா தரும தேவதை நிரந்தர வாழ்வு பெற்றுய்விக்கும் நகரச் சிறப்பில் தருமபுரம் சிறந்து விளங்குகிறது. திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கயிலைக்குச் சென்று கயிலையம்பதியின் திருவுருவந் தாஙகவே தென்னுட்டு மக்களுக்கு அருள் தரும்படிக்கு மீண்டும் திரும்பிவந்து, மகாபீடத்தில் வீற்றிருந்து காட்சி யளிப்பதை மக்களனைவரும் ஒன்றுகூடிக் கண்டு களித்து வாழ்த்தி வணங்கி, மகாசந்நிதான சற்குருமூர்த்திகளின் சிறந்த பேருளைப் பாராட்டுவோமாக.

ஆதியிலே கயிலைநாதர் திருவடியில் அவதரித்துச் சீலமுறக் கயிலையேகி, கருணையாம் அருளைப்பெற்று, மறுபடியும் நமது தென்னுட்டுக்கு எழுந்தருளி, பாரதநாடு எங்கும் தெய்வநெறி மழுங்கியுள்ளதை மீண்டும் தெளிவுறச் செய்து, வழிபடும் நன் னெறியில் மதங்கள் நிறுவப்பட்டு, லோககுரு என்று இன்றும் என்றும் போற்றத்தக்க முறையில் நிகழும் சரித்திரம் விளங்குவதுபோல இன்றும் நேரடியாகவே திருவுருவந் தாங்கி, அருள் வடிவாய், மக்களை ஆட்கொள்வதற்குகந்த குருமூர்த்தியாகி விளங்குவ தென்பதற்கு ஐயமில்லை. ஆகவே நம் நாட்டு தெய்வநெறியில் சிறந்தவர்களும், பேரருள் பெற்றவர்களும், நல்லறிவாளிகள் அனைவரும் ஒன்றுகூடி, மகாசந்நிதானத் துக்கு மாசற்ற அரும் பெரும் மகாகனகாபிஷேக ஆராதனை நடத்தி, வாழ்த்துக்கூறி, வணங்கி, ஸ்ரீ சற்குருமூர்த்தியின் பேரருள் பெற்றுய்ய வேணுமாகச் சிறியேன் உள்ளத்தில் தோன்றியுள்ளதை அறிவித்து, ஸ்ரீ கயிலாசமூர்த்தி என உறுதிகொண்டு சந்நிதான சேவா கைங்கர்யத்திற்கு விரைந்து வருவீர்களென்று உறுதிகூறி ஏனைய பேரறிவாளிகளையும் அழைக்கிறேன். இதற்குச் சாட்சியாகவே ஸ்ரீ கயிலையம்பதி திருவுருவந் தாங்கி எழுந்தருளியிருக்கும் சிறந்த ஞான தேசிகராய் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விளங்குகிருர்கள், மகாசந்நிதானம் நீடூழிவாழ்க. வாழ்க வையகம்.

வித்துவான். ஸ்ரீமத். சுந்தரசுவாமிகள்,
கௌமார மடாலயம், சிரவணபுரம்.

அறுசீர் விருத்தங்கள்

திருத்தருமைத் திருமடத்தின் சீர்விளங்க அறப்பணிகள் சிறக்க நாளும்
பொருத்தருமைப் பண்புடனே நண்பமைந்து, நஞ்சமுதாய்ப் புசித்தி ருண்ட
உருத்தருமைக் களத்தரனும் சொக்கலிங்கப் பெருமானை யுள்ளத் தென்றும்
இருத்தருமைக் குருமணியே! எந்நாளு முன்புகழை ஏத்து வேனே. 1

திருத்தருமை யாதீனத் திருபத்தைந் தாம்பட்டம் சேர்ந்து, பஞ்ச
தருப்புரையுஞ் சுப்பிரமண் ணியநற் றேசிகஞான சம்பந் தப்பேர்
பொருத்தமுறத் திருக்கயிலை சென்றுகண்டு தரிசித்த புண்ணி யந்தோய்
குருப்பரனே! நின்பாத திருக்கமலம் நெஞ்சகத்துட் குறித்து வாழ்வாம். 2

ஞானசம்பந் தப்பெயர்கொள் திங்கள்வெளி யீடுமுதல் நண்ணும் பன்னூல்
வானசம்பந் தத்தமரர் உண்ணமுதம் போலச்சில் வயக்கி, மாந்தர்
ஈனசம்பந் தத்துழலா வாறுதவல், கலைக்கோயி லினித மைத்தல்
மோனசம்பந் தப்பெரியோர் கடமையெனச் செயும்நின்சீர் மொழிதற் பாற்றே. 3

மாணவரா வருமவர்கள் கல்விகற்று நல்லொழுக்கம் மன்னிப் பாரில்
மாணவரா வாழ்வதற்காம் பள்ளிஅறச் சாலைபல வயங்கச் செய்தாய்
காணரிய காட்சியதா யரன்கோயில் மாட்சிபல கவினச் செய்து
பேணருமைச் செயல்பலவு மெளியேனுற் சொலிமுடிக்கும் பெற்றித் தாமோ. 4

அத்தகுநின் பெருந்தகைமைக் கன்பரா யுற்றவரென் ஆற்றலாகும்?
சித்தமுவந் தம்பொன்னு மலர்கொண்டு கனகாபி ஷேகம் செய்யும்
உத்தமஇத் திருநாளில் விழாப்புரியும் அன்பரெலாம் உளமு வந்தே
வித்தகர்போற் றிடத்தங்கள் ஆட்சிபல்லாண் டுயர்கவென விளம்ப லொன்றே. 5

வெண்பா,

போற்றி தரும புரத்தின் திருமடச்சீர்
போற்றி குருமணிதன் பொன்னடிகள் — போற்றி
திருக்கயிலை கண்டுவந்த செம்மலரு ளாட்சி
திருக்கவின வாழ்க! சிறந்து.

Sri R. L HANDA,

Press Secretary to the President of India,

Rashtrapati Bhavan, New Delhi-4.

The President desires me to thank you for your letter dated 12—1—1961. He directs me to send you his good wishes and respectful greetings on the solemn occasion of the Kanakabishekam of His Holiness Sri Kailai Mahasannidhanam.

Sri S. RADHAKRISHNAN,

Vice-President of India, New Delhi.

I am glad to know that you are performing the Kanakabhisekam of His Holiness Sri-la-Sri Kailai Guru Mahasannidhanam of Dharmapuram. He has been doing valuable work by way of spreading our cultural message. It is my hope that he will live for many years to continue his good work.

H., E. Sri. V. V. GIRI,

Governor of Kerala.

Raj Bhavan, Trivandrum.

I am glad to hear that the Kanakabhishekam is to be performed for His Holiness Kailai Sri-la-Sri Subramania Desika Gnana Sambandha Paramacharya Swamigal, Mahasannidanam of Dharmapuram Mutt, Mayuram I had occasion to meet His Holiness at Naini-Tal, when he was proceeding on a pilgrimage to Kailas and Manasa--Sarovar. It was indeed very bold on his part to have undertaken such a risky and dangerous trip at a time when these holy places were almost under foreign control. God has been kind to him and enabled him to return safe to continue His work for the good of humanity. I hope to see the good work that he is doing some time later.

I wish His Holiness may live for many more years to continue His service in the cause of religion.

கனம். உயர்திரு. பி. வி. ராஜமன்னர்
உயர்மன்ற தலைமை நீதிபதி, சென்னை.

தாங்கள் மேற்கொண்டிருக்கிற சிறப்புமலர் பிரசுரம் நன்ருகப் பரிணமிக்க வேண்டுமென்று நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

உயர்திரு. V. இரத்தின முதலியார், B. A., B. L.
தலைவர், சர்விஸ் கமிஷன் சென்னை.

நன்றியின் அடையாளம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் மேதக்க பண்புகளை எடுத்து எழுதுவது இன்பந்தரும் செயலாகும். ஆதீனத்தின் 25-ஆவது குருமுதல்வராக இவர்கள் அருளாட்சி அரியணை ஏறி இருப்பவர்கள். 25-ஆவது பட்டம் வெள்ளிவிழா எடுத்தற்குரிய பட்டமாகும். நமது குருபிரானர் அவர்களோ வெள்ளிமலையை வலம்வந்து வழிபட்டுச் சிறப்பு எய்தியவர்கள். கயிலாய பரம்பரையில் தோன்றியதற்கேற்ப அவர்கள் கயிலாயத்திற்கே நேரிற் சென்று கண்டு திரும்பிய பெருமை பூண்டிருக்கிருர்கள்.

நமது குரு பெருமானர் அவர்களுக்கு இயல்பாக வாய்த்துள்ள பல அரிய நற்பண்புகளில் ஒன்று, எல்லாம் வல்ல இறைபரம்பொருள் கோயிலிடங் கொண்டெழுந்தருளியுள்ள அருள் திருநல்லூர்களுக்கு நேரே சென்று உள்ளம் கசிந்துருகத் தொழுது ஏத்துவதில் கொள்ளும் தெவிட்டாத காதலாகும். தென்னுட்டில் மட்டுமன்றி நமது பரதகண்டம் முழுவதிலும் ஆங்காங்கே அமைந்திருக்கும் அருள்தலங்களுக்கு அவர்கள் எழுந்தருளியிருக்கிருர்கள். கேதாரநாதம், அமரநாதம் முதலிய பனிமலைப் பகுதியிலுள்ள நல்லூர்களுக்கு அவர்கள் சென்றுவந்த செய்திகள், நாமும் அங்ஙனம் செல்லலாகாதா என்னும் வேட்கையை எழுப்பி, செல்வதற்கு வழிகாட்டுவன போன்று அமைந்திருக்கின்றன என்பதை, அத் தலங்களுக்கு நமது குருமுதல்வர் செய்த யாத்திரைகளைப்பற்றி ஆதீனம் வெளியிட்டுள்ள நூல்கள் நமக்கு விளக்குகின்றன. எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்ததுபோலத் திருக்கயிலாயத் திருப்பயணம் அமைவதாயிற்று. அப் பெரும் பயணத்தைக் குறித்த வரலாற்று நூல் ஆதீனத்தின் வெளியிடுகளில் தலைசிறந்ததாக மிளிர்கின்றது.

என் நண்பரொருவர் அடிக்கடிச் சொல்லுவார் நமது குருமுதல்வரோடு இரவு முழுதும் ஓயாமல் கோவில்களுக்குச் சென்று வழிபாடு ஆற்றிய வியப்பான செய்தியை. அன்று சிவராத்திரி. இரவு பத்துமணி வரையில் தருமையிலேயே எழுந்தருளியுள்ள

ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூசைத் திருவறையிலும் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக் கோயிலிலும் வழிபாடு புரிந்தார்களாம் நமது குருபரனுர். இடைவிடாமல் இவ் வழிபாடுகளில் கலந்துகொண்டதிலே அலுத்துவிட்ட என் நண்பர் ஓய்வு எடுத்துக் கொள்ள விட்டிற்குச் சென்ருர். விட்டிற்குள் நுழையும்போதே "சந்நிதானம் அழைக் கிறது" என்று கூறிக்கொண்டே ஆள் விரைந்துவந்தான். இச் செய்தியைச் செவி யுற்ற என் நண்பர் மீண்டும் சந்நிதானத்தை நோக்கி ஓடினுர். "ஏறுக ஊர்தியில்" என்று சந்நிதானத்தின் கட்டளை பிறந்தது. ஏறினுர் (மோட்டார்) உந்துஊர்தியில் எனது நண்பர். கார் வாயுவேகமென விரைந்துசென்று மாயூரநாதர் கோயிலை யடைந்தது. இரவு 10-30 மணிக்கு மாயூரநாதர் கோயில் வழிபாடு துவங்கிற்று. ஒவ்வொரு திருமுன்னும் முறையாக வழிபாடு நடந்தேற மணி 11-30க்கு மேலாயிற்று. பின்னர் மேதா தக்ஷிணுமூர்த்தி கோயில் முடிந்ததும் திருநின்றியூரில் வழிபாடு. அப்போது மணி 1-30 இருக்கும். அங்கே மின் விளக்கு வசதி இல்லை. அந்த காலத்திற்குரிய பூசை நடப்பதற்கு ஆவன ஆயத்தமாயிருந்தன. மகாசந்நிதானம் அவர்களுக்கு தமது ஆட்சியிலுள்ள இந்தக் கோயிலிலும் சிவராத்திரி பூசை காலமுறைப்படி ஒழுங்காக நடைபெறுவதைக் காண, பரம திருப்தி. பின்னர் வைத்தீஸ்வரன்கோயில் வழிபாடு. பிறகு சீர்காழி. காலை 4 மணிக்குமேல் ஆகிவிட்டது. எனது நண்பர், உடல் சோர்வுற்று, தள்ளாடிக்கொண்டு குருபரனுடன் சென்று கொண்டிருக்கிருர். குருபரனுடைய சமயப் பேரார்வம் எனது நண்பரை உணர்ச்சி யூட்டி, ஊக்குவித்துச் செலுத்திக்கொண்டு சென்றது.

"இவ்வளவோடு தருமை திரும்பிவிடமாட்டார்களா" என்று என் நண்பர் எண்ணினுர். ஆனுல் குருபரனுர் "விடுக ஊர்தியைத் திருக்கடவூருக்கு" என்ருர்கள். திருக்கடவூர் வழிபாடு முடிய காலை 5-30 மணியாயிற்று. பின்னர்தான் தருமைக்குத் திரும்பினுர்கள். தருமையை அடைந்ததும் என் நண்பர் தள்ளாடி வீட்டிற்குச் சென்ருர். ஆனுல் நமது குருமூர்த்தி அவர்களோ அப்போதைக்கு அத் தருமையில் மிச்சமுள்ள காலங்களின் வழிபாடுகளை முறையாகச் செய்ய அமர்ந்துவிட்டார்கள். என்னே இவர்களின் சமயப் பற்றும், ஆர்வமும், தெவிட்டாத பேரின்ப வேட்கையும்!

இச் செய்தியை என் நண்பர் கூறியபோது, ஏற்கனவே நமது குருபரனுரின் கடவுட்பற்றைப்பற்றி நான் கேட்டும் நேரில் அறிந்தும் இருந்த செய்திகள் யாவும் என் மனக்கண் முன்னே தோன்றி என்னை வியப்பில் ஆழ்த்தின. ஒரே நாளில் நாங்கள் காலை புறப்பட்டு இரவு முடியுமுன் தருமையிலிருந்து சேர நாட்டிலுள்ள திருவஞ்சைக்களம் சென்று சேவித்துத் திரும்பியச் செய்தியையும் நினைத்து நினைத்து விம்மிதமடைந்தேன். நமது குருமுதல்வருக்குக் கோவில் சேவையிலுள்ள அளக்க லாகாத ஆர்வத்தின் உச்ச நிலைதான் திருக்கயிலாய இயற்கை ஆலய வழிபாடு.

இறைவனிடத்தில் உண்மையான அன்பு செய்பவர்களிடம் காணப்படவேண் டிய பண்பு உயிர்களிடத்தில் இரக்கம் காட்டும் இயல்பாகும். நமது குருபெருமானுர்

மக்களிடத்தில் எவ்வளவோ களங்கமில்லாத உள்ளன்போடு பழகுகிறார்கள் என்பதை அவர்களை ஒருமுறை சேவித்தவர்கள் நன்கு அறிவர். ஏழை எளியவர்கள் எந்த இனத்தவராயினும் சரி, இனப்பாகுபாடு சிறிதும் இன்றி எல்லாரிடத்திலும் இயல்பாக ஊற்றெடுக்கும் அன்பு சான்றோர்க்கே உரிய சொத்தாக இருக்கிறது என்பதை நம் குருபரனரிடத்திலிருந்து தெரிந்து கொள்ளுகிறோம்.

ஆதீனக் கோயில்களில்தான் சட்டம் வருவதற்கு முன்பேயே, ஹரிஜனங்கள் வழிபாடு செய்ய அழைக்கப்பெற்றனர். ஞான வளர்ச்சிக்கான பள்ளிகள், கல்லூரிகள், நூல் நிலயங்கள் முதலியன அமைத்து சமய நூல்களை அச்சியற்றி இலவசமாக வழங்குதல், சமய விளம்பரச் சொற்பொழிவுகள் செய்விப்பதோடு அமையாமல், உடல் நலம், உடல் வளர்ச்சி, இம்மையில் செம்மையான வாழ்வு இவற்றிற்கான ஏற்பாடு களையும் இனிது செய்தமைத்து வருவது ஆதீனத்தில், நமது குருபரனர் அருளாட்சியில் காணும் சிறப்பாகும்.

இத்தகைய அரும்பெரும் இயல்புகள் ஒருங்கேயமைந்த நமது அருட்குருவாம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களை எந்த வகையில் நாம் போற்றுவது ? எப்படி எப்படி போற்றினும் போதுமானதாகா ; ஆகின்றதோ, இல்லையோ, நாம் அவர்களின் திருவடிகளை உச்சிமேற்கொண்டு பாராட்டுகிறோம் என்பதற்கு அறிகுறியாக அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்து மகிழலாம். பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு கூறிப் பரவலாம். நம்மாலான நன்றியின் அடையாளம் இதுதான். ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவடிகளே சரணம்.

கனம். உயர்திரு. P. S. கைலாசம்,

உயர்மன்ற நீதிபதி, சென்னை.

தமிழ் அன்பர்கள் சேர்ந்து தருமபுர ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குக் கனகாபிஷேகம் வருகிற மார்ச்சு 12உ செய்வது அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். தருமபுர ஆதீனம் தமிழ் மொழிக்கும், சமயத்திற்கும் செய்துவரும் தொண்டு தென்னாடு முழுவதும் நன்கு அறியும்.

தமிழன்பர்களும், சமயப்பற்றுள்ளவர்களும் ஆதீனத்திற்குக் கனகாபிஷேக விழா எடுத்துத் தங்களது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறார்கள். விழா இனிது நடைபெற்று ஆதீனம் நடத்திவரும் பெருந்தொண்டு மிகச்சிறப்பாக நீண்டகாலம் நடைபெற எல்லாம்வல்ல இறைவன்அருள்புரிய வேண்டிக்கொள்கிறேன்

Sri C. RAJAGOPALACHARIAR, Madras.

On the occasion of the felicitation of Sri-La-Sri Dharmapuram Swamigal, I join in the congratulations. May the Adhinam continue to do its good work.

Sri S. V. RAMASWAMI, Bar-at-law
Deputy Minister, Railwas, New Delhi.

I recall with pleasure my visit to the Adinam last year. I was greatly impressed by the educational institutions and the Library there. I cherish also the gift of books in Tamil in Religion and Philosophy.


I wish the function every success.

கனம். உயர்திரு. சி. சுப்பிரமணியம் B. A., B. L.,
நிதி அமைச்சர், சென்னை.

உலகம் உய்ய வேண்டுமாயின், அனைவரும் பரந்த மனப்பான்மையோடு பிறர் நலத்தைப்பேணி வாழ்வதைத் தவிர வேறு வழியில்லை. நான், எனது என்ற அகம்பாவ எண்ணங்களை அழித்து, மக்கள் குலத்தை அன்புடன் நேசிக்கத் தக்க பண்பட்ட உள்ளத்தைச் சமயப் பற்றே வளர்க்க வல்லது. இதனை நன்குணர்ந்தே நமது முன்னோர், வாழ்க்கையோடு சமயத்தையும் இணைத்து வாழ்ந்து வந்தார்கள். அதனால், எல்லா உயிர்களையும் தம்முயிர்போல் போற்றும் அருளுணர்வு அவர்களது உள்ளத்தில் நிலைத்திருந்தது. மேலும், தெளிந்த சமயப்பற்று மனித இன ஒருமைப் பாட்டை உரமிட்டுக் காத்து வளர்க்கும்.

இந்த வகையில், தமிழுக்கும், சைவ சமயத்திற்கும் :சிறந்த தொண்டாற்றி வந்துள்ள தர்மபுர ஆதீனம் இனியும் தனது சீரிய பணியினைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் என்று நம்புகிறேன். மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் கனகாபிஷேக விழா, சமய அன்பர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும். விழாவினையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவது மிக நல்ல முயற்சியாகும். சமய வளர்ச்சியுடன் இலக்கியம், இசை, கலை, சித்திரம், சிற்பம் எல்லாமே வளர்ந்தன. அந்த வளர்ச்சிக் கட்டங்களை மக்கள் அனைவரும் அறியும்படிச் செய்வதில் இதுபோன்ற வெளியீடுகள் பெரிதும் பயன்படும் என்று நம்புகிறேன். கனகாபிஷேகம் இறையருளோடு இனிது நடந்தேறவும், அதனை யொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் சைவ சமயக் கருவூலமாகத் திகழவும் எனது நல் வாழ்த்துக்கள்.

சென்னையில்



ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத் தொடக்க விழா
சென்னை ராஜ்ய முன்னாள் முதலமைச்சர் உயர் திரு. ஸி. ஆர்.

அமரநாத் வழியில்



சேஷநாக் ஏரி

உயர்திரு. சு. நடேச பிள்ளை
சிலோன்.

தருமபுர ஆதீனத்தின் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக விளங்கும் பெரியார் செய்துள்ள சைவப்பணிகள் போற்றத்தக்கன. அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடப்பாடுடையதாகும். அவர்களது ஆட்சி நீடித்து ஓங்குமாறு பிரார்த்திக்கின்றேன்.

உயர்திரு. கருமுத்து தியாகராசச்செட்டியார்
மதுரை.

அருள் நெறியாம் சைவத்தையும், அமிழ்தினும் இனிய செந்தமிழையும் தம் கண்களெனப் போற்றிப் புரக்கும் ஆதீனங்களுள் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய மூவிடங்களும் மிகச் சிறப்புடையனவாகும்.

இவற்றுள் நடுநாயகமாக ஒளிரும் தருமையாதீனம், இற்றைக்கு ஏறத்தாழ ஐந்நூறாண்டுகட்கு முன்னர், உமாபதி சிவாசாரியார் வழிவந்த குருஞான சம்பந்த மூர்த்திகள் மன்பதை உய்திபெறுவான் வேண்டித் தோற்றுவித்து அருளியது. பயன் தூக்காது உரியவர்க்குக் காலத்தால் செய்த கைம்மாறு கருதாத அறம் ஞாலத்தினும், விண்ணகத்தினும் பெரிதாக விரிந்து வளர்வதைப்போன்று, குருஞானசம்பந்தப் பெருந்தகையார் மக்கள் இம்மை, மறுமை நலங் கருதிக் கண்ட தருமையாதீனம்' இன்று அறுகெனப் படர்ந்து, ஆலென உயர்ந்தோங்கிச் செழித்து நிற்கிறது.

இவ்வாதீனத்தை அணிசெய்த குருமகாசந்நிதானங்கள் அனைவரும் தமது ஆசாரிய குரவர் ஏற்றிய அருளொளி ஞான விளக்கைத் தம் அருந்தொண்டாலும் அறப்பணிகளாலும் மேலும் சுடர் கான்று விளங்குமாறு செய்து வந்துள்ளனர். அதை இருபத்தைந்தாவது பட்டமெய்தி இலங்கும் திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் மேலும் போற்றி வளர்த்து வருவதால் அவர்கள் புகழ் அளவிடற்கு அரியதாகும்.

இவர்கள் சிவத்தலங்கள் பலவற்றில் ஆலயங்களைப் புதுக்கியும், முற்றூட்டு நிவேதனங்கள் நல்கியும், அன்னம் பாலிப்பு அருளி அரும்பணி புரிந்தும், சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றை ஆண்டுதோறும் வெளியிட்டுச் சமயத்தைப் பரப்பியும், மற்றும், ஆதீனச் சார்பில் தமிழ், வடமொழி, வைதீகம் ஆகியவற்றிற்காகக் கல்லூரிகள் நிறுவித் தாய்மொழியோடு, சமஸ்கிருதத்தையும், அறநெறியையும் ஓம்பிப் பாதுகாத்துப் பேணி வளர்த்தும் வருவது போற்றுதற்குரியது.

இவ்வாறு ஊருணி நீர் நிறைந்தாற்போலவும், பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தா லெனவும் விளங்கி, தாம் பெற்ற இன்பத்தை உலகும் துய்க்கவேண்டும் என்ற உயரிய கருத்துடன், அன்பர் பணி செய்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளைப் பாராட்டுமுகத்தான், பொன் முழுக்கு விழாக் கொண்டாடத் தமிழ்ப் பெருமக்கள் முன்வந்துள்ளமை பெரிதும் மகிழற் பாலதாகும்.

குருமகாசந்நிதானம் அவர்கள் சைவமும், தமிழும், அறமும் தழைக்க வையை மணலினும் பல்லாண்டு சிறந்தோங்கி வாழ வேயுறு தோளி பங்கன் திருவருளை வாழ்த்தி வணங்குகின்றேன்.

உயர்திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார்
ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயம், கோயம்புத்தூர்.

தருமபுர ஆதீனம் தமிழுக்கும் சைவத்திற்கும் செய்துவரும் சேவை பெரிது. கோவில்கள் பராமரிப்பு, திருமுறைகள் வெளியீடுகள், சமய மகாநாடுகள், முதலியன நடத்திவருகிறார்கள். இவை அனைத்தும் மிகவும் பாராட்டத்தக்கன.

Sri K. VENKATASWAMI NAIDU, B. A., B. L,
Madras.

I wish the function all success. I am glad you have included my name in the list.

Sri T. M. NARAYANASWAMI PILLAI M. A., B. L.
Vice-Chancellor, Annamalai University, Annamalainagar.

His Holiness has played a vital role in the renovation of temples, establishment of Oriental Colleges, spread of Religious learning and Agamas, and Holy Songs like Thevaram, Thiruvacagam and the uplifting of the Society in general. His services during the last fifteen years are invaluable. The Kanakabhishekam is our humble tribute and expression of gratitude in recognition of his great services.

May he live long and continue his noble holy work.

திருப்புகழ்மணி

உயர்திரு. T. M. கிருஷ்ணசாமி அய்யர், B.A., B.L.,

சென்னை.

தருமையாதீனம் 25-ஆவது குருமகா சந்நிதானம் அவர்கட்குக் கனகாபிஷேகம் செய்விக்கத் தீர்மானம் செய்த பக்தர்களை நான் மிகவும் போற்றுகின்றேன். தமிழ் நாட்டிலே ஸ்தானம் கொண்ட பரமாசாரியார், இந்திய மகாதேசம் முழுமையும் பக்தி ப்ரவசனத்தாலும் பஜனை உபந்நியாசங்களாலும், பூஜா விசேஷங்களாலும், கடவுளை மக்கள் நினைந்து நல்வழிப்படவும் சாந்தியுள் நிலைநின்று மோக்ஷ ஸாதனம் அடையவும் ஓர் முகாந்தரமாய் இருக்கின்றார்கள். இமயமலையிலிருந்து கன்யாகுமரிவரை பற்பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று ஈசனைத் தரிசித்து ப்ரஸாத செல்வத்தை யாவர்க்கும் அனுப்பி லோகத்திற்கு ஒரு பெரிய ஸேவை செய்து வருகின்றனர். அவருக்குச் செய்யும் கனகாபிஷேகம் ஈசனுக்கே செய்ததாகும். பக்தர்கள் தங்கள் பக்திவெள்ளத்தில் ஈடுபட்டு ஆசார்ய பக்தியை வளர்த்துவருவதில், செய்யப்போகிற கனகாபிஷேகம் மிகவும் போற்றத்தக்க சிறந்த நிகழ்ச்சியாகும். இந்த நிகழ்ச்சி பயன்பட ஈசன் அருள் கூட்டிவைப்பார் என்பதில் சந்தேகமில்லை. இவ்வண்ணமே நானும் வேண்டுகின்றேன். என் பக்திபூர்வமான வணக்கத்தை ஆசார்ய சிகாமணி அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு பஞ்சாக்ஷர நாமத்தை நினைந்து பஜனையும் இயற்றிச் சிவபரத்தை நாடி நிற்பேன்.

உயர்திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை

(நாமக்கல் கவிஞர்)

வையகத்தின் முதற்குடிகள் தமிழ ரென்றும்
வரிவடிவில் முதல்எழுத்துத் தமிழே என்றும்
தெய்வமெனும் ஒருபொருளில் சிந்தைஊக்கித்
திளைத்தவர்கள் தென்னாட்டு மக்கள் என்றும்
சைவம்தான் முதலுதித்த சமயம் என்றும்
சரித்திரத்தை ஆராய்ந்தோர் சாதிக் கின்றார்;
ஐயமெதும் மற்றெதிலும் அமைந்திட் டாலும்
ஆதிமதம் சைவமென்றே அழுத்திச் சொல்வார். 1

அத்தகைய பழஞ்சமயம் சைவத் தோடு
அதற்கிணையாம் வைணவமும் அமையப் பெற்று,
பக்திநெறி தமிழ்நாட்டிற் பரவச் செய்து
பாரளித்த மூவேந்தர் மறைந்த பின்னர்

சத்தியமும் சாந்தமுமே கொள்கை யாகச்
சர்வேசன் திருவருளே குறிக்கோ ளாகச்
சுத்தமனத் துறவுடைய குருமார் தோன்றிச்
சுதந்தரமாய்ச் சமயநெறி துலங்கச் செய்தார். 2

அன்னபல குருபீடம் அவற்றுள் ஒன்றும்
அருட்சைவத் தருமபுர ஆதீ னத்தின்
மன்னுமுறை இருபத்து ஐந்தாம் பட்டம்
மகிமையுடன் நடத்துமகா சந்நி தானம்
துன்னுபுகழ் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரம ணிய
தேசிகஞான சம்பந்தப் பரமா சார்யன்
என்னுமந்த சுவாமிகளைத் தரிசிப் போமேல்
இகசுகமும் பரநலமும் எளிதேகூடும். 3

திருமுறையும் அருமறையும் தினமும் பாடித்
தென்மொழியும் வடமொழியும் தெளியக்;கற்று
வருமுறையில் கல்விதனை வளர்க்கும் ஞானி ;
வாழ்வளித்து அனாதைகளைக் காக்கும் வள்ளல் ;
அருமையெனும் கயிலாய மலைக்கே சென்று
அரனருளைப் பெற்றுவந்த ஆற்ற லுள்ளோன் ;
தருமமிகும் தமிழ்நாட்டின் தெய்வ பக்தி
தழைத்தோங்கக் காத்துவரும் தகுதி மிக்கோன். 4

அப்பெரிய சற்குருவின் அடியார் கூடி
அன்னவர்க்குக் கனகாபி ஷேகம் செய்யும்
இப்பெரிய திருநாளில் இருந்து காண
என்னதவம் செய்தோம்நாம் எனப்பூரித்து
மெய்ப்பொருளாம் பரசிவத்தை மிகவும் போற்றி
மேலுமிந்த ஆதீனம் சிறப்புற்றோங்கி
எப்பொழுதும் இந்தமகா சந்நிதானம்
இன்றுபோல் நின்றருளிர இறைஞ்சுகின்றோம். 5

Sri. S. NATARAJA NADAR, B. A., B. L.,
Retired District Judge & Chairman : Area Committee, Madurai Dt.,

கனகாபிஷேக விழா நல்ல முறையில் வெகு சிறப்பாக நடக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உயர்திரு. S. இராமச்சந்திரப்பத்தர் B. A.,
டேப்டி கலெக்டர், மதுரை.

தருமைக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை பரமாசாரிய சுவாமிகளின் அருளாட்சியில் தமிழும் சைவமும் சிறந்த விளக்கம் பெற்றுள்ளன. அவர்கள் கண்டு வழிபட்டு வந்த திருக்கயிலாய மலையை

'' நண்ணும் மூன்றுல குந்நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந் தெய்திய
புண்ணி யம்திரண் டுள்ளது போல்வது ''

என்று தெய்வப்புலவர் சேக்கிழார் போற்றுகின்றார். மூன்று உலகங்களும், நான்கு வேதங்களும் எண்ணில் பெருந்தவம் புரிந்ததின் பயனாக எய்திய புண்ணியம் திரண்டு உருவெடுத்ததுபோல் வெண்ணிறமுடைய கயிலைமலை தோற்றமளிக்கின்றது என்கிறார். அதுபோல், தமிழ் நாட்டவர்களாகிய நாம், எண்ணில் மாதவம் செய்ய, அதனால் எய்திய புண்ணியம் திரண்டு வந்துளதுபோல், சுவாமிகள் நமக்கு இன்று காட்சி அளிக்கின்றார்கள். அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்து கண் களிக்கக் காணும்பேறு நமக்குக் கிடைத்துளது. இக் கனகாபிஷேக விழா இனிது நடைபெற, சங்கத்தனித்தமிழ் பொங்கும் மதுரைத் தலத்துள் உறை அங்கயற்கண் அம்மையையும், சொக்கலிங்க அண்ணலையும் வேண்டுகின்றேன். திருக்கயிலைக் குருமகாசந்நிதானம் பல்லாண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

உயர்திரு. ம. பொ. சிவஞானம்,
சென்னை.

கனகாபிஷேக விழா சிறப்பாக நடைபெறப் பிரார்த்திக்கிறேன்.

உயர்திரு. நன். பொன். அருணிலையனார்,
தேல்லியூர், ஈழநாடு.

சிவம்பெருக்கும் அருண்மொழிகள் திருத்தரிக்குஞ் செய்யமுகம் சிறுமை போக்கும்
பவங்கருக்குங் கண்மலர்கள் பயமெரிக்குங் கைம்மலர்கள் பகைமை நீக்கும்
அவமுருக்கு நின்கொற்றம் அருளிருக்கும் ஆட்சிநிலை அன்பை யூக்கும்
தவம்விரிக்குங் கைலைகண்டோய் தலம்பரிக்குந் தருமபுரஞ் சங்கை ஆக்கும். 1

அருள்வீறு கொண்டிந்த அவனிதனை அடிபணிய ஆட்சி நீட்டி
இருள்மீறி எழுகதிர்போல் எழில்ஞான சம்பந்தப் பேரைத் தீட்டித்
தெருளுறு சிவமாண்ட தேசிகனின் வழியாண்டு சீர்மை கூட்டி
மருளுறு மெனையாண்ட மன்னுசண்மு கத்தேவன் மாண்பைக் காட்டி 2

கோட்டமின்றி ஐயைந்தாங் குருமணியாய் வீற்றிருந்து கூற்றைச் சாடும்
நாட்டத்தான் கடையூரில் நல்லனவெல் லாநல்கு நந்தாய் கூடும்
கோட்டந்தான் சித்திரித்துக் கோமளத்தி அபிராமி குளிர்ந்து நாடுந்
தேட்டந்தான் மிக்கொளிரத் திருக்கவசம் பொற்பணியாற் செய்து பூட்டி 3

தலஞ்சிறக்கும் வேளூரின் சண்முகற்கும் பொற்கவசம் தரித்து நாளும்
வலஞ்சிறக்குஞ் சிவத்தளிகள் வாரமுடன் பூசையுலா வழங்கச் செய்தே
புலஞ்சிறக்கும் மாணவர்கள் புந்திமிளிர் பல்கலைகள் போத மிக்கு
நலஞ்சிறக்குஞ் சாலைகளும் நல்வைத்ய சாலையது நயப்பா னேம்பி. 4

இன்றியமை யாதறங்கள் எத்தனையுண் டத்தனையும் ஈந்த மேலோன்
அன்றிருவர் மிகவுழன்றும் அறிவரியான் அமர்கைலை அண்மி யாங்கே
நன்றியுடன் சிவலிங்கம் நாட்டிவந்த நன்மையது நவிலப் போமோ
குன்றனைய குணமணியே குருமணியே அருண்மணியே கோவே வாழி. 5

பத்தியுடன் அன்பினர்கள் பலர்பொன்னால் அபிடேகப் பணியைச் செய்யச்
சித்தியுடன் கூடினர்கள் செம்மைநலம் அறிந்தருளைச் சேர்ப்பான் உன்னி
நத்தியுடன் அருளாட்சி நானிலத்தில் எந்நாளும் நயந்தே ஞான
சத்தியுடன் பல்லாண்டு தாரணியில் அருளோங்கத் தழைத்தே வாழி. 6

துங்கமறை யாகமங்கள் தூயதிரு முறைகளையுந் துலங்க வைத்த
சங்கைசுப் பிரமணியச் சற்குருவே தவவடிவே தருமை வந்த
பொங்கும்அருட் தனிவித்தே புண்ணியத்தின் பொக்கிஷமே புலமை மிக்கோய்
மங்கையுமை அரனருளால் மாநிலத்திற் பல்லாண்டு மகிழ்ந்தே வாழி. 7

செறிந்திடுவர் அடியர்குழுச் சேர்ந்திடுவர் சிவஞானஞ் செமிரும் பந்தம்
பறிந்திடுவர் பலகலையும் பார்த்திடுவர் பசியறுவர் பகைமை ஆறும்
முறிந்திடுவர் பிறப்புநெறி முனிந்திடுவர் சித்தாந்த முத்தி மார்க்கம்
அறிந்திடுவர் தருமபுரத் தையைந்தாங் குருமணியின் அடிகண் டோரே. 8

உயர்திரு. அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

தருமையெனும் ஆதீனத் தலைவரென வந்த
தவமுனிவ, உன்தகைமை சாற்றுவதும் எளிதோ ?
பெருமைமிகும் பெருநலங்கள் பீடுறவே பேணிப்
பெரும்புவியில் அறம்பெருகக் கருணைமழை பெய்தாய் !
இருமையிலும் இதமுறவே ஏற்றபல தருமம்
என்றென்றுங் குன்றமல் இருக்கநிதி ஈந்தாய் !
அருமையிலும் அருமையுடன் அருந்தமிழை வளர்த்தாய் !
அருள்சுப்பிர மணியபர மாசார்ய, வாழ்க !

உடைமையெலாம் மக்கள் நலம் ஓங்கிடவே தந்தாய் !
உன்பெருமை தன்னையிங்கு உரைக்க என்னலாமோ ?
மடமையிருள் மாய்ந்திடவே மாபணி புரிந்தாய் !
மறைந்தபல நூற்கள்வெளி வர மனமகிழ்ந்தாய் !
கடமைதனில் தவருத கண்ணியனே, உந்தன்
கனகாபி டேகவிழாக் காணல் மிக நன்றே !
மிடிமையெனும் நோய்விலக வேணபொருள் நல்கும்
வேள்சுப்ர மண்யபர மாசார்ய வாழ்க !

உயர்திரு. க். சுப்பிரமணியன் B. A.,
சென்னை.

27 தேவஸ்தானங்களைச் சிறந்த முறையில் பரிபாலித்து வரும் தருமையாதீனத்தின் சிறப்பை யாவரும் நன்கறிவர். இந்த ஆதீனத்தைச் சார்ந்த ஆலயங்கள் எல்லா வகையிலும் சிறப்பாகப் பாதுகாக்கப் பெறுகின்றன. ஆதலின் பக்தகோடிகள் இவ்வாலயங்கட்குச் சென்று சிறந்த பயன் எய்துகின்றனர். தூய்மையும் ஆராதனைச் சிறப்பும் ஆதீன ஆலயங்களில் உச்சநிலையிலுள்ளன.

இப்பொழுது குருபீடத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பதவிக்கு வந்ததுமுதல் பல அரியபெரிய சிறந்த அறச்செயல்களைப் புரிந்து வருகிருர்கள். தஞ்சைமாவட்டத்திலுள்ள இவ்வாதீனத்தின் பெருமையை யாவரும் உணர்ந்து பயனுறும் வண்ணம் சென்னைமாநகரில் ஒரு பிரசார நிலையம் ஸ்தாபித்திருப்பது போற்றக்கூடிய தொன்ருகும். இங்கே தேவார இன்னிசை வகுப்புகளும் வித்துவான் வகுப்பும் நடைபெறுவதோடு, சமயச்சொற்பொழிவுகளும், நாயன்மார்களின் திருநட்சத்திர விழாக்களும் மிக நல்லமுறையில் நடைபெறுகின்றன. நகரவாசிகள் நன்னெறியில் ஒழுகப் பிரசார நிலையம் பெரிதும் உதவுகின்றது என்றே சுருங்கக் கூறலாம். இத்தகைய அறப்பணிகளைப் புரிந்துவரும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் சிறப்பு இயல்புகளைப்பற்றி நிரம்பக் கூறலாம். அவை இவ்வேட்டில் அடங்கா. இவர்கள் புனிதத் தலங்களனைத்தையும் தரிசித்துள்ளார்கள். மகா கயிலாய யாத்திரையை மேற்கொண்டு இன்புற முடித்தருளியது செயற்கரிய பெரும்புண்ணியச் செயலாகும். இதையொட்டியே இவர்களைக் "கயிலை" மகாசந்நிதானம் என்று அழைக்கவேண்டுமென்று ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிகள் அவர்கள் முதன்முதல் குறிப்பிட்டார்கள். இத்தகைய பெருமைவாய்ந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு அடியார்கள் மனமுவந்து கனகாபிஷேகம் செய்வது சாலச்சிறந்த விழாவாகும். இந்தக் கனகாபிஷேக விழா எல்லாவகையிலும் சிறப்புற்று விளங்கவேண்டுமென்று ஸ்ரீ சொக்கநாதர் திருவருளைச் சிந்திக்கின்றேன்.

உயர்திரு. R. S. கிருஷ்ணசாமி நாயுடு,
செயலர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

குருமகாசந்நிதானத்தின் நல்லருட்செயலை நாளும் வழுத்தாத நெஞ்சமேயில்லை. மூர்த்தி தலம் தீர்த்தயாத்திரை செய்து திக்விஜயம் பண்ணிவருவது எம்முள்ளமெல்லாம் கனகாபிஷேகம் செய்ததுபோல் உள்ளது. அத்தனைக்கும் சிறப்பாய் கயிலை மகா சந்நிதானமான பெருமை சொல்லவும் முடியுமோ? அத்தகைய சந்நிதானத்திற்கு ஒரு கனகாபிஷேக விழாவென்றால் அது செய்யவேண்டுவதும் இன்றியமையாததுமான விழாவன்றோ!

வித்துவான். அ. க. நவநீதகிருஷ்ணன்,
திருநெல்வேலி.

தருமையாதீனக்கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள், இருபதாம் நூற்றாண்டின் திருநாவுக்கரசராய், இணையிலாக் கயிலைத் திருமாமலையை மீண்டும் தரிசித்தற்கென்றே அவதரித்தருளிய பெருமானாய் விளங்குகின்றார்கள். அவர்கள் கயிலைத் திருமலையிலிருந்து பொதியப் பெருமலை வரையில் தம் அருட்செங்கோலை நடாத்திச் சிவஞானப் பெருமழை பொழிந்து வருகின்றார்கள். அப்பெருமானுக்குப் பொன்முழுக் காட்டுவதும், அவர்கள் புனிதத் திருமேனியின் பொலிவைக் கண்டுகளிப்பதும் தண்டமிழ் நாட்டார் செய்தவப்பேறே. தருமையாதீனத் தலைவராம் 25-ஆவது ஞானபீடம் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நீடு வாழ்க! நீடு வாழ்க! என்று நீள நினைந்து நித்தலும் பணிவோமாக!

வித்துவான். ப. நீலா,
தருமபுரம்.

பூவார்ந்த பொழிற்றருமை ஞானபீடம் பொலிவுறவே நல்லருளாம்செங் கோலோச்சித்
தேவாரப்பாடலால் தேவன்தன்னைத் தேசுவளர் மனத்தளியில் சிறைப்பிடித்த
ஆவலினர் ஐயைந்தாம் பட்டத்தின்று அமர்ந்தருளுந் திருக்கயிலைக் குருமணிக்கு
நாவாரச் செந்தமிழில் வாழ்த்துப்பாடி நலம்பெறுவோம் கனகாபிஷேகம்கண்டே.

நாதாந்தத் தத்துவனை நாதன்தன்னை நண்ணுதற்கும் அரியவனை நாடிச் சென்று
கேதாரம் கயிலாயம் அமர நாதம் கிளர் சோதிர்லிங்கங்கள் அனைத்தும் கண்டு
வேதாந்தத் துள்ளொளிரும் இறைவன் சீரே எந்நாளும் விளம்பியிடும் குருநாதர்தம்
பாதாரவிந் தங்கள்தலை மேற்கொண்டு பணிந்தெழுந்து பரவிடுவோம் வாழியென்றே.


கேதார யாத்திரை:



படை முன்னேறுகிறது



(நேபாளக் கோட்டியில்) வரவேற்பு



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்
விநாயகர் வழிபாடு செய்தல்



வெற்றி

உயர்திரு. சே. அ. அய்யாசாமிச் செட்டியார்
முன்னாள் நீதிபதி, சென்னை.

மானிடராகப் பிறத்தலே அரிதினும் அரிதென்பார்கள். மானிடராகப் பிறந்து, வாழ்நாளெல்லாம் தேவர்களோடேயே உறவாடிக்கொண்டிருப்பதென்பது கோடியில் ஒருவருக்குகூடக் கிட்டாத பெரும் பேருகும். அத்தகைய பேற்றினைப் பயன்படுத்திக் கணக்கற்ற மக்களை ஆண்டவன் திருவருளுக்குப் பாத்திரமாக்கிவரும் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைத் தமிழகத்தின் தவப்பயனுல் தரணிக்குக் கிடைத்த ஞான ஒளி விளக்காகவே அறிஞர் உலகம் போற்றி வருகிறது. சைவமும் தமிழும் தழைத்தோங்க, சமூக சேவைவளர, நாடு வளம்பெற, கனவிலும் நனவிலும் திருத்தொண்டாற்றிவரும் அந்த அறிவுக் களஞ்சியத்தின் பொன்னுன திருவுளத்தை அறிந்தவர்களும், மணியான வாக்கைக் கேட்கும் பாக்யம் படைத்தவர்களும், அவர்களது திருமேனியைப் பொன்னுலாட்டிப் புனிதமடைய விரும்புவதில் வியப்பேது? கயிலை மலையைக் கண்டுவந்த குருமகாசந்நிதானம் அவர்களின் அறிவொளியையும் அறப்பயனையும் இன்னும் பல்லாண்டுக்காலம் குவலயம் துய்க்குமாறு திருவருள் பாலிக்கவேண்டுமென்று கயிலை நாதனின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

உயர்திரு. வே. சுப்பிரமணியம்
முன்னாள் உயர்மன்ற நீதிபதி, சென்னை.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு வருகிற ஞாயிறன்று தமிழுலகம் கனகாபிஷேகம் செய்விக்கின்றது. அந்நாள் தமிழ்நாட்டு வரலாற்றிலேயே தனித்ததொரு பெருமையுடன் திகழும் என்று நம்புகின்றேன்.

பொதுமக்களது வாழ்க்கையுடன் பின்னித் திகழாத ஒரு நிலையத்தை "தந்தத்தாலாய கோபுரம்" (Ivory Tower) என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். தருமையாதீனமானது சைவ நெறியில் நின்ரேங்கும் முனிவர்களது தவநிலையமாக மாத்திரம் அமையாது, பொது மக்களது வாழ்வைச் சிறக்கச் செய்யும் பணிகளைத் தன்னுடையதாக ஏற்றுச் செயலாற்றும் அறநிலையமாகவும் விளங்குகிறது. அவ்வாறு உயர்நிலையில் ஆதீனத்தை மென்மேலும் வளரச்செய்யும் 25-வது குருமகாசந்நிதானம் அவர்களுக்கு, தமிழ்மக்கள், தங்களது நன்றியையும், பக்தியையும், இந்தக் கனகாபிஷேகத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிருர்கள்.

தங்களது தவ வாழ்க்கையாலும், செயற்கரும் யாத்திரைகள் செய்து முடித்ததின் பயனுகவும், அன்பாலும், அறிவாலும், ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நமது நாட்டு மடாதிபதிகளில் தமக்கு மிக்கார் எவரும் இல்லையென விளங்குகின்ருர்கள். அவர்களது கருணை உள்ளம் அவர்களுக்குத் தனிச்சிறப்பு. ஏழைகளுக்கு எப்பொழுதும், வெள்ளம் முதலிய எதிர்பாராத விபத்துக் களால் தாக்கப்பட்ட பொழுது அல்லல்படும் மக்களுக்கும், அவ்வப்பொழுதும் தாராளமாக உதவுதற்குரிய ஏற்பாடுகளை அமைத்து வைத்திருக்கிருர்கள். பள்ளிகள், கல்லூரி, சமய நிலையங்கள், கோயில்கள் அவர்களது ஆட்சியில் வளர்ச்சியடைந்து வருகின்றன. சைவ சமயத்தின் பெருமையைத் தங்களது வாழ்க்கையாலும், அறிவுரை களாலும், ஆதீனத்தின் செயல்களாலும் உலகுக்கு எடுத்துக் காட்டுகிருர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் நீடூழி வாழ வேண்டு மென்றும், சைவசமயத்தின் பயனை உலகெல்லாம் பெற்றுய்வதற்கு அடிகோலும் நாளாக இக்கனகாபிஷேக நன்னுள் உலக வரலாற்றில் இலங்குமாறு அருள்புரிய வேண்டு மென்றும், இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Sri C. R. PATTABHI RAMAN Bar-at-Law
M. P. (Lok Sabha)
Madras-18.

I am very happy that the Kanakabhishekam of His Holiness Sri La Sri Dharmapuram Adhinam is being celebrated at Dharmapuram. I pray to God that His Holiness should be preserved in good health and cheer for many years to come and that the great Dharmapuram Adinam should carry on its good work.

His Holiness' career has been one of varied significance. He has given a new life to institutions in Veda, Agama and Thevara Patasalas. He is one of the originators of the Laksharchana and Koti Archana in the great Sivalayas. His work in the repairs and maintenance and also building up of temples has been magnificient. He is one of the great spritual leaders in South India today. His pilgrimages to shrines all over India are well known. Only recently he has completed his Kailasa Yatra and has also visited Manasarover. Through the grace of God he has been fortunate enough to have, not only the constitution which is His on account of his being a great Yogi, but also his great Will Power.

One of my ancestors was connected with this great Dharmapuram Adhinam in the last century. I am proud to have been returned to Parliament from a constituency which contains many temples under his guidance and supervision and the connected mutts under His Holiness. I conclude with a prayer again to Sadasiva Brahma to preserve His Holiness and his very well trained and efficient Sishyas in good health and cheer for many many more years to come.

Sri A. S. P. AYYAR M. A (Oxon) I. C. S., F. R. S. L.,
Bar-at-Law,
High Court Judge, (Retd.) Madras.

Your letter dated 9-1-61 about the Kanakabhishekam Celebration of His Holiness Sri-la-Sri Kailai Subramania Desika Gnanasambanda Paramacharya Swamigal Avergal of the Dharmapuram Adhinam. I wish the function all success.

Hon'ble Justice Sri G. R. JAGADISAN,
Madras.

Sri La Sri Subramania Desika Gnanasambanda Paramacharya Swamigal, the twenty fifth incumbent of the Dharmapuram Adhinam, has been at the helm of affairs holding office for the past sixteen years. He is not a figurehead or a mere symbol of an ancient institution .bearing a sentimental life, cherishing the glorious past and despairing of the uncertain future. He is a great scholar, full of learning and culture but is not given to ostentation or pomp. In the cause of Hindu Religion, he has all the zeal ofa crusader. His sincerity of purpose and devotion to God are manifest in hisa dministration,and management of the various temples under His care and protection. The Adhinam and the country are fotunate in having the help and guidance of such a rare personality. I wish His Holiness many, many years of happy useful work. May God Bless us all and fulfil our wishes and prayer.

Sri K. VENKATASWAMI NAIDU, B. A., B. L.,
Member,
Hindu Religious Endowments Commission.
(Govt. of India)

His Holiness Sri Gnanasambanda Paramacharya Swamigal, the Maha Sannidhanam of Dharmapnram Mutt has during the past 16 years and now distinguished himself by his piety and great interest and affection for his disciples. His Holiness has made all his temples as ideal institution. His serice to the cause of religion and literature are unique.

As a great Guru, he has travelled far and wide to spread the message of faith and devotion. From distant Kailas to Kanyakumari he has travelled several times and his books on his pilgrimages are educative and valuable.

I am very happy that his disciples and admirers are honouring His Holiness by a Kanakabishekam to commemorate his noble services.

I wish the function all success and pray that His Holiness may live long to continue his great services.

தர்மரக்ஷாமணி,
உயர்திரு. கே. பாலசுப்பிரமணியஐயர் B. A., B. L., M. L. C.
சென்னை.

தருமபுர ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளைச் சில வருஷங்களாகப் பலமுறை தரிசனம் செய்து அவர்களுடைய சிரிய மனப்பான்மையையும், நம்முடைய சமயத்தில் அவர்களுக்குள்ள பேரவாவையும், நல்லறிவையும் நான் உணர்ந்து மகிழ்ச்சி அடைகின்றேன். அவர்கள் ஆதீன பீடத்தை அலங்கரிக்கவந்து 16 வருஷங்களாகின்றன. இந்த 16 வருஷங்களுக்குள் நம் தொன்றுதொட்டுள்ள தர்மத்திற்குப் பல உயர்ந்ததொண்டுகளை அவர்கள் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்திருக்கிறார்கள். முக்கியமாகச் சென்னையில்

ஒரு பிரசார நிலையம் ஏற்பாடு செய்து சென்னை மக்களுக்கு நமது சமயத்தில் பற்றை உண்டுபண்ணி, கடவுள்வழிபாட்டிற்குப் பேருதவிசெய்து பல பாடல்பெற்ற க்ஷேத்திரங்களுக்கும் கோயில்களுக்கும், அடியார்களை அழைத்துச் செல்வதற்கு வசதி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அடிக்கடி நன்னாட்களில் நம்முடைய சமயகுரவர்களைப்பற்றியும், பெரியபுராணத்தைப்பற்றியும், சைவ சித்தாந்த நூல்களைப்பற்றியும், பல உயர்ந்த சொற்பொழிவுகள் ஆற்றுவதற்கு ஆசிரியர்களையும் படித்தவர்களையும் வரவழைத்து அடியார்கள் கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்தப்படி 7, 8 வருஷங்களாகப் பல கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. அக்கூட்டங்களில் கலந்து கொள்ள எனக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நல்ல நூல்கள் அடங்கிய புஸ்தகாலயத்தையும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய பாடல் அடங்கிய மூன்று திருமுறைகளையும், நன்கு அச்சிட்டு உரையுடனும், தலவரலாற்றுடனும் அழகான புத்தகங்களாக வெளிவரும்படிச் செய்திருக்கிறார்கள். அப்புஸ்தகங்களை எல்லாம் அப்புஸ்தகாலயத்தில் நாம் பார்க்கலாம். வள்ளுவருடைய திருக்குறளைப் பரிமேலழகர் முதலான பெரியோர்களுடைய உரையுடனும் அழகாக அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான உயர்ந்த தொண்டுகளைச்செய்து சைவசமயத்தை நன்கு பரப்பியிருக்கிறார்கள். தருமபுரத்திலும் ஒவ்வொரு வருஷமும் ஆவணிமூல விழா, குருபூஜை விழா இவைகள் எல்லாம் வெகு விமரிசையாக நடத்தப்பட்டுவருகின்றன. தருமபுரத்திலேயே அச்சகத்தையும், ஆயிரக்கணக்கான புஸ்தகங்கள் அடங்கிய புஸ்தகாலயத்தையும் அமைத்திருக்கிறார்கள்.

இவை எல்லாவற்றிற்கும்மேல் தலைசிறக்கச் சென்ற வருஷம் திருக்கயிலாய யாத்திரை செய்து கைலாசநாதனைத் தரிசித்துவந்த பெருமை முக்கியமாக நாம் பாராட்டத்தக்கது. குருஞானசம்பந்தர் அவர்களால் கடவுள் அருளால் கொண்டு வரப்பட்ட சொக்கலிங்கப்பெருமானுடைய வழிபாட்டைச் சிறந்த முறையில் செய்து நாட்டிற்கு நலம் பெருகச் செய்கிறார்கள்.

வேளூர், திருக்கடவூர் முதலான 27 திருக்கோயில்களுக்கு தர்மகர்த்தராக இருந்து, நல்ல முறையில் தொண்டாற்றி வருகிறார்கள். திருக்கடவூர் சங்காபிஷேகப் பிரசாதத்தையும் வேளூர் முத்துக்குமாரசுவாமிபிரசாதத்தையும் அவ்வப்போது சென்னை மக்களுக்கு வழங்க ஏற்பாடுசெய்து அவர்களுடைய வாழ்க்கைக்குப் பெருநலம் அளித்திருக்கிறார்கள். தென்தமிழுக்கும் வடமொழிக்கும் வேற்றுமை பாராட்டாமல் நற்

காரியங்களைச் செய்து அவைகளைப்பற்றி ஞானசம்பந்தம் என்ற மாதப்பத்திரிகை வெளியிடுகிறார்கள். வள்ளலார்கோயிலில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கடவுளுக்கு தங்கக் கவசம் சார்த்தி மக்களுடைய மனதைக் கவரும்படியான விழாவும் நடத்தினார்கள். மற்ற சைவ சமயத்தைச் சேர்ந்த மடாதிபதிகளுடனும் சேர்ந்து பொதுக்காரியங்களை அனுகூலமான மனப்பான்மையுடன் நம்நாட்டு சமயவளர்ச்சியைச் செய்துவருகிறார்கள். அவர்களைத் தரிசிக்கவரும் எல்லோரிடமும் கருணைகூர்ந்து அன்பு பாராட்டுகிறார்கள்.

இப்படி நற்குணங்களால் பொலியும் ஆதீனகர்த்தர் அவர்களுடைய கனகாபிஷேகத்தை எல்லா மக்களும் சேர்ந்து செய்து கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். வெகு வருஷங்கள் ஆதீனகர்த்தர்களாக இருந்து மேலும் மேலும் உயர்ந்த பெருதவிகளைச் செய்தருளக் கடவுள் அருள்புரிய வேண்டுகிறேன்.

உயர்திரு. மதுரகவி. தா. ம. வெள்ளைவாரணம்
திருப்பனந்தாள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்

திருவங்கமாலை

தலையே நீ வணங்காய் தவ மாமுனி தம்மவர்க்கும்
தலையா யுந்நமை ஆளுந் தலைவனைத் தலையே நீ வணங்காய். (1)

கண்காள் காண்மின்களோ — கன கயிலை மலையை நண்ணிக்
கண்ணுதல் கண்டு மகிழ்ந்துவந் துற்றாரைக் கண்காள் காண்மின்களோ (2)

செவிகாள் கேண்மின்களோ — திரு எம்பாவைப் பாடல்களைப்
புவியோர் கேட்கப் பதித்தளித் தான்திறம் செவிகாள் கேண்மின்களோ (3)

மூக்கே நீமுரலாய் — முது மாமறை யின்முடியார்
ஆக்கைக் கேமலர் அர்ச்சிக்கும் அண்ணலை மூக்கே நீ முரலாய். (4)

வாயே வாழ்த்துகண்டாய் — மதி சூடியை உள்நினைந்து
வாயால் ஐந்தெழுத் தோதும் புனிதனை வாயே வாழ்த்துகண்டாய். (5)

நெஞ்சே நீநினையாய் — நிமிர் வெள்ளத்தால் நொந்தவர்க்கே
அஞ்சேல் என்றுஞ ஆடை அளித்தானை நெஞ்சே நீநினையாய். (6)

கைகாள் கூப்பித்தொழீர் — கழல் சூடித் தொழுமவர்க்கே
கையால் அள்ளிக் கனகஞ் சொரிவானைக் கைகாள் கூப்பித்தொழீர். (7)

ஆக்கை யாற்பணிமின் — அருள் நந்தியைக் கண்மணியா
ஆக்கிக் கொண்ட அருந்தவ ராசனை ஆக்கை யாற்பணிமின். (8)

கால்காள் வலம் வருவீர் — கயி லாயம் வலம் வந்த
சால்புடை யான்திருத் தருமபுரத்தினைக் கால்காள் வலம்வருவீர். (9)

உற்றார் வேறுளரோ ? — உயர் ஞானம் ஒளிர்கயிலைச்
சுப்பிர மணியசு வாமியல் லால்நமக் குற்றார் வேறுளரோ? (10)

தேடிக் கண்டுகொண்டேன் — திரு வைந்தெழுத் துட்பொருளை
நாடித் தந்தருள் நல்ல குருவினைத் தேடிக் கண்டுகொண்டேன். (11)

உயர்திரு, க. சொக்கலிங்கம்,
வேளூர்.

இராகம் : உசேனி தாளம் : ஜம்பை

பல்லவி

கயிலைக்குருமணி கனகாபிஷேகமே
காணும்இந்நாளேநம் வாழ்வின்பொன்னுளே (கயிலை)

அனுபல்லவி

நயனங்கள்மூன்றுடை நாதன்அமர்கயிலை
நண்ணியருள்பெற்ற புண்ணியமூர்த்திநம் (கயிலை)

சரணம்

சிவஞானஅருள்மழை தேக்கிடுந்தருமைத்
திருக்கயிலாயபரம் பரைதழைக்கவந்த
தவஞானமணியிருபத் தைந்தாங்குருமணி
சார்ந்தவர்க்கருளே தரும்சிந்தாமணி. (கயிலை)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மதுரை ஆதீனம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீன ஞானபீடத்தில் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிந்துவரும், ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கு மெய்யன்பர்களாகிய சீடர்கள் கூடிக் கனகாபிஷேக விழா நிகழ்த்துவதறிந்து பெருமகிழ்வெய்துகின்றோம். திருக்கயிலாய மலையில் எழுந்தருளியிருந்து, திருநந்திதேவருக்கு சிவாகமங்களின் ஞானபாதப் பொருளுண்மையை உபதேசித்தருளிய சீகண்ட பரமசிவனாரின் பரம்பரையில் வந்த ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகளால் நிறுவப்பெற்றுச் சிவஞான தானத்தை வழிவழியாகச் செய்துவருவது தருமபுர ஆதீனம். இவ்வாதீன பரம்பரைக்குத் தலைமைக் குரவராகிய சீகண்ட பரமசிவம், என்றும் மன்னி வாழ்கின்ற பூவுலகக் கயிலைத் திருமாமலையைச் சென்று தொழுது மீண்ட சிறப்பு இப்பரம்பரையில் இக்கயிலைக் குருமணிக்கே முதலாவதாக வாய்த்துள்ளது. சைவ உலகம் உய்வதற்குரிய அருட் செயல்கள் பலவற்றைக் காலங்கருதிச் சிறப்புறச் செய்து வருவதோடு, நமது ஆலவாய் அண்ணல் எழுந்தருளியிருந்து அருள்புரிந்துவருகின்ற திருத்தலங்களிற் பெரும்பாலானவற்றிற்கும், சிறப்பாகத் திருக்கயிலாய மலைக்கும் சென்று வழிபாடாற்றி வந்துள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பல்லாற்றானும் பாராட்டிப் போற்றப்பெறவேண்டிய தகுதி வாய்ந்தவர்கள். அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்து மகிழும் விழாக் குழுவினருக்கும், அவர்களால் என்றும் கண்மணியிற் சிறந்த நன்மணி என்று பாராட்டப்பெற்று, விழாவில் கனகாபிஷேகம் செய்துவைக்கும் பேறு பெற்றிருக்கும் நமது மதிப்பிற்குரிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும் எல்லா நலங்களும் உண்டாகவும், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் அருளாட்சியும், அருட்செயல்களும் மேலும் மேலும் சிறந்தோங்கி வளர்ந்து, சைவத்திற்கும் தமிழுக்கும் நற்பயன் தரவும் திருவருள்பாலிக்குமாறு அங்கயற்கண்ணிபங்கனும் ஆலவாய் அண்ணலின் திருவடிகளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள்
ஸ்ரீ அம்பலத்தாடும் சுவாமிகள் மடம்
புதுச்சேரி

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கட்கு, நாளையதினம் கனகாபிஷேக பூஜை நடப்பது குறித்து அறிந்து அளவிலா மகிழ்ச்சியடைகின்றோம். இதற்காக நேற்றையதினம் இங்குள்ள ஸ்ரீ மணக்குளவிநாயகர் ஆலயத்திலும், மயிலத்திலுள்ள

ஸ்ரீ முருகப்பெருமான் ஆலயத்திலும் சுவாமிகளுக்கு அர்ச்சனை செய்வித்துப் பெற்ற விபூதிப் பிரசாதத்தை இத்துடன் அனுப்பியுள்ளோம். அளக்கவும் எண்ணவும் இயலாத திருக்கயிலாய மலைக்குச் சென்று எல்லாம்வல்ல இறைவனைத் தரிசித்து வந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிக்கு இவ்விழாவினை ஏற்பாடு செய்த விழாக் குழுவினரைப் பாராட்டுகிறோம். பெருந்துறவியாகிய திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்துக்குக் கனகாபிஷேகம் செய்துவைப்பது குறித்துப் பெருமிதம் கொள்ளுகிறோம். இவ்விழா இனிதே நிகழவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவன் இணையடிகளை இறைஞ்சுகின்றோம்.

ஸ்ரீமத் சபாபதி சுவாமிகள்
சிதம்பரம்

நம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலை மலையைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "………குருமணிசேர் மலைவைத்தார்………" என்று போற்றியுள்ளார்கள். அது இப்போது நம் தருமைக் குருமணிசேர் மலையாகவும் விளங்குவதாயிற்று. விலை மதிக்கஃஒண்ணாத பெருஞ்சிறப்புடையதாயினும் நிறம் அமைந்த மணி தனியே இருப்பதினும் உலோகம் ஒன்றில் அமைதல் முன்னிலும் பன்மடங்கு சிறப்புடையதாய்ப் போற்றுதற்கு ஏதுவாகும். வெள்ளிவெற்பை அடைந்தமையின் நம் குருமணியின் சிறப்பு முன்னிலும் பன்மடங்கு அதிகரித்தது. அக்குருமணியைப் பொன்னிடத்தடைவித்துப் பொலிவுறச்செய்ய அன்பர்களால் இப்போது கனகாபிஷேகச் சிறப்பு விழாக் கொண்டாடப்பெறுகிறது. பொன்னிடத்தடையும் ஏனைமணிபோலாது பொன்னைத் தன்னிடத் தடைவித்துப் பொலிவு செய்யும் நம்குருமணியின் கனகாபிஷேகச் சிறப்பு விழாப் பொலிவுடன் நிகழ்வதாக. சிறப்பு விழாச் செய்வோர்க்கும் எம்மனோர்க்கும் குருமணியின் இன்னருள் நலம் செய்வதாக.

கனம். உயர்திரு. கு. காமராஜ்
முதலமைச்சர், சென்னை

கனகாபிஷேக விழா அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். விழாச் சிறப்பாக நடைபெற என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லறங்காவலர்.
கனம். உயர்திரு. M. பக்தவத்சலம் B. A., B. L..
சென்னை

மகாசந்நிதானம் சிறந்த அறிவும் ஆற்றலும் படைத்தவர்கள். தெய்வப்பணியோடு, தமிழ்ப்பணியும் சிரிய வகையில் புரிந்துகொண்டு வருகிறார்கள். விழா இனிது நடைபெற வேண்டுகிறேன்.

உயர்திரு. V. சங்கரன் B. A., B. L , M. L. A.
மதுரை

குருமகாசந்நிதானம் பலகாலம் வாழ்ந்து மேலும் மேலும் அறப்பணிகள் பலவும் புரிந்து இந்து சமயத்தின் தூணாகத் தொடர்ந்து விளங்கிவர ஆண்டவனை அடிபணிந்து இறைஞ்சுகிறேன்.

Sir. N. S. RAMASWAMI B. A., B. L.,
District Judge, Nagapattinam.

I thank you very much for the kind invitation extended to me for the "Kanakabishegam" of Sri-la-Sri Kayilai Gurumahasannidhanam of the Dharmapuram Mutt on Sunday, the 12th instant. I wish the function a grand Success.

உயர்திரு. அ. வேதரத்னம் M. L. A.
வேதாரண்யம்

திருத்தெய்வத் திருத்தமிழை உள்ளம் கொண்டு
திருக்கயிலைப் பரம்பரையாம் "தருமை" மூலம்
பரவும்வழி பரப்புகின்ற ஞான வள்ளால்!
பைந்தமிழின் உள்ளம்போல் பரந்து பட்ட
குருவருளே! தங்களடி போற்றி! போற்றி!
குருமகா சந்நிதா னத்தின் நெஞ்சம்
தரிசித்தேன்! உய்வடைந்தேன்! விழாவோ நன்கு
தமிழ்மன்றம் நிறைந்துபட வாழ்த்து கின்றேன்!

செந்தமிழ்ச்செல்வர்,
வித்துவான். கி. வா. ஜகந்நாதன் M. A.
சென்னை

செந்தமிழும் வடமொழியும் சிவநெறியும் தவநெறியும் சிறந்து வாழச்
சுந்தரனும் சொக்கலிங்கப் பெருமான்றன் திருவடியைச் சூடி மேன்மை
முந்துகின்ற தருமையுய ராதீன மெனுமலையில் மூண்ட பானு
சந்தமுறு குணமலிசுப் பிரமணிய தேசிகனுர் தாள்கள் போற்றி. (1)

மாசந்நி தானத்தின் கனகாபி டேகத்தை மகிழ்விற் கண்டு
தேசொன்றும் அக்காட்சி தனிலொன்றி வந்தபின்னர்ச் சிறப்பைப் பற்றிப்
பேசென்னில் சிலநாளிற் சொலிஎல்லை கட்டுதற்குப் பிணையுங் கொல்லோ?
தேசம்மன் னியபெரிய மக்களெல்லாம் திரண்டிருந்த சீரைச் சொல்கோ? (2)

இந்நாடு மட்டுமன்று, பன்னுடு முள்ளவர்கள் எய்தி அன்பிற்
பொன்னுடும் சந்நிதா னப்பெருமை கண்ணுரப் போற்றிக் கண்டே
இந்நாளெம் பொன்னுளென் றின்பமெனும் பெருங்கடலில் இனிதின் மூழ்கித்
துன்னுநின் ரூர்களெனும் செய்தியள விற்சொன்னல் சொன்ன தாமோ? (3)

சிவகணங்கள் புடைசூழ அருள்நந்தி யெம்பெருமான் சிவபி ரானைத்
தவமலிய அருள்மலிய வழிபாடு செய்வதிந்தத் தகவே போலும்!
நவமலியும் பொன்னுட்டி நலமலியும் அன்பாட்டி ஞானச் சூழல்
சிவமலியும் படிகாட்டும் இந்தவிழாக் கண்டவர்க்குத் தீங்கே இல்லை. (4)

எங்கெங்கோ இருந்தவர்கள் காரேறிப் பஸ்ஸேறி இரெயிலும் ஏறித்
துங்கங்கோ லுந்தரும புரம்நாடி வந்தார்கள்; சுருதி நான்கும்
அங்கங்கே புகழ்பாடத் தமிழ்மறைகள் ஒலிசெய்ய அருச்சித் தேத்தும்
பங்கெங்கே எவர்கொள்வார் எனஆவல் மிகக்கொண்டு பார்த்து நின்ருர். (5)

காசிமுனி வரன்தவமே உருவென்ன முன்னின்று கருணை பூத்த
மாசில்குரு நாதனென நினைவழிபட் டம்பொன்னல் மகிழ ஆட்டித்
தேசுபொலி தருமுனது திருவுருவில் மினுந்தேசு செறிய வைத்தான்;
ஆசிலிந்தக் காட்சியினைப் பலபிறவி எடுத்தொருகால் அரிதிற் காண்பேம். (6)

பெருங்கூட்டம் கடலென்னத் திரண்டாலும் அன்பினிலே பிணைந்து தம்முள்
நெருங்கூற்றத் துடனமைதி கடவாமல் கண்ணிரண்டும் நேரே பார்க்க
ஒருங்கொருநெஞ் சுடையாராய்க் கனகாபி டேகத்தை உவந்து கண்டார்;
சுருங்கலின்றி வளர்ந்தவண்மைத் திறமுயர்ந்து நின்றிலகும் தூய தேவே! (7)

பாராட்டிப் பேசினவர் வாய்பேசிற் றில்லை;உளம் பரிந்து பேசிச்
சீராட்டிற் றெனல்உண்மை ; அன்றுநின்றன் திருவாக்கால் செப்பிப் போந்த
ஓரேற்றத் தைச்சொல்ல மொழியுண்டோ ? புலச்சேயாய் உரைத்துக் கொண்டாய் ;
பாரேத்தும் பெருஞானக் குழந்தையெனும் சம்பந்தன் பண்பஃ தன்றோ ? (8)

பெருமையுடை யார்பணிந்து பேசுவரென் பதனைநின்றன் பீடார் பேச்சிங்
கருமையுற எளியேங்கட் கறிவித்த தெனல்பொய்யோ ? ஆண்டு பல்ல
வரும்நிலவும் ; போகும்எனி னுங்கனகா பிடேகத்தை மகிழ்ந்து கண்டார்
உருகுமனத் தினிலிந்தக் காட்சிமிகப் பச்சையாய் ஒளிரு மன்றே. (9)

கண்டுசெவி கேட்டுண்டு மணம்நுகர்ந்து மேனிதன்மை கலந்தின் புற்று
மிண்டுமகிழ் வினிற்கலந்த அநுபவத்தைத் தெய்வஅருள் விளைவோ டொன்றி
அண்டியவர் கண்டனரால் ; தருமபுர ஆதீன மாதித் தன்போல்
எண்டிசையும் புகழ்வீசி யுயர்ந்துவரும் சிறப்பினையும் எளிதிற் கண்டோம். (10)

எல்லாம்வல் லவனருளே இத்தனையும் செய்வித்த தென்றே எண்ணும்
நல்லாய்நின் னலங்களெல்லாம் மேன்மேலும் மிகஏற்றம் நண்ணி வாழி
வல்லாரில் வல்லவனும் பரமேசன் அன்புநெறி வளரச் செய்து
பல்லாண்டு பல்லாண்டு புகழோங்கி வளமோங்கிப் பரந்து வாழி ! (11)

உயர்திரு. R. கந்தசாமி மூப்பனர் B. A., B. L.,
கும்பகோணம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்குப் பக்தகோடிகள் குழு கனகாபிஷேகம் செய்து போற்றி அருள்பெற ஆர்வத்துடன் முன்வந்திருப்பது பக்தர்களின் கடமை உணர்ச்சியைக் காட்டுகிறது. மற்ற மதங்களிலும் அரிய செயலைப் புரிந்தவர்களுக்கு மக்கள் மரியாதை செய்துவருவதைக் காண்கிறோம். கிருத்துமதக்காரர்கள் இயேசு பிறந்த ஸ்தலத்திற்குச் சென்று வருவதையும், மகம்மதியர்கள் மெக்காவுக்குச் சென்று வந்து ஹாஜியாரென பெயர் வழங்கப்பெற்றுவருவதையும் கண்டும் கேட்டிருக்கிறோம். அத்தகைய யாத்திரிகர்கள் பலர் இருக்கிறார்கள். போய்வருவதும் அதிக கஷ்டமில்லை. ஆனால் கயிலை யாத்திரை என்பது சிந்திக்கக்கூடிய யாத்திரை அன்று. சமயகுரவர்களில் சுந்தரரைத் தவிர மற்றெவரும் கயிலைக்குச் சென்றுவந்ததாகத் தெரியவில்லை. கயிலைக்குச் செல்ல விழைந்த அப்பரடிகள் பட்ட கஷ்டங்களும், அவர் அங்கு செல்லாமலே ஐயாற்றில் கயிலைக் காக்ஷியைக் கண்டதும் சரித்திர வரலாறு. சுந்தரர் கயிலைக்கு வெள்ளையானைமேலேறிச்சென்று கயிலையில் அண்ணல் பெருமானுடன் தங்கிவிட்டதாக சொல்லப்படுகிறது. கயிலைக்குச்சென்று நாதனைத் தரிசித்துத் திரும்பிவந்து, தாம்பெற்ற

இன்பத்தைத் தம்மடியார்களும் பெற்று உய்ய வழிவகுத்துவரும் பெருமையும், கயிலைக் குருமகாசந்நிதானம் என்னும் பெயரைத் தமக்கே உரிய பெயராக நிலைநாட்டினவர்களும் அறிவைக்கொண்டும் பக்தியைச் செலுத்தியும் இன்னல் அனைத்தையும் ஓட்டி வைராக்கியத்தைக் கடைப்பிடித்து "திருமுறை" ஒன்றே தமக்கு உறுதுணையாகக்கொண்டு கயிலை சென்று ஆண்டவனைத் தரிசித்து அவன் பேரருளைப் பெற்றுத் தம்மடியார்களுக்கு இன்பம் கொடுக்கத்தாம் தமக்குவந்த இடையூறுகளையும் துன்பங்களையும் ஒருசிறிதும் பொருட்படுத்தாது தல யாத்திரையை வெற்றிகரமாக முடித்துவந்து அருள்செங்கோல் செலுத்தும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்குக் "கனகாபிஷேகம்" என்பது மிகச் சிறிய காணிக்கை; ஆயினும் நமது சிறுமையை அவர்கள் தம் பெருமையால் மறைத்து மகிழ்வார்களாக.

உயர்திரு. S. நாகராஜன்
புதுக்கோட்டை

கயிலைக் குருமணிகளுக்கு நாளை (12—3—61) இல் பக்தசிரோன்மணிகளால் கனகாபிஷேகம் நடத்தப்படுவதை அறிந்தேன். கருணைகடாக்ஷத்தாலும், அன்பினாலும், உயர்ந்த லக்ஷியத்தாலும் எவ்வளவோ ஆலயங்கள் சிறந்த நிலைமைக்கு வந்துள்ளன. எங்கள் சிறிய ஊர் (ஆந்தகுடி) கும்பாபிஷேகத்துக்குச் செய்த உதவி நாங்கள் மறக்கமுடியாதது.

உயர்திரு: A. முத்துஐயர்
திருச்செந்தூர்

12—3—61 காலை 9·30 மணிக்கு நடைபெறும் கனகாபிஷேக பூஜை, கயிலை மலையனைய செந்தில் முருகன் கிருபையால் சிறப்பாக நடைபெறத் திருச்செந்திலாண்டவன்கோயில் அலுவலராகிய தமியேன் பிரார்த்திக்கிறேன்.

உயர்திரு. S. ஆறுமுக தேசிகர்
திருத்துறைப்பூண்டி

குருமகாசந்நிதானம் அவர்களுக்கு நடைபெறும் கனகாபிஷேக வைபவம் காசிவாசி ஸ்ரீமத் சொக்கலிங்க சுவாமிகள் திவ்விய திருநக்ஷத்திரத்தன்று நடைபெற அமைந்தமையும்; வழிவழி காசிவாசி எஜமான் சுவாமிகள் முன்னின்று நடைபெறச் செய்வதும் என்போன்ற பழைய வழிவழித் தொண்டர்கள் உள்ளம் உவகை அடையச் செய்திருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அடியார்களுக்கு அருள் ஆட்சி நடாத்தப் பல்லாண்டு கூறி வணக்கம் சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்

உயர்திரு. P. இராமச்சந்திரஐயர்
ஆசிரியர், "வியாபாரக்குரல்", தஞ்சாவூர்

இறைவனின் திருநாமங்களை மாநிலத்திலுள்ளோர் மறவாதிருக்க நல்லுபதேசங்களை உபதேசித்துவரும் பெரியோர்களில் தருமபுரம் மகாசந்நிதானமும் ஒருவர். அவ்வழியே சிறப்புற, மற்றொரு சைவ சமய குருவாக இடங்கண்டு திருப்பனந்தாளில் அமர்ந்து அருள்புரிந்துவருபவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகளவர்கள். முன்னவருக்குப் பின்னவர் செய்கின்ற "கனகாபிஷேகம்" மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி தரும் வைபவமாகும். இந்நன்னாளில் தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் பல்லாண்டு வாழ வேணுமென்று பரமனைப் பிரார்த்திக்கின்றேன்.

உயர்திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
மதுரை

திருவளரும் கயிலாய பரம்பரையில் வருசைவச் செல்வ ஞானத்
தருவளரும் திருத்தருமை ஆதீனக் குருமுதல்வர் தவத்தால் மிக்க
உருவளரும் குருஞான சம்பந்த தேசிகனுர் உயர்ந்த கொள்கை
மருவளரும் சிவஞானப் பெருங்குரவர் திருவடிகள் மன்னி வாழ்க. (1)

சொன்முழக்கும் திருநெறிய தமிழ் முழக்கும் தூயமறை முழக்கும் துன்னும்
சென்முழக்கின் வானமெனச் சிவமுழக்கும் மங்கலப் பல்லியங்கள் செய்யும்
நன்முழக்கம் இடைமுழங்கத் தருமைவளர் குருமகா நாதன் இன்று
பொன்முழுக்கிற் பொலிகின்ருன் நாம் அவன் சீர்அருள் விழைந்து போற்றுகின்ரும்(2)

நம்பிரான் குருஞான சம்பந்தன் முதலாய ஞானச் செல்வர்
தம்பெருஞ்சீர்த் திருவடியை மனத்தெண்ணித் தமிழ்க்கோவை பாடிச்சார்ந்தான்
எம்பிரான் குமரகுரு பரமேலோன் என்பதனை உறுதி யாக்கித்
தம்பிரான் அருணந்தி யிந்நாட்பொன் முழுக்காட்டிச் சால்பு செய்தான். (3)

வாழி திருத்தருமை யாதீன மாமுதல்வர்
வாழி பனசை வருமுதல்வர்—வாழியரோ
பொன்முழுக்குக் கண்டு பொலியும் பெருமக்கள்
மன்பதைகள் இன்பம் மலிந்து. (4)

உயர்திரு. அ. மு. பரமசிவானந்தம்
சென்னை

விழா அழைப்பு வரப்பெற்றேன். கலந்துகொண்டு மகிழும்பேறு பெறவில்லை. விழா சிறப்பாகுக!

உயர்திரு. தி. இரா. அண்ணுமலைப் பிள்ளை
பாளையங்கோட்டை

கனகாபிஷேக விழாக் குழுவினரால் அனுப்பப்பட்ட சிறப்புக்கூட்ட அழைப் பிதழ்ப் பெற்று பெருமிதம் அடைகிறேன். தமிழ்நாட்டுக்கும், பாரததேசத்துக்கும், உலகுக்கும் ஓர் தனித் தெய்வமாக உதித்தருளி, சைவ உலகத்தைக் காத்துவரும் திருவடி என் சிரமேற்கொண்டு, இன்னும் ஒரு நூருண்டுகளாவது தாங்கள் பூதஉடம் பினுடன் இருந்து எங்களைப் பாதுகாக்கும்படி எல்லாம்வல்ல இறைவனை மிகப்பணிந்து வழுத்துகின்றேன்.

உயர்திரு. R. காசிநாததுரை
இராமநாதபுரம்

குருமகாசந்நிதானத்தின் கனகாபிஷேக விழா அழைப்பிதழ் பார்க்க மிக்க மகிழ்ச்சி. எல்லாம்வல்ல எம்பெருமான் திருவருளால் விழா இனிது நடைபெறவும், உலகமெல்லாம் மேன்மைகொள் சைவநீதி விளங்க, ஞான ஆட்சி புரிந்துவரும் நம் குருமகாசந்நிதானம் நீடூழி வாழவும் ஆண்டவனை வணங்குகிறேன்.

உயர்திரு. தி. கா. சங்கரவடிவேல் I. A. S.
சென்னை

கனகாபிஷேகத்தை நம் எல்லோருடைய மதிப்பிற்குரிய ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நடத்தி வைப்பது மிகப்பொருத்தம். மகாசந்நிதானத்திடத்து உண்மையான பேரன்பும், குருவணக்கமுமுடைய சீலர் அவர்களைவிட வேறு ஒருவருமிலர். மகாசந்நிதானம் பல்லாண்டு வாழ்ந்து, அறப்பணிகள் மேன்மேலும் செய்து, சைவ மக்களை பக்திநெறி யில் ஈடேற்றஅருளும் வண்ணம் திருஆலவாய்ச் சொக்கலிங்கப்பெருமான் திருவடி யைத் தொழுவதைத்தவிர வேறு என்ன காணிக்கை செலுத்தவல்லேன்?

Sri P. CHOKKALINGAM B. A.,
Madras

May the Almighty shower his choicest blessings upon your efforts and crown the function with all success that it deserves. With all good wishes.

உயர்திரு. A. கோபாலய்யர்
ஆசிரியர், "காமகோடி", கும்பகோணம்

தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்குச் செய்யப்படவிருக்கும் கனகாபிஷேகத்தை வரவேற்காதவர்கள் இரார் என்றே நிச்சயமாகச் சொல்வேன். அவர்களுடைய அருள் ஆட்சியைப் போற்றுதாரில்லை. அரிய நூல்களை அவ்வப்போது வெளியிடுவதன்மூலமும்; கிராமங்களில் பிரசாரம் மூலமும்; மகாநாடுகளை நடத்துவதன்மூலமும்; தமிழ்க் கல்லூரி, தேவாரப் பாடசாலை, வேதாகம பாடசாலை, சென்னை சமயப் பிரசார நிலையம், வார வழிபாட்டு சங்கம் இவைகளின் மூலமும்; சைவநெறியைத் தழைத்தோங்கச் செய்துவருகிறார்கள். அவர்களின் ஆட்சியின்கீழ்ப் பரிபாலிக்கப் பட்டுவரும் ஆலயங்களின் பராமரிப்பையும், ஆலயங்களில் விளங்கும் பரிசுத்தத்தையும், திறமை நிர்வாகத்தையும் தரிசிக்கும் பக்தர்கள் புகழ்ந்து பேசிவருகின்றனர். அவர்கள் இந்தியாவில் எல்லா முக்கியஸ்தலங்களையும் திருக்கயிலை வுரை சென்று தரிசித்தவர்கள். அவர்கள் இன்னும் எவ்வளவோ அறப் பொதுநலத் தொண்டுகள் புரிந்துவருகிறார்கள். அவர்கள் ஒரு சிறந்த மகான். உலக க்ஷேமத்தை முன்னிட்டு, அவர்கள் அரோக திடகாத்திரத்துடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக!

12—3—61 இல் அடியார்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களைக்கொண்டு செய்விக்கும் கனகாபிஷேகம் போற்றும்படியான வகையில் நடைபெறத் திருவருள்புரிய ஈசனைப் பிரார்த்திக்கின்றேன். கனகாபிஷேகக் கமிட்டி மெம்பர்களின் பக்தியையும், சிரத்தையையும் பெரிதும் போற்றுகின்றேன்.

வித்துவான். ந. சேதுரகுநாதன்

உலகெலாம் போற்றும் உடையவன் அடியார் உளமெலாம் மகிழ்தர அருளிப்
பலகலை வளர்க்குந் தருமையா தீனப் பதியினிற் பேரருட் பெருமை
நிலவிய கயிலைக் குருமகா சந்நி தானமென் றொருபெயர் நிறுவி
நலமெலாம் நிறைய நல்லருள் புரியும் நன்மையைப் பெற்றனம் நாமே. (1

பெற்றபே றதனல் பெருமகிழ் வடைந்தோம் பெரும்புகழ்க் குருவின்சீர் பெருக
உற்றதோர் கனக நிறையபிடேக விழாவுமே கண்டு கண்டுவந்தோம்
கற்றவர் போற்றும் கருணைமா கடலைக் கவினுறப் பணிந்தபே றதனல்
எற்றைக்கும் நாமே திருவருள் உடையோம் இன்பமே இனிஎந்த நாளும். (2)

எந்தெந்த நாளும் எழில்நிறை சைவ இனியநன் னெறியினி தோங்க
வந்தருள் கயிலைக் குருமகா சந்நி தானத்தின் மலரடி வாழ்க
இந்தமா நிலத்தில் சைவநற் றெண்டின் ஏற்றத்தை யாவரும் உணரத்
தந்தபே ரருள்சால் அங்கயற் கண்ணி பாகனர் தாள்மலர் வாழ்க. (3)

ஞானசம் பந்தத் தாண்மலர் அருளி நிறைதரு மெய்யுணர் நிலையும்
வானமா மழையிற் றண்ணருள் வழங்கும் திருமுறை வளமுணர் வழியும்
ஆனபல் லுயிர்கட் கருள்சிவ ஞான போதத்தின் அருமைசால் நெறியும்
தேனவாம் இன்பத் திருக்குறள் வளமும் தெரிவித்த குருவருள் தெளிந்தேம். (4)

வாழி கயிலைக் குருமகா சந்நி தானம் வாழியவே
வாழி தருமை ஆதீனம் வாழி தெய்வத் திருநெறியே
வாழி பொன்சீர் முழுகியருள் வற்றுப் பெருமை நிறைகடலே
வாழி யடியார் சொற்செல்வம் வாழ்க வாழ்க சிவனருளே. (5)

-

உயர்திரு. ரா. அ. வரதராஜன் B. A.,
அறநிலைய உதவி ஆணையர், மஞ்சைநகரம்

"சிவனே தெய்வம்" என்றும், "சைவம் சிவனது அருள்" என்றும், "சைவம் சிவத்தோடு சம்பந்தம்" என்று அறிந்த கயிலைக் குருமகாசந்நிதானம் கனகாபிஷேகம் தமிழ்நாட்டில் உயர்ந்தோரால் (உலகத்தில் பக்தியில் திளைத்தோரால்) நாளை 12—3—61ல் செய்யக்கிடைக்கின்றபேறு - கயிலைக் காட்சி உலகில் வேறெங்கும் பார்க்கமுடியாததொரு ஒப்பற்றகாட்சி. 22,980 அடி உயரம் சிகரம்; திருமலை என்ற பேர் படைத்தது. திரு என்றால் கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம். இது நம் மகாசந்நிதானத்துக்கு இனிது விளங்கும். பார்க்காதவர்களுக்கு விளங்காது. சேக்கிழார்பெருமான் திருமலைச் சிறப்பு சொல்லும்போது "பொன்னின் வெண்டிருநீறு புனைந்தென" என்று சொல்கின்றார். பொன்மேலே - சிவந்தமேனிமேலே - வெண்ணீறு புனைந்தார்ப்போல பனி உள்ளது. "பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்' என்றார் மணிவாசகர். மகாசந்நிதானத்தின் பொன் உடம்பின்மேல் திருநீறுவிளங்கும். "தன்னையார்க்கு மறிவரியான் என்றும் மன்னிவாழ் கயிலைத் திருமாமலை" ஏறி அங்கு பொன்னின் வெண்டிருநீறு புனைந்தானைப் பார்த்து, தரிசித்து, ஏத்தினானைப் பொன்னால் - கனகத்தால் அபிஷேகம்செய்து சிவனை அர்ச்சித்து அபிஷேகம் செய்வதுதான்

அப்பர் சுவாமிகள் "பொன்னெடுங் குன்றமொன்று கண்டீர்", "கனகக்குன்றத் தெழிற்பெருஞ் சோதியை" என்றெல்லாம் துதிக்கின்றார். குருமகாசந்நிதானத்துக்குப் பிரியமான சம்பந்தர் பாசுரம் ஞாபகம் வருகிறது. "தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை.........புண்ணியரே" என்றது. கயிலாயதரிசனம் கயிலைக் குருமணியே செய்தருளிய "கயிலாயர்", "மலையாளர்". பாரதியார் சொன்னபடி "வெள்ளிப் பனிவரைமேல் மீதுலாவியவர்". சம்பந்தர் வாக்குப்படி "புண்ணியர்". புண்ணியர் என்பது தவத்தைக் குறிக்கும் செயல் செய்தவர். திருஆலவாயான் திருப்பதிகத்தில் "தவமாய தன்மையானை" என்று அப்பர் சுவாமிகள் கூறுகின்றார். ஆதலின் தவமாய தன்மையர். குருமணியைக் கனகாபிஷேகம் செய்யாது வேறுமலர்களால் அடியார்கள் செய்தல் பொருத்தமில்லை. புண்ணியத்தின் நிறம் வெண்மை. நீறு பூசிய மேனி பொன்னிறம் கொண்டவர்களைக் கனகத்தால் அபிஷேகம் செய்யத் தூண்டிய உள்ளங் களுக்கு என் நன்றி. நிலைபெற்ற தலங்களை, தளிர்களாகக்கொண்டு தழைத்துப் படர்வது உலகமாகிய கொடி. அக்கொடியின் உச்சியில் பூக்கும் வெண்மலர் போன்றது திருக்கயிலை. எனவே தூய்மையான அடியார்களுக்கு வெண்மலர் தாங்கள். எனவே தங்களுக்கு என் பல்லாண்டு உரித்தாகுக. சாக்கியர் போல உறுதியுடைய சிவத் தொண்டன். கடந்த முப்பது ஆண்டுகளாக அநேக தளிர்களாகிய கோயில்களை அறம் வழுவாது பணிசெய்து கும்பாபிஷேகம் நடத்திக் களியுற்றவன். சிறிது புண் ணியம் செய்தவன். உலகிற் செய்யும் எல்லாச் சிவதருமங்களும் எல்லாத் தல தரிசனங் களும் கயிலையைப் பெறும் பொருட்டேயாம் என்பது என் துணிபு. அப்பர் சுவாமிகள் பல தலங்களையும் தரிசித்துப் படர்ந்து முடிவிலே திருக்கயிலை யாத்திரை செய்து வழி காட்டியது இக்கருத்துப்பற்றியே. "திருக்கயிலாய மகாசந்நிதானம் மன்னி விளங்க".

உயர்திரு. N. C. நாராயணசாமி
அறநிலைய உதவி ஆணையர், மதுரை

தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய 'கனகாபிஷேக விழா' அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றேன். அவ்விழாவிற்கு வந்திருந்து, கண்டு மகிழும் பேறு கிடைக்காமை குறித்து வருந்துகின்றேன். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பல்லாண்டுக் காலம் வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன்.

Sri T. G. PANCHAPAKESAN,
Thiruvidaimarudur.

I am very happy to submit my humble and hearty congratulations and reverential greetings on the Kanakabhishekam function proposed

to Your Holiness in appreciation of the laudable service Your Holiness has rendered to Hindu Society and Religion. I fervently pray to God to bestow long life to Your Holiness so that Your Holiness may continue the noble work for the cause of religion and humanity, for God Siva and His devotees, and for Tamil language and Literature which Your Holiness has all along been doing.

உயர்திரு. பொ. முத்தரசு M. A.,
திருநேல்வேலி

ஞானத்தின் பேருருவே! நன்னெறியின் மெய்த்துணையே!
வானம்போல் நின்றருளும் வண்டமிழின்—ஞானக்
கலைநிதிநீ பொன்முழுகும் காட்சியைக்கண்(டு) இன்பம்
தலைப்பட்டேன் வாழ்கநின் தாள்.

உயர்திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் M. A.,
தாம்பரம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் செய்துவரும் அரிய சமயப்பணிகளையும் தமிழ்ப்பணிகளையும் தமிழ்நாடு நன்கு அறியும். ஸ்ரீ கயிலை மைத் தரிசித்த தனிப்பெருமை அவர்களுக்கே உரியதாகும். இத்தகைய அரிய பண்புகள் அமையப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்திற்குக் கனகாபிஷேகம் செய்தல் மிகவும் பாராட்டத்தக்கது. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் கனகாபிஷேகம் செய்வித்தல் மிகவும் பொருத்தமாகும். இவ்விழாவில் சிறப்புரை வழங்குவதற்கு மாட்சிமைமிக்க டாக்டர். P. சுப்பராயன் அவர்களும், பாராட்டுரை வழங்க என் நண்பர் டாக்டர். இரத்தினவேலு சுப்பிரமணியமும், திரு. S. A. அய்யாசாமி செட்டியார் அவர்களும் அமைந்தது பாராட்டத்தக்கது. கனகாபிஷேக விழாக் குழுவின் அரிய திருப்பணியை யான் பாராட்டுகின்றேன். ஸ்ரீ நடராசப்பெருமான் திருவருளால் இவ்விழா சிறக்க நடைபெறுவதாக. வாழ்கசீர் அடியாரெல்லாம்.

உயர்திரு. டாக்டர். M. இராசமாணிக்கம் M. A., L. T., M. O. L., PH. D.
சேன்னை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்குக் கனகாபிஷேக விழா நடைபெறுவதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். விழா இனிது நிறைவேற இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

உயர்திரு. வி. திருஞானசம்பந்த முதலியார்

செயலாளர், மெய்கண்டார் கழகம், காஞ்சிபுரம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் கனகாபிஷேகம், அபிராமியம்மை இடம் கொண்ட அமிர்தகடேசப்பெருமான் திருவருணலத்துடன் சிறந்தோங்குக எனக் காஞ்சி மெய்கண்டார்கழகத்தினர் காமாட்சியம்மை ஏகாம்பரநாதப்பெருமான் கழலிணைகளை இறைஞ்சிப் பாராட்டுகின்றனர்.

உயர்திரு. S. இராமநாதன்

மாரியம்மன்கோயில்

கனகாபிஷேகம் 12—3—61 இல் நடக்க இருப்பதை அறிந்து பெருமகிழ்வு உற்றவர்களில் யான் ஒருவன். இந்தத் திவ்வியதரிசனத்தைக்காண என்னல் வரமுடியவில்லையே என்று வருத்தமாக இருக்கிறது. குருமணியின் இறைபணி என்றென்றும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன். நீண்ட ஆயுளைத் தருமாறு இறைவனை இறைஞ்சுகின்றேன். குருமணியின் பணி உயர்வுடையது; அழிவில்லாதது. ஆண்டவன் அருள்வாராக!

உயர்திரு. K. கும்பலிங்கம்

செயலாளர், "சர்வோதய குருகுலம்" நாகர்கோயில்

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு 12—3—61 இல் கனகாபிஷேகம் நடைபெற இருப்பதாக அறிந்து சமயம், மொழி, சமூகத்தொண்டாற்றி வரும் சர்வோதய குருகுலத்தின் சார்பில் தவத்திரு அடிகளார் பல்லாண்டு வாழ்ந்து சிறந்த தொண்டாற்ற முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் திருவடிகளை மனமொழி மெய்களால் வழுத்துகின்ரேம்.

உயர்திரு. தி. சுப்பராயன்

விசாரணைதார், ஸ்ரீ காசிமடம், இராமேசுவரம்

அணுகுதற்கரிய அருங்கயிலையை அன்பர் குழாத்துடன் அடைந்து தரிசித்து அதனல் கயிலைக் குருமகாசந்நிதானம் எனப் பெயர் பெற்ற சிறப்பினைப் போற்றிப் பணியும் முறையில் மெய்யன்பர்கள் கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு கனகாபிஷேகம் செய்து வழிபடத் திட்டமிட்டு மேற்படி கனகாபிஷேகம் குருமரபுக்கெல்லாம் முதற்குரு நாதராகிய நந்தியெம்பெருமானது திருப்பெயர் தாங்கிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான்

சுவாமிகள் அவர்கள் திருக்கரங்களினால் நடைபெறும் இவ்விழா இனிது நடைபெற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

உயர்திரு. P. T. இராஜன் M. L. C.
மதுரை

கனகாபிஷேகம் நடப்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். அது நல்ல முறையில் சிறப்பாக நடக்கவேண்டும் என்று எல்லாம்வல்ல ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் களைப் பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

உயர்திரு. தி. செ. முருகதாச பிள்ளை
கௌமார மடாலயம், திருவாமாத்தூர்

செம்மேனி யீசன் திருவருட்பே றுற்றுலகில்
எம்மே லவரும் இயம்பிடுசீர்—அம்மான்
திருத்தருமை ஆதீனம் சேரிருபத் தைந்தாம்
குருப்பெருமான் வாழ்கவருள் கொண்டு. (1)

தருமையா தீனத்திற் சாரிருபத் தைந்தாம்
பெருமைகொள்பட் டத்தில் விளங்கும்—குருமகா
சந்நிதா னங்களிரு தாள்மலரைப் போற்றுமவர்
மன்னிடுவார் பன்னருநல் வாழ்வு, (2)

இருபத்தைந் தாக இயல்சிவமூர்த் தம்போல்
வருமிருபத் தைந்தா வயங்கும்—அருமைமிகு
சந்நிதா னங்களருட் சங்கரனே டொப்பாகும்
என்னிலொப்பா தாரிங் கெவர்? (3)

நெருப்பொன்றிற் சேரினன்றி நீணிலத்தோர் காணார்
விருப்பொடரு வாமரன்சீர் வேட்டுத்—திருத்தருமை
மன்னுமிறை தண்கயிலை வாழரனைக் கண்டுவந்த
தன்மையின லீசனிவர் தான். (4)

சைவத் துடனே தமிழை மிகவளர்த்து
உய்வடைந்து மக்கள் உயருநெறி—கைவரச்செய்
நற்றருமை யாதீனம் நண்ணுமிரு பத்தைந்தா
உற்றஅண்ணல் வாழ்க! உவந்து. (5)

சனகாதி யர்க்கருளும் தம்பிரான் போலக்
கனகாபி ஷேகங் கவின்சீர்—உனலரிய
பேருய்த் தருமைப் பிரான்பெற் றவனிமிசை
நூருண்டு வாழ்க ! நுனித்து. (6)

திருமையா நீனங்கொள்—நெறிமணியே சயிலம்நேர் மாணென்ற—வருஞானியே
இருபதோ டோரைந்தென்—முறைமேவவே இலகிமா தேவன்கொள்—கயிலாயமே
மருவிமீள் பேருன்றி—அவிர்வாய்மையால் வளர்பொனு லாகும்பல்—மலர்தோயவே
அருமையா நீடின்ப—அபிஷேகமார் அடிகள்சீர் வாழ்கென்று—பணிவாமரோ. (7)

உயர்திரு. A. சிவசுப்பிரமணிய பிள்ளை B. A., B. L.
கோக்கிரகுளம்

என் வாழ்க்கையின் இறுதியில் குருமகாசந்நிதானத்தின் அருள் கிட்டியது. ஆனல் என் வயிற்றுப் பிணியும் பணியும் எனக்கு பூரண அனுக்கிரகம் கிடைக்க விடாமல் தடங்கல் செய்யா நிற்கின்றன. கனகாபிஷேக விழா தரிசனத்திற்கு வரமுடியாமல் குறுக்கிடுகிறது ; வருந்துகிறேன். ஈசன் அருளைத் தேடிநிற்கின்றேன். விழா இனிது நிகழ்க.

உயர்திரு. P. இராஜாராமன்
செய்தியாளர், " தினச் செய்தி ", நன்னிலம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களது பொற்பாத கமலங்களுக்கு நமஸ்கரித்து எழுதியது. நாளை நடைபெறவிருக்கும் திருவிழாவாகிய கனகாபிஷேக வைபவத்தில் நேரில் கலந்துகொண்டு ஆனந்திக்க முடியாமைக்கு வருந்துகிறேன். ஆயினும் பரிபூர்ண ஆசி எப்போதும் எனக்குக் கிட்டும்படி அருள்புரிய வேண்டுகின்றேன். விழா இனிது நடைபெற எல்லாம்வல்ல திருவருளை வேண்டுகின்றேன்.

Sri S. VISVALINGAM,
Nannilam.

I have the pleasure to convey my hearty congratulations on the occasion of the Kanakabhishekam of Your Holiness. I wish the function success.

உயர்திரு. தேரழுந்தூர் ஸ்ரீநிவாஸாச்சாரி
சென்னை

மிகப் பொருத்தமான விழா நன்கு நடைபெற்று, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் பல்லாண்டு வாழ்ந்து, இன்னும் அனேக நற்காரியங்களை மேலும் செய்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றேன். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கும் கமிட்டியாருக்கும் என் வணக்கம்.

உயர்திரு. சோ. சுப்பிரமணியம்
சிறுவர்கள் க்ஷேமநல சங்கத் தலைவர், கும்பகோணம்

ஸ்ரீ மங்களாம்பிகை ஆதிகும்பேசுவரர் அருளால் தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இவ்வுலகம் உள்ளளவும் வாழ்க, வாழ்கவென கண்கொள்ளாக் காட்சியாகிய இக் "கனகரபிஷேக" வைபவத்தன்று ஈசனை வேண்டும் சிறுவர்கள் க்ஷேமநல சங்கம்.

உயர்திரு. M. R. R. M. சேஷய்யர்
சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவர், பழனி

எல்லாம்வல்ல இறைவன் அருள்கொண்டு மார்ச் 12ல் குருமணிக்கு நடைபெற விருக்கும் கனகாபிஷேக பூஜை வைபவம் மிக்க சிறப்புடன் இனிது நடைபெறுக.

TELEGRAMS

Sri GUNVANLAL JAVERI, Tiruchirapalli.

May God give long life to celebrate diamond abishekam.

Sri ADVOCATE RAMASWAMI KONAR, Tirunelveli.

Panivana vanakkam.

Sri T. M. CHINNAYYA PILLAI, Madras 17.

Respectful congratulations Kanakabishekam celebrations.

Sri KUNRAKKUDI ADIGALAR, Karaikudi.

We are immensely delighted with Kanakabishekam. Mahasannidhanam is a treasure. He leads us in enlightened path where we enjoy purity humanitarian sympathy high spritual devotional life and supreme bliss. Our heartful prayer for Mahasannidhanams's prosperity towards our betterment we offer Mahasannidhanam ever heartfelt love with gratitude and service. Kindly forebear absence.

Sri P. S. S. SOMASUNDARAM CHETTIAR, Coimbatore.

Hearty congratulations and humble respects on this unique occassion of Kanakabishekam with obeisance. Pray for Almighty's blessings.

Sri KASPA TIRUNAVAKKARASU, Katumannarkoil.

Prays Almighty's blessings.

H. E. Sri V. V. GIRI, GOVERNOR, Kerala.

Wish Kanakabishekam function of Gurumahasannidhanam every success.

VALLIAMMAIYAR TRAINING SCHOOL, Kulasekharapattinam.

Humble homages Kanakabishekam day.

Sri S. AROGYASWAMI PILLAI, (S. R. V. S. (Pt.) Ltd. Kumbakonam) London.

Wishing His Holiness many more happy returns of the day.

Sri ANIKALAN, Tirunelveli.

Wishing the function every success.

Sri ILAKKUVAN, Madurai.

Wishing the function every success.

Sri N. S. RAMALINGAM, M. L. A., Madras.

Wishing the function every success.

Sri MARAGATHA SUBRAMANYA PILLAI, Ambasamudram.

Wishing the function every success.

Sri NATARAJAN, Mt. Lavino, Ceylon.

Saivam thazhaithonga senthamizh valara neevir pallandu vazha iraivan arulvanaga.

Sri SEEYENSEE ARUNACHALAM CHETTIAR, Madras.

Wishing the function every success.

Sri MUTHUPALANIAPPAN, P. L. K. & Brothers, Madurai.

Thank you for your kind invitation. In these days of transition the role played by Sri-La-Sri Kailai Gurumahasannidhanam has been magnificient; His invaluable gospels are needed to all souls. I pray Almighty for all success of Kanakabishekavizha.

Sri R. P. SETHUPILLAI, Head of Tamil Department, Madras University, Madras.

May Kailasa Sannidhanam bless Tamil, culture.

Sri M. R. MEENAKSHISUNDARAM ACHARY, Coimbatore.

I pray Pragathambal for Her choicest blessings be showered on you for long life. Wish the function grand success.

Sri MEERASAHIB, Tirunelveli.

Wishing the function every success.

Sri Al. Vr. P. Family, Devakottai.

Our respectful homages to Mahasannidhanam during Kanakabishekam celebration.

Sri SUBRAMANIA PILLAI, Advocate, Palayamkottai.

Praying for Gurumahasannidhanam's blessings. Wishing function success.

Sri V. ARUMUGAM, New Delhi.

Prostrations and adorations to Kayilai Gurumahasannidhanam. Fervently praying for the guiding light of Gnanasambanda to continue to shine bright as ever and lead humanity by divine grace to immortality and perfection.

உயர்திரு. வித்துவான். சோம. இராமலிங்க தேசிகர், புதுக்கோட்டை.

தங்கள் கடிதம் கிடைத்தது மிக்க மகிழ்ச்சியடைந்தேன். ஸ்ரீலஸ்ரீ அவர்கள் நீண்ட ஆயுளையும் பெற்று இன்னும் அறப்பணி பல செய்து வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவானாக.

உ


குருபாதம்

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்


முதற்பெருங்குரவர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் வரலாறு


[சித்திர விளக்கம்]



சத்தியாய்ச் சிவமாம் தனிமுழு முதல்அருள்
சித்தி விநாயகன் திருவடி போற்றி.




பதிகயி லாயப் பரம்பரை நந்திக்குக்
கதிதரும் கல்லாற் கடவுள்உப தேசம்.



தாய்தந்தை சுற்றத்தார் தாலாட்டுப் பாட்டிசையால்
சேய்இன்பத் தோட்டிலிலே திருக்கண் வளரும் எழில்.




விண்பறந்து இறங்கிய மேய்ப் பரஞ்சோதி
நண்பமர் மேய்கண்ட நாதர்க்கு உபதேசம்.



பூவில்லிக்கு எட்டாத பூரண ஞானப்பிள்ளை
சீவில்லி புத்தூரில் சிறுதேர் உருட்டிடுதல்.



அன்னையும் பிதாவும் ஆலவாய் வழிபட
முன்னைத் தவப்புதல்வர் முன்செல்லப் பின்செல்லல்.




உயிர்தந்த அம்மையப்பர் உள்ளே இருந்தருள்வார்
உடல்தந்த உம்மைஇனி உளம்தோடாராது என்று உரைத்தல்.




பொற்றாமரைக் கரையில் பூஜை பலர் செயக்கண்டு
கற்றாவின் மனம் போலக் கசிந்துருகி நின்றிடுதல்.




பொற்றாமரையின் பொருந்தும் ஈசானத்தில்
உற்றோர் சிவலிங்கம் உறுக என இறைஅருளல்.




இட்டெடுத்தார் போல்குளத்தின் ஈசாநத்தே இறங்கிப்
பேட்டகத்தோடு உடையவரைப் பேற்று இன்பம் உற்றிடுதல்.




மூலமாய் எங்கும் முளைத்த சோக்க லிங்கேசா
ஆலவாயா குருவாய் அடியேற்கு அருள் என்றல்.




சோப்பனத்தில் ஆரூரில் தூய சித்தீச்சரத்தில்
அப்பன் ஞானப்ரகாசன் ஆசானுய் அருள்வான் என்றல்



ஞானப்ரகாசரது நற்கனவில் சோக்கேசன்
ஞானசம்பந்தர்க்கு ஞானம் கோடுக்க எனல்



கமலைச் சித்தீச்சுரத்தில் கதிஞானப் பிரகாசர்
அமல சிவஞானம் அருளும் பெருவண்மை




உனக்குப் பணிசெய்ய உன்றனை எந்நாளும்
நினைக்க மனக்கவலை நீக்கிஅருள் எனப்பணிதல்



மேய்விளக் கியநல் லாசான் மேன்மைசால் சீட னார்தாம்
கைவிளக்கு ஏந்திச் சேல்லக் கைகாட்டி நிற்க என்னல்




குருமோழிகோண்டு அகலாதும் கோடுமழையில் நனையாதும்
பேருமுனிவர் நின்ற திறம் பேருலகைப் புகழ்விக்கும்



கருமத் தொடர்பற்ற கன பக்குவம் தெரிந்து
தருமபுரம் சேர்ந்து தனித்திரு எனக் குரு மொழிதல்




அருமைத் தமிழ்க் குருவாம் அகத்தியரை மிகத்தொழுது
தருமைத் தலத்தில் தவநிலையில் உளங்கொள்ளல்



தில்லை நடராசன் திருநடங் கண்டு உய்ந்தருளும்
எல்லையிலா ஆனந்தம் எய்தும் பேரின்பநிலை



திருவமுது பாயசம் நீர் தேவிசிவ காமி கொண்டு
வருவது அறியாது மா தவத்தில் வீற்றிருத்தல்



எவ்வுயிரும் தம்திருமுன் எண்ணத்தும் பகையின்றிச்
சேவ்விதின் இன்புற்றிருக்கத் தேசிகர்கோன் வீற்றிருத்தல்




பரிபூரணம் அடையும் பக்குவத்தில் ஆநந்த
பரவசராம் பக்குவர்க்குப் பரஞானம் போதித்தல்




இத்தாரணி உய்ய எழில்தருமைக் குருமுதல்வர்
சுத்தாத்துவித சைவ சித்தாந்த முத்திநிலை



பரமானர் ஆநந்த பரவசர் என்று எழுந்துவந்து
தரமான குரு சச்சி தானந்தர்க்கு அருள்புரிதல்



சச்சிதா நந்த மூர்த்தி ஞானசம் பந்தர் கோயில்
மேச்சிநற் பணிகள் ஆற்றி விண்ணுற விளங்கச் செய்தல்.



குரு மாசிலாமணி குமர குரு பரர்க்குப்
பெருஞானம் போதிக்கும் பேரருளின் சீரேழிலே

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்

கனகாபிஷேக மலர்

வாழ்த்துக் கட்டுரைகள்

பகுதி 2.

வாழ்வு நெறி

(திருக்குறள்)

திருக்குறள்வேள் **திரு. ஜி. வரதராஜன் B. A.,**

திருக்குறள் காட்டும் வாழ்வு நெறியின் விளக்கமாக இன்று தருமையாதீனத்தே விற்றிருந்து அருளாட்சி புரிந்து வருபவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள். "திருக்குறள் உரைவளம்" வெளியிட்டுத் தமிழ் உலகிற்கு அறநெறி உதவிய வள்ளன்மை உடையவர்கள். அவர்களுக்கு மெய்யன்பர்கள் கூடி நிகழ்த்தும் இந்தக் கனகாபிஷேகத் திருவிழாவில், அவர்களுடைய பொன்னர் திருவடிகளுக்கு எனது மனமொழி மெய்களால் சமர்ப்பித்துக்கொள்ளும் ஒரு சிறு காணிக்கையே இது.

திருவள்ளுவர் அருளிய நூல் திருக்குறள். வேதம் போன்று, எல்லாப் பொருளும் இதன்கண் உண்மையாலும் இதன்கண் இல்லாத பொருள் வேறு ஒன்றும் இன்மையாலும் இதனைத் தமிழ்மறை என்றே கொண்டனர் பெரியோர். மக்கள் தம் வாழ்க்கையில் செய்யத் தக்கன இன்னவை செய்யத் தகாதன இன்னவை என்று பகுத்து விதிவிலக்குகளைக் கூறிச் செல்கிறது வடமொழி வேதம். அதேபோன்று தமிழ் மறையாம் திருக்குறளும் அறத்தைக் கூற வந்தபோது விதித்தன இவை, விலக்கியன இவை என எடுத்துக்காட்டித் தனி மனிதன் வாழ்வையும், சமுதாயத்தின் வாழ்வையும் செம்மைப் படுத்துகிறது.

உலகம் ஆண் பெண் என்ற இருபெரும் இனப் பிரிவினையுடையது. குண நலன்களினல்-உறுப்புகளினல் வேறு வேருக இருப்பனவும் உயர்வு தாழ்வு அற்றனவும் ஆகிய இவ்விரண்டும் சேர்ந்தால்தான் இன்பமுடையதும் பயன்தருவதும் ஆகும். அறிவுடைய ஆண்மகன் அன்பு நிறைந்த பெண்ணின் நல்லாளோடு கூடி வாழும்போது தான் பண்பாகிய அன்பும், பயனுகிய அறமும் மிளிர்கின்றன. களவு, கற்பு என்ற இரண்டு பிரிவாக இன்பப்பகுதி அமைந்துள்ளது. களவுப் பகுதியிலே கருத்து ஒருமித்த காதலர் இருவரின் கூட்டத்தைப்பேசி, கற்புப் பகுதியிலே பிரிவைப் பேசுகிருர் ஆசிரியர். கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலன்களும் ஒருங்கு சேர்த்துத் துய்க்கும் இன்பத்தை அன்பு நிறைந்த காதலியின்பால் அனுபவித்த அறிவுடைப் பெருமகன்வாழ்வு தன்னேடு அமையாது தன் சமுதாயத்துக்கும் பயன் பட வேண்டும் என்று கருதும்பொழுதுதான் அறநெறி வாழ்க்கை தொடங்குகிறது.

இனி, செய்யத்தக்கன இன்னவை என்று விதி முறையாற்கூறி, செய்யத் தகாதன இன்னவை என்று விலக்குமுறையால் விலக்கி வாழ்க்கை நெறியை வகுத்துக் காட்டுவார் ஆசிரியர். மனம், வாக்கு, காயம் என்ற திரிகரணங்களையும் தூய்மை செய்யும் முறைமை இந்நூலில் பேசப்படும். மனத்திலே எழும் நினைவுகளுள் தீயன நீக்கி நல்லன நினைத்துப் பழகுவது மனத்தறம் ; பேச்சில் குற்றங்களைக் கடிந்து பயனுடையவை கூறுவது வாக்கறம் ; மூன்ருவதாகத் தீய செயல் தன்னிடம் நிகழாது காத்து நன்மைகளையே செய்து வாழ்தல் காயதருமமாகும்.

அதில் முதற்கண் மனத்தறம் கூறுகிறது. அழுக்காறு,வெஃகல், வெகுளி, பிறனில் விழைதலாகிய தீய எண்ணங்கள் மனத்தில் நிகழாமல் தடுக்க வேண்டும். எண்ணமே சொல்லாகவும் செயலாகவும் பரிணமிப்பதால், மனத்தைத் தூய்மை செய்வதுதான் தலையாய கடமையாகும். பிறர் செல்வம் முதலியவற்றைக்கண்டு மனம் பொறுமைதான் அழுக்காறு எனப்படுவது. அழுக்காறு என்பதைப் பாவி என்றே ஆசிரியர் உருவகித்துள்ளார். அழுக்காறுடையான் தனது செல்வம் குறைந்து ஆழ்ந்த நரகத்தையும் அடைவான். அடுத்துப் பிறனில் விழைதல் கூறப்படுகிறது. பிறர் மனையாளை விரும்புதல் பிறனில் விழைதலாம். பிறர் மனையாளைத் தன் செல்வச் செருக்கு பதவிச் செருக்கு முதலியவற்றால் பெற்று இன்புறலாம் என்று எண்ணுபவன் உலகம் உள்ளவரை அழியாத பழியை அடைவான். பழி மட்டுமா ? பலருடைய பகையையும் அடைவான். அதனால் அச்சம் பிறக்கிறது. வாழ்க்கையில் அமைதி இல்லை. அதன் விளைவு பாவம் ! பிறர் மனைவியை விரும்பிய குற்றத்தால் இராவணேசுவரன் போன்ற பேரரசர்களும் கொடிய பகையைப் பெற்று அழியாப் பழியை என்றும் நிறுத்தி மறைந்தார்கள். மனிதனுடைய அறியாமை என்னும் இருளால் எய்தும் இத் தகைய அழுக்காறு, வெஃகல், வெகுளல், பிறர்மனை நயத்தல் என்னும் பல்வேறு குற்றங் களையும் அறிவு என்னும் ஒளியால் அகற்றியபொழுது மனம் தூய்மை அடைகிறது; அதுவே பிற நலன்கள் எல்லாவற்றையும் தரும்.

மனத்தின்கண் தீய எண்ணங்களைக் கடிந்து மனந்தூயதாகிய பின்பு நல்ல எண்ணங்கள் தோன்றுவது இயல்பு. அடக்கம், பொறை, நன்றியறிதல், ஒப்புரவு, அன்புடைமை முதலிய நற்பண்புகள் மனத்தின்கண் அமைய வேண்டும். செல்வத் தாலும், அதிகாரத்தாலும், சூழ்நிலையாலும் பெருமையுடையோம் என்னும் செருக்கு மிகக் கொடியது. அச்செருக்கு உண்டாகாத வண்ணம் கற்றறிந்து அடங்குவதே அடக்கமாம். அடக்கம் மனத்துக்குரிய சிறப்புத் தொழில். பணிந்து நடப்பதுதான் பெருமையடைவதற்கு வழி. தன் பெருமைகளைத் தானே பேசுவது சிறுமை அடைவிப்பதாகும்.

திரிகரணத்தாலும் விளையும் குற்றங்களைப் பொறுத்தலே பொறையெனப்படும்.

" இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன் — எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை "

என்னும் நாலடிச் செய்யுள் அடக்கத்திற்கும் பொறுமைக்கும் உள்ள வேற்றுமையை உணர்த்திற்று. பிறரால் விளையும் தீமைகளைப் பொறுத்தலோடு அமையாது தீமை செய்தார்க்கு நன்மையும் செய்ய வேண்டும் என்று பொறையின் சிறப்புக் கூறினர். பொறையுடையான் மனத்தில் நன்றியறிதல் என்ற பண்பு இயல்பாகவே அமைந்து கிடக்கிறது. அது செய்யாமல் செய்த நன்றி, காலத்தினால் செய்த நன்றி, பயன் கருதாது செய்தநன்றி என்று மூன்று வகைப்படும். தந்தை மகற்காற்றும் உதவி முதலியன செய்யாமல் செய்த உதவியாம். அப்பிறப்பில் தந்தைக்கு மகன் ஒன்றும் செய்திலன். நீரிலே ஒருவன் நீந்த அறியாமல் மூழ்கும்போது மற்றொருவன் உதவி

செய்து அவனைக் காப்பாற்றுகிறான். இவ்வுதவி போல்வன காலத்தினால் செய்த உதவியாம். பசிக்குப் புசிக்க உணவளித்தலும், மானம் காக்க உடையளித்தலும், அறியாமை நீங்கக் கல்வி கற்பித்தலும், இன்னோரன்ன பிறவும் ஆகிய அறங்கள் பயன் கருதாது செய்த அறங்களாம். இவ்வாறு பிறர் செய்த நன்றியை அறியஅறியத் தானும் பிறர்க்கு நன்றி செய்ய வேண்டும் என்ற எண்ணம் தானாக உண்டாகும். அதற்கு அடிப்படையாக வேண்டப்படும் பண்பு அன்பு. அன்பின்றிப் பிறர்க்கு நன்மை செய்ய முடியாது. உலகத்திலே இன்றுவரை தோன்றியுள்ள பெரியோர்கள் அனைவரும் அன்பினால் மக்களை நேசித்தவர்களே என்பதை வரலாறு உண்மைப்படுத்தும். நம் அடியார் பெருமக்களும், வள்ளுவரும், புத்தரும், ஏசுநாதரும், காந்தியடிகளும் கொண்டது அன்பு என்னும் பண்பே! அதுதான் அவர்களை அழியாத தெய்வ நிலையை அடையச் செய்தது. உலக நடையினை அறிந்து அதனோடு ஒத்து வாழ்ந்து உதவி செய்து சூழ்நிலைக் கேற்பப் பயன்படுதலே ஒப்புரவாம். ஊர் நடுவே இருந்து தாக விடாய் தீர்க்க வருவார்க்கு நீர் உதவும் ஊருணிபோலவும், உணவின்றி வருந்திப் பசியோடு வருவார்க்கு நறுஞ்சுவைக் கனிகளை அளிக்கும் பயன்மரம் போலவும், நோயாலும் பிணியாலும் நலிந்து மெலிவார்க்கு அந்நோய்ப் பிணிகளை நீக்கப் பல்வேறு உறுப்பாலும் உபயோகமாகும் மருந்து மரம் போலவும், ஒப்புரவாளன் பயன்படுவான் என்று உவமைகளைக் காட்டி ஒப்புரவறிதலின் பெருமையை ஆசிரியர் கூறுகிறார்.

மனத்தினால் எய்தும் குற்றங்கூறி மனத்தைத் தூய்மைப் படுத்தும் வழியும் கூறி மனத்தறம் உணர்த்திய பின், சொற்களால் எய்தும் குற்றங்கூறி வாக்குத்தூய்மை செய்ய வேண்டிச் சொல்லறம் கூறவேண்டும். சொல்லில் தீயன களைதல் வேண்டும். ஆகையால், புறங்கூறல் பயனில சொல்லல் ஆகிய இருவகைக் குற்றங்களையும் முதற்கண் விலக்கிக்கொள்ள வேண்டும். புறங்கூறலாவது மனத்தில் தீமையை மறைத்து முன்னே புகழ்ந்து பேசிப் பின்னே இகழ்ந்து பேசுதலாம். 'புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும்' என்று புறங்கூறுவானை இகழ்ந்து பேசுகிறார் ஆசிரியர். புறங்கூறும் குற்றம் உணர்ந்த ஒருவன், பயனில்லாச் சொற்களைச் சொல்லும் குற்றமும் உணர்ந்த ஒருவன், தன்னிடம் பயனில்லாச் சொற்களைச் சொல்லும் குற்றமும் வாராதபடி காத்துக்கொள்ள வேண்டும். பயனற்ற சொல் பேசுவானை மக்களிலே பதராகச் சொல்ல வேண்டும் என்று ஆசிரியர் விதிக்கிறார். உள்ளீடில்லாத பதர் எவ்வாறு பயன்படாதோ அதுபோலப் பயனில்லாத சொல்லும் சமுதாயத்துக்குப் பயன்படாது. மனிதன் பேச வேண்டின் பயன் தரும் பேச்சுக்களைப் பேசுக; இல்லையேல் பேசாமல் இருந்து விடுக என்று ஆசிரியர் கூறுகிறார். இனி, சொல்லறமாகிய இன்சொல் பேசுவார். சொற்குற்றங்களாகிய பயனில சொல்லல் முதலியவற்றைக் கடிந்து மனநிறைவுடன் பயன்படும் உள்ளத்தே எழுகின்ற சொல்லே இன்சொல் எனப்படும். பண்பாடுற்ற மகன் அன்பு கனிந்த இன்முகத்தோடு இனிய சொல் சொல்வதால் யாதோர் இழப்பும் இல்லை. பொருளுடையானே ஈதல் முதலாகிய அறங்களைச் செய்ய முடியும். ஆனால் இன்சொல் யாரும் பேசலாம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தில் நலிந்தோர்க்கும் ஈத்துவக்கும் காட்சியும், அவர்களோடு பேசி இன்சொல்லாலாகும் அருளுரை கேட்டுவந்த பல நாட்களிலும் வள்ளுவர் வாய்மொழியான ஒப்புரவும், இன்சொல்லும் அங்கே மலிந்து கிடப்பதையும் கண்டு அவர்கள்பால் என் நெஞ்சு ஈடுபட்டுக் களிப்பதுண்டு.

அடுத்து வாய்மையைவிட உயர்ந்த அறம் வேறு ஒன்றுமில்லை என்று வாய்மையின் சிறப்பைக் கூறுகிறார். வாய்மை பேசும்போது நன்மை பயக்கும்படிப் பேசவேண்டும் என்றும் கட்டளையிடுகிறார்.

இதுகாறும் மனத்தறம், சொல்லறம் என்ற இருவகை அறங்களுள் விலக்கு விதி என்ற பாகுபாட்டை ஆசிரியர் வள்ளுவர் கண்டவாறே உணர்ந்தோம். இனி, மனத்தில் தூயனாய் நல்லன நினைந்து, சொல்லில் தூயனாய் இனிய சொல் பேசும் இயல்பினைப் பெற்றான் ஒருவன் செயலில் தூயனாம் முறையை அறிதல் வேண்டும். செயலிற்படும் குற்றங்களை முன்னாகக் கடிதல் வேண்டும். செயலிற் குற்றங்கள் எவை என்று அறிந்து, அவற்றைக் களைதலே செயலறத்தில் விலக்கின்பாற்படும். அச் செய்கைக் குற்றங்கள் கூடா ஒழுக்கம், களவு, இன்னா செய்தல் என்பன. கொலையும் இன்னா செய்தலில் அடங்கும். கூடா ஒழுக்கம் எது? மனந் தீயனாயும் சொல் தீயனாயும் தோற்றத்தால் மாத்திரமே தூயனைப்போல நடித்துப் பிறரை வஞ்சிப்பதும், மனந்தீயனாயும் சொல் இனியனாயும் பிறரை வஞ்சித்து வாழ்வதும், புறத்திலே பற்றில்லாதவனைப் போலத் தோற்றத்தால் காட்டியும் சொல்லால் பேசியும் அகத்தில் பொருளை வஞ்சிக்க நினைப்பதுவும் அக் கூடாஒழுக்கம் என்று ஆசிரியர் கூறினாரேனும் ஏனைய நெறிகளில் நிற்பார்க்கும் அது பொருந்தும். சொல்லாலும், செயலாலும் கொடுமை செய்வார் பலர். அவர்களால் மிக்க தீமை வந்துவிடாது. பாதுகாவலோடு வாழ்வதற்காவது இடமிருக்கிறது. ஆனால் தூய்மையான தோற்றத்தால் இனிமையான சொல்லால் உலகை வஞ்சிப்பவர்களிடமிருந்து தப்புதல் அரிது. அதனால் முதற்கண் செயலில் தூய்மை உண்டாக வேண்டி அக் கூடாஒழுக்கத்தைக் கண்டிக்கிறார். பிறர் நலனுக்குரியாளை வஞ்சித்தலைக் கூடாஒழுக்கத்தில் கூறுகிறார். அடுத்துப் பிறர் பொருளைக் கவர்தலைக் கள்ளாமையில் கூறுகிறார். இவ்விரண்டும்தான் இன்றைய சமுதாயத்திலே காணப்படுகின்ற பூசல்களுக்குக் காரணம். இவ்விரண்டு காரணங்களும் இல்லையேல் உலகிலே சண்டை ஏது? பூசல் ஏது? பிறர் பொருளைக் கவர எண்ணுபவனது வாழ்க்கையிலே முயற்சி யிராது. அச்சமே நிறைந்திருக்கும். அவனுடைய மனைவியும் மக்களும் சுற்றத்தாரும் அவனை வெறுப்பர். ஏன்? வெறுக்கப்படும் அவனும் அவ்வுடலில் வாழ ஒருப்படான். அதனால்தான், "கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை" என்று கூறுகிறார். மேற்கூறிய களவின்கண் நிற்பானுக்குப் பல இடையூறுகள் ஏற்படும். தன் களவைத் தடுப்பாரைத் தனக்குத் தீமை செய்வாராக எண்ணுவான். அத்தீமையை எதிர்பார்த்துத் தடுப்பதற்கும், தன் களவு வெளிப்படாமல் பாதுகாத்தலுக்கும் பல தீமைகள் செய்ய நேரிடும். தன் நன்மையைக் கருதியாவது பிறர்க்கு இன்னா செய்யாது இருக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். அடுத்துக் கொல்லாமையில் ஓர் உயிரைக் கொல்வதனால் உண்டாகும் கொடுமையைக் கூறிக் கொல்லாமையின் பெருமையைக் கூறுகிறார். அண்மையிலே வாழ்ந்த காந்தியடிகள் கொல்லா விரதம்பூண்டு அமரநிலை யெய்தினமை உலகு அறியும்.

இங்ஙனம் ஒரு மனிதன் காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்பப் பயன்படும் வகையினை அறிந்து மனமும் சொல்லும் தூயனாய்த் தீய செயல்களை விலக்கி நல்ல செயல்களை மேற்கொள்ளக் கருதி அன்பு மிகூரப் பெற்று, மனைவி மக்கள் சுற்றங்களைப் பேணி வருங்கால் விருந்தினரைப் போற்ற முன் வருகிறான். நம்பால் முன் ஒரு தொடர்பும் இன்றிப் புதியராய் வருவாரே விருந்தினராவர். இல்லறப் பண்பு அன்பு.

அவ்வன்பு வளர்ச்சிக்குத் துணையாவது விருந்தோம்பலாம். விருந்தோம்பி மிஞ்சியதை உண்பவனது வயலுக்கு வித்து இடவேண்டியதில்லை என்று இம்மைப் பயனைக் கூறிச் செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் வானவராலும் போற்றப்படுவான் என்று மறுமைப் பயன் கூறி விருந்தோம்பலின் பெருமை கூறினர். விருந்தினர்க்கு உணவளித்து உபசரித்தலைச் செய்து அன்பை வளர்த்தவன் ஆர்வம் மீதூரப் பெற்று உணவின்றி வாடுவார்க்கு உணவும், உடையின்றித் தவிப்பார்க்கு உடையும், உறையுளின்றி உழல்வார்க்கு உறையுளும் கொடுக்க முற்படுகிருன். இச்செயல்தான் ஈதலாம். அதனுல்தான், "வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை" என்ருர் ஆசிரியர். ஈகையாளன் தஞ்சமென்று வந்து அடைந்தார் எல்லார்க்கும் அஞ்சேல் என்று அடைக்கலம் தந்து காக்கின்ருனுகையால், அறங்கூறவந்த ஆசிரியப் பெருமகனர் இல்லற வாழ்க்கையின் குறிக்கோள் ஈகை என்று முடித்துக் காட்டினர்.

தனிமனித வாழ்க்கையிலே நிகழக்கூடிய குற்றங்களையும், நன்மைகளையும் வரிசையாகக் கண்டோம். இனிச் சமுதாயத் தொடர்பால் ஏற்படும் குற்றங்களையும், காணுதல் முறையாம். வரைவின் மகளிரைச் சேர்தல், கள்குடித்தல், சூதுஆடுதல் போன்றவை சமுதாயத் தொடர்பால் நிகழும் குற்றங்களாம். இம்மூன்று குற்றங்களும் திருமகளால் விலக்கப்பட்டார்க்குரிய நட்புக்களாம். இன்பம் கருதித் துன்பம் தருதலாலும், நன்மை கருதித் தீமை செய்வதாலும், ஊதியம் கருதிப் பொருளை இழப்பதாலும் இம்மூன்றையும் ஒருசமமாகக் கூறினர் ஆசிரியர்.

இனிச் சமுதாயத்தொடர்பால் உண்டாகும் நன்மைகளையும் காணவேண்டியது முறைதானே. அவை கல்வி, அறிவு, நட்பு முதலியனவாம். அறிவு வளர்ச்சிபெற வேண்டிய மனிதனுக்குக் கல்வி மிக மிக இன்றியமையாத ஒன்று. கல்வி பெற்ற மகன் அறிவுடையவனுக விளங்குகிருன். அறிவு இரண்டு பிரிவினையுடையது. ஒன்று நூலறிவு. மற்றொன்று நுண்ணறிவு. அறிவாவது காணும்பொருள்களின் தன்மைகளை உள்ளவாறு அறிவது. பொருள் தன்மைகளை அறியும்பொழுது, தன் அறிவாலும், நூலறிவாலும் நுனித்து அறியவேண்டும். அறிவு வளர்ச்சிபெற வேண்டிய மக்களுக்கு நுண்அறிவாகிய எண் என்பதும், நூலறிவாகிய எழுத்து என்பதும் ஆகிய இவ்விரண்டும் இரண்டு கண்கள் என்றே பெரியோர் சொல்லுவர். இதனல் கல்வியின் பெருமையையும், அறிவின் பிரிவையும் விளக்கினர் ஆசிரியர். அறிவு பெற்ற பெருமகன் நண்பனுக வாழ்ந்து பலருக்கும் பயன்படுவான். மேலணிந்திருக்கும் ஆடையானது கீழே நழுவியபொழுது கை தானேவந்து உதவி ஆடையை நழுவவிடாமல் மானங் காப்பதுபோல, தாழ்வு வரும் அதே நேரத்தில் தானே முன்வந்து உதவிசெய்து தாழ்வைப் போக்கி மானங்காப்பவனே நண்பனுவான்.

தனக்கே எல்லாம் வேண்டுமென்ற குழந்தைப்பருவமுதல், எல்லாம் பிறருக்கே என்ற தன்னலம் அற்ற முதுமைப் பருவம் வரை மனித வாழ்க்கையிலேயுள்ள வளர்ச்சியைக் கண்டோம்.

இனி, எவ்வுயிரும் தன்னுயிராக எண்ணி இரங்கும் உயர்நிலையாகிய தெய்வ நிலைபெற்றவன் உலக நிலையாமை, செல்வ நிலையாமை, யாக்கை நிலையாமை என்ற மூன்று நிலையாமையையும் உள்ளவாறு அறிகிருன். உலகமானது நிலைத்தது அன்று,

அழியக்கூடியது என்று உணர்தல் வேண்டும். அதாவது காரிய, காரணமாதலாகிய நிலை மாறுபாடு. அதேபோன்று செல்வமும் ஒருவரிடமும் நிலைத்து இராது. அதுவும் இடம்மாறும் தன்மையது. " கூத்தாட் டவைக் குழாத் தற்றே பெருஞ்செல்வம் " என்று செல்வத்தினது தன்மையை அழகாகக் கூறினர் ஆசிரியர். செல்வம் சேரும்போது சிறிது சிறிதாகச் சேரும்; ஆனால் நீங்கும்போது ஒருசேர நீங்கும் என்று உவமையினால் விளக்குகிறார். உடல் அழியக்கூடியது; நேற்று இருந்த ஒருவன் இன்று இல்லை: ஆதலால் யாக்கை நிலையாமையைக் காட்சியளவையால் அறிகிறோம். இத்தகைய மூன்று திறத்தாலும் துறவு முற்றுப்பெற்றவனுக்கு மெய்யுணர்வு என்னும் தத்துவஞானம் தானே எழுகிறது.

பிறப்பே துன்பமானது; பிறப்புக்குக் காரணம் அவா என்பது; முதற்கண் அவாவை அறுக்கவேண்டும்; பற்றில்லாத பரம்பொருளைப் பற்றினால் உலகத்தின்கண் செல்லும் பற்றுக் குறையும் என்று உணர்தலே மெய்யுணர்தலாம். உயிர் சார்ந்ததன் வண்ணமாவது. உலகத்தைச் சார்ந்தபோது உலகமாகவே இருந்தும், செம்பொருளைச் சார்ந்தபோது செம்பொருளால் விளங்கியும் காட்சியளிக்குந் தன்மையது. ஆதலால் மெய்ப்பொருளைச் சார்தலே பிறவியின் தலையாய கடன் என்று உணர்ந்து, உலகப் பற்றுக்களைக் குறைத்துக்கொண்டு வருவோமேயானால், உலகத்தால் உண்டாகும் துன்பம் வந்து நலியாது. எல்லாவற்றிற்கும் ஆதாரமாய் நிற்கும் செம்பொருளே உண்மைச் சார்பு என்று உணர்தல், சார்பு உணர்தலாம். இதுவே தியானமாம். யான் எனது என்னும் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை உணர்ந்து அவைகள் கெடும்படி ஒழுகுதல் சார்பு கெட ஒழுகுதலாம். இதுவே சமாதியாம்.

நோய்கள் மூன்று பிரிவின. அவை பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்பன. எடுத்த உடம்பில் அனுபவிக்கும் இன்பத் துன்பங்கள் பிராரத்தம். புதியவாய்ச் செய்கின்ற வினைகள் ஆகாமியம் எனப்படும். எஞ்சி நின்றவை சஞ்சிதமாம். செம்பொருளைச் சார்ந்தானுக்கு இம்மூன்று வினைகளும் சாரா என்பதை உணர்த்தச் " சார்தரும் நோய் சார்தரா " என்றார் ஆசிரியர். இக்கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கி ஞானசாத்திர நூலாகிய திருக்களிற்றுப்படியாரில்,

" சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் என்றமையால்
சார்புணர்தல் தானே தியானமாம்—சார்பு
கெட ஒழுகல் நல்ல சமாதியுமாம் கேதப்
படவருவதில்லை வினைப் பற்று "

என்று திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனர் சிவஞானநிலையை நன்கு உணர்த்தினர்.

பிறப்பு அற வேண்டுபவன் ஒரு பொருளையும் வேண்டமாட்டான். அவா இல்லாதானுக்கு மீண்டும் பிறப்பு உண்டாகாது. 'இக்கருத்தினை " வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது வேண்டாமை வேண்டவரும் " என்ற அழகிய குறளினால் ஆசிரியர் விளக்கினர். திருக்களிற்றுப்படியார்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டின் அஃதொன்றுமே வேண்டுவது—வேண்டினது
வேண்டாமை வேண்டவரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டு மவன்பால்"

என்று உணர்த்துகின்றது. வேண்டுங்கால் பிறவாமையே வேண்டும். அதுவரும் வழி வேண்டாமையை வேண்டும் வழியே என்று தெளிவாக்கியது. வேண்டாமையை வேண்டும் இடம் சிவமாதலே உணர்த்தியது இத்திருவெண்பா. இது போன்ற அரும்பெரும் சாத்திர இலக்கிய உண்மைகள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் தரிசன காலத்தில் அவ்வப்போதும் கேட்டு மகிழத்தக்கன.

இவற்றால் திருக்குறளில் உள்ள வாழ்வுநெறியை உற்று உணரின் இம்மை, மறுமை, வீடு மூன்றற்கும் உபயோகம் ஆகும் நெறி எல்லாம் திருவள்ளுவரால் உணர்த்தப்பட்டன என்றும், அவற்றையும் விதிவிலக்கு என்னும் இருதிறமும் உடைய அறநெறியும், இருமைக்கும் பயனாகும் பொருள் நெறியும், சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை எய்தும் வீட்டுநெறியும் ஆக முத்திறத்திற் கூறப்பட்டன என்றும், பிறவா நெறியே பெருநெறி என்பது திருவள்ளுவர் திருக்குறளின் உட்கிடை என்றும், பிறவிப் பெருங்கடல் நீந்துவர் இறைவனடி சேர்ந்தார் என்றும், அப்பிறவாமையை வேண்டுவதே இறைவன்பால் வேண்டும் உயிர்க்கு உற்ற தலையாய கடன் என்றும் இனிது விளங்கும். ஆதலின் வள்ளுவர் காட்டிய நெறியின்படி வாழ்ந்து உய்தி பெறுவோமாக! வாழ்க!!

திருவருள் ஆற்றல் உலகத்தை வாழ்விக்கிறது. உலகம் இயங்குவது திருவருளால். அருளின்றேல் யாதொரு பொருளும் அசைவதில்லை. அருளிருந்தால் அணுவளவான பொருளும் அண்ட சராசரங்களாய்விடும்.

* * *

ஞானாசாரியனே பெருமான் திருவருளை வாரி வழங்கி ஆட்கொள்கிறான். ஆகவே குருவருளும் உயிர்க்கு உற்றதுணையாகிறது. திருவருளும் குருவருளும் உயிரைச் சிவானந்தக் கடலில் திளைக்கச் செய்கின்றன.

— கயிலைக் குருமணி

"வேளூர் வைத்தியன்"

திரு. R. கந்தசாமி மூப்பனார் B. A., B. L.,

வேளூர் என்னுமிடத்தில் ஒரு வைத்தியன் வெகு நீண்டகாலமாக இருந்து வருகிறான். அவன் பிறந்த ஊர், வளர்த்த ஊர் எவருக்கும் தெரியாது. அவனுக்குத் தந்தையுமில்லை, தாயுமில்லை என்கிறார்கள். அவனைச் சிலர் "சாலப் பழையர்" என்று கூறுகின்றனர். எல்லாருக்கும் முன்னே தோன்றி முளைத்தான். ஆகவே யாவருக்கும் அவனுடைய பிறப்புக்காலம் தெரியாதென்பதனால் வயது என்னவென்பதும் தெரியாது. உலகம் அழிந்தாலும் தான் அழியாத நிலையிலிருந்து உலகம் மறுபடியும் தோன்ற நல்வினை வாசிப்பவனென்றும், பிரளய காலத்தில் தோணியிலிருந்து அதனைச் செலுத்துபவனென்றும், என்றுமுளன் என்றும், பலவகையாக மக்கள் அவனைப்பற்றிக் கூறுகிறார்கள். அவனுக்குப் பெயர் யாதுமில்லை என்றும், ஆனால் பல பெயர்கள் சொல்லி அவனைப் போற்றி வருகிறார்கள் என்றும் கேள்விப்படுகிறோம். ஆனால் வேளூர் வைத்தியனைப் பழங்காலத்து மக்கள் "வினை தீர்த்தான்" என்று கூறிவந்தார்கள். இன்றுள்ளவர்கள் அவனுக்கு வழங்கும் பெயர் "வைத்தியநாதன்" என்பது.

அவன் செய்யும் வைத்தியம் இன்று நாட்டில் மருந்துகளால் செய்யும் வைத்தியம் போன்றதன்று. ஆங்கில நவீன வைத்தியம், நம் நாட்டு ஆயுர்வேதம், சித்தவைத்தியம், முகம்மதியர் யூனனி வைத்தியம் இவைபோன்றதன்று. மேற்கண்ட மருந்துகள் மக்கள் செய்யும் சில காரியங்களின் காரணமாக வாத, பித்த சிலேஷ்மங்களினால் உண்டாகும் வியாதிகளைத் தடுக்கவும் போக்கவும் கூடியவைகள். பழவினையாலும், இன்னும் பல காரணங்களாலும் மக்கட்கு வாதம் முதலிய பிணிகள் வரும். அவற்றுள் பழவினையான் வருவன அவற்றின் கழிவினால் அல்லாது தீரா. தொல்வினையால் வரும் பிணிகளை நீக்க அம்மருந்துகளுக்கு யாதொரு சக்தியும் கிடையாது. தீவினையாலும், பெரியோர்கள் சாபத்தாலும் தோன்றும் நோய்களை நிவர்த்தி செய்ய மருந்துகள் கிடையாதென வாகட நூல் கூறுகின்றது. அகஸ்தியர் அவ்வித நோய்களுக்குப் பரிகாரம் கூறுமிடத்துப் பெரியோர்களுடைய ஆசியைப் பெற்றுக்கொண்டுதான் அந்நோய்களைத் தீர்த்துக் கொள்ளமுடியும் என்று கூறியிருக்கிறார். வானமாமலையில் ஒருவித சஞ்சீவி எண்ணையுள்ளது. அதனை வினையால் வந்த நோய்களுக்கு மருந்தாகச் சாப்பிட வேண்டுமிடத்தும் பெரியோர்களை வணங்கி, அவர்கள் ஆசியைப் பெறுதலும் வேண்டும்.

இவைபோன்ற மருந்துகளாலும், சாதனங்களாலும் தீராத நோய்களைத் தீர்க்க வல்லவன்தான் "வேளூர் வைத்தியன்". அவனைத் "தீராத நோய் தீர்ப்பவனென்றும்" "தீவினைக்கோர் மருந்தாவான்" என்றும் அழைப்பது அக்காரணம் பற்றியே. எவ்வகையிலும் நிவர்த்தி செய்யமுடியாத பழவினைப்பயனால் உண்டாகும் கர்மநோய்களைத் தீர்ப்பதனாலே அவனால் தீர்க்கப்படாத நோய்கள் யாதொன்றுமில்லை. ஆகவே மற்றக் காரணங்களால் ஏற்படும் நோய்களைத் தீர்ப்பது அவனுக்கு எளிது. மக்கள் இன்று சாதாரண வைத்திய நிபுணர்களால் பார்த்துத் தீர்க்கமுடியாத நோய்களையும் நிவர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு அவனைப் பிரார்த்திக்கிறார்கள். அவன் கொடுக்கும்

மருந்தோ பார்வைக்கு வெகு எளிது. அவன் பூசும் சாம்பலாகிய பஸ்பமும், காளமேகம் நிந்தாஸ்துதியில் இவ்வைத்தியன் கொடுக்கும் மருந்து "மண்தான்" என்று சொல்லு கிறபடிக்குள்ள மண்ணுந்தான் மருந்துகள். அம் மருந்துகளால் தீராத வியாதிகள் கிடையாது. பிறவிப் பிணிகள் உள்பட உலகில் தோன்றிய மூல காரணங்களினல் ஏற்பட்ட வியாதிகளும் நொடியில் பறந்துவிடுகின்றன. சித்தர்கள் சொல்லுகிருர்கள் வியாதிக்கு மணி, மந்திரம், ஔஷதம் என மூன்று முறைகள். ஔஷதத்தைவிட சிறந்தது மந்திரம், மந்திரத்தில் சிறந்தது மணி. அவன் செய்யும் வைத்தியமுறை இதற்கும் மேற்பட்டது.

அவனை எங்கும் போகவிடாமல் பெரியோர்கள் வேளூரில் தங்கியிருந்து மக்களுக்கு ஏற்படும் எல்லா நோய்களையும் தீர்க்குமாறு பிரார்த்திக்க அவனும் அவ் வன்பர்கள் விருப்பத்திற்கு இணங்கி அங்குக் குடும்பத்துடன் ஆலயம் கொண்டருளி இருக்கின்றுன். மனைவி ஸ்ரீ தையல்நாயகியும் மக்கள் வேண்டுவன வேண்டியபடி அனுக்ரகம் செய்துகொண்டு இருக்கிருள். குழந்தை ஸ்ரீ முத்துக்குமரனும் கார்த்திகை தோறும் தான் அபிஷேகம் கொண்டருளும் சந்தனக் குழம்பைக் கொடுத்து உட்கொள்ளச்செய்து எல்லாப் பிணிகளையும் நீக்குகிருன். அவனது மூத்த பிள்ளை யிடத்து குட்டிக்கொண்டு வணங்கினல், தம்பி, தாய், தந்தையிடம் சென்று பிணி தீர்த்துக் கொள்ள அனுக்கிரகிக்கிருன். கோவிலுக்குள் அமைந்திருக்கும் சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பக்தியுடன் பிரார்த்திக்கும் மக்கள் சகல பிணிகளும் நீங்கி சகல சௌக்கியத்தையும் பெற்று வருவது கண்கூடாகக்காணும் காட்சி. இவர்கள் உட் கொள்ளும் மருந்துக்குப் பத்தியம் "பக்தி" ஒன்றுதான். சமீப காலத்தில் கண் தெரி யாமலிருந்த பிராமணப் பெண் குழந்தை ஸ்ரீ தையல்நாயகி சன்னிதியில் கண் பெற்ற தும், பெரு வியாதியால் கஷ்டப்பட்ட உடையார் ஒருவர் தன் வியாதி நீங்கி சுகப் பட்டதும் யாவரும் அறிந்ததே. அவ்வாலயத்தை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொண்டு வருகிருர்கள் ஸ்ரீ தருமை ஆதீன கர்த்தாக்கள்; அதுவும் பீடத்தில் இன்று அமர்ந்திருக்கும் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பல திருப்பணிகள் புரிந்து அவ்வாலயத்தை இன்றுதான் நிர்மாணித்ததுபோல் அழகே உருவெடுத்துத் தோன்று வதுபோல் ஏற்படுத்தியுள்ளார்கள். அத் திருக்கோயிலில் அவ் வைத்தியநாதன் குடும்பத்தார் மகிழ்ந்து இருந்துவர திவ்யாபரணங்களும், இரத்தின கவசங்களும் அணிவித்து கற்பனைக்குமெட்டாத முறையில் எல்லாவித உபசாரங்களும் தம் கையாலே செய்து வருவது மக்கள் அனைவருக்கும் தெரிந்ததே.

நமது நாட்டில் வைத்திய சாலைகள் பல இருக்கின்றன. இன்னும் பல அமைத்து மக்களுக்குப் பயன்படுத்தவேண்டும் என்று பலரும் திட்டமிட்டு வருகிருர்கள். இவ்வகைப் பணிகளில் ஆலய நிதியையும் பயன்படுத்தலாம் என்று சிலரும் கருது கிருர்கள். இதுபோன்ற பலவும் ஏற்படுத்துவதானலும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாத னிடம் உறுதியான பக்தி பூண்டதனுற் பெறும்பயன் பல என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த நெறியில் வழிபாட்டிற்கு வேண்டிய வசதிகளையும், முறை களையும் ஆலயத்தில் எவ்வகையிலும் குறைவில்லாமல் வைத்திருக்கும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் என்றும் இந்நிலவுலகத்து மன்னிவாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

சைவ சமயம்

டாக்டர் திரு. P. சுப்பராயன், M. A., BAR - AT - LAW
மத்திய சர்க்கார் போக்குவரவுத்துறை அமைச்சர்

ஒரு நாட்டின் பழக்க வழக்கங்களை அறியவேண்டுமென்றால் அதன் சமய நூல்கள்தாம் அதற்கு ஆதாரமாகும். சமய நூல்களிலிருந்துதான் ஒரு நாட்டின் வழிபாடுகள், சமய நோக்கங்கள், கோட்பாடுகள் போன்றவை தெரியவருகின்றன. ஒருவன் இதைச் செய்யலாம், இதைச் செய்யக்கூடாது, இது கொடிது, இது நல்லது என்பவைகளை அந்நாட்டின் சமய நூல்களே போதிக்கின்றன. அவைகளிலிருந்து அந்நாட்டின் மக்கள் எப்படிப்பட்டவர்கள், எத்தகைய நோக்கம் கொண்டவர்கள் என்பன தெரியவருகின்றன. எனவே ஒரு நாட்டின் நூல்களில் உயர்நூலாய், உயிர் நூலாய்த் திகழ்வன சமய நூல்கள்தாம் என்றால் அது மிகையாகாது. அதில் தமிழ் மொழியிலுள்ள சமய நூல்கள் மிகமிகப் பழமையானவை. தமிழே மிகப்பெரும் பழமை யான மொழி என்றால் அதன் சமய நூல்கள் ஏனைய சமய நூல்களைவிட எவ்வளவு பழமையானவை – புராதனமானவை என்று கூறத் தேவையில்லை. இத்தகைய தமிழ் மொழியிலுள்ள சமய நூல்களுக்குத் தொண்டுபுரிந்தவர்களில் சிறந்தவர்கள் ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வருமாவர் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இவர்கள் உள்ளமுருகி, உளம் ஒன்றிக் கனிந்து, ஞானப்பிழம்பாய்ப் பாடி அருளியிருக்கும் தேவாரப் பதிகங்கள் சமய நூல்களின் உயிர்நாடி எனலாம்.

நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் பாடியுள்ள தேவாரம், திருவாசகம், திருவாய்மொழிப் பிரபந்தங்கள், தாயுமானவர் பாடல், திருஅருட்பா முதலியவைகளைக் கேட்டு மனமுருகாதவர் இல்லை. இவைகளை மனனம் செய்து பாடித் துதிப்பவர் உள்ளத்தில் பக்திப் பயிர் வேர்விட்டுச் செடியாகி, மரமாகி, தருமக் கிளைகள் விட்டுத் தூயஎண்ணப் பூக்கள் பூத்து மலர்ந்து மணம்பரப்பிச் சன்மார்க்கக் கனியாகிறது. பக்தி நீர் விட்டால்தான் உள்ளக்கொடியில் தூயஎண்ண மலர்கள் பூத்துக்குலுங்கும். இதற்குச் சமய நூல்களே தக்க துணை.

சமய நூல்கள் தெய்வவழிபாடுகளைப் போதிக்கின்றன. தெய்வவழிபாடுகளைக் கடைப்பிடிப்பதால் தீய எண்ணங்கள் விலகித் தூய எண்ணங்கள் பிறக்கின்றன. தூய எண்ணங்கள் நினைப்பவரின் உள்ளத்தில் பிறரை ஏமாற்றவேண்டும், கெடுக்க வேண்டும் என்ற கொடிய, வேண்டாத, தீய எண்ணங்கள் எழுதல் இல்லை. தீய எண்ணங்களை ஒழித்து மக்கள் வாழ நேரிட்டால் நாட்டில் பூசலோ, கொள்ளையோ, கொலையோ நேரிடாது. வாழ்க்கையில் கெட்டதும் நல்லதும் உண்டு. ஆனால் எவ்வாறு அன்னம் நீரை விட்டுப் பாலைமட்டும் பிரித்துக் குடிக்கின்றதோ அவ்வாறே இது கெட்டது, இது நல்லது என்று பாகுபாடுசெய்து கெட்டதை விட்டு நல்லதைத் தேர்ந்தெடுக்கத் தேர்ச்சிவேண்டும், தெரியவேண்டும். இந்தப் பயிற்சியை, பாடத்தை அளிப்பவைதாம் சமய நூல்கள்.

ஒருவர் தேவாரத்தை உணர்ந்து, உருக்கமாக ஒருநிலைப்பட்டுப் பாடினாலோ, பாடுவதைக் கேட்டாலோ, ஒளியைக் கண்ட இருள்போல, சூரியனைக் கண்ட பனி போலக் கெட்டவை அகல்கின்றன. ஞானசம்பந்தரின் ' தோடுடைய செவியன் ' என்ற தேவாரத்தையும், மாணிக்கவாசகரின் ' பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்துநீ ' என்ற திருவாசகத்தையும் மாணவர்கள் ஒருங்கே, ஒன்றாய்ப் பாடும்போது நம் மெய் சிலிர்க்கிறது. அந்தத் தோடுடைய செவியனுடன் நாமும் ஒன்றிவிடுகிறோம். அப்போது நம் உள்ளம் மாசு நீங்கி மாறுதல் அடைகிறது.

இத்தகைய சக்திவாய்ந்த சமய நூல்களை உடைத்தாய் இருக்கும் பெருமை கொண்டது நம் சைவ சமயமாகும். அதனால்தான் சமயத்திலெல்லாம் சிறந்த சமயம் சைவ சமயம் என்கிறோம். அத்தகைய சமயத்தைப் பின்பற்றிவரும் நாம் அச்சமயம் நலிந்து, ஒடுங்கி, நசித்துப்போகாமல் பாதுகாக்கவேண்டும். ஆனால் நம் சமயத்தை நசுக்க நாலுபக்கங்களிலும் நாஸ்திக, நாசகார எதிரிகள் இப்போது கிளம்பி முயன்று வருகின்றனர். இவைகளின் கொடிய பிடியிலிருந்து நம்பழம்பெருஞ் சமயத்தைக் காத்து வளர்க்கவேண்டியது சைவ சமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகிவரும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இந்தச் சிறந்த பணியைத்தான் நமது தருமை ஆதீனம் ஆற்றிவருகின்றது.

தமிழ் மொழியே உடல்; சைவமே உயிர் ; தமிழ் மொழியே மலர்; சைவமே மணம் ; தமிழ்மொழியே வீணை; சைவமே இசை. உயிரும், மணமும், நாதமுமாகத் தமிழ் மொழியோடு ஒன்றுபட்டு வளர்ந்து வந்திருக்கிறது நம் சைவ சமயம்; சைவம் இன்றேல் தமிழ் இல்லை. சிவமணமே செந்தமிழை வாழ்விக்கிறது.

— கயிலைக் குருமணி

திருக்கேதீச்சரம்

(பழமையும் பெருமையும்)

திரு. சேர். கந்தையா வைத்தியநாதன்

சரித்திரகாலத்திற்கு முற்பட்ட புராதன ஆலயங்கள் பல இலங்கையில் இருந்தன. அவற்றுள் இரு ஆலயங்கள், ஈழத்தின் இரு கண்கள் போன்று திகழ்ந்தன. மாதோட்டத்தில் திருக்கேதீச்சரமும், திருகோணமலையில் கோணேசர் ஆலயமும் அமைந்து அன்று மிளிர்ந்தன; இன்றும் மிளிர்கின்றன. இவ்விரு ஆலயங்களும் "தென் கைலாயம்" என்று பாராட்டப்படுகின்றன. நாயன்மார்கள் இவ்விரு தலங்களையும் பாடிப் பரவியுள்ளனர். இவ்விரு புராதன ஆலயங்களுள்ளும், திருக்கேதீச்சரம் புனருத்தாரணம் பெற்றுப் பழைய நிலைக்கு வந்து கொண்டிருப்பதைச் சைவ உலகம் நன்கு அறியும்.

திருக்கேதீச்சரத்து இறைவன் புகழை ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், ஒன்பதாம் நூற்றாண்டில் சைவம் வளர்த்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பாடிப் போந்தனர். கேதீச்சரத்து இறைவனைப் பாடிய அவர்கள் மாதோட்டத்தின் மாண்பையும் போற்றிப் புகழ்ந்தனர். திருக்கேதீச்சர ஆலயத்தை இலங்காபுரியை அரசு செய்த இராவணனின் மாமனாகிய மயன் என்பான் கட்டினான். இப் பழம் பெரும்பதியில் கோயில் கொண்ட எல்லாம் வல்ல கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதரை வாழ்த்தி வணங்கி இன்னருள் வேண்டிச் சென்றார் பலர். இராவணனைப் போரிலே வென்ற இராமர் அயோத்திக்கு மீளும் போது வழியில் திருக்கேதீச்சரப் பெருமானை வழிபட்டுச் சென்றார் என்று தக்ஷிண கைலாய புராணம் கூறுகின்றது. பஞ்சபாண்டவர்களுள் ஒருவனான அருச்சுனன் தீர்த்த யாத்திரையின் பொருட்டு இலங்கைக்கு வந்தான் என்றும், திருக்கேதீச்சரப் பெருமானை வழிபட்டுச் சென்றான் என்றும் சொல்லப்படுகின்றது. இத் தீர்த்த யாத்திரையின்போது மாதோட்டத்திற்கு அண்மையில் இருந்து அரசு புரிந்த அல்லி ராணியை அருச்சுனன் திருமணம் புரிந்தான் என்றும் கூறுவர். மன்னாரிலுள்ள அரிப்புக் கடற்கரையிலுள்ள பாழடைந்த கட்டிடங்களின் சிதைவை அல்லிராணியிருந்து அரசுபுரிந்த கோட்டை என்று கூறிச் சிலர் ஆதாரமும் காட்டுவர்.

பௌத்த இலக்கியங்கள் வாயிலாகவும் ஓர் உண்மை புலனாகின்றது. கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து "மகாதிர்த்த" என்று அழைக்கப்பெற்ற இத் தலத்தின் அண்மையில் பெருந்துறைமுகம் ஒன்று இருந்தது. இராமர், அகத்தியர், அருச்சுனன் முதலியோர் இத்துறைமுகத்தில் இறங்கி இலங்கையை அடைந்தார்கள் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். எனவே இவர்களுக்குப்பின் இலங்கைக்கு வந்த விஜயனும் அவனுடைய தோழர்களும் மாதோட்டத் துறைமுகத்திலேயே இறங்கியிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. அங்ஙனமாயின் விஜயனுடன் வந்த 'உபத்திசன்' என்னும் பிராமணன் பூசை செய்ததாகச் சொல்லப்படும் தலம் திருக்கேதீச்சரமாகவே இருக்க வேண்டும் என்பது வெள்ளிடைமலை !

இப் பழம் பெரும் பதியில் கோயில் கொண்ட இறைவனை நாயன்மார்கள் பாடிப் பரவியுள்ளனர். திருநாவுக்கரசு நாயனர் "பூதியணி பொன்னிறத்தர் பூணூலர், பொங்கரவர் சங்கரர் வெண் குழையோர் காதர் கேதீச்சர மேவினர்" என்று திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார். மணிவாசகப் பெருமான் குயிற்பத்திலும், திருவார்த்தையிலும் வண்டோதரிக்கு இறைவன் அருள் செய்த தலம் என்று குறிப்பிட்டுள்ளது திருக்கேதீச்சரமே என்று கருதப்படுகிறது. கேது வழிபட்டமையால் கேதீச்சரம் என்று பெயர் பெற்ற இத்தலத்தை வழிபடுவோர் வினைகளும், நோய்களும் தீரப்பெறுவர்என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கூறிப்போந்தனர். "கேடிலாத கேதீச்சரம் தொழுது எழக் கெடுமிடர் வினைதானே" என்றும் "கேதீச்சரம் அடைபவர்க்கு அருவினை அடையாவே" என்றும் "கேதீச்சரம் பரிந்த சிந்தையராகி முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே" என்றும் சம்பந்த சுவாமிகள் தமது தேவாரங்களில் கூறிப்போந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "கேதீச்சரத்தான், அங்கத் துறுநோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்" என்றும் "வெய்ய வினையாய அடியார்மேல் ஒழித்தருள்வான்" என்றும் "ஊனத்துறு நோய்கள் அடியார்மேல் ஒழித்தருள்வான்" என்றும் குறையாத் தமிழ் சாற்றிப்போந்தார். இவ்வாறு அடியார்களின் வினையையும் நோயையும் போக்கும்கேதீச்சரத்தான் கோயில் கொண்டுள்ள பழம் பெரும்பதி இது.

கேதீச்சரத்து இறைவன் புகழைப்பாடவே நாயன்மார்கள் மாதோட்டத்தின் மாண்பையும், பாலாவியின் பண்பையும் போற்றிப் புகழ்ந்தனர். ஓங்கி வளர்ந்த பொழில்கள் அன்று மாதோட்டத்தின் அழகுக்கு அழகு செய்தன. மரமரங்களும், கமுகமரங்களும், வாழைகளும் நெருங்கி வளர்ந்து காட்சி கொடுத்தன. மாமரங்களில் பழுத்துத் தொங்கிய பழங்களையும், கதலியிற் கனிந்திருந்த கனிகளையும் பொழிலில் வதிந்த மந்திகள் உண்டு களித்தன. சோலைகளில் மலர்ந்த மலர்களில் வண்டுகள் வதிந்தன. இவ்வாறு நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே பெற்று மாதோட்ட நன்னகர் அன்று விளங்கிற்று. இதனைச் சம்பந்தமூர்த்தி சுவாமிகள், "கனைகடல் கடிகமழ் பொழில் அணி மாதோட்டம்" என்றும் "மாவும், பூகமும் கதலியும் நெருங்கு மாதோட்ட நன்னகர்" என்றும் "வாழை அம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்" என்றும் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். தேவாரங்களைப் பாடுகின்றபோதே, நம் அகக்கண்முன்னே அழகிய பொழிலையும், அங்கே கனியுண்டு களிக்கும் மந்திகளையும் காண்கின்றோமல்லவா?

மாதோட்ட நகரின்கண் உள்ள சோலை ஒன்றிலே அழகான காட்சி ஒன்றினை ஞானக்கண்ணால் கண்டு வியக்கின்றார் சம்பந்தர். மாமலர்ப் பொழிலிடையே மயில் ஒன்றைக் கண்டார்; அந்த மயில் அழகாக ஆடுவதையும் பார்த்தார். அந்த நடனம் வண்டுகளின் இன்னிசைக்கு இயைய அமைந்து இருப்பதையும் நோக்கினார். அக்காட்சி அவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. இக் கவின் மிகும் காட்சியைத் தம் தேவாரத்தில், "வண்டு பண்செய மாமலர்ப் பொழிலிடை மஞ்ஞை நடமிடும்" என்று அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

இவ்வாறு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்த திருக்கேதீச்சர ஆலயம் 16 ஆம் 17 ஆம் நூற்றுண்டுகளில் 'காலக்கழிவாலும் கவனக் குறைவாலும் பல பழுதுகளை அடைந்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் மேலும் அதனைச் சீரழித்துக் கோயில் இருந்த இடமும் தெரியாமல் செய்து விட்டனர். இவ்வாறு சீரிழந்த ஆலயத்தை ஆறுமுக நாவலர் கண்டு கலங்கினர். சீரழிந்த ஆலயத்தைச் சீர்படுத்த அவர் உளம் விழைந்தது. அவரால் முதன்முதல் தொடங்கிய பணியை, 1948 ஆம் ஆண்டில் தொடங்கிய திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபையார் மேற்கொண்டு செவ்வனே பணியாற்றி வருகின்றனர். ஆலயப் புனருத்தாரண வேலைகளோடு ஆலயத்தைச் சார்ந்த இடங்களையும் சீர்திருத்தி ஆக்கப்பணிகள் பலவற்றை அச்சபையார் புரிந்து வருவதைச் சைவப் பெருமக்கள் நன்கறிவர்.


சைவ சமயத்தின் சின்னமாகத் தமிழ்ப் பண்பாட்டின் அறிகுறியாகத் தமிழ் மொழியின் அடையாளமாகத் திருக்கேதீச்சரம் மன்னரில் இன்று திகழ்கின்றது. அங்கே அம்மை அப்பராக அமர்ந்து இன்னருள்புரியும் இறைவனை வாழ்வில் ஒருமுறையாவது தரிசித்து வழிபடவேண்டியது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். "தொண்டர் நாள்தொறும் துதிசெய அருள்செய் கேதீச்சர மதுதானே."

இப்பெருந்தல தரிசனத்துக்கு நம் தருமைக் கயிலைக் குருமணிகள் எழுந்தருளி வந்து தரிசித்தல் வேண்டும். தமிழ்நாடு செய்த தவப்பயனாக நாளும், மொழியும் சமயமும் வளர்க்கும் நம் கயிலைக் குருமணிகளின் தரிசனம் ஈழத்துச் சைவப்பெரு மக்களுக்கும் கிடைக்கச்செய்யும் அழைப்பே இது.

தமிழுக்கும் கடவுளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் மொழியே உடல்; கடவுட்கொள்கை அதன் உயிர். உயிர் இல்லாத உடம்பு சடம். அறிவற்றது, அசைவற்றது, அழகற்றது, ஆற்றலற்றது. இதனை உணர்ந்தே மொழிக்கு எல்லாம் முதலாகிய அகரமாக இறைவனைக் கண்டார்கள்.


— கயிலைக் குருமணி

தருமையில்



ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி ஆலய கும்பாபிஷேகம்

தருமை ஆதின மடாலயத்தில்



வள்ளல் அழகப்பாவும் கல்வித்துறை இயக்குநர் திரு.நெ.து. சுந்தரவடிவேலுவும்



காற்பெருந் தலைவர்கள்: காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீமத் சங்கராச்சாரிய சுவாமிகள், தருமை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள், சர். பி. டி. இராஜன், உயர்திரு. டி. எல். வெங்கட்டராமய்யர்

திருக்கோயில்களும் மக்கட் சமுதாயமும்

டாக்டர். அ. மு. பரமசிவானந்தம் M. A., M. Litt.

உலகில் சமயம் என்று தோன்றிற்று என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. தனக்குமேல் - தன் ஆற்றலுக்கு அப்பால் - தன் செயலைத் தடுத்தும் திருத்தியும் வழி காட்டும் ஒரு பொருள் இருக்கிறது என்று மனிதன் என்றைக்கு உணரத் தொடங்கினனே அன்றே சமயம்உண்டாகிவிட்டது. முதன் முதல் அச்சமய நெறி அச்சத்தாலே தான் உண்டாகியிருக்கவேண்டும் வேதம் முதலியன அதை உண்மை எனக் காட்டுகின்றன. பின்னரே அன்புவழி-ஆண்டவனைக் காணும்உணர்வு பிறந்திருக்கவேண்டும் என ஆராய்ச்சியாளர் கூறுவர். எந்த வழியிலாவது ஆண்டவனை வழிபடவேண்டும் என்பது நல்லவர் வேண்டுகோள். எனவேதான் அப்பரடிகள் "அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும் நெஞ்சம் வாழி நினைமின்" என நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றார். இவ்வாறு பண்டுதொட்டு மக்கள் இறைவனைப் போற்றி வந்தார்கள். பழங்காலத்தில் வழிபாட்டிற்கு இன்று நாம் காணும் பெருங்கோயில்கள் கிடையா. காட்டிலும் மலையிலும் மர நிழல்களிலே அவ்வப்போது கோயில் அமைத்து மக்கள் கூடி வழிபடுவர். பின் நிலைத்த மர நிழல்களை இறைவன் தங்கும் இடமாகக் கொண்டனர். அந்த இடங்கள் தூய்மை வாய்ந்தனவாகப் போற்றப்பட்டன. அம்மரங்களை மையமாகக் கொண்டே பிற்காலத்தில் இன்று நாம் காணும் பெருங்கோயில்கள் உருவாயின. அதனாலேதான் இன்றும் அம்மரங்களை விட்டுவிடாது 'தல விருட்சங்கள்' என்று போற்றிப் பாதுகாக்கின்றோம்.

சைவ சமயத்தில் மட்டுமன்றி உலகில் உள்ள ஒவ்வொரு சமயமும் தனித் தனியே தன்தன் வழிபாட்டுமுறை, பண்பாடு முதலியவற்றிற்கேற்பக் கோயில்களை அமைத்துள்ளன. ஆயினும் நம் தமிழ்நாட்டில் சைவம் வைணவம் இரண்டும் மிகப் பழங்காலத்திலேயே தோன்றி வளர்ந்த காரணத்தால் பல எண்ணற்ற கோயில்களைத் தன்னிடத்தே கொண்டு அது மிகப் பழங்காலந் தொட்டுச் சிறந்துள்ளது. பிற்காலச் சோழர், தம் காலத்தே இன்று காணும் இத்தகைய பெருங்கோயில்களை உருவாக்கி மக்களுக்கு அளித்தனர். இன்றும் உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழ்நாட்டுக்கு வந்துசெல்லும் யாத்திரிகர்கள் இக்கோயில்களின் எழிலையும் அமைப்பையும் கண்டும் கேட்டும் உற்றும் உணர்ந்தும் போற்றிப்போற்றி வியப்பதைக் காண்கின்றோமல்லமோ!

இத்தகைய கோயில் தென்னாட்டு மக்கள் வாழ்வில் பண்டுதொட்டே சிறந்த தொண்டாற்றி வந்துள்ளது. இதன் பெருமை அறிந்த இடைக்காலப் புலவர் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்று திட்டமாக எழுதிவிட்டே சென்றார். எனவே மக்கள் வாழ்வு கோயிலை மையமாகக் கொண்டது என அறிய வேண்டும். மிகப் பழங்காலத்தில் கோயில்களாக விளங்கிய பரந்த நிழல்தரும் மரத்தின் அடிகள் நாட்டின் பல சிக்கலான வழக்குகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டின எனக் கண்டோம். இடைக்காலக் கோயில்கள் தமிழ்நாட்டு வரலாற்றுப் பெட்டகங்களாக-

கலைகளை வாழ்விக்கும் நல்லிடமாக - மக்கள் தம்வேறுபாடுகளை மறந்து ஒன்று கூடி மகிழும் தெய்வசபையாக - பொருளாதாரமும் சுகாதாரமும் கொண்டு ஊர் மக்களுக்கு உதவுவனவாகச் சிறந்திருந்தன என்பதை அறிய முடிகின்றது. அத்துடன் கோயில்கள் தமது சுவர்களில் எண்ணற்ற கல்வெட்டுக்களைத் தாங்கிக்கொண்டு தென்னிந்திய வரலாற்றுக்கு ஊற்றுக்களென வற்றாது புதுப்புது உண்மைகளை உலகுக்குத் தந்து கொண்டே இருக்கின்றன. இந்த நிலையில் தமிழ்நாட்டுக் கோயில்களும் மக்கள் வாழ்வும் பிரிக்க முடியாத வகையில் பின்னி வாழ்கின்றன.

பல கிராமங்களில் கோயிற்கிணறுகளே மக்கள் உணவுக்கு உதவும் தண்ணீரைக் கொடுப்பது கண்கூடு. ஊரில் வீட்டுக்கு ஒரு கிணறு இருந்தாலும் அவற்றின் தண்ணீர் நன்றாக இருப்பதில்லை. ஆயினும் கோயில் கிணற்று நீர் மட்டும் நன்றாக இருப்பதை அறிவோம். அதுவே ஊர் மக்களுக்கு உண்ணும் நீராகவும் உணவாக்கும் நீராகவும் பயன்படுகின்றது. விடியற்காலையிலிருந்து நடு இரவு வரையில் கோயில்களில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும். அவற்றின் நேரங்கள் அறிந்து மக்கள் தத்தம் வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொள்வதும் உண்டு. சில கோயில்களில் ஒவ்வொரு வேளையிலும் பல வகையில் உணவுகள் செய்து பணியாளருக்கும் பார்க்கவரும் யாத்திரிகர்களுக்கும் பரிமாறுவதும் உண்டு. சில ஊர்களில் இக்கோயில் சாப்பாடு பல குடும்பங்களைக் காக்கும் மருந்தாக அமைவதைக் காண்கின்றோம். 'உணவுக்கு என்ன செய்வோம்?' என ஏங்கும் யாத்திரிகர்களுக்கு இந்தக் கோயில் உணவுகளே உதவிசெய்து அவர்தம் பசியைப் போக்கின. இன்று நாட்டில் ஊர் தோறும் பல உணவுக்கடைகள் இருக்கின்றன. அதனால் இக்கோயில் உணவைப்பற்றி யாரும் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. என்றாலும் எதை எதையோ உணவாக்கி அளிக்கும் பல சோற்றுக்கடைகளில் உண்டு, பல நோய்களைச் செல்லுமிடங்களில் பெறுவதிலும், கடவுளுக்கென ஆக்கப்பெற்ற இந்தத் தூய உணவுகளைக் கோயில்களில் இருந்து பெற்றால் நோய் இல்லாமல் யாத்திரை செய்ய முடியும் என்று சுற்றிவரும் பலரும் கூறுவர். இக்கோயில் உணவுகள் தூய்மையாக இருப்பதோடு விலை குறைவாகவும் இருக்கும். கிராமங்களில் பல குடும்பங்களை இவ்வுணவுகள் பாதுகாக்கின்றன. இந்த நிலையை இன்றும் திருப்பதி, திருவரங்கம், சிதம்பரம், மதுரை, புள்ளிருக்கு வேளூர் போன்ற பெருங் கோயில்களிலும் பிற இடங்களிலும் காணலாம். சில இடங்களில் குறிப்பிட்ட அளவு வருபவருக்கு இனமாகவே உணவளிக்க ஏற்பாடுகளும் செய்யப்பெற்றுள்ளன. இடைக்காலத்தில் வாழ்ந்த பல செல்வர்கள் தம் உடைமைகளுள் பலவற்றை இக்கோயில்களுக்கு இனமாக வழங்கி, அவற்றின் வாயிலாக இத்தகைய ஏற்பாடுகளைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த உண்மையையும் இக்கோயில்களின் கல்வெட்டுக்களே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ் நாட்டில் இன்றும் கோயில்களில் பல தான தருமங்கள் நடப்பதைக் காண்கின்றோம். சில கோயில்களில் விழாக் காலங்களில் இலட்சக் கணக்கில் விலை மதிக்கத்தக்க பொன்னும் பொருளும் கடவுளருக்குக் காணிக்கையாக வந்து சேர்வதைக் காணமுடிகின்றது. தமிழ்நாட்டு எல்லையாக இருந்த திருப்பதியில் இன்றும் இக் காட்சி கண்கொள்ளாக் காட்சியன்றோ! திருச்செந்தூரிலும், பழநியிலும், புள்ளிருக்கு வேளூரிலும் பலப்பல அடியவர்கள் தம் வாழ்வில் பெறும் எல்லாப் பொருள்களையும்

கோயில்களுக்குத் தானமாக அளிப்பதைக் காண்கின்றோம். பொன்னும் விலையுயர்ந்த பொருள்களும் மட்டுமன்றி ஆடு மாடுகளும் பிற உயிர்ப்பொருள்களும்கூட அளிக்கப் பெறுகின்றன. ஊர்களில் கோயில் மாடுகளை யாரும் தீண்டவோ, துன்புறுத்தவோ கூடாது; அதன் விருப்பப்படித் திரிய விடுவர். ஊரில் தன் இஷ்டம்போல் திரிபவனைக் 'கோயில் மாடு' என்று உருவகமாக்கிக் கூப்பிடுவது வழக்கம். எனவே கோயிலுக்கு நாட்டு மக்கள் அத்துணை மதிப்பு வைத்திருந்தார்கள் எனத் தெரிகிறது. இவ்வாறு கணக்கற்று வரும் பொருள்கள் அனைத்தும் திரும்பி அவ்வப்பகுதி மக்களின் நல் வாழ்வுக்கே பயன்படுத்தப்பெறும். இன்று இப்பொருள்கள் கொண்டு பல கல்லூரி களும் பல்கலைக் கழகங்களும் கூட அமைத்து வருவதைக் காண்கின்றோமன்றோ! இத் தகைய கோயில்கள் பல தமிழ்நாட்டில் உள்ளன.

ஊர்தோறும் உள்ள கோயில்களில் பலர் பணியாற்றுகின்றனர். சில ஊர் களில் கோயிற் பணியாலேயே பல குடும்பங்கள் வாழ்வு நடத்துவதும் உண்டு. கோயிலின் பொருளாதாரம் அத்தகைய பல பணியாளர் குடும்பங்களைத் தாங்கும் நிலையில் இருந்தது. இன்றைக்கும் தமிழ்நாட்டுக் கோயில்கள் பலவற்றிற்கு ஏராளமான நிலங்களும், நகரங்களில் வீடுகளும் உள்ளன. அவற்றைப் பயிரிடுவோரோ - அன்றி அவற்றில் குடியிருப்போரோ கோயிலுக்குக் கட்டவேண்டிய ஆண்டுக்கடனைத் தானிய மாகவும் பணமாகவும் தருவர். அத்தகைய வருவாயால் செல்வம் கொழிக்கும் கோயில் களில் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் உள்ளனர். ஆண்டுக்கு ஒருமுறையோ இருமுறையோ நடக்கும் விழாக்களில் ஆயிரக் கணக்கானவர்கள் பங்குகொள்வார்கள். பண்டமாற்றும், பிறவாணிபங்களும் அக்காலங்களில் நடைபெறுகின்றன. இவ்வாறு நாட்டின் பொருளாதார ஊன்றுகோலாக கோயில் அமைந்து நிற்கின்றது.

பொருளாதார நிலைக்களனாக மட்டுமின்றிக் கோயில்கள் கலைவளர்க்கும் கல்லூரி களாகவும் விளங்கின; விளங்குகின்றன. இசையும் இயலும் நாடகமும் கோயிலில் இடம்பெற்றன. தேவாரம் போன்ற இனிய சமயப் பாடல்களை இசை பொருந்தப் பாடும் பல 'ஓதுவார்'கள் கோயில்தோறும் பண்ஒன்ற இசைபாடுவார்கள். வடமொழி வாணர்கள் வேதம் ஓதுவார்கள். இவ்வேதங்களையும், திருமுறைகளையும், பிரபந்தங் களையும் கற்றுத்தரும் கலைக்கூடங்களாகக் கோயில் மண்டபங்கள் விளங்கின; இன்றும் சில இடங்களில் விளங்கிவருகின்றன. 'இடைக்கால மன்னர்கள் தமிழ் நாட்டில் இத்தனை மண்டபங்களையும் சுற்றுப்பிராகாரங்களையும் அமைத்து ஏன் இத்தனைப் பெருங் கோயில்களைக் கட்டினார்கள்' எனச் சிலர் குறைபடுவதும் உண்டு. எனினும் சிந்தித்துப் பார்த்தால் அவை எவ்வாறு பயன்பட்டுவருகின்றன எனத்தெரியும். சில மண்டபங்கள் இத்தகைய கலைக்கல்லூரிகளாக விளங்கின. நீண்ட சாலைபோன்ற சுற்றுப்பிராகாரங்கள் நாடகசாலைகளாகவும், அரங்கேற்றுமண்டபங்களாகவும் காட்சியளித்தன. ஆயிரக்கால் மண்டபம் போன்றவை பெரு மாநாடுகள் நடத்தவும் ஊர்மக்கள் மணிவிழா முதலியன செய்து கொள்ளவும் பயன்பட்டன. இன்றும் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர்கோயில் பங்குனி உத்திரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் பல திருமணங்கள் நடப்பதைக் காணலாம். பல மண்டபங்களில் இசைக் கல்லூரிகள்; பல விடங்களில் சொற் பொழிவுகள்; இப்படிக் கோயில்கள் பல்கலைக் கழகங்களாகவே அமைந்துள்ளன.

இத்தகைய கல்லூரிகளுக்கு இடமளித்ததோடு கோயில்கள், கலைகளுக்கு நல் உதவிசெய்து வளர்த்தன எனவும் காண்கின்றோம். பல அறிஞர்களுக்குக் கோயில்கள் மானியம் வழங்கியுள்ளன. இசை பயிற்றுவார்க்கும், பயில்வார்க்கும் அப்படியே பிற கலையாளர்களுக்கும் கோயில்கள் இறையிலியாக நிலங்கள் வழங்கி இருந்தன. அவற்றின் வருவாயை அவரவர்கள் பெற்று, அதற்குப் பதிலாக அவரவர் தம் கலைத்தொண்டைத் திறம்பட ஆற்றிவந்தார்கள் என அறிகின்றோம். இன்றும் பலவிடங்களில் இந்நிலையினைக் காணமுடியும். திருவொற்றியூர்க் கோயிலிலிருந்து இலக்கணப் புலவருக்கு மானியம் வழங்கினர்கள் என்ற செய்தி அறியமுடிகிறது. தமிழ்நாட்டுக் கோயில்களில் பலஇசைக் கருவிகள் முழங்கின என அறிகிறோம். இன்று அவை என்னென்ன என்று அறியக்கூடாவகையில் மறைந்துவிட்டன என்றாலும், அவற்றின் பெயர்கள் மூலம் அக் காலத்தில் கோயில்களில் அவை இடம் பெற்றுத் தமிழ் இசையைச் சிறக்க வளர்த்தன என அறியமுடிகின்றது. அவற்றுள் சிலவற்றைத் தேவாரம் பாடிய சமயத் தலைவர்கள் குறித்துள்ளார்கள். இப்படியே பல கலை வளர்க்கும் காட்சிகளை நாட்டில் காண முடியும். கலையையும், பொருளாதாரத்தையும், சமயத்தையும் வளர்த்ததோடமையாது, கோயில்கள் நாட்டில் நலத்துறையையும், சுகாதாரத்தையும்கூட வளர்த்தன என அறிகின்றோம். இடைக்காலத்தில் பாலாற்றங்கரையில் உள்ள திருமுக்கூடல் என்னும் கிராமத்தில் அக்கோயில் வருவாயைக்கொண்டு பெரிய மருந்தகமே நடத்தியதாகக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

கோயிலில் செய்யப்படும் உணவுகள் நோயற்று வாழ வழிகாட்டும் வகையில் செய்யப்பெற்றன. கோயில்களில் பலருக்கும் உணவளித்தார்கள் எனக் கண்டோமல்லவா? அந்த உணவுகளில் பெரும்பாலும் மிளகே இடம் பெறும். நெய்யே உபயோகப்படுத்துவார்கள். சில உயர்ந்த வாசனைப்பொருள்களை உடல் நலம் கெடாது வளர்க்கும் வகையில் பயன்படுத்துவார்கள். இவ்வளவு விலையுயர்ந்த பொருள்களே உபயோகப்படுத்தப்பெறினும் அவ்வுணவினைக் குறைந்த விலைக்கோ அன்றி இறையிலியாகவோதான் மக்களுக்கு வழங்குவர். எனவேமக்கள் நலம் கெடுக்காத நல் உணவுக் களஞ்சியங்களாகக் கோயில்கள் விளங்கின.

கோயில் அமைப்பு ஊர் எல்லையின் உள்ளாகவோ அன்றி வெளியிலோ அமைந்திருப்பினும் அது சற்று உயர்ந்த காற்றோட்டமான இடத்திலேதான் இருக்கக் காண்கிறோம். காற்றுப் புகக்கூடிய புறத்தாழ்வாரங்களும், சாளரங்களும், அகன்ற வாயில்களும் கோயில்களை அணிசெய்கின்றன. கோயில்களின்மேல் சூலங்கள் இருக்கும் எனத் தேவாரப் பாடல்களால் அறிகின்றோம். அந்தச் சூலங்கள் இடி மின்னல் முதலியவற்றை தாங்கிக்கொள்ளும் திறம்வாய்ந்தன என்பர் ஆராய்ச்சியாளர். அதுபோன்றே செம்பாலாகிய கலசங்களும் இயற்கையின் விளைவுகளைத் தடுக்க உதவுகின்றன. மற்றும் ஊர்தோறும் கோயிலை அடுத்து நல்ல குளங்கள் இருப்பது ஊரில் நீர்ப்பஞ்சத்தை நீக்குவதேயாகும்.

ஊரில் தீப்பிடித்தால் அந்நீரைப் பெருவாரியாகப் பயன்படுத்தி அணைக்கும் வழக்கம் இன்றும் உண்டு. கோயிலுக்கென அமைந்த தோட்டங்களும், மலர் வனங்களும் பிறவும் ஊர் மக்களுக்கே பலவகைப் பழங்களையும், மலர்களையும் உதவுவதோடு

இனிய சூழலையும் ஆக்கித் தந்தன. இவற்றையெல்லாம் உண்டாக்குவதற்கும், வளர்ப்ப தற்கும், காப்பதற்கும் இடைக்காலத்தில் மன்னரும், மற்றவர்களும் பலப்பலத் தானங் களைச் செய்துள்ளமையைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். இவ்வாறு கோயில்கள் நாட்டின் நிலைக்களனாகி நின்று, ஊர்தோறும்பொருளாதாரம், கல்வி, கலை, நலத்துறை, அறிவியல் ஆன்மஇயல் ஆகியவற்றைப் பேணிவளர்த்து, ஊர்களை இயற்கைச் சூழலுக்கு உள்ளாக்கி, நாட்டையும் மக்களையும் வாழ்வித்த காரணத்தினால்தான்போலும், மக்கள் இவற்றை விடலாகாது என்ற கருத்தில் ஔவையார் 'கோயில் இல்லா ஊரில் குடி யிருக்கவேண்டாம்' என எழுதிவைத்துச் சென்றனர்.

இக்கோயில்களில் ஆண்டுதோறும் நடக்கும் விழாக்களைப்பற்றி முன்னமே குறித்தோம். ஆம்! அவை மக்கள் வாழ்வில் எத்தனையோ வகையில் உதவுகின்றன. விழாக்களே நாட்டில் பகையும், பிணியும், பசியும் நீங்குவதற்காகத்தான் உண்டாயின எனப் பாடுகின்றனர் பழங்காலப் புலவர்கள்.

> 'பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கெனவாழ்த்தி'

இதுபோன்ற விழாக்களையும் அவற்றின் நாட்களையும் வள்ளுவ முதுமகன் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தினன் எனக் காட்டுகின்றது மணிமேகலை. எனவே திருவிழா என்றால் அக்காலத்தில் நாட்டில் உள்ள பசி, பிணி, விரோதம் அத்தனையும் மறந்து விட வேண்டும். தங்களுக்குள் எத்தனை எத்தனை வேறுபாடுகள் இருப்பினும் கோயில் விழாக்களிலும் பிற பொதுவிழாக்களிலும் மக்கள் அவற்றையெல்லாம் மறந்து ஒரே உணர்வோடு பணிசெய்யவேண்டும். அப்படியே நாட்டில் அக்காலத்தில் பசித்தவர் இருக்கக்கூடாது. இன்றும் ஊர்தோறும் விழாக் காணவருகின்ற மக்களுக்கு நீரும் மோரும் அளிக்கத் தண்ணீர்ப்பந்தர்களும், உணவளிக்கச் சத்திரங்களும் இருப்பதைக் காண்கின்றோம். அப்படியே பிணியும் அக்காலத்தில் நாட்டில் உலவக்கூடாது. தமிழ் நாட்டு விழாக்களும், விரதங்களும் இந்த நோய் நீக்கும் அடிப்படையிலேயே அமைந் துள்ளன. இவை நீங்குவதோடு நாட்டில் மழை பெய்து வளம்கொழிக்கவேண்டும் எனவும் விழாச்செய்கின்றனர். இன்றும் நாட்டில் மழை இல்லையாயின் எத்தனையோ கோயில்களில் விழாவாற்றக் காண்கின்றோம். இப்படியே கோயில்களில் நாள்தோறும் நடைபெறும் பூசையும், விழாக்களும் மக்கள் வாழ்வை மலரச் செய்யப்பயன்படுகின்றன.

மற்றும் இடைக்காலத்திய தமிழ்நாட்டு வரலாற்றை விளக்கும் பெரும் வரலாற்று நிலைகளாக இக்கோயில்கள் விளங்குகின்றன. தமிழ்நாட்டுக் கோயில் களில் கல்வெட்டு இல்லாதனவே இல்லை என்னலாம். அவைகள் மன்னராலும் மற்ற வராலும் ஏற்படுத்தப்பெற்றன. அவற்றின் மூலம் அக்கால மன்னர் தம் வாழ்வையும் வளத்தையும் அறிவதோடு நாட்டு மக்களின் சாதாரண வாழ்வையும் பண்பாட்டையும் பிற சிறப்பியல்புகளையும்கூட அறிய முடிகின்றது. இவற்றையெல்லாம் படி எடுத்து ஆராய்ந்து இந்திய அரசாங்கத்தார் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர். அதற்கென ஒரு தனிப் பகுதியே உள்ளது. அப் பகுதிசெய்த வேலை சிறிது; செய்ய வேண்டிய வேலைகளோ கணக்கில் அடங்கா. அக் கல்வெட்டுக்களும், அவைபோன்ற பட்டயம், கலை, பிற பொருள்கள் ஆகியவையும் நன்கு எடுத்து ஆராயப்பெறின் கோயில்களின் இன்றியமையாத தேவை இன்னும் உலகுக்கு நன்கு விளங்கும்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் இக்கோயில்களின் பங்கு மிகமிக அதிகமாகும். இன்று தமிழ் நாட்டில் உலவும் இலக்கியங்கள் அனைத்துமே சமய இலக்கியங்கள் எனக் காட்டிவிடலாம். எங்கோ தனி மனிதரையும் மன்னரையும் பாடிய ஓரிரு இலக்கியங்கள் தவிர்த்து அனைத்தும் சமய அடிப்படையில் - கோயில்களை நிலைக் களனாகக்கொண்டே எழுதப்பெற்றுள்ளன. அப்படியே அந்த இலக்கியங்களைப் பயில்வதற்கும் பண்ணென்றப் பாட்டிசைத்துப் பயன் பெறுவதற்கும் இக்கோயில்களே இடமாக அமைந்துள்ளன என்பதையும் காண்கின்றோம். எனவே வானோங்கிய கோபுரத்தையும் வற்றாத தென்றலை வாரிவீசும் வாயில்களையும் பிற விரிந்த மண்டபம் போன்ற அமைப்புக்களையும் தன்னிடத்தே கொண்டுள்ள தமிழ் நாட்டுப் பெருங் கோயில்கள் மக்கள் வாழ்வொடு ஒன்றி, அவர்தம் கூட்டுச் சமுதாயம் வளர்ந் தோங்கவே வழிகாட்டி நின்றன என நன்கு அறிய முடிகின்றது. இந்த உண்மையை மறந்து இக்கோயில்கள் மக்கள் வாழ்வுக்குப் புறம்பானது எனச் சிலர் எண்ணு கின்றனர். அந்த எண்ணம் தவறு என உணரும் காலம் தொடங்கிவிட்டது, இடைக்காலத்தில் ஓரளவு தம்மை மறந்த தமிழ் மக்கள் இக்கோயில் வாழ்வையும் மறக்க நினைத்தார்களென்றாலும், இன்று மறுபடியும் புத்துணர்ச்சிபெற்றுக் கோயில் களைச் செம்மைப்படுத்திச் சீராக்கி அவற்றை இறைவாழிடங்களெனப் போற்றுவதோடு, இவ்விறைவன் உறையும் கலை வளரிடங்களாகவும் ஆக்கி வருகின்றனர். திருப்பதியும் பழநியும் பல்கலைக் கழகத்தையும், கல்லூரியையும் அமைத்து வழிகாட்டுகின்றன ; இந்த நற்பணிகள் அனைத்தையும் தருமையாதீனம் சிறப்பாகச் செய்து வருகிறது என்பதையும் நாம் அறிவோம். பல கோயில்கள் பள்ளிகளையும் தமிழ்க் கல்லூரிகளை யும், இசைப் பயிற்சிச் சாலைகளையும் பிறவற்றையும் அமைத்து மக்களுக்குப் பலவாறு நலம் புரிவதைக் காண்கின்றோம். எனவே அன்றும் இன்றும் கோயில் மக்கள் வாழ்வில் முக்கிய இடம் பெற்று, அவர்தம் வாழ்வொடு பின்னிப் பிணைந்து, அவர் வாழ்வே தம் வாழ்வாக அமைத்து 'வையகம் துயர்தீர்க' என்று கூறுமற் கூறிக் கொண்டு சிறந்த பணியாற்றுகின்றது. வாழ்க அத்தகைய நற்கோயில்கள் என நாமும் வாழ்த்துவோம் : வாழ்க திருக்கோயில்கள். வாழ்க நம் தருமைத் திருமடம் ! வளர்க சமயநெறி ! சூழ்க நல்லின்பம் ! தொடர்க அவனருள் !

பற்று நீங்கவேண்டுமானால் பற்றற்றான் பற்றினைத்தான் பற்றவேண்டும். அவன்பணி செய்யவேண்டும் ; அவனை எந்நாளும் நினைக்கவேண்டும் ; மனக்கவலை நீக்கும் அவன் மலரடி ; பாசமானவைகளையும் அவன் பாததாமரை ; தனக்குவமையில்லாத அத்தண்ணருளாளனின் பேரருள்வரம் எய்தலாம்.

— கயிலைக் குருமணி

தெய்வமே யாவருக்கும் துணை

சேங்காலிபுரம். பிர்மஸ்ரீ. அனந்தராமதீட்சிதர்

நமதுகுறைகளை நீக்கி நம்மைப்பாதுகாப்பது தெய்வம்தான். இந்தத் தெய்வம் ஒன்று உண்டு என்பதை நமது இந்துமதம்தான் முதலில் கண்டுபிடித்தது. இந்த மதத்திற்கு ப்ரமாணமானநூல் வேதங்களேயாகும். இந்த வேதங்கள் அநாதியாய் தெய்வத்தைப் போல் பிறப்பிறப்பில்லாமல் இருந்துவருகின்றன. இந்தநூலை நமது முனிவர்கள் பாதுகாத்துவந்தனர். இந்நூல்களில், உமாபதியும், முக்கண்ணனும் உலகிற்கெல்லாம் நாயகனும், நீலகண்டனும், சாந்தமூர்த்தியுமான ஸ்ரீ பரமேச்வரனை த்யானிப்பவன் முனியாக ஆகி உலகுக்கெல்லாம் காரணமானவனும், எல்லாருடைய உள்ளத்திலும் ஸாக்ஷியாக விளங்குகிறவனும், ஒளியின் உருவமாயும் விளங்குகிறவனுமான அந்தப் பரம்பொருளையே அடைவான் எனக் கூறியுள்ளது.

[1] உமாஸஹாயம் பரமேச்வரம் ப்ரபும் த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம் ।
த்யாத்வா முநிர்கச்சதி பூத யோநிம் ஸமஸ்த ஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் ॥

மேலும் ஸ்ரீ ருத்ரமென்ற மஹாமந்திரங்கள் அமைந்த பகுதியாகிய வேதத்தில் எல்லா உலகங்களிலுமுள்ள ஜீவராசிகள் ரோகமற்றவைகளாகவும், மனக்கவலை அற்றவைகளாகவும், ஆகவேண்டுமென வேண்டப்படுகிறது. தாயான வேதம் நமது துயரங்களை ஸ்ரீ பரமசிவன்தான் நீக்குவான் என்பதை நமக்கு உபதேசித்து அவனை வேண்டும் படியும் கூறியுள்ளது. அந்தமந்திரமோவெனில்

[2] யதா நஸ்ஸர்வமிஜ் ஜகதயக்ஷ்மம் ஸுமனா அஸத் ॥

மேலும் பரமசிவனை வேண்டச்சொன்ன மந்திரமானது

[3] விச்வம் புஷ்டம் க்ராமே அஸ்மின் அனாதுரம் ॥

உலகம்முழுதும் நல்லபுஷ்டியுடன் விளங்கவேண்டும்; நான்பரமசிவனைப் பூஜிக்கும் அல்லது துதிக்கும் இந்தக்கிராமத்தில் வியாதியே இல்லாமல் இருக்கவேண்டும் என்று கூறியுள்ளது.

---

[1] उमासहायं परमेश्वरं प्रभुं त्रिलोचनं नीलकण्ठं प्रशान्तम ।
ध्यात्वा मुनिर्गच्छति भूतयोनिं समस्तसाक्षिं तमसः परस्तात् ॥

[2] यथा नस्सर्वमिज्जगद यक्ष्मँ सुमना असत् ॥

[3] विश्वं पुष्टं ग्रामे अस्मिन् अनातुरम् ॥

அதிலும் பலதெய்வங்கள் இருந்தபோதிலும் ஸ்ரீ பரமசிவனுக்கு "ஆசுதோஷி" என ஒருபெயர் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளது. "வெகுசீக்கிரத்தில் அனுக்ரஹம் செய்வான்" என்பது அதன் பொருளாகும். அதனாலேயே

* ஏகஞ்ச பில்வம் ஸலிலஞ்ச கிஞ்சித் ஸமர்பணம் சங்கர மூர்த்னி பக்த்யா |
அமந்த்ரகம் வாபி ஸமந்த்ரகம் வா ஸ வம்சகோட்யா சிவலோக மேதி ||

'ஒருதளம் பில்வத்தையும், சிறிது ஜலத்தையும், மந்திரங்களை ஜபித்தோ, ஜபிக்காமலோ ஸ்ரீ பரமசிவனுக்கு பக்தியுடன் அளிப்பவன் தன்னைச்சேர்ந்த பந்துக்களுடன் கூடிய பல குடும்பங்களுடன் கடைசியில் கைலாசம் செல்வான்' என சாஸ்திரங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட தெய்வமே நம்யாவருக்கும் எக்காலத்திலும் துணையாக உள்ளது. இப்படிப்பட்ட பரமசிவனை யாவரும் பூசித்து, தரிசித்து, துதித்து நமஸ்கரித்து' நற்பயனை அடைவதற்காகத் தேவர்கள், முனிவர்கள், அரசர்கள் பல சிவாலயங்களை நிர்மாணம் செய்வித்து ஸ்ரீ பரமேச்வரனையும் மந்திரங்களால் ப்ரதிஷ்டை செய்துள்ளனர்.


அந்த ஆலயதர்மங்களைச் சிறிதுகூடக் குறையாமல் ரக்ஷிப்பதற்கும் சிவபக்தியைப் பரப்புவதற்கும் யமபயத்தைப் போக்குவதற்கும் நம்யாவரையும் நல்வாழ்வுவாழும்படி செய்வதற்கும் பல சைவமடங்களைப் பெரியோர்கள் ஏற்படுத்தி உள்ளனர். அப்படிப்பட்ட மடங்களில் மிகச்சிறந்த தருமபுரம் மடத்தில் அமர்ந்துள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நமது சைவ சமயத்தை நன்கு பாதுகாத்து வருகின்றனர். இப்படிப்பட்ட மஹானை கனகாபிஷேகத்தால் பக்தர்கள் கௌரவிப்பது மிகவும் போற்றத்தக்கது.

ஸ்ரீ பரமசிவனை பூஜிப்பவர்களையும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஜபிப்பவர்களையும் விபூதி ருத்திராக்ஷம் அணிந்தவர்களையும் ஸ்ரீ பரமசிவனாகவே பாவிப்பது நமது சாஸ்திரங்களின் நோக்கமாகும். இம்மாதிரியாய் விளங்கிவரும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளை போற்றுவது நமதுவைதிகமதத்திற்கேபெருமையாகும். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அவர்கள் சிவபக்தியையும், வைதிகமான சிவதர்மங்களையும், மேலும் மேலும் வளர்த்து வரும்படி ஸ்ரீ பரமசிவன் அருள்புரிய வேணுமாய் வேண்டுகிறேன். கனகாபிஷேக விழாக்குழுவில் சேர்ந்த பக்தர்கள் யாவருக்கும் ஸ்ரீ பரமசிவன் அருள் நிறைவதாகுக.

---


* एकञ्च बिल्वं सलिलञ्च किंचित् समर्पणं शङ्करमूर्ध्नि भक्त्या ।
अमन्त्रकं वापि समन्त्रकं वा स वंशकोट्या शिवलोकमेति ॥

தருமையாதீன மடாலயம் பண்டாரக்கட்டில்




ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும்
சக்கரவர்த்தி ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் அவர்களும்

தருமையாதீன மடாலயம்
திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில்



ரிஷிகேசம் ஸ்ரீ சிவானந்த சரசுவதி அவர்கள்
விரிவுரை யாற்றுதல்

தருமையாதீனமடாலயம்
திருக்கயிலைத் திருவுருவப்படத்தின் இருமருங்கிலும்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும்
தமிழ்நாடு ஆளுநர் கனம், ஸ்ரீ விஷ்ணுராம்மேதி அவர்களும்
தஞ்சை மாவட்டத் தண்டல் நாயகம் திரு. சந்திரசேகரன் I. A. S. அவர்களும்

தருமையாதீன மடாலயம்
திருநெறியத் தெய்வத் தமிழ் மன்றத்தில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும்
ஸ்ரீமத் ஆசாரியசுவாமிகளவர்களும் புதுப்பெரியவர்களும்

தருமையாதீன மடாலயத்தில்
திருக்கயிலாயத் திருவுருவப்படத்தின் இருமருங்கிலும்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும், ஸ்ரீமத் ஆச்சாரிய சுவாமிகளவர்களும்
புதுப்பெரியவர்களும்

தருமையாதீனத்துக்குச் சொந்தமான சீகாழி
ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானக் கும்பாபிஷேக விழாவில்



தருமை, துறைசை, மதுரை ஆதீனங்களின் மகாசந்நிதானங்களும்,
திருக்கூட்டத்து அடியவர்களும்

தருமையாதீன மடாலயம் திருநெறியதெய்வத் தமிழ் மன்றத்தில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களும் பேரம்பூர ஆதீனம் மயிலம்
ஸ்ரீமத் சிவஞானபாலைய சுவாமிகள் அவர்களும்

காரைக்குடி கம்பர்விழாவில்



தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களும்,
குன்றக்குடி ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும்,
செங்கோல் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும்

அருணமலை

திருமதி. புஷ்பம்நடராஜன்

மலை என்றாலே அசைக்கமுடியாத திண்மையும், எட்டமுடியாத உயர்வும் உடைய ஒரு பொருள் என்று தெரிந்துகொள்கிறோம். மலையின் அழகுகளை எங்ஙனம் வருணித்தாலும் போதாது.

இயற்கையில் எழில்ததும்ப, தண்ணெனக் குளிர்ந்து, அருவிகள் கீதம் இசைக்க, வானளாவிய மரங்களுடே மந்தமாருதம் வீச, வண்ணமலர்கள் விதான மெனப் படர்ந்துகிடக்கும் மலைக்காட்சிகளுக்கு இணை ஏது? எனவே கடவுளை மலை யாகவும், மலை வாழ்பவனாகவும் மக்கள் பாடிப் பரவசங்கொள்கிறார்கள்.

மணிவாசகர் திருப்பெருந்துறையில் குருவடிவாகவந்து தன்னை ஆட்கொண்ட இறைவனை "ஆராத இன்பம் அருளும் மலை" என்றும் "ஆடகமாமலை" என்றும் "ஒளிதருகயிலை உயர்கிழவோன்" என்றும் பேசுகிறார். மற்றும் அடியார்கள் மாணிக்க மலை என்றும், பச்சை மாமலை என்றும், "கங்கையொடு பொங்குசடை எங்களிறை தங்கு கயிலாயமலை" என்றும் பாடியுள்ளார்கள்.

மக்களில் பண்பில், ஒழுக்கத்தில், ஈகையில் உயர்ந்தோரை மலையெனப் புகழ்தல் மரபு. திருவள்ளுவர் "நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது" எனப் பகர்ந்துள்ளார்.

மலைகளிலே உயர்ந்தது இமயம். அதன் ஒப்புயர்வற்ற சிகரமே கயிலாயம் ஆகும். எனவே சிவபெருமானைக் கயிலை மலையை உறைவிடமாகக்கொண்ட கயிலாயபதி என்று கூறுகிறோம். கயிலாய மலையை நினைக்கும்போது தூயவெள்ளிய பனிநிலையும், அது மன்பதை வாழ உருகி நீராகப் பெருக்கெடுத்தோடும் பேரழகும் நமது அகக்கண் முன் தோன்றுகிறதல்லவா ?

அஃதேபோன்று ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகள் அவர்களை எண்ணும்போதெல்லாம் அவர்களது பரிசுத்தமான உள்ளமும், கருணைபொழியும் முகமும் நம் மனத்தில் தோன்றும். சிவானந்த வாரி யுள்ளே ஒன்றிரண்டுமறத் தோய்ந்த ஞானகுருபரம்பரையில் வந்தவர்களல்லவா ?

இறைவனுடைய திருவருளைப் பேரின்பக் கடலாக உவமித்த ஞானியர், குரு மூர்த்தியை அக்கடலில்புக்கு முகந்து உயர் வரையில் தவழ்ந்து, தண்மழையைப் பொழிந்து, உயிரினங்களை உய்விக்கும் கருங்கொண்டலாகக் கண்டார்கள்.

" பரமானந்தப் பழங்கடலதுவே
கருமாமுகிலில் தோன்றி
திருவார்பெருந்துறை வரையில் ஏறி
... ...
எஞ்சா இன் அருள் நுண் துளிகோள்ள
செஞ்சுடர் வேள்ளம் திசை திசைதேவிட்ட "

என்ற மணிவாசக அடிகளில் குருவருள் குற்றுலத்துச் சாரல்மழைபோல் நுண்துளி களாகச் சிதறியும், பெருவெள்ளமாகக் கரைபுரண்டோடியும் அன்பர்களைச் சிவானந்தத் தில் துய்க்கும்படிச் செய்யும் பாங்கினை அழகுபடக் காண்கிறோம்.

தருமைக் குருமகாசந்நிதானம் அவர்களும் அன்பர்க்கு அருள்மலையாகக் காட்சி தருபவர்கள். அவர்களை அணுகுபவர்கள் எத்தகைய மனத்துயருடன் வந்தபோதிலும் சந்நிதானத்தின் கருணைநோக்கினாலும், இனிய மொழிகளாலும், அரிய உதவிகளாலும் மனச்சோர்வு நீங்கி அமைதிபெற்றுச் செல்வர்.

அங்கயற்கண்ணி தன்னெடும் அமர்ந்த ஆலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானை வழிபடுபவர்களல்லவா ? எனவே மக்கள் குலம் வாழ மன மொழி மெய்களால் என்றும் திருத்தொண்டு செய்யவேண்டு மென்ற பெரிய உள்ளம் படைத்தவர்கள். வெறும் வாய் வேதாந்தம் பேசுபவர்கள் அல்ல. மக்கள் வறுமை நீங்கி, நோய் பிணி இன்றி வாழ்ந்து, அறிவுவிளக்கம் பெறும்போதுதான் அவர்களுக்குச் சிவஞானம் கைகூடும் என்ற கருத்துடையவர்கள். எனவே, பொதுப்பண்ணைகள், வைத்திய நிலையங்கள், பாலர் இல்லங்கள், பாடசாலைகள், கல்லூரிகள் அமைத்து நல்ல சமூகப்பணிகள் பல திறம்படச் செய்துவருகிறார்கள். எல்லோரும் சமயவிளக்கம் பெற்றுத் திருவருளுக்குப் பாத்திரமாகவேண்டுமென்று திருவுளங்கொண்டு அவர்கள் செய்துவரும் சமயப் பணிகள் கணக்கிலடங்கா. இலவச வெளியீடுகள், சமய நூல்கள், மலிவுப்பதிப்புகள், 'ஞானசம்பந்தம்' பத்திரிகை முதலியவைகள் மூலமாகச் சமயஞானம் தமிழகத்தில் முறையாக வளர்க்கப்படுகிறது. மற்றும் சமயப்பிரசாரங்கள், மாநாடுகள், கூட்டங்கள், கலாநிகழ்ச்சிகள், திருவிழாக்கள், தேவார வகுப்புகள் முதலியவற்றால் கிராமங்களிலும், நகரங்களிலும் உள்ள ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் சமயஉணர்வு பெற்றுத் தவறாது தெய்வ வழிபாடு செய்துவர அருமையாகத் தொண்டு செய்துவருகிறார்கள்.

மடாலயம் என்றால் துறவிகள் வாழும் இடம். அதற்கும் பொதுமக்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்ற எண்ணம் பலருக்கு உண்டு. தருமபுரம் மடாலயத்தைப் பொறுத்தவரை அத்தகைய எண்ணம் யாருக்கும் எழவேண்டியதில்லை. பொதுமக்கள் இம்மை, மறுமை நலம்பெற இடையறாது அவர்களுடன் தொடர்பு கொண்டு பணிபுரியவேண்டும் என்பதே இம்மடத்தின் நோக்கம்.

தருமைத் திருமடத்திற்குள் சென்ருல் பழமையின் எழிலும், புதுமையின் பொலிவும் இணைந்து விளங்குவதைக் காணலாம். மடத்தில் மாத்திரமல்ல; மகா சந்நிதானம் அவர்கள் திருப்பணிகள் எல்லாவற்றிலுமே புதுமையின் மெருகு புலனுகும்.

தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த எல்லாக் கோயில்களும் பரிசுத்தமாக இருப்பதைக் காணலாம். அநேகமாக எல்லாக் கோயில்களும் திருப்பணி செய்யப்பட்டு அழகாக விளங்குகின்றன. பூஜைமுறைகளும் குறித்த வேளைகளில் ஆகம விதிப்படி நடைபெறுகின்றன.

இங்ஙனம் சீரிய பெரிய தொண்டராகவும், ஞானகுருவாகவும், அருணமலையாகவும் திகழும் தருமைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்து கண்குளிரக்கண்டு, களிப்பெய்த அன்பர்கள் செய்துள்ள நற்பணி மிகவும் வரவேற்கத் தக்கது. இந்தப் பொன்னுன வேளையில் மகாசந்நிதானம் அவர்கள் அங்கயற்கண்ணி பங்கன் தண்ணருளால் பல்லாண்டு பல்லாண்டு வாழத் துதிப்போமாக!!

மலர்ந்து மனத்தைக் கவர்ந்து மறைகின்ற மலர்கள் - ;கனிந்து கருத்தைக் கவர்ந்து இனிக்கின்ற பழங்கள் எல்லாம் வளர்ச்சியும் தேய்வும் உடையன என்பதை யாரால் மறுக்கமுடியும். ஆதலால் இவை செயற்கையே. செயற்கைகள் எல்லாம் கருத்தாவை உடையனவே. அந்தக் கருத்தா வளர்ச்சியும் தேய்வும் இல்லாமல் - அதாவது தான் செயற்கையாகிவிடாமல் இருக்கவேண்டும். ஆதலால் அவனுக்கு முதல் இல்லை; முதல் இல்லையாகவே அவனுக்கு முடிவும் இல்லை என்பது தெளிவு. அவனுடைய அருள் விளையாட்டின் ஆக்கமே இந்தக் காடும், மலையும், கடலும், வளமும் வயலுமாகிய எல்லாம்.

— கயிலைக் குருமணி

காலமும் சமயமும்

திரு. K. சந்தானம் M. P.

எல்லா மதங்களும் காலத்தைக் கடந்த பரம்பொருளையும், அதனை ஆத்மா அடையும் வழிகளையும்பற்றிப் போதிக்கின்றன. ஆதலால் சமயங்களும் காலத்தால் பாதிக்கப்படமாட்டா. அவைகளை அவ்வப்போது மாற்றியமைத்துக்கொள்ள முடியாது என்று எண்ணுவது தவறு. இந்த வைதீகப் பிடிவாதத்தால், ஒவ்வோர் மதத்திலும் பிளவுகளும், புதிய மதங்களும் தோன்றுகின்றன. இதற்கு நமது இந்துமதம் ஓரளவு விலக்காக இருந்திருக்கின்றது. அதன் புராண தத்துவங்களைக் காலத்துக்கேற்ப வியாக்கியானங்கள் செய்து புதிய முறைகளில் இந்து சமயாசாரியர்கள் போதித்திருக்கின்றனர். இக்கிளைகளைப் பற்றிக்கொண்டு மூலதத்துவங்களின் ஒற்றுமைகளைப்பற்றிச் சிந்திக்காதவர்களுக்கு இந்துக்கள் சின்னபின்னப்பட்டிருப்பதாகவும், பல முரண்பாடுள்ள கொள்கைகளை நம்பிவருவதாகவும் தோன்றும்.

தமிழ்நாட்டில் வைஷ்ணவ, சைவ சமயங்கள் இரண்டும் பெரிய நதிகள்போல் படர்ந்திருப்பதைக் காண்கிறோம். தேவாரம், திவ்யப்பிரபந்தம், பஞ்சாட்சரம், அஷ்டாட்சரம், சிவாலயம், விஷ்ணுகோயில் இப்படி இருவிதமாக மக்களின் பக்தி வளர்க்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஆழ்ந்து ஆராய்ந்தால், ஜனநாயகம் நன்கு நடைபெற இரண்டு பெரிய கக்ஷிகள் தேவை ; ஆனால் அவை மூலக்கொள்கைகளில் ஒன்றுபட்டிருக்கவேண்டும் ; முறைகளிலும், சிறிய லக்ஷியங்களிலும் மாறுபட்டிருக்கலாம் என்ற கருத்து மதத்திற்கும் பொருந்துமெனப்புலனாகிறது. ஒரேவிதசிந்தனையையோ, முறையையோ, பழக்க வழக்கங்களையோ ஒரு சமூகத்திலுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்ளுவது துர்லபம். வித்தியாசங்களுக்கு இடமிருப்பது அவசியம். ஆனால் அனைவருக்கும் பொதுவான இன்றியமையாத தத்துவங்களில் ஒற்றுமைவேண்டும்.

பொதுவாகத் தமிழ்நாட்டில் வைஷ்ணவர்களும், சைவர்களும் அமைதியுடனும், பரஸ்பர சினேகத்துடனுமே வசித்துவந்திருக்கின்றனர். வைஷ்ணவர்களில் அத்வைதிகள், விசிட்டாத்வைதிகள், த்வைதிகள் இருந்திருக்கின்றனர். அவ்வாறே சைவர்களும் மாறுபட்ட சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்டிருந்திருக்கின்றனர். இதனால் அவ்வப்போது தோன்றிய நாஸ்திகவாதங்களை விலக்கி, நமது மக்கள் தெய்வத்திடம் பக்திகொண்டு, அறவழியை நாடிவந்திருக்கின்றனர்.

இது விஞ்ஞான சகாப்தம்; எவ்வித மதத்திற்கும், தெய்வத்திற்கும் தெய்வ பக்திக்கும் இடமில்லை ; பௌதிக வாதமே முடிவான சித்தாந்தமென்று நம்புவோரின்

எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்களுக்குள் மன அமைதியின்றி, உலகை அழிக்கும் ஆயுதங்களைத் தயார் செய்வதிலும், பகையையும் போட்டியையும் வளர்ப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றனர். இதற்கு மாற்று மீண்டும் தெய்வபக்தியை நிலை நிறுத்துவதாகிய ஒரே சாதனமென்று பேரறிஞர்கள் கூறுகின்றனர்.

அதற்கு இந்தியா வழிகாட்டியாவதற்குப் பல வசதிகள் இருக்கின்றன. சைவர்களும், வைஷ்ணவர்களும் ஒன்றுசேர்ந்து, இருவரும் ஒப்புக்கொள்ளும் மூலக் கொள்கைகளைப் பிரசாரம்செய்து, வேற்றுமைகளைக் குறைத்து நம்மிடம் தோன்றியுள்ள நாத்திகத்தைப் பலாத்காரமற்ற முறைகளில் அகற்றிவிட்டால் அதன் பலன் நாடெங்கும் பரவும். இந்த நற்பணியைத் தருமபுர ஆதீனத்தில் அவர்கள் வழியில் செய்து வருகிறார்கள்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்கிறது பாட்டிப்பழமொழி. அப்படியிருக்க நம்முடைய காலத்துக்கு - கருத்துக்கு ஏற்றாற்போலக் கண் முதலிய இந்திரியங்களுக்கு இன்பத்தை அளந்து இறுதி வரையில் கொடுத்துக்கொண்டேயிருக்கிற உபகாரத்தை-உபகாரியை மறக்கலாமோ? உலக இன்பங்களை அனுபவிக்கக் கண்ணுக்குப் பார்வையையும், காதுக்குக் கேட்கும் சக்தியையும், உடம்புக்குத் தன்னளவில் வியாபகமாகிய ஸ்பரிச சக்தியையும் தந்து காக்கின்ற உபகாரியை மறக்கலாமோ?

— கயிலைக் குருமணி

பத்துப்பாட்டுப் போற்றும் அறவழி

திரு. என். ரகுநாதய்யர்

ஆதிசங்க இலக்கியமான பத்துப்பாட்டு என்னும் தொகை நூல் பொதுப் படையாகப் பார்த்தால் சமய நூலல்ல. ஆனால் இந்தத் தொகையில் அடங்கிய பாட்டுக் களிடையே தெய்வ மணம் கமழும் திருமுருகாற்றுப்படை சிகரமாய் விளங்குகிறது. தவிர, சமயத்திற்கு அடிப்படையான தெய்வ வழிபாடும், கோயில் வழிபாடும் பழந் தமிழர் வாழ்க்கையில் ஊடுருவி நின்றதை எல்லாப் பாட்டுக்களும் சித்திரிக்கின்றன. மேலும் ஆஸ்திகத்திற்கின்றியமையாத அறநெறியும் இந்த இலக்கியத்தில் நிரம்பிக் கிடக்கிறது. திருக்குறளில் அறத்துப்பாலில் எடுத்துரைக்கப்படும் எல்லா தருமங் களும் ஆங்காங்கும் குறிப்பாய் உணர்த்தப்படுவதை நோக்கினால் பொய்யாமொழிப் புலவர் போற்றும் முழுமுதற்கடவுளையேதான் சங்கப்புலவர்களும் போற்றினர் என்பதும், திருக்குறளில் காட்டப்படும் அறவழியும், சங்ககாலம் முதல் ஸநாதன தருமத்தைப் பேணி வந்த தமிழர் பின்பற்றிய வழியே என்பதும் விளங்கும்.

வள்ளுவனார் கொலை, களவு முதலிய தீச்செயல்களை வெறுத்தல், விருந் தோம்பல், பெரியோரைப் பேணுதல் முதலிய தருமங்களை விரிவாய் உணர்த்தி யிருக்கிறார். பூம்புகாரை வருணிக்கும் பட்டினப்பாலையில் ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் இந்த எல்லாப் பண்புகளும் அவ்வூர்க் குடிமக்களின் வாழ்க்கையில் அழகு பட அமைந்திருந்ததைக் காட்டுகிறார்.

*" வலைஞர் முன்றில் மீன் பிறழவும்
விலைஞர் குரம்பை மாவீண்டவும்
கொலை கடிந்தும் களவு நீக்கியும்
அமரர் பேணியும் ஆவுதி அருத்தியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ் பரப்பியும்
பண்ணியம் அட்டியும் பசும்பதம் கொடுத்தும்
புண்ணிய முட்டாத் தண்ணிழல் வாழ்க்கை "

வலைஞர் முற்றத்தில் மீன் விளையாடிற்று. ஊன் விற்போர் வீட்டில் விலங்குகள் பயமில்லாமல் சுற்றிவந்தன என்பதிலிருந்து பூம்புகாரில் புலால் உண்பது முற்றும் ஒழிந்துவிட்டது என்று ஊகிக்கலாகாது. புலால் விற்கும் கடைகளையும் வலைஞர்

*இதில் புகழப்பட்டவர் உழவர் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். நச்சினார்க்கினியர் இப்புகழ் அந்நகரத்து வைசியரைச் சாரும் என்கிறார். அது எப்படியாகிலும் இல்லறத்தின் சிறப்பையே இங்குக் கவி விளக்குகிறார் என்பது திண்ணம்.

தொழிலையும் கவி வருணிக்கிருர். அப்படி இருந்தும் பெரும்பாலோரான மக்கள் கொல்லாமையைக் கைப்பிடித்து சாத்துவிக ஆகாரத்தையே உட்கொண்டதால் வலைஞர் களும், ஊன் விற்பவர்களும் கூட நாளடைவில் பிறரால் நிர்ப்பந்திக்கப்படாமலே கொல்லும் தொழிலைக் கைவிட்டனர் என்று உணர்த்துவதே கவியின் நோக்கம். அது போல் தெய்வங்களைப் பேணியும் வேள்விகளைச் செய்வித்தும் வேண்டியவர்க்கு அன்ன மிட்டும் படிப்பாளிகளைக் கௌரவித்தும் குளிர்ந்த நிழலைத் தரும் ஆலமரம்போல் இல்லறத்தில் ஈடுபட்டவர்கள் சமூகத்தையே காத்து வந்தனர் என்பதும் குறிக்கத் தகுந்தது.

வியாபாரத்தில் ஈடுபட்ட வகுப்பினர் நடுவுநிலைமையில் நின்ருெழுகினர் என்றும், வாங்குவதிலும் விற்பதிலும் பிறருக்கு நஷ்டமில்லாமல் ஒழுங்காய் நடந்தும் பொருளீட்டினர் என்றும் அந்தப் பாட்டிலேயே சொல்லப்படுகிறது.

"நெடுநுகத்துப் பகல்போல நடுவுநின்ற நன்னெஞ்சினேர்" என்று வணி கரைப் போற்றுவது "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோற் செயின்" என்ற குறளை நினைவூட்டுகிறது. பல நாடுகளிலிருந்தும் வர்த்தகத்திற்காகப் பூம்புகாரில் வந்து தங்கிய வணிகர் அவ்வூர் மக்களுடன் அந்நியோந்நியமாகப் பழகினர் என்றும் சொல்லப்படுகிறது.

துறவின் பெருமையைத் திருமுருகாற்றுப்படையில் ஆவினன்குடியில் முருகப் பெருமானைத் தொழுதேத்தும் முனிவர் ஐம்புலன்களை அடக்கி "ஸ்திதப்ரக்ஞர்" களாய் ஆசையுடன் கோபத்தை அறவே ஒழித்து பெரும்படிப்பாளிகளும் உணராத உண்மை களை உணர்ந்து, விருப்பு, வெறுப்பில்லாத மன அமைதி அடைந்து விளங்கினர் என்று நக்கீரதேவர் அழகாக எடுத்துக்காட்டுகிருர். தமிழ் மக்களிடையே தவத் தோருக்கிருந்த மதிப்பும் ஆதரவும் முல்லைப்பாட்டில் பாசறையில் மறவர்களின் இருக் கையை வருணிக்கப் போந்த கவியின் ஓரழகிய உவமையால் கருதப்படுகிறது. வில்லை நட்டு அதன் தலையில் அம்பருத்தூணியை அவர்கள் மாட்டியது சந்நியாசி தம் திரிதண்டத்தைத் தரையில் ஊன்றி அதில் காஷாயத்தைத் தொங்கவிட்டாற்போல் இருக்கிறது என்கிருர் ஆசிரியர் நப்பூதனர்.

"கற்ருேய்த்துடுத்தபடிவப்பார்ப்பான்
முக்கோலசைநிலை கடுப்ப"

முல்லைப்பாட்டில் கணவனைப் பிரிந்திருந்த தலைவியையும் குறிஞ்சிப்பாட்டில் தலைவியை யும் சித்திரிக்கும் சொல்லோவியங்கள் பெண்டிரின் கற்பையும், அன்பையும் மறக்க முடியாக் காட்சிகளாகக் காட்டுகின்றன. சங்க காலத்தில் களவுமணம் என்ற வழக்கம் இருந்தாலும் ஒழுக்கத்தின் பெருமையை, குறிஞ்சிப்பாட்டு - "பொன்னாலும் மணியாலும் ஆக்கப்பட்ட அணிகள் முறிந்தால் தட்டான் அவைகளைத் திருத்திவிடலாம்; ஒழுக்கம்

கெட்டுவிட்டால் ஐம்புலன்களையும் அடக்கியவர்க்கும் அதைத்திருத்துவது வெகுகடினம்" என்று எடுத்துக் காட்டுகிறது. மேலும் சங்ககாலத்திலும் பெரியோர்கள் ஆண் பெண் இருவருக்கும் குடிப்பெருமை, சொத்துச்சுதந்திரம், சீர்மை என்ற எல்லாவிதங்களிலும் ஒற்றுமை இருக்கிறதா என்று பார்த்துச் செய்துவைக்கும் மணம் நீடூழி இல்வாழ்வை நல்வாழ்வாகச்செய்யும் சால்புடையதா என்றும் ஆழ்ந்து சிந்தித்தே மணம்முடிப்பது வழக்கம். அப்படி நடத்தப்படும் மணங்களும் ஊராருக்குத் தெரிந்தே நடத்தப் பட்டன என்று குறிஞ்சிப்பாட்டு விளக்குகிறது.

கற்புடைய மாதர்களைக் கடவுள் வழிபாட்டில் ஆர்வமுள்ளவர்களாகச் சங்க இலக்கியம் பல சந்தர்ப்பங்களிலும் காட்டுகிறது. முல்லைப்பாட்டில் அசரீரி வாக்கின் மூலம் நடக்கப்போகும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள வயதான பெண்டிர் ஊர் மருங்கிற்போய்த் தெய்வம் தொழுது நிற்பதைப் பார்க்கிறோம். நெடுநல்வாடையில் கடைத்தெருவிலுள்ள மாடங்களில் அந்திவேளையில்,

" இரும்பு செய்விளக்கின் ஈர்ந்திரிக்கொளீஇ
நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழுது "

என்று விளக்கேற்றி வைத்து நெல்லும் மலருந்தூவிக் கைகூப்பிக் கடவுளைப் பெண்டிர் வணங்கினர் என்று சித்திரிக்கும் காட்சியை இன்றும் தமிழ் நாட்டில் வீடு தோறும் காணலாம். எல்லா வகுப்பினரும் தமதில்லங்களில் தாம் பேணி வந்த தெய்வங் களுக்குப் பூஜை செய்யும் வழக்கத்தை இந்தப் பாட்டுகள் விளக்குகின்றன. " சிறுமீன் புதையும் கற்பின்" (அருந்ததியை ஒத்த கற்பு வாய்ந்த) பார்ப்பனி வாழும் பார்ப்பனர் வீட்டில், "பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர்" என்று அவர்கள் பூஜிக்கும் தெய்வங் களை வைப்பதற்காக மெழுகி அலங்கரிக்கப்பட்ட அறையைப் பெரும்பாணாற்றுப்படை வருணிக்கிறது. பூம்புகாரில் பரதவர் தம் குடிலில் சினையை உடைய சுறு மீனின் கொம்பை நட்டு அதில் வருணனை ஆவாஹனம் செய்து தொழுதனர் என்று பட்டினப் பாலையில் காண்கிறோம்.

இவ்விதம் வீடுகளில் நடத்தும் தெய்வ வழிபாட்டைத் தவிரப் பேரூர்களிலும் சிற்றூர்களிலும் பல தெய்வங்களுக்கும் கோயில்கள் அமைத்து அந்தந்தச் சமயத் தவரும் தமக்குகந்த தெய்வத்தினிடம் பக்தி செய்து வந்தார்கள். காஞ்சி போன்ற பெரும்பதிகளில் ஒரே காலத்தில் பல சமயத்தினர் நடத்தும் விழாக்களும் சண்டை சச்சரவு இல்லாமல் ஒற்றுமையாகவே நடந்து வந்தன.

" மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய
மலரணி வாயிற் பலர் தொழுகொடியும் "

என்ற பட்டினப்பாலையின் வரிகள் பலசாரார் தொழும் பலகோயில்களில் ஏற்றப்பட்ட கொடிகள் காணப்பட்டன என்பதை விளக்குகின்றன. நீர்ப்பெயற்றுறையிலும் (இது

பிற்காலத்தில் மாமல்லபுரம் என்று பெயர் பெற்றது) திருமாலுக்கு திருவெஃகா என்ற விஷ்ணு காஞ்சியிலும், முருகக்கடவுளுக்கு ஆவினன்குடி முதலிய திருப்பதிகளிலும். இலிங்க வடிவமான சிவபெருமானுக்கு மதுரையிலும், பூம்புகாரில் அம்பலங்களிலும் பூசை நடந்துவந்ததை இந்த இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். இந்தத் தெய்வங் களைத் தவிர இந்திரனையும் ஸோமனை (சந்திரனை)யும், கொற்றவை (அம்பிகை)யையும் பழந்தமிழர் வழிபட்டார்கள்.

இப்படி அவரவர் தம் மனப்பக்குவத்துக்கும் குலாசாரத்துக்கும் ஏற்பத் தம் இஷ்ட தேவதையைத் தொழுதுவந்தாரெனினும்

* ஏகம் சத்விப்ரா பஹுதாவதந்தி

தெய்வம் ஒன்றேயானாலும் அறிவாளிகள் அதைப் பலபேரால் அழைக்கிறார்கள் என்ற வேதக் கருத்தைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்தவர்களே. பிறப்பறுத்து வீட்டைத்தரும் எல்லாம்வல்லகடவுள் பக்திக்குக்கட்டுப்படுவான் என்றும், இந்திரியங்களை அடக்கிய அடியார்களின் உள்ளத்தே ஜோதிவடிவாய் விளங்குவான் என்றும் திருமுருகாற்றுப் படை அறைகூவுகிறது. அந்தநிலையில்

"இருள் நிறமுந்நீர் வளைஇய உலகத்து
ஒரு நீயாகித் தோன்ற"

என்றபடி ஈசன்வேறு தான்வேறு என்கின்ற ப்ரமம் (தடுமாற்றம்) அகன்று பத்தன் ஜீவன்முக்தனாய் நிற்கிறான் என்ற பெருந் தத்துவத்தையே முடிவாகக் கொண்டது தமிழரின் தெய்வ வழிபாடு.

சைவ சமயத்தைப் பரப்பியும், பல சிவஸ்தலங்களை எல்லோரும் மெச்சும் வகையில் பராமரித்தும், சமூகத்திற்கு அரியசேவை செய்தும்வரும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இன்னும் பல்லாண்டு இத்தகைய நற்பணியில் ஈடுபட்டு நல்வாழ்வு வாழ எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக.

---

* एकं सद्विप्रा बहुधा वदन्ति

அற்புதங்களும் திருவுள்ள ஒளியும்

நாட்டுச்சின்னப்பண்ணை. திரு. M. இராமலிங்கம் பிள்ளை

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் முந்திய குருமூர்த்திகளின் திருவுள்ளத்தின்படியே பல காரியங்களைப் பூர்த்திசெய்து கடமையை நிறைவேற்றியிருக்கிறார்கள். குடிகள், அலுவலர்கள், தம் அருளாணையைச் சிரமேற்கொண்டு பொறுப்புடன் நடந்துகொள்ளும்படி அருளாட்சி புரிந்து வருகிறார்கள். தருமைத் திருமடத்து உள்ளும், வெளியும், கட்டிடங்களைப் புதுப்பித்தும், நூதனமாயும், வெகு அழகாயும், வசதியாயும் திறம்படச் செய்தருளுகிறார்கள்.

தம் குருபக்தி ஞாபகமாகச் "சண்முக விலாசம்" திருமாளிகையை ஆட்சி ஸ்தலத்தின் கோபுரதரிசனம் காண ஐந்து அடுக்கில் அதிஅழகாய், எல்லா வசதியும் பொருத்திச் சிறப்பாய் அமைத்திருக்கிறார்கள். தருமையில் முந்திய குருமூர்த்திகள் அடைந்தவிடத்து ஆலயங்களைக் கட்டியும், புதுப்பித்தும் அருளியிருக்கிறார்கள்.

திருக்குளத்தில் தாமரைப்பூவிலிருந்து சதா நீர்சொரியும் அமைப்பின் எதிரில் பதினெட்டுக் கரங்களுடன் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயம் அமைத்து விலை உயர்ந்த ஆபரணாதிகளுடன் கம்பீரமும், அன்பும் கொண்ட தோற்றத்துடன் தேவியை அமைத்துக் கொண்டாடிவரும் வைபவமும் சதா அன்பர்கள் குவிந்து தரிசித்து வருவதும் கண்கொள்ளாக் காட்சியாய் இருந்துவர அருளியிருக்கிறார்கள். ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூஜை மடத்தைத் தரிசித்தவர்கள் உடல் சிலிர்த்து உள்ளம் பரவசமாக்கும் காட்சியாய்ச் செய்தருளியிருக்கிறார்கள்.

வித்துவான் படிப்பும், சிரோமணி வகுப்பும், பல பள்ளிகளும், பசுமடங்களும், மகப்பேறு மருத்துவச்சாலையும் வசதியுடன் இயற்றி அருளியிருக்கிறார்கள். பல திருக்குளங்களும் தருமை ஊர்மக்களின் சௌகரியத்திற்கு எல்லா வசதியுடன் குடிநீர் வசதி, கூட்டுறவுப் பண்டகசாலை முதலியன உள்பட இயற்றி அருளியிருக்கிறார்கள்.

இந்த அருளாட்சியில் திருக்கோயில்கள் இன்று புதுப்பித்ததாகவே என்றும் தோன்றும் வண்ணம் உயர்ந்து நல்ல முறையில் ஓவியக்கலையும், உயர்வும் மிக்க சிற்ப வேலைப்பாடுகளமைத்து, திருப்பணி கும்பாபிஷேகம் செய்வித்தும் மேலும் மேலும்

உயர்ந்த திருவாபரணங்கள் அணிவித்தும், நித்தியப்படி காலங்கள், ஏறுபடி விசேஷங்கள், முறைப்படிக் காலங்களில் விமரிசையாய்ச் செய்வித்தும் தரிசிக்கும் அன்பர்கள் கூட்டத்திற்கு வசதியாய் அருளிவருகிருர்கள். சீகாழியில் திருமுலைப்பால் விசேஷ புண்ணிய தினத்தில் ஆற்றிவரும் பெரும்பணி அன்பர்கள் யாவரையும் பக்தி பரவசமாக்குகிறது. வைத்தீசுவரன்கோவில் பிரதி கிருத்திகை தரிசன விசேஷத்தில் அன்பர்களின் சௌகரியத்திற்குத் தரிசிக்கவும், பிரசாதங்கள் வழங்கவும், தீர்த்தம் முதலிய பெறவும் அருளிவருகிருர்கள்.

விசேஷ ஸ்தலங்களில், விசேஷ தினத்தில் பெருந்திட்டத்தில் எந்தச் சமயத்திலும் எந்தச் சாமான்களையும் எளிதில் சேகரித்து அபிஷேக சாமான்களைத் திருக்கோயிலில் அங்கணம் அங்கணமாகப் பரப்பித் திருவுள்ளம் கொண்டபடி சாவதானமாய் வேத பாராயணங்கள், தேவாரத் திருமுறைகள் முழங்க அபிஷேக ஆராதனை செய்து ஆனந்தப் பரவசப்படுத்தும் பல ஜாதிப் புஷ்பங்களை அம்பாரமாகச் சேகரித்து புஷ்பாஞ்சலி செய்து தரிசிப்பதும், "யான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற கருத்தைத் திருவுளங்கொண்டு, மெய்யன்பர்களைத் தரிசிக்கச் செய்வதிலேயே ஆற்றலுடையவர்களாக அருளிவருகிருர்கள். இந்நிகழ்ச்சி முற்கால ராஜாக்கள் காலத்திற்குப் பின் இவர்கள் செய்விப்பதாகவே ஆங்காங்குள்ள பெரியோர்கள் போற்றுகிருர்கள். ஒவ்வொரு ஸ்தலங்கள் தரிசனமும், லக்ஷார்ச்சனை, கோடியர்ச்சனை செய்து கண்டு மகிழ்வதே கடமையாக இருந்து வருகிருர்கள்.

ஒவ்வொரு இலாகாவுக்கும் சென்னையில் தலைமை அலுவலகம் இருந்து ராஜதானி எங்கும் நிர்வகித்து வருவதற்கொப்ப நமது திருமடத்திற்கும் சென்னையில் திருமடம் அமைத்து, அதற்குத் தமிழிலும், பண்பாட்டிலும், சமயத் துறையிலும், குணத்திலும், தன்மையிலும், தலைசிறந்தவர்களாயும், பொருத்தமாயும், குருபக்தியில் மாணிக்கமாய் விளங்கும் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களை நியமித்து நகரிலும், சுற்றுப்புறங்களிலும் சமயப் பிரசாரம் செய்யவும், வார வழிபாடுகள் நடத்திவருவதும், விசேஷ தினத்தில் பெரியோர்கள் தலைமையில் வழிபாடு நடந்துவருவதுமாய் அமைத்து அருளியிருக்கிருர்கள். திருக்கேதார யாத்திரை, நேபாள யாத்திரை, அமரநாத யாத்திரை ஆகிய இம் முப்பெரும் யாத்திரைகளை இனிது முடித்து அருளிய பின்னர் முறையே சுந்தரமூர்த்தி சுவாமிகள், காரைக்கால் அம்மையார், சேரமான் பெருமாள் தரிசித்துவந்ததைத் திருவுளம் கொண்டு குருமகாசந்நிதானம் அவர்களும் அதனைப் பின்பற்றி முறைப்படிக் கால் நடையாகவே கயிலாயநாதனை நாடிச்சென்று தரிசித்துப் பேரானந்தம் அடைந்து வந்ததும், வழியில் சோதனைக்குப் பல பெரும் பயங்கர இடையூறுகள் தோன்றி மறைந்ததும், திருமேனி திடகாத்திரத்திற்கு யாதொரு பங்கமும் இல்லாது பேரானந்தத்துடன் திரும்பிவந்ததும் பற்றி யாவரும் போற்றிவருகிருர்கள்.

திருக்கயிலை தரிசனம் செய்யச் சந்நிதானம் சென்று மாதக்கணக்கில் ஆனதும் குடிகள், அலுவலர்கள், அன்பர்கள் அடைந்திருந்த கவலையும், சில சந்தர்ப்பத்தில் சிலர் கண்ணீர்விட்டு அழுததும், மனம்கலங்கி ஏங்கி இருந்ததையும், பின் சந்நிதானம் அவர்கள் திரும்பிவரும் செய்திகேட்டதும் ஆனந்தம் அடைந்து விருவிருப்புடனும் உற்சாகத்துடனும் குருமகாசந்நிதானத்தைத் தரிசிக்க முயற்சி செய்ததையும், சென்னையிலிருந்து தருமைத் திருமடம் புகும்வரை வழிநெடுகிலும் வரவேற்பும், அவரவர்கள் கொண்டுள்ள அன்பு பிரதிபலித்ததும், தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரம் கீழச் சந்நிதிவீதியில் குருமகாசந்நிதானம் வரவை எதிர்பார்த்து வரவேற்பு நிகழ்த்தியதும், வைத்தீசுவரன்கோயிலில் பிரிந்த பசுவைக் கண்ட கன்றுகளாய்த் தோற்றம் அளித்த குடிகள், அலுவலர்கள் பதறியதும், அன்பர்கள் கொண்டாடிய வரவேற்பு விழாக்களும், மாயூரத்தில் அன்பர்கள் கூடி நடமாட முடியாத ஜனசமுத்திரமாய் ஆங்காங்கு வரவேற்று ஆரவாரம் செய்த குதூகலக் காட்சி நமது குருமகாசந்நிதானம் அவர்களின் பெருமையை வீறிட்டுத் தோன்றியதைக் கண்ணாரக் கண்டு பெருமையும், மகிழ்ச்சியும் அடைந்தேன். ஒவ்வொரு அன்பரும் இப்படியே மகிழ்ச்சியுடன் இருந்ததையும் கண்டேன்.

பன்னிரண்டு ஜோதிர்லிங்க தரிசனமும் செய்து பேரின்பம் பெற்று இருக்கிறார்கள். எந்தப் பெரிய கூட்டத்திலும் மேடை ஏறி எந்தப் பொருள்பற்றியும் தகுந்த உபமான உபமேயங்களைக் கொடுத்துப் பொருத்தமான கருத்துக்களுடன் யாரும் எளிதில் உணர்ந்தும் மனத்தில் பதியவும் வெகு தெளிவாய்த் திருவாய் மலர்ந்தருளி வருகிறார்கள். விசேஷ நாட்களில் செயல்கள் முறையே நடைபெறத் திருக்கண் பார்வையால் அருளிவரும் காட்சியும், திருக்கரத்தால் பூஜை நைவேத்ய சோடசோபசார தீபாராதனைகளை முறைப்படிப பக்தி பணிவுடன் சுறுசுறுப்பாய் அருளிவரும் காட்சியும், விபூதிப் பிரசாதம், சம்பாவனைகளை அன்பர்களுக்குத் துரிதமாய் வழங்கி அனுப்பிவரும் காட்சியும் தரிசித்தவர்கள் மனம்விட்டகலாதவை.

நாடிவரும் அன்பர்களைச் சந்திப்பு நேரத்திற்கேற்பப் புசிக்கச்செய்வித்து க்ஷேம நலம் விசாரித்தும், தேவையை அன்புடன் அருளியும், அனுப்பிவருகிறார்கள். இதை அனுபவித்தவர்கள் நிகழ்ச்சி மனத்தில் பதியப்பட்டு மறக்க முடியாததாய் அருளி வருகிறார்கள். அனுஷ்டித்துவரும் மௌன விரதம், உபவாசங்கள், நிஷ்டை, ஜபம், தபம், ஆண்டவன் வழிபாடு முதலியவைகளுக்குப் பொருத்தமான திருமேனியும் கொண்ட திருஅவதாரமாய்த் தோற்றமளிக்கிறார்கள். இதுவரை பட்டத்திற்கு வந்த குருமூர்த்திகளில் 25 ஆவது குருமூர்த்திகளே இத்தகைய அரிய பெரிய செயல்களை ஆற்றிவருகிறார்கள்.

நான் தரிசிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பமும் முந்திய குருமூர்த்திகளின் திருவுள விசேஷத்தைப்பற்றியும், சிவபிரான் திருவடி பதிந்தநெஞ்சுடைய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் குருபக்தியின் பெருமையையும் அவர்களின் குணாதிசயங்களைப்பற்றியும் திருவாய் மலர்ந்தருளிவருவார்கள். இத் திருவுள்ளத்தின் விசேஷமும், கருத்தும் மிகவும் போற்றத்தக்கவை. நான் நிதர்சன மாய்க் கண்ட - அனுபவித்த குருமூர்த்திகளின் அருளாட்சியில் சில அற்புதங்கள் இவைகள். சைவத்தை ஓங்குவிக்கத் திடகாத்திர வீர்யமாய் நமது குருமூர்த்திகள் நீடூழியாக இருந்தருளக் கயிலைநாதனை வேண்டுகிறேன். இப்பெருந்தகை குருமூர்த்தி களின் கனகாபிஷேகத்தைத் தரிசித்த மெய்யன்பர்களுக்குப் பேரின்பம் பெற ஆசி அருளக் குருமூர்த்தியைப் பிரார்த்திக்கின்றேன்.

அநாதியே ஆற்றுப் பிரவாகம்போல இடையறாது வந்து கொண்டிருக்கும் பிறப்பு இறப்புத் துன்பத்தைப் போக்கி நிரதிசயா னந்த இன்பத்தை அளிப்பது வீடு. ஆதலால், ஞானிகள் அதனையே விரும்புகிறார்கள். சிற்றின்பம் மதுமயக்கம்போல்வது. பேரின்பம் கடவுளுணர்ச்சியால் எய்துவது; அதற்கு ஒப்பே இல்லை.

— கயிலைக் குருமணி

குருவருள்

திரு. ஜி. சபாபதிப்பிள்ளை

சமய வாழ்க்கை அறிவுக்குப் பொருந்தாததொன்று என்று இப்பொழுது பகுத்தறிவு மிகுந்த நாகரிகவுலகிலே மக்கள் சிலர் நினைக்கின்றார்கள். அது தவறு. அறிவை அடிப்படையாகக் கொண்டெழுந்தது நம் சைவ நெறி. " அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார், என்னுடைய ரேனு மிலர் " என்பது திருக்குறள். அவ்வறிவை நல்கும் கல்வியில்லாதவர்கள் இறைவனைக் காண முடியாது.

கண்ணுதற் பெம்மானின் கழலடி தொழுவதே கற்ற கல்வியின் பயனாகும்.

" கற்றதனா லாய பயனேன்கோல் வாலறிவன்
நற்றாள் தோழாஅ ரேனின் "

என்பது வள்ளுவர் வாக்கு. இங்கு இறைவனைத் தூய அறிவுமயமானவன் என்று வள்ளுவர் குறித்திருப்பது நோக்கத்தகும். அவ்வறிவுப் பிழம்பான கடவுளைக் கற்ற அறிவாளிகளே காண வல்லார்கள் என்று அப்பரடிகள் அழகாகப் பாடியுள்ளார்.

" கல்லாதார் மனத்தணுகாக் கடவுள் தன்னைக்
கற்றார்க ளுற்றோருங் காதலானை "

" கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்று ரிடும்பை களைவாய் போற்றி "

இவ்வாறே திருஞானசம்பந்தரும் பாடியுள்ளார் :

" கல்லா நேஞ்சின், நில்லான் ஈசன்
சோல்லாதாரோ, டல்லோ நாமே "

ஒன்பதாந் திருமுறையிலும்

" கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை........
மற்றவர் அறியா மாணிக்க மலையை "

கற்றவர்களே கடவுளை அறிவர் எனக் கூறப்பெற்றுளது. கற்கக் கற்க இறைவன் திருவடியைத் தலைப்படுதல் ஒருதலை. கல்வியின் பொருளும் கலையின் பொருளும் அறிவின் பொருளும் இறைவனேயாவான் என்பதை அப்பர் குறிப்பிடுகிறார் :- " கல்வி ஞானக் கலைப்பொரு ளாயவன், செல்வ மல்கு திருக்கானூ ரீசனை, எல்வியும்பக லும்மிசை வானவா, சொல்லி டீர்நுந் துயரங்கள் தீரவே. " திருஞானசம்பந்தர் பாடலிலும் இக்கருத்துப் பயின்றுள்ளது. " கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை, முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே. "

' சுந்தரமூர்த்தி நாயனுர் " கற்றகல்வியினும் இனியானை " என்று இறைவனைத் தித்தித்தினிக்கப் பாடுகிருர். இவ்வாறு சைவச் செந்நெறியின் நாயகனுன இறைவன் திருநாமத்தைப் பன்னாளும் ஓதி ஏத்துவோமானுல் அதுவே சிறந்த கல்வி. அதுவே நம் அறிவினைப் பெருக்கும். துன்பத்தை ஒதுக்கும். இன்பத்தை நல்கிடும்.

" பூரி யாவரும் புண்ணியம் போய்கெடும்
கூரி தாய அறிவுகை கூடிடும்
சீரி யார்பயில் சேறையுட் சேந்நேறி
நாரி பாகன்றன் நாம நவிலவே "

என்று அப்பர் பாடியுள்ளார். தமக்கு அறிவு எவ்வாறு கைகூடிற்று என்பதையும் அவர் கூருது விடவில்லை :-

" பன்னியசேந் தமிழறியேன் கவியேன் மாட்டேன்
எண்ணேடு பண்ணிறைந்த கலைக ளாய
தன்னையுந்தன் திறத்தறியாப் போறியி லேனைத்
தன்திறமும் அறிவித்து நேறியுங் காட்டி
அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தோடர்ந்தென்னை யாளாக் கோண்ட
தேன்னேறும்பி யூர்மலைமேன் மாணிக் கத்தைச்
சேழுஞ் சுடரைச் சென்றடையப் பேற்றேன்நானே "

இவ்வாறு அறிவைக் கொடுப்பவன் சிவபெருமான் என்று சுந்தரரும் பாடுகின்ருர் :-

" அறுபதும் பத்து மேட்டு மாறினோ டஞ்சு நான்கும்
துறுபறித் தனைய நோக்கிச் சோல்லிற்றேன் ருகச் சோல்லார்
நறுமலர்ப் பூவு நீரு நாடோறும் வணங்கு வார்க்கு
அறிவினைக் கோடுக்கு மாரு ரப்பனே யஞ்சினேனே "

இவ்வாறு அறிவினைக் கொடுக்கும் வாலறிவனுன இறைவனை அறிவே என்று சுந்தரர் விளித்துப் பாடுவது நம்மை மெய்சிலிர்க்கச் செய்வதாகும் :-

" மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவேயுன் குற்றேவல் செய்வேன்
நேறியே நின்னடியார் நினைக்குந் திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே "

அறிவைத் தரும் அறிவாயிருக்கிற ஆண்டவன் உண்மையில் நம்முடைய குருவல்லவா? ஆதலால் ஆரூரர் 'குருவே உன் குற்றேவல் செய்வேன்' என்கிருர். இக் கருத்தையே அப்பர் பாடல் ஒன்றும் வற்புறுத்துகிறது :-

" மருவி னைமட நெஞ்ச மனம்புகும்
குருவி னைக்குணத் தாலே வணங்கிடும்
திருவி னைச்சிந்தை யுட்சிவ ஞயின்ற
உருவி னைக்கண்டு கொண்டதே னுள்ளமே "

சைவ சித்தாந்தக் கருத்துப்படி இறைவனிடம் நாம் பெறும் பேரின்பம் சிவ ஞானமே யாகும். சிவஞானத்தை இறைவன் நமக்குக் குருவடிவிலே நின்று நல்கு கின்ருன். அது நம்முடைய தவத்தால் நிகழ்வது. இதனைச் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரத்தில் " தம் முதற் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த " என்று கூறப்படுகிறது.

இத்தகைய குருமூர்த்தியாய்த் திகழ்பவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் தருமை யாதினமுதல்வர் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிர மணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் செயற் கருஞ் செயலாகக் கயிலைக்குச் சென்று திருவருள்பெற்றுத் திரும்பியுள்ளார்கள். இது சைவ மக்களாகிய நாம் செய்த புண்ணியமாகும். இதற்கு நாம் நன்றியறிதலுடைய வர்களாய்க் கயிலைக் குருமணிக்குப் பொன்முழுக்கு விழா இயற்றி இறும்பூதுகொண்டு பெரும்பேறெய்துகின்ரேம். குருவருளைக் கும்பிட்டு வழுத்துகின்ரேம். இதுவே நாம் அறிவுபெற்றதன் அளப்பருஞ் செயல். குருவருளைக் கும்பிட்டுப் போற்றுவோம். வாழ்க கயிலைக் குருமணி ! உலகெலாம் நின்று ஒளிர்க குருவருள் ! வாழ்க தருமை யாதினம் ! வாழ்க ! வாழ்க !

இறைவன் திருவருள் இல்லையானல் உலகம் இயங்காது. ஆண்டவனைப்பற்றிய எண்ணம் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழ வேண்டும். நமக்குப் பெருங்கருணைத் தடங்கடலாகிய கடவுளிடத்திலே அன்புவேண்டும். அப்படி அன்போடு எழுந்த அருள்மொழிகளே இன்று தோத்திரமாக உள்ளன ; பன்னிருதிருமுறையாக உள்ளன.


— கயிலைக் குருமணி

கயிலை வழியில் :



ஸ்ரீ ஜாகேஷ்வர் வழிபாடு

கயிலை வழியில் :



ஸ்ரீ துண்டேஷ்வர் ஆலயம்

கயிலை வழியில்:



ஸ்ரீ ஜாகேஷ்வர் ஆலயம்
(பால கயிலாயம்)

திருவெம்பாவையில் வரும் நீராட்டு

பல்கலைச் செல்வர்
டாக்டர். தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் M. A., M. O. L.

பாவைப்பாட்டு என்பது தமிழ்நாட்டுப் பழம்பெருந்திருவிழாப் பாட்டாகும். பரிபாடல்களும் "அம்பா ஆடலும்" பிற சங்கநூல்கள் கூறும் தைந்நீராடலும் இத் திருவிழாவினை ஒட்டியவையே என்று அறிஞர் கருதுகின்றனர். இன்று தமிழ்நாட்டில் பாடப்பெறும் பாவைப்பாட்டுகள் இரண்டே ஆம்; ஒன்று ஆண்டாள்பாடிய திருப் பாவை; மற்ருென்று மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவெம்பாவை. இரண்டும் பாவையைப்பாடுவன; ஒவ்வொருபாட்டும் "ஏலோர் எம்பாவாய்" என்று முடியக் காண்கிருேம்.

கன்னிப் பெண்கள் பாடினுல் மழைவரும் என்று அந்நாளைய மக்கள் நம்பினர்; கற்புக்கும் மழைக்கும் உள்ள தொடர்பைத் தமிழ்நாடு என்றும் மறந்ததில்லை. கன்னிப்பெண்கள் தமக்குச் சிறந்த கணவனை வேண்டிக்கொள்வதும் இந்தத் திருவிழாவின் நோக்கமாகும்.

மழைத்திருவிழா என்ற அளவில் இங்கே இதனை ஆராயலாம். வடநாட்டில் நடக்கும் "ஹோளி பண்டிகை" என்பது இதனேடு ஒற்றுமை உடையது எனலாம். பீச்சாங்குழலில் பலநிற நீர்களை ஊற்றி ஒருவர்மேல் ஒருவர் விசி எறிந்து விளையாடு வதனைத் தென்னுட்டில் குடிபுகுந்த வடநாட்டினரிடையேயும் காண்கின்ருேம். மழை பொழிவதுபோல இம்மக்கள் இவ்வாறு விளையாடுவதால் உண்மையாகவே மழை பொழியும் என்பது மக்கள் நம்பிக்கை.

மகிழ்ச்சியாக இருக்கும்போது மக்கள் பாடுவது இயல்பு. ஆனுல் துன்பமாக இருக்கும்போதும் பாடிக்கொண்டே இருப்பார்களானுல் துன்பம் மறைந்து இன்பம் ஊற்றெடுக்கக் காண்கிருேம். எனவே போலியும் முடிவில் உண்மையை விளைவிக்கும் என மக்கள் நம்புவது அருமையன்று. பில்லி, சூனியம், வசியம் என்ற மாந்திரிகப் போக்கில் இந்த நம்பிக்கையைக் காணலாம். தன்பகைவன் கை கெட்டால் அவன் வேலைக்கு வாரான்; பின் தனக்கே உயர்வு கிடைக்கும் என்று எண்ணுகிருன் ஒருவன். மாந்திரிகனிடம் போகிருன் அவன்; மாந்திரிகனே பகைவனைப்போல ஒரு பாவையை மாவால் செய்கிருன்; அந்தப் பாவையின் கை ஒன்றில் ஆணி அடிக்கிருன். இதனுல் பகைவனுடைய உண்மையான கையே ஊனம் ஆகும் என்பதே இங்குள்ள நம்பிக்கை. எப்படி முடியவேண்டுமென்று எண்ணுகிருனே அப்படியே முன்கூட்டிச் செய்தால் வேண்டியபடியே முடியும் என்பது உலகம் முழுதும் பரவிய பழங்கால நம்பிக்கை.

இயற்கை நிகழ்ச்சிகளையும் இவ்வாறு வேண்டியபடியே சாயல் பிடித்துப் போலியாக நடிப்பதன்வழியே, உண்மையாகவே நிகழ்விக்க முடியும் என்று அந்நாளில் கருதினர். மழைபெய்வதுபோல நீரினை வாரி இறைத்தால் உண்மையான மழையே பொழியும் என்றும் கருதினர். ஹோளி பண்டிகையில் நீரை வாரி இறைத்து மழையில் நனைந்தவர்போல் ஆவதன் பழங்கால நோக்கம் அதுவே ஆம்.

இந்தகைய பழங்கால நோக்கம் பாவை நோன்பிலும் உண்டு. நாளடைவில் அது மறைந்துபோயிருந்தாலும் ஆராய்ச்சியில் அது வெளிப்படாமல் இல்லை. நீர் விளையாட்டில், ஹோளி பண்டிகையில் போல, நீரை வாரி இறைத்தலும் உண்டு. பரிபாடல் கூறும் நீர்விளையாட்டில் துருத்திகொண்டு நீரை விசியதும் உண்டு. குடைந்து குடைந்து முழுகுவதும் மேகம் குமுறுதல் போலப் பலபல ஒலிகளை நீரைக் கையால் மோதி எழுப்புவதும் இந்தக் கருத்தினாலேயே என உய்த்துணரலாம்.

ஹோளி பண்டிகை நாளடைவில் பெரிய களியாட்டமாக முடிந்தது. கல்லூரிகளில் பழையமாணவர்கள் புதியமாணவர்களை முதலில் படாதபாடுபடுத்திப் பழக்குவது உண்டு. இத்தகைய கும்மாளக் கூத்தாக ஹோளி பண்டிகை இன்னும் நடைபெறுவதனைக் காணலாம். ஆனால் நம்முடைய தமிழ் நாட்டில் இவ்வாறு வளராது கடவுள் நோன்பாக மிகத்தூய நிலையில் வளர்ந்து இன்றும் விளங்குவது ஒரு பெரிய வியப்பேயாம்.

நீர்விளையாட்டே காமக்களி விளையாட்டாக வளர்ந்ததனைப் பரிபாடல் விரிவாகக் கூறும் வையைப் புதுநீராட்டில் காணலாம். கம்பன் கூறும் நீர்விளையாட்டுப் படலமும் அதன் விளக்கமே ஆம். வாத்சாயனர் தமது காமசூத்திரத்தில் காமக் களியாட்டில் ஒன்றாகச் சலக்கிரீடை என்ற நீர் விளையாட்டையும் கூறுகின்றார். அத்தகைய நீர் விளையாட்டில் பெண்கள் நீரைக் கையால் மோதி முழவு ஒலி எழுப்பி மகிழ்வதனையும் குறிப்பிடுகின்றார். இத்தகைய வளர்ச்சியே முடிவில் ஹோளி பண்டிகையும் காமன் பண்டிகையுமாக முடிந்தது.

ஆனால், தமிழ் நாட்டில் தைந்நீராடல் பெருங் கடவுள் நோன்பாக விளங்கிற்று. தூய்மையைப் பெருக்கிக்கொள்வதே அதன் நோக்கம். கடவுள் திருவிழா முடிந்ததும், மக்கள் கடலாட்டும் ஆருட்டும் ஆடுவது வழக்கம். இப்போது கோயில்களில் "தீர்த்தவாரி" என்பது இதனையே நினைவூட்டுகிறது. ஆற்றிலே மூழ்கும்போது ஆற்றினைத் தாய்க்கடவுளாக எண்ணி முழுகுகின்ற வழக்கமும் உண்டு. கங்கையாடல், காவிரித் துலா முழுக்கு முதலியவை இந்தக் கடவுட் கருத்தில் வளர்ந்தவை. இந்தக் குறிப்பும் பரிபாடலில் வாராமல் இல்லை. இத்தகைய வளர்ச்சி மார்கழி நீராடலில் உண்டு எனலாம்.

இருந்தாலும், இங்கும் பழங்குறிப்பு நினைவுக்கு வராமல் இல்லை. நீராடல் என்பது குமரியாடலைக் குறிக்கும் என்றும், குமரியாடல் என்பது காதற்கூட்டம் என்றும் வைணவப் பேருரையாசிரியர்கள் நினைப்பூட்டுவதனை மறக்கலாகாது. மார்கழி நீராட்டத்திலும் வாத்சாயனர் கூறியதுபோல நீரைக் கையால் மோதி முழவொலி எழுப்புவதனை இன்றும் கேரள நாட்டில் கன்னிப் பெண்கள் திருவாதிரைக்களிக்கு முன் நீராடும்போது காணலாம்.

எனவே, இருவேறு போக்குகள் நீராட்டில் நாம் கண்டாலும் கடவுள் நோன்பின் தூய்மைக் கோலமே தமிழ்நாட்டில் நிலைத்து நின்றுவிட்டது எனலாம். இந்தப் பெரிய புரட்சியைச் செய்தவர்கள் ஆண்டாளும், மாணிக்கவாசகருமே ஆம். மார்கழி நீராடலை ஆண்டாளும் பாடுகிறார். "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப் போதுவீர் போதுமினோ" என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு நீராடப்போவது போலவே தொடங்குகிறது அவரது திருப்பாவை. "மழை வேண்டும் வேண்டுகோள் மார்கழி நீராடலே" என்றும் திருப்பாவை பாடுகிறது. "வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்" என்பது காண்க.

மார்கழி நீர் ஆடும்போது மேலையார் செய்வனவற்றைக் கூறி அவற்றை ஆண்டவன் அருளுமாறு வேண்டுகின்றது திருப்பாவையின் 26-ம் பாட்டு. இவ்வாறு மழை பெற்றுப் போய் நீராடுவர்போலும். எனவே, நீராடுவதனைப் புனைந்துரைக்கும் பாடல் ஒன்றும் திருப்பாவையில் இல்லை. அதற்கு முன் நிகழும் ஏற்பாடுகளே விரிவாக விளக்கம் பெறுகின்றன. கடவுளாம் கண்ணனுடன் கூடுவதே சிறப்பானால் அதற்குமேல் வேண்டுவது என்னை? ஆதலின் அக்கூட்டமே மார்கழி நீராடலும் குமரியாடலுமாக முடிகிறது. "கண்ணனுக்கே ஆமதுவே காமம்" என்றபடி அவனோடு கூடும் பேரின்பமே மார்கழி நோன்பின் உள்ளுறையாக அமைகிறது. அந்த முடிவில் பழைய மழைத்திருவிழாவின் இருவகைப் போக்கும் ஒன்றாக இயைந்து தூய கடவுட் பேரின்பமாக முடியக் காண்கிறோம்.

மணிவாசகப் பெருமான் பாடிய திருவெம்பாவையோ நீராட்டை நெடுகப் பாடுகிறது. 'குப்பாயம்' 'அது எந்து' முதலிய திருவாசக வழக்காறுகள் சேர நாட்டு வழக்காறுகளாதலின் சேரநாட்டுத் தொடர்புடைய தென்பாண்டி நாட்டு வழக்காகலாம். சேரநாட்டில் நீராட்டு இன்றும் நிகழ்வதாகக் குறிப்பிட்டோம். ஆதலின் அந்தக் குறிப்புத் திருவெம்பாவையில் நிறைய வருதல் இயல்பேயாம். சிவ கதைகளில் கண்ணனும் இடைப்பெண்களுமாய் யமுனைத் துறையில் விளையாடிய விளையாட்டுப் போன்ற கதை ஒன்றும் இல்லை. இதனாலேயேபோலும், மணிவாசகர் நீராடலைக் குறிப்பாக அன்றி நேர்முகமாக விளக்கிப் புனைந்துரைத்தருள்கின்றார்.

இதற்குமுன் இந்நிலையில் தமிழ்நாடு வளர்ந்த வளர்ச்சியை இங்கே குறிப்பிடலாம். அம்பா ஆடல் எனத் தைந்நீராடலைப் பரிபாடல் குறிக்கும்; தாயுடன் ஆடல் என்றும் பரிமேலழகர் விளக்குவர். தாய்க் கடவுளின் வடிவை மணலில் அமைந்து வணங்கிப் பின் நீராடுவதே மார்கழி நீராடல் எனக் காலஞ்சென்ற மு. இராகவையங்கார் விளக்குவர். ஆற்றையே தாயாக வழிபட்டுப் புகையும் விளக்கும் பூவும் அவியும் தந்து வழிபடுவதனைப் பரிபாடல் கூறும். இன்றும் காவிரிக் கரையிலும், கங்கைக் கரையிலும் இத்தகைய வழிபாடு நடைபெறுவதனைக் காணலாம். எந்த நீரையும் கங்கைத்தாய் என வழிபடுவதும் நம் பழக்கமாகும்.

சிவபெருமானே "நீலமேனி வாலிழை பாகத் தொருவன்" ஆதலின் அம்மையப்பன். எனவே இங்கே தாயையும், தந்தையையும் வேறு பிரிப்பதற்கு இல்லை. தாயின் தண்ணருள் தோன்றும் இடத்தெல்லாம் அப்பனின் ஆரருளும் உண்டு. ஆற்றினையோ நீரினையோ கண்டால் தாயருளாகமட்டும் அது தோன்ருது அம்மையப்பனின் அருள் ஒழுக்கமாகவும் தோன்றுகிறது; சிவனை வழிபடுவோர் காணும் காட்சி இது.

கடவுள் வழிபாட்டின் முடிவு என்ன? எங்கும் கடவுளைக் காண்பதே ஆம். அத்தகையதொரு காட்சியையே கன்னிப் பெண்களும் காண்கின்றனர். திருப்பாவையும் மழையைத் திருமால் விடும் அம்புகளோடும், மேகத்தின் நிறத்தினை அவனுடைய நிறத்திேனடும், மின்னலை அவனுடைய சக்கரத்தின் ஒளியோடும், இடியினை அவன் சங்கொலியோடும் ஒன்றுபடுத்திக் காண்கிறது. திருவெம்பாவையோ பழைய நீராட்டு வழக்கப்படி மழையைத் தாயோடு ஒன்றுபடுத்தியே காண்கிறது. மேகத்தின் நிறமே தாயின் கருமை; மின்னலே அவள் இட்டிடையின் ஒடியல்; மேகத்தின் குமுறலே அவள் சிலம்பின் சிலம்பு; வானவில்லே அவள் திருப்புருவம்; வான்மழையே அவள் அருள் மழை. இவ்வாறு காண்கின்ற காட்சி, ஆற்றினை வணங்கிய வணக்கத்தில் எழுந்து வளர்ந்த காட்சியே ஆம்.

திருவெம்பாவையில் நீராட நிற்பது யமுனையன்று; வேறு பிற ஆறும் அன்று. பூத்திகழும் பொய்கை - மொய்யார் தடம்பொய்கை - அதன் ஏருருவப் பூம்புனல் - பங்கயப் பூம்புனல் - பூம்புனல் - இவையே உள்ளன. இந்தப் பொய்கையும், மலையகத்துப் பொய்கை. அதனைப் "பூத்திகழும் பொய்கை குடைந்துஉடையான் பொற்பாதம் ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்" என்று பாடுகிறது திருவெம்பாவை. குன்றத்துச் சுனைநீரே தைந்நின்ற தன்மையோடு தண் என்று குளிர்ந் திருப்பது. சுனை குன்றத்தைக் குறித்தலின், திருவெம்பாவை திருவண்ணமலையில் பாடிய பாட்டு எனப் புராணம் கூறுவதில் ஒரு பொருத்தம் உண்டு. "அண்ணமலையான் அடிக்கமலம்" என்றும் திருவெம்பாவை பாடுகிறதன்ரே?

மழையின் பேர்ஆற்றலை உணர்ந்த மக்கள் திருமாலின் ஐந்து பெரும் படைகளை எண்ணுவது இயல்பு. ஆனால், அத்தனையும் அவன் அருளாகப் பார்ப்பது அருட்காட்சியாகும். குழவிகளுக்கு இயல்பாக அமைந்தது அது. "கொட்டைப் பாக்கு நறுக்கித் தாரேன், கோயில் மண்ணைத் தெள்ளித் தாரேன், சோர் மழைவா! சோர் மழைவா!" என்று பாடுவதன்றோ குழந்தையுள்ளம்? அத்தகைய குழவி யுள்ளம் படைத்தார் திருவெம்பாவையில் மழையின் ஆற்றல் விளக்கத்தையெல்லாம் அம்மையின் அருள் விளக்கமாகப் பாடுகின்றார். இவ்வாறு மேகத்தின் திருவிளை யாடலை அம்மையின் அருளாகக் கண்டு பழகிய அந்தக் குழவியுள்ளம் சுனையினையும் அம்மை அப்பனாகக் காண்கிறது.

"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருசினத்தால் பின்னுமர வத்தால்
தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்" (13)

என்பதைக் காண்க. செந்தாமரை போன்ற மேனி அப்பன் மேனி. கருங்குவளை போன்ற மேனி அம்மை மேனி. பொய்கையிலே செந்தாமரையும் கருங்குவளையும் பூத்துப் பின்னிப் பொலிகின்றன. அம்மையின் உறுப்பாய (அங்கம்) கையிலும் வளையல் (குருகு) வரிசைகள் (இனம்) உள்ளன. ஆண்டவனுறுப்பிலும் ஆண் டவன் உறுப்பாம் உடலிலும் குருக்கத்தி மலர்கள் உள்ளன. அந்தப் பொய்கை யிலும் அழகிய குருகினங்களாம் பறவைக் கூட்டங்கள் வந்து படிகின்றன. அடியவரும் இனம் இனமாகக் கூடிக்குலவி மனமுருகிநின்று அப்பொய்கையின் துறைகள் பலவற்றி லும் ஆங்காங்கே ஆடிமகிழ்கின்றனர். பொய்கையில் குளிப்பாரது ஆர்ப்பரவம் பெரிது. இறைவன் திருமேனியில் அரவமாம் பாம்புகள் பின்னிக்கிடக்கும். கடப்பமரமே மரவம். கடப்பமரக்காவிலே களித்துத் திகழ்பவள் நம் தாய்; அக்கடப்ப மலர்கள் அவள் விரும்பும் மலர்கள்; அம்மலர்கள் நிறைந்த மாலைகள் அம்மையிடத்தே பின்னிக்கிடக் கின்றன. அடியார்களும் "அர அர" என்ற ஆரவாரத்தோடு எங்கும் கூடி மகிழ்ந் தாடித்திளைக்கின்றார்கள். சிலர் நீரில் மூழ்கிப் புற அழுக்கைக் கழுவுகின்றனர்; சிலர் அகத்தழுக்கை நோன்புநோற்றுக் கழுவுகின்றனர்; ஒருசிலர் மூலமலத்தையே அருட் புனலில் மூழ்கிக் கழுவுகின்றனர். இவ்வாறெல்லாம் அந்தப் பொய்கை இயற்கையழ கோடும், அடியவர் அழகோடும் விளங்கி அம்மையப்பனேபோலத் தோன்றி மகிழ்ச்சி யூட்டுகிறது அதில் பழகிய கன்னிப்பெண்களுக்கு.

இவ்வாறு மழையையும், பொய்கையையும் அம்மையப்பனைக் காண்பது உலகம் முழுவதையும் அம்மையப்பனைக் காணும் அருட்காட்சியின் அரிய அடையாள மாம். இந்த அருட்காட்சியைத்தானே திருநாவுக்கரையர், திரு ஐயாற்றில் கைலைக் காட்சியாகக் கண்டாரெனப் பெரிய புராணம் பாடுகின்றது. ''மாதர்ப் பிறைக் கண்ணியானை'' என்ற தேவாரப் பாடல் இந்த நுட்பத்தையே விளக்குகின்றது. முன்னெல்லாம் ஆண் யானையும் பெண் யானையுமாகத் தாம் கண்ட பொருள்கள் இப்போது அம்மையும் அப்பனுமாகத் தோன்றுதல் கண்டு ''கண்டேன் அவர் திருப் பாதம், கண்டறியாதன கண்டேன்'' என்று வியந்து பாராட்டி மனம் உருகிப் பாடு கின்றார் திருநாவுக்கரசர். இக்காட்சி கைவரும்பொழுதுதான் இந்த மண்ணுலகமே சிவலோகமாகும். தென் பாண்டிநாட்டைச் சிவலோகமாகக் கண்ட மணிவாசகப் பெருமானார் கன்னிப் பெண்களும் இக்காட்சியில் பழகுமாறு திருவெம்பாவையைப் பாடியருளுகின்றார். எனவே, நீராடுதல் என்பது அம்மை மடிமீது புரளும் அருள் வெள்ளத்தில் தவழ்ந்தாடி அப்பனது மார்பில் ஏறிக்குதித்து விளையாடுதல் என்பதாக முடிகிறது. இவ்வாறு நீராடல் என்பது குமரியாடல் என்ற கீழ்நிலைப் பொருளில் அன்றிப் பேரின்பத்தில் திளைத்துப் பெருமானோடு ஒன்றாகி நிலைப்பது என்ற சிறந்த பொருளில் விளங்குகின்றது. ஆண்டவனையே ''ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்'' என்று குறிப்பது காண்க. திருவெம்பாவையின் கடைப் பாட்டே கடவுளே எல்லாவற்றிற்கும் முதலும் முடிவும், யோகமும், அருளுமாகியிருக் கின்ற அழகினைப் பாடி அந்த ஆண்டவனின் அழகிய திருவடி மலர்களே, ''போற்றி யாம் மார்கழி நீராடும் பொன்மலர்கள்'' என்று பாடி முடிக்கக் காண்கிறோம்.

இத்தகைய பேரின்ப அருட்பொய்கையிற் குளித்துப் பெருவாழ்வு வாழ்வதுவே அருள் விளையாட்டின் வழி உய்ந்தருளும் பெருநெறி என்று அக்கன்னிப் பெண்கள் பாராட்டுகின்றனர்.

> ''மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
> கையால் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி
> ஐயா வழிஅடியோம் வாழ்ந்தோம்காண்''

என்று பாடித் துள்ளுகிறார்கள். காமக் களியாட்டில் கையால் நீரை மோதி முழவு ஒலி உண்டாக்குவதனை ''வாத்சாயனர்'' குறிப்பிட்டுள்ளார் என்று முன்னரே கூறினோம். ''முகேர்'' என்று திருவெம்பாவையில் வருவது இந்த முழவொலியையே ஆகும். ஆண்டவன் குழலைப் பாடுவதற்கு ஏற்ற தாளம் ஆகும் இது. இந்த முழவொலியைக் கன்னிப் பெண்கள் கையால் குடைந்து குடைந்து விளைவித்தார்கள் என அறிகின் றோம். இவ்வாறு காமசூத்திரம் ஞான சூத்திரமாக இங்கே மாறுகின்றது. கடவுளை அடைவதற்குரிய நெறிகளாக ஞானசம்பந்தர் விளக்கும் ஆடல் நெறியும் பாடல் நெறியு மாக மாறுகின்றது. அக் காமநெறி இந்த ஆடலும் பாடலும் பேரின்பத் திளைப்பின் வெளியீடாக வருவதனைத் திருவெம்பாவையே ஒரு ஆடற்பாடற் பாட்டாகப்பாடுகிறது.

"காதார் குழைஆடப் பைம்பூண் கலன்ஆட
கோதை குழல்ஆட வண்டின் குழாம்ஆட
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள் ஆமாபாடி
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆம் ஆபாடி
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்" (14)

முதலிரண்டு அடிகள் முழவொலியேயன்றி, இவர்களுடைய குழையும் கலனும் கூடத் தாளமாக அமையும் முறையில் ஆடி ஒலிக்கின்றன. மூழ்கி மூழ்கிக் குளிக்குந் தோறும் கூந்தலின் இயக்கம் அத்தாளத்தோடு ஒத்து ஆடக்காண்கிறோம். இயற்கை மணம் செறிந்த அவர்கள் கூந்தலில் மொய்த்த வண்டுகள், அவர்கள் மூழ்கும்போது மேலெழுந்தும் மேலெழும்போது அக்கூந்தலில் மொய்த்தும் இவ்வாறு தாளத்திற் கேற்பத் தென்னு தென்னு என்று பாடித் தாளம்போடுகின்றன. இவ்வாறு இவர் களுடைய சீதப்புனலாட்டம் இவர்கள் அணிகளின் இயக்கத்தாலும், கூந்தலின் இயக்கத்தாலும், இவர்கள் கூந்தலில் மொய்த்த வண்டுகளின் இயக்கத்தாலும் இன்பத் தனிப்பெருங் கூத்தாக விளங்க அக்கூத்தின் சதிக்கேற்ப ஆண்டவனைப் பாடு கின்றனர். சிறந்ததொரு வேதிச்சித்து நிகழ்கின்றது. இவர்கள் தம் பழமைநிலை நீங்கிப் புதுமைப் பேரின்பநிலை எய்துகின்றனர். அவ்வாறு எடுத்து வளர்க்கின்றாள் அருள் அம்மை. அதையுணர்ந்து ஒவ்வொருவரும் பிறரையெல்லாம் - தோழியர்களை யெல்லாம் ஒவ்வொருவராக விளித்துப் "பெய்வளைதன் பாதத்திறம்பாடி ஆடு" என்று பாடிப் பின் எல்லோருமாய்க் கூடிப் பாடியாடுகின்றனர்.

இந்த நிலையில் கடவுள் பித்தேறி அக்களிப்பில் மகிழ்ந்து இன்பக் கண்மாரி பொழிந்து தம்மையும் மறக்கின்றனர் அக்கன்னிப் பெண்கள். இந்தச் சமாதிநிலை சிறிது நீங்கியதும் ஏதோ இந்த உலகத்திற்குப் புதிதாக வந்தவர்போல் விழித்துப் பார்க்கின்றனர். இவ்வாறு கடவுள்பித்தேறுவதும் வியப்பே அன்றோ ? இவ்வாறு பித்தேற ஆண்டவன் ஆட்கொள்ளுவதும் வியப்பேயன்றோ ? இவ்வாறு பெண்களே வியந்து நிற்கின்றனர். ஆதலின், "வாய்ஆர நாம்பாடி ஏர்உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்" (15) என்று ஒருவரையொருவர் விளித்துப் பின்னர் நீரிலேயே ஆடிப்பாடிக் களிக்கின்றனர். எங்குமில்லாததோர் இன்பம் தந்து குற்றத்தை எல்லாம் நீக்கி நம் வீடேறிவந்து தடுத்தாளும் 'நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழப் பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்" என்று மறுபடியும் தம் இன்பத்திற்குப் போக்குவீடாகப் பாடிப்பாடி மகிழ்கின்றனர்.

இருள் மறைகிறது. கதிரவன் எழுகின்றான். வான்மீன்கள் மறைகின்றன. கதிரவன் ஒளியில் எல்லாம் ஒளிமயமாக விளங்குவதுபோல - இன்பமாக இருப்பது

போல ஆண்டவன் அவர்களுக்கு எல்லாமாகி வேறும் ஆகி, கண்ணூர் அமுதமுமாய் நிற்கின்றான். இக்காட்சியில் தம்மை மறந்து அவன் கழலைப் பாடுகின்றனர் கன்னியர். அந்த இன்பத்திற்குப் போக்குவீடாக மறுபடியும் தம் தோழியர் ஒவ்வொருவரையும் விளித்து இத்தகைய பேரின்பத்தில் பாடியாடுவதே பெரும்பேறு எனச் சுட்டுவார் போல "பெண்ணே இப்பூம்புனல் பாய்ந்து ஆடு" (18) என்று தனித்தனியே வருந்தியழைத்து ஒன்றுகூடி ஆடிப்பாடி அகமகிழ்கின்றார்கள். "எங்கை உனக் கல்லாது எப்பணியும் செய்யற்க கங்குல் பகல்எங்கண் மற்றுஒன்றும் காணற்க" (19) என்று வேண்டுகின்றனர். இதற்குமேல் என்னவேண்டும்? "இங்குஇப் பரிசே எமக்குஎங்கோன் நல்குதியேல் எங்கெழில்என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்" என்று தங்கள் உள்ளத்தே எழுகின்ற உறுதியினை வெளியிட்டு மகிழ்கின்றனர். எனவே, இவர்கள் மார்கழிநீர் ஆடும் பொன்மலர்கள் எல்லாமாய், எல்லாச் செயல்களு மாய் ஆண்டவனது புண்டரீகப் பழங்கழல்களேயாம். எனவே, 11, 12, 13, 14, 15, 17, 18, 19 என்ற எட்டுப் பாடல்களில் புனலாடுவதைப் பாடி, 16-ம் பாட்டாகிய மழைப்பாட்டில் "மழையே பொழியாய்" எனப் பாடுவதைப் பார்க்கின்றோம். நீராடலுக்கிடையே இந்த மழைப்பாட்டு வருவது ஏன்? நீராடல் எல்லாம், மழையின் நனைவதுபோல ஆடி, அந்தப் போலி மழைக்கெதிரே உண்மை மழையே வரவேண்டு மென வேண்டிக்கொள்வதே என்பதனைத் தெளிவாக்கவே ஆம். நீராடலை இவ்வாறு விரித்தும் புனைந்துரைத்தும் விளக்கம் கூறியும் பாடுவது திருவெம்பாவையின் தனிச் சிறப்பு எனலாம்.

பாவாணர்களது பாடல்களில் படிப்பாரின் மனவளர்ச்சிக்கேற்பப் பலநிலைப் பொருட்கள் தோன்றுவது உலகறிந்த உண்மை. நாடகத்தில் இந்த நுட்பத்தைத் தெளிவாகக் காணலாம். அங்கே பேராரவாரத்தில் களிப்பவர் சிலர்; கதையின் ஒருமைப் போக்கில் மனமகிழ்வோர் சிலர்; கதைப்போக்கு விளக்கும் உலகத்தின் ஆழ்ந்த விளக்கத்தினை உணர்ந்து இன்புறுவோர் ஒருசிலர்; அதற்கும் அப்பாலாய் அனைத்தோடும் ஒன்றாய் விளங்கும் உண்மையினை ஓர்ந்து உள்ளம் உணர்ந்து உவகைக் கடலில் மூழ்குவோர் மிகமிகச் சிலரேயாம்.

திருவெம்பாவை என்று வரும் பாடல்கள் கன்னிப் பெண்கள், நாடகப் பாத்திரங்களாக வந்து பாடியாடும் நாடகத் தனிப் பேச்சுக்களேயாம். ஆனால், இதன் உள்ளே கூட்டுறவு ஞானச் சமுதாயம் எழுகின்றது. ஆண்டவனும் அவன் பேரின் பத்தில் திளைக்கின்ற உயிர்களும் ஒன்றாகி நிற்கின்ற காட்சியே நீராடும் பொய்கைக் காட்சியாம். கன்னிப் பெண்கள் அவனை நாடிப்போவது ஒருபுறமிருக்க, அவனும் அவர்கள் இல்லந்தோறும் எழுந்தருளி ஆட்கொள்ளுகின்றான். ஆதலின் இங்கே விளங்குவது இருதலைக் காதல். ஆண்டவனே காதலனாக, அனைத்துயிரும் அவனது காதற் பெண்டிராக விளங்குகின்றன. பின்னே பன்மைக் காட்சியெல்லாம் நீங்க, ஒற்றுமைக் காட்சியும் ஒருமைக் காட்சியும் முடிவில் விளங்கக் காண்கின்றோம்.

இந்தப் பாவைப் பாட்டைப் படிக்கின்றபொழுது, நாடோடிப் பாடலான பாவைப்பாட்டே பழைய மக்களின் மனத்தைக் கவர்ந்தநிலையில் நம் மனத்தையும் கவர்ந்து இனிக்கின்றது. பழங்காலத்துப் பெண்களின் பாவைச் சடங்குகளும், ஆடல்களும், பாடல்களும் நம்முடைய அடிமனத்தே மறைந்து கிடக்கும் மனித இனத்தின் பழைய வரலாற்றை நாம் அறியாதபடி நம் அடிமனம் அறிந்து திளைக்கும் படி செய்கின்றன. இதற்கும் மேலாகச் சைவர்கள் காலையில் எழுந்து "சிவனே சிவனே" எனப்பாடி நீராடித் தூய்மைபெறும் நிலையையும் நினைப்பூட்டுகின்றன. இவையெல்லாம் இப்பாட்டில் எழுகின்ற சரியை நெறிப்பொருள்களாம். அதற்கு மேலும் உயர்ந்த மனநிலையைப் பெற்றோர்க்கே கிரியைநிலைப் பொருளும் தோன்றும். வழிபடு பொருள்களில் ஆண்டவனை நேரேகாண்பதுபோல் நினைத்துக்கொண்டு, அக்கற்பனையில் தம்மை மறந்து வழிபடுகின்ற காட்சியே கிரியைநிலைக் காட்சியாம். அதுபோல மழையை, அம்மையேபோலக் காணலும், குளத்தை அம்மையப்பன்போலக் காணலும், அக்கற்பனைக்கேற்ப வழிபடுதலும், இக்கிரியை நிலைக்காட்சியாம். இதில் பழுத்த மனமுடையோர், யோகநிலைப் பொருள்காண்பர். நாம் எல்லாம் கன்னிகளாக ஆண்டவன் ஒரு பெரும் காதலனாகக் குமரியாடிக் களிக்கின்ற காதற்பெருங் காட்சியாக இதனைக் காண்பதே யோகக் காட்சியாம். இக்காட்சி கைவரப்பெற்றோர், தம்மை மறந்து சிவனே ஆகி நிற்கும் ஒருமைக் காட்சியில் "காண்கின்றோம்" என்ற நினைப்பும் இன்றிக் களித்து நிற்பர். இந்தச் சமாதிநிலையில் நின்றாலும் உலகுவாழப் "பார் ஒருகால் வந்தனையாராய்" எல்லோரையும் இந்தப் பேரின்பப் பேர்அருளில் திளைக்குமாறு கூவி அழைத்து நிற்பர். இக்காட்சியே ஞானநிலைக் காட்சியாம்.

கல்வி கற்பிக்கும் முறையில் சிறந்த முறை, விளையாடல்களின் வழியே கல்வி கற்பிப்பதே என்பர் இந்நாளைய அறிஞர். அதிலும் நாடகவிளையாட்டு முறையே சிறந்தது என்பர். ஞானப் பெருங்கல்வியினை இவ்வாறு கன்னிப் பெண்கள் பாடி ஆடி விளையாடும் நாடக நீர்விளையாட்டாக மணிவாசகனார் பாடிய பெருமையினை என் என்பது. பெண்களுக்கு மோட்சமில்லையென்று ஒருசிலர் கூறிவந்த காலத்தே, ஒன்றுமறியாத கன்னிப் பெண்களும் "மோட்சத்திற்குமட்டுமா உரியர்? வீட்டின்ப ஞானத்தை எல்லோர்க்கும் வாரியிறைத்து உபதேசம் செய்யவும் உரியர். செய்யும் பெருமையும் அக்கன்னிப் பெண்களுக்கே உண்டு" என்று பறையறைவது போன்றன்றோ திருவெம்பாவை விளங்குகின்றது. இந்தப் பெருவிளக்கத்தில் தமிழ் நாடும், உலகமும் தழைத்தினிது ஓங்கி வாழ்வதாக.

இவ்வாறு மார்கழி நீராடல் தமிழ் நாட்டில் ஞானப் பெருக்கில் திளைப்பதாக முடிகிறது. பிறநாட்டில் ஹோளி பண்டிகை காமக்களியாட்டமாக மாறியதனை இன்றும் காண்கின்றோம். தமிழ்நாட்டை உய்வித்த இப்பெரும் புரட்சியைத் தமிழர்கள் பாராட்ட வேண்டாவா? எண்ணி எண்ணி மகிழ வேண்டாவா? சிவம் பெருக்கும் இத்தனிச் செருக்கில் தலைநிமிர்ந்து நின்று உலகை உய்விக்க முந்த வேண்டாவா? இப்பெரும் புரட்சியைக் கல்விப் புரட்சியாகவும் பெண்ணுலகச் சமுதாயப் புரட்சியாகவும் செய்து வைத்த மணிவாசகப் பெருமானை நாம் வாழ்த்தாது இருக்கமுடியுமா?

"பராசக்தி"

பேராசிரியர், திரு. ஆர். கே. விசுவநாதன் M. A.,

கயிலை மகாசந்நிதானம் தருமையில் அருளாட்சி தொடங்கியது முதற் கொண்டு இன்றுவரை தமிழுக்கும், சமயத்துக்கும் செய்திருக்கும் தொண்டுகள் எண்ணிலடங்கா. அவர்களது ஆதீனத்துக்கு உட்பட்ட இருபத்தேழு கோயில் களையும் ஆலய வழிபாட்டுக்கு வழிகாட்டிகளாக அவர்கள் அமைத்ததொன்றே அவர்களுக்கு அழியாப் புகழைத் தரும். குருமகாசந்நிதானம் அவர்கள் சக்தி தேவியின் அருளைப் பூரணமாகப் பெற்றவர்கள். தருமையில் அவர்கள் அண்மையில் துர்க்கை அம்மனுக்கு நிர்மாணித்திருக்கும் அழகிய கோயில் இதற்குச் சிறந்த சான்ருகும். நம் நாடு புத்துயிர் பெற்று முன்னேறிவரும் இந்நாளில் நமது சமயத்தை ஒட்டியே இம்முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதை நினைவில் கொண்டே இவர்கள் எல்லாப் பணிகளையும் ஆற்றிவருகிருர்கள். இப்பிரபஞ்சம் முழுவதையும் ஆட்டிவைக்கும் பராசக்தியை மக்கள் ஒவ்வொருவரும் உணர்ந்து நல்வாழ்வு வாழ வேண்டுமென்று அவர்கள் அரும்பாடுபட்டு வருகின்ருர்கள்.

காலம்சென்ற கவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் ஒரு தேவி பக்தர். அவர் சக்தி தேவியைப் புகழ்ந்து பாடிய பல பாட்டுகள் உள்ளன. அப்பாட்டுகளுள் ஒன்றில்,

"சல்லினுள் அறிவொளி காணுங்கால்,
புல்லினில் வயிரப் படை தோன்றுங்கால்,
காலவெள்ளத்தில் நிலை காணுங்கால்,
பூதலத்தில் பராசக்தி தோன்றிடுமே"

எனப் பாடியிருக்கிருர். பொதுவாக விஞ்ஞானத்துக்கும், சமயத்துக்கும் இடையே ஒரு முரண்பாடு இருப்பதாக மக்கள் நினைத்துவருகிருர்கள். இது உண்மையன்று. இப்பாட்டில் அடங்கியிருக்கும் விஞ்ஞானக் கருத்துக்களை இக்கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

எவ்வாறு சூரியன் உலகிலுள்ள பொருள்களை எல்லாம் ஒளியுறுமாறு செய் கிருனே அதேபோல அன்னை பராசக்தி இப்பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் அனைத் திலும் இருப்பதையே பாரதியார் எடுத்துக் கூறுகிருர். இப்பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் எல்லாம் திடதிரவ வாயு நிலைகளில் தோன்றுவதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள். ஒவ்வொரு நிலைக்கும் தகுந்தாற்போல பண்புகள் அமைந்திருக் கின்றன. பொருள்கள் எல்லாம் அணுக்களால் ஆனவை. திடநிலையில் பொருள் களில் உள்ள அணுக்கள் மிக நெருங்கி இருக்கின்றன. திரவநிலையில் சற்று விலகி இருக்கின்றன. வாயுநிலையில் அணுக்களுக்குச் சுதந்திரம் அதிகம். அணுக்கள் எல்லாம் நிரந்தரமான இயக்கத்துடன் சஞ்சரித்துக்கொண்டிருப்பதை விஞ்ஞானிகள் உணர்ந்தார்கள்.

திடப்பொருள்களில் படிகப்பொருளின் அமைப்பே மிகவும் விசித்திரமானது. வைரம் போன்ற இரத்தினங்கள் படிகப்பொருள்களே ஆகும். இவற்றிலுள்ள அணுக்களின் கவர்ச்சிச்சக்திகள் மிகவும் வலிமை வாய்ந்தவை. ஆயிரக்கணக்கான வருடங்களாக நவ ரத்தினங்களின் உருவம் கெடாமல் இருப்பதற்குக் காரணம் இச் சக்திகளின் வலிமையே ஆகும். இப்படி அணுக்களின் கவர்ச்சிச் சக்திகளை உணர்ந்து விட்டால் திடநிலை முழுவதிற்கும் உண்டான பண்புகளை அறிந்துவிடலாம் என்று நம் நாட்டுப் பேரறிஞர் சி. வி. இராமன் கூறுகிறார். படிக வடிவங்கள் பலதரப் பட்டன. ஒவ்வொன்றின் முகங்களும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. அணுக்கள் எல்லாம் வரிசை வரிசையாக மிகுந்த கட்டுப்பாட்டுடன் அணிவகுத்து நிற்கின்றன. இவ்வரிசைகளைத்தான் முகங்கள் என்று கூறுகிறோம், ஒரு படிகத்தை உடைக்க வேண்டுமென்றால் அதன் முகங்கள் ஒன்றின் ஊடே உடைத்தால்தான் அது எளிதாக உடையும். இவ்வாறு செய்யாவிடில் படிகம் உடையாது. எக்ஸ்ரே கிரணங்களைக் கொண்டு படிகங்களில் உள்ள விசித்திர அமைப்பின் பண்புகளை விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்விவரங்களைப் பார்க்கும்போது வைரக்கல்லினுள் பொதிந்து கிடக்கும் அறிவொளி நம்மைத் திகைக்கவைக்கும்.

திரவங்களுக்குத் தமக்கென்று ஒரு உருவம் கிடையாது. எந்தப் பாத்திரத்தில் திரவத்தை ஊற்றி வைக்கிறோமோ அதன் வடிவத்தையே அது ஏற்றுக்கொள்ளும். இப்படி இருக்கும்போது புல்லினில் படிந்த நீர்த்துளிகளுக்கு எவ்வாறு உருண்டை வடிவம் ஏற்பட்டது என்று அனைவரும் நினைக்கலாம். எல்லாத் திரவங்களின் மேற் பரப்பிலும் ஓர் சக்தி தொழிற்படுவதை விஞ்ஞானிகள் உணர்ந்து அதற்குப் பரப்புவிசு (Surface Tension) என்று பெயரிட்டார்கள். இதன் விளைவாகத் திரவங்களின் மேற் பரப்புக்குச் சுருங்கும் தன்மை உண்டாகின்றது. சிறிதளவு பாதரஸத்தைத் தரையில் போட்டால் அது மிகச் சிறிய உருண்டைகளாக அமைவதற்கு இப் பரப்பு விசுவே காரணமாகும். பனிக் காலங்களில் பசும் புல்லில் நீர்த்துளிகள் சிறு உருண்டைகளாக ஒவ்வொன்றின் நுனியிலும் படிந்து இருப்பதை அனைவரும் கவனித்திருக்கலாம். நீரின் மேற்பரப்பில் உள்ள சக்தியின் விளைவாகவே நீர்த்துளிகள் உருண்டை வடிவத் துடன் படிந்திருக்கின்றன என்பது தெரிய வந்தது, இனி, இத்துளிகள் எவ்வாறு வைரங்களைப் போன்று ஒளிருவது சாத்தியமாயிற்று என்பதைச் சற்று ஆராய்வோம். வைரங்களைச் சுரங்கங்களினின்று வெட்டி எடுத்தவுடன் அவற்றில் ஜ்வலிப்பு இருக் காது. கூழாங்கற்களையே ஒத்து இருக்கும். அவற்றின்மீது படிந்துள்ள மண் முதலிய அசுத்தங்களை நீக்கிவிட்டு சுத்தம்செய்து சாணையில் கொடுத்து பட்டை திட்டியவுடன் பிரமாதமாக அவை ஒளிவீசத் தொடங்குகின்றன. இக் கற்களில் ஒளி புகுந்தவுடன் அதற்குப் பல பிரதி பலனங்கள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக அதிக அளவுக்குத் தம்முள் ஒளியை அடக்கிவைத்துக் கொள்ளுவதற்கு அவற்றிற்கு வாய்ப்பு உண்டாகின்றது. புல்லில் படிந்த நீர்த்துளிகள் ஒவ்வொன்றின் உள்ளேயும்

வைரத்தில் ஏற்படுவதுபோலப் பல பிரதி பலனங்கள் உண்டாகின்றன. இதன் விளைவாகவே அவை ஒவ்வொன்றும் வைரத்தைப்போல ஒளிருகின்றன.

நம்மைப் பிரமிக்கச்செய்யும் மற்ருெரு காட்சி வானம். மேகங்கள் இல்லாத நள்ளிரவில் வானத்தைப் பார்த்தவுடன் அதன் பரப்பே முதலில் நம்மைத் திகைக்க வைக்கின்றது. சற்று ஊன்றிக் கவனிக்கும்போது அதன் குறுக்கே ஒரு ஒளிப்பட்டை தோன்றுவதைக் கவனிக்கலாம். இதையே நம் முன்னோர்கள் ஆகாச கங்கை என்று கூறுவார்கள். இதற்கு விஞ்ஞானிகள் கொடுத்த பெயர் பால் வழி (Milky Way) அல்லது அண்டம் (Galaxy). இதில் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அவற்றில் ஒன்றுதான் நமது பூமி அண்டிப் பிழைக்கும் சூரியன். நாம் வாழ்ந்துவரும் அண்டத்தின் அமைப்பையும், அதன் பரிமாணத்தையும் விஞ்ஞானிகள் நிர்ணயித்திருக்கிருர்கள். இது உருவத்தில் ஒரு கண்ணுடி வில்லையைப்போல இருப்பதாகச் சொல்லுகிருர்கள். இவ்வில்லையின் மையத்தினின்று சுமார் அறுபதினுயிரம் ஒளி வருட (Light - Year) தூரத்தில் நமது சூரியன் இருக்கின்றது. ஒளி வருடம் என்பது வானவெளியில் தூரங்களை அளப்பதற்கு விஞ்ஞானிகள் மேற்கொள்ளும் அலகு ஆகும். ஒளி அலைகள் விசும்பில் விஞடிக்கு ஒரு லக்ஷத்து எண்பத்தாருயிரம் மைல்கள் வீதம் பரவிச்செல்லுகின்றன. ஒரு வருடத்தில் அது கடந்துசெல்லக்கூடிய தூரத்தையே ஒளி வருடம் என்று கூறுவார்கள். இத்தூரம் அரைக்கோடியே கோடி மைல் தூரம் ஆகும். அண்டத்தின் விட்டம் சுமார் மூன்று லக்ஷம் ஒளி வருடங்கள் என்றும், தடிமன் பதினுயிரம் ஒளி வருடங்கள் என்றும் மதிப்பிட்டிருக்கிருர்கள்.

நமது அண்டத்தைப்போல அனேக அண்டங்கள் வானவெளியில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டார்கள். இவற்றுக்கு நெபுலங்கள் எனப் பெயரிட்டார்கள். இவை ஒவ்வொன்றும் நமது அண்டத்தைப்போல அகண்டாகாரமாக இருந்த போதிலும் இவை ஒவ்வொன்றுக்குமிடையே உள்ள தூரத்துடன் இவற்றின் பரிமாணத்தை ஒப்பிடும்போது அது மிகமிக அற்பமாக இருப்பது தெரியவந்தது. வான வெளியைக் கடலுக்கு ஒப்பிட்டால் இவ்வண்டங்கள் ஒவ்வொன்றையும் ஆங்காங்கே தோன்றும் மிகச்சிறிய தீவுகளுக்கு ஒப்பிடலாம். ஒவ்வொரு அண்டத்திலும் நட்சத்திரக் கூட்டங்கள், நட்சத்திர மேகங்கள், தனிப்பட்ட நட்சத்திரங்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை எல்லாம் எப்போது ஏற்பட்டன, எவ்வளவு காலம் நீடித்திருக்கும் என்பதை விஞ்ஞானிகள் இன்னும் உணரவில்லை. இத்தகைய நிலையை :-

'' கால வேள்ளத்தில் நிலை காணுங்கால்
பூதலத்தில் பராசக்தி தோன்றிடுமே ''

என்று பாரதியார் வெகு அழகாக வர்ணிக்கிருர்.

அடிகளும் தொண்டரும்

திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் M. A.,

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்குக் கனகாபிஷேகம் செய்தல் மிகவும் பொருத்தமாகும். தமிழ்மொழி வளர்ச்சிக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் அன்னார் ஆற்றிவரும் அரிய பணிகளைத் தமிழ்நாடு நன்கு அறியும். அடியவர் பெருமை கூறும் பெரியபுராணத்தில் மிக்க விருப்பம்கொண்டவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி ஆதலின் பெரியபுராணப் பொருள்குறித்தே இக்கட்டுரை எழுவதாயிற்று.

ஈண்டு அடிகள் என்பது அப்பூதி அடிகளையும் தொண்டர் என்பது சிறுத்தொண்டரையும் குறிப்பதாகும். இந்த இரண்டு அடியவர்களின் வரலாற்றில் நாம் பல ஒற்றுமைக்கூறுகளைக் காணலாம். இருவரும் சிவபெருமானிடத்தும் சிவனடியாரிடத்தும் இடையருத அன்பு பூண்டு ஒழுகினர்; தம் வாழ்க்கையில் சோதனைகள் ஏற்பட்டபோது மனம் தளராமல் தம் குறிக்கோள்களைக் கைவிடாமல் வாழ்ந்து வெற்றியுற்றனர் என்பதை அவர்கள் வரலாற்றில் அறியலாகும். இனி அவர்கள் வரலாற்றில் காணக்கிடக்கும் ஒற்றுமைக் கூறுகளை ஆராய்வோம்.

திங்களூரில் வாழ்ந்த அப்பூதிஅடிகள் திருநாவுக்கரசரைக் காண்பதற்கு முன்னரே அவருடைய திருத்தொண்டின் திறத்தினையும் சிவபெருமான் அவருக்குத் திருவருள் பாலித்த தன்மையினையும் கேட்டு அவரிடத்து அளவற்ற அன்புபூண்டு ஒழுகினர்; திருநாவுக்கரசர் திருப்பெயரால் தண்ணீர்ப்பந்தல் ஏற்படுத்தினர். தம்முடைய மக்களுக்கும் தம்மனையிலுள்ள மற்றக் கருவிகளுக்கும் 'திருநாவுக்கரசு' என்ற திருப்பெயரையே வைத்து வழங்கினர். திருநாவுக்கரசர் திருப்பழனம் முதலிய திருப்பதிகளைப் பணிந்து, திங்களூர் சென்று, அப்பூதி அடிகளின் தண்ணீர்ப்பந்தலைக் கண்டு அவரது மனையின்கண் சென்றார். தம்மனையின் தலைவாயிலில் சிவனடியார் ஒருவர் வந்துள்ளார் என்பதைக் கேட்டு மனைக்குள்ளிருந்த அப்பூதி அடிகள் வெளியே விரைந்து வந்து திருநாவுக்கரசரை வணங்கினர். பின்னர்த் திருநாவுக்கரசர் "சிவனடியார் பொருட்டு நீர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் நும் பெயர் எழுதாதே வேறொரு பெயர் எழுதவேண்டிய காரணம் என்கொல்?" என்றனர். அதைக்கேட்ட அப்பூதியடிகள் நிலையழிந்த சிந்தையராய்,

> "நன்றருளிச் செய்திலீர் நாணில் அமண் பதகருடன்
> ஒன்றியமன் னவன்சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
> வேன்றவர்தந் திருப்பேரோ வேறொருபேர் ?"

எனக் கூறி வெகுண்டு, "சைவ உலகத்தில் திருநாவுக்கரசரின் பெருமையினை அறியாதவர் யாவர்? சிவனடியார் திருக்கோலத்தோடு விளங்கும் நீங்கள் யார்?

எங்குறைவீர் எனக் கேட்டனர். அப்பூதியடிகளின் அன்பின் சிறப்பினை உணர்ந்த திருநாவுக்கரசர்,

"... ... ... பிறதுறையி னின்றேற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும் உணர் வில்லாத சிறுமையேன் யான்"

என்று கூறினார். இதைக் கேட்டவுடன் அப்பூதியடிகள், பொருளற்றவர் அருநிதியம் பெற்றார்போல் அகமிக மகிழ்ந்து, தம் சுற்றத்தாருடன் திருநாவுக்கரசரை வணங்கி அவரைத் தமது இல்லத்தில் திருவமுது செய்யும்படி வேண்டினார். திருநாவுக்கரசரும் அதற்கு இசைந்தருளினார். பெற்றோரின் கட்டளைப்படி மூத்த திருநாவுக்கரசு அடியவர்தம்மை உண்பிக்கவேண்டி வாழைக்குருத்து அரிந்து வருவதற்குச் செல்ல அவன் வாழைக்குருத்தினை அரிந்த பொழுது பாம்பொன்று அவன் அங்கையில் தீண்டி அவன் கையைச் சுற்றிக்கொண்டது. மூத்த திருநாவுக்கரசு அப்பாம்பினைக் கீழே உதறிவிட்டு மிக்க வேகத்துடன் வீட்டிற்குச் சென்று, வாழைக்குருத்தைத் தாயாரிடம் கொடுத்துக் கீழே விழுந்தான். அப்பூதி அடிகளும் அவர் மனைவியாரும் மைந்தன் விடத்தினால் இறந்தான் என்பதை அறிந்து, அவனைப் பாயினுள்வைத்து மூடி வீட்டின் பின்புறத்தில் வைத்துவிட்டு, திருநாவுக்கரசரை முன்வந்து வணங்கி "தேவரீர் திருவமுது செய்து எம் குடிமுழுதும் உய்யும்படி ஆட்கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளுக்கும் அவர் மனைவியார்க்கும் திருநீறு நல்கி, மற்ற மக்களுக்கும் அளிக்கும்போது மூத்தமகன் எங்கேயென்று கேட்டார்.

"ஆதிநான் மறைநூல வாய்மை அப்பூதி யாரை நோக்கிக்
காதலர் இவர்க்கு மூத்த சேயையுங் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த என்றலும் விளைந்த தன்மை
யாதுமோன் றுரையார் "இப்போ திங்கவன் உதவான்" என்றார்,

இச்செய்யுளில் சேக்கிழாரின் கவிநலம் கண்டு இன்புறத்தக்கதாகும். "நின்மூத்த சேய் எங்கே எனக்கூறாது "மூத்த சேயைக் காட்டு என்பதன் நயம் படித்து இன்புறத் தக்கது. ஒளித்துவைத்த பொருளைப் பார்ப்பதற்குத்தான் "காட்டு" எனக் கூறுவ துண்டு. எனவே திருநாவுக்கரசர் "நின் மூத்தசேயைக் காட்டு" என்றார். அவ்வாறு திருநாவுக்கரசர் கேட்டபோது அப்பூதியடிகள் நடந்தசெய்தியை எடுத்துக்கூறினால் சிவனடியார் திருவமுது செய்வதற்கு இடையூறுகும் எனக்கருதிக் குறிப்பாக உணர்த்துவான் வேண்டி "இப்போது இங்கு அவன் உதவான்" என்றார்.

இப்போது இங்கு அவன் உதவான் என்ற தொடர் சிறுத்தொண்டர் புராணத்திலும் வருதல் காண்க. பயிரவ வேடத்தில்வந்த சிவனடியாருக்கு அவர் விரும்பியவண்ணம் தன் மகனை அரிந்து கறிசமைத்து வைத்தபின் உணவு

அருந்தும்படி வேண்ட அச்சிவனடியார் தம்முடன் வேறு ஒரு சிவனடியாரும் உடன் உண்ணவேண்டுமெனக்கூறச் சிறுத்தொண்டர் வெளியேசென்று தேடியும் ஒரு சிவனடியாரும் அகப்படவில்லை. பின்னர்ச் சிறுத்தொண்டர் தாம் திருநீறு அணிவதுண்டு எனக்கூற அதைக்கேட்ட பைரவகோலத்தில் வந்த பெருமான் சிறுத்தொண்டரைச் சிவனடியாராக ஏற்றுக்கொண்டு அவரைத் தம்முடன் உடன் உண்ணும்படி பணித்தார். அதன்பின் சிறுத்தொண்டர் பயிரவச் சங்கமரை உண்பிக்கவேண்டித் தாம் உண்ணத்தொடங்கினர். அப்போது பயிரவச்சங்கமர் சிறுத்தொண்டரைத் தடுத்து,

' ஆறு திங்கள் ஒழிந்துண்போம் உண்ணும் அளவுந் தரியாது
சோறு நாளும் உண்பீர்முன் உண்ப தேன்நம் முடன்துய்ப்ப
மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் தன்னை அழையும்''என
ஈறும் முதலும் இல்லாதார்க்கு "இப்போ துதவான் அவன்" என்றார்.

இச்செய்யுளில், "இப்போதுதவான் அவன் என்றார்" என்ற தொடர் அப்பூதியடிகள் புராணத்திலுள்ள "இப்போதிங்கு அவன் உதவான்" என்ற தொடரோடு ஒப்பிட்டுக் காணவேண்டியுள்ளது. தன் மைந்தனை அறுத்துச் சமைத்ததைத் தெரிவித்தால் பைரவச் சங்கமர் திருவமுது செய்யத் தடையாகும் எனக் கருதிச் சிறுத்தொண்டர் "இப்போதுதவான் அவன்" என்றார். அப்பூதியடிகள் தம் மகன் இறந்தமைக்குக் கவலைப்படவில்லை. திருநாவுக்கரசருக்குத் திருவமுது படைக்க வேண்டும் என்பதே அவருக்குக் குறிக்கோளாக விளங்கியது. அதைப்போலவே சிறுத்தொண்டரும், தம் மகனை அரிந்து உணவு சமைத்ததற்குக் கவலைப்படவில்லை. பைரவச்சங்கமருக்குத் திருவமுது படைக்கவேண்டுமென்பதே அவரது குறிக்கோளாக விளங்கியது. எனவே அப்பூதியடிகளும் சிறுத்தொண்டரும் சிவனடியாருக்குத் திருவமுது படைத்தல் என்ற ஒரேகுறிக்கோளுடன் வாழ்ந்தனர் என்பது பெறப்படுகின்றது.

"இப்போ திங்கவன் உதவான்" என அப்பூதியடிகள் கூறியபோது திருநாவுக்கரசர் "மெய்விரித்து உரையுமென்ன" அப்பூதியடிகள் நடுக்கமுற்றுத் தம் மைந்தர்க்கு நேர்ந்ததைக் கூறினர்.

" பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க என்றே
வருவதேன் றுரையா ரேனும் மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டுஞ் சீலத்தால் சிந்தை நோந்து
பரிவோடு வணங்கி மைந்தர்க் குற்றது பகர்ந்தார் அன்றே."

இச்செய்யுளில் "மைந்தர்க்குற்றது பகர்ந்தார்" என்ற வரியில் காணக் கிடக்கும் நயம் படித்தின்புறத்தக்கதாகும். மூத்த திருநாவுக்கரசு பாம்பு கடித்து இறந்தான் என்ற செய்தியைக் கூறுவதற்கு அச்சமும் கூச்சமும் கொண்டார் சேக்கிழார் என்பது தெரிகின்றது. அதனுல்தான் "மைந்தர்க்கு உற்றது பகர்ந்தார்" எனப் பாடினர்.

" ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல் "

என்ற திருக்குறளுக்கேற்ப வருந்தத்தக்க செயல்களைச் சொல்லுதற்குப் பெரியோர் கூசுவர் என்பது புலப்படுகின்றது. முத்திநாதன், மெய்ப்பொருள் நாயனரை வெட்டினன் எனக் கூருது, " தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய " எனச் சேக்கிழார் மெய்ப்பொருள் நாயனர் புராணத்தில் பாடியிருப்பது ஈண்டுக் கருதத்தக்கது. இவ்வாறே ஏனதி நாயனர் புராணத்தில் அதிசூரன் ஏனதி நாயனரை வெட்டினன் எனக் கூருது " முன்னின்ற பாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான் " எனச் சேக்கிழார் பாடியுள்ளது ஈண்டு ஒப்பிடத்தக்கது. இராமன் காட்டிற்குப் போகவேண்டுமென்று தன் வாயால் கூறக் கூசிய தசரதன் கைகேயியை நோக்கி,

" பெண்ணே ! வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மறவென்ருன் "

என்ற கம்பராமாயணச் செய்யுளும் ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. இங்கு மற்றையது ஒன்று என்பது இராமன் காட்டிற்குப் போவதைக் குறிப்பதாகும்.

திருநாவுக்கரசர் " ஒன்றுகொலாம் " என்ற திருப்பதிகம் பாடிப் பாம்பின் விடத்தைப் போக்கினர். மூத்த திருநாவுக்கரசும் உறங்கி எழுபவனைப்போன்றெழுந்து திருநாவுக்கரசருடைய திருவடிகளை வணங்கினன். இந்நிகழ்ச்சியைக் கண்டோரெல்லாம் அப்பூதியடிகளின் தொண்டின் சிறப்பைப் போற்ற, அப்பூதியடிகளும் அவர் மனைவியாரும் மூத்த திருநாவுக்கரசு உயிர்பெற்றதற்கு மகிழாமல் " அன்பர் அமுது செய்து அருளுதற்குச் சிறிது இடையூறு செய்தான் இவன் " எனக் கூறி மனம் வருந்தினர்.

" பிரிவுறும் ஆவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் நின்றஅப் பயந்தார் தாங்கள்
"அறிவரும் பெருமை அன்பர் அமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான் இவன்"என்று சிந்தை நொந்தார் "

இதனல் அப்பூதியடிகளுக்குத் தன் மைந்தனிடத்து இருந்த அன்பினும் சிவனடியாருக்குத் திருவமுது படைக்கவேண்டுமென்ற ஆசை அதிகரித்திருந்தது என்பது போதரும்.

சிறுத்தொண்டர் " இப்போ திங்கவன் உதவான் " எனக் கூறியதைக்கேட்ட பைரவச்சங்கமர் " மைந்தன் இங்கு வந்தால்தான் அமுதுண்போம். அவனைத்தேடி அழையுங்கள் " என்ருர். அவரது ஆணையின்வண்ணம் சிறுத்தொண்டரும் அவரது மனைவியாரும் " மைந்தா ! வருவாய், செய்ய மணியே சீராளா வாராய், சிவனர் அடியார் யாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்ருர் " என்று ஓலமிட

அப்போது சிவபிரானுடைய திருவருளால் சீராளன் பள்ளியினின்று ஓடிவருவான் போல் எதிரில் ஓடிவந்தான். அதனைக் கண்ட சிறுத்தொண்டரின் மனைவியார் அவனைக் கையிலெடுத்துத் தழுவிக்கொண்டு, தம் கணவனார் கையில் கொடுத்தார். அப்போது சிறுத்தொண்டர் மைந்தன் உயிர்பெற்று வந்ததற்கு மகிழவில்லை என்றும், மைந்தன் திரும்பிவந்ததால் சிவனடியார் திருவமுது செய்வார் என்ற காரணத்தால் மகிழ்ந்தார் என்றும் சேக்கிழார் கூறுவது சிந்திக்கத்தக்கது. இதனை,

"பரமர் அருளால் பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பின் தனிப்புதல்வன் தன்னை எடுத்துத் தழுவித்தங்
கரமுன் அணைத்துக் கணவனார் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
புரமுன் றெரித்தார் திருத்தொண்டர் உண்ணப் பெற்றோம் எனும்பொலிவால்"

என்ற பாட்டால் அறியலாகும். இதனால் சிறுத்தொண்டர்க்குத் தம் மைந்தனிடத்து வைத்த அன்பினும், சிவனடியார்க்குத் திருவமுது படைக்க வேண்டுமென்ற ஆசை மிக்கு விளங்கியது என்பது அறியக்கிடக்கின்றது.

சிவனடியாருக்கு உணவு அளிக்கவேண்டும் என்ற ஆசை அப்பூதியடிகள் சிறுத்தொண்டர் என்ற இருவரிடமும் மிக்கு விளங்கியது. ஆனால் அவர்கள் ஆசை ஈடேறுவதற்குள் சில சோதனைகள் இடையில் தோன்றின. அவர்கள் தம் திருத் தொண்டின் உறைப்பாலும் மனவலிமையாலும் அச்சோதனைகளை வென்று வெற்றி பெற்றனர். எனவே நாம் செய்யும் நல்ல செயல்கள் முற்றுப்பெறுதற்குமுன் சில தடைகள் நேரும்போது நாமும் மனவன்மையோடு இருப்போமாகில் அத்தடைகளையும் வென்று வாழ்க்கையில் வெற்றி பெறலாம் என்பது வரலாற்றில் அறியக்கிடக்கும் உண்மையாகும்.

நிஷ்காமிய கருமத்தையும் கடந்த சிவ கருமமே நிருமலனாகிய சிவபெருமானின் திருவருளுக்கு நம்மை ஆளாக்கும்; குருவருளின் துணையே அதனைக் கூட்டிவிடும்.

— கயிலைக் குருமணி

சக்தி வழிபாடு

வித்துவான். கு. அருணசலக் கவுண்டர்

தமிழ் நாட்டில் :

நமது கிராம தேவதைகளிலே காளி அல்லது மாகாளி முதலிடம் பெறுகிருள்; திருவொற்றியூரிலே வட்டபுரி அம்மன், மாமல்லபுரத்திலே கருக்கில் அமர்ந்தாள், தில்லையிலே காளி, கோயமுத்தூரிலே கோணியம்மன், சமயபுரத்திலே மாரியம்மன், பாரியூரிலே கொண்டத்துக்காளி, நாட்டரசன் கோட்டையிலே கண்ணுத்தாள், காரைக்குடியிலே கொப்புடையம்மன் - இவை தமிழ் நாட்டின் பிரசித்திபெற்ற காளி உருவங்களில் சில.

எல்லை அம்மன், எல்லைப்பிடாரி, வடக்குவாசல் செல்லி முதலிய பெயர்களுடன் காவல் தெய்வமாகப் பல ஊர்களிலே காளி வழிபடப் பெறுகிருள். தமிழகத்தின் தென்னெல்லையைக் குமரி காத்து நிற்கிருள். இந்தக் 'கன்யாகுமரி'யை யவனுசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இவர்கள் காலம் கி. பி. முதலிரண்டு நூற்ருண்டுகள். மதுராபதியை மதுரையின் காவல் தெய்வம் என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. மணிமேகலையிலே, தென்னுட்டுக்கு நலிவு ஏற்பட்டபோது, சம்புத்தீவத்தின் காவல் தெய்வமாகிய சம்பாபதி, அத்துன்பத்தைத் தவிர்ப்பதற்கு வடக்கே இருந்து தெற்கே போந்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்திலே அவளுக்குக் கோயில் இருந்தது. அவளைக் 'குமரி' என்றும், 'தொன்மூதாட்டி' என்றும் சாத்தனுர் போற்றுகிருர். இத்தெய்வத்தின் பிரதிநிதியாகத் தற்போதைய கிராம தேவதைகளைக் கருதுவதிலே தவறு இல்லை.

இவையே அன்றி, வடநாட்டு உச்சினியிலிருந்து வந்து திருநெல்வேலியிலே குடியேறிய உச்சி(னி) மாகாளியையும் நாம் அறிவோம். ஆந்திர தேசத்திலிருந்து வந்து கோயில்கொண்ட சக்கமாதேவி எக்ல - எல்லமாதேவிகளும் உண்டு. திரௌபதி தஞ்சாவூர்ப்பக்கம் காளிவேடம் தரித்துக்கொண்டாள். ஜமதக்கினி முனிவரின் பத்தினியாகிய இரேணுகை திருவாரூரிலே எல்லையம்மன் ஆனுள். இவள் வழிபாட்டை அறந்தாங்கி, பட்டுக்கோட்டையிலே காணலாம். கண்ணகி என்ற பத்தினி சிலப் பதிகார காலத்திலேயே காளியாகக் கருதப்பட்டிருக்கிருள்.

காளி கோயில்களிலே பெரும்பாலும் தேவி உட்கார்ந்தகோலத்தில் இருப் பாள். உக்கிரமான முகத்துடன் கோரப்பற்கள் வெளிப்பட்டுத் தோன்ற, கரங்கள் நான்கிலும் சூலம், உடுக்கை, கபாலம், சுரிகை வைத்திருப்பதாக அவளை உருவகப் படுத்தி விக்கிரகம் சமைத்துப் பிரதிட்டை செய்திருக்கிருர்கள். பாமரமக்கள்

காளியைப் பல்வேறு பெயர்களில் பலவகையாக வழிபடுகிருர்கள். இவர்கள் வழி பாட்டிலே உயிர்ப்பலியும், தீமிதியும் முக்கிய இடம் ஏற்றுள்ளன. உயிர்ப்பலி தற்போது சட்டபூர்வமாய்த் தடுக்கப்பட்டிருக்கிறது. உபாசகரிலே சிலர் தமது உடல் உறுப்பு களைப் பலவிதங்களிலே வருத்தி, நேர்த்திக்கடன் செலுத்துவதும் உண்டு. வேறு சிலர், நவதுர்க்கை வடிவங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது பத்திரகாளியாக யந்திரத்தைப் பொறித்து, மஞ்சள்பொடி, குங்குமம், அரிசிமாவால் உருவம் சமைத்து வழிபடுவதும் உண்டு. இவ்வழிபாடு பூதசுத்தி, ஆத்மசுத்தியில் தொடங்கி, பலி ஓமத்தில் முடியும். பீஜமந்திரம் ஓதி, துர்க்காசூக்தத்தினின்றும் துதிமொழிகள் புகன்று வழிபாட்டைப் பூர்த்திசெய்வர்.

அகில இந்தியாவிலும் :

தமிழ் மக்களிடையே காளி பிரபலமானதுபோலவே, அகில இந்தியாவிலும் தேவி வழிபாட்டுக்கு ஒப்பானது வேறு இல்லை. காஷ்மீரத்திலே அம்பாள், ராஜ புதனத்திலே பவானி, கூர்ஜரத்திலே கல்யாணி, வங்காளத்திலே காளி, அசாமிலே காமரூபி, மைசூரிலே சாமுண்டி, தமிழகத்திலே காமாட்சி, மலையாளத்திலே பகவதி இப்படி வெவ்வேறு பெயர்களிலும் உருவங்களிலும் இந்தியா முழுவதும் சக்திவழிபாடு நடந்துவருகிறது. பல பிரிவினரான இந்துக்கள் அனைவரும் சக்தியை வழிபடு கிருர்கள்.

பராசக்தி எங்கும் நிறைந்தவள் ஆதலின் அவளைப் பூரணி, ராஜராஜேஸ்வரி, மூலப்பிரகிருதி என்பர். முத்தொழில் புரியும்போது அவள் பிராம்மணி, வைஷ்ணவி ருத்ராணி ஆகின்ருள். ஈசுவரனுக்கு ஒப்பாகும்போது துர்க்கை எனப்படுகிருள். கல்வியாய்க் கருதும்போது சரசுவதி என்பர். செல்வமாய்த் திகழும்போது லட்சுமி என்பர். கால சொரூபிணியாகக் கருதும்போது காளி என்பர். அவள் 'புக்தி முக்திப் பிரதாயினி' - அதாவது, போகத்தையும் மோட்சத்தையும் கொடுப்பவள். பிரமன் விஷ்ணு சிவன் முதலானேர் தமது வலது கரத்தின் அபய முத்திரையால் மோட்சத் தையும், இடதுகையின் வரமுத்திரையால் போகத்தையும் கொடுப்பர். ஆனல், தேவி ஒருத்தியின் பாதகமலங்களுக்குத்தான் பக்தர் விரும்பும் பலன்களை அவர்கள் விரும்பிய தற்கும் மிகுதியாக வழங்கும். வல்லமை உண்டு என்று ஸ்ரீ சங்கரர் அவளுடைய திருவடி மாண்பைப் புகழ்ந்திருக்கிருர். அவள் சிலை அல்லது சிற்பத்தில் வர அபய முத்திரைகள் கைகளில் இல்லாமை இங்கே கருதத் தகுந்தது.

தாயான தத்துவம் :

சக்தி வழிபாட்டைச் சரிவர ஆராய்ந்தவர் அருமையே. ஆராய்ந்த சிலரும் அதைச் சரியாகப் புரிந்துகொண்டனர் என்று சொல்லுதற்கு இல்லை. உபாசகர் அதை மிகவும் மறை பொருளாகப் பேணி வந்தது அதற்குக் காரணம் ஆகலாம். இந்து

மதத்தின் ஆபாசக்காட்சி என்று அதை ஒருவர் வருணித்திருக்கிறார். அங்கும் இங்கும் நிலவுகிற சிற்சில நடைமுறைகளைப் பார்த்து, அவர் இப்படிக் கருதினார்போலும். இக்கருத்தில் வாய்மை இல்லை. அரைகுறையாய் அறியப்பட்டிருக்கும் சக்திவழிபாடு உறுதியான அடிப்படையில்தான் சமைந்திருக்கிறது.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை. பெற்றவள், வளர்ப்பவள், தேற்று பவள், ஆதரிப்பவள் தாய் அல்லவா? அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். பிதாவினும் முன்னதாக அறியப்படும் தெய்வம் அன்னைதான். அவளிடம் குழந்தை மனம்விட்டுப் பேசுகிறது; பழகுகிறது. பக்தன் சிவன்என்னும் தந்தையைவிட, சக்தி என்ற தாயிடம் நெருங்கிய நேயம் கொள்வதில் வியப்பில்லை.

சிவபரம்பொருள் புற உலகைப் பொருட்படுத்துவதில்லை. அவர் ஒரு தியாகி; துறவி; ஆனந்தமாய்க் கூத்தாடுவார்; இல்லை என்றால், மோனநிலையில் அழுந்தி யிருப்பார். தன் அதிகாரத்தைத் தன் தேவியிடம் ஒப்படைத்திருக்கிறார். ஐந்தொழில் களையும் அவளே கவனிக்கிறாள். அவள்அருள் எல்லை அற்றது. கருணை வரம்பற்றது. அறிவு அகண்டமானது. ஆற்றல் அளக்கலாகாதது. அவள் பூரணத்துக்கு எந்நாளும் குறைவில்லை. எங்கும் அவள் நிறைமாட்சி உடையவள். பழையோள் - மிகப்பழையவள் எனினும் புத்தம்புதியவளாகவே அவள் திகழ்கிறாள். அண்ட கோடிகளை ஈன்றபிறகும் அவள் தன் நிலைகுலையாது எந்நாளும் தன்மயமாய் இலங்கு கின்றாள் ஆதலின் ஏககாலத்தில் அன்னையாகவும் கன்னியாகவும் மிளிர்கின்றாள். 'அகிலாண்ட கோடி ஈன்றும், அன்னையே! பின்னையும் கன்னி என மறைகள் பேச நின்ற ஆனந்த ரூபமயிலே' என்று பக்தர்கள் அவளைப் புகழ்கின்றார்கள்.

வேறு விதமாகவும் இதை விளக்கலாம். அங்கிங்கு எனாதபடி ஆனந்த பூர்த்தியாய்க் கடவுள் இருப்பது மெய்யே. ஆனால் அதை நம்மால் எளிதில் அறிய முடியாது; மனம் வாக்குக்கு எட்டாத பொருள் அது. ஆதலால், உருவற்றதற்கு உருவத்தைக் கற்பித்து, குணம் இல்லாததற்குக் குணங்களை ஏற்றி கணபதி, கார்த்தி கேயன், பராசக்தி, பரமேசுவரன், மகாவிஷ்ணு என்று பல பெயர்களில் வழிபடுகிறோம். எங்கும் நிறைபொருள் ஆதலால் எவ்வுயிரிலும் அவன் உண்டு; தூணில் இருப்பான்; துரும்பிலும் இருப்பான். அப்பன் அவன்; அம்மையும் அவன்; அன்புடைய மாமனும் மாமியும் அவன்தான். எனவே, அவனைத் தாயாகப் பாவிக்கும் தத்துவம் பொரு ளுடையதே; தாயைத் தெய்வமாக நினைப்பதுதான் உலகநியதி; தெய்வத்தைத் தாயாக நினைப்பதுதான் சக்தி வழிபாடு. 'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றும்' இறைவனை, 'தாயவன்காண் உலகிற்குத் தன் ஒப்பிலாத தத்துவன்காண்' என்று பக்தர் பாடுகின்றனர்.

புராணங்களின்படி சக்தி விஷ்ணுவின் தங்கை; சிவனுக்கு மனைவி; கணேச னுக்கும் கார்த்திகேயனுக்கும் தாய். தத்துவரீதியில், சாக்தம் படைப்பு பரிணாம

வாதங்களை (Creation and evolution) சமரசப்படுத்துகிறது. சிவனுக்கும் பூமிக்கும் இடையிலே சக்தி தோன்றுகிறது. சக்தியின் தோற்றமே மாயை அல்லது பிரகிருதி; பிரகிருதியினின்றும் ஐந்து பூதங்கள் - இப்படி வகுக்கப்பெற்றிருக்கும் இந்த சாக்த தத்துவத்தின் பெருமை என்னவென்றால், அது வேதாந்தத்தில் பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் இடையிலே தோன்றும் பிளவில் ஒரு பாலத்தைக் கட்டியிருக்கிறது. சாங்கிய தத்துவத்தை ஏற்றுக்கொண்டு நாஸ்திக வாதமாகிய அதற்கு ஆஸ்திகத் தன்மை கொடுக்கிறது. இந்தக் கோட்பாட்டிற்கு ஆதாரம், தந்திர நூல்கள்; தென்னாட்டவர் ஆகமம் என்பதைத்தான் வடநாட்டவர் தந்திரம் என்கின்றனர்.

சிவ சக்தி :

தென்னாட்டுச் சைவசமயத்துக்கு ஆகமங்கள்தான் அடிப்படை. காஷ்மீரத்தின் 'பிரத்யபிக்ஞான' பிரதிபலிப்பே சைவாகமங்கள். சிற்சில வேறுபாடுகளுடன் பிரத்யபிக்ஞான சூத்திரங்களைச் சைவர்கள் போலவே சாக்தர்களும் மேற்கொண்டனர். இவ்விருவர்க்கும் சிவம் வேறு, சக்தி வேறு அன்று. இவை ஒரே தத்துவத்தின் இணைபிரியாத இரண்டு அம்சங்கள். ஒரு காரியத்தைச் செய்யச் சக்தி இருக்கிறதா? இல்லாவிட்டால் சிவனே என்றிரு என்பது பாமரர் வாய்ச்சொல். சிவபெருமான் சக்தியின் சேர்க்கையின்றி, எதையும் செய்யமுடியாதவராய் இருக்கிறார் என்பதைத்தான் அவ்வாய்மொழி உணர்த்துகிறது. சக்திதாண்டவம் இந்த உண்மையை விளக்குகிறது. தமிழ்நாட்டிலே முயலகன் என்ற மருளை மிதித்து மாய்த்து நடராஜர் தாண்டவம் ஆடுகிறார். இதைப் பார்த்துப் பழகிய நமக்கு வடநாட்டிலே சவம்போலக் கிடக்கும் சிவன்மீது பராசக்தி பாதம் ஊன்றித் தாண்டவம்புரிவது பொருந்துவதாகத் தோன்றவில்லை. எனினும், பின்வருமாறு ஓர்ந்து அறிய இதிலே பேருண்மை பொதிந்திருப்பதைக் காணலாம். சிவன் அசலன், கூடஸ்தன் - அதாவது 'போக்கும் வரவும் இல்லாப் புண்ணியன்' ஆதலால் அசைவற்றுச் சவம்போலக் கிடக்கிறான். அவனை ஆதாரமாகக்கொண்டு, மாயாசக்தி அவன்மீது தாண்டவம் புரிகிறாள். அசைவற்றிருக்கும் அறிவுசொரூபம் சிவம் என்றால், செயலே வடிவெடுத்திருப்பது சக்தி. மழை பெய்கிறது; வெயில் எரிக்கிறது; விதை முளைக்கிறது; எங்கும் சக்தியின் தாண்டவம்தாம். மேலும், சக்தியோடு கூடினால்தான் சிவனுக்குப் 'பிரபு' என்றபெயர் சித்திக்கிறது. பிரமன், விஷ்ணு, உருத்திரன், ஈசுவரன், சதாசிவன், சிவன், பரமசிவன் என்ற மூர்த்தி பேதங்கள் ஏழிற்கும் பராசக்தி ஒருத்தியே சரசுவதி முதலிய சக்தி பேதங்கள்ஏழாய் நிற்பாள். 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்.'

இதனாலேதான் தமிழ்நாட்டிலே சிவாலயங்கள்தோறும் சிவனும் சக்தியும் சேர்ந்தே இருக்கிறார்கள்; சுவாமி சந்நிதியை அடுத்து அம்மன் சந்நிதி இருக்கிறது. அம்மன் சந்நிதியைக் 'காமகோட்டம்' என்று முன்னோர் வழங்கினர். கி. பி. 11 ஆம் நூற்றாண்டுக்குப் பின் தோன்றிய கோயில்களிலேதான் மூலத்தானத்தை ஒட்டிக் காம

கோட்டம் எழுந்தது. அதற்குமுந்திய காலங்களில் சிவாலயங்களின் வேருகத்தான் அம்மனுக்குத் தனிக் கோயில்கள் இருந்தன ; ஒரே ஆலயத்தில் அடுத்து அடுத்து இருந்தது இல்லை.

பரம்பொருள் அவள்தான் :

சிவம் வேறு சக்தி வேறு அன்று ; ஒரே தத்துவத்தின் இணைபிரியாத இரண்டு அம்சங்கள் என்ருேம். அந்தத் தத்துவத்தைச் சைவர் சிவன் என்பர் ; சாக்தர் சக்தி என்பர். சாக்தர் கொள்கை பின் வருவது :- மும்மூர்த்திகளுக்கும் ஆதாரமாய் இருப்பது சக்தி; சக்தி இல்லையேல் படைத்தல், காத்தல், அழித்தல் நடவா. புத்தியின் ஞானசக்தியும், மனத்தின் இச்சாசக்தியும், உடலின் கிரியாசக்தியும் அவளுடைமைதான். அவள் அன்றி ஓரணுவும் அசையாது. யாக்கையைத்தந்து, இன்ப துன்பங்களை அனுபவிக்கச்செய்து, பின் பிறவியை ஒழித்துப் பேரின்பத்தைக் கொடுப்பவள் அவள்தான். 'மூவர்க்கும் முதற்பொருளாய், முத்தொழிற்கும் வித்தாகி, நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய்' விளங்குகிற அன்னை பராசக்தி, 'பேசரிய உயிரை எலாம்பெற்று நோக்கிப் பெரும்போகம் அவை அளித்துப் பிறப்பினையும் ஒழித்து விடுகிருள். பலவிதமான உலகமாகி, அதற்குள் புகுந்து உயிர் அளித்து அந்தர்யாமியாக இருந்தும், உலகத்தைக் கடந்தும் ஆனந்த அகண்ட ஜோதியாகத் துலங்குகிருள். அவளிடமிருந்துதான் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்கிற பஞ்சகர்த்தர் தோன்றினர் ; சித்சக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற பஞ்ச சக்திகளும் தோன்றின. இதனுல் உலக காரியம் உண்டாயிற்று. சக்திக்கு மேற்பட்ட ஈசுவரன் இல்லை. செல்வம் வேண்டுமா ? கவலை ஒழிய வேண்டுமா ? விடுதலை வேண்டுமா ? அதற்குச் சக்தியிடம் பக்திகொள் என்பர் சாக்தர். அவளே வழி ; அவளே குறி.

பழையோள் :

இந்தச் சக்தி வழிபாடு எங்கே தோன்றியது, எப்போது தோன்றியது என்று சொல்வதற்கு இல்லை. தொன்று தொட்டு நடந்துவருகிறது என்றுதான் பொதுவாகச் சொல்லக்கூடும். பார்வதி இமயமலையை இடமாக உடையவள் ; வைஷ்ணவி விந்திய மலையை இடங்கொண்டவள் ; துர்க்கையும் (துர்க்கம் - மலை) மலையில் இருப்பவளே ; பண்டைத் தமிழ்மக்களின் வெற்றித் தெய்வமாகிய கொற்றவையும் மலைவாசிதான். ஏழில்மலையிலே கானமர் செல்வி (-வன துர்க்கை)யைக் காண்கிருேம் (அகம் 345). மலைச் சாரலிலே 'விறல் கெழு சூலி'க்குப் பலி கொடுத்தலைக் குறுந்தொகை (218) கூறுகிறது. கடவுள் அயிரை - அயிரைமலைக் கொற்றவையைச் சேரர் வழிபட்டு வந்தனர். 'வெற்றி வெல்போர்க்கொற்றவை சிறுவன்' என்று முருகனை நக்கீரர் போற்றுகிருர். சிறுவன் என்பதற்கு 'வன துர்க்கையின் புதல்வன்' என்றும்,

வெல்போர் என்பதற்கு 'அவள் மகிடனைச் செற்றது' என்றும் நச்சினார்க்கினியர் உரை வகுத்துள்ளார்.

இவற்றைக் கருதும்போது மலைவாசிகளாகிய ஆதி மனிதரிடையே சக்தி வழிபாடு முதன்முதல் தோன்றியிருத்தல் கூடும் என்று யூகிக்கலாம். காலப்போக்கிலே இவ்வழிபாடு பலபடியாக வளர்ந்தது. உலகம் முழுவதுமே பரவியிருந்தது. எனினும், இந்தியாவிலேதான் இன்றளவும் நிலைத்திருக்கிறது. தனிச் சமயமாகவும் வளர்ந்திருக்கிறது. எனவே இந்தியா இதற்குப் பிறப்பிடம் ஆகலாம்.

உலகம்மாள் :

தந்திர சாஸ்திரங்கள் தோன்றியபின், அதாவது கி. பி. 4, 5 ஆம் நூற்றாண்டு களுக்குப் பின்னர் இந்து மதத்திலே ஏற்பட்ட பிற்கால வளர்ச்சிதான் சக்திவழிபாடு என்று சிலர் கருதுகின்றனர். அவர் கருத்துத் தவறானதே. மகஞ்சதாரோ ஹரப்பாவின் புதைபொருள் ஆராய்ச்சிகளால் சக்தி வழிபாடு அங்கே நிலவி இருந்ததை அறிகிறோம். இதை ஆராய்ந்த சர் ஜான் மார்ஷல் 'இவ்வழிபாடு இந்தியாவிலே தோன்றியது. சிவபெருமானோடு தொடர்புடையது ; எனினும், சிற்றாசியா, எகிப்து, பொனீசியா, கிரீஸ் முதலிய பண்டைநாகரிக நாடுகளிலும் இதுபோலும் வழிபாடு இருந்தது என்கிறார். 'சிந்துநதி தீரத்திலும், சுமேரியாவிலும் இவ்வழிபாடு ஒன்றுபோலவே இருந்தது வியப்புக்கு உரியது' என்கிறார் வி. ஆர். தீட்சிதர். இருநாடுகளிலும் தேவிக்கு வாகனம் சிங்கம் ஆதல்போலவே, அவள் கணவனுடைய வாகனமும் காளையே. போர்த்தெய்வமாகிய அவள் கன்னியாகவும், மனைவியாகவும், மலை வனங்களிலே வசிப்பவளாகவும் இருநாடுகளிலுமே கருதப்பட்டாள். இதனால் சக்தி வழிபாடு பண்டைக் காலத்திலே உலகம் முழுவதும் பரவியிருந்ததை அறிகிறோம். அதனாலும் லோக மாதாவாக அம்பாளை நாம் போற்றுவது முற்றிலும் பொருந்துவதே.

இவ்வழிபாடு ஆதி மனிதரிடையே அவர்கள் தாய்வழி உரிமை கொண்டாடி வந்த காலத்திலே தோன்றியிருத்தல் கூடும். நாகரிக வளர்ச்சியில் தாய்வழி மறைந்து, தந்தைவழி தோன்றியது. எனினும், தாயை வழிபட்டுவந்த பண்டைய வழக்கம் மட்டும் தொடர்ந்து நடந்து நிலைத்த வழிபாடாகவும் ஆயிற்று. அதனால் பல லோக மாதாக்கள் (தாய்த் தெய்வங்கள்) தோன்றினர். அவருள் எழுவரைப் புராணங்கள் போற்றுகின்றன. பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மகேந்தரி, சாமுண்டி என்ற இவர்கள் தாயின் பல்வேறு வடிவங்களே. தமிழ்நாட்டிலே இவர்கள் வழிபாடு கி. பி. 5 ஆம் நூற்றாண்டுக்கு முன் தொடங்கி, பத்தாம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்தது என்பதைப் பண்டைக் கோயிற் சிற்பங்களால் அறியலாம். இத் தாய்மார்களின் மூர்த்தங்கள் ஒரே பீடத்தில் வரிசையாக அவரவர்களின் அடையாளத் துடன் பதுமாசனத்திலே வீற்றிருப்பதுபோலச் செய்யப்பட்டிருக்கும். புறக்கணிக்கப் பட்டதால், இச்சிலைகளின் சிதைந்த கோலத்தைப் பழங்கோயிற் பிராகாரங்களிலே


பார்க்கலாம். சேட்டை என்ற மூதேவியையும் நம் முன்னோர் வழிபட்டு வந்தனர். அவளுடைய கொடி காகம். காகம் மயிலாகவும், சேட்டை சுப்பிரமணியராகவும் திருப்பரங்குன்றிலே மாற்றப்பட்டிருப்பதாக டி. ஏ. கோபிநாதராவ் கருதுகிறார்.

வைதிகந்தான் :

வேதகாலத்திலே சக்தி வழிபாடு நடந்தது என்பதற்குச் சான்று உண்டா? இது ஆரியரல்லாதார்க்கு உரியது என்பர் சிலர். ரிக்வேத சம்கிதையில் ஆண்தெய்வங்களே ஆட்சிபெற்றிருப்பதால் அன்னை வழிபாடு அக்காலத்திலே நடந்தது இல்லை என்று முடிவுகட்டுதல் பொருந்தாது. வேதத்திலே பயிலுகிற உஷா, அதிதி, புவி, வாக் போன்ற பெண்தெய்வங்களை ஆராய்கிற யாரும், அவையாவும் சக்திகளாகவே கருதப்பட்டிருந்தமையை அறியலாம். மனிதன் மண்ணிலே தோன்றினன் ; மண்ணிலேயே மறைகிறான் என்பதால் வேதகால மக்களும் புவியைத் தாயாகவே போற்றினர். தைத்திரிய உபநிடதத்திலே புவித்தாயைக் காணலாம். அறிவுக்கும் சிந்தனைக்கும் செயலுக்கும்கூட ஆதாரமாயிருக்கும் வாக்தேவதையை முழுதும் புகழும் சூக்தம் ரிக்வேதத்திலே உண்டு. எல்லாப் பெருமைகளுக்கும் தான்தான் காரணம் என்று வாக், தன் பெருமையைத் தானே விளக்கிச்சொல்லும் அந்த சூக்தம் சக்தி உபாசகர்க்கு மந்திரமாய்த் திகழ்கிறது. வாக் தெய்வத்தைச் ‘ சிந்தாதேவி ’ என்பர் தமிழர்.

எனவே, சக்தி வழிபாடு ரிக்வேதத்துக்குப் புதியதோ புறம்பானதோ அல்ல. இது வேதகாலத்துக்கு முற்பட்டதாக இருக்கலாம். அனாரியரது பழக்கமாகவும் இருக்கலாம். வேத ரிஷிகள் ஏற்கனவே நடைமுறையில் இருந்த வழிபாடுகளை ஏற்றுக் கொண்டனர் என்று கருதுவதிலே தவறு இல்லை. இது வேத விரோதமானது அல்ல.

கேன உபநிடதம் உமையின் துணையால் இந்திரன் பிரமத்தை அறிந்தான் என்று பேசுகிறது. ஒருகாலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது. பரம்பொருளின் அருளால் அப்போரிலே தேவர்கள் வெற்றிபெற்றார்கள். ஆனால், வெற்றி வெறியில் அவர்கள் பரம்பொருளை மறந்தார்கள். அவர்களுடைய அறியாமையைப்போக்க, அவர்கள் முன்னே யட்ச வடிவில் பரம்பொருள் தோன்றியது. இது யார் என்று அறிய அதனிடம் அக்கினியைத் தேவர்கள் அனுப்பினார்கள். நீ யார் என்று பரம்பொருள் கேட்கவே, அக்கினி தன் பிரதாபத்தை எடுத்துப் பேசினான். ஒரு புல்லைப் பூமியிலே போட்டு, இதை எரி என்று பரம்பொருள் கூறியது. அதை எரிக்க அக்கினியால் முடியவில்லை. பின் வாயுவும் முயன்றுபார்த்தது. அதனாலும் அப்புல்லை அசைக்க முடியவில்லை. இந்திரன் யட்சனுடைய தத்துவத்தை அறிய முனைந்தான். அப்போது யட்சன் உருவம் மறையவே, வானத்தில் அழகே வடிவெடுத்தாற்போன்ற பெண் ஒருத்தி தோன்றினாள். அவள்தான் இமவானின் மகளாகிய உமை. அவளிடம் இந்திரன் அந்த யட்சன் யார் என்று வினவினான். அதுதான் பரம்பொருள் என்று



[illegible]

[illegible]


சாக்த தந்திரங்கள் :

[illegible]

[illegible]

[illegible]

[illegible]



உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில்

ஸ்ரீ அபிராமி

அவள் சொன்னுள். இங்கே உமை ஞானத்தின் உருவகம் எனினும், பின்வந்த நூல்களிலே அவள் சிவபெருமான் துணைவியாகவே தோன்றுகிருள். வாஜசனேய சம்கிதையில் அவள் உருத்திரன் சகோதரியாகச் சொல்லப்பட்டிருக்கிருள்.

ஸ்ரீகண்டரும் பட்ட பாஸ்கரரும் ஓம் என்ற பிரணவத்தினின்றும் உமா என்ற சொல் பிறந்தது என்பர். மேலும், துர்க்கை மந்திரம், விஷ்ணு மந்திரங்களினும் உயர்ந்தது என்று புராணங்கள் முழங்குகின்றன. இவற்ருல் சக்தி வழிபாடு வைதிக மானதுதான் என்பது நிச்சயமாகிறது.

சாக்த தந்திரங்கள் :

சக்தி வழிபாட்டை விளக்கியும் விவரித்தும் கி. பி. 4-ஆம் நூற்ருண்டின் பின்னர் பல தந்திர நூல்கள் எழுந்தன. நாளடைவிலே இவ்வழிபாடு எங்கும் பரவி வந்ததற்கு ஏற்ப, தந்திரங்களும் பலவாயின. சௌந்தரிய லகரியிலே ஸ்ரீ சங்கரர் தந்திர நூல்களின் எண்ணிக்கை 64 என்ருர். இவற்றுக்கும் சிவபெருமானே ஆசிரியர் என்பது அவர் கருத்து.

வேதவேள்வி அருகி, புதிய புதிய வழிபாட்டு முறைகள் தோன்றியிருப்பதைத் தான் இவை தெரிவிக்கின்றன. இவை வேதத்துக்கு விரோதமானவை அல்ல ; இவற்ருல் வேதம் பூரணமாகிறது. யோகஞான நெறிகளுக்குத் தகுதி அற்றவர்களும், தாழ்ந்த தரத்திலே உள்ள பாமரர்களும் இவற்ருல் பயன் அடைந்தனர். வேதத்தின் கர்மகாண்டம் விதித்த சடங்குகளின் வளர்ச்சியைத் தான் பெரும்பாலான தந்திர நூல்களிற் காண்கிருேம். சியாமள ரகசியம், சாரதிலகம், காளிகாதந்திரம், குல சூடாமணி, குலார்ணவம் முதலியவை சாக்தருடைய தந்திரங்களிற் சில. இவற்றைத் தழுவியவர் வங்காளம் அதைச் சார்ந்த நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களிலே வாம சாரிகள் - இடங்கையர், தட்சிணுசாரிகள் - வலங்கையர் என்ற இரு பிரிவினர் உண்டு.

இடங்கையர் :

வாமாசாரத்திலே துர்க்கை காளி லட்சுமி என்பவர்களைச் சக்தி சொரூபமாகக் கருதி, மது, மச்சம், மாமிசம், மாது, முத்திரை என்னும் பஞ்சமகாரங்களைக் கொண்டு பூசிப்பர். இவர்களிலே சிலர் நள்ளிரவிலே இடுகாட்டுக்குப்போய்ப் புதைத்திருக்கும் பிரேதங்களைத் தோண்டி எடுத்து, அதனை மது மாமிசங்களால் பூசிப்பர். சிலர் பெண்களை நிறுத்திப் பூசிப்பர். இதைப் பூரணபிட்சை என்பர். வாமமார்க்கத்தின் ஐந்து மகாரங்கள் தவறுதலாய்ப் பொருள் செய்யப்பட்டு, சிற்சில இடங்களிலே இழி நிலையிலே அனுட்டிக்கப்பட்டு வருவது வருந்தத்தக்கதே. பால் உணர்ச்சியை ஒழிப்பதற்கு மாருக மாது, காம உணர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிருள். யோக நெறியில் சித்சந்திர மண்டலத்தினின்றும் ஒழுகும் அமுததாரைதான் மது. கள் அல்ல,

பட்டினி விரதங்களால் உடல் தினவை ஒடுக்குவதற்குத்தான் மாமிசம் அறிகுறியே அன்றி, உண்பதற்கு அல்ல. மச்சமும் முத்திரையும் முறையே இடகலை பிங்கலை நாடிகளைக் குறிப்பன. இந்த வாமாசார வழிபாட்டால் உலகில் உள்ள இன்பங்கள் யாவும் கிடைப்பதோடு முக்தியாம் பேரின்பமும் கிடைக்கிறது என்பது சாக்தர் நம்பிக்கை; இவர்களைக் கௌலிகள் என்பர்.

வலங்கையர் :

இழிநிலை எய்திய வாமமார்க்கத்தை ஸ்ரீ சங்கரர் கண்டித்திருக்கிறார். அவர் காலம் முதல் தட்சிணாசாரிகள் தலை எடுத்தனர். இவர்கள் ஸ்ரீ வித்யோபாசகர் வேத நெறியில் வழுவாது தகுந்த குருவை அடைந்து, ஸ்ரீ வித்தை முதலான பத்துவித மகா வித்தை மந்திரங்கொண்டு உபாசனைமுறை வழுவாது பூசைசெய்து, பராபட்டாரிகை என்ற பராசக்தியைப் பிரசன்னமாகச் செய்வர். இந்த வைதிக சாக்தோபாசனை தென்னாட்டில் நடந்து வருகிறது. இதற்கு அடிப்படை சௌந்தரியலகரி. இதற்கு மூலம் கௌடபாதருடைய சுபகோதயமும், சாக்த தந்திரங்களும் உபநிடதங்களுமே.

அத்வைத மதத்தை நிறுவி, நிர்க்குண பிரமத்தைத் தெரிவித்து, ஜீவப்பிர்ம்ம ஐக்கியத்தை மெய்ப்பித்த ஸ்ரீசங்கரர், பஜகோவிந்தம் பாடினாற்போலவே அம்பிகையைத் துதித்து சௌந்தரியலகரி பாடினார். இதிலே மந்திர நூலைத் தழுவிய யந்திர தந்திரப் பிரயோகங்கள் உண்டு, தேவியின் அழகைக் காவியரசத்துடன் வருணிப்பதால் சௌந்தரியலகரி எனப்படுகிறது. இதிலே ஒரு சுலோகம் பின்வருவது ; ‘ அவித்தையிலே சூழ்ந்திருப்பவர்களின் அந்தகாரத்தைப் போக்கும் ஞான சூரியன் நீ. மூடர்களுக்காகச் சைதன்யப் பூக்களின் தேன் பாயும் நதி நீ. தரித்திரர்களுக்குச் சிந்தாமணி நீ. பிறவிக்கடலிலே சூழ்ந்தவர்க்கு ஆதிவராகமூர்த்தியின் தந்தமும் நீதான் ’. இந்நூலுக்குச் செய்யுள் நடையில் அமைந்த பழைய தமிழ் மொழிபெயர்ப்பும் உண்டு. அதிலே ஒரு பாட்டு :-

“ உனதுசரற் காலமதி அனைய மெய்யும்
உடல்குழைந்த பிறைச்சடையும் கரங்கள் நான்கும்
அனவரதம் உறும்அபய வரத ஞானம்
அருட்பளிங்கு வடமோருபுத் தகமும் ஆக
நினைசிலர் முன் வழுத்திலர், பின் வணங்கார், எங்ஙன்
நிறைந்தபசுந் தேனும்சுடு பாலும் தூய
கனியும்என மதுரம்விளைந்து ஒழுகு பாடல்
கவிதை போழிவது?கயிலைக் கடவுள் வாழ்வே. ”

ஸ்ரீவித்தை :

ஸ்ரீ சங்கரர் தாபித்த ‘ சண்மதங் ’களிலே தேவி வழிபாடும் ஒன்று. ஸ்ரீவித்தையை இவர் பிரகாசப்படுத்தினார். இவரும் இவர்வழிவந்தோரும் நிறுவிய

அத்வைத மடங்களிலே தேவியை ஸ்ரீ சக்ரத்திலே எழுந்தருளச்செய்து, இன்றளவும் வழிபட்டுவருகின்றனர். சிருங்கேரியில் ஸ்ரீ சங்கரர் நிறுவிய மடாலயத்திலே ஸ்ரீசக்ரத்தில் சாரதாதேவியைப் பிரதிட்டை செய்தார். இதைச் சாரதா பீடம் என்பர். 'சர்வவேதாந்தார்த்த பிரகாசினி பிரமவித்யா சாரதா' என்று சொல்லப்படுவதால் பிரமவித்தையின் வேறல்ல ஸ்ரீவித்தை என்பது புலனுகிறது. முக்கியமான சிவாலயங் களிலும் ஸ்ரீ சக்ரம் தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றிலே முதன்மையானது காஞ்சியில் காமாட்சிகோயில். இதைக் காமகோடி பீடம் என்பர். சிதம்பரம் சிதாகாச ரகசியத் திலே சம்மேளனசக்ரம். அதாவது, சிவசக்ரமும் ஸ்ரீ சக்ரமும் பூசிக்கப்படுகிறது. திருக்குற்ருலத்திலே ஸ்ரீ சக்ரபீடம் உண்டு. ஆவுடையார்கோயிலிலே ஸ்ரீ சக்ரபீடத்தின் மீது தேவியின் பாதுகை வழிபடப்படுகிறது. திருவானைக்காவலில் அகிலாண்டேசுவரி யின் காதணி ஸ்ரீ சக்ரவடிவில் அமைந்தது. இந்தப் பட்டியலை இப்படியே பெருக்கிக் கொண்டு போகலாம்.

ஸ்ரீ சங்கரருக்குப் பிறகு ஸ்ரீவித்தையை விளக்கம் செய்த ஞானிகளிலே வித்தியாரணியரும் நீலகண்டரும் சிறந்தோர் ஆவர். 18 ஆம் நூற்ருண்டிலே பாஸ்கரராயர் இயற்றிய (லளிதா சகஸ்ரநாம பாஷ்யம் முதலிய) மூன்று நூல்கள் ஸ்ரீவித்தையின் 'பிரஸ்தானத்திரயம்' என்று சொல்லப்படுகிறது. சௌந்தரிய லகரிக்கு லட்சுமிதரர் உரை எழுதி ஸ்ரீவித்தையை மேலும் தெளிவுபடுத்தினர். காஞ்சி காமாட்சியை மூக கவி துதித்த ஐந்நூறு சுலோகங்களும் பக்திச் சுவை மலிந்தவை; கவிப் பண்பும் வாய்ந்தவை. இதைச் செம்பாகமாகத் தமிழ்ச் செய்யுட்களிலே கோவை ஸ்ரீ நடேசக் கவுண்டர் அவர்கள் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். தமிழ்மொழி யிலே தேவியின் புகழ் பாடி எழுந்துள்ள மாலைகள் பதிகங்கள் பல. இவற்றுள் அபிராமி அந்தாதி சிறந்தது.

லளிதா :

ஸ்ரீவித்தையின் அதிதேவதை லளிதா மகா திரிபுரசுந்தரி. சோபை, விலாசம் இனிமை, பெருமிதம், தைரியம், ஒளி, தகதகப்பு, ஔதாரியம் என்ற எண்குணத்தாள் ஆகிய லளிதா 'துணையும் தொழும் தெய்வமும் பெற்றதாயுமாய்' இருக்கின்ருள். சிந்துரம் போலச் சிவந்த மேனி, புன்முறுவல் பூத்த முகம், கருணை கலை எறியும் கண்கள். இப்படி அவள் திருமேனி வருணிக்கப்பட்டுள்ளது.

"ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை அங்கையிற் பாசாங்குசமும் கருப்புவில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கிலையே"

என்கிருர் அபிராமிபட்டர். ஆசையின் வடிவமான பாசத்தையும், கோபத்தின் அறிகுறி யான அங்குசத்தையும், மனத்தின் சின்னமான கருப்பு வில்லையும், பஞ்சதன்மாத்திரை

ளாகிய மலரம்புகளையும் நன்கைகளில் கொண்டிருக்கிருள் என்று லளிதா சகஸ்ர நாமம் கூறுகிறது. மிருந்த வைபவத்தோடும் பலகோடி சக்திகணங்களோடும் அனுக்கிரக மூர்த்தியாய் இவள் எழுந்தருளியிருக்கிருள் என்பது கோட்பாடு. காஷ்மீரத்தில் ஸ்ரீபுரமும் தமிழ்நாட்டிலே காஞ்சிபுரமும் லளிதோபாசனையின் முக்கிய தலங்கள் என்று லளிதோபாக்கியானம் கூறுகிறது.

ஸ்ரீ சக்ரம் :

லளிதையின் முக்கிய உறைவிடம் மேரு. இதை ஸ்ரீ சக்ரம் என்பர். (சிவன் சக்தி இவர்களுடைய சரீரம்தான் ஸ்ரீ சக்ரம் என்று மந்திர நூல்கள் கூறும்) பூமி, கைலாசம், மேரு என்ற பேதமுள்ள ஸ்ரீ சக்கரத்திலே லளிதையை ஆராதிப்பவர் பலர். லளிதோபாக்கியானத்திலே ஸ்ரீ சக்ர வழிபாடுதான் காணப்படுகிறது. லளிதையின் உபாசனை தக்கார்க்குத் தக்கபடி மந்திர ரூபமாயும் யந்திர ரூபமாயும் சுலோகம், மாலை, கவசம் என்று பலவிதமாகக் காணப்படுகிறது. திரிபுரசங்காரஞ் செய்த சிவபிரான் தேவியாய் இருப்பதால், சபலம் சஞ்சலம் வாய்ந்த மனதுடையார் ஒருநாளும் இவளை உபாசிக்க முடியாது.

இவளுடைய சொரூபத்தையும் தத்துவத்தையும் போதிக்கும் மந்திரங்கள் பல. இவற்றுள் பதினைந்து எழுத்துள்ள பஞ்சதசாட்சரியும், பதினறு எழுத்துள்ள சோடசாட்சரியும் முக்கியமானவை. குருமூலம் உபதேசம் பெற்று ஏதேனும் ஒரு மந்திரத்தை ஒருமை மனத்துடன் செபிப்பவர், மூலாதாரத்திலே ஒடுங்கியிருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, தம் மனக்கண்ணிலே தேவியைத் தரிசிப்பர். இடைவிடாத செபத்தால் அந்த சக்தி மேல்நோக்கிக் கிளம்பி, சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி என்ற கேந்திரங்களைக் கடந்து, ஆக்ஞை என்ற இடத்தைச் சேர்ந்து ஓர் அனல் கொழுந்து வடிவிலே வெளிப்படுகிறது. பின் சகஸ்ராரத்திலே தோன்றும் அருட் சோதியினின்றும் பெறும் இன்பத்தை எப்போதும் துய்ப்பர். இதற்கு விளக்கமாகச் சில கோயில்கள் உண்டு. திருவாரூர் மூலாதாரம், காஞ்சி நாபி, சிதம்பரம் அநாகதம், மதுரை துவாதசாந்தம், ஆவுடையார்கோயில் மகாசோடசாந்தம்; இங்கே ஆத்மநாத சிவனும் யோகாம்பாளும் ஆயிரம் இதழ் சகஸ்ராரத்திலே தியானிக்கப்படுகின்றனர்.

மூர்த்த பேதங்கள் :

மகாபாரதத்திலே இரண்டிடங்களில் துர்க்கையின் பிரார்த்தனை காணப்படுகிறது. விராடன்நகரிலே பிரவேசித்தபோது யுதிட்டிரன் துர்க்கையைத் துதித்தான். தேவகிக்கும் வசுதேவனுக்கும் மகனுகக் கிருஷ்ணன் பிறந்தான்; யசோதைக்கும் நந்தகோபனுக்கும் மகளாக வைஷ்ணவி பிறந்தாள்; பின் விந்தியமலையிலே குடி புகுந்தாள். சிவபிரான்தேவி மட்டும் துர்க்கை அல்ல; பிரம விஷ்ணுக்களின் தேவியரும் துர்க்கைகளே. ஆதலின் வைஷ்ணவியை, துர்க்கை, காளி, மாகாளி, விந்தியா

வாசனி என்று யுதிட்டிரன் போற்றினன். பீஷ்ம பர்வத்திலே கிருஷ்ணன் தூண்டு தலால் அர்ச்சுனன் துர்க்கையைப் பிரார்த்தித்தான். இப் பிரார்த்தனையிலே அவள் உமா, சங்கரி, சரசுவதி, சாவித்திரி என்று புகழப்படுகிருள் ; கந்தனுக்குத் தாய் என்றும் சொல்லப்படுகிருள். ஒரே சக்திதான் பல வடிவங்களிலே தோன்றுகிருள் என்பது இவ்விரு துதி மொழிகளால் நாம் அறிகிறோம். இம் மூர்த்தி பேதங்களிலே துர்க்கை லட்சுமி, சரசுவதி முக்கியமானவை. சண்டி, சாமுண்டி, கௌசிகி போன்ற பேதங்கள் வெறும் பெயர்கள் மட்டும் அல்ல ; வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே நிகழ்ந்த சக்தியின் அவதாரங்கள்தான் அவை. மகிஷனை வதைக்க சண்டி ஆனுள் ; சண்டன் முண்டனை வதைக்கச் சாமுண்டி ஆனுள். சும்பன் நிசும்பனை வதைக்க கௌசிகி ஆனுள். பண்டனை வதைக்க யாககுண்டத்திினின்றும் தோன்றியவள்தான் லளிதையும்.

காளி :

லளிதையின் வேருனவள் காளி; காளி பயங்கரி; லளிதை சுந்தரி. காளி தத்துவம் அற்புதமானது. கோடானுகோடி யுகங்கள் கற்பங்கள் அடங்கிய காலத் தையே எடுத்து விழுங்கி அதாவது, காலங்கடந்து நிற்பவள்; ஆதலின், தேவியை வடமொழியில் காலீ, காலிகா என்பர்; தமிழிலே காளி என்பர்.

"காலமாம் வனத்தில் அண்ட கோளமாம் மரத்தின்மீது
காளிசக்தி என்ற பேயர்கோண்டு — ரீங்
கார மிட்டுலவும் ஒரு வண்டு"

என்று தொடங்கி, மகாகாளியின் புகழைப் பாரதியார் பாடியிருக்கிருர். எங்கும் நீக்கமற நிறைந்தவள் என்பதால், நீலநிறத்தவளாக அவள் கற்பனை செய்யப் பட்டிருக்கிருள். விரிந்த வானும் பரந்த கடலும் நீலமாகவே தோன்றுகின்றன இல்லையா? 'மேலுமாகிக் கீழுமாகி, வேருன திசையுமாகி விண்ணும் மண்ணும்' ஆன இயற்கைத் தாயை மூடிமறைப்பதற்கு ஒன்றும் இல்லை; ஆதலின் அவள் நிர்வாணமாய் நிற்கிருள், அவளை 'முண்டமாலினி' என்பர்; அதாவது, துண்டிக்கப்பட்ட தலைகளை மாலையாகக் கோத்து அணிந்துகொண்டிருக்கிருள். தன்னிடமிருந்து தோன்றும் உயிர்கள் தன்னிடமே ஒடுங்குதலை உணர்த்துகிறது இத்தலைமாலை. இம்மாலையில் உள்ள பல்வேறு வயதுடைய தலைகள், பிறந்தவர் எந்த நாளும் இறப்பர் என்பதற்கு விளக்கம். மக்கள் செய்யும் வினை அனைத்திற்கும் சக்தியாய் இருப்பவள் அவள்தான் என்பதற்கு அடையாளமாக வெட்டிய கரங்களைச் சரமாகத் தொடுத்து அரையிலே அவள் கட்டியிருக்கிருள். அவள் சங்காரமூர்த்தி என்பதை நாவிலிருந்து கொட்டும் ரத்தம் தெரிவிக்கிறது. கணந்தோறும் அவள் ஜீவராசிகளை வதைக்கிருள், வெட்டுகிருள்; மாய்க்கிருள். உலகோர்சிந்தும் கண்ணீரை அவள் பொருட் படுத்துவதில்லை. மக்கள் மடிகின்றனர், நகரங்கள் அழிகின்றன; நாடுகள் காடாகின்றன. அவள் ஹூம் என்ருல் அண்டங்கள் தவிடு பொடி. இந்த

அழிவைக் கண்டு அஞ்சுபவர் அவளை வழிபட உரியார் அல்லர். சுயநலப் பற்றும், ஆணவத்தடிப்பும், பேராசையும் வாய்ந்தவர்க்கு அவள் பயங்கரிதான். வழிதவறியவன் அவள் வாளினின்றும் தப்பமுடியாது. நல்வழியில் நடப்பவன் அவளைக் கண்டு அஞ்சுவதில்லை. உயிரைத் திரணமாக மதிக்கும் ஆன்மத் தியாகி தான் அவளை வணங்கும் தகுதிவாய்ந்தவன். உயர்ந்த கொள்கைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, எவன் பெருமிதத்துடன் மாய்கிறானோ அவனுக்குத்தான் அன்னை அருள் செய்கிறாள். மரணபயம் அவனுக்கு இல்லை. இத்தகைய ஆன்மவீரர் மலிந் திருந்ததால் முற்காலத்திலே நம் நாடு பல துறைகளிலும் முன்னேறி இருந்தது.

பண்டைய தமிழ் வீரர் செய்த ஆத்மபரித்தியாகங்களைக் கலிங்கத்துப்பரணி புகழ்கிறது. இதன் காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு. தமது உடலுறுப்புக்களையும், தலைகளையும் தாமே அறுத்துப் பலிபீடத்திலே நேர்த்திக்கடனாக வைத்து இவர்கள் காளியை வழிபட்டார்கள். கலிங்கம், கடாரம், ஜாவகம் போன்ற தொலைதூர நாடுகளை இவர்கள் வென்றதில் வியப்பில்லை. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டியது இவர் களுக்கு எம்மாத்திரம்? காளி கோயிலிலே,

"சலியாத தனி ஆண்மைத் தறுகண் வீரர்,
'தருக வரம்,' வரத்தினுக்குத் தக்கதாகப்
பலியாக உறுப்பரிந்து தரும்' என்று
பரவும்ஒலி கடல்ஒலிபோல் பரவுமாலோ
அடிக் கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அணங்கின் கைக் கொடுப்பராலோ
கொடுத்த சிரம் கொற்றவையைப் பரவுமாலோ
குறையுடலம் கும்பிட்டு நிற்குமாலோ",

என்று சயங்கொண்டார் பாடுகிறார். இதுவெறும் கற்பனை அல்ல. வீரர்களும், தேவி உபாசகர்களும் தலைப்பலி தந்து தமது பிரார்த்தனைகளைச் செலுத்திவந்த பெருஞ் செயலை மகாபலிபுரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் உள்ள பல்லவச் சிற்பங்கள் மெய்ப்பிக்கின்றன.

கம்பவர்மன் ஆட்சியில் அமைந்த பத்தாம் நூற்றாண்டு சாசனம் ஒன்றுண்டு. வீரன் ஒருவன் தன் தலையை ஒரே வாள்வீச்சில் அறுத்து, தேவியின் பலிபீடத்திலே அதைத் தன் கையாலே வைத்தமாதிரி சிலை ஒன்று கிடைத்திருக்கிறது. இவ்வாறு பலி இட்ட அருஞ்செயலைப் பாராட்டி, ஊரார் அமைத்த அறப்புறம் அச்சிலையிலே பொறிக் கப்பட்டுள்ளது. 'படாரிக்குக் குறைத்தலை அறுத்துப், பிடலிகைமேல் வைத்தானுக்கு ஊரார் வைத்த பரிசாவது' என்று அச்சாசனம் தொடங்குகிறது. இவ்விரதம் தேவிக்குப் பரணிநாளிலே கொண்டாடப்பட்டது. இப்பரணி நோன்பை மகளிரும் நோற்றுவந்தனர். இன்னான் மனைவியும் இன்னான் மகளுமான இவள் 'பரணி

நோற்றநற் இது' என்று பொறிக்கப்பெற்றுள்ள கற்றூண்கள் திருக்கோவலூர்ப் பக்கம் காணப்படுகின்றன. இவை கி. பி. 9, 10 ஆம் நூற்றுண்டுக்கு உரியவை.

கி. பி. 7 ஆம் நூற்றுண்டிலே மகேந்திரவர்மன் சிங்கவரத்தில் குடைந்துள்ள குகைக்கோயிற் சுவரிலே புடைப்புச் சிற்பமாக மகிஷாசுரமர்த்தனி விளங்குகிருள். இதன் சிறப்பு என்னவென்ருல், பிற சிற்பங்களிற்போல் இல்லாது, தேவி வலதுகாலை மட்டும் எருமைத் தலைமேல் வைத்து, இடதுகாலைத் தரையிலே ஊன்றி, சங்குசக்கரங் களைத் தாங்கி, பக்கவாட்டிலே சற்று சாய்ந்திருப்பதுதான். இதன் வலதுபுறத்திலே ஒரு வீரன் மண்டியிட்டு, வலதுகையின் வாள்கொண்டு, தனது இடதுகால் தொடை யைத் துண்டிக்கிருன். எதிரிலே பூசாரி மந்திரங்களைச் செபித்துக்கொண்டிருக்கிருன்.

காவிரிப்பூம்பட்டினத்துச் சுடுகாட்டில் இருந்த காளிகோயிலைச் சுற்றிலும், உயிர்க்கடன் கொடுத்தோரது தலைகள் தொங்குகின்ற மரங்கள் வளர்ந்திருந்ததை மணிமேகலை குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரத்திலே வேடர்கள் காளியை எப்படி வழிபட்டனர் என்பதை இளங்கோ அடிகள் விவரமாகச் சொல்லியிருக்கிருர். நோய் வாய்ப்பட்டு விளியாத வீரரது பழங்குடியிலே ஒரு கன்னிப் பெண்ணைத் தேர்ந் தெடுத்து, அவளுக்குக் கொற்றவையின் கோலம் செய்விக்கிருர்கள். வேண்டும் வரிசைகள் நல்கி அவளை மேள தாளத்துடன் காளி கோயிலுக்கு அழைத்துச் செல்லு கிருர்கள். பலிபீடத்தைத் தொழுது துர்க்கையை 'அமரி, குமரி, கவுரி, சமரி' என்று அர்ச்சிக்கிருர்கள். 'பிறை சூடியவளே, முக்கண்ணி, நீலகண்டி' என்று போற்று கிருர்கள். 'யானைத்தோல் போர்த்து, புலித்தோலை அரையிலே கட்டி, எருமைத்தலைமீது நின்ருய். இது என்ன மாயமோ? உன்னைத் தேவர்கள் வணங்குகின்றனர். வேதங் களுக்கும் அப்பாற்பட்ட மறைபொருள் நீ. வளைக்கையில் வாள் ஏந்தி, நீ, மகிஷாசுரனை வதைத்தாய், மும் மூர்த்திகளின் மனக்கமலத்திலே சோதி விளக்காய் நிற்பவள் அல்லவா நீ. உன் திருவடிகளை வணங்குகிருேம். நாங்கள் செலுத்தும் கடன் இதோ எங்கள் கழுத்திலிருந்து சொரியும் இரத்தமே. இதை ஏற்றுக்கொள், சங்கரி! அந்தரி! என்று துதித்து வேடர்கள் குருதிப்பலி (அவிப்பலி) கொடுக்கின்றனர். இப்படி வழிபடும் வேடர் குலமே சிறந்த குலமாம்!

இளங்கோ காலத்திலேயே தேவியைப் பற்றிய புராண கதைகள் (தேவி மான்மியம், தேவி பாகவதம்) வளர்ந்து பூர்த்தியாகிவிட்டன. இக் கதைகளில் தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கை உறுதியானது. இக் காலப் பல்லவ பாண்டியர்களின் புகழ்ச்சின்னமான சிற்ப வடிவங்களிலே மிகவும் சிறந்தது மகிஷாசுரமர்த்தனி என்பதும் இங்கே கருதத் தகுந்தது.

நவராத்திரி :

ஆண்டுக்கு ஒருமுறை புரட்டாசிமாதம் வரும் நவராத்திரியிலே துர்க்கை பரிவாரங்களுடன் மண்ணுலகுக்கு எழுந்தருளுகிருள். இவ்வுலக வாழ்வு மாண்புற

சக்தியின் பல்வேறு பகுதிகள் எப்படித் தொழிற்படவேண்டும் என்பதை அவள் வருகை விளக்குகிறது. இதற்குப் பின்வருமாறு சுவாமி சித்பவானந்தா அவர்கள் விளக்கம் கூறியுள்ளார். நல்வாழ்வுக்கு ஆட்சி சிறந்தமைவது இன்றியமையாதது அல்லவா? திறமையாக அவள் செலுத்தும் ஆணையை மீறி யாரும் செல்லமுடியாது என்பதற்குத் துர்க்கை விளக்கமாம். அவளுடன் அவள் அம்சங்களான லட்சுமி, சரசுவதி, கணபதி, கார்த்திகேயனும் எழுந்தருளுகிறார்கள். லட்சுமி செல்வத்தைப் பெருக்குகிறாள். வெறும் செல்வம் மட்டும் இருந்தால் போதாது; கல்வி வேண்டும். அதற்கு சரசுவதி வருகிறாள். கல்வியறிவை ஞானமாக மலரச்செய்வதற்குக் கணபதி இருக்கிறார். வெறும் ஞானம் மூடமாகத்தான் இருக்கும்; அதைச் செயல்படுத்த முருகன் தோன்றுகிறான். நிறை வாழ்வுக்கு நல்லாட்சி, செல்வம், கல்வி, ஞானம், செயல்மட்டும் போதாது. துர்க்கை மகிஷாசுரமர்த்தனியாக எழுந்தருளுவதும் ஒரு பேருண்மையை விளக்கத்தான். மகிஷன் தமோகுணத்தின் பிரதிநிதி; துர்க்கை ரஜோகுணத்தின் சின்னம். அவள் தலைக்குமேல் வெள்ளைவெளேரென்று பிரகாசிக்கும் சதாசிவம் சத்வகுணத்தின் அறிகுறி. ரஜோகுணம் தமோகுணத்தை வெல்கிறது. பிறகு, அது ஆட்சியாகவும், செல்வமாகவும், கல்வியாகவும், ஞானமாகவும், செயலாகவும் வடிவெடுக்கிறது. இவை களை நல்வழியிலே பயன்படுத்தி, சத்துவம் என்னும் நடுநிலையின்பால் ஜீவனைச் செலுத்திப் பரம்பொருளிடம் சேர்ப்பதைத்தான் துர்க்கையின் சொரூபமும் நவராத்திரி யும் விளக்குகின்றன.

பதிஉண்டு நிதிஉண்டு, புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கம்உண்டு, எக்காலமும்
பவிசுஉண்டு தவிசுஉண்டு, திட்டாந்த மாக, யம
படர்எனும் திமிரம் அணுகாக்
கதிஉண்டு, ஞானமாம் கதிர்உண்டு சதிர்உண்டு
காயசித்திகளும் உண்டு,
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்றும் உண்டாகுமேல்,
நதிஉண்ட கடல்எனச் சமயத்தை உண்டபர
ஞானஆ னந்த ஒளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நான்எனும் அகந்தை தீர்த்துஎன்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூத னன்தங் கையே
வரைராசனுக்கு இருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

— தாயுமானவர்.

சிரிப்பு

பேராசிரியர். திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை M. A., B. L.,

சிரிப்பு ! எங்கே ? திருவாசகத்தில் ! திருவாசகத்திலா ? மாணிக்கவாசகர் அழுதடி அடைந்த அன்பர் ஆயிற்றே ! அதனால் என்ன ? அழுத வாய்தானே சிரிக்கும் ? 'அழுதால் உன்னைப் பெறலாமே' என்றல்லவோ பாடியிருக்கிறார் ? ஆம் ; சிரித்தாற் பெறலாம் சிவனை யென்றும் காட்டியிருக்கிறார். சிரித்தும் இருக்கிறார் ; சிரிக்கவைத்தும் இருக்கிறார்.

இந்தச் சிரிப்பும் அழுகையும் உலகியல் நிலையிலும் உண்டு. அருளியல் நிலையிலும் உண்டு. உலகியல் நிலையில் சிரிப்பும் அழுகையும் அளவுக்கு மீறினால் துன்பம் தரும். அருளியல் நிலையிலோ எல்லைகடந்தாலும் சிரிப்பும், அழுகையும் ஆன்ம ஈடேற்றமே உண்டாக்கும். உலகியல் சிரிப்பும், அழுகையும் உடற்கூற்று நிலையிலும் பூரிப்பையும், இளைப்பையும் உண்டாக்கும். ஆனால் அருளியலில் பசி பிணியற்ற ஒளிகொடுக்கும் இந்த உடலுக்கு. உலகியல், அருளியல் ஆகிய இவ் விரண்டிற்கும் இடையில் அநுபவத்தில் வேற்றுமை இருக்கிறது. இதனை அறிந்து கண்ட மேலோர் நமக்கு வழிகாட்டிகளாக இன்றும் விளங்குகின்றார்கள். அவர் களுடைய அநுபவ வாக்குகளே நமது அருள் நூல்கள். அவர்கள் கண்ட வழி அவற் றிலே நமக்குத் தெளிவாக விளங்கக்கூடும். நமது கயிலைக் குருமணி அவர்கள் அடிக்கடி இக் கருத்துப்பட உரைத்தருள்வதுண்டு. இந்த எண்ணத்தின் விளைவே இக் கட்டுரை. திருவாசகம் ஒன்பான் சுவையும் ஒருங்கே ஒளிரும் ஓர் உயர் பொற்பேழை. அதில் நகைச்சுவையும் நலம்பெறத் திகழ்கிறது. சிலவற்றைக்காண்போம்.

சர்க்கஸ் என்று சொல்லப்படும் உடல்வலிப் பயிற்சிக்களியாட்டங்களில் பல காட்சிகள் காட்டப்படும். வலியவன் ஒருவன் வந்து ஒரு பெரிய பாருங்கல்லை மார்பில் சுமந்துகொள்வான். சம்மட்டிகொண்டு அதனை அடிப்பார்கள். அவன் அதைத் தாங்கிக்கொள்வான். பிறகு தானே அக்கல்லைக் கீழே தள்ளிவிட்டுப் போவான். அதன்பின் ஒரு கோமாளி வருவான். அவன் மிகவும் குள்ளமாய் மூன்றடிதான் இருப்பான். அவன் கீழே படுத்துக்கொண்டதும், ஒரு பெரிய பளுவை நாலைந்துபேர் கூடித் தூக்கமாட்டாமல் தூக்கி அவன் மார்பில் வைப்பார்கள். அதை அவன் உடனே ஒரு கையால் தட்டிவிட்டு எழுந்து அதிகம் வருந்தியவன்போல் நடித்து வேர்வையைத் துடைத்துவிட்டு விசிறியால் விசிக்கொள்வான். அந்தப் பெரிய பளுவான பொருள் வெறும் அட்டைப் பெட்டியாக இருக்கும். இந்தக் கோமாளிக் கூத்தைக் கண்டு எல்லாரும் கைகொட்டிச் சிரிப்பார்கள். இதுபோன்றதுதான் நாம் ஆண்டவனுக்குச் செய்யும் பத்தித் திறமையும் என்கிறார் மாணிக்கவாசகர்.

உலகப் பற்றுக்களை அறவே விடுத்த மெய்யன்புடைய அடியார்களே ஆண்டவனின் அருளின்பத்தைப் பெறுதற்கு உரியார்கள். வெறும் ஐம்புல நுகர்ச்சியிலே ஈடுபட்டுச் சிற்றின்பத்திலே கிடந்து உழன்று, உடலை வளர்த்தற்கு நடலைவாழ்வைக் கொண்டு திரியும் ஒருவன் தன்னைச் சிவனடியான் என்றும், தன்னைச் சிவன் ஆண்டருளினுன் என்றும் சொன்னுல், அட்டைப் பெட்டியை வருந்தித் தூக்கும் கோமாளியைக் கண்டு எல்லாரும் சிரிப்பதுபோல், இதற்குச் சிரித்துத் தொலைக்கவேண்டியதைத்தவிர வேறு என்ன இருக்கிறது? என்று பாடுகிருர் மாணிக்கவாசகர் :-

"தேனைப் பாலைக் கன்னலின் தெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை உம்ப ரானை வம்பனேன்
நானின் அடியேன் நீயென்னை ஆண்டா யென்றல் அடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந் தன்மை யாமென் தன்மையே."

இறைவனை அடைதற்குரிய தவச்செயலில் ஈடுபடாமல் உடலை ஓம்பி இவ்வுலகவாழ்க்கையில் பயன் அற்ற செயல்களை மேற்கொண்டு ஒழுகும் இயல்பினன் யான் என்பார், தம்மை 'வம்பனேன்' என்ருர். ஒரு வம்பன் தன்னைச் சிவனடியான் என்று சொன்னுல், அது தவச்செயல் இல்லாமையாகிய குற்றத்தோடு பொய்மை கூறிய குற்றமும் ஆம். அதன்மேலும், "நீ என்னை ஆண்டாய்" என்ருல், ஆளுதற்குரிய தகுதியைப் பகுத்து உணரும் ஆற்றல் இறைவனுக்கு இன்று என்னப் பொருள் பட்டுப் பெருங்குற்றமாகும். இதனையும் உணராது ஒரு போலி அடியான் தன் பேதைமையால் தன்னை அடியவன் என்றும், இறைவன் தன்னை ஆண்டுகொண்டான் என்றும் கூறினுல் இறைவன் சிரித்தேயருளலாம் என்று நகைச்சுவை தோன்றக் கூறினுர் திருவாதவூரர். எலும்பும் தோலுமாய் ஒட்டி உணங்கிப்போன கிழவன் ஒருவன் நெஞ்சை முன்னே துருத்திக்கொண்டு காலையும் கையையும் விசி நடந்துகொண்டு தன்னை மன்மதன் என்று கூறினுல் எவ்வளவு சிரிப்பு உண்டாகுமோ அவ்வளவு சிரிப்பு தகுதியில்லாத தானும் இறைவனுக்கு அடியான் என்று சொல்வதால் உண்டாகுமே என்று வருந்தி அஞ்சி இவ்வாறு பாடினுர் மாணிக்கவாசகர் என்பதை அறிதல் வேண்டும்.

இவ்வாறு இறைவனுக்குச் சிரிப்பை ஊட்டுவதோடு அமையாது, இறைவனைப் பிறரெல்லாம் சிரிக்கும்படியும் செய்துவிடுவதாக மணிவாசகர் பாடுகிருர் :-

"தாரகை போலுந் தலைத்தலை மாலைத் தழலரப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண் டாய்விடி லென்னைமிக்கார்
ஆரடி யானென்னின் உத்தர கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே."

இப்பாடலில் உள்ள நகைச்சுவையை உய்த்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும். ஒரு

பழம்பெருங் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன், கவனிப்பார் அற்றுக் கைவிடப் பட்டுக் கெட்டுத் திரிவானாகில், அது அந்தக் குடும்பத்தின் பெருமையும் மதிப்பும் கொண்ட தலைவனுக்கு மானக்கேட்டை விளைவிக்கும். அதிலும் அந்த உதவாக்கறை பெரியவர்களிடமெல்லாம் சென்று தன் குடும்ப மரபைத் தூற்றத்தொடங்கினால் அக்குடும்பத் தலைவனுக்குப் பெருத்த அவமானத்தை உண்டுபண்ணிவிடும். ஊரார் எல்லாரும் அக்குடும்பத் தலைவனை ஏளனமாகப் பேசிச் சிரிப்பார்கள். மற்றும் ஒரு வீட்டில் வேலை செய்யும் அடியவனுக்குத் தக்க உண்டி, உடை, உறையுள் முதலியன வழங்கப்பெருவிடின், அவன் அண்டை வீடுகளிலெல்லாம் சென்று கோள் சொல்லுவான். வீட்டு முதலாளியை எல்லாரும் கேலிசெய்வார்கள். சிரிப்புக்கு இட மாகும். இவ்வாறு வேலையாள் தூற்றுவதற்கு அஞ்சியாவது வீட்டு முதலாளி அவ் வேலையாளை நன்றாகப் பராமரித்து வருவான். இதுபோன்றதொரு நிலையைத் தாம் இறைவனுக்கு உண்டாக்கிவிடப்போவதாக நகைச்சுவை தோன்றப் பேசுகிறார் மாணிக்கவாசகர். இறைவன் தம்மைக் கைவிடக்கூடாது. கைவிட்டால் சிரிக்க வைத்து விடுவேன் என்கிறார். இதில் இன்னொரு நயம் என்னவென்றால், தம்மை உத்தரகோச மங்கைக்கரசின் அடியான் என்று சொல்லாமல், அரசின் சீரடியார்களுடைய அடியான் என்று சொல்லுகிறார். இதனால் உத்தரகோசமங்கையிலுள்ள இறைவனைச் சிரிக்கவைப்பதோடன்றி அவனுடைய சிறந்த அடியார் கூட்டம் முழுதையுமே சிரிக்க வைத்துவிடுவேன் என்கிறார். தன் அடியார் பெருமையைக் காக்கவேண்டியாவது இறைவன் விரைந்து தமக்குத் திருவருள் பாலிக்கவேண்டும் என்னும் கருத்தால், தன்னைவிடத் தன் சீரடியார்களுக்கு ஓர் இழுக்கு வந்துவிடக்கூடாது என்று இறைவன் முந்துவான் என்பது உட்கிடை. அதன்மேலும், மிக்காரிடத்தில் போய்ச் சொல்லி விடுவேன் என்று அவர் கூறுவது சிரிப்பைப் பல்கவைப்பதாகும். இறைவன் கைவிட்டால் தம் நிலை பிறரெல்லாம் இரங்கி நீ யார் என்று கேட்கும்படியாக இருக்கும் என்பதை ‘ என்னின் ’ என்பதால் தெரிவிக்கிறார்.

இவ்வளவு சொல்லியும் இறைவன் தம்மை ஆட்கொள்ளாது கைவிடுவதனால், ஏசத்தொடங்கிவிடுவேன் என்று எச்சரிக்கிறார் மாணிக்கவாசகர். என்ன சொல்லி ஏசுவாராம் தெரியுமா ? பித்தன் என்று சொல்லித் திட்டுவாராம். பித்தன் என்பதைப் பைத்தியக்காரன் அல்லது கோட்டிக்காரன் என்று நாம் சொல்லுவோம். பித்தன் செயல் என்ன ? அவன் உடுத்தக்கூடாததை உடுத்துவான் ; உண்ணக் கூடாததை உண்பான் ; போகக்கூடாத இடத்திற்குப் போவான் ; செய்யத்தகாதனவற்றைச் செய்வான். அதுபோல் சிவனும் புலித்தோலை ஆடையாகவும், யானைத் தோலைப் போர்வையாகவும் கொண்டவர். நஞ்சை உண்பவர், சுடுகாட்டில் உறைபவர். ஆட்கொள்ளத்தகாத சிறியரையும் குற்றங்களைந்து ஆட்கொள்ளுதல் அவர்க்கு இயல்பு. எனவே இறைவனைப் பிச்சன் பிச்சன் என்று பிச்சுவாருகிறார் மாணிக்க வாசகர் :—

" சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத் தொழும்பையும் ஈசர்க்கென்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண் டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் தோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சன் என்னையும் ஆளுடைப் பிச்சனென் றேசுவனே "

மற்றோரிடத்தில் " நாயேன் தனை யாண்ட பேதாய் " என்று இவர் இறைவனை விளித்தமையும் ஈண்டுக் கருதத்தகும். ஏசுவதுபோல் இறைவனை ஏத்தியிருப்பதை நாம் எளிதில் அறியலாம். யானை, புலியின் தோல்களை அணிவதால் முடிவிலாற்றலும், நஞ்சுண்பதால் பேரருளுடைமையும், எல்லாம் அழிந்த சுடுகாட்டில் தீயாடி நிற்பதால் முழுமுதற்றன்மையும் இறைவனுக்கு உள்ளன என்று புலப்படுத்தப்பட்டமை அறியற் பாலதாம்.

இதுபோன்று சுவையுடைய இன்னுமொரு பாடலையும் நாம் இங்குத் தெரிந்து கொள்ளலாம் :-

" உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண் டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரன் என்றென் றறைவன் பழிப்பினையே "

சில முரண்டு செய்யும் சிறு குழந்தைகள், தங்கள் விருப்பம் நிறைவேறாத நிலையில், பெற்றோர்களுடைய குறைகளைக்கூறித் திட்டுவதற்கு முற்படும். ஆனால் திட்டத் தெரியாமல் அவர்களுடைய பெருமைக் குணங்களையே முட்ட எடுத்து மொழிந்துகொண்டிருக்கும். அவ் வசைமாரியைக் கேட்டுப்பெற்றோர் இன்புறுவர். அதுபோல் மணிவாசகரும் இறைவனைப் பழிப்பதுபோலப் புகழ்ந்து போற்றியே முடிக்கிறார். " இறைவனே! இவ்வுலகச் சிற்றின்பத்திலே கிடந்து தடுமாறும் என்னை நீ காப்பாற்றவேண்டும். காக்காது விட்டால் நான் உன்பழிகளை எடுத்துக்கூறுவேன். நீ நஞ்சையுண்டு கருகிப்போன கழுத்தையுடையவன் என்றும், குணம் கெட்டவன் என்றும், தெய்வம் இல்லை; வெறும் மனிதனே என்றும்; அறிவு கெட்டவன் என்றும், பழைய பெரிய பரதேசி என்றும் பழிச்சொற்களால் தூற்றுவேன் " என்று பாடிப் போற்றுகிறார். இதனால் சுவை தோன்றத் தமிழ்மொழியை இனிது கையாண்டு நகையுண்டாகும்படிப் பலபொருள் தோன்றப்பாடுவதில் மணிவாசகர் மிகவும் வல்லவர் என்பது நன்கு தெளிவாகும். நஞ்சையுண்ட செய்தியால் சிவனுடைய பேரருளுடைமை யும் முடிவிலாற்றலுடைமையும் புலனாகின்றன. குணமிலி என்பது முக்குணங்களையும் கடந்தவன் என்றாகும். சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களும் பிரகிருதி மாயையினின்றும் தோன்றி உயிர்களின் இன்பத்துன்பங்கட்கும் விழைவு களுக்கும் ஏதுவாவனவாம். இவற்றால் இறைவன் பற்றப்படாதவன் என்பதைக் குணமிலி யென்பதால் கூறினார். மானை இடக்கையில் ஏந்தியவன் 'மானிடன்'; தாருகவனத்து முனிவர்கள் வேள்வியினின்றும் ஏவிய மானைப்பிடித்து இடதுகையில்

ஏந்தி நின்றார் சிவபெருமான். இது இறைவனுடைய ஒறுத்தல் தன்மையைக் குறிக்கிறது. 'தேய்மதியன்' என்பது, கலை குறைந்த சந்திரனைப் பாதுகாத்தற்பொருட்டுச் சிவனார் சடைமேல் தரித்துக்கொண்டார். இது இறைவனின் அருட்செயலை வலியுறுத்துகிறது. 'பழைதருமாபரன்' என்பது, பழைய பெரிய பரம்பொருளாவான் இறைவன் என்றாகும். அவன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாவதை யாரும் அறிவர். சிலேடை நயம்தோன்றப் பழிப்பதுபோல் புகழ்ந்து நகைச் சுவையுடன் மணிவாசகர் இப்பாடலைப் பாடியிருப்பது போற்றி யுணர்ந்து இன்புறற்பாலதாம். உண்மையில் இறைவனைப் பழித்துக் கூறுவது மணிவாசகரின் நோக்க மன்று ; சிரிப்பை விளைத்துச் சுவைபெறப்பாடுவதே அவர் நோக்கமாக இருந்தது என்பது எளிதிற் புலனாகும்.

உலகமே ஒரு சர்வ கலாசாலை போன்றது. கலாசாலைகளில் ஒரு சமயத்தில் ஒரு விஷயம்தான் கற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கும். யாத்திரையின் மூலமோ பல விஷயங்களை ஏககாலத்தில் அறிந்து கொள்ள வாய்ப்பு உண்டு. சர்வகலாசாலையில், படித்த பெரிய அறிவாளிகள் - பண்டிதர்கள் - இருந்து போதிப்பார்கள். ஆனால் யாத்திரையிலோ படிப்பறிவே இல்லாத பாமரரிலிருந்து பெரிய படித்த மேதாவிகள் பலரும் நமக்கு அறிவு கொளுத்திகளாக அமைந்து விளங்குகிறார்கள்.

— கயிலைக் குருமணி

திருமுறையில் மகளிர்

செந்தமிழ்ச்செல்வி,
புலவர். சி. ந. குழந்தையம்மாள், M. L. A.

தருமை ஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் கனகாபிஷேக விழா மலரில் திருமுறையில் மகளிர் என்ற தலைப்புப்பற்றி எழுதும் பேற்றுக்குப் பெருமிதம் கொள்கின்றேன்.

அடியவர்கள் ஆண்டவனைப் பல்வேறு பொருள்களால் அபிஷேகம் செய்து மகிழுமாறுபோல, மகாசந்நிதானத்தின் அடியவர்களும் சுவாமிகளுக்குக் கனகாபிஷேகம் செய்து மகிழ முற்பட்டது ஏற்றதாகும். இத்தகைய நெறியிலேதான் திருமுறைகளில் கண்ட மகளிர் பலரும் ஆண்டவனை அடியவர் வடிவிலே கண்டு ஆனந்த மேற்கொண்டார்கள். ஆண்டவனுக்காகத் தம்மை அர்ப்பணித்தார்கள். அடியவர்களுக்கு அமுது செய்வித்தார்கள். அறவழி நின்று துறவோரைப் போற்றினார்கள். அடியவர்களின் அன்புக்குகந்தமை செய்து அவர்கள் ஆசி பெற்று உய்யும் பேற்றினைப் பெற்றார்கள்.

இவ்வம்மையார்களில் தலைசிறந்தவர் காரைக்காலம்மையாராகிய புனிதவதியார். அவ்வம்மையாரைப் பற்றித் தமது திருமுறையில்,

> "நம்பரடி யாரணைந்தால் நல்லதிரு வமுதளித்துஞ்
> செம்பொன்னும் நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
> தம்பரிவி னுலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
> உம்பர்பிரான் திருவடிக்கீழ் உணர்வுமிக வொழுகுநாள்."

என்றார் சேக்கிழார் பெருமான்.

சிவநெறியே தவநெறியாகக் கொண்டொழுகும் தனதத்தனுக்குத் தவப் புதல்வியாகப் புனிதவதியார் தோன்றினார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பது போல, விதிவிடங்கன் திருநாமத்தைச் சிறுவீடு கட்டி விளையாடும் பருவத்திலேயே செபிக்க முற்பட்டார். இதனைச் சேக்கிழார்,

> "வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
> அண்டர்பிரான் திருவார்த்தை யணையவரு வனபயின்று."

எனச் சிறப்பித்துக் கூறினார். அறியாப்பருவத்திலேயே அம்மையார் அவிர்மதிசடையான் மேல் அன்புவைத்தொழுகினாரென்பதை, அம்மையாரியற்றிய அற்புதத்திருவந்தாதியில்

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்"

என அம்மையாரே தம் அருள்வாக்கால் கூறியிருப்பதால் அறியலாம்.

மணப்பருவம் வந்துற்ற அம்மையார்க்கு மணாளனை நாகையில் கண்டனர். முன்னோர்செய் பெருந்தவத்தால் மனைவியாக அடையும் பேறு பெற்றான் பரமதத்தன். அம்மையாரின் தந்தையார் தம் அரும்பெரும் புதல்வியைத் தம் அருகிலேயே இருக்க அவாவுற்ற காரணத்தால் அவர் நாகைக்குத் தம் புதல்வியை அனுப்பவில்லை. தம் பதியிலேயே தனித்து மனையறம் புரிய ஏற்பாடு செய்துவைத்தார். சிவபிரானின் செம்மைசேர் பெருமை தன்னைச் செந்தமிழ்ப் பாக்களால் பாடுவதே தம் செந்நெறி எனக் கொண்ட சேக்கிழார்பெருமான்,

"தங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினால் தனதத்தன்
போங்கோலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க அணிமாட மருங்கமைத்தான்"

என்று அம்மையாரின் குடும்பநிலைபற்றிக் கூறினர்.

அம்மையாரின் இல்லறநெறியினை எடுத்துக்கூறின் பக்கம் விரியுமென்றஞ்சி, அம்மையாரின் பண்புநெறி ஒன்றினையே கூறி முடிக்கின்றேன். அடியவர்களின் பெருமையை உலகுக்குக் காட்டுவதுதானே ஆடல்வல்லானின் சிறப்பு. அதுபோன்றே அம்மையாரின் பெருமையை உலகுக்குக்காட்டவிழைந்த அம்மையப்பன், அரியமாங்கனி கொண்டு காட்டினர். மாங்கனியை வருவித்துத்தந்த தன்மனைவியைத் தெய்வமோ எனக் க்ண்டு அஞ்சி, யாவர்க்கும் தெரியாமல் பாண்டிநாட்டுக்கு ஓடிவிட்டான். பாண்டிநாட்டில் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு வாழ்ந்தான் பரமதத்தன். பரமதத்தனின் செயல் கண்ட அம்மையார், அவனுக்காகத் தாங்கப்பெற்ற தம் அழகிய திருவுருவை அழித்துப் பேய் வடிவுகொண்டார். இவ்வடிவுடன் அம்மையார் தலையால் நடந்து வடகயிலை அடைந்தார். வற்றா அன்புடன் வெற்றெலும்புடன் வரும் நற்றிற நங்கையைக் கண்ட நாயகனர், உமையை நோக்கி,

"வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையேமற்றிப்
பெருமைசேர் வடிவும் வேண்டிப் பெற்றன ளென்றுபின்றை
அருகுவந் தணைய நோக்கி அம்மையே யென்னுஞ் செம்மை
ஒருமொழி யுலக மெல்லாம் உய்யவே அருளிச் செய்தார்."

நாவுக்கரசரும், நக்கீரரும் அடையமுடியாத திருக்கயிலையை நமது அம்மையார் அடைந்தார். நாடிவந்த அம்மையை நோக்கி இறைவன் "அம்மையே!" என்று

அழைத்தார். அம்மையும் "அப்பா"வென்று ஆவலுடன் அருகில் அணைந்தார். ஆண்டவன் அம்மையை நோக்கி நீ வேண்டுவன எவையென விளம்ப, அதற்கு அம்மை,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்."

நம் கயிலைக் குருமணியவர்களும், செயற்கருஞ் செயலாகத் திருக்கயிலாயம் சென்று தரிசித்து மீண்ட பெருஞ்செயல் இங்கு நினைத்துப் போற்றத்தக்கதாகும்.

அம்மையார் தலையால் நடந்துசென்ற திருவாலங்காட்டைத் திருஞானசம்பந்தர் மிதிக்க அஞ்சி வெளியே நின்று திருப்பதிகம் பாடி வழிபட்டார். சேக்கிழார் அம்மையாரின் பெருமையைச் செந்தமிழ்ப் பாக்களால் பாடி வழிபட்டார். பெண்ணுலகுக்குப் பெருமையைத் தேடித்தந்த புனிதவதியார் பெண்களுக்கெல்லாம் தெய்வமல்லவோ! அந்தத் தெய்வத்தின் திருவடியில் என் சென்னி வைத்து வணங்குகின்றேன்.

தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூரிலே தோன்றினார் திலகவதியார். மாதினியார் பெற்ற மக்களிருவருமே மன்பதை உய்யவந்த மாதவச் செல்வராவர். திலகவதியாருக்கென்று விதிக்கப்பட்ட கணவன், திலகவதியாரை மணம் புரிந்து, அம்மையின் அறச்செவ்வியைக் கண்டு மகிழுமுன் தெய்வநெறி அடைந்தான். மாலையிட்டால்தான் கணவனென்பதல்ல; மனத்திலே ஒன்றிவிட்டாலே அவர் மணாளர்தான் என்ற மாண்புநெறி உணர்ந்த மாதவச்செல்வியாராகிய திலகவதியார் கைம்மைநோன்பு நோற்கும் கைம்பெண்டிரானார். அவர் செய்த நோன்பென்ன? மற்ற பெண்டிர்கள் போல் மாளாது அழுதழுது இம் மாய உடலை மண்ணுக்கு வீணே இரையாக்கவில்லை.

திருவிரட்டானம் சேர்ந்தார்; அங்குத் திருக்கோலம் கொண்டிருக்கும் திருச்சிற்றம்பலவாணனின் திருக்கோயிலைத் திருவலகிடுதல், திருமெழுக்கிடல், முதலியன செய்து வினைக்குடலைச் சுமக்காது வில்வக்குடலை சுமந்து, துக்கக்குடலைச் சுமக்காது தும்பைக்குடலையுஞ் சுமந்து, திருநந்தவனம்புக்கு மலர்கொய்து மாலைதொடுத்துப் பெருமான் திருமேனியிற் சார்த்தி, இறைவன் திருமேனியைப் பூமாலையால் அழகுபடுத்திக்கண்டு களித்து வருவாராயினர்.

மருள்நீக்கியாரென நாமம் பெற்ற நம் மாதவச் செல்வராகிய நாவுக்கரசர் மனம்மாறிச் சமணம் புக்கார். சமணநெறி புகுந்த அருமைத் தம்பியை அல்லும் பகலும் ஆண்டவனை வேண்டி அவரைச் சைவநெறியில் புகச்செய்தார் திலகவதியார். அம்மையாரின் அரிய முயற்சியில்லையேல் மூவரில் ஒருவரை நாம் பெற்றிருக்க முடியாது. மாதவச் சிவஞான சுவாமிகள் அம்மையாரின் அரிய செயலை உணர்ந்து,

"நல்ல திலகவதி யார்மொழியை நம்பி வெங்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா"

என்றார். திருநாவுக்கரசரைச் சைவ உலகிற்கு அளித்த பெருமை நம் அம்மையாரையே சாரும். பெண்ணுலகிற்குப் பெருமை அளித்த திலகவதியாரின் பெருமையைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம், வளவர் திருக்குலக்கொழுந்து வளைக்கை மானி; போற்றுவார் கழல் எம்மால் போற்றலாமே" என்று மங்கையர்க் கரசியாரைப் போற்றுகின்றார் நம் சேக்கிழார் பெருமான். இவ் அம்மையாரின் பெருமை பற்றி ஞானசம்பந்தப் பெருமான் மதுரைச் சொக்கநாதரை வணங்குகின்றபொழுது,

"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி பணி செய்து நாடோறும் பரவ
... ... ஆலவா யாவதும் இதுவே"

என்ற அவர் திருவாக்கால் நாம் தெளியலாம். மங்கையர்க்கரசியார் தம் மணாளராகிய மன்னரைச் சமண சமயம் நீக்கிச் சைவ சமயத்தைத் தழுவச் செய்தார். சைவம் வளர்க்கும்சிவஞானச் செல்வராக விளங்கச் செய்தார்.

எல்லாம் வல்ல இறைவனை என்றும் போற்றிப் புகழும் திருத்தொண்டர் களுக்கு வாழ்க்கைத் துணைவியராக இருந்து, அவர் தம் வழி நின்று, அவர்கள் திருத்தொண்டு சிறக்கத் துணையாக இருந்த பல மாதவச் செல்வியர்களை நாம் மறத்தல் இயலாது. திருநீலகண்டர் மனைவியாரும்; இயற்பகை நாயனாரின் இல்லறச் செல்வி யாரும், இளையான்குடிமாற நாயனாரின் மனைவியாரும், இன்னும் மற்றுமுள்ள நாயனார் களின் மனைவிமார்களும் செய்த மாபெருந் தொண்டுகளை நாம் மறத்தல் இயலாது. திருமுறைகளில் கண்ட மகளிர்கள் பெண்ணுலகத்திற்குப் பெருமைதேடித் தந்தவர்கள். பெண்பாலார் அவர்கள் வழிநின்று ஒழுகுவார்களானால் "பெண்ணாய்ப் பிறப்பதற் கோர் மண்ணில் மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்ற பெருமையைப் பெண் ணுலகம் பெற்று விளங்கும். மண்ணில் பெண்ணாய்ப் பிறந்து மாதவச் செயலால், மாண்புகழ் எய்திய திருமுறை காட்டும் மகளிரின் திருவடிகளை என் சிரத்தில் வைத்து வணங்குகின்றேன்.

OUR TEMPLES

SRI. T. PURUSHOTHAMAN, M. L. C.

Our temples are not mere brick and mortar. On the other hand, they are the embodiment of moral and spiritual life of the community. Every village has its temple. The famous Tamil Poetess Avvai had said that men ought not to live in places where there is no temple. Our temples are great teachers of piety to all classes of people. They are the centres from which divine blessings issue to the community at large. These scared shrines by the splendour of their massive structures and fine sculptures make the worshippers lead a life of purity and devotion. That is the real lesson taught by the massive shrines of South India.

It was said that so long as these ancient institutions are duly maintained by the ruling race, there will be prosperity in the country and no famine will visit the land. Since our present Rulers are calling themselves secular in their outlook, the great Mutts like Sri Dharmapuram Adhinam have a grave responsibility in the matter of maintaining our religion and religious institutions. Sri Dharmapuram Adhinam is rendering great service in publishing religious works, maintaining Prachara Nilayam and renovating ancient temples. All glory to Sri Mahasannithanam of Dharmapuram Mutt who is maintaining, some of the biggest Saivite temples, in all their ancient glory and piety. Sri Mahasannithanam has renovated several temples which were getting dilapidated.

In good old days, the temples served the purposes of educational institutions. We find inscriptions engraved in temple walls. The temples served not only great religious and social purpose, but they were also of much educational value. The reading of epics and recitation of hymns in temples and also the inscriptions in the temple walls enabled people to follow their religion and it is an admitted fact that without religious touch, education cannot be a success. This is what our Poet Namakkal Ramalingam Pillai said in the Legislative Council and made a passionate appeal that without religious instruction, our education is doomed to fail in the basic purpose of making us "Men".

Our temples are symbols of ancient Indian Art and Culture bound up with the religion and tradition of the people. Temple architecture is something superb; spiritual contemplation is the key-note of our Hindu Art. The Indian Sculptor models the representation of the deity with exquisite beauty. The preservation of these ancient monuments and objects is a great duty cast on the State. Some of these sculptures are being taken away by art collectors and brisk trade is going on. The finest pieces of Indian Arts are being sold and exported to foreign countries All this should be stopped.

I am glad Sri Mahasannithanam is conducting the Bramotsava Festivals in a true religious atmosphere. These festivals keep up the religious life of the community.

கடவுள் துணைக்கொண்டு செய்யும் எந்தக்காரியமும் வெற்றிகரமாக மங்களகரமாக முடியுமென்று நம்புகிறோம். இந்த நினைப்பு ஒன்றே நம்மை உலகத்திலே தன்னம்பிக்கையோடு வாழச் செய்கிறது. நாம் உயர வேண்டுமானால் நம் ஆத்மிக சக்தி வளர வேண்டும். இந்த ஆத்மிக சக்தியைக்கொண்டு நாம் உலகம் வியக்கும் செயல்கள் பல செய்திருக்கிறோம்.

— கயிலைக் குருமணி

செழுந்தமிழும் சேக்கிழாரும்

பேராசிரியர் திரு. கா. பொ. இரத்தினம், M. A., B. O. L.

சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணத்தைத் தெய்வமணங் கமழும் நூல் என்பர் அறிஞர். நுணுகியாராய்ந்தால் அது செழுந்தமிழ் மணங்கமழும் நூலாகவும் விளங்குகிறது. செழுந்தமிழுக்குப் பெருமையளிக்கும் நூல்களில் அது முதலிடம் பெற்று விளங்குகிறது.

சைவத் திருநெறி, தமிழர்கண்ட பெருநெறி. சைவமுந் தமிழும் பிரிப்பறியாதன. சைவநெறியைத் தமிழிலிருந்து பிரித்தமையால்தான் பிறநெறிகள் தமிழகத்திலே தலைகாட்டத் தொடங்கின. நால்வர் பெருமக்கள் சைவத்தைத் தமிழுடன் பிணைத்து என்றும் பிரியாதிருக்கச் செய்தனர். இப்பிணைப்பை நன்கு உணர்ந்த சேக்கிழார் பெருமான் இப்பிணைப்பு என்றும் நிலைத்துநிற்க வேண்டுமென்றுகருதி, இதனைத்தம் பெருங்காப்பியத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தொண்டர்சீர் பரவவந்த சேக்கிழார் தமிழின் சிறப்பையும் விரிவாகப் பகர்ந்துளார். இந்த உலகத்திலுள்ள மொழிகளிற் சிறந்தது தமிழ்மொழியே என்று அவர் உணர்ந்தார்; எல்லா மொழிகளையும் அது வென்று வாகை சூடவேண்டும் என்று ஆசைப்பட்டார்; அஃது அழியாது என்றுஞ் செழிக்கும் தன்மையது என்று அறிந்தார்; அதன் இனிமையிலே தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். பெரிய புராணத்தைத் தமிழின் சீர்பரவும் புராணமாகவும் ஆக்கியருளினர்.

தமிழின் உயர்நிலையை உணரும் பெரும்புலவர்கள் அதன் தனிச் சிறப்புகளிலே தம் உள்ளத்தைப் பறிகொடுப்பது பண்டும் இன்றும் உள்ள வழக்கம். "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்றார் ஒரு புலவர்; "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்குங்காணோம்" என்றார் புதுமைக் கவிஞர் பாரதியார். சேக்கிழார் பெருமான் தமிழைப்பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம் தம் ஆராமையைப் புலப்படுத்தும் அடைகளை அடுக்கி உணர்ச்சி ததும்ப உரைத்திருக்கிறார். "செழுந்தமிழ்", "சொல்லார் தமிழ்" "தெய்வத் தமிழ்", "நற்றமிழ்", "வண்டமிழ்" "அருந்தமிழ்", "தண்டமிழ்", "இன்றமிழ்", "மல்லல் நெடுந்தமிழ்" "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" முதலியனயாவும் சேக்கிழார் திருவாக்குகளாகும்.

தமிழை இவ்வுலகிலே தலைநிமிர்ந்து வாழச்செய்த பெருமை தேவார திருவாசகங்களை அருளிச் செய்த நாயன்மாருக்குரியது. அழகு கொழிக்கும் இன்பத் தமிழிலே

அளவிறந்த பாடல்களை இயற்றித் தமிழுக்குச் சமயத்துறையிலும், இசைத்துறையிலும், இலக்கியத் துறையிலும் ஈடிணையற்ற பெருமையை அளித்தவர்கள் அவர்கள். பிறமொழியும், பிறசமயங்களும் தமிழ்நாட்டை நசுக்கிய காலத்திலே தமிழையும், தமிழர் நெறியாம் சைவத்தையும் காத்துப் போற்றி என்றும் நிலைக்கச்செய்தவர்கள் அப்பெருமக்கள். சங்கப் புலவர்களின் பின்னர் தமிழ்மொழித் தலைவர்களாகத் தமிழ் மொழி வேந்தர்களாக விளங்கினவர்கள் அவர்கள் என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றை நன்கு அறிந்தவர்கள் உணர்வார்கள். இந்த உண்மையைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திற் பல இடங்களில் புலப்படுத்தியுள்ளார். தேவாரங்களை அருளிச் செய்த நாயன்மார்களைக் குறிப்பிடும்பொழுது அவர்களுடைய ஒப்புயர்வற்ற தமிழ்ப் புலமையையும், தமிழ் என்றும் நிலைத்தோங்க அவர்கள் செய்த தொண்டினையும் புலப்படுத்தும் பட்டப்பெயர்களால் அவர்களைப் போற்றுந்திறன் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

திருநாவுக்கரசரை “இன்றமிழ்க்கு மன்னுன வாகீசர்”, “தமிழ் வேந்தர்”, “தமிழாளியார்”, “தமிழ்மொழித் தலைவர்”, “இன்றமிழீசர்” என்று பலவாறு அவர் வியந்துள்ளார்.

“முத்தமிழ் விரகன்”, “இயல் இசைத் தலைவனுர்”. “மதுரைமுத்தமிழ் வாசகர்” ... ... முதலியன திருஞானசம்பந்தருக்கு அவர் அளித்த பட்டங்கள்.

“வண்டமிழ் நாவலர்”, “நற்றமிழ் நாவலர் கோன்”, “நாவலர் காவலர்” முதலிய சொற்றொடர்களால் அவர் சுந்தரரைப் பாராட்டியுள்ளார்.

தமிழிடத்தும், தமிழ்நாட்டிடத்தும், தமிழரிடத்துஞ் சேக்கிழார் கொண்ட பற்றினைப் பல பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. ‘தமிழ் என்ருல் இனிமை; தமிழர் என்ருல் இனியவர். தமிழர் நாட்டிலே மறச்செயல்களுக்கு இடமில்லை’ எனும் இக்கருத்துக்களை எல்லாம் அவர் தென்றற்காற்றை வினவும் ஒரு வினவிலே பொதிந்து தம் இனப்பற்றைக் காட்டுகிருர். “மறம் பயின்றது எங்கோ தமிழ்மாருதம்?” எனும் வினவே அவ்வினவாகும்.

இக்காலத்திலே தமிழ்உணர்ச்சிமிக்கார் வெளிப்படுத்தும் முற்போக்குக் கருத்துக்களுக்கெல்லாம் வித்திட்டபெருமை சேக்கிழார் பெருமானுக்குரியது. தமிழர் சிறந்து வாழ்தல்வேண்டும்; தமிழ்நாடு உயர்ந்து பொலியவேண்டும்; தமிழ்மொழி எத்துறையிலும் எம்மொழிக்கும் குறையாமல் தழைத்து வளரவேண்டும். சமயத் துறையிலே வடமொழியுடன் ஒப்பிடும்பொழுது அதற்கு உள்ளகுறைகள் நீங்கி ஓங்கவேண்டும்; தமிழே தமிழர் தம் வழிபாட்டு மொழியாக வேண்டும்; என்று அவர் உள்ளம் துடிதுடித்தது. இந்தத் துடிப்பை அவருடைய காவியத்திலேயுள்ள பல செய்யுட்கள் தெள்ளத்தெளியக் காட்டுகின்றன.

இந்த உலகத்திலே ஒப்பற்ற சிறந்த மொழியாக வேண்டுமெனத் தமிழ் தவஞ் செய்தது எனவும், அத் தவம் நிரம்பத் திருஞானசம்பந்தர் தோன்றினர் எனவும், தமிழை அவர் எங்கும் விளங்கவைத்தார் எனவும், அவர் "நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பினர்" எனவும் சேக்கிழார் கூறியுள்ளார். "வண்தமிழ் செய்தவம் நிரம்ப", "தென்றமிழ் விளங்கவந்த திருக்கழுமலத்தான்", "தீந்தமிழுஞ் சிறக்கவரு நாயகன்" என்பன சேக்கிழார் வாக்குக்கள்.

தமிழ்நாடு பன்னூருண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தமையால் தமிழ்மொழி இன்று பல துறைகளில் வளர்ச்சிகுன்றிப் பிறமொழிகள் சிலவற்றுடன் போட்டியிட முடியாதநிலையில் உள்ளது. தமிழ் ஆட்சிமொழியும் கல்விப்பயிற்சி மொழியுமாகி உலக அரங்கில் இடம்பெறும் நிலைமை வந்தால் மீண்டும் அது பிறமொழிகளை வென்றுவரும் வாய்ப்பினைப்பெற வழிபிறக்கும். இந்த வாய்ப்பு உண்டாதல் தமிழ் மக்களின் முயற்சித்திறனையே பெரிதும் பொறுத்துளது.

இப்பொழுது தன் முதன்மை இழந்திருக்கும் தமிழ்மொழி முன்னர் முழு உலகத்திலுமே சிறந்த மொழியாக விளங்கியது. தமிழ் வளர்ச்சியின் பொற்காலமாகிய சங்ககாலத்தின் பின் சிறிது தளர்ச்சி அடைந்த தமிழ்மொழி கி. பி. ஏழாம் நூற்ருண்டில் ஒப்புயர்வற்றதொரு முதன்மையுடைய மொழியாக விளங்கிற்று. நமது கற்பனையைப் பயன்படுத்திக் கி. பி. ஏழாம் நூற்ருண்டுக்குச் சென்று அப்பொழுது பொதுவாக உலகம் இருந்த நிலைமையையும், சிறப்பாக இந்தியா இருந்த நிலைமையையும் நாம் கருதல்வேண்டும். மொழிக்குமொழி தித்திக்கும் தேவாரங்களைப்போன்ற பாடல்களை அக்காலத்திருந்த எந்தமொழியும் பெற்றிருக்கவில்லை. தமிழ்மறைகளாகவும், தமிழிசைப் பாடல்களாகவும், இலக்கியச் செல்வங்களாகவும் பொலியும் தேவாரங்களின் சிறப்பியல்புகளையும் அவை அக்காலத்திலே தமிழ் நாட்டில் உண்டாக்கிய புத்துணர்ச்சியையும், தமிழ்ப்பற்றையும், சிவநெறியாக்கத்தையும் நன்கு அறிவோர் அக்காலத்திலே தமிழ்மொழி அடைந்த தனிப்பெருமையைச் சேக்கிழார்போல உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. தாம் உணர்ந்ததைச் சேக்கிழார் வேறெவரும் உரைக்கமுடியாத தனிச் சிறப்புடைய முறையில் எடுத்துரைத்துள்ளார்.

"திசையனைத்தின் பெருமை எலாம் தென்திசையே வென்றேற,
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல,
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக"த்

திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தார் என்று சேக்கிழார் தம் உள்ளந்தளிர்ப்ப உணர்வுபொங்கப் பாடுகிறர். இவருடைய இக்கூற்று உயர்வு நவிற்சியன்று என்பதை வலியுறுத்த வேண்டியதில்லை.

திருஞானசம்பந்தர் தோன்றியதால் திசைகள் எல்லாவற்றையும் தென்திசையே வென்றுவிட்டதெனவும், வானுலகையும் பிறவுலகங்களையும் இவ்வுலகு வென்றுவிட்ட தெனவும் சேக்கிழார் கூறியிருக்கின்றார். இது ஆராய்ச்சிக்கு இடங்கொடுக்கத் தக்க தன்று என்று கருதுவோர் இதனைக் கவிமரபெனக் கொள்ளலாம். '' அத் திருநாட்டினை அண்டர்நாடு ஒத்திருக்குமென்றால் உரை ஒக்குமோ? எத்திறத்தினும் ஏழுலகும்புகழ் முத்தும் முத்தமிழும் தந்து முற்றுமோ'' என்று தமிழ்நாட்டைப் பற்றிக் கூறினர் கம்பரும். '' அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல '' எனுங் கூற்று உண்மை பொதிந்த கூற்று. இன்று தமிழுக்கு அயலிலுள்ள மொழிகள் மலையாளம், தெலுங்கு, கன்னடம், சிங்களம் முதலியனவாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே, திருஞானசம்பந்தர் காலத்தில் இவை தமிழுடன் போட்டியிடவில்லை. இவற்றிற் பல அப்பொழுது இலக்கிய வளத்தைப் பெறவுமில்லை. எனவே சேக்கிழார் அயல் வழக்கு என்று குறிப்பிட்டது தமிழுடன் போட்டியிட்ட வடமொழி வழக்கையே என்க.

ஒரு நாட்டில் ஓரினமக்களிடையே அவர்களுடைய தாய்மொழி முதலிடம் பெறுவதே இயல்பு. இத் தாய்மொழியை அடக்கி ஒடுக்கித் தம் மொழிக்குத் தலைமை யிடம் கொடுப்பதற்கு அவ்வினத்தை அடிமைப்படுத்தி ஆளுவோர் முயல்வது உலக வரலாறு கூறும் உண்மை. சமயத்துறை வாயிலாகவும் சில மொழிகள் தாய்மொழிகளை அடக்கி ஆட்சி செய்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நீக்கித் தனி ஆட்சிசெய்யும் நிலையைத் தமிழுக்கு அளித்தவர் ஞானசம்பந்தர் என்பதே சேக்கிழார் கருத்து. இதனைப் புலப்படுத்தவே அவர் '' அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல '' என்று உரைத்தார்.

தமிழ்மொழி அரசியற்றுறையிலோ, சமயத்துறையிலோ, இசைத்துறையிலோ என்றும் அசையாது; அழியாது என்பதையும், இதற்குக் காரணம் அதன் செழுமையே-வளமே என்பதையும் சேக்கிழார் '' அசைவில் செழுந்தமிழ் '' எனத் தொடராலே நமக்கு உணர்த்தியருளியுளர். இக்கருத்தைக் கம்பரும் இரத்தினச் சுருக்கமாக '' என்றுமுள தென்றமிழ் '' என்று கூறி வலியுறுத்தியுளர். '' கன்னித் தமிழ் '' என்று தமிழைப் புலவர்கள் போற்றுவதற்கும் அதனுடைய என்றும்அசையா இயல்பும் குன்றாச் செழுமையுமே காரணங்களாகும்.

சேக்கிழார் பெருமான் தமிழர்கள் மறந்திருந்த ஒருண்மையைத் தமிழர்களுக்கு எடுத்துக்காட்டித் தமிழ்நாட்டிலே சமயத்துறையிலே ஒரு திருப்பத்தை உண்டாக்க முயன்ற பெருந்தகையாகவும் விளங்குகிறார். வடமொழியிலேதான் வேதங்களும், ஆகமங்களும் உள. தமிழிலே அவை இல்லை என்று கூறுவாருக்குச் சேக்கிழார் விடை கூறிவிட்டார். சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமான் ஆணையாலே தமிழிலே

மறைகளும், ஆகமமும் ஆக்கப்பட்டுள என்பதையும் தமிழுக்கு இனி எவ்விதக் குறையும் இல்லை என்பதையும் அவர் பல இடங்களில் புலப்படுத்தியிருக்கிறார்.

" மிக்கசொற்றமிழினால் வேதமும் பாடினார் "

" எழுதுமறை மல்லல் நெடுந் தமிழால் இசைத்தார் "

என்பன திருஞானசம்பந்தர் புராணத்தில் வருந்தொடர்கள்.

" தண்ணிலவார் சடையார் தாம் தந்த ஆகமப்பொருளை
பண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ்வகுப்ப "

என்பது திருமூலர் புராணத்திலுள்ளது. இவற்றைப்போன்ற பல கூற்றுக்களாலே தேவாரங்கள் தமிழ்மறைகள் என்பதையும், திருமந்திரம் தமிழாகமம் என்பதையும் சேக்கிழார் பெருமான் அன்றே எடுத்துரைத்துத் தமிழினை நிறைமொழியாக - முதன் மொழியாக நிலைநாட்டியிருக்கிறார். இதனை நம் தமிழ்மக்கள் சிறிது சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். தமிழ்மக்கள் சைவப் பெருநெறியை அயல்மொழியின் தொடர் பின்றித் தம் தாய்மொழி வாயிலாகக் கடைப்பிடிக்க வழிகாட்டியவர் சேக்கிழார் பெருமான். நாயன்மார் காட்டிய இந்நெறியினையே சேக்கிழார் பெருமான் நிலைநாட்ட முயன்றார்.

இக்காலத்திலே தமிழிலே சமயச் சடங்குகளைச் செய்தல்வேண்டும் எனவும், தமிழிலே கோயில்களிலே அருச்சனை செய்தல்வேண்டும் எனவும் தமிழ்மக்கள் பலர் எண்ணுகிறார்கள். சிலர் இவற்றைத் துணிந்து சொல்லிச் செய்தும் வருகிறார்கள். "தென்னாடுடைய சிவனை - தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைத்" தமிழர்கள் தம் தாய்மொழியில் வணங்குதற்கு விழைதல் இயற்கைக்கு மாறானதன்று. நாயன்மார்களும் இறைவனைச் செந்தமிழிலேயே வழிபட்டார்கள். கடவுளைத் தமிழர் தமிழிலேயே வணங்கவேண்டும் என்பதுதான் சேக்கிழார்பெருமானுடைய குறிக்கோளு மாகும். தாய்மொழியைப் போற்றுவது பிறமொழியை வெறுப்பதாகாது. தமிழர் எவருக்கும் பிறமொழிகளைப் பழித்தலோ அவற்றின் சிறப்பை மறுத்தலோ சால்புடைய செயலாகாது.

சுந்தரரை நோக்கிச் சிவபெருமான் " நமக்கு அன்பினில் பெருகிய சிறப்பின் மிக்க அருச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று பணித்தருளினார் எனச் சேக்கிழார் பெருமான் கூறியுளர். இதன் கருத்து என்ன? 'என்னைத் தமிழிலே அருச்சனை செய்' என்பதுதான் அன்றோ! கி. பி. ஏழாம் நூற்றாண்டிலேயே - திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் காலத்திலேயே - "தமிழ்மாலை" பாடி அருச்சித்தல் தொடங்கிவிட்டது. சுந்தரமூர்த்தி நாயனாருடைய காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டுவரையும் அப்பர் சம்பந்தர் தேவாரங்களைத் தமிழ்

மக்கள் ஓதி இறைவனைத் தமிழில் வழிபட்டனர். இதற்குச் சுந்தரமூர்த்திநாயனரே சான்று பகர்கிறார். " நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை " என்று பாடி அவர் இந்த உண்மையினைத் தெளிவுபடுத்துகிறார். எனவே தமிழ் நாட்டிலே தமிழிலே வழிபாடு செய்ய வேண்டுமென்று மக்கள் கருதுவது ஒரு புதுமையன்று. நாயன்மார் வகுத்த வழியிலே, சேக்கிழார் நிலைநாட்டிய நெறியிலே நிற்பவர்கள் இதனை வரவேற்பார்கள்.

பிறநாட்டாருக்கும் பிறமொழிகளுக்கும் அடிமைப்பட்டிருந்த தமிழினம் தன் அடிமைத்தளையை அறவே ஒழித்துத் தலைநிமிர்ந்து மானத்துடன் வாழுங்காலத்தைத் தமிழ்மொழி மீண்டும் அசைவிலாச் செழுந்தமிழாக அயல் வழக்கின் துறைவெல்லும் காலத்தை விரைவில்வரச் செய்தலே நாம் சேக்கிழார் பெருமானுக்குச் செய்யுங் கைம்மாருகும். இதற்கு வாழ்வின்துறை அனைத்திலும் தமிழுக்கு முதன்மை கொடுக்க நாம் இன்றே, இப்பொழுதே முயலல் வேண்டும். வாழ்க செந்தமிழ்! வளர்க சேக்கிழார் புகழ்!

ஒருவர் சிறிது உபகாரம் செய்தாலும் ஏற்றவர் அதை எப்பொழுதும் மறக்கக்கூடாது. அப்படியானல் உலகத்தையும் தந்து அதனை அநுபவிக்க உயிர்களாகிய நமக்கு உடலையும் தந்த கடவுளை - அவர் செய்து வரும் நன்றியை - நாம் மறக்கலாமா? நன்றி மறப்பது நன்ருகுமா?

— கயிலைக் குருமணி

தெளிவு

வித்துவான். தவத்திரு. இராமசாமி அடிகள்

மனித வாழ்க்கை உயர்ந்தது; கிடைத்தற்கரியது; மற்றைய உயிர்க்கூட்டங்களின் வாழ்வினும் சிறந்தது என்பதை அறிகின்ருேம். மாண்புறும் இவ்வாழ்வில் நாம் பெறுவது யாது? என எண்ணுவோமாயின் வாழ்வாங்கு வாழ்தல் என்று விளங்கும். அவ்வாழ்வுக்கு உறுதுணை உலகியலும், ஆன்ருேர் நூல்களுமாகும். மனிதன் நன்கு வாழ எண்ணுவது இயல்பு. தன் வாழ்க்கை சிறக்கப் பல முயற்சிகளைச் செய்கிருன். ஒவ்வொரு முயற்சியையும் அரிதாகப் பெரிதாக மதிக்கிருன். ஆனல் அறிவின் முதிர்வால் முந்திய முயற்சிகள் பயனற்றன என்று தெளிகிருன். இவ்வாறே வாழ்க்கையனுபவங்கள் வளர வளர மனிதனது முயற்சிகளும் வேறுபடுகின்றன.

தன் முயற்சியால் பலநாள் வருந்தியறிவதை ஆன்ருேர்கள் அருட்சொற்களால் எளிதில் அறிகிருேம். அவர்களருளுரைகள் நம் எண்ணத்தைச் செயலைத் தூய்மைப்படுத்துகின்றன. நாம் கருதிய உண்மைகள் மாருகத் தென்படுகின்றன. நம் கருத்து மயக்க உணர்வால் உருவாகியது என்பதை அப்பொழுது உணர்கிருேம். மேலும், அத்தகைய அருளாளர்களை நேரில் காணும் பேறு கிடைப்பின், அவர்கள் நன்னேக்கால் நம் அறியாமைச் செறிவு நீங்கப் பெறுகிருேம். மனிதப் பிறப்பால் எய்தும் பயன் இதுவென உணர்கிருேம். அவர்கள் தொடர்பால் துன்பம் நீங்கி இன்பம் பெறுகிருேம். அவ்வின்பம், பொறிவாயிலாகக் காணும் உலகியலின்பங்களைப் போலாது நிலையானதாய் உறுதிபயப்பதாய் அமைகிறது. ஒரு நூலைப் படிக்கின்ருேம். அது, திருவாசகமாக இருக்கலாம், அல்லது திருக்குறளாக இருக்கலாம். அதனைப் பயிலும்போது அதன் தெளிபொருள்கள் நம் மனத்தில் ஓர் நெகிழ்வை - தெளிவைத் தருகின்றன. பலமுறை பயில்கின்ருேம்; ஒவ்வொருமுறையும் முன் படித்தபோது கண்ட உண்மைகளினும் புதிதாகப் பல காண்கின்ருேம். இது கற்றறிந்தோர் அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இதுபோலவே சான்ருேர்களை எப்போதோ ஒருமுறை காண்கின்ருேம். நம் மனமயக்கத் திரை சிறிது நீங்குகிறது. பின்னும் அது மறைத்துக் கொள்கிறது. ஆனல் அடிக்கடி கண்டு பழகி அவர்கள் அருளுரை கேட்போமாயின் தெளிவெய்துவோம். இதனையே வள்ளுவர்,

> " நவில்தொறு நூனயம் போலும் பயிலுெறும்
> பண்புடை யாளர் தொடர்பு "

என்கின்ருர். செந்தண்மை பூண்டொழுகும் அறவோர்கள் அருட் பார்வையும், சொல்லும் நம் மயக்கத்தை நீக்குகின்றன. தெளிந்த அறிவைத் தருகின்றன. அறிவினல்

நாம் பிறவுயிர்களின் துன்பத்துக்கிரங்கி அவற்றைப்போக்க நம்மாலான உதவிகளைச் செய்கிறோம். அத்தகைய செயல்களைச் செய்யாமல் நுண்ணியதாய், கூரியதாய், அகன்றதாய் வளரும் அறிவு சான்றோர்களால் எண்ணப்படாதது. அவர் சார் பற்றது. மனிதன் பிறவுயிர்க்கிரங்கும் பெற்றியாளனாக ஆகும்போது தன்னை யுணர் கிறான். தன்னை யுணர்கின்றவன் தனக்கு மேலாய மெய்ப்பொருளை யுணர்வான். அம்மெய்ப்பொருள், செம்பொருள் என்பதும் அறிவான். இதனைத் திருக்குறள்,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு"

எனப் போதிக்கின்றது.

நாம் தம்மையுணரும் நிலையில் பலவற்றை ஆராய்கிறோம். நாம் மயக்க அறிவால் உண்மையை உணராது திண்டாடுகிறோம். நம் பொறிகளால் உணர்ந்த வற்றைக்கொண்டு உண்மையைத் தேடுகிறோம். அவை தெளிவாக உணர்த்தாமை யால் ஐயுறுகிறோம். பின் பலவற்றைப் பலரால் கேட்கிறோம். உண்மை முழுதும் கிட்டுவதில்லை. இதற்குக்காரணம் நம் புலக்கோளாறுதான். பிறபொருள்களை நன்றாக அறிய, கண்ணுக்குக் கண்ணாடி அணிகிறோம். அக்கண்ணாடியின் நிறத்திற்கும், வடிவிற்கும் ஏற்பப் பொருள்கள் நிறமும் வடிவும் பெறுகின்றன. அதுபோல நம் புலங்கள் நாம் நம்மை யுணர உணர்த்தும் கருவிகள். ஆனால் அவை நிறமாறிய கண்ணாடிபோல் உள்ளவாறு பொருள்களை உணர்த்தாத மயக்க நெறியில் ஈர்த்துச் செல்கின்றன. அவற்றின் வழிச்செல்லாது நம்மை அழைத்துச் செல்வதே குருவருள். குருவடிவமாக இறைவன் அருள்கிறான். நம் உள்ளே ஒளித்திருந்து அருளும் இறைவன் நாம் அவனையறியாத புன்மைகண்டு இரங்கிக் குருவாக வந்து உள்ளும் புறம்புமாய் அருளுகின்றான். இதனையே தருமையாதீனக் குருமணியாம், குருஞான சம்பந்தர் சிவபோகசாரத்தில்,

"உள்ளிருந்தே என்றும் உணர்த்துகினும் கண்டிலரேன்(று)
உள்ளும் புறம்பு மாவோ மென்று - மெள்ள
நரருருவாய் ஆரூரில் வந்தான் நமையாண்
டருள்புரிஞா னப்பிரகா சன்"

என அருளியுள்ளார்.

மேலும், இறைவன் குருவாக அருளுவதன்றி, நம் உள்ளம் இனிக்க உணர்வு பெருகத் தேனாய், தெளிபொருளாய், இன்பமாய், அன்பாய் இலங்குகிறான். நாம் விரும்புவது இனிமை. நமக்கு வேண்டுவது இன்பம். இன்ப வழியிலே மாறாது நின்று அன்பைப் பெருக்குவதே நமது குறிக்கோள். இதனை ஒவ்வொருவரும் வேண்டுவோம். இவையெய்த வேண்டின் இறைவன் திருவருள் வேண்டும். இதனையே மாணிக்கவாசகர்.

"மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சீருடைக் கழலே திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே"

என அருளியுள்ளார்.

எனவே நாம் நம்மையுணரவேண்டின் மயக்கும் புலன்வழியே செல்லாமல் அவற்றால் ஆய மயக்க அறிவை நீக்கி மெய்ப்பொருளை ஆராயவேண்டும். மெய்ப் பொருளைக் காண்பதே அறிவு. அவ்வறிவின் வடிவே நாம். அறிவின் முதிர்ச்சியே இன்பம். அவ்வின்பமே செம்பொருளாகிய சிவம். மெய்ப்பொருளைக் காண வொட்டாது மயக்கும் நிலையே பாசம். இதனைத்தான், 'முப்பொருள் உண்மை' என்றனர் சான்றோர். இதனையே சிவபோகசாரத்தில்,

"என்னை அறிவென்றான் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்றான் சந்ததமும் — என்னையுன்னிப்
பாராமறைத்ததுவே பாசமென்றான் இம்மூன்றும்
ஆராய்ந்த வர்முத்த ராம்"

எனத் தருமையாதீனக் குரு முதல்வர் கூறியுள்ளார்.

நம்மையுணரும் அறிவைப் பெறுவோமானால் நாம் மயக்கத்தின் நீங்கித் தெளி கிறோம். அப்பொழுது வான நாடரும் காணொணாத மெய்ப்பொருளைக் காண்கிறோம். அத்தெளிவுக்கு வழிகாட்டுபவர் குரு. அவரிடத்தே எந்நாளும் சார்ந்திருப்பதே நாம் பெறும் பேருகும். இதனையே திருமூலர்,

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே."

என அருளியுள்ளார். இப்பாடலை நாமும் பன்முறை பயின்று அதன் உண்மைஉணர்ந்து கனகாபிஷேகம் கொள்ளும் கயிலைக் குருமணியின் அருள்பெற்றுத் தெளிவோமாக.

பிள்ளையும் நம்பியும்

சிவபக்தமணி,

திருவாசகமணி. திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் B. A., B. L.,

ஆளுடைய பிள்ளையும் ஆளுடைய நம்பியும் முறையே சென்று அம்பலக் கூத்தனை வழிபடுகின்றனர். அன்பிலோ ஆர்வத்திலோ ஒருவருக்கொருவர் குறைந்தவ ரல்லர். இரு பெருமக்களும் இறைவன் திருவருளை இணையில்லாத முறையில் எல்லையற்ற வகையில் பெற்றுகந்த பெருமையினர். எனினும் தேக்கிய திருவெலாம் தம் வாக்கினில் ஒளிர்கின்ற சேக்கிழார் பெருந்தகை அம்பலக்கூத்தனை அப்பெரியோர் இருவரும் பணிந்து நுகர்ந்த முறைகளை அவற்றின் நுணுக்கமான வேறுபாட்டுடன் விளக்குகின்ற விதத்தைத்தான் ஈண்டுச் சிறிது குறிப்பிட விழைகிறேன்.

திருஞானசம்பந்தப் பெருமான் எவ்வாறு தில்லைக் கூத்தனைப் பணிந்தார் என்பதைச் சேக்கிழார் கீழ்க்கண்ட இரு பாடல்களால் வருணிக்கின்றார் :

'' அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானஅம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த ஒருபெரும் தனிக்கூத்தும்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழும் களிப்போடும் கடற்காழிப்
புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா டியபோற்பு ''

'' உணர்வின் நேர்பெற வரும்சிவ போகத்தை ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை எனப்போற்றி
இணையில் வண்பெரும் கருணையே ஏத்திமுன் எடுத்தசொற் பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர் பொழிந்தனர் விழிமாரி ''

சுந்தரமூர்த்திப் பெருந்தகை தென்தில்லைச்சிற்றம்பலத்தும், மேலைச் சிதம்பரம் என்று வழங்கப்பெறும் திருப்பேரூரிலும் முறையே இறைவனை வழிபட்டவிதங்கள் இரண்டினையுமே மிகமிக அழகாக வருணித்துள்ளார் தெய்வக்கவி சேக்கிழார். ஈண்டு நாம் அவர் பேரூர் நடராஜரைப் பேணிப் பணிந்த பெற்றியின் வருணனையைக் காண்போம். ஏனெனில் அத்தலத்தில்தானே அப்பெருமாற்கு '' நித்தனூர் தில்லை மன்றுள் நின்றாடிய கோலம் நேர்காட்ட '' அவரும் '' கைத்தலம் குவித்துக் கண்க ளானந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார் '' பின்னர்,

'' காண்டலும் தொழுது விழ்ந்துடன் எழுந்து கரையிலன் பென்பினை உருக்கப்
பூண்டஐம் புலனில் புலப்படா இன்பம் புணர்ந்துமெய் யுணர்வினில் பொங்கத்
தாண்டவம் புரியும் தம்பிரா னுரைத் தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தஅந் நிலைமை விளைவையார் அளவறிந் துரைப்பார் ''

ஈண்டு நாம் கூர்ந்து நோக்கி ஆராயவேண்டிய விஷயம் ஒன்றுளது. ஞானப் பாலுண்ட கன்றும் கானப்பால் வழங்கும் நம்பியும் வானப்பால் மதிசூடியை முறையே வணங்கியதன் பயனுக நுகர்ந்த பேரின்பம் ஒன்றேதான். ஆனுல் அவ்விருவரது மனேபாவனைகளில் ஒருவிதவேறுபாடு இருந்தமையை நம் சேக்கிழார் பெருமான் துணிந்தறிந்து சைவசித்தாந்த சாத்திரத்துடனும் தெய்வவழிபாட்டின் அனுபவத்துடனும் ஒன்றியவாறு நமக்கு விளக்கியருளியுள்ளார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனையறமாற்றும் பாங்கினி லோங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ் ஞானமும் அம்மையருளிய அருள் அமுத முலைப்பால் உண்டபின் அடையப்பெற்றுச் சிவஞானசம்பந்தராய்த் திகழ்ந்த செம்மலின் எண்ணரிய சிவஞானமே தில்லையில் அமைந்துள்ள அம்பலமாகவும், அவரது அத்தகைய சிவஞானத்தினின்றும் பொங்கி யெழுந்து பூரித்து நடனமிடும் பேரானந்தமே அந்தத் தில்லையம்பலத்தில் களிநடம் புரியும் கண்ணுதற் பெருமான் ஆகவும் நமது ஆளுடைய பிள்ளையின் கண்களுக்குக் காட்சியளித்தன. அதுமட்டுமா? சிவானுபவம் என்பது ஆன்மாவின் உணர்வில் அறிந்து அனுபவிக்கவேண்டியதொன்ருகும். ஆனுல், அவ்வாறு நுண்ணியதாய் அரியதாய் அகத்துள் நுகரப்படும் சிவானந்தம் என்னும் விஷயத்தைத் தமது கண், வாய், மூக்கு முதலிய ஐந்து பொறிகளின் மூலமாகவும் எளிதாகக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்று அறியும்வண்ணம் ஓர் உருவின்கண் நடராஜப்பெருமானைக் கண்டு கும்பிட்டுக் களிக்கின்ருர் திருஞானசம்பந்தர். இந்த நடராஜவடிவம் தான்,

"கற்பனை கடந்தஜோதி கருணையே உருவமாகி
... ...
சிற்பரவி யோமமாகும் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற"

புண்ணியர் ஆவர். ஞானசம்பந்தப் பெருமான் தமது அகத்தில்கண்ட ஆனந்தத்தையே அம்பல நடராஜாவாக அவர் புறத்தில் கண்டு மகிழ்கிருர். ஆனுல் ஆரூரரது அனுபம் எப்படி இருக்கிறது? சிவானந்தம் என்பது சாதாரண மானிடர்களுக்கு அவர்களது மாயா தனு கரணங்களாகிய ஐம்பொறிகளால் உணர்ந்து நுகரப்படுவதொன்றன்று. அது அவ்வாறு அனைவர்க்கும் எளிதன்ருதலால்தான் ஞானபோனகர் போன்ற ஒருசில பேரான்மாக்களுக்கு மட்டுமே அது எளிதாகும் என்பதைக் கண்டோம். அதுகாரணம்பற்றித்தான் அதனைப் "பூண்ட ஐம்பொறிகளில் புலப்படா இன்பம்" என்கிருர் சேக்கிழார். எனவே, கண்களாற் காணப்பெற்ற கவினுறு நடராஜரின் திருஉருவம் அவற்றின் வாயிலாக ஆரூரர்தம் உள்ளத்தே புகுந்து அங்கே மெய்யுணர்வினில் பேரானந்தமாகப் பொங்கித் ததும்பிப் பூரணமாய்க் கூத்தாடியது. அந்தச் சிவானந்தமாகிய பேரின்பம் அவர்தம் உள்ளத்தில் புணர்ந்து

மெய்யுணர்வினில் பொங்கிற்று என்கிறார் சேக்கிழார். சுருங்கச் சொல்லின் ஆரூரர் பெருமான் தமக்குப் புறத்தே, அம்பலத்தே கண்ட பேரானந்தத்தின் வடிவாகிய நடராஜரைத் தம் அகத்தே மெய்யுணர்வின் மூலம் அனுபவிக்கிறார்.

எனவே, அனுபவிக்கப்படும் சிவானந்தம் ஒன்றேதான். ஞானசம்பந்தரும் வன்றொண்டரும் பொருள் தன்மையில் வேறுபாடின்றித்தான் முறையே அனுபவிக்கின்றார்கள். ஆனால் ஒவ்வொருவரும் அந்தப் பேரின்பத்தை நுகரும் முறை அல்லது வழிதான் சற்று மாறுபட்டதாக உளது. அகத்தின் ஆனந்தத்தைப் புறத்தேகண்டு அனுபவிக்கின்றார் காழிவள்ளல். புறத்தின் உருவத்தை அகத்தே ஆனந்திக்கின்றார் நாவலூரர். இதுதான் இவர்களது இரு வழிபாட்டின் வேறுபாடு.

இவ்வாறு இவ்விரண்டு மாபெரும் சமயகுரவர்களுள்ளும் இவ்வித வேறுபாடு இருக்கக் காரணமுண்டா ? அல்லது சேக்கிழார் பெருமான் ஏனைய பெத்தநிலைக் கவிஞர்களைப்போன்று தம் மனம்போனவாறு இவ்விருவரது வழிபாட்டு முறைகளிலும் இந்த மாறுபாட்டினைக் கற்பனைசெய்து எழுதிவிட்டாரா ?

ஆழ்ந்து நோக்கி ஆராய்வோருக்கு, இவ்வேறுபட்ட வழிபாட்டின் தத்துவ அடிப்படை விளங்காமற்போகாது. அத் தத்துவ நுணுக்கத்தினைத் தன் ஆன்மருக்கும ஆற்றலால் அறிந்து பாடியிருப்பதால்தான் நம் சேக்கிழார் தெய்வப் புலவரெனச் சைவப் பெரியோர்களால் போற்றப்பட்டு வருகிறார்.

சிவப்பேறு என்னும் வீட்டுலகை அடைய நம்மனோரால் ஆன்மாக்களுக்கென வகுக்கப்பட்டுள்ள சாதன வழிகள் நான்கு. சிவஞானபோதம் போன்ற சித்தாந்த சாத்திரங்கள் விதித்துள்ள மார்க்கங்களும் இந்நான்கே. அவையாவன:- தாஸமார்க்கம் என்னும் சரியை ; சத்புத்ரமார்க்கம் என்னும் கிரியை ; சகமார்க்கம் என்னும் யோகம் ; சன்மார்க்கம் என்னும் ஞானம். உண்மையிலேயே நமது சைவசமய குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் இம்மார்க்கங்களுக்கு அதீதமாய் இறைவன் திருவருட் கடலில் ஒக்கத்திளைக்கும் உத்தமர்கள் ஆயினும், நம் போன்ற பெத்தான்மாக்கள் கடைப்பிடித்து உய்ந்து கடைத்தேறும் பொருட்டு இந்நால்வருள் ஒவ்வொருவரும் மேலேகண்ட நான்கு மார்க்கங்களுள் முறையே ஒவ்வொரு மார்க்கத்துக்கும் பிரதிநிதியாக அல்லது பெரும் விளக்கமாக தாமே வாழ்ந்து வழி காட்டிப் போந்துள்ளனர். ஆகலின், ஞானத்தில் சரியை அப்பருக்கும், ஞானத்தில் கிரியை சம்பந்தருக்கும், ஞானத்தில் யோகம் சுந்தரருக்கும், ஞானத்தில் ஞானம் மணிவாசகருக்கும் முறையே உரியவென ஆன்றோர் கருதுவர். இந்தக் கோணத்தில் இருந்து மேலே கூறப்பட்ட இரு குரவன்மார்களது வழிபாட்டு முறைகளை ஆராயின், ஞானசம்பந்தர் மேற்கொண்ட முறை கிரியை வழிபாட்டிற்கும், சுந்தரர் கையாண்ட முறை யோக வழிபாட்டிற்கும் முறையே சாத்திர தத்துவத்திற்குச் சம்மதம் உடையன ஆகின்றன என்பது தெற்றென விளங்கும்.

சிவஞானசித்தியாரின் (சூத்திரம் 8. அதிகரணம் 2. செய்யுள் 20.) சத்புத்ர மார்க்கம் என்னும் கிரியையின் விளக்கமாவது :-

'புத்திரமார்க் கம்புகலில் புதியவிரைப் போது
புகையொளிமஞ் சனம்அமுது முதல்கொண் டைந்து
சுத்திசெய்தா சனம்மூர்த்தி மூர்த்தி மானும்
சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்த
பத்தியினல் அருச்சித்துப் பரவிப் போற்றிப்
பரிவிேைடும் எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும் இக் கிரியையினை இயற்றுவோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர் நினையும் காலே.'

அதேநூலில் வரும் சகமார்க்கத்தை விளக்கும் பாடல் இதுவே.

"சகமார்க்கம் புலனெடுக்கித் தடுத்துவளி இரண்டும்
சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்கள்
அகமார்க்கம் அறிந்தவற்றின் அருள்பொருள்கள் உணர்ந்தங்கு
அணைந்துபோய் மேலேறி அலம்மதி மண்டலத்தின்
முகமார்க்க அமுதுடலம் முட்டத் தேக்கி
முழுச்சோதி நினைந்திருத்தல் முதலாக வினைகள்
உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல்உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர்."

இவ்விரண்டு பாடல்களின் உட்கருத்தை நோக்குவாம். சத்புத்திரமார்க்கம் என்பது "மூர்த்திமானும் சோதியையும் பாவித்து ஆவாகித்துச் சுத்தபத்தியினல் அருச்சித்துப் பரவிப்போற்றி" வழிபடுதல் ஆகும். சகமார்க்கம் என்பது "புலன் ஒடுக்கி.........அகமார்க்கம் அறிந்தவற்றின் அரும்பொருள்கள் உணர்ந்தங்கு......... முழுச்சோதி நினைந்திருத்தல்" ஆகும். எனவே சிவஞானசித்தியார் ஆகிய சைவ சித்தாந்தத் தலைநூலின்படியும், சத்புத்திரமார்க்கம் ஆகிய கிரியை என்பது வெளியே, புறத்தே உள்ள மூர்த்தியை ஐம்பொறிகளால் ஆவாகித்துப் பாவித்துக் கண்டு ஆனந்தம் கொண்டு வழிபடுதல் என்று தெரியவருகிறது. ஆதலால்தான், சத்புத்ர மார்க்க வித்தகரான ஞானசம்பந்தப்பெருமான் "உணர்வின் நேர்பெறவரும் சிவபோ கத்தை ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை" எனத் தில்லைச்சிற்றம்பலவனின் திருநடனம் கண்டு தரிசித்தார்.

அதேபோல, சிவஞான சித்தியாரின்படி, சகமார்க்கம் ஆகிய யோகம் என்பது புலனையொடுக்கி உள்முகமாக முழுச்சோதியை நினைந்திருந்து அமுதத்தை அருந்துதல் என்றும் தெரியவருகிறது. ஆதலாலேதான் சகமார்க்கத் தயாபரரான நம்பியாரூரர், "பூண்ட ஐம்புலனின் புலப்படா இன்பம் புணர்ந்து மெய்யுணர்வினில் பொங்கத்" தாண்டவம் புரியும் தம்பிரானுரைத் தலைப்படக் கிடைத்துத் தரிசித்தார்.

இவ்வாறு ஆரூரர்தம் யோகமுறையால் உள்ளுணர்ந்து தில்லைப்பெருமானை வழிபாடு செய்து அவரைத் தம் உள்ளத்தில் சிறைப்படுத்திவிட்டமையால்தான், அப் பெருமான் சேரமான்பெருமானுக்கு அவர்தம் பூசை முடிவில் உரியகாலத்தில் தம் அரிய கழலோசையைக் கேட்பிக்க இயலவில்லை. இந்த உண்மையைத்தான், "மன்றினிடை நம் கூத்தாடல் வந்து வணங்கி வன்றெண்டன், ஒன்றும் உணர்வால் நமைப்போற்றி உரைசேர்பதிகம் பாடுதலால், நின்றுகேட்டு வரத் தாழ்த்தோம் என்றார் அவரை நினைப்பிப்பார்" என்று சிவபெருமான் கழறிற்றறிவார்க்கு உணர்த்தியதாகச் சேக்கிழார் பெருமான் கூறுகிறார். தில்லைக்கூத்தர் தாமாகவே அருளி அதை அனுமதித்தால் ஒழிய அவரை ஒருவராலும் தம் மனத்தால் கட்டிப்போட இயலாது என்ற உண்மையையும் நாம் இங்கே மறவாது நினைவுறுத்திக்கொள்ளல் அவசியமாகும். இந்தப் பேருண்மை யைத்தான் ஞானத்தில் ஞானத்தை விளக்கும் பானுவாகிய மணிவாசகர் பல பாடல் களில் விளக்கியுள்ளார். உதாரணமாக :-

"நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தென துள்ளம் புகுந்தடியேற்கருள் செய்தான்"

"அவனருளாலே அவன்தாள் வணங்கி"

"பத்திமையும் பரிசுமிலாப் பசுபாசம் அறுத்தருளிப்
பித்தனிவன் எனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லைக் கண்டேனே."

எனவே, இதுகாறும் நாம் கண்டு, அறிந்து, உணர்ந்த உண்மையாவது :- திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் முறையே தில்லையம்பலவரைத் தரிசித்தபோது அவ்விருவருக்கும் ஏற்பட்ட சிவானந்தக்களிப்பு, பொருள் தன்மையில் ஒன்றே ஆயினும் போற்றுமுறையில் வேறுபட்டவை என்பதும்; அவ்வாறு அம்முறைகளின் வேறுபாட் டிற்கு அடிப்படைக்காரணம் அவ்விருவரது கோணவேறுபாடு என்பதும்; இத்தகைய வேறுபாட்டின் தத்துவ உண்மையையும் சரியான தன்மையையும் சிவஞானசித்தியார் என்னும் சிரிய சித்தாந்தசாத்திரம் அறுதியிட்டுக் கூறியுள்ளது என்பதும், இவை யனைத்தையும் தமது அருட்கண்ணால் உணர்ந்தே தெய்வப்புலவர் சேக்கிழார் பொருட் செறிவுடன் நமக்குப் புகன்றுள்ளார் என்பதும் ஆகும்.

திருச்சிற்றம்பலம்

வீடுபேறு

கோவைகிழார். திரு. ம. இராமச்சந்திரஞ் செட்டியார் B. A., B. L..

குருமகாசந்நிதானம் பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்வது மிகப் பொருத்தமாகும். தமிழுக்கும் சைவத்திற்கும் மகாசந்நிதானம் செய்திருக்கும் சேவை அளத்தற்கப்பாலானது; ஆகவே விழாக்குழு செய்யும் இவ் வேலை பாராட்டத் தக்கது. கனகாபிஷேகத்தின்போது ஒரு விழாமலர் வெளியிடுவது மிகப் பொருத்தமானதும் நிலை நிற்கக்கூடியதுமான செயல் ஆகும். இம்மலர்க்கு ஏற்ற பொருள் விடுபேறே என்று எண்ணிப் புராணங்களின் மூலமாக அதனைப் பொது மக்களுக்கு உணர்த்தும் முறையில் இக்கட்டுரை எழுந்தது.

தமிழ் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் சமய நூல்களைப் படிக்கும் பொழுது குறிப்பிட்ட சில நூல்களைத் தெரிந்தெடுத்து அவைகளையே படிக்கின் றார்கள். அன்னார் சைவர்களானால் சாதாரண மக்கள் படிப்பது கந்தபுராணமும் திருவிளையாடலும் ஆகும். நன்கு படித்தவர்கள் படிப்பது அவைகளோடு பன்னிரு திருமுறைகளும் பதினன்கு சாத்திரங்களும் ஆகும். வைணவர்கள் ஆனால் பாகவதமும் நாலாயிரப் பிரபந்தமுமே ஆகும். இராமாயணமும் மகாபாரதமும் பொதுவான நூல்கள். அவைகளை எல்லோரும் படிப்பார்கள். வைணவர்களைத் தவிர மற்றவர்கள் இராமாயண பாரதங்களை இதிகாசங்களாகவே கொள்ளுவார்கள். சமய நூல்களாகப் பெரும்பாலும் கருதமாட்டார்கள். வைணவர்களும் ஸ்மார்த்தர்களும் இராமாயணத் தையும் சமய நூலாகவே போற்றுவார்கள். மேலே கூறியபடி சைவர்கள் பல புராணங்கள் இருக்கக் கந்த புராணத்தையும் திருவிளையாடலையும் யாதன் சிறப்பாகப் படிக்கின்றார்கள் என்று ஒரு கேள்வி பிறக்கின்றது அல்லவா! அதனை இங்கு ஆராய்வோம்.

இவ்விரு நூல்களில் திருவிளையாடற் புராணம் மதுரைமாநகரத்தின் பெருமை களை எடுத்துக் கூறுவதாகும். அப் பெருமைகள் அறுபத்து நான்கு எண் கொண்ட ஐதீகங்களாக அமைந்திருக்கின்றன. மதுரைமாநகரம் பாண்டிய நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் சிறந்த தலைநகராக இருந்தமையால் எப்பொழுதும் பொதுமக்கள் அங்கே சென்று தெய்வவழிபாடு செய்துவருவதாலும் ஆண்டு முழுதும் திருக்கோயிலில் விழாக்கள் நடந்துகொண்டே இருப்பதாலும் 'அவ்விழாக்களைப் பொதுமக்கள் நாடோறும் பார்த்து மகிழ்ந்துகொண்டே இருப்பதாலும் அவ் ஐதீகத் திருவிளை யாடல்களின் வரலாறுகளைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பம் மிகவும் ஏற்பட்டு அதன் காரணமாக அந்நூலைப் படித்து வருகிறார்கள். ஐதீகங்கள் எளிதாக வும் இறைவனிடத்தில் அன்பு புகட்டக்கூடியவாறு இருத்தலாலும் அந்நூலுக்குத் தமிழ்

நாட்டில் மிகவும் மதிப்புண்டு. ஆகவே பொதுமக்கள் படிப்பில் அந்நூல் ஒரு நல்ல இடம் பெறுகின்றது.

மற்ற நூலாகிய கந்தபுராணம் முருகக் கடவுள் வரலாற்றைப் பற்றிக் கூறுவது. முருகக் கடவுள் தமிழ்நாடு முழுதும் மிக அழகான இடங்களாகிய குன்றுகளின் மீது எழுந்தருளி இருக்கின்ருர். அக்கடவுள் கலியுகவரதன் என்ற ஒப்பற்ற அரிய பெயரைக் கொண்டிருக்கின்ருர். பொதுமக்களுக்கு எளிதில் வரமளிக்கக்கூடிய வகையில் இருக்கின்ருர். தமிழ் மக்களில் பிறப்பு முதல் இறப்பு வரையில் ஏற்படக் கூடிய எல்லாவகையான சடங்குகளிலும் முருகக் கடவுளுக்கு ஒரு பங்குண்டு. ஆறு படை விடுகளிலும் எழுந்தருளியிருந்து அன்பு செலுத்துகின்றவர்களுக்குக் காட்சி யளித்துக்கொண்டே இருக்கிருர். ஆகவே பொதுமக்கள் நலம் புலம் இரண்டிற்கும் அக் கடவுளையே நம்பி வழிபாடு செய்கிருர்கள். தென்னுட்டில் உள்ள பெரிய புனித இடங்கள் எல்லாம் முருகக் கடவுளுடைய இடங்களே ஆகும். ஆகவே அக்கடவுள் மனிதர்களுடைய நெஞ்சங்களில் எப்போதும் குடியிருக்கின்ருர். அதனுல்தான் அந் நூலை மக்கள் மிகவும் போற்றிப் படிக்கின்ருர்கள்.

சைவப் பெருமக்கள் கந்தபுராணத்தைப் படிப்பதற்கு இந்தக் காரணம் ஒன்று மட்டும் அல்ல. வடமொழியில் கந்த புராணம் ஸ்காந்தம் என்ற பெயரால் மிகப் பெரியதாக விரிந்து இருக்கின்றது. தமிழில் அது முழுதும் இன்னும் ஆக்கப்படவில்லை. ஒரு பகுதி மட்டும் கந்தபுராணம் என்ற பெயரால் குமரகோட்டத்துப் புலவர் பெருமான் கச்சியப்ப சிவாசசாரியர் எளிதான தமிழ்ச்செய்யுளில் அழகான சொல் நடையில் உறுதி யான பொருள்கள் கண்டு இயற்றி இருக்கின்ருர். வடமொழியில் உள்ள நூலில் ஒரு பகுதியாக இருந்தபோதிலும் தமிழில் இயற்றியபோது அதனை ஒரு முழுமை நூலாக ஆறு காண்டங்களில் 10345 திருவிருத்தங்களால் இயற்றியுள்ளார். கம்ப ராமா யணத்தை ஒத்து இப்புராண நூல் ஒரு சைவக் காப்பியமாக மிளிர்கின்றது. இராமா யணத்திற்கு உத்தரகாண்டம் ஏழாவதாக இருப்பதுபோல் கந்தபுராணத்திற்கு உபதேச காண்டம் ஏழாவதாக இருக்கிறது. கம்பர் ஆறு காண்டங்களை மட்டும் இயற்றினர். ஏழாவது காண்டத்தை ஒட்டக்கூத்தருக்கு விட்டுவிட்டார். அதுபோலவே கச்சியப்பர் ஆறு காண்டங்களை மட்டும் பாடியிருக்க, ஏழாவது காண்டத்தைக் கோனேரியப்ப முதலியார் இயற்றினர்.

கச்சியப்ப சிவாச்சாரியர் அருளியுள்ள இக் கந்தபுராணம் படிப்பதற்கு மிகவும் சுவைபட இருக்கும். அதனைப் பிற்காலத்தார் உரைநடையிலும் எழுதி யுள்ளார்கள். அதனைச் சைவப் பெரியார் ஆறுமுக நாவலர் அவர்கள் மிகவும் தெளி வாகவும் உருக்கமாகவும் எழுதியுள்ளார்கள். உரை நடையில் உள்ள அவரது நூலைப் படிப்பவர்கள் சைவசித்தாந்தத்தின் உண்மைகள் முழுவதையும் எளிதில் அறியமுடியும்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கையும் மூலங்களிலும் பேருரைகளிலும் படித்துச் சித்தாந்தப் பொருளை உணர்வது மிகவும் கடினம். ஆனல் ஆறுமுக நாவலர் எழுதி யிருக்கும் கந்தபுராண உரையைப் பாயிரத்தோடு படித்தால் வெகு எளிதில் சித்தாந்தப் பொருள்கள் எல்லாவற்றையும் அறியமுடியும். இப்படி எளிதான முறையில் சித்தாந்தக் கருத்துக்களை அறிவதற்குக் கந்தபுராணம் பயன் தருவதால் அதனைக் கல்வியில் வல்ல பெரியோர்கள் மட்டுமன்றிச் சாதாரண மக்களும் அறியமுடியும். ஆகவே கந்தபுராணம் சைவத்திற்கு ஏற்ற நூலாக இருப்பது கொண்டு பொதுமக்கள் எல்லாரும் விரும்பிப் படிக்கிருர்கள்.

ஒரு தத்துவக்கருத்தை நன்கு விளக்குவதற்கு அதனை ஒரு வரலாற்று மூலமாக விளக்குவதுதான் சிறந்த முறை. நமது மொழிகளில் புராணங்கள் ஏற்படுவதற்குப் புராண வரலாறுகள்தான் சிறப்பாகப் பயன்படுகின்றன. எந்தச் சமயக்கருத்தையும் தத்துவக் கருத்தையும் எடுத்துக் கூறுவதற்குப் புராண வரலாறுகள் மிகவும் பயன் படுகின்றன. சைவ சித்தாந்தக் கருத்துக்கள் மிகவும் உயர்ந்தவை. அவைகளைப் பொதுமக்கள் அறிவது கடினம். ஆகவே விளக்குவதற்கு வரலாறுகள் தேவைப்படு கின்றன. கந்தபுராணத்தில் உள்ள வரலாறுகள் மற்ற புராணங்களைக் காட்டிலும் சிறந்த வகையில் இவைகளைக் கூறுகின்றன. ஆகவே கந்தபுராணத்தைச் சித்தாந்தக் கருத்துக் களை விவரிக்கும் நூல் என்று கூறவேண்டும். சிவகுமாரர்களாகிய மூத்தபிள்ளையார் இளையபிள்ளையார் இருவரின் வரலாறுகளும் கந்தபுராணத்தில் கூறப்பட்டுள்ள வகை யில் சித்தாந்தக் கருத்துத் தெளிவடைகின்றது. இதனை விவரிப்போம்.

வரலாறு மூலமாகச் சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் பகுதிகள் கந்த புராணத்தில் யுத்தகாண்டம், தட்சகாண்டம் என்ற இரண்டு காண்டங்களில் அடங்கி யுள்ளன. தட்சகாண்டத்தில் கயமுகன் உற்பத்திப்படலம் என்ற படலத்தில் மூத்த பிள்ளையாரின் வரலாறு கூறப்பட்டுள்ளது. யுத்தகாண்டத்தில் சூரபத்மன் வதைப் படலத்தில் இளையபிள்ளையார் வரலாற்றில் ஒரு சிறந்த பகுதி கூறப்பட்டுள்ளது. மீண்டும் தட்சகாண்டத்தில் வள்ளியம்மை திருமணப்படலத்தில் மற்ருெரு பகுதி கூறப்பட்டுள்ளது. இந்த இரண்டிலும் இறைவன் உயிருக்குச் செய்யக்கூடிய பேருளை அவ்வரலாறுகள் மூலமாக எடுத்துக்காட்டி உயிரிடத்துள்ள ஆணவத்தைப் போக்கி உயிரைத் தன்னடிமையாக்கி வாழ்விக்கும் செய்தி கூறப்பட்டுள்ளது. இந்தப் படிப்பினை வேறு புராணங்களில் இத்துணைத் தெளிவாகவும், உருக்கமாகவும் காண்ப தரிது. கந்தபுராணத்திலும் மற்றக் காண்டங்களில் முருகக்கடவுளின் உற்பத்தி, திருவிளையாடல், அவுணர்கள் வதை முதலிய அரிய கதைச்செய்திகள் கூறப்பட் டுள்ளன. ஆனல் தத்துவஞானம் மேற்கூறிய படலங்களில்தான் உண்டு.

முதலில் கயமுகன் உற்பத்தி வரலாற்றைக் கூறுவோம். அசுரர்களின் தலைவன். அசுரேந்திரன் தன் பகைவர்களாகிய தேவர்களை வருத்தவேண்டி ஒரு

வல்லமைஉள்ள மகன் வேண்டும் என்று தன் ஆசிரியரான சுக்கிரனைக் கேட்டான். அதற்குச் சுக்கிரன் வசிட்டன் மரபில் மரகதன் என்றெருரு முனிவன் இருக்கிறுன்; அம்முனிவனை உன்மரபில் ஒரு பெண்ணை அனுப்பி வயப்படுத்தின் நீ நினைக்கும் ஒரு மகன் தோன்றுவான் என்று சொன்னுன். அதன்படியே விபுதை என்ற ஒரு அசுரப் பெண்ணை அசுரேந்திரன் மரகதனிடம் அனுப்பினுர். அவள் அம்முனிவன் இருக்கைக்குச் சென்று அவன் அருகில் அமர்ந்து தானும் தவம் செய்தாள். தவம் முடிந்ததும் விபுதை முனிவன் எதிரில்செல்ல அம்முனிவன் அவளை விரும்பி இருவரும் ஆண்யானை பெண்யானைகளாக வடிவம் எடுத்தார்கள். அவர்கள் கலவியால் யானை முகத்துடன் ஒரு அசுரன் தோன்றினுன். அவன் சிவபெருமானைக் குறித்துப் பெருந் தவம் புரிந்து பல வரங்கள் பெற்று ஆட்சி புரிந்து தேவர்களை வருத்தினுன். தேவர்கள் துன்பம் பொறுக்கமாட்டாமல் இறைவனிடம் சென்று வழிபட இறைவன் யானைமுகம் உள்ள ஒரு மகனைப்பெற்று அவன்மூலமாகக் கயமுகாசுரனைவதைசெய்தார். கயமுகாசுரன் வதைக்கப்பட்டாலும் அவன் ஆன்மா வதைக்கப்படவில்லை. அவ்வசுரன் ஆகு அல்லது பெருச்சாளி வடிவமாகத் தோன்றினுன். யானை முகமுடைய பிள்ளையார் அப்பெருச்சாளியை அடக்கி அதனை வாகனமாக ஆக்கிக்கொண்டார். இதுதான் சுருக்கமாக மூத்த பிள்ளையாரின் வரலாறு.

"ஆய்ந்தநல் லுணர்வின் மேலோ ரறிவினு மணுகா வண்ணல்
ஈந்த தோல் வரத்தான் மாயா விபமுகத் தவுணன் வீழ்ந்து
வீந்தனன் போன்று தொல்லை மெய்யோரீஇ விண்ணு மண்ணுந்
தீந்திட வேரிகண்சிந்தச சீற்றத் தோராகு வானுன்". (251)

"தேக்கிய நதிசேர் கின்ற சென்னியன் செம்மல்தன்னைத்
தாக்கிய வருத லோடுஞ்சாரதன் ரேளினீங்கி
நீக்கருந் துப்பின்ருக்கி நீநமைச் சுமத்தி யென்று
மேக்குயர் பிடரிற்ருவி வீற்றிருந்தூர்த லுற்ருன்' (252)

இங்கே மூத்த பிள்ளையார் குரு அல்லது ஆசிரியன் நிலையில் இருக்கிருர். கயமுகன் ஆன்மா நிலையில் இருக்கிருன். அவன் ஆணவத்தால் பீடையுற்று ஆசிரியனை அறியாமல் இருக்கிருன். ஆசிரியன் மறக்கருணை உற்று அவனை வதைக்கிருர். மூத்த பிள்ளையாருடைய ஆயுதமான உடைந்த கொம்பு கயமுகன்மீது பட்டதும் அவனுக்கு ஆணவம் நீங்கி அடியனுகி ஆகு வடிவம் பெறுகின்ருன். மீண்டும் ஆணவம் அணுகாமல் இருக்கும்பொருட்டு ஆகுவை ஊர்தியாகக்கொண்டு அதன் மீது பிள்ளையார் அமர்கின்ருர். இதுதான் விடுபேறு.

இனி, இளைய பிள்ளையார் வரலாறு முதல் ஐந்து காண்டங்களில் விவரமாக உளது. முருகப்பெருமான் தோற்றம் முதல்கொண்டு சூரபத்மாதிகளை வதை செய்யும் வரைக்கும் முதல் நான்கு காண்டங்களில் கூறப்பட்டுள்ளது என்ருலும், சைவ

சித்தாந்தக் கருத்து தெளிவாகச் சூரபன்மன் வதைப்படலத்தில் கூறப்பட்டுள்ளது என்று அறியவேண்டும். சூரபத்மனோடு பெரும்போரில் வென்றபோது அவன் பல மாயங்கள் செய்தும் இறுதியில் தோற்றே போனான். அவன்மீது கருணைகாட்டி நல்வழியில் சேர்த்துக்கொள்ள எண்ணினார் முருகக்கடவுள். அதற்காக முருகப்பிரான் விசுவரூபம் அல்லது பெருருவம் கொண்டு காட்சி தந்தார். அதைப்பார்த்தான் சூரபன்மன். அப்பொழுது அவனுக்குச் சிறிது அறிவு தோன்றிற்று. உடனே முருகப்பெருமானின் திருவடியில் விழ்ந்து துதித்தான். அவனுடைய துதிப்பாடல்கள் பன்னிரண்டு அரிய பாசுரங்களால் அமைந்து இருக்கின்றன. அவற்றில் இருக்கும் சொல்லழகும் பொருள் அழகும் அளக்கமுடியாதன. இரண்டு செய்யுட்களை இங்கே எடுத்துக்காட்டுவோம்.

" கோலமா மஞ்ஞை தன்னிற் குலவிய குமரன் றன்னை
பாலனென் றிருந்தேனந்நாட் பரிசிவை யுணர்ந்திலேன் யான்
மாலயன் றனக்கு மேனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியிம் மூர்த்தி யன்றோ ". (433)

" ஆயிர கோடி காம ரழகெலாந் திரண்டொன் றாகி
மேயின வெனினுஞ் செவ்வேள் விமலமா சரணந்தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமை யார்வகுக்க வல்லார் ". (439)

இவ்வாறு துதிசெய்து கடவுளுக்கு அன்பனாகும் தருணத்தில் பழைய நினைவு வந்தது. தான் இவ்வளவு நாள் மிகப் பெருமையோடு வாழ்ந்த வாழ்வெலாம் வீணாய்ப்போக வேண்டுமா என்ற அவனுடைய தீய நெஞ்சம் முனைந்து தடுத்தது. மானம் என்னும் கொடிய ஆணவத்தன்மை அவனை ஆட்படுத்தியது. இதனை அழகாகக் கச்சியப்பர் கூறுகின்றார்.

" சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும் அங்கை
தாழுதல் வேண்டும் சென்னி துதித்திடல் வேண்டும் தாலும்
ஆழுதல் வேண்டும் தீமை யகன்றுநா னிவற்காளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மான மொன்றே ". (444)

ஆணவத்தின் பயனாக மானம் வந்து தடுத்திட மீண்டும் அவன் முருகக்கடவுள்மீது போருக்கு எழுந்தான். இனி இவனுக்கு நல்லுபதேசம் கூறிப் பயனில்லை என்றுகண்ட முருகப்பெருமான் அவனிடம் மறக்கருணைகாட்ட ஞானவேலாகிய தன் வேலாயுதத்தால் ஓங்கி அடித்து உடலை இருகூறாக்கி விட்டார். அவனோ வதைக்கப்பட்டும் பல வேறு வடிவங்கள் எடுத்து மீண்டும் மீண்டும் போருக்கு வந்தான். ஆனால் கடவுளை வெல்ல முடியுமா? ஒவ்வொன்றிலும் தோற்றுப்போனான். இறுதியில் இருகூறாகி மயிலும் சேவலுமாகக் கொக்கரித்துக்கொண்டு வந்தான். ஆனால் முருகக்கடவுளுடைய ஞான வேல்பட்ட காரணத்தினால் அவ்விரண்டிற்கும் உண்மையறிவு தோன்றிற்று. அவ்விரண்டின் மீதும் பெருமான் கருணைகொண்டு சேவலைக் கொடியாகவும் மயிலை ஊர்தி

யாகவும் ஏற்றுக்கொண்டு அருளினர். அப்போது ஆணவம் போய் ஞானம் வந்தது. அதனைக் கச்சியப்பர் அடியிற்கண்டபடி விரிக்கின்றார்.

" மருள்கெழு புள்ளேபோல வந்திடு சூரன்எந்தை
யருள்கெழு நாட்டம் சேர்த்த வாங்கவ னிகலைநீங்கித்
தெருள்கெழு மனத்த னாகிநின்றனன் சிறந்தார் நோக்கா
லிருள்கெழு கரும்பொன் செம்பொன் னாகிய வியற்கை யேபோல்" (495)

" தீயவை புரிந்தாரேனுங் குமரவே டிருமுனுற்றாற்
றூயவராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
யாயவும் வேண்டுங் கொல்லோ வடுசமரிந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா வருள்பெற் றுய்ந்தான்" (496)

சூரன், பத்மன், என்பவர்களுடைய ஆன்மாக்கள் ஆணவத்தால் பிடிபட்டு இருந்தன. முருகக் கடவுளுடைய ஞானவேலால் பரிச தீட்சை பெற்றதும் கரும்பொன் செம்பொன் ஆனாற்போல மாறின. இருவரும் ஞானமயம் அடைந்தார்கள். ஈருயிர் ஓருடலாய் இருந்த சூரபன்மர்கள் மயிலும் கோழியுமாகி மக்களால் தொழுதற்குரிய உருவங்களை யடைந்தார்கள். இந்த முறையில் இறைவனுடைய தீக்கையினல் ஆன்மா அறிவுபெற்று விடுபேறு எய்துகின்ற நிலை ஏற்பட்டது. இதுதான் சைவ சித்தாந்தத்தின்படி வீடுபேறு என்பதாகும்.

இனி, இதேகருத்து வள்ளியம்மை திருமணப் படலத்திலும் விளங்கக் கூறப் பெற்றுள்ளது. வள்ளியம்மை வெறும் மானுடப் பிறவி. மானுடப் பிறவியாக நிலவுலகில் தோன்றினர். அப்பிறவியிலும் வேடர் குலத்தில் கல்வி அறிவு இல்லாதவளாக வளர்ந்தாள். வேடர்களுடைய தாழ்வான தொழிலையே புரிந்துகொண்டிருந்தாள். முருகப் பெருமானுடைய கருணை நோக்கம் அவள்மீது விழுந்தது. அவளுக்குத் தெரியாமலேயே அவள் தூய்மை அடைவதற்கு வழி ஏற்பட்டது. அப்போது தமிழ் நாட்டில் நடக்கும் அகப்பொருள் துறை நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன. இறுதியில் எம்பெருமானுடைய திருக்கை பட்டதும் அவளுக்கு ஞானம் வந்தது. அதுவே பரிச தீக்கை ஆயிற்று. மானுடஉருவெடுத்த வள்ளியம்மை உயர்ந்த தேவஉரு அடைந்தாள்.

வள்ளியம்மை மானுட உருவம் தாங்கினபோது ஐந்து புலன்களால் ஆளப்பட்டுச் சிற்றறிவுடையவளாக இருந்தாள். அப்பொழுது ஆணவமும் இருந்தது. முருகக்கடவுள் நேரில் தோன்றியும் அந்த ஆணவத்தின் மயக்கத்தினுல் பெருமானை அறியாமல் இருந்தாள். ஆனல் பெருமானின் கைப்பட்டதும் ஆணவம் நீங்கி மனிதத்தன்மையும் நீங்கித் தூய்மை நெஞ்சமும் தேவ உருவமும் அடைந்தாள். முன் அடைந்திராத பேரின்பத்தை அடைந்தாள். இதுவே இறைவன் ஒருயிர்க்குத் தரும் திருவருளாம். உலகத்தில் ஆன்மாக்கள் தோன்றிப் பலவகைப்பட்ட அனுபவங்களும்

அடைந்து இறுதியில் இறைவனுடைய திருவடி அடையும் பக்குவம் வந்தால் அப் பேரின்பமாகிய விடுபேறு அடைய முடியும் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

மேலே கூறிய இரண்டு எடுத்துக்காட்டுக்களால் நாம் அறியக்கூடிய படிப்பினை யின் சிறப்புப் பற்றி மிகுதியாகச் சொல்லவேண்டியதில்லை. தமிழில் உள்ள சைவ நூல்களில் சிறந்ததான கந்தபுராணத்தில் இவ்விரண்டு வரலாறுகளும் உள்ளன. அவைகள் மிகத் தெளிவாக விடுபேறு என்னும் சைவசித்தாந்தத்தின் பகுதியை விளக்குகின்றன. தமிழில் உள்ள வேறு எந்த நூலும் இப்படி வரலாற்ருேடு விளக்கு கின்ற பகுதிகளைக் கொண்டதில்லை. கந்தபுராணம் ஒன்றில் மட்டும் மூத்த பிள்ளையாரின் வரலாறும் இளைய பிள்ளையாரின் வரலாறும் போற்றப்பட்டு இருக்கின்றன. அவைகளை ஒன்ருய் ஆராய்ந்தால் சித்தாந்த உண்மை முழுவதும் தெரியும். இதிகாசங்களாகிய இராமாயணமும் பாரதமும் கந்தபுராணத்தைப்போலச் சித்தாந்த உண்மையைத் தெரியப் படுத்துவதில்லை. ஆகவேதான் கந்தபுராணத்தைச் சைவ நூல் என்று சொல்லு கின்ருேம். சைவர்கள் சிறப்பாக இதனைப் படிக்கின்ருர்கள். பலபேர் நாடோறும் ஓதக்கூடிய பாராயண நூலாகவும் கந்தபுராணத்தை வைத்துக்கொண்டு முறையாகப் படிக்கின்ருர்கள். இந்த முறையில் கந்த புராணம் ஒரு தனிச்சிறப்பு நூலாக அமைந் திருக்கின்றது.

அன்புருவாகிய கடவுளை அன்பாலேயே தொழவேண்டும். அன்பு விலையில்லாத மாணிக்கம். உலகியலிலும்கூட அன்பாலேயே அமைதியைக் காணமுடிகிறது. அன்புள்ள இடத்தில் இன்பம் தானேவிளையும்.

— கயிலைக் குருமணி


சீகாழி : ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானம்



ஸ்ரீ முத்துச்சட்டைநாதசுவாமி




திருஞானசம்பந்தர்



திருத்தோணிபுரம் (சீகாழி)


திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்



இராஜகோபுரம்



ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி சந்நிதி




தருமை ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில்




பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி திருக்கோயில்

ஆச்சாள்புரம் :



திருக்கோயில் முன் தோற்றம்

திருக்குவளை ஸ்ரீ தியாகராஜசுவாமி தேவஸ்தானம் :




திருக்கோயில் தோற்றம்

காரைக்கால் — தருமபுரம் :




ஸ்ரீ யாழ்முறிநாதர்

திருச்சி — உய்யக்கொண்டான் :




திருக்கோயில்தோற்றம்

திருவாரூர் -- சித்தீச்சுவரம்




ஸ்ரீ தட்சிணாமூர்த்தி

தருமையாதீன மடாலயத்தில்:
ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் பூஜைமடம்




வெள்ளிக்கதவுத்திறப்பு

பரியலூர் : ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி தேவஸ்தானம்



கும்பாபிஷேகம்

குத்தாலம் ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி
தேவஸ்தானம்



திருக்கோயில்

சிவசைலத்தில் :



16-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் குருமூர்த்தம்

தருமையில் :



மேல குருமூர்த்தங்கள்

" நான் கண்டிலனே "

பண்டித. பொ. கருணுகரர்

யாழ்ப்பாணத்திலேயுள்ள சைவாலயங்கள் எல்லாவற்றிலும், பெரும்பாலும் திருவெம்பாவை படிக்கும் பத்து நாட்களிலும் கடவுண்மாமுனிவர் அருளிய திருவாதவூரடிகள் புராணம் படித்து உரை சொல்வது வழக்கம். ஏன் இக்காலத்தில் மட்டும் படிக்கவேண்டும் என்று கேட்டால் இங்குள்ளார் இதுஎங்கள் சற்குருநாத சுவாமிகளாய் அவதரித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் கட்டளை என்பார்கள்.

இந் நூலுக்குச் சிறந்த ஒரு விருத்தியுரையை நாவலர் பெருமானின் மாணவரும் சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியருமாகிய பிள்ளைப் புலவரென்னும் திரு. ம. க. வேற்பிள்ளை ஆசிரியர் அவர்கள் இயற்றினர்கள்.

இந்நூல் முழுவதும் பாடம்பண்ணுதவர்கள் யாருமில்லை எனலாம். இந் நூலும் கந்த புராணமும் எங்கள் பரம்பரைச் சொத்து என்ருலும் மிகைபடாது. ஆனல் தற்போது ஆலயங்களில் கந்த புராணத்திற்கு உரை, நாவலர் மாணவர்களின் வழிமுறையாய்ப் படித்து உரை சொன்னவர்கள் சிவலோகப் பிராப்தியானமையால் இப்போது சில இடங்களில் மட்டுமே படிக்கப்படுகிறது. எந்த ஆலயத்திலும் உற்சவ ஆரம்பத்திற்குமுன் மூன்று மாதங்களிற் படிப்பார்கள். கந்த புராணம் படித்தே உற்சவம் தொடங்கும். இது ஒரு நியதி. இப்படியே திருவாதிரைக்குமுன் ஒன்பது நாளும் திருவாதவூரடிகள் புராணத்தை உரை சொல்லத் தெரியாதவர்களும் உரைப் புத்தகத்தை வைத்துப் பார்த்துப் படிப்பார்கள்.

எங்கள் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் கனகாபிடேக விழா மலருக்குக் கட்டுரை எழுதி உதவுமாறு எழுதிய அன்பர்களின் கடிதம் இப் புராண படனம் நடைபெறும் போதே என் கைக்கு வந்தது. வந்தகாலைப் படித்த பகுதியையே கட்டுரையாக்க எண்ணினேம். எனவே புதியதொன்றுமில்லை ; பழமையே. மணிவாசகர் தமிழறிவைகைக் கரையில் நின்று கூறும் பாடல்.

இறைவன் அடியவரை ஆட்கொள்ளுவதற்காக, அடியும் உதையும் எறியும் பட்டவன். இவற்றிற்கெல்லாங் காரணம் இறைவனுக்குத் தாய் தந்தையரில்லாதபடியால்தான் இப்படி நிகழ்ந்தது என்பர் பட்டினத்தடிகள்.

" வில்லா லடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லா லெறியப் பிரம்பாலடிக்கக் களிவண்டு கூர்ந்
தல்லார் பொழிற்றில்லை அம்பல வாணர்க்கொரன்னை பிதா
இல்லாத தாலல்லவோ இறைவாகச்சி ஏகம்பனே "

இறைவன் உயிர்களைப் படைக்கவில்லை என்று பெருமைப்படக் கூறுவது சைவசமயம். ஆம், இப்படி அடியும், உதையும், எறியும் பட்டவரால் என்னதான் செய்ய முடியுமோ அறியேம். ஆனால் நாம் ஒரு தரங் கண்டாலோ ? என்றால் " காண் பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே " என்கிறார் கயிலாயம் கண்ட அப்பர் சுவாமிகள். வாக்கு மனோதீதன் இறைவன். ஆனாற் தொடர்பில்லாமற் போய்விடுமே என ஏங்காது கோசரன் என்று கூறிய படியால் வழிபாட்டிற்கு இரங்கி அருளுபவன் என்றவாரும். ஆளுடைய பிள்ளையாரும் " சொல் தெரியாப் பொருள் சோதிக்கப்பால் நின்ற சோதியான் " என்று அருளுகின்றார். முந்தை மறையாயிரம் முழங்கு திருவா யான் அம்மையே என அழைத்த காரைக்கா லம்மையாரும் " அருளாலே மெய்ப் பொருளைக் காணும் விதியுடையேன் " என்று அருளுகின்றார். அவனருளாலே அவன்றாள் வணங்கி, அவனருளே கண்ணாகக் காணவேண்டும் என்பதே முடிவா கின்றது.

இத்தகைய இறைவன் செம்மனச் செல்வி என்னும் பெருந்தவமுடைய அம்மை யாருக்குக் கூலியாளாய் வந்து பிட்டினை வாங்கி உண்டு வைகைக் கரையில் மண் சுமந்தாரே ; ஆம், ஒரு திருவிளையாடல் ; இருநில மகழ்ந்து கூடையுட் சொரிந்து இரங்கி நிற்பன் ; சிரமிசை எடுப்பன் ; மீள்வன் ; சிந்துவன், நகுதல் செய்வன். பாடுவன் ; ஆடல் செய்வன் ; பையவோர் கூடை மண்ணை நீடு திண் கரையிலேறச் சொரிகுவன் ; நெடிது நிற்பன் ; ஓடுவன் ; ஓடிமீள்வன் ; ஒருகைமண் கரையிலேறப் போடுவன் ; போகவென்னில் வருவன் ; வாவென்னிற் போவன்.

பிட்டுவாய் மிதப்ப உண்பார் பெருவலியுடையார் போல
வெட்டுவாரெடுத்த மண்ணைக் கொண்டுபோய் வேற்றுப்பங்கிற்
கொட்டுவார் உடைப்புமாறுங் கொள்கை கண்டார்த்துத் திண்டோள்
தட்டுவார் அயல் நின்றாரைத் தழுவுவார் களிப்புத் தாங்கி,

கொட்டுமண் சுமந்து செல்வர் கூடையை உடைப்பில் வீழத்
தட்டுவர் எடுப்பர்போலத் தாவி வீழ்ந்தலையிலோட
விட்டொரு மரத்தைப்பற்றி மிதப்பர்திண் கரையிலேற
முட்டுவர் சுழியிலாழ்வர் சேட்சென்று முளைப்பர் மீள்வர்

(பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடல்)

இவ்வாறு அங்கு நின்றோரது ஊனக்கண் கொண்டு காண உடன் விளையாடல் செய்த கூலியாளாகிய இறைவனுக்கு பாண்டியன் அடித்த அடி எல்லா உலகத்து

எல்லா உயிர்களுக்கும் பட்டதே. ஆம்; '' இறைவன் உலகெலாமாகி வேருய் உடனுமா யொளியாய் நிற்பார் '' என்று சிவஞான சித்தியார் கூறும்; ஒளி - சத்தி ; சிவஞான போதம் இரண்டாஞ் சூத்திரம்,

அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்கமின்றி நிற்கு மன்றே,

உடம்பில் உயிர்கலந்து நின்று உடலாயிருப்பதுபோல, உயிர்கள் நிலைத் தற்கு உயிர்களிடத்து இறைவன் கலந்து நிற்றலின் அவ்வுயிர்களேயாம் - அவையே யாய் - (ஒன்ருய்) கண்ணுக்குப் பொருளைக் காட்டும் சூரியன் வேருயிருப்பது போல, உயிர்களுக்கு அறிதற்ருெழில் நிகழ்வதற்குத் துணையாய் நின்று அறிவித்தலின், இறைவன் அவ்வுயிர்களுக்கு வேறுமாய் - தானேயாய், கண்ணொளி ஒரு பொருளைக் காண்பதற்கு, ஆன்ம போதம் உடனின்று கண்ணொளியோடு கூடப் பொருளிற் செல்லுமாறுபோல உயிர்கள் இன்ப துன்பங்களை அனுபவித்தற்கு, இன்ப துன்பங் களுக்கு முன்னிலையாகிய விடயங்களில் உயிரோடு கூட இறைவன் செலுத்தலின் உயிர்களோடு கூட உடனுமாய் - அவையே தானேயாய் நிற்பன். இவ்வாறு கூறும் பெருமை சைவசித்தாந்தத்திற்கேயுரியது.

இறைவன் நிற்கும் இந்நிலைமை மூன்றினையும் ஆளுடைப்பிள்ளையார் ஒரு பாசுரத்தால் விளக்குகிருர்.

'' ஈருய் முதல்ஒன்ரு யிரு பெண்ணுண் குணமூன்ருய்
மாரு மறை நான்காய் வருபூத மவையைந்தாய்
ஆருர் சுவை ஏழோசையோ டெட்டுத்திசை தாளுய்
வேரு யுடனுனிடம் வீழிம் மிழலையே ''

ஆன்மாக்களிடத்து மூன்று விதமாயும் நிற்கும் நிலையில் இறைவனைச் சத்தி எனவும், பஞ்ச கிருத்திய நிலையில் பதி யெனவும் - இது இறைவனது தடத்த லக்கணம் பொது வியல்பு எனவும், ஒன்றினும் தோய்வின்றிச் சுயம்பிரகாசமாய் - சச்சிதானந்த மாய் நிற்கும் உண்மை நிலை - சிவம் எனவும் இது சொரூப லக்கணம் எனவும் கூறுவர். ஆகவே உலகெலாமாகி நிற்கும் இறைவனுக்குப் பாண்டியன் அடித்த அடி சராசரங்களிற் படத்தானே வேண்டும். இதில் என்ன வியப்பு. அர்ச்சுனன் வில்லாலடித்த அடியும் எல்லாச் சராசரங்களிலும் பட்டதாக வில்லிபுத்தூராழ்வார் கூறுகின்ருர்.

'' விண்ணிலுறை வானவரிலாரடிபடாதவர்
விரிஞ்சனரியே முதலினேரதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி படாதவர்கள்
கட்சேவி மகிபன் முதலோர் ''

' பாய வாருயிர் முழுவதும் பசுபதியடிமை
ஆய எவ்வகைப் பொருள்களு மவனுடைப் பொருள்கள் ''

என்று தணிகைப் புராணங் கூறும்.

இறைவன், பெற்ருன்சாம்பானுக்குத் தீட்சை செய்யும்படி உமாபதி சிவாசாரியருக்கெழுதிய திருமுகத்திலும் '' அடியார்க்கெளியவன் சிற்றம்பலவன் '' என்றே தம்மைக் குறிப்பிட்டருளினர்.

எல்லாருக்கும் பட்ட அடி திருவாதவூரடிகளுக்கும் பட அவர் அயர்வு கொண்டு, உடனே உய்யவென்னையாட் கொள்வான் உவந்து கூலியாளாய் வந்து அடியும்பட்டனரே என்று மனமிரங்கி எம்பெருமான் மண்சுமந்த இடத்திற்கு விரைந்து சென்றருளினர். ''அழுங்கியரும் பெருநரகில் அடியேனும் விழாமல் எழுந்தருளிய பெருமானே! நீ இப்போது எங்குச் சென்றனை'' என்று தொழுங்கரமும் கண்ணீரும் துவங்கிய மெய்ப்புளகமுமாய் விழுந்து புரண்டு புலம்புகின்ருர். பிரம்படி பட்டபோது எம் பெருமாட்டியினுள்ளங் குழையவில்லையோ ? மண் சுமக்க இறைவியும் உடன் பட்டனளா? ஆனல் சடையிலிருந்த கங்கையாவது சுமந்த மண்ணைக் கரைத்து விட்டாலும் இந்நிலை வரமாட்டாதே! அன்னப்பட்சியின் வடிவெடுத்த பிரமாவினுலும் அறியமுடியாத முடியென்பதைக் கங்கை அறியாளோ ?

தேவரீர் மண்கூடையைத் திருமுடியிற்ருங்கும்போது வைத்த சும்மாடு - (சுமையடை) - தான் யர்தோ? பிரம விஷ்ணுக்கள் தம் பிறவியை நீக்குவான் பரிவுடனிட்ட பல மலரோ ? பத்தர்களிட்ட பச்சிலையோ ? ஆதிசேடனின் பலபடமோ? எதுதான் சுமையடையாயிற்ருே ?

வைகைக்கரையே திருஅம்பலமாகவும், வைகையின் பிரவாக ஓசையே தேவ துந்துபியாகவும் இந்த நிருத்தம் நிகழ்ந்ததே! வைகைக்கரையை அடைக்க வந்தவர்கள்தான் நிருத்த தரிசனங்கண்ட பதஞ்சலி வியாக்கிரபாதர் ஆனர்களோ ?

கந்தைச் சீலையினுல் அரையில் கட்டப்பட்ட கச்சையும், தோளில் மண்வெட்டியும், தலையிற் கூடையும் கவிழ்த்துக்கொண்டு, பெருந்தவச்சிமாட்டியான செம்மனச் செல்வி யின்பின் நடந்து சென்ற இந்தக் கூலியாள் வடிவை, என் கண் குளிர, மனங்குளிர இட்டமாகக் கண்டு களிக்கும் பேறு எனக்குக் கிடைக்கவில்லையே; எம் இறைவனே! என வேண்டுகிருர். இக்கூலியாளின் கோலத்தைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல் அமைந்தது பின் வருஞ் செய்யுள்:-

" கட்டுமரைத் துணிச் சீரைக் கச்சையுமத் திருத்தோளிற்
கோட்டுமுடித் தலைமீது கவிழ்த்ததொரு கூடையுமாய்ப்
பிட்டிடுநற் றவமுடையாள் பின்புவருந் திருக்கோலம்
இட்டமுறத் தொழும்படி நான் கண்டிலனே இறையோனே "

மண்சுமந்த திருக்கோலத்தை இட்டமுறத் தொழும்படி " நான் கண்டிலனே " என வருந்திய அடிகள் இதனைக் குறிப்பிட்டு,

" மண்சுமந்து கூலிகொண்டுஅக் கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய் "

என்று அருளுவாராயினர்.

'செந்தாமரைக் காடனைய திருமேனி' என்று வருணித்த அடிகள் 'புண் சுமந்த பொன்மேனி' என்று குறிப்பிடும் பரிவும் சிந்தித்தற்குரியது.

யோகம் என்பது மன ஒருமைப்பாடு. கடவுளோடு உயிர் இணைந்து இருக்கும் தன்மையே யோகம். பேரொளியாகிய நித்தியப் பொருள் ஒன்றோடு உயிரொளியாகிய நித்தியப் பொருள் இணைந்து இருப்பதே யோகம்.

— கயிலைக் குருமணி

சொல்லாய் தோழி!

திருமதி. சௌந்தரா கைலாசம்

1. மயிலேறி வந்தான்; மனங்கொள்ளை கொண்டான்
துயிலோடிப் போனதடி தோழி! — கயல்போலும்
கண்வெள்ளக் காடாகும் காட்சியினை' என்னுள்ளம்
கொண்டவனுக் கேயெடுத்துக் கூறு.

2. கூறிடுவாய் தோழி! குமரன் எழிற்கையில்
சீருறவே நிற்கின்ற சேவலிடம் — கூறிடுவாய்
பாவியெனைச் சூழ்ந்துவிட்ட பாழாம் இருள்தொலையக்
கூவிடவே மெத்தக் குழைந்து.

3. சேவற் கொடியேற்றிச் செங்கையில் வேலேற்றிக்
கோவைக் கனியிதழில் கொஞ்சுதமிழ்ப் — பாவேற்றி
நின்றான்; என்னெஞ்சைத் தன்னெஞ்சமதில் ஏந்தியவன்
சென்றான்என் செய்திடுவேன்? செப்பு.

4. நீறணிந்த நெற்றியனாய் நின்றான்என் னெஞ்சத்தில்
போரெழுப்பிக் கோயில் புகுந்து சிலை — யாகிவிட்டான்!
கல்லாய்ச் சமைந்திட்ட கந்தன் சிரித்துவரச்
சொல்லாய் ஒருவழிநீ தோழி!

பாண்டியர் வளர்த்த ஸம்ஸ்கிருதம்

திரு. தி. நா. சுப்பிரமணியன்

தமிழ்மொழிக்கும் பாண்டியர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மிகப் பழங்காலத்திலிருந்தே அவர்கள் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்து வந்தார்கள். அவ்விதம் அவர்கள் நிறுவிய சங்கங்கள் மூன்று என்பர். தலை, இடை, கடை என்னும் அம் மூன்று சங்கங்களும் எவ்வளவு காலம் நிலைபெற்றிருந்தனவென்பதைக் கர்ண பரம்பரையாகவரும் விவரங்களைக்கொண்டு கணக்கிட்டுப்பார்த்தால் அது பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும். அவர்கள் சங்கம் நிறுவிப் புகழ் எய்திய செய்தி அவர்களுடைய சாசனங்கள் பலவற்றிலும் பெருமையுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியைச் சிவபெருமான் முதலில் அகத்தியருக்கு உரைத்தார் என்று புராணங்கள் கூறும். அப்பால் அவர் தமிழுக்கு இலக்கணம் கண்டு எங்கும் பரப்பினாராம். பாண்டியனையும் அகத்தியருடைய சிஷ்யன் என்று சாசனங்கள் கூறும். அந்தக் குருசிஷ்ய பாவம் தமிழ்மொழி பற்றியதாகச் சாசனங்களில் காணப்பெறவில்லை. "பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது" பாண்டிய வம்சம் என்று சாசனத்திலே காணப்படுகிறது. அகத்தியரைப் புரோகிதராகப் பெற்றிருந்தார்களாம் பாண்டிய மன்னர்கள். இன்னும் அந்த முனிவராலேயே பாண்டிய மன்னன் முடிசூட்டப்பெற்றானாம்.

பாண்டியன் தென் தமிழின்கரை கண்டவன் என்றும் சாசனங்கள் கூறுகின்றன. 'தென்வரைமிசைக் கும்போத்பவனது தீந்தமிழிற் செவிகழுவி 'யவனாம். 'அகத்தியனோடு தமிழ் ஆய்ந்தான்' என்றும், 'அகத்தியனோடு தமிழ் தெரிந்தான்' என்றும் காணப்படுகிறது. இவற்றையொட்டியேபோலும் மதுரைக் காஞ்சிக்கு உரையெழுதும்போது நச்சினார்க்கினியர், "இதனால் அகத்தியனுடன் பாண்டியன் இருந்து தமிழ் ஆராய்ந்த சிறப்புக் கூறினார்" என்று உரைத்திருக்கிறார். இவ்விதம் தமிழ் வளர்ச்சியிலே பாண்டியனும் அகத்தியருக்குச் சமமாக வைத்துக் காட்டப்படுகிறான்.

பாண்டியமன்னர்களில் பலர் நல்ல கவித்திறமைபெற்றிருந்தார்கள். அவர்கள் இயற்றிய பாடல்களில் சில சங்கநூல் தொகுப்புகளிலும் இடம் பெற்றுள்ளன.

அவர்கள் தமிழைப் போலவே ஸம்ஸ்கிருதத்தையும் வளர்த்துவந்திருக்கிறார்கள். அந்த விவரம் இன்னும் நன்கு ஆராயப்பெறவில்லை. எனினும் அதைப்பற்றிய குறிப்புகள் அங்கங்கே கிடைக்கின்றன.

சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளில் பாண்டிய வம்சத்தின் பெருமையைக் கூறுமிடத்தில்,

> " உளமிக்க மதியதனுல் ஒண்தமிழும் வடமொழியும்
> பழுதறத் தான்ஆராய்ந்து பண்டிதரின் மேந்தோன்றியும் '

என்று கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து பாண்டியர்கள் ஸம்ஸ்கிருதத்தையும் ஆராய்ந்து நல்ல புலமைபெற்றுப் பண்டிதர்களில் உயர்ந்தவர்களாகத் திகழ்ந்தனர் என்பது தெரியவரும். அதேசாசனத்தின் ஸம்ஸ்கிருதப் பகுதியில் அரசபரம்பரையின் முன்னேர்களைக் கூறுமிடத்தில்,

> ஸமஸ்த சாஸ்த்ரார்ணவ - கர்ண தாரோ
> யதுத்பவோ ஸுந்தரபாண்ட்ய நாமா

அதாவது, " அந்த வமிசத்தில் சகல சாஸ்திரங்களாகிய கடலின் மீகாமனுன சுந்தர பாண்டியன் தோன்றினன் " என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எல்லாச் சாஸ்திரங்களையும் அறிந்த சுந்தரபாண்டியன் " என்று ஒருவன் பிரசித்தமாக இருந்தானென்பது பெறப்படும்.

சுந்தரபாண்டியன் என்பான் இயற்றியதான ஸம்ஸ்கிருத நூல் ஒன்று கிடைத்துள்ளது. ' நீதி - த்வி - ஷஷ்டிகா ' (ஈர்அறுபது நீதி) என்ற பெயர்கொண்டது. அறுபது அறுபதாக இரண்டுவிஷயங்களைப்பற்றி மொத்தம் நூற்றிருபது சுலோகங்கள் கொண்ட நூலாக அது இருத்தல்வேண்டும். அது அச்சாகியுள்ளது. அதிலே ஆரம்பத்திலும், கடைசியிலும் உள்ள மங்கள சுலோகங்களையும் சேர்த்து நூற்றுப் பதினறு சுலோகங்கள் உள்ளன. அதிகப்படியாகக் கிடைத்த முப்பத்துமூன்று சுலோகங்கள் தனியாகப் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அந்த நூல் மிகவும் பழமையானதென்றும், வித்துவான்களால் பெரிதும் போற்றப்பட்டுவந்ததென்றும் தெரிகிறது. சுலோகங்கள் அழகாக நல்ல பொருட் செறிவு கொண்டவை. பிற்காலத்துத் தொகைநூல் ஆசிரியர்கள் பலரும் அதன் சுலோகங்களைத் தங்கள் தொகுப்பில் சேர்த்திருக்கிருர்கள். ஜல்ஹணருடைய ஸூக்தி முக்தாவளி, வல்லபதேவருடைய ஸுபாஷிதாவளி, ஸார்ங்கதரபத்ததி, போதயார்ய ருடைய பிரஸங்கரத்நாவளி, பேத்திப்பட்டருடைய ஸூக்திவாரிதி என்பன போன்ற தொகுப்புகளிலே இதன் சுலோகங்களைக் காணலாம். இன்னும் பஞ்சதந்திரத்திலும் இதில் காணும் மூன்று சுலோகங்கள் உள்ளன. அதேபோல இந்த நீதிநூலில் உள்ள சுலோகம் ஒன்று ஜாநாச்ரயி - சந்தோவிசிதி என்னும் வியாகரண நூலில் உதாரண மாக ஆளப்பட்டிருக்கிறது. கிருஷ்ணு, கோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட வேங்கி நாட்டைக் கி. பி. ஏழாம் நூற்ருண்டின் ஆரம்பகாலத்தில் ஆண்டுவந்த விஷ்ணுகுண்டி வமிசத்துக் கடைசி அரசனுன மாதவவர்மனுக்கு ஜநாச்ரயன் என்று பெயர். அவன்

ஆட்சிக்காலத்தில் அவன் பெயரைத் தாங்கி எழுந்ததே ஜா நாச்ரயி என்னும் நூல். பஞ்சதந்திரமும் கி. பி. 500 - ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அதனுல் சுந்தரபாண்டியன் எழுதிய இந்த நீதிநூலும் கி. பி. ஆரும் நூற்ருண்டுக்கு முற்பட்டதாகுமென நிச்சயமாகக் கொள்ளலாம். அந்த நூலின் முதல் சுலோகம் பின்வருமாறு :

ஸ்ரீமாந் ஸுந்தரபாண்ட்ய: ச்ருதி ஸ்ம்ருதி ப்ரஸ்ருதஸத் பநார்த்தஜ்ஞ: I
க்ருத்வாந் ஆர்யாம் ஸம்யக் ச்ரோத்ருணும் புத்திவ்ருத்தி சரீம் II

" வேதம், ஸ்ம்ருதி ஆகியவற்றின் வழிவந்த நல்லறிவைப் பெற்ற சீமான் சுந்தர பாண்டியன் நன்ருகக் கேட்பவர்களின் புத்தியை விருத்திசெய்யக்கூடிய இந்த ஆர்யையைச் செய்தான் ".

இதிலிருந்து அந்தநூலே இயற்றிய சுந்தரபாண்டியன் வேதங்களிலும் ஸ்மிருதிகளிலும் ஆழ்ந்த ஞானம் உள்ளவன் என்பது பெறப்படும். அதன் கடைசிச் சுலோகம் வருமாறு :-

இமாம் காஞ்சன பீடஸ்தாம் ஸமேத்ய கவயோ புவி I
ஆர்யாம் ஸுந்தரபாண்ட்யஸ்ய ஸ்நாபயந்தி வதூம் இவ II

" சுந்தரபாண்டியனுல் பொன்பீடத்தில் அமர்த்தப்பெற்ற இந்த ஆர்யையைப் பூமியில் உள்ள கவிஞர்கள் அடைந்து மணப்பெண்ணைப்போல அபிஷேகம் செய்வார் களாக " என்று இது பொருள்படும்.

ஆர்யா (ஆர்யை) என்பது குறள்போல, ஸம்ஸ்கிருதத்திலே பாவினம் ஒன்றன்பெயர். பாவினத்தின் பெயரையே வள்ளுவர் நூலுக்கு இட்டது போலச் சுந்தரபாண்டியனும் தன்னுடைய நீதிநூலுக்கு ஆர்யை என்ற பெயரைச் சூட்டி விட்டான்.

பாண்டியமன்னன் நடத்திய தமிழ்ச் சங்கத்திலே சங்கப்பலகை ஒன்று இருந்த தென்றும் கேள்விப்படுகிருேம். சங்கத்தார் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் புலவர் களும் நூல்களுமே அந்தப் பலகையில் அமரலாம். சுந்தரபாண்டியனுடைய நீதி நூலும் பொன்பீடத்தை அலங்கரித்ததென்று இந்தச் சுலோகம் கூறுவதிலிருந்து, தமிழைப்போலவே ஸம்ஸ்கிருதத்துக்கும் பாண்டியமன்னன் ஒரு சங்கம் நிறுவி அதற்கும் சங்கப்பலகை ஒன்றை அளித்திருந்தானே என்று எண்ணத்தோன்றுகிறது. அவ்விதமானுல் சங்கப்பலகை என்பது பொன்பீடமாகும். சிறந்த புலவர்களால் ஏற்றுக் கொள்ளப்பெறும் ஒரு புலவருக்கும் அவருடைய நூலுக்கும் பொன்பீடமே சிறப்பு அளிப்பதாகும்.

அந்தநூலின் சுலோகங்கள் எளிய நடையில் அழகாக அமைந்துள்ளன. உதாரணமாக, இரண்டுமூன்றைக் காட்டலாம்.

ச்வா யதி தம்சதி மநுஜாந் நதே ஜநாஸ் தம் புந: ப்ரதி தசந்தி ।
யத் யாக்ரோசதி நீசோ ந ஸஜ்ஜநஸ்தம் வததி கிஞ்சித் ॥

"நாய் மனிதனைக் கடித்தால், மனிதன் அதைத் திருப்பிக் கடிப்பதில்லை. நீசன் கோபித்துக்கொண்டால் நல்லவர்கள் அதைச் சிறிதும் சொல்லமாட்டார்கள்."

குல-சீல-வ்ருத்த-தோஷாந் வித்யா-தோஷாம்-ச்ச கர்ம-தோஷாம் ச்ச ।
கதயதி பரஸ்ய நீசோ ந து ஸ்மரத் யாத்மநோ தோஷாந் ॥

"நீசன் பிறருடைய குலம், சீலம், நடத்தை, வித்தை, செயல் முதலியவற்றின் குற்றங்களை எடுத்துக் கூறுவான்; தன்னுடைய குறைகளை நினைத்தும் பார்ப்பதில்லை"

சிரஜீவித்வம் அனர்த்த: புருஷஸ்யாதர்ம சாரிணோ பவதி ।
சிரஜீவித்வம் ஸபலம் பவதி ஹி தர்மைக-நிரதஸ்ய ॥

"தர்மத்தின்படி நடக்காதவன் நீண்டகாலம் வாழ்வது அனர்த்தம் (பொருள் அற்றது) ஆகிறது; தர்மத்தில் நிலைநிற்பவன் நீண்டகாலம் வாழ்வது பலன் அளிப்பதாக ஆகிறது." (78)

ஆசார்யர் சுந்தரபாண்டியர் என்ற ஒருவரைப் பற்றியும் கேள்விப்படுகிறோம். அத்வைத மதத்தை ஸ்தாபித்த ஆதிசங்கரர் என்னும் பகவத்பாதாள் தம்முடைய பிரம்ம ஸூத்ர பாஷ்யத்திலே ஸமந்வயாதிகரணத்தின் கடைசியிலே தம்முடைய கொள்கையை நிருபிப்பதற்கு மூன்று பழைய சுலோகங்களை மேற்கோள் காட்டுகிறார். அந்தச் சுலோகங்களை யார் எழுதினர் என்பதை அவர் விவரிக்கவில்லை. அந்நாளிலே அவை பிரசித்தமாக இருந்தனபோலும். பின்னல் வந்த விருத்திகாரர்கள் சிலர் அந்தச் சுலோகங்களை ஆசார்ய சுந்தர பாண்டியர் எழுதியனவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "ஆத்மாவே பிரம்மம், அதுவே நன்மை தீமைகளையும் மற்ற வேறுபாடுகளையும் கடந்துநிற்கும் பேருண்மைப்பொருள். அதாவது 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்னும் ஞானத்தை அடையும் வரையில்தான் சாஸ்திர விதிகளும் பிரமாணங்களும் பயன்படும்" என்பதை விளக்கித் தெளிவாகக் கூறுகின்றன அந்த சுலோகங்கள்.

அதேபோலப் பூர்வமீமாம்ஸைக்குக் குமாரிலபட்டர் எழுதிய விரிவுரையான தந்திரவார்த்திகத்தின் பலாபலாதிகரணத்திலே ஐந்து சுலோகங்களை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார். பின்னல் வந்த விருத்திகாரர்கள் அவற்றையும் ஆசார்யர் சுந்தர பாண்டியர் இயற்றியவை என்றே கூறியிருக்கிறார்கள். பூர்வமீமாம்ஸையில் வரும் அப்ராப்தபாதத்தை அழகாக உதாரணம் காட்டி விளக்குவன அந்தச் சுலோகங்கள்

''மேல்மாடத்தில் ஒரு பழம் இருக்கிறது. பூமியிலிருந்து அதை அடையப் படிகள் உண்டு. இருவர் அதை அடைய முயல்கின்றனர். ஒருவன் பூமியில் நிற்கிருன். மற்றவன் முதல்படியில் இருக்கிருன். இருவருடைய வேகமும் சக்தியும் ஒரேவிதம். அப்படியானுல் முதல்படியில் உள்ளவன் பழத்தை அடைகிருன். மற்றவன் ஏமாற்றத்தோடு திரும்புகிருன்.''

அவற்றை ஆராய்ந்த ஆசிரியர்கள் பின்வருமாறு முடிவுகட்டியிருக்கிருர்கள்:-

1. குமாரிலர், சங்கரர் போன்ற பெரியோர்களால் மேற்கோளாகக் குறிக்கப் பெற்ற ஆசாரியர் சுந்தரபாண்டியர் வேத, வேதாந்தங்களை நன்கு அறிந்து பூர்வ, உத்தர மீமாம்ஸைகளில் ஆழ்ந்த ஞானம் பெற்றுச் சிறந்த வித்துவானுகப் பலரும் மதித்துக் கொண்டாடப்பெற்றவராக இருத்தல்வேண்டும்.

2. அவர் பூர்வ, உத்தர மீமாம்ஸைகளுக்கு வார்த்திகம் என்ற பெயரில் விருத்தியுரை எழுதியிருத்தல்வேண்டும். அவை பெரும்பாலும் அநுஷ்டுபுச் செய்யுளால் ஆனவைபோலும். ஜைமிநி, பாதராயணர்களுடைய சூத்திரங்களுக்குப் பூர்வாசிரியர்கள் எழுதிய விருத்திகளின் பேருரைகளாக வார்த்திகம் அமைந்திருந்தன போலும்.

3. பாண்டிய தேசத்தவரான அவர் தமிழ்நாட்டுச் சைவர்களுக்குள்ளே உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பவரென்றும் கொள்ளுதல் கூடும்.

4. அவர் கி. பி. எட்டாம் நூற்றுண்டுக்கு முற்பட்டவராதல் வேண்டும். ஸாங்க்ய - காரிகையின் கடைசிச் செய்யுளுக்கு உரை எழுதும்போது வாசஸ்பதிமிச்ரர் 'ராஜவார்த்திகம்' என்னும் பழைய நூலிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிருர். அதுவும் ஆசார்யர் சுந்தரபாண்டியர் எழுதியதெனவே கொள்வர் ஆராய்ச்சியாளரில் ஒருவர்.

வேதாந்தியான ஆசார்யர் சுந்தரபாண்டியரே நீதிநூலை எழுதிய சுந்தர பாண்டியன் என்று கொள்வாரும் உண்டு. அது எவ்விதமாயினும் சின்னமனூர்ச் செப்பேடுகளில் சகல சாஸ்திரங்களாகிய கடலின் கரைகண்டவன் என்று குறிக்கப் பட்டுள்ள சுந்தரபாண்டியன் இந்த ஆசாரியரே ஆவர் என்பதை நிச்சயமாகக் கொள்ளலாம்.

இன்னும் ஒரு சுந்தரபாண்டியனைப்பற்றியும் கூறலாம். கேரள நாட்டைச் சேர்ந்த கிருஷ்ணலீலாசுகர் என்பவர் 'புருஷகாரம்' என்ற பெயரில் எழுதிய வியாகரண நூலில் சுந்தரபாண்டியன் எழுதியதென்று ஒரு சுலோகத்தின் பாதியை

மேற்கோள் காட்டுகிருர். எனினும் அது வீரபாண்டியன் என்பான் இயற்றியதெனக் கூறப்படும் ‘கிரியாநிகண்டு’ என்பதில் காணப்படுகிறது. ‘வீரபாண்ட்ய க்ஷிதீசேந வக்ஷ்யந்தே சிக்ஷிதும் சிசூர்’ என்று அதிலே கூறப்பட்டிருப்பதிலிருந்து இது விளங்கும். வீரபாண்டியன் எழுதியதாகக் குறிக்கப்பட்டுள்ள ஒரு நூலிலிருந்து கொடுக்கப்படும் மேற்கோளைச் சுந்தரபாண்டியன் எழுதியதாக ஆசிரியர் கூறுவதைக் கொண்டு வீரபாண்டியனுக்கே சுந்தரபாண்டியன் என்ற பெயர் இருந்திருத்தல் வேண்டும் அல்லது சுந்தரபாண்டியன் எழுதி வீரபாண்டியன் பெயரில் அதை வெளியிட்டிருத்தல் வேண்டும் எனக்கொள்ளலாம்.

வீரபாண்டியன் ஒருவன் அளித்த தானத்தைத் தெரிவிக்கும் செப்பேட்டுச் சாசனம் ஒன்று சமீபத்திலே சிவகாசியிலிருந்து கிடைத்துள்ளது. அவனைச் சோழன் தலைகொண்ட வீரபாண்டியன் எனக்கொள்ளலாம். அந்தச் சாசனத்திலே அவனுடைய அண்ணன் ஒருவன் சுந்தரபாண்டியன் என்ற பெயர் கொண்டிருந்தான் என்றும் அவன் ‘வித்துவான்களுக்குப் புகலிடம்’ (விபுதாச்ரயன்) என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. அதனாலேயேபோலும் அண்ணன் இருக்கத் தம்பிக்கு இராஜ்யம் கிடைத்தது. அந்த நாளிலே இராஜசபையிலே ஸம்ஸ்கிருத வித்வான்கள் பலர் இருந்திருக்கிருர்கள். கிரியாநிகண்டு இயற்றப்பட்ட காலமும் அதுவே எனக்கொள்ளலாம்.

பாண்டியமன்னர்களிலே இன்னும் சிலரும் ஸம்ஸ்கிருதத்திலே நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தனர். இராஜசபையிலும் ஸம்ஸ்கிருத வித்துவான்கள் பலர் இருந்திருக்கிருர்கள். உண்மையில், தமிழ்நாட்டில் ஸம்ஸ்கிருதமொழி வளர்ந்த வரலாற்றை இன்னும் சரியாக ஆராய்ந்து யாரும் எழுதவில்லை. அவ்விதம் எழுதினல் மற்றத் துறைகளைப் போலவே ஸம்ஸ்கிருதத்திலும் ஒருகாலத்தில் தமிழ்நாடு முன்னணியில் நின்றதென்பது நன்கு விளங்கும். அதிலும் பாண்டியர்களுக்குச் சிறப்பான ஸ்தானம் நிச்சயமாகக் காணப்படும்.

இவ்விதம் ஸம்ஸ்கிருதம் வளர்த்த பாண்டியர் அனைவரிலும் ஆசாரியர் சுந்தரபாண்டியர் பெயர் தலைசிறந்து நிற்பதாகும். மீமாம்ஸை நூல்களும் வேதாந்த நூல்களும் பயிலப்பெறும் காலம் முழுதும் இராஜரிஷியான அவர்பெயரும் நிலைத்து நிற்கும்.

ஆண்டருள் தாயே!

தருமையாதீன இசைப்புலவர்,

இசையரசு. திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்

பண் - ஆரபி (பண்ணியல்) பாணி - மிச்ரசாபு

அன்புகொண்டென்னை யாண்டருள்
அங்கயற்கண்ணி (அன்பு)

(துணைப்பண்ணியல்)

இன்பநல்வாழ்வினிலே
இழிசொற்புகாமலே
இன்னல்தனையகற்றி
ஈடேற்றவேண்டும்தாயே (அன்பு)

(பண்ணியல் முடிபு)

முன்னம் எனக்களித்த
தன்மையினுல் அகம்
முகமலர்ந்தேன் நினது
அருள்வியந்தேன்
தொன்மை மரகதமாய்த்
துலங்கும் பசுங்கிளியே
தூயஆரபிதன்னில்
தோன்றியுறைபவளே (அன்பு)

மீனினமும் தமிழிசையும்

பண்டித. வி. சீ. கந்தையா

இயல், இசை. நாடகம் என்ற மூன்று பிரிவுகளாக முன்னோரால் வளர்க்கப் பெற்று வந்த ஒரு பண்பட்ட மொழி நமது தமிழ். இலக்கணம், இலக்கியம் என்பவற்றைப் போலவே இசைக்கலையும் நாடகக்கலையும் தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக முன்பு வழங்கின. எனினும் பழங்காலத்தில் இக்கலைகள் அடைந்திருந்த பெருஞ் சிறப்பை நாம் முற்றும் அறிந்து பயனுற முடியாதவாறு கால வெள்ளமும் கடல்கோளும் செய்த இடையீடு பெரிதாயிற்று. தமிழ் வளர்த்த சான்றோர் காலத்திருந்த சிறந்த இசை, நாடகத்தமிழ் நூல்கள் எனக் கூறப்படும் பெருநாரை, பெருங்குருகு, இசை நுணுக்கம், பஞ்சபாரதீயம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பன இக்காலத்தில் நமக்குக் கிடைத்தில. ஆயினும் இந்நூல்கள் எழுந்த காலத்தும் பின்னரும் இக்கலைகள் இருந்தவாற்றைச் சிலப்பதிகார உரையிலும், பிற மேற்கோள்களிலும் இருந்து எடுத்து விளக்கப் பிற்கால அறிஞர்கள் முற்பட்டிருக்கிறார்கள். அவர்களுட் தலைசிறந்தார், யாழ்நூல்தந்த ஈழத்தடிகளான சுவாமி விபுலாநந்தர் ஆவார். அவர்கள் யாத்த மதங்கசூளாமணி என்னும் நாடகத் தமிழ் நூலும் யாழ்நூல் என்னும் இசைத் தமிழ்நூலும் தமிழுலகு பெற்ற பெருங் கொடைகளாக மிளிர்கின்றன.

"...காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும்மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர் புகழும்
ஏரால் இயன்ற செந்நெல் இனசுவைத்தீங் கன்னலொடு
தெங்கினிள நீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப் பென்னும் மாநாடங் நாட்டினிடை..."

என்று விபுலாநந்த அடிகளார் மட்டக்களப்பு நாட்டின் இயற்கை வளத்தினைச் சிறப்பித்து யாழ் நூலுட் கூறியுள்ளார்கள்.

ஈழத்தீவின் கீழைக் கடல் சார்ந்து கிடக்கும் வளம் சான்ற; அந்த மட்டக்களப்புத் தமிழ்த்திருநாட்டினை இரு நெடுங் கூறாகப் பிரித்து நடுவணதாகச் செல்லும் நீர்நிலை ஒன்று உண்டு. அது மட்டக்களப்பு வாவி என்று அழைக்கப்படுவது. கடற் கழிமுகத்தினையுடைய இந்நீர்நிலைதான் உலகப் புகழ்பெற்ற பாடும் மீன் (Singing Fish) களுக்கு உறைவிடமானதாகும். 'பல்வளம் செறிந்து பாலும் பசுநறுந்தேனும்

பாயும் மல்லலந் திருநாடான மட்டு நன்னடு' இப்பாடும் மீன்களின் இசைச் சிறப்பினல் 'மீன்பாடும் தேன் நாடு' என்று ஈழத்தில் இது புகழப்படுகிறது. இந்த இன்னெலி முதலாகப் பிறந்த அநுபவமும், சிலப்பதிகார அரங்கேற்று காதை இசையாராய்ச்சியுமே அடிகளார் மூலம், தமிழ் அன்னைக்கு 'யாழ்நூல்' என்ற இறவாத புகழுடைய பெரு நூலொன்று கிடைக்கச் செய்தன. தமிழால் இசை வளர்த்த நம் முன்னோரின் சிறப்புக்களை, அடிகளார் தாம் கேட்டநுபவித்த "விளங்குமட்டு நீர்நிலையுள் எழுந்த ஒரு நாதம்" (புகழ் பொருந்திய, மட்டக்களப்பு நாட்டில் உள்ள நீர்ப் பரப்பினடியிலிருந்து எழுகின்ற இன்னிசை) தந்த தமிழ் ஒலியிலிருந்தே ஆராய்ச்சி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

வானம் களங்கமற்றிலங்கும் வைகாசி, ஆனி மாத நிறைமதி நாட்களிலே, உருக்கின வெள்ளியை வார்த்தாலென்ன விளங்கும் மட்டக்களப்பு வாவியின் நீர்ப்பரப்பு இந்த இன்னெலியால் நிறைவுற்றிருக்கும். விண்ணுலகோரும், மண் மடந்தையின் மீது விழைவு கொண்டு இங்குவரவைக்கும் பேரெழில் வாய்ந்த வெள்ளி நிலவின் குளிப்பு மட்டக்களப்பு வாவியை மட்டுமின்றி அதனைச் சூழ்ந்து கிடக்கும் பெருநிலப் பரப்பினையும் அழகுசெய்து நிற்கும். மீன் பாடுதலைக் கேட்க விரும்புவோர், அவ்வின்ப வேளையில் புளியந்தீவு எனப்படும் மட்டு நகருக்கும் கல்லடி என்னும் ஊருக்கும் இடையில் உள்ள வாவிப்பகுதிக்குத் தோணியேறிச் செல்லுதல் வழக்கம். நீண்ட கோல் ஒன்றினை நீரில் நட்டு அதனருகில் நின்று செவிகொடுத்துக் கேட்கும்போது குறித்த இசைத் தொகுதியை நாம் நன்கு அனுபவித்தல் கூடும். இவ் வின்னிசையின் சுவை தேர்ந்தோர் ஈடெதுவும் காணுத இன்ப நிலையினை இதற்கு உவமை காட்டுவர்.

வீணை நரம்புகளைத் தனித்தனி நெருடிவிட்டாலொத்த ஒலிக்குறிப்புகளும், குழலின் மெல்லொலிபோன்ற கீற்றெலிகளும், மென்பட்டுத்தாளினை வாயில்வைத்து ஊதுதலாற் பிறக்கும் இனிய ஓசைக்கூறுகளை ஒத்தனவும், ஆர்மோனியத்தின் அடிக் கட்டைகளை விட்டுவிட்டு நசித்தலால் எழுவதுபோன்ற எடுத்தல் போன்ற ஒலிக் கூறுகளும் கலந்து கேட்கும். பாடும்மீன்களது இசைக் கச்சேரியின் இன்பமானது, இசை இன்பம் நுகர்ந்த செவிகளையுடையாரை மெய்மறக்கச் செய்து விடுவதில் வியப்பில்லை எனலாம். இவ்வருமைப்பாட்டினல் ஈழத்துக்கு வரும் அயல்நாட்டவர் எல்லாரும் இவ்வொலியைக் கேட்கப்பெறுதலைப் பெரும்பேறெனக் கருதுவர். மட்டக் களப்பு மண்ணகத்தை அழகு செய்துகிடக்கும் நீர்ப்பரப்பாகிய மட்டக்களப்பு வாவியும், இதனல் உலகோர் மனத்திடை உயர்ந்த மதிப்புப் பெறுவதாயிற்று.

எனினும், மட்டக்களப்புத் தமிழகத்து மீனினம், தமிழிசைப் பிறப்பு முறையின் அமைந்ததோர் இன்னிசையினையே கிளத்துகின்றதென்பதை நுணுகியறிந்து, யாழ் நூலுட்பொறித்து உலகிற்குக் காட்டிய பெருமை விபுலாநந்த அடிகளாரையே சார்ந்த

தாகும். மீனினம் இத்தகைய உயர்ந்த இசையினைப் பாடுதல் மாட்டாது என மறுத்துக் கூறிய அடிகளார், இந்த இசைப்பிறப்புக்குக் கற்பனையானமைந்த வேறொரு காரணத்தினைக் காட்டுகின்றார். நீரரமகளிர்தம் இன்னிசைப்பாடல் இது என்று கூறுகின்றது அவர்களது கவிதைஉள்ளம்.

தாமும் இசையறி புலவனொருவனும் இந்த இன்னொலியைச் செவிமடுப்பதற்காக வேண்டிய சூழ்நிலைகளனைத்தும் நன்கமைந்த நடுயாமப்பொழுதொன்றில் தோணி ஏறிச் சென்றனரென்றும், அக்காலை, எழுவர் அரமகளிர் நீருள் இருந்தெழுந்து நின்று, அவ்விசைத்தோற்றம் தமிழிசைப் பிறப்பு முறையினமைந்திருத்தலைக் காட்டிச் சென்றனரென்றும் கவிதை செய்து யாழ்நூலுள் அவர்கள் சேர்த்துள்ளனர்.

" ... ... எழுவர் மடநல்லார்
நீருள், இருந்தெழுந்து நின்றார். அரமகளிர்
... ...
கவிமுகத்தை, நோக்கிச், கனிந்துரைப்பார், யாங்கிளையே
புவியிலெனைத், தாரமென்பார், புதல்வியிவள், பேருழையே
உழையின், மகள்குரற்பேர், உற்றாள், இளிதநயை
பிழையில், இளிபாற், பிறந்தாள்பேர், துத்தமே
துத்தம், பயந்த சுதைவிளரிப், பேர்பூண்டாள்
உய்த்த விளரிக், குறுதநயை, கைக்கிளையே
போன்னின், கபாட, புரத்துறைவோம், மாவலிநீர்
தன்னிற் படிந்து சமனொளியைக் கும்பிடுவோம்
... ...
திங்கள் நிறைநாளிற் சேர்வோம்இந் நீர்நிலையைக்
கங்குல் கழியுமுன்னே கார்படிந்த மைக்குடலைச்
சென்றுயாம் சேர்வோம்எம் செய்கை இதுஎன்றார்...".

என்பது அக் கவிதையின் பகுதி. இங்குத் தமிழிசை ஏழனையும் எழுவர் அரமகளிராகப் புனைந்து கூறுகின்றது அவர்களது கற்பனை உள்ளம். அவ் அரமகளிர் வாயிலாகப் பழந்தமிழ் இசைப்பிறப்பு முறையினை அடிகள் இங்குக் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மீனினம் தமிழிசைக்கு நூல்தந்த வரலாறு இது.

தமிழிசைப் பிறப்பு முறையினை இத் தொடர்களிலிருந்து நாம் நோக்குதல் வேண்டும். அடியார்க்கு நல்லாருடைய உரையுள், இசைபற்றிவரும் பகுதிகளிலே தாரத்திலிருந்து உழையும், உழையிலிருந்து குரலுமாகத் தொடர்ந்து, தாரம், உழை, குரல், இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்றமையும் முறையே தமிழ் இசையின் பிறப்பு முறையாம் எனக் கூறப்பட்டுள்ளது. இது ஐந்தாம் நரம்பின் அமைவு எனப்படும். இவ்வொழுங்கினை நாம் ஆராய்ந்தால் பெறப்படும் முடிபைக் கீழே காணலாகும்.

கருநாடக சுர ஒழுங்கு (தமிழிசைப் பெயருடன்) வருமாறு:—

ச	=	சட்ஜம்	—	இளி	4
ரி	=	ரிஷபம்	—	விளரி	6
க	=	காந்தாரம்	—	தாரம்	1
ம	=	மத்திமம்	—	குரல்	3
ப	=	பஞ்சமம்	—	துத்தம்	5
த	=	தைவதம்	—	கைக்கிளை	7
நி	=	நிஷாதம்	—	உழை	2

இசை நரம்பு (சுரம்) ஒவ்வொன்றுக்கும் அதன் ஐந்தாம் நரம்பு கிளை நரம்பாகும் என்பது பண்டைய இசைநூன் முடிபு. கிளை, இனம், உறவு, சந்ததி என்பன ஒருபொருட் சொற்கள். அதன்படி நோக்கினுல் "புவியிலெனைத் தாரம் என்பார் புதல்வியிவள் பேருழையே" என்பது முதலாக மேலே காட்டிய செய்யுளடிகளில் உள்ள ஐந்தாம் நரம்பின் அமைதி இனிது புலப்படும். ஒன்று முதலாக ஏழுவரை நாம் மேலே எண் இட்டுக்காட்டிய ஒழுங்கில் இசை ஏழனையும் நிரைப்படுத்திப் பார்க்கும்போது இசைகளின் பிறப்பு ஒழுங்கு அமைவதைக் காணலாகும்.

வெளிநாட்டார் இதனைப் பாடும்மீன் இசை என்று பெயரிட்டு அழைத்தாலும், மட்டக்களப்புத் தமிழகத்தில் 'ஊரி பாடுதல்' என்றே இவ்விசையினைக் கூறு கின்றனர். ஊரி (molluse or mussel) என்பது சங்கினத்தைச் சேர்ந்த ஒன்று. தோற்றத்திலும் சங்கைப்போன்று, சற்று மெலிந்து நீண்டதாக இருப்பது. சுமார் கால் அங்குலம் முதல் மூன்று அங்குலம் வரை நீளம் உடையது. வாவியின் அடியிற் படிந்து, ஊரிகள் கிடப்பன என்றும், நீரின் தெளிவும், அதனூடு செல்லும் நில வொளியும், இவைகளை இசைமீட்டச் செய்கின்றன என்றும் அறிகின்ருேம். நீர் வாழ் செந்துவின்ஒலி ஆதலால், அவ் வொலிக்குக் காரணம் மீன்கள் பாடுதல்தான்; ஆராய்ச்சியின்றி மேனுட்டார் இட்ட பெயரே பொதுவாக வழக்குடையதாயிற்று.

நீரிலிருந்தெழும் இந்த இசைப்பிறப்பினுக்கு வேறு பல காரணங்களும் கூறப்படுகின்றன. தந்திக் கம்பிகளூடே செல்லும் காற்றின் எதிரொலிதான் இது என்றும், பாடும் மீனே அல்லது நீர்வாழும் உயிரினம் வேறு ஒன்ருே இவ்வின்னி சையினைப் பிறப்பிப்பதில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனுல், இவர்கள் கூற் றுக்கு விஞ்ஞானக் கலை வளர்ச்சி 'மீன் பாடுவது' உண்டு என்று பதில் தந்து விட்டது.

மட்டக்களப்பில் உள்ள அர்ச். மிக்கேல் கல்லூரியைச் சேர்ந்த அமெரிக்க இயேசு சபைத் துறவிகள் இருவர், வாவியின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் கல்லடிப் பாலத்தின் நடுப்பாகத்தில் இருந்து நீரினுள் எட்டடி ஆழ்த்திய ஒலிபெருக்கி

ஒன்றினல் பாடும் மீன்களின் இன்னெலியை - மட்டக்களப்புத் தமிழகத்தின் மங்காத புகழொலியை - வெளிக்கொணர்ந்து எட்டு நிமிட நேரம் இசைத்தட்டுகளில் பதிவு செய்துகொண்டார்கள். இவ்வொலியைக் கேட்போர் இது தவளைகளினதா, தந்திக் கம்பிகளின் எதிரொலியா, அன்றிப் பாடும் மீன் என்று கொள்ளத்தக்க ஒன்றினது தானு என்பதை இலகுவில் அறிந்து கொள்வர்.

அப்பெரியோர் அமைத்த இசைத் தட்டுகளில், நான்கு ஒலிக் கூறுபாடுகளைத் தெளிவாகக் கேட்கலாம். ஐந்தாம் ஒலியின் பதிவும் மெல்லியதாகக் கேட்கப்படுகின்றது. ஆருவது ஒலியினைத் தெளிவுறப் பதிவு செய்துகொள்ள முடியாதவாறு மெல்லிய காற்றினலும் அது கலைக்கப்பட்டு விடுகிறது என்கின்றனர். ஏழாவது ஒலியோ இசையறிபுலவரை மட்டும் தேடிக்கொண்டு, மெல்ல நீருள் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. வேறு வேருனவையாயினும் சேர்ந்து ஒலிக்கும்போது அவச்சுரப்படாத பெருஞ் சிறப்பு விளங்குவதை இவ்வொலியிடை நாம் அறிதல் வேண்டும்.

ஒருவகை மீனின் ஒலிதான் இது என்று கூறுவோரும், கற்பாறைகளில் வசிக்கும் சில உயிரினங்களின் கெட்டியான ஓடுகளில் நீர் உராய்ந்து செல்லுதலால் இவ்வொலி பிறக்கிறதென்பாரும், நீர்க்கரையில் உள்ள பிராணிகளின் ஒலி நீருட்பட்டு எதிரொலிப்பதனல் இது பிறக்கிறதென்பாரும் இதுபற்றிய ஆராய்ச்சியில் பல மேனுட்டார் ஈடுபடக்காரணமாயினர்.

சில மீன்களைப்பிடித்து வெளியில் எடுக்கிறபோது வேறுவேறுவித ஒலிகளை அவை கிளக்கின்றமையினல் நீரினுள்ளும் இனிய ஒலியை அவை எழுப்புதல் கூடும் என்று 'பீரிட்ஸ்' என்னும் அறிஞர் கூறுகின்ருர். ஆஸ்திரேலியாக்கரையில் உள்ள மீனினம் சில இசை பாடுகின்றன என்று கூறுகின்ருர்கள். ஆனல் அவ்வினம் மட்டக்களப்புவாவியுட் காணப்படாத ஒன்று. ஓடுள்ள பிராணிகள் நீரோட்டத்திற் செல்லும்போது இன்னெலியைப் பிறப்பிக்கின்றன என்று 'பௌலர்' என்னும் ஆங்கில அறிஞர் கூறுகின்ருர். ஆனல், ஸ்டான்லிகிரீன் என்னும் இன்னேர் ஆங்கில அறிஞர் அவர் கூற்றை முற்ருக மறுக்கிருர். அவர் நேரில் மட்டக்களப்புக்கு வந்து பாடும்மீன் இசையின் கூறுபாடுகளை எல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து, யூதர்களின் பழைய ஹார்ப் (harp) என்னும் வீணையின் இன்னெலியை ஒத்ததாய் உள்ள இவ்விசை ஊரிகளாலேயே பாடப்படுகின்றன என்று தெளிவாகக் கூறியுள்ளார். இன்னருடைய கூற்றினை ஆராய்ந்த 'எமர்சன்டெனன்ட்' என்ற அறிஞர் தாம் இலங்கையைப்பற்றி எழுதியுள்ள ஒரு நூலினுள் பாடும் மீனைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அன்னர், மீன்களன்றி, ஊரிகளே இசைபாடி மட்டக்களப்பினைப் புகழ் உறுத்துகின்றன என்று அறுதியிட்டுள்ளனர். இவ்விதியை ஆதரித்து 1826-ல், 'ராபர்ட்கிரான்ட்' என்பாரும் எடின்பரோ கலைக்கழக விஞ்ஞானத் துறையினருக்கு ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையினைச் சமர்ப்பித்துள்ளனர்.

ஆனுல் 'டெனன்ட்' என்பார் கருதுவதுபோல ஊரிகள் பாறைக்கருகில் மட்டும் பாடுவதாக இல்லே. 'ஸ்டான்லிகிரீன்' என்பவர் இவ்வொலியை ஆராய்வதற்காக மட்டக்களப்புக்கு வந்திருந்தபோது, இயந்திரப்படகொன்றில், கல்லடி என்ற ஊருக்குத் தெற்கே சுமார் இருபதுமைல் தூரம்வரை வாவியூடு சென்று நோக்கினர் என்றும், கற்பாறைகளின் மணமே இல்லாத மண்முனே, பட்டிருப்பு என்ற பல இடங்களில் இந்த இன்னிசை கேட்கப்பட்டதென்றும் தமது குறிப்பில் பொறித்துள்ளார். இவ்வாறு இன்னமும் ஆராய்ச்சிகளுக்கு இடந்தந்து நிற்கும் காரணத்தால் இவ்வொலிக்குக் காரணமானவை என்று கூறப்படும் பொதுவழக்குப்பெயரினே ஒட்டியே இக்கட்டுரைப் பொருட்தலேப்பும் இடம்பெறுவதாயிற்று.

இத்தகைய தமிழிசை பாடும் மீனினம் கூறும் இசைச் செய்தி நம்மைப் பழந்தமிழகத்துக்கு இழுத்துச்செல்வதொன்று. தமிழினம் மறந்தாலும், தாம் மறந்துவிடாது தமிழிசைப் பயிற்சியினேப் பரம்பரைபரம்பரையாக வளர்த்துவரும் இம் மீனினம், நம்மிடமிருந்து கைம்மாறு வேண்டாது தன் கடமையைச் செய்துவருகின்றது. கலாசார உணர்ச்சி, இனமொழிப்பற்று என்பவற்றைப் பேச்சில்மட்டும் கடைப்பிடித்துவரும் இன்றைய தமிழினம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் அஃறிணைப் பொருள்களிடத்தும் பயிலுவ என்பதை இம் மீனினம் உணர்த்தி நிற்கின்றது.

பாடும் மீனினம் உலகின் பதினுன்கு பேரதிசயங்களுள் ஒன்று. தென் அமெரிக்காவில் உள்ள சில்லி மாகாணக் கடற்கரையிலும், இலங்கையின் மட்டக்களப்புத் தமிழகத்திலும் மட்டுமே இம் மீனிசை கேட்கப்படுகின்றது என்று கூறுகின்ருர்கள். இத்தகைய புகழ் இசை, நமது பழந்தமிழ் இசை என்று நாம் மகிழ்ச்சி கூருவோம்.

நாம் பிறந்ததன் பயன் சாஸ்திரப் பயிற்சியால் கலேஞானம் வரப்பெற்று, தெளிந்து, உணர்வரிய மெய்ஞ்ஞானம் அடைதலேயாம்.

— கயிலேக் குருமணி

காப்பிய இலக்கணம்

பன்மொழிப்புலவர்
திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

காப்பியமாவது யாது என்பது குறித்து வடமொழியில் அலங்கார நூலாரனைவரும் ஆராய்ந்துள்ளனர். ஆங்கிலத்திலும் ஆராய்ச்சியாளர் பலர் ஆராய்ந்து தம் கருத்தினை நிறுவியுள்ளனர். இம்முறையில் நம் தமிழ்மொழியில் யாருமே ஆராய்ந்திலர். ஆசிரியர் தொல்காப்பியனுர் செய்யுளுறுப்புக்கள் இவையென்று கூறினுரேயன்றிச் செய்யுளின் இலக்கணம் கூறிற்றிலர். ஆயின், பேராசிரியர் 'செய்யுளுறுப்பு ஈண்டோதினுர், செய்யுள் யாண்டோதுப' என்று வினவி, 'அறியாது கடாயினுய், உறுப்பு என்பன உறுப்புடைப் பொருளின் வேறெனப்படா; பொருள் எனப்படுவன உறுப்பே. அவற்றது ஈட்டத்தினை முதல் என வழங்குபவாகலான் உறுப்பினையே சொல்லியொழிந்தார்; முதற்பொருளதிலக்கணம் என உறுப்பிலக்கணத்தினையே வேறுபடுத்துக் கூறலாவதின்மையானும் உறுப்புரைப்பவே அவ்வுறுப்புடைய பொருள் வழக்கியலாற் பெறலாமாகலானும் என்பது' என்று விடைகூறியுள்ளாராகலின் செய்யுளினிலக்கணம் தொல்காப்பியனுர் கூறியவாருகுமன்றே எனின், ஆகாது. தொல்காப்பியனுர் செய்யுளின் இலக்கணம் கூருது விட்டதற்கு யாதேனும் ஒரு சமாதானம் சொல்லவேண்டுமென்று கருதிக் கூறியதாகுமேயன்றி, இது தக்க சமாதானம் ஆதல் இன்று. மனிதன் எனப்படுவான் யாவன்? என்னும் வினுவிற்குத் தலை, நுதல், விழி முதலிய உறுப்புக்களெல்லாங் கூறிவிடின் மனிதன் இலக்கணம் பெறப்படுமா? அன்றியும், அம்மை முதலியன செய்யுளின் வகையாதலேயன்றி உறுப்பாதல் இல்லை. அவற்றைக் குறித்து ஈண்டுக் கூறுதல் வேண்டற்பாலதன்ருகலின் விடுக்கின்றேன்.

தொல்காப்பியனுர் செய்யுட்கு இலக்கணங் கூறிற்றிலராயினும், நன்னூலார்,

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னுக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

என்று கூறியுள்ளாரால் எனின், இது செய்யுள்கட்கெல்லாம் பொதுவான இலக்கணமாதல் இன்று. இதில், 'அணிபெற' என்றதற்கு உவமை முதலிய அணிகள் உளவாக என்பது பொருளாகும். ஆகலின், அணி இல்லாத பாட்டு செய்யுள் (காவ்யம்) ஆகாதொழியுமன்றே!

"காயுங் கானிற் கிழங்குங் கனிகளும்
தூய தேடிக் கோணர்ந்தனர் தோன்றல்!நீ
ஆய கங்கை யரும்புன லாடினை
தீயை யோம்பினை செய்யமு தென்றனர்''

இச்செய்யுளில் அணி இல்லை. முனிவர்கள், மனையின் நீங்கிய மக்களைத் தேடிக் காணுமல் வருந்திய பெற்றோர்கள் அம்மக்கள் தாமே வந்தபோது அடைந்த மகிழ்ச்சியைப்போன்று இராமரைக் கண்டபோது மகிழ்ந்தனராகலின் அவர் உண்ணத் தக்க தூய கனிகள் முதலியன கொணர்ந்து முறைப்படி உண்ணுமாறு வேண்டுகின்றனர். பெற்றோர்கட்கு மக்களிடத்தில் உள்ள வாஞ்சைபோல் முனிவர்கட்கு இராமர்பால் வாத்ஸல்யம் உண்டாயிற்று. அதனுனே தூயவற்றைத் தேடிக் கொணர்ந்தனர். இவ்வாறு வாத்ஸல்யபாவந் தோன்றும் இச்செய்யுள் நன்னூலார் கூறிய இலக்கணத்தின்படி, செய்யுள் ஆகாதொழியும். இனி, இவ்விலக்கணத்தில் 'அணிபெற' என்றதற்கு அழகாக - உள்ளத்தைக் கவர்வதாக (மனோரம்யமாக) என்று பொருள் கூறின் அமைவதாகும். ஆயின், ஆசிரியர் கருதியது இப்பொருளையன்றுதல் யாவரும் அறிவர். நிற்க,

ஆங்கிலத்தில் ஆராய்ச்சியாளர் எழுதியிருப்பனவற்றை யெல்லாம் ஸ்ரீ. P. கிருஷ்ணன் நாயர் அவர்கள் விரிவாக ஆராய்ந்து, அவற்றுட் பெரும்பாலன அமைவுடையனவல்ல என்று ஒதுக்கி, இயைபுடைய சிலவற்றை விளக்கியிருக்கின்றார்.[1] மேல்நாட்டு இலக்கியங்கள் பல நம் இலக்கியங்களின் அமைப்பில் வேறுபாடுடையவை. ஆகலின், அவ்விலக்கியங்களைப் பற்றிய ஆராய்ச்சி நம் இலக்கியங்கட்குப் பொருந்துதல் அரிது. ஆகலின், அவற்றை இங்கு ஆராய்கின்றிலேன். வடமொழியாசிரியர் கூறியிருப்பவற்றுள் முக்கியமானவற்றை இங்குக் குறிக்கின்றேன்.

அலங்கார நூலாருள் முதலாமவராகக் கருதப்படும் [2]'பாமஹன்' (भामह) என்பவர், 'சொற்பொருள் இரண்டும் (அழகாகக்) கூடியது காவ்யம். அது செய்யுள் வசனம் என்று இரண்டு வகைப்படும்' என்று கூறினர்.

தண்டியாசிரியர்,[3] 'இஷ்டார்த்தத்தை விசேடமாகக் குறிப்பிடுஞ் சொற்கூட்டம் காவ்யம் என்றும், அது செய்யுள், உரைநடை, இரண்டுங் கலந்தது என்று மூன்று பிரிவினதாகும்' என்றும் கூறியுள்ளார். வாமனன், 'சுந்தரமான சொல் பொருள்கள் காவ்யம்' என்னுங் கருத்தினை முதல் இரண்டு சூத்திரங்களாலும் அவற்றின் விருத்தியாலும் தெரிவித்திருக்கின்றார்.

---

[1] காவ்யஜீவிதவ்ருத்தி. பக்கம் 79 - 159 பார்க்க. [2] பரிச்சேதம் 1 - 16, [3] I. 10.

வித்யாநாதன் 4, 'குணம் அலங்காரங்களோடு கூடியனவும், குற்றமில்லா, தனவுமாய சொல்பொருள்கள் காவியமாகும். அது வசனமாயும் செய்யுளாயும் இரண்டுங் கூடியதாயும் இருக்கும்' என்ருர்.

ஹேமசந்திரர், "குற்றம் இல்லாதனவும் குணத்தோடு கூடியனவும் அலங்கார முடையனவும் ஆகிய சொல்பொருள்கள் காவியமாகும் என்ருர்.

மம்மடர், "குற்றம் இல்லாத சொல் பொருள்கள் குணம் உள்ளனவும் எற்று வது அலங்காரமில்லாதனவாயினும் காவியமாகும்' என்ருர். இவ்வாறே வேறு சிலரும் கூறியுள்ளனர்.

இவ்விலக்கணங்கள் எல்லாவற்றிலும், 'குற்றம் இல்லாதனவும் குணம் அலங்காரம் உடையனவும் ஆகிய சொல்பொருள்கள் காவியம்' என்னும் இலக்கணம் பொதுவாக அமைந்துளது.

'சொல் பொருள் ஆகிய இரண்டும் சேர்ந்தது காவியம் என்னும் இலக்கணம் அமைதியாதலின்று என்னெனின், 'காவியத்தை உரக்கப் படிக்கின்ருன்'. 'காவியத் தினுல் பொருளை அறிகின்ருன்,' 'காவியங் கேட்கப்பட்டது; பொருள் விளங்கவில்லை' என்று வழங்கும் வழக்கு உளது. இதனுல், காவியம் என்பது சொல் விசேடத்தையே குறித்தல் அறியலாகும். வேதம், புராணம் என்பன சொற்களையே குறித்தல் அவற்றின் இலக்கணத்தான் அறியப்படும். அவ்வாறே, காவியம் என்பதும் சொல்லையே குறிக்கும் என்று கொள்க.

இனி, 'சுவைத்து இன்புறுதற்குக் காரணமாயிருப்பதுவே காப்பியத் தன்மை யின் ப்ரயோஜகம். அது, சொல் பொருள் இரண்டிலும் உளது' எனின், அவ்வாறு கொள்ளின், இராகத்திற்கும் சுவை தோன்றுவித்தல் உளது என்பது ஆன்ருேர் கருத்துமாகலின், அதுவும் காப்பியமாகும். அதுமட்டுமா! நாட்ய அங்கங்கள் முழுவதிலும் இத் தன்மை உளதாகலின் அவையெல்லாம் காப்பியம் ஆகும் என்று காப்பியவிலக்கணம் கூறல் வேண்டும்.

இனி, சொல் பொருள் இரண்டுஞ் சேர்ந்து காவியமா? அவை ஒவ்வொன்றும் தனித்தனியே காவியமா? இரண்டும் சேர்ந்து காவியம் எனின், 'இரண்டு ஒன்றல்ல' என்னும் நியாயத்தால், சொல் பொருள் இரண்டும் காவியம் என்னும் ஒன்றன்று என்பதாகும்; சுலோகவாக்யம் காவியம் ஆகாது. இனி, தனித்தனியே காவியமாகும் எனின், ஒரே வாக்யம் சொல்லால் ஒரு காவியம்; பொருளால் ஒரு காவியம் ஆக

---

4 ப்ரதாப ருத்ரீயம் 5 காவ்யானுசாஸனம் 6 காவ்யப்ரகாசம் 7 ரஸகங்காதரம் பார்க்க.

இரண்டு காவியம் ஆகுமே; இவற்ருல் வேதம், சாஸ்த்ரம், புராணம் என்பவற்றின் இலக்கணம் போன்று காவியத்தின் இலக்கணமும் கொள்ளவேண்டும் என்பதுவே அமைதியாதல் போதரும்.

இனி, குணம் அலங்காரம் இவற்றை உடையது காவியம் என்று காவிய விலக்கணத்தில் குணலங்காரங்களை உட்படுத்தியது அமைவதன்று. 'திங்கள் மண்டிலம் தோன்றிற்று' என்னும் வாக்கியத்தில் குணமோ அலங்காரமோ இல்லை. இவ் வாக்கியத்தைத் தூதி, வேஸ்யை, தலைவனைப் பிரிந்த தலைவி இவர்கள் கூறின், வெளிச்சேறலை விலக்குதல் முதலிய பல குறிப்புக்கள் தோன்றுமாகலின், இவ்வாக்கியம் சிறந்த காவியமாகும். இவ்வாறே, 'ஞாயிறு மறைந்தது' என்னும் வாக்கியத்திலும் அறியலாகும். இவற்ருல், இவ்விலக்கணம் குற்றமுடையது என்பது தெளிவாகும்.

மேலும் ஸௌர்யம் முதலியவற்றைப்போல் உயிரின் தருமம் குணம். ஆரம் முதலியவற்றைப்போல் துணைப்பொருள் (உபஸ்காரகம்) அலங்காரம். இவற்றைக் காவியசரீரத்தின் இலக்கணங்களாகச்சேர்ப்பது அமையாதென்பது எளிதில்விளங்கும்.

இனி, ஆத்மாவிற்கு ஸௌர்யாதிகள்போல குணங்கள் உறுப்பியாயரஸத் திற்குத் தருமங்கள் என்று காவியப்ரகாஸகாரரே விவரித்திருக்கின்ருர். ஆகலின் [8] குணத்தைக் காவியத்துக்கு விசேடணமாக்குதல் அமையாது. ரஸத்தைத் தோன்று வித்தலால் சொல் பொருள்கட்குக் குணமுடைமையாகிய விசேடணம் பொருந்தும் எனின், பொருந்தாது. என்னை? காவியத்தின் ஸ்வரூபமாக ஒப்புக்கொள்ளப்பட்ட சொல் பொருள்களில் ரஸம் உளதா, இல்லையா? இல்லை எனின், குணமுடைமையும் இல்லை. என்னெனின், குணங்கள் ரஸத்தின் தருமங்களாதலின் ரஸமிருப்பின் குணம் இருக்கும்; ரஸமில்லையாயின் குணமுமில்லையாகலின். ரஸம் உளது எனின், 'ரஸ முடையனவாகிய சொல்பொருள்கள்' என்று ரஸமுடைமையை விசேடணமாகக் கூருதது ஏன்? குணம் ரஸதர்மமாகலின் குணமுடைமையைக் கூறியதனுனே ரஸ முடைமையும் போதரும் எனின், அவ்வாருயின் 'ரஸமுடையனவும்' என்று விசேடணமிடுதலே அமைதியாதலன்றி, 'குணமுடையனவும்' என்று விசேடண மிடுதல் அமைதியாகாது. 'தேசங்கள் ப்ராணிகளை உடையன' என்று சொல்ல வேண்டியவிடத்தில், 'தேசங்கள் சௌர்யம் முதலியவற்றை உடையன' என்று எவரேனும் கூறுவரோ! இனி, சொல்பொருள்கள் குணமுடையன' என்றதன் கருத்து, குணத்தைத் தோன்றுவிக்கின்ற சொல்பொருள்களைக் காப்பியத்தில் வழங்க வேண்டும் என்பதுவே எனின், அதுவும் சரியாகாது. என்னை? குணத்தைத் தோன்றுவிக்குஞ் சொல்பொருள்கள் காப்பியத்திற்குச் சிறப்பினையே உண்டாக்கும். ஆகலின், அதனைக் காப்பியத்தின் இலக்கணமாகக் கூறுதல் ஆகாது.

[8] ஸாஹித்ய தருப்பணம் பார்க்க.

இவ்வாறே அலங்காரமுடைய சொல்பொருள்களும் காப்பியத்திற்கு மேன்மையையே உண்டுபண்ணும். ஆகலின், அவையும் காவியஸ்வரூபமாதல் இல்லை.

இனி, ‘குற்றமில்லாத சொல்பொருள்கள் குணமுடையன......காவியமாகும்’ என்றும் இலக்கணத்தில் ‘குற்றமில்லாத சொல்பொருள்கள் என்றது பொருந்துவதாயில்லை என்றும் கூறி, குற்றமுள்ளதொரு செய்யுளை எடுத்துக்காட்டி, இதில் குற்றம் இருத்தலான் செய்யுள் ஆகாது. ஆயின், த்வனியிருத்தலான் உத்தம காவியம் ஆகும். இவ்வாறுதலின் இவ்விலக்கணம் அமையாது’ என்று விளக்கினர் ஸாஹித்யதருப்பண ஆசிரியர். ஆயின், ‘யாதோ ஒரு பகுதியில்தானே குற்றம் உளது’ எனின், குற்றமுள்ள அப்பகுதி காவியமாகாது; த்வனியுள்ள பகுதி காவ்யமாகும்; ஆகலின், காவியமும் ஆகாது; அகாவ்யமும் ஆகாது. சில குற்றங்கள் காவியத்தின் ஒரு கூற்றைமட்டும் கெடுக்கும்; சில குற்றங்கள் காவியம் முழுவதையுமே கெடுக்கும். ‘முழுவதும் குற்றமில்லாத காவியத்தையும் குற்றமுள்ளதொரு சொல் கெடுத்துவிடும். முத்துப்போல் ஒளியுடைய பல் வரிசையின் அழகினை வாயின் வெளிப்பட்டிருக்கும் பற்கள் கெடுத்துவிடுகின்றன’ என்றார் மகாகவி நீலகண்ட தீக்ஷிதர். ‘சுருதிதுஷ்டம் (கேட்டற்கு இன்னுவோசை) முதலிய குற்றங்கள் அநித்ய தோஷங்களாயினும் அவை த்வனியை ஆத்மாகவுடைய சிருங்கார ரஸத்தில் நிச்சயமாகத் தள்ளற்பாலனவே’ என்று 9 த்வனிகாரர் கூறியிருப்பது அறிதற்பாலது.

இனி, ‘குற்றம் இல்லாத சொல்பொருள் காவ்யம்’ என்பார் கருத்தின்படியாயின் காவியமே அரிதாகும். என்னெனின், அலங்கார நூலார் கூறியுள்ள குற்றங்களுள் ஒன்ருவது இல்லாத காவியமே இன்ருமாகலின். அற்றன்று, குற்றமின்மை என்றதில், இன்மைக்குச் சிறிது என்று பொருள்கொண்டு, சிறிது குற்றமுடையது காவியம் எனின், குற்றமே இல்லாதது காவியம் ஆகாதே.

இவ்வாறு ஸாஹித்யதருப்பணகாரர் மறுத்துக் கூறியிருப்பது காண்க.

இனி, ஸாஹித்யதருப்பணகாரர் கூறியுள்ள இலக்கணம் யாதோ எனின், அது, “வாக்யம் ரஸாத்மகம் காவ்யம்” என்பது. அஃதாவது, ரஸத்தை உயிராகவுடைய வாக்யம் காவ்யமாகும் என்பது. இவ்வாறன்றி, ‘ரீதியை உயிராகவுடையது காவ்யம்’ என்று வாமனர் கூறிய இலக்கணம் பொருந்தாது என்று மறுத்துள்ளார். என்னெனின் ரீதியாவது - சேர்க்கை அமைப்பின் சிறப்பு. சேர்க்கை (அமைப்பு) அவயவஸம்ஸ்தானமாகலானும் உயிர் இதனினும் வேருகலானும் என்க.

இனி, ஸாஹித்யதருப்பணகாரர் கூறிய இலக்கணமே கொள்ளுதும் எனின் அது பொருந்துவதன்று என்று பண்டிதராஜனுகிய ஜகந்நாத பண்டிதர் கூறியுள்ளார். அவர் கூற்றை நோக்குவோம்.

---

9 த்வந்யாலோகம். 2 : 12.

'ரஸத்தை உயிராகவுடைய வாக்கியம் காவியம்' எனினும், ரஸம் அல்லாதன வாகிய - வஸ்து - அலங்காரம் இவற்றையுடையது காவ்யமாகாதொழியும்.

"பூதநாயகன் புவிமக ளுயகன் பொருவில்
வேதநாயகன் மார்பகத் தினிதுவீற் றிருக்கும்
ஆதிநாயகி விருப்புறு தெரியல்கொண் டணிந்த
மாதராள்வயிற் பெற்றனேன் முயன்றமா தவத்தால்."

"கருமுகி ருமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினுன்."

வஸ்து (செய்தி) அலங்காரம் முக்கியமாகவுடைய இச்செய்யுட்கள் காவ்யமாகா வன்றே! இவையேயன்றி, த்வனியுள்ளும் வஸ்துத்வனி, அலங்காரத்வனி இவற்றை யுடைய செய்யுளும் காவ்யமாகா தொழியுமே!

இனி, 'ரஸத்தை உயிராகவுடையது' என்பதற்கு, 'எவ்வாற்ருனுதல் ரஸ முடையது' என்பதுவே பொருளாகக் கொள்க எனின், அவ்வாறு பரம்பரையான தொடர்பினுல் ரஸஸ்பர்ஶமுடையதனைக் காவ்யம் என்று கொள்ளுவோமாயின், 'பசு மேய்கின்றது', 'குதிரை ஓடுகின்றது' என்னும் வாக்கியங்களிலும் பரம்பரையால் ரஸம் உளது என்று கொள்ளுதல் கூடுமாகலின், அவ்வாக்கியங்களும் காவியம் என்று கொள்ளப்படுமே! இதனுற் பயனின்ருகலானும்; இச்சொல்லின் பொருளானே ரஸம் உளதாயின், விபாவ அனுபாவ ஸஞ்சாரி பாவங்களேயில்லாதது ரஸமாகுமாதலானும் இவ்விலக்கணம் பொருந்துவதன்று. ஆயின், காவ்யத்திற்கு அமைவுடைய இலக்கணம் யாதோ எனின், அது ஜகந்நாதபண்டிதர் கூறியுள்ள, 'ரமணீயமான அர்த்தத்தை ப்ரதி பாதிக்குஞ் சொற்கள் காவ்யம்' என்பதுவே ஆகும். ஈண்டு, ரமணீயம் என்றது - உல கியலின்பத்தைக் கடந்த இன்பத்தை உண்டாக்கும் ஞானகோசரம். அத்தகையஞானம் பாவனுரூபமாகும். பாவனையாவது - திரும்பத்திரும்ப அனுஸந்தானரூபமாகிய ஞான விசேடம். இவற்ருல், உலகியல் கடந்ததாகிய இன்பத்தை உண்டாக்குகின்ற பாவனைக்கு விஷயமாகிய அர்த்தத்தைத் தரும் வாக்கியம் - காவியமாகும் என்பது பெறப்படும். இவ் விலக்கணத்தில் 'ப்ரதிபாதிக்கும்' என்றது வ்யங்க்யார்த்தத்தையும் உட்படுத்துதற் பொருட்டு. ஆகலின் வ்யங்க்யார்த்தத்தைத்தரும் வாக்யத்தையும் இவ்விலக்கணம் அகப் படுத்தும். 'வாக்யம்' என்றதனுல் அன்புமிக்க தலைவியின் பெயராகிய சொல்லையோ அவளது கடைக்கணேக்கம் முதலியவற்றையோ இவ்விலக்கணம் உட்படுத்தாது. ஆக லின், அவற்ருல் தோன்றும் (உளங்கவரும்) பொருள் காப்பியம் ஆதல் இன்று. வாக்ய மாவது - தெளிவான பொருளைத் தருஞ் சொற்களின் சேர்க்கையன்ருே! இனி,

'தங்கட்கு மகன் பிறந்துள்ளான் 'தங்கட்குப் பொருள் தருகின்றேன்' என்னும் வாக்யார்த்த வுணர்வினல் உண்டாகும் இன்பம் உலகியல் கடந்ததன்று. ஆகலின் இவ்வாக்கியங்களில் காப்பியத்தன்மை இல்லை என்று கொள்க.

காவியமாவது - கவியின் தொழில். கவியாவான் - வருணிப்பவன். கவியின் தொழில் என்றது, நடத்தல் உண்ணுதல் முதலியவற்றைக் குறிக்காமல், சொற்களை யாக்குந் தொழிலையே குறித்துநின்றது. பங்கஜம் என்பது சேற்றிற் பிறப்பவற்றை யெல்லாங் குறிக்காமல் தாமரை யொன்றனையே குறித்து வழங்குவதுபோல, காவியம் என்பது, கவியின் தொழிலையெல்லாங் குறிக்காமல், அவன் சொற்களை யாக்குந் தொழில் ஒன்றனையே குறித்து வழங்குகின்றது என்று கொள்க.

இனி, 'நற்குடிப்பிறப்பினனும் தூயனும் இலக்கணம் செய்யுளிலக்கணம் இவை வல்லனும் சோதிடம் முதலியன அறிந்தவனும் அமைதியாய நல்லுருவினனும் ஆகியவன் கவியாதற் குரியவனுவான்', என்று வெண்பாப் பாட்டியலிற் கூறியிருப்பது காண்க.

இயல்பாகவே அவ்வப்போது புதிதுபுதிதாகத் தோன்றும் அறிவும் சிறந்த பல காப்பியங்களிற் பயிற்சியும் உடைய பெரும்புலவரே சுவைநிறைந்த நற்காப்பி யத்தை இயற்றுதல் கூடும். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள், கம்ப ராமாயணம் முதலிய உயரிய செந்தமிழ்க் காப்பியங்களில் மிக்க பயிற்சியும் ஆர்வமும் உடையவர்கள். பலமணிநேரம் அதிலிருந்து பலபல செய்யுட்களையும் அவற்றின் பொருள் நயங்களையும் எடுத்துக்கூறியருளிக் கற்றோர் மற்றோர் யாவரையும் தமிழின்பம் நுகரச் செய்துவரும் பெற்றியுடையவர்கள். அதனல், அவர்களது கனகாபிடேக விழாமலர்க் கட்டுரைகளுள் ஒன்ருக இக் காப்பிய இலக்கணம் இடம் பெறுதல் மிக்க பொருத்தம் ஆகும்.

சித்திரத்தைக் கண்டவுடன் சிற்பியின் ஞாபகம் வருவதுபோல, அதியற்புதமான இந்தச் சிருஷ்டி அற்புதங்களைக் கண்டவுடன் செய்தவன் ஞாபகம் வரத்தானே வேண்டும்.

— கயிலைக் குருமணி

காலப்போக்கில் நமது சமயம்

பேராசிரியர். திரு. சி. இலக்குவனர், M. A., M. O. L.

சமயம் என்பது மக்களை நல்வாழ்வுக்குரியோராகச் சமைத்து வாழ்வின் இன்பத்தை வகையுறத் துய்க்கச்செய்வது. ஆதலின் சமய நெறியினைத் திருநெறி என்றனர் தமிழ் முன்னோர். பண்டைத் தமிழர் சமயமற்ற வாழ்வு ஒன்று உண்டெனக் கனவிலும் கருதிலர். உடலும் உயிரும் ஒன்றியிருப்பதற்கு உணவு இன்றியமையாதது போன்று, வாழ்வும் இன்பமும் ஒன்றியிருப்பதற்குச் சமயம் இன்றியமையாதது எனக் கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழர் சமயக் கொள்கையினை இன்று அறிவதற்கு நமக்குத் துணை புரியும்நூல் தொல்காப்பியம் ஒன்றுதான். தொல்காப்பியரைச் சிலர் சமணர் என்பர். உண்மையாக ஆராய்ந்து காணுமிடத்துத் தொல்காப்பியர் சமண பௌத்தம் தோன்று வதற்கு முன் வாழ்ந்தவர் என அறியலாம். தொல்காப்பியர் காலம் கி. மு. ஏழாம் நூற்றூண்டு ஆகும். சமண பௌத்த காலம் கி. மு. ஐந்தாம் நூற்றூண்டுதானே. சமண பௌத்தர்கள் கடவுளைப்பற்றிக் கவலை கொள்ளாதவர்கள் ; ஆனல் தொல்காப் பியர் கடவுளை உணர்வுக்கும்முற்பட்ட ஒன்ருக எண்ணியுள்ளார் ; கருப்பொருள்களைக் கூறுமிடத்து,

" தெய்வம் உணுவே மா மரம் புள் பறை
சேய்தி யாழின் பகுதியோடு தோகைஇ
அவ்வகை பிறவும் கருவேன மோழிப ",

என்று தெய்வத்தை முதலில் வைத்தெண்ணுவதை நோக்குக. சிலர் தெய்வம் வேறு, கடவுள் வேறு என்பர். தெய்வம் வடசொல் எனவும் வழக்குரைப்பர். தெய்வம் என்பது நல்ல தூய தமிழ்ச் சொல்லே. ஆதலின் தெய்வத்தை முதன்மையாகக் கருத வேண்டுமென்று அறிவுறுத்தும் தொல்காப்பியர் எவ்விதம் சமணராவார்? இங்குமட்டு மின்றி முதற்பொருளாம் நிலத்தைக் கூறுமிடத்தும் நிலத்துக்குச் சிறப்புத்தரும் பிறவற் றைக் கருதுமிடத்தும் அவ்வந்நிலத்தவர் வணங்கும் கடவுளையே குறிப்பிட்டுள்ளார்.

" மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வண்ணன் மேயபெருமணல் உலகமும்
சோல்லிய முறையால் சோல்லவும் படுமே ",

என்பது காண்க. தொல்காப்பியர் சமணர் அல்லர் என்பதற்கு இன்னும் பல சான்றுகள் உள. விரிப்பிற் பெருகும்.

தொல்காப்பியர் காலத்தில் கடவுள்வாழ்த்துப் பெருவழக்காய் இருந்தது என்பதனை,

" கோடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தோடு கண்ணியவருமே ",

என்ற நூற்பாவால் அறியலாம். மாயோன், சேயோன், வேந்தன், வண்ணன் என்று குறிப்பிடுவனவற்றிற்குத் திருமால், முருகன், இந்திரன், வருணன் என்று உரையாசிரியர்கள் பொருள் கூறிவிட்டார்கள். உரையாசிரியர்கள் அனைவரும் தொல்காப்பியருக்குப் பின்னர் 1700 ஆண்டுகட்குப் பிற்பட்டு வாழ்ந்தவர்கள். அவர்கள் காலத்தில் வடமொழிக் கதைகளும், கொள்கைகளும் தமிழகத்தில் பெருவழக்காய்ச் செல்வாக்குப் பெற்றுவிட்டன. அவைகளை உளத்திற்கொண்டு அவ்வாறு பொருள் கூறிவிட்டனர். ஆனால் அச்சொற்களை மாயோன், சேயோன், வேந்தன், வண்ணன் - நன்கு ஆராயுங்கால், அவை நான்கும் ஒரே ஒப்பற்ற முழுமுதற் கடவுளைக் குறிப்பன என்பதை அறியலாகும்.

மாயோன் என்றால் அழியாதவன் என்றும், சேயோன் என்றால் சேய்மையில் உள்ளவன் - எட்டாதவன் என்றும், வேந்தன் என்றால் விரும்புதற்குரிய தலைவன் என்றும், வண்ணன் என்றால் உலகின் வடிவுக்கும் நிறத்துக்கும் காரணமானவன் என்றும் பொருள் தரும். ஆதலின் ஒரே முழுமுதற்கடவுளை நானில மக்களும் வெவ்வேறு வகையாகப் பெயரிட்டு அழைத்தனர் என்றுதான் கொள்ளல் வேண்டும். திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகியோரும் திராவிடரால் வணங்கப்பட்ட கடவுளர்களே. ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலாக் கடவுளுக்கு ஆயிரம் திருநாமம் சூட்டி வணங்குவது தமிழர் மரபு. பெயர்கள் வெவ்வேறு இருந்தாலும் கடவுள் ஒருவரே என்பது, தமிழர்களுடைய ஆய்ந்த துணிபு.

தென்னாட்டில் சேயோன் சிவனாகவும், முழுமுதற் கடவுளாகவும் வணங்கப்பட்ட காலை, வடநாட்டில் இந்திரனே வணக்கத்திற்குரியவனாக இருந்துள்ளான். பொதுமக்களிடையே கடவுளைப்பற்றிய அறிவைப் பரப்புவதற்காகப் பல கதைகள் புனைந்துரைக்கப்பட்டன. கதைகள் செல்வாக்குப் பெற்று மக்களுள்ளத்தைக் கவர்ந்தவுடன் உண்மைப்பொருள் மதிப்பிழந்துவிட்டது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற கொள்கை மதிப்பிழந்துவிட்டது. சாதி முறைக்குத் தலைமை அளித்த பிராமணிய மதத்தை ஒழிப்பதற்குப் புத்தமும், சமணமும் தோன்றின. பிறர்க்கின்னா செய்யாமையும் கொல்லாமையும் அடிப்படைக் கொள்கைகளாகப் பெற்றிருந்த அவற்றிற்குத் தமிழகத்தில் செல்வாக்கு ஏற்பட்டது. அவையும் காலப்போக்கில் சொல்வது ஒன்று செய்வது ஒன்றாகப் பரவிவரவே நாட்டு மக்களிடையே மதிப்பிழக்கத் தொடங்கின. வேத நெறியும், சிவநெறியும் சமண புத்த நெறிகளை வெல்லத் தொடங்கின. நாயன்மார்களும், ஆழ்வார்களும் தம் இன்னிசைப் பாடல்களால் மக்களிடையே

கடவுளின் அன்புநெறியைப் பரப்பினர். நாவுக்கரசர் தொண்டின் வழியே கடவுள் அன்பைப் பரப்பினர். மெய்ம்மை வேண்டும்; உண்மை விருப்பம் கொள்ளுதல் சமய அடிப்படையாகும்; பொய்ம்மையை அறவே விலக்குதல் வேண்டும்; பொறுமை வேண்டும்; சமயப் பொறுமையே சாலச் சிறந்தது; உள்நோக்கம் கொண்டு தம் முடைய குணம் குற்றங்களை ஆராயும் பழக்கம் வேண்டும்; நடுவுநிலையே நாட்டில் பண்பாட்டுக்கு உயிர் ஆகும் என்றெல்லாம் முழங்கினர். உழவாரப் படையை ஏந்தி உழைப்பின் உயர்வை நிலைநாட்டினர். ஞானசம்பந்தர் இளமையிலேயே இறைவன் அருளால் இத்தொண்டில் ஈடுபட்டார். சுந்தரர் இறைவனை ஏழிசையாய், இசைப் பயனாய், இன்னமுதாய் எண்ணி வழிபட்டார். மாணிக்கவாசகர் "வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய்க் கோனாகி, யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவானாகி" நிற்கும் இறைவன் இயல்பை எங்கும் விளக்கினர்.

தொல்காப்பியர் காலத்தில் உணவினும் முதன்மையாகக் கருதப்பட்டது கடவுட் கொள்கை. தமிழர் ஆட்சி மறைந்தது. தமிழர் சமயக் கொள்கையும் சிதைந்தது. மெய்ந் நெறியை மறந்து பொய்நெறியைப் புகழத் தொடங்கினர். தமிழும் தன் மதிப்பு இழந்தது. மக்கள் அடிமைகளாய்ப் புழுவினும் கடையராய்ப் பொல்லா வாழ்வில் கிடந் துழன்றனர். தமிழையும் சைவத்தையும் ஈடேற்றத் தொண்டர் குழாங்களும் மடங் களும் தோன்றின. அவைகளில் ஒன்றே தருமபுரம் ஆதீனமாகும். தருமை, திருப் பனந்தாள், திருவாவடுதுறை, எனும் மூன்று திருமடங்களும் சமய நூல்களை வெளி யிட்டும், தமிழைப் புரந்தும் புலவர்களைப் போற்றியும் சமயத் தொண்டும் தமிழ்த் தொண்டும் ஆற்றி வருகின்றன.

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!

காடவர்கோன் கழற்சிங்கர்

டாக்டர். மா. இராசமாணிக்கனுர் M. A., M. O. L.,

சுந்தரரால் பாடப்பெற்ற நாயன்மார் அறுபத்துமூவருள் காடவர்கோன் கழற் சிங்கர் ஒருவராவர். இவரே பல்லவர் வரலாற்றில் காணப்படும் மூன்றும் நந்திவர்மன் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும்.[1] பெரியபுராணம் இவரைப்பற்றிக் கூறுவன வற்றை முறையாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. இவர் சிறந்த சிவபக்தர் என்று பெரியபுராணம் கூறுகின்றது. வேலூர் பாளையப் பட்டயமும்,[2] நந்திக்கலம்பகமும் இவரைச் சிறந்த சிவபக்தரென்றே கூறுகின்றன.

2. இவர் சிவபெருமான் திருவருளால் வடபுலம் கவர்ந்துகொண்டவர் என்று பெரியபுராணம் பேசுகின்றது. மூன்றும் கோவிந்தன் என்ற இராட்டிரகூட மன்னன் நந்திவர்மரது தந்தையான தந்திவர்மனை இருமுறை போரில் முறியடித்துக் கப்பம் கட்டும்படிச் செய்தான். இந்த அவமானத்தைநீக்கக் கழற்சிங்கர் தக்க சமயத்தை எதிர் பார்த்திருந்தார். மூன்றும் கோவிந்தன் கி. பி. 814-இல் இறந்தான். அவன் மகனுன முதலாம் அமோகவர்ஷன் கி. பி. 814-இல் அரசனுனன். நந்திவர்மர் கி. பி. 825-இல் பல்லவ அரசுகட்டில் ஏறினுர் ; ஏறத்தாழக் கி. பி. 850 வரையில் அரசாண்டார்.

நந்திவர்மர் இரட்ட அரசுக்கு உட்பட்டிருந்த நாட்டின்மீது படையெடுத்தார்; குருக்கோட்டை என்னும் கோட்டையையும், அதனைச் சூழ்ந்துள்ள இடத்தையும் கைப்பற்றினுர். அமோகவர்ஷன் சிறந்த கல்விமான்; துறவு மனப்பான்மை கொண்டவன். அவன் கழற்சிங்கரது உரிமை உணர்ச்சியைப் பாராட்டி அவருக்கு உரிமை வழங்கினுன்; அத்துடன் தன் இரண்டாம் மகளான சங்கா என்பவளை நந்தி வர்மருக்கு மணம் செய்வித்தான்.[3] இந்த மண உறவினுல் இரட்டர் - பல்லவர் உறவு வலிமை பெற்றது.

---

[1] K. R. Subramanian, " The Origin of Saivism and its History in the Tamil land " P. 70. Dr. C. Minakshi, " Administration and Social Life under the Pallavas ", PP. 299 - 304. C. M. Ramachandran Chettiar, " SenTamil Selvi, " Vol. 9, PP. 201 - 205. Dr. M. Rajamanikkanar, " Periya Purana Araichi, " PP. 43 - 61.

[2] South Indian Inscriptions, Vol. II, No. 98.

[3] M. V. Krishna Rao, " Gangas of Talakad " P. 79.

3. கழற்சிங்கர் தன் பட்டத்தரசியுடன் பல கோவில்களுக்கும் சென்று மெய்த் தொண்டுகள் செய்தார் என்பது சேக்கிழார் கூற்று.

மூன்றும் நந்திவர்மருடைய கல்வெட்டுக்கள் பல சிவன்கோவில்களுள் காணப் படுகின்றன. அங்கு அவர் செய்த அறங்கள் பலவாகும்; இவர் பொன்னேரிக்கடுத்த திருக்காட்டுப்பள்ளியில் புதிதாய்க் கட்டப்பட்ட சிவன்கோவிற்கு அச்சிற்றூரையே தானமாக அளித்தார்;[4] திருவதிகை வீரட்டானேசுவரர்க்குமுன் விளக்கெரிக்க 100 கழஞ்சு பொன் அளித்தார்;[5] குமாரமார்த்தாண்டன் என்ற தம் விருதுப்பெயர் கொண்ட விளக்குஒன்றைத் திருவிடைமருதூர்ச் சிவனுக்களித்தார்;[6] திருவொற்றியூர்ச் சிவன்கோவிலில் விளக்கெரிக்கப் பொன் அளித்தார்;[7] திருத்தவத்துறை மகாதேவர் கோவிலில் விளக்கெரிக்கப் பொன் அளித்தார்;[8] திருக்கடைமுடி மகாதேவர்க்கு நில தானம் செய்தார்;[9] இவர் மனைவியருள் ஒருத்தியான மாறம்பாவையாலும் பிறராலும் இவராட்சியில் அறங்கள்செய்யப்பெற்றவை, திருநெய்த்தானம், செந்தலை, திருவல்லம், திருக்கடைமுடி, திருப்பராய்த்துறை, குடிமல்லம், நியமம், வெண்குன்றம் என்ற இடத்துக்கோவில்கள் ஆகும்.[10] குன்றுண்டார் கோவில் திருஆதிரை நாளில் 100 பேருக்கு உணவளிக்க ஒருவன் அரிசிதானம் செய்தான்.[11] இவர் காலத்தில் திருவல்லம் கோயிலில் திருப்பதிகம் ஓதப்பட்டு வந்தது என்பது தெரிகிறது.[12]

திருவாரூரில்

கழற்சிங்கர் சிவதல யாத்திரை செய்துகொண்டே திருவாரூரை அடைந்தார். அங்கு அவர் சிவபெருமான் திருமுன்பு நின்று வழிபாடு நிகழ்த்திக்கொண்டிருந்தார். அவ்வமயம் அவரது கோப்பெருந்தேவியான சங்கா என்பவள் அவருடன் நின்று வழிபாடு செய்யாது கோயிலின் அமைப்பைப் பார்த்துக்கொண்டு திருச்சுற்றில் வந்து கொண்டிருந்தவள் இறைவனுக்குரிய பூமாலைகளைத் தொடுக்கும் மண்டபத்தை அடைந் தாள். அம்மண்டபத்தின் பக்கத்தில் புதுப்பூ ஒன்று விழுந்துகிடந்தது. கோப்பெருந் தேவி அதனை எடுத்து மோந்தாள்.

---

[4] South Indian Inscriptions II. 98.
[5] S. I. I. VIII. 309.
[6] 197 of 1907.
[7] 162 of 1938.
[8] 27 of 1931.
[9] 11 of 1899.
[10] 52 of 1895, 11 of 1899, S. I. I. III. P. 93; 283 of 1901, 180 of 1907 E. I. II, P. 224, 13 and 16 of 1899, 73 of 1900.
[11] 347 of 1914.
[12] S. I. I. III, P. 93.

அம்மண்டபத்தில் பூமாலைகள் கட்டிக்கொண்டிருந்த செருத்துணையார் என்னும் அடியவர், "இறைவனுக்குரிய மலரை எடுத்து மோந்தனள்" என்று கூறிக் கொண்டே, பேரழகியான அவளது மூக்கினை அறுத்துவிட்டார். உடனே மூக்கிலிருந்து குருதி கொட்டலாயிற்று. அரசியினது பூமுடித்த குழல் சரிந்துவிழுந்தது. தோகை மயிலொன்று தரையில் விழ்ந்து துடிப்பதுபோல் அரசமாதேவி திருச்சுற்றில் வீழ்ந்து புலம்பலானாள்.

கற்பகப் பூங்கொம்பொன்று நிலத்தில் வீழ்ந்து கிடப்பதுபோல் நொந்து அழிந்து புலம்பும் அரசமாதேவியை நோக்கிய அரசர், "இத்தகைய கொடிய செயலை அஞ்சாது செய்தவர் யாவர்?" என்று கேட்டார். உடனே செருத்துணையார் அங்குத் தோன்றினார்; நடந்ததை நவின்றார். உடனே அரசர் தம் மனைவிமீது சீற்றம்கொண் டார்; "சிவபெருமானுக்குரிய மலரை எடுத்தது கை; அக் கை கொடுக்க, அதனை மோந்தது மூக்கு; எனவே, முதலில் குற்றம் செய்தது கையேயாகும். அதனை வெட்டி விடுவதே தக்கது." என்று கூறிக்கொண்டே, மூக்கறுபட்டுத் துடித்துக்கொண்டிருந்த தமது மாதேவியின் வலக்கையை வெட்டி வீழ்த்தினர்.

"பட்டமு மணிந்து காதல் பயில்பெருந் தேவி யான
மட்டவிழ் குழலாள் செங்கை வளையோடுந் துணித்தா ரன்றே"[13]

என்பது சேக்கிழார் வாக்கு.

சங்காவின் சிறப்பியல்புகள்

மூன்றும் நந்திவர்மரான கழற்சிங்கரது பட்டத்தரசி, "உரை சிறந்து உயர்ந்தவள்; சாயல் மாமயிலே போல்வாள்; மதுமலர்த்திரு ஒப்பாள்; காதல் மாதேவி" என்பன சேக்கிழார் தரும் குறிப்புகள்.[14]

இவற்றை விளக்கவந்ததுபோல் உள்ள பாகூர்ப் பட்டயக் கூற்றுக் காண்க :-

"திருமாலுக்கு அமைந்த இலக்குமிபோல" இராட்டிரகூடர் குடும்பத்திற் பிறந்த சங்கா என்ற மெல்லியலாள் நந்திவர்மர்க்கு மனைவியாக வாய்த்தாள். அவள் பொறுமையில் நிலமகளை ஒத்தவள். தம் தாய் எனக் குடிகளால் பாராட்டப்பட்டவள்; அரசனது நற்பேறே உருவெடுத்தாற்போல விளங்கியவள்; அவள் பேரழகி; மதி நுட்பம் வாய்ந்தவள்; பலகலைகளிலும் வல்லவள். அவள் பெற்ற மகனே (நந்திவர் மர்க்குப்பின் பட்டம் பெற்ற) நிருபதுங்கவர்மன்.[15]

---

[13] கழற்சிங்கர் புராணம். செய்யுள். 10.

[14] கழற்சிங்கர் புராணம், செய்யுள் 4, 5, 6, 13.

[15] Epigraphia Indica, Vol. 18 PP. 5 - 15.

நிகழ்ச்சிக்குக் காரணம்

சிறந்த பேரழகியும், உயர்ந்த ஒழுக்கமுடையவளும், அரசமரபில் வந்தவளும், சிவனடியாரான கழற்சிங்கர் மனைவியும் ஆன சங்காதேவி மலர் மண்டபத்திலிருந்து விழுந்த புதிய மலரை மோந்ததனல் சிறுமையுற்றுள் என்பதைப் பெரிய புராணத்தால் அறிகிறோம் அல்லவா? அவள் அங்ஙனம் செய்யக் காரணம் யாது?

கணவன் கோயிலில் இறைவன் திருமுன்பு நின்று வழிபடும்பொழுது மனைவி அவனருகில் நின்று வழிபடுவாளே தவிரத் திருச்சுற்றில் வேடிக்கைபார்த்துக்கொண்டிராள். ஆயின் இங்கோ, கழற்சிங்கர் வழிபட்டபோது, அரசமாதேவி திருச்சுற்றில் சுற்றிக்கொண்டிருந்தாள். இது நடைமுறைக்கு மாறுபட்டதன்றே? இதற்கு உண்மைக் காரணம் யாது?

கழற்சிங்கரது கோப்பெருந்தேவியான சங்கா என்பவள், சிறந்த சமண பக்தனான அமோகவர்ஷநிருபதுங்கனது மகள். சேக்கிழார் கூறியபடியும், பாகூர்ப் பட்டயம் பகர்ந்தபடியும் அவள் உரை சிறந்தவளே. ஆயினும், அவள் சைவ சமயத்தினள் அல்லள். அவள் சைவ மங்கையாக இருந்திருப்பின், அம்மலரை மோந்திருக்க மாட்டாள்; தன் கணவர் வழிபாடு செய்யும்பொழுது தான் அவரை விட்டு விலகித் திருச்சுற்றில் நடமாடிக் கொண்டிராள்.

நின்றசீர் நெடுமாறர், சோழ அரசர் மகளாரான மங்கையர்க்கரசியாரை மணந்தபொழுது சமணராக இருந்தார்; பல்லவர்க்கு அடங்கியிருந்த சோழன், பாண்டியர் உறவைப் பெறத் தன் மகளாரை (பாண்டியர் சமணர் என்பதையும் கருதாது) மணஞ் செய்வித்தான். அதுபோலவே பேரரசனது நட்பைக் கருதி, அவன் சமணன் என்பதையும் கருதாமல், கழற்சிங்கர், அமோகவர்ஷனது உறவை மதித்து, அவன் மகளான சங்காவை மணந்தார். இங்ஙனம் சமயத்தால் வேறுபட்டிருப்பினும் அரசியல் உறவு கருதி மணம் நிகழ்த்தல் அக்கால வழக்கம். சிறந்த தமிழ்ப்பேரரசனான முதலாம் இராசராசன், தமிழனல்லாத கீழைச் சாளுக்கியனான விமலாதித்தனுக்குத் தன் மகளை மணம் செய்வித்தது அரசியல் உறவு கருதியே ஆகும். இந்த உண்மைகளை உளங் கொள்ளின், கழற்சிங்கர் புராணம் கற்பவர்க்கு எளிதில் விளங்கும்.

பண்டைத் தமிழர் இசைக்கருவிகள்

பண்டித. சு. அருளம்பலவனர்

பண்டைக் காலத்தில் தமிழ்நாடு பெருஞ் சீரும் சிறப்பும்பெற்று விளங்கியது. இசை, கூத்து, ஓவியம் முதலிய கலைகள் சிறந்து விளங்கின. தமிழ்நாட்டை ஆண்ட முடியுடை வேந்தர்களும் குறுநில மன்னர்களும் இக்கலைகளை ஆதரித்து வந்தார்கள். இசைக்கலை அக்காலத்தில் சிறந்து விளங்கியது. இசைவல்லார் பலர் அக்காலத்தில் வாழ்ந்து வந்தார்கள். இசையைக் கண்டத்தாலும் கருவிகளாலும் இசைத்து வந்தனர். பண்டைத் தமிழ்மக்கள் பாடினிபாடும் இனிய பாடலையும் இசைத்துறையில் வல்ல பாணன் இசைத்த யாழ்ப் பாடலையும் கேட்டு மகிழ்ந்தார்கள். அக்காலத்தில் மூதூர் களின் ஆறு கிடந்தன்ன அகனெடுந் தெருக்களிலும் குறுந்தெருக்களிலும் யாழ் முழவு முதலிய இசைக்கருவிகளின் இன்னிசை இடையருது ஒலித்தன. இதனை,

" நன்ன ராளர் கூடுகோள் இன்னியம்
தேரூர் தெருவில் ததும்பும் " (அக. 189-13-4.)

" முழவிமிழ் இன்னிசை மறுகுதோ றிசைக்கும்
தோண்டி " (ஐங். 171-2-3.)

என வருவனவற்ருலும் அறியலாம். பண்டைத் தமிழரின் இசைக் கருவிகளைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக நாம் அறியலாம்.

பண்டைக் காலத்தில் கூத்தர், பாணர், விறலியர் ஆடல் பாடல்களில் வல்லவர் களாய் விளங்கினர். இவர்கள் பரிசிற்பொருட்டு வள்ளியோரை நாடிச் செல்லுங்கால் தங்கள் ஆடல் பாடல்களுக்கேற்ற இசைக்கருவிகளையும் உடன்கொண்டு சென்ருர்கள். இதனைப் பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு, மலைபடுகடாம் என்னும் நூல்கள் வாயிலாக அறியலாம்.

" புணர்புரி நரம்பின் றீங்தொடை பழனிய
வணரமை நல்யா ழிளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர் " (41-1-5)

எனப் பதிற்றுப்பத்தினும்,

" நல்யா ழாகுளி பதலையோடு சுருக்கிச்
செல்லா மோதில் சில்வளை விறலி " (64-1-2.)

எனப் புறநானூற்றினும் வருவனவற்றுல் கூத்தர் விறலியர் யாழ், குழல், முழவு, ஆகுளி, பதலை முதலிய இசைக்கருவிகளோடு சென்றமை அறியப்படும். இதனுல் பண்டைக் காலத்தே தோற்கருவிகளும், துளைக்கருவிகளும், நரம்புக்கருவிகளும் பயின்று வந்தமையை அறியலாம். கஞ்சக்கருவிகளும் பயின்று வந்தமை ".நுண்ணுருக் குற்ற வெள்ளடர்ப் பாண்டில்" என மலைபடுகடாத்து வருதலான் அறியலாம்.

துளைக் கருவிகள் :

பண்டைத் தமிழர் இசைக்கருவிகளுள் குழலும் ஒன்று. காட்டில் நீண்டு வளர்ந்த மூங்கிலில் வண்டுகள் துளைத்த துளைகளின் வழியே கோடைக்காற்றுப் புகுந்து இயங்குதலால் இன்னிசை எழுந்தது.

" ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாக " (82)

என அகநானூற்றில் வருதலானும் இதனை அறியலாம். இவ்வாறு இசை எழுதலைக் கண்ட மக்கள் குழலை உண்டாக்கினுர்கள். இடையன் பசுத்திரளோடே காட்டில் தங்கித் தீக்கடை கோலாலே புகைபிறக்கும்படிக் கையாலே தீயைக்கடைந்து அக்கடைகோலிலுள்ள தீயினுல் துளையிட்டு மூங்கிலில் ஆக்கின குழலிற் பாலைப்பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணுற்றுப்படை கூறுகின்றது. மூங்கிற்குழலைக் கோவலரே பெரும்பான்மையும் ஊதி வந்தமை,

" குழல் தோடங்கினரே கோவலர் " (371-9)

" கல்லாக் கோவல ரூதும்
வல்வாய்ச் சிறுகுழல் " (219-15-6)

என நற்றிணை அகநானூறு என்னும் நூல்களில் வருதலான் அறியலாம்.

மூங்கிற்குழற்குப் புல்லாங்குழல் என்றும் பெயர். இது சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி முதலியவற்றுலும் செய்யப்பட்டது என்பது சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையினுல் அறியலாம். மூங்கிற்குழல் தூம்பு, வங்கியம் என்னும் பெயர்களாலும் வழங்கப்பட்டுவந்தது. பண்டைக்காலத்திற் கூத்தர் தம் ஆடற்றுறைக்கு வேண்டிய இசைக்கருவிகளுள் ஒன்ருகத் தூம்பினையும் கொண்டு சென்ருர்கள் என்பது பதிற்றுப்பத்து மலைபடுகடாம் என்னும் நூல்களால் தெரிகிறது. "குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந்திசைப்ப......கோடிய ரிறந்த" என அகநானூற்றில் வருதலான் கூத்தர் குறுந்தூம்பு நெடுந்தூம்பு என இரண்டு வகையான தூம்பினைக்கொண்டு சென்ருர்கள் என்று அறியலாம். குறுந்தூம்பு 'சிறுவங்கியம்' என்றும், பெருந்தூம்பு 'பெருவங்கியம்' என்றும் வழங்கப்பட்டன.

பெருவங்கியம் களிற்றின் கைபோலும் வடிவுடையதென்பது "கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்" என்பதற்குக் 'கண்திறக்கப்பட்ட தூம்பாகிய களிற்றினது கைபோலும் வடிவையுடைய பெருவங்கியத்தை இசையுங்கோள்' என்னும் புறநானூற்றுரையானும் அறியப்படும்.

ஏழ்துளையான வங்கியமும் ஐந்து துளையான வங்கியமும் பண்டைக்காலத்தில் வழங்கி வந்தன என்பது, "ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த் தன்ன" எனப் பரிபாடலில் வருதலான் அறியலாம். கொன்றைக்குழல் முதலியனவும் பண்டைக்காலத்தில் ஊதப்பட்டு வந்தமை,

"கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி"

"ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி"

"முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி"

எனச் சிலப்பதிகாரத்து வருதலான் அறியப்படும்.

எக்காலத்தும் சுரம் வேறுபடாமலிருப்பது குழலேயாம். யாழ் நரம்பு குளிர்ச்சியாலே தன் நிலைகுலைந்து ஓசை வேறுபடுதலுண்டு.

"தண்மையிற் றிரிந்த வின்குரற் றீந்தொடை
கோம்மை வருமுலை வெம்மையிற் றடைஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்ப"

என நெடுநல்வாடையில் ஆசிரியர் நக்கீரனுர் கூறுதல் காண்க. இங்ஙனம் ஓசை வேறுபட்டவிடத்துக் குழல் ஓசையின் துணையினுல் யாழ் நரம்புக்கு இசைகூட்டினுர்கள். இதனை, "நரம்பின் றிங்குரல் நிறுக்குங் குழல்போல்" எனக் கலித்தொகையில் வருதலானுமறியலாம். பாட்டினைச் சுருதி குன்ருமல் கைக்கொண்டு நிற்பதும் குழலேயாதல், "விளிப்பது கவரும் தீங்குழல்" என்பதனுலும் அறியப்படும்.

பண்டைச் சான்ருேர் இசைக்கருவிகளில் குழலினையே முதன்மையாகக் கொண்டனர் என்பது,

"குழலகவ யாழ் முரல"

எனப் பட்டினப்பாலையினும்,

"குழலினும் யாழினும்"

எனச் சிலப்பதிகாரத்தும்,

"குழலினிது யாழினிது"

எனத் திருக்குறளினும் குழலினை முதற்கண்வைத்துக் கூறுதலான் அறியலாம். குழலின் வழியே யாழ் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தன என்பது,

" குழல்வழி நின்ற தியாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே " (3-139-41)

எனச் சிலப்பதிகாரத்து வருதலான் அறியலாம்.

வயிர் என்பது ஊதப்படும் இசைக்கருவிகளுள் ஒன்று. இது ஊதுகொம்பு என்றும் சொல்லப்படும். இது திண்ணிய வயிரத்தையுடையதென்பது " திண்காழ் வயிர் " எனத் திருமுருகாற்றுப்படையினும், ஓசை பரந்தெழும் பெரிய வாய் வட்டத்தை யுடையதென்பது " பாடுர்பெழுதரும் பகுவாய் மண்டிலத்து, வயிர் " என அக நானூற்றினும் வருவனவற்ருல் அறியப்படும். இதன் ஓசை கிளி, நாரை, மயில் இவற்றின் ஓசைபோன்றதென்பது சங்க இலக்கியங்களால் தெரிகிறது. இது ஆடு களத்திலும் ஊதப்பட்டமை " ஆடுகள வயிரின் " (அகம்) என்பதனுல் அறியப்படும்.

வளை என்பது சங்கு. வயிரும் வளையும் பாசறையிடங்களிலும் போர்க் களத்திலும் ஊதப்பட்டு வந்தன என்பன முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, பதிற்றுப் பத்து என்னும் நூல்களால் தெரிகிறது. குறவர்கள் வயிரும் வளையும் ஊதி முருகக் கடவுளை வழிபட்டார்கள் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

நரம்புக் கருவிகள்

யாழ் பண்டைக் காலத்து வழங்கிய நரம்புக்கருவியாகும். சங்க காலத்தே சீறியாழ் பேரியாழ் என்னும் இருவகை யாழ்களே வழங்கி வந்தன. சீறியாழைப் பற்றிய செய்திகளைச் சிறுபாணுற்றுப்படை, அகநானூறு, புறநானூறு என்னும் நூல் களிலும், பேரியாழைப் பற்றிய செய்திகளைப் பெரும்பாணுற்றுப்படை, மலைபடுகடாம், பதிற்றுப்பத்து என்னும் நூல்களிலும் காணலாம். மகரயாழ், சகோட யாழ் என்பன சங்க காலத்திற்குப் பின்னர் தோன்றியனவாகும். இவ்வியாழ்களைப்பற்றிச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய நூல்கள் கூறுகின்றன. பேரியாழ் 21 நரம்பை யும், மகர யாழ் 19 நரம்பையும், சகோட யாழ் 14 நரம்பையும், சீறியாழ் எனப்படும் செங்கோட்டி யாழ் 7 நரம்பையும் கொண்டனவாகும். பெரும்பாணுற்றுப் படையில் 'இடனுடைப்பேரியாழ்' என்று ஆசிரியர் உருத்திரங்கண்ணனுர் கூறுதலினுல் பேரியாழ் தனக்குக் கூறுகின்ற இலக்கணங்களைத் தன்னிடத்தே கொண்ட பெரிய யாழ் என்று அறியலாம். இது பேரோசையையுடையதென்பது " வள்ளுயிர்ப்பேரியாழ் " (மலை படு 37) என்பதனுலுமறியப்படும். " தொடித்திரிவன்ன தொண்டுபடு திவவின்..... பேரியாழ் " என்று இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனுர் பேரியாழுக்கு நரம்பு துவக்கும் திவவு ஒன்பது என்று கூறுதலினுல் நரம்பு ஒன்பது என்பதும் பெறப்படும். இதனுல் ஒன்பது நரம்போடு கூடிய பேரியாழும் பண்டைக் காலத்தே வழங்கியமை அறியப்படும்.

மகரயாழிற்குப் பத்தொன்பது நரம்பு என்பது 'பத்தொன்பது நரம்பு கட்டின மகரயாழ்'' எனச் சீவகசிந்தாமணியுரையில் (608 நச். உரை) வருதலானும் அறியலாம்.

'' யாணர்க் கூட்டத் தியவனர்க் கைவினை
மாணப் புணர்த்ததோர் மகர வீணை ''

எனப் பெருங்கதையில் வருதலான் மகரயாழ் யவனரால் செய்யப்பட்டுத் தமிழ் நாட்டில் வழங்கியதென்று உணரலாம்.

பெருங்கலம் என வழங்கும் ஆயிரம் நரம்புகளையுடைய பேரியாழும் பண்டைக் காலத்தில் இருந்தது என்பது, 'பெருங்கலமாவது பேரியாழ்; அது கோட்டினதளவு பன்னிரு சாணும் வணரளவு சாணும் பத்தரளவு பன்னிருசாணும் இப்பெற்றிக்கேற்ற ஆணிகளும் திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்கோல் தொடுத்தியல்வது' எனச் சிலப்பதிகார உரைப்பாயிரத்து வருதலான் அறியப்படும்.

பிரமவீணை: பண்டைக் காலத்தே தெய்வத்தன்மையுடைய பிரமவீணை என்னும் இசைக்கருவியும் வாசிக்கப்பட்டுவந்தது. இதனைத் ''தெய்வப்பிரமஞ் செய்கு வோரும்'' எனப் பரிபாடலில் வருதலான் அறியலாம்.

வில்யாழ் என்னும் ஒருவகை யாழும் பண்டைக் காலத்தே வாசிக்கப்பட்டு வந்தது. இதனை இடையன் வாசித்துவந்தான். குமிழங்கொம்பை வில்லாக வளைத்து மரல் நாரினால் திரித்த கயிற்றினை நாணாகக் கட்டி வில்யாழை இடையன் செய்து அதிலே குறிஞ்சிப்பண்ணை வாசித்தான் என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

தோற்கருவிகள்:

பண்டைக் காலத்தில் பலவகையான தோற்கருவிகள் வழங்கிவந்தன. சிலப்பதிகாரவுரையில் பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம் முதலிய முப்பத்தொரு தோற்கருவிகளை அடியார்க்குநல்லார் கூறியுள்ளார்.

முழவு என்னும் தோற்கருவி மூதூர்களில் நடக்கும் விழாவின்கண்ணும் துணங்கைக் கூத்தின்கண்ணும் கூத்தர் விறலியர்களின் ஆடல் பாடல்களின்கண்ணும் முழக்கப்பட்டு வந்தது.

முரசு பழமையும் பெருமையும் வாய்ந்த தோற்கருவியாகும். இதன் பழமையைக் காலத்தால் மிகவும் முற்பட்ட தொல்காப்பியத்துக் கூறப்படுதலானும் அறியலாம். பண்டைத் தமிழ்வேந்தர்கள் பகைவரது காவன்மரத்தைத் தடிந்து அதனைக்கொண்டு வீரமுரசினைச் செய்தார்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர வேந்தன் பகைவரது காவன்மரமாகிய கடம்பினைத் தடிந்து முரசு செய்தமையை,

"பலர்மோசிந் தோம்பிய திரள்பூங் கடம்பின்
கடியுடை முழுமுத றுமிய வேஎய்
வென்றெறி முழங்குபணே செய்த வெல்போர்
நாரரி நறவி னுர மார்பிற்
போரடு தானைச் சேர லாத" (11 - 12 - 6)

என்று பதிற்றுப்பத்துக் கூறுகின்றது. முரசில் தெய்வமுறைதல் பற்றி அதற்கு அரும்பலி இட்டு வந்தனர்.

அரசர்படை போர்க்குச் செல்லும்போதும் களத்தில் போர் நிகழும்போதும் முரசு முழக்கப்பட்டது. இடிபோல முழங்கும் முரசு அரசரின் போர்வென்றிக்கும் துணையாக அமைந்தது. அரசர் போர்செய்து வருந்தாமற் பகைவர் வெருவியோட முழங்கி அரசனுக்கு வெற்றி தன்பாலேபட நின்றமுரசினை 'வலம்படு வியன்பணே' என்று பதிற்றுப்பத்துக் கூறுகின்றது. அரசர் வீரமுரசுடன் நியாயமுரசு தியாகமுரசு என்னும் முரசுகளையும் உடையராயிருந்தனர்.

"இமிழ்குரன் முரச மூன்றுட னுளுந்
தண்கெழு கூடற் றண்கோல் வேந்தே"

எனப் புறநானூற்றில் வருதல் காண்க.

முரசு ஊரூர் கொண்ட சீர்கெழு விழவின்கண்ணும் முழக்கப்பட்டது. காவிரிப்பூம்பட்டினத்திலே கடவுளுக்கு விழா எடுக்கப்பட்டபோது யாழ், குழல், முழவு, முரசு என்னும் இசைக் கருவிகள் இயம்பின என்பது,

"குழலகவ யாழ்முரல
முழவதிர முரசியம்ப
விழவறு வியலாவணத்து"

எனப் பட்டினப்பாலையில் வருதலான் அறியப்படும்.

பணே என்பது ஒருவகை முரசம். நெடுநல்வாடையில் ஆசிரியர் நக்கீரனுர் யானையின் காலைப் "பணைமருள் நோன்றாள்" என்று கூறுதலினுல் இது யானையின் காலைப்போன்ற பருமையையுடையது என்று உணரலாம். பணே என்பது முரசு என்ற பொருளில் வழங்கப்படினும் அதனின் வேருனது என்பது, "குணில்பொரக் குளிறின முரசம் வெள்வளை பணேபரந்தார்த்தன" எனச் சிந்தாமணியில் வருத லானும் அறியலாம்.

ஆகுளி என்பது சிறுபறை என்னும் வாச்சியம். மெல்லிய நீர்மையையுடைய இப்பறை, யாழ் முழவுகளோடு பொருந்தி ஒலித்தமை, "குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி, நுண்ணீ ராகுளி யிரட்ட" என மதுரைக்காஞ்சியில் வருதலான் அறியப் படும். இதன் ஒலி பேராந்தையின் ஒலிபோன்றது என்பது,

" விரலூன்று படுக ணுகுளி கடுப்பக்
குடிஞை யிரட்டும் " (மலைபடு 140 - 1)

என வருதலான் அறியப்படும்.

மகுளி என்பது பண்டைக்காலத்து வழங்கிய தோற்கருவிகளுள் ஒன்று. இதனை அடிக்கும்போது குறுந்தடியை இழுத்து அடிப்பர். இதனை " விசித்து வாங்கு பறை " என்று அகநானூறு கூறுகின்றது. இதன் ஓசையும் பேராந்தையின் குரல் போன்றதென்பது,

" உருள்துடி மகுளியின் பொருள்தெரிந் திசைக்கும்
கடுங்குரற் குடிஞை " (அகம்)

என்பதனுலறியப்படும்.

எல்லரி என்பது உத்தமதோற் கருவிகளில் ஒன்று. இது தாளத்தைக் கைக் கொண்டு ஒலிக்கும் வலியவாயையுடையதென்பது, " கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி " (மலைபடு) என்பதனுலறியப்படும்.

தட்டை என்பது ஒருவகைப் பறை. இது அரித்தெழும் ஓசையுடைத்தாதல் " அரிக்குரற் தட்டை " (மலைபடு) என்பதனுலறியப்படும். இது தவளையின் குரல் போன்றதென்பது " தேரை, தட்டைப் பறையிற் கறங்கு நாடன் " எனக் குறுந் தொகையில் வருதலான் அறியப்படும்.

பதலை என்பது ஒருதலைமுகமுடையதொரு தோற்கருவி. இதனைப் " பதலை யொருகண் பையென வியக்குமின் " எனப் புறநானூற்றில் வருதலானும் அறியலாம். இதனை ' ஒருகண் மாக்கிணை ' என்றும் ' ஒருதலை மாக்கிணை ' என்றும் கூறுவர். இது மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடையதென்பது " நொடிதரு பாணிய பதலையும் " (மலைபடு) என்பதனுல் தெரிகிறது.

துடி என்பது மிக்க பழமையானதொரு தோற்கருவி. இதனைப் பாலைநிலத் துக்கு உரியதாகக் கூறுவர். இதனைக் கானவர் அடித்துவந்தனர் என்பது. " வில்லோர் குறும்பிற் றதும்பும், வல்வாய்ச் சிறுதுடி " என அகநானூற்றில் வருதலான் அறியலாம். பகைவர் நிரையைக் கவர விரும்பும் வீரர்க்கு வெற்றியுண்டாகும்படி கொற்றவையைப் பரவும்போது துடியை அடித்தனர் என்பது,

" மறங்கடை கூட்டிய துடிநிலை சிறந்த
கோற்றவை நிலையும் "

எனத் தொல்காப்பியத்து வருதலான் அறியப்படும். துடி மறவரின் வெற்றிக்கு ஏதுவாதல், " துடிபுணையாக வென்றிதந்து " எனப் புறநானூற்றில் வருதலான்

அறியப்படும். கூத்தப்பிரான் திருக்கரத்திலுள்ளதும் துடியென்பது "தோற்றந் துடியதனில்" என்பதனுலறியப்படும்.

இவைகளேயன்றிக் கிணை, தண்ணுமை, தொண்டகப்பறை, பம்பை முதலிய தோற்கருவிகளும் பண்டைக்காலத்து வழங்கிவந்தன என்பது பழந்தமிழ் இலக்கியங்களால் தெரிகிறது.

பண்டைக்காலத்தில் ஆடவரேயன்றி மகளிரும் யாழ் முதலிய இசைக் கருவிகளை வாசித்தலில் வல்லவர்களாய் விளங்கினுர்கள். விறலி யாழ் வாசித்துப் பாடுதலில் வல்லவளாய் விளங்கினுள் என்பது,

"வண்டுபடு கூந்தன் முடிபுனை மகளிர்
தொடைபடு பேரியாழ் பாலை பண்ணிப்
பணியா மரபி னுழிஞை பாட" (46)

எனப் பதிற்றுப்பத்தில் வருதலானும் அறியலாம்.

விறலியர் ஆடும்போது யாழ், குழல், முழவு, மத்தரி, தடாரி, தண்ணுமை முதலிய பலவகை இயங்களும் இயம்பின.

"ஒத்த குழலி ஞேலியேழ முழவிமிழ்
மத்தரி தடாரி தண்ணுமை மகுளி
யோத்த ளந்து சீர்தூக்கி...........
....
அத்தகு வரிவைய ரளத்தல் காண்மின்" (12

எனப் பரிபாடலில் வருதல் ஈண்டறியற்பாலது.

பண்டைக்காலத்து இசைக் கருவிகளிற் பல இக்காலத்து மறைந்துவிட்டன. யாழ் முதலிய சிறந்த இசைக் கருவிகளை ஆக்கியும் வழக்கிலிருக்கும் இசைக் கருவிகளை நன்கு பயன்படுத்தி மறையாமற் காத்தும் வருதல் இசைவல்லார்தம் கடனுகும். இசைத் துறையில் பழைய பண் முறைகளைப் பேணுதல் வேண்டும். அப் பண்முறைகளை நம் சமயாசாரியர்கள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்களிற் காணலாம். தருமை ஆதீனத்தில் இப்பண்முறை பேணும் தேவார பாடசாலையை நிறுவிக் காத்துவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் இசையிலும் வல்லவர்கள்; இசைத் தமிழ் பேணும் பெருவிருப்புடையவர்கள். தம்முடைய ஆதீன ஆட்சியிலுள்ள ஆலயங்களில் முகவீணை, துத்தி, பஞ்சமுகவாத்தியம், சுத்தமத்தளம், தவளசங்கம், சாரங்கி, முரசு, பேரிகை முதலிய பல பழங்கால இசைக் கருவிகளை வழிபாட்டுக் காலங்களில் பயன்படுத்திவரச்செய்யும் பெருமை உடையவர்கள். ஆதலின் அக்குருமாமணியின் கனகாபிஷேக மலரில் இசைக் கருவிகளைப்பற்றி ஆராய்ந்தெழுதத் துணிந்தேன்.

சாத்திரமும் தோத்திரமும்

தருமையாதினப் புலவர்
திரு. க. வச்சிரவேல் முதலியார் B. A., L. T.,

குறிக்கோள் :

மக்கள் மேற்கொண்டு செய்யும் முயற்சிகள் எல்லாம் மனநிறைவையும் இன ஒருமையினையும் (Individual Contentment and social harmony) பயனாக உடைய வாதல் வேண்டும். இஃது இக்காலத்துச் சூழ்நிலைக்கு முற்றிலும் பொருந்துவதோர் விதியாகும். ஆயின், இக்குறிக்கோளை எய்தவும் எய்துவிக்கவும் கூறப்படும் முறைகள் பலப்பலவாக உள்ளன.

முந்தையோர் சொன்னது யாது ?

ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் அனுபவத்தைக்கொண்டு நம்முன்னோர் கடவுள் உண்மைக்கொள்கை ஒன்றே மேற்கூறிய இரண்டனையும் பயக்கவல்லது எனத் தாங்கண்டு பின்பற்றி ஒழுகியும் பிறர்க்கு அறிவுறுத்தியும் வந்துள்ளார்கள்.

" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது "

என்றார் உலகப் பெருநாவலராகிய திருவள்ளுவனார். இதன் கருத்து யாது? முதல்வன் இயல்பை உணர்ந்து நெறிப்பட்டு ஒழுகினார்க்கு அன்றி மன அமைதி (Individual Contentment) இல்லை என்பதுதானே பொருள்! திருஞானசம்பந்தர் முதலிய அருளாசிரியன்மார் பண்டும், காந்தியடிகள் போன்ற நன்மக்கள் பிற்காலத்தும் மன அமைதி உடையராய் ஒழுகிப் பிறரை நன்னெறிக்கண் உய்த்தது கடவுள் உண்மைக் கொள்கை ஒன்றால்தான் என்பதில் ஐயம் சிறிதேனும் உண்டோ ? கடவுட்கொள்கை இல்லாதார் எல்லாரும் கல்வி, செல்வம், அதிகாரம் முதலியவற்றைப் பெற்று உயர்தர வாழ்க்கை வாழினும், மனநிறைவின்றித் தாம் அல்லற்படுவதும், பிறரை அல்லற் படுத்துவதும் அன்றாடம் கேட்டும் கண்டும் வரும் காட்சிகள் அல்லவா ?

மேலும் கடவுள் உண்மைக் கொள்கையுடையோர் உயிர்களைக் கடவுளுக்குப் புத்திரர்களாகவும், உடைப்பொருளாகவும் கொள்வர். ஆதலால் அவர்களே பிறரைத் தம் உடன்பிறந்தோராகக் கருதி அன்புசெய்து ஒழுகவல்லவர்கள் என்பது விளங்கும்.

கடவுள் உண்மைக் கொள்கையால் அருள் ஒழுக்கமும் இன ஒருமையும் ஒருவருக்கு உண்டாகும் என்னும் அடிப்படை உண்மையை உளங்கொண்டே சைவ நெறிநின்ற பெருமக்கள்.

" எவ்வுயிரும் நீங்கா(து) உறையும் இறைசிவனேன்(று)
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு " (சைவசமயநெறி)

என விதித்தனர்.

கடவுட் கோள்கையின் தேவை :

இன்ன பிற காரணங்கள் பற்றியே மேலைநாட்டு அறிஞர் ஒருவர் " கடவுள் இல்லை எனினும், ஒருவரை நாமே படைத்துக்கொள்வது இன்றியமையாததாகின்றது " (Even if there be no god, it is necessary to create are) என்றனர். மேலை நாட்டில் கடவுளை உண்டென்று நம்பினவர்கள் இருந்தார்களே தவிர அவரைக் கண்டவர்களோ அனுபவித்தவர்களோ முனைந்து காணப்படவில்லை. அதனால்தான் அவர் அறிவு கடவுளைச் சிருட்டிக்க எண்ணிற்று. ஆனால் நம் நாட்டில், அதிலும் தண்டமிழ் நாட்டில், அத்தகைய பேறின்மை இல்லை.

கடவுளைக்கண்டு, அனுபவித்துத் தாம் அவனாய் நின்று, அருளுரை பகர்ந்த ஆசிரியன்மார் பலர். ஆதலால் நாம் கடவுளைச் சிருட்டிக்க வேண்டுவதில்லை. அவன் இருப்பை அறிவுக்கண்கொண்டு கண்டு, ஒழுகினால் போதும். " கற்றைச் செஞ்சடை யான் உளன்; நாம் உளோம்; எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே ? " என்றார் அப்பர். " சுடர்விட்டுளன், எங்கள் சோதி ! மா துக்கம் நீங்கலுறுவீர்; மனம் பற்றி வாழ்மின் !! " என்றார் ஆளுடைய பிள்ளையார்.

மனம்பற்றி வாழ்தல் எப்படி ?

இயற்கை அமைப்பையும் அதன் அழகையும் வாழ்க்கையின் அடிப்படை உணர்வுகளையும் உணர்ந்து இன்புறுதற்குத் துணைசெய்வன இலக்கியங்கள் ஆகும். இலக்கியங்கள் மூலம் அவற்றின் ஆசிரியர்கள் கண்டவை, நினைத்தவை, உணர்ந்தவை என்பவற்றை நாம் உணரக்கூடும். நாம் அந்நூல்களைக் கருவியாகக்கொண்டு, அவர் கண்டவாறு காணவும், நினைந்தவாறு நினைக்கவும், உணர்ந்தவாறு உணரவும் வேண்டும். இவையே இலக்கியப்பயன். இவை கூடவில்லைஎனின் இலக்கியங்களை மனப்பாடம் பண்ணினும் ஒருவன் கல்லாதவனே ஆவன்.

இவ்வாறு இலக்கியத்தால் பயன்பெறுவதற்கு உறுதுணையாக உள்ள நூல்களே இலக்கண நூல்கள். ஓரளவு இலக்கியங்களைக்கேட்டு, உணர்ந்தபின், ஒருவன் இலக்கணங்கற்க வேண்டும். கற்றால்தான் மேற்கொண்டு உயர்ந்த, சிறந்த இலக்கியங்களை அவற்றின் போக்கும் நோக்கும் உணர்ந்து கற்றுப் பயன்பெறுதல் கூடும்.

இலக்கண அறிவின்றேல் இலக்கிய உணர்வும் இல்லையே ஆம். இக்கருத்துப்பற்றியே துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் "எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும் எழுத்தறிவார்க்காணின் இலையாம்" என்றனர்.

உலகியல் துறையில் இலக்கிய இலக்கணங்கள் ஒருவருக்குத் துணைசெய்வது போல, சமயவாழ்க்கையில் உறுதுணையாக உள்ளவையே தோத்திர சாத்திரங்கள் ஆகும். இவையே மக்கள் கடவுட்கொள்கையைக் கடைப்பிடித்து ஒழுகி வாழ வழி வகுப்பவை. மெய்ந்நெறித் துறையில் மனம்பற்றி வாழும் முறையினைக் காட்டுவன இவையே ஆகும். முதல்வனால் உயிர்கள் பிறவியறுத்து உய்தற்பொருட்டு இவை வெளிப்படுத்தப்பட்டு நிலவுதல்பற்றி அப்பர் அடிகள் இவற்றைக் குறித்துத் 'தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே' என அருளிச்செய்வார் ஆயினர். திருவள்ளுவர்,

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

"பற்றுக பற்றற்றான் பற்றினை"

எனக் கூறியுள்ளவற்றில் பொய்தீர் ஒழுக்கநெறி என்றதும், பற்று என்றதும் முதல்வன் அருளால் தோன்றி நிலவும் தோத்திர சாத்திரங்களையே ஆம் என்பது நுண்ணறிவு உடையார் எல்லார்க்கும் விளங்கும் உண்மை. இவ்விடங்களில் ஆறுவது செய்யுட்கிழமைக்கண் வந்தது என்னும் பரிமேலழகர் உரைக்குறிப்பை உணர வல்லார்க்கு இஃது இனிது விளங்கும்.

தோத்திரமாவது யாது ?

முதற்பொருளைத் தலைப்பட்டுணர்ந்த பெருமக்கள் தம் மெய்யுணர்வு காரணமாக முதல்வனிடத்துப் பொங்கி எழும் இடையறாப் பேரன்பு உடையராய், அன்பால் இன்பம் ஆர்ந்து, அவனே ஆகிநின்றிடுவர்.

"நஞ்சேயல் அற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்சேயல் தானேஎன் றுந்தீபற !
தன்னையே தந்தான்என் றுந்தீபற !!"

என்னும் இலக்கணத்துக்கு இலக்கியமாக நிற்பர். நிற்கும் நிலையில், முதல்வன் அருளால் தூண்டப்பட்டும் தம்மெய்யன்பால் உந்தப்பட்டும் முதல்வனை முன்னிலைப் படுத்தியும் படர்க்கையின்வைத்தும் பரவலும் புகழ்தலும் வாழ்த்தலும் செய்வர். இவ்வாறு முழுமுதற்செம்பொருளை மெய்யுணர்வால் தலைப்பட்ட பெருமக்கள் அப்பொருளின் உண்மையியல்புகளை நம்மனோர் உணர்ந்து உய்யுமாறு அருளிச்செய்த துதிப் பாடல்களே தோத்திரம் எனப்படும். இத்தகைய தோத்திரங்களுள் தலைசிறந்தவை தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலியவை ஆகும்.

" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப "

என்னும் இலக்கணம் முற்றும் அமையப்பெற்ற - கண்ட பெருமந்திரம் இவ்வருட்பாடல்களே ஆகும். " இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் - பொருள்சேர் புகழ்புரிந் தார் மாட்டு " என்னும் திருக்குறளில் இறைவன் பொருள்சேர் புகழ் என்றதும் இத்தகைய தெய்வப் பனுவல்களையே ஆம்.

சாத்திரமாவது யாது ?

இனி, மேற்கூறிய தோத்திரங்களில் அமைந்து சுடரும் அனுபவ உண்மைகளைத் தொகுத்து நெறிப்படுத்தி நூல்முறையில் தருவனவே சாத்திரங்கள் எனப்படும். சாத்திரங்களைச் சமய ஒழுக்க நெறியின் இலக்கணம் எனக் கூறலாம். ஒரு மொழியில் உள்ள இலக்கணத்திற்கு மூலமாக உள்ளவை இலக்கியமே ஆகும். அதுபோல, சாத்திரங்களுக்கு மூலமாக உள்ளவை தோத்திரங்களே ஆகும்.

வடமொழியில் மந்திரபாகம் எனப்படும் வேதப் பதிகங்களில் உள்ள அனுபவங்களை ஒழுங்குபடுத்தி உரைப்பவை உபநிடதங்கள் எனப்படும். உபநிடதங்களில் வரும் முக்கியத் தொடர்களெல்லாவற்றுக்கும் மூலங்கள் மந்திரபாகத்தில் இருக்கும். அதுபோல, சாத்திரங்களில் உள்ள முக்கிய பாகங்களுக்கு மூலங்கள் தோத்திரங்களில் இருத்தலைக் காணலாம்.

பின்வரும் எடுத்துக்காட்டுக்கள் இக்கருத்தை விளக்கும்.

சாத்திரம் :

" அகளமா யாரும் அறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற !
தானாகத் தந்ததென் றுந்தீபற ! ! " (திருவுந்தியார்)

தோத்திரம் :

" தானாகச் செய்யுமவன் உறையும் இடம் " (திருஞானசம்பந்தர்)

சாத்திரம் :

" ... ... ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர் " (சிவஞானபோதம்)

தோத்திரம் :

" விரிந்தனை குவிந்தனை விழுங்குயிர் உமிழ்ந்தனை " (திருஞானசம்பந்தர்)

சாத்திர உணர்வின் அவசியம் :

இலக்கணங் கற்ருர்க்கன்றி இலக்கியம் இனிது பயன்படாதது போலச் சாத்திரம் கற்ருர்க்கே தோத்திரம் தன்பொருளை விளக்குவதாகும்.

இத்தகைய சாத்திரங்களுள் தலை சிறந்தவை திருவுந்தியார் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈருக எண்ணப்படும் பதினுன்குமே ஆகும்.

பயன் :

இங்குக் கூறிய சாத்திர தோத்திரங்களை ஓல்லும்வகை ஓதிஉணர்வோர் இகபரங்களில் வரும் துயர்நீங்கிப் போகமோக்ஷங்களைப் பெறுவர் என்பதில் ஐயமின்று.

கயிலை மகாசந்நிதானம் :

சகல வேதாகம சாரமாய் உள்ள, தோத்திர சாத்திரங்கள் எனப்படும் பன்னிரு திருமுறைகளையும் பதினுன்கு சாத்திரங்களையும், 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் அருள் உள்ளத்தால் பற்பல வகைகளில் அச்சிட்டுத் தமிழ் நன் மக்களுக்கு உபசரித்துவரும் பெருங்கருணைத் திறத்தில் நமது தருமை ஆதீனம் கயிலைக் குருமகாசந்நிதானத்திற்கு ஈடாக ஒருவரும் இலர் என்பது உலகம் அறிந்த உண்மை. குருமகாசந்நிதானம் ஞானபீடத்து எழுந்தருளிய திருநாள் ஆண்ட அரசின் திருநாளாகிய ; விரிஞ்சன்முதல் - யோனிகளாயின எல்லாம் உள் நிறைந்த பெருமகிழ்ச்சி - தானிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாள். ஆதலால், வாகீசத் திருவடியே இஞ்ஞான்று தமிழகத்தே போந்தருளித் திருத்தொண்டின் நெறியும் அருந்தவ ஞானமும் வாழ வாழ்ந்தருளுமாப்போல, ஞானத்தின் திருவுருவாய், நான்மறையின் தனித்துணையாய், சாத்திர தோத்திரக் கருவூலமாய் எழுந்தருளி, அருள்ஞான ஒளிபரப்பி வருவது வியப்பு அன்று. இத்தகைய அருண்ஞானமூர்த்தி - ஒண்தீந்தமிழ்வாழ, உயர் சைவநெறி வாழ, கண்ணுதலார் அருள்பெருக, கற்றவர்கள் தனிசிறக்க - வாழிய ! வாழிய !! வாழிய !!! என வாழ்த்தி மகிழ்ந்தின்புறுவோமாக !

சிவநெறிச் சிறப்பு

திரு. வ. சுப்பையா பிள்ளை

'சிவநெறி' என்பது சிவனைக் குறிக்கும் நெறி என்பதாம். மேலும் சிவனை அடைவிக்கும் நெறியெனவும் சிவனைத் தம்முள்ளந்தழீஇய மெய்யடியார்கள் அருளிச் செய்த செந்தமிழ்த் திருமாமறை திருமாமுறைகளால் அவனை வழிபட்டுய்ய வகுத்தருளி அமைத்த நெறியெனவும் பிறவாறும் அத்தொகைச் சொல்லினை விரித்துப் பொருள் கொள்ளலாம். சிவநெறி செந்தமிழ்நாட்டுத் தொன்னெறி. இதுவே முன்னெறி, நன்னெறியாவதுமிதுவே. இதனைக் குருநெறியெனவுங்கூறுப; மேலும் திருநெறி; அருள்நெறி, மெய்ந்நெறி, செந்நெறி, ஒளிநெறி, பெருநெறி, பொதுநெறி, கடவுள் நெறி, மறைநெறி, பொருள்நெறி, தவநெறி, ஆய்வுநெறி முதலிய பல திருப்பெயர் களானும் அது வழங்கப்படும்.

"சிவனெனு நாமந்தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்' ஒருவனே விழுமிய முழுமுதல்வனுவன். அவ்வுண்மை பண்டைப் பனுவல்கள் அனைத்தினும் பரக்கக் காணலாம். பின்றைத்தோன்றிய தெய்வப் பனுவல்களும் அதனையே விரித்து விளக்கு கின்றன. எடுத்துக்காட்டாகச் சில திருப்பாட்டுக்கள் வருமாறு :

"சிவனோடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனோடொப் பாரிங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே". (10)

இவ்வொப்பின்மையினை விரித்து விளக்கும் திருமாமறைத் திருப்பாட்டு வருமாறு :

"மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையா னென்னின் அல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஒரூரன் அல்லன்ஓர் உவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே" (6-97-10)

இச்சிவபெருமானின் உலகு பொதி உருவத்தினை உரைக்குங்கால் 'முக்கணன்' என மொழிவர். ஞாயிறு, திங்கள் தீ என்னும் ஒளிப்பொருள்கள் மூன்றும் அப் பெருமானின் மூன்று திருக்கண்களாக வழங்கப்படுகின்றன ; உலகு பொதியுருவத் தினைப் பெருத்தவுருவம் என்பர். அவ்வுண்மை வரும்செந்தமிழ்த் திருமாமறையான் உணரலாம்,

" விரித்தார்நான் மறைப்பொருளை யுமையஞ்ச விறல்வேழம்
உரித்தாரா முரிபோர்த்து மதின்மூன்று மொருகணையால்
எரித்தாரா மிமைப்பளவி லிமையோர்கள் தொழுதிறைஞ்சப்
† பெருத்தாரெம் பெருமானூர் பெருவேளூர் பிரியாரே. (சம்பந்தர்)

" உலகமே யுருவமாக யோனிக ளுறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா வுயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி யைந்து
நலமிகு தொழில்க ளோடு நாடக நடிப்ப னுதன் "
(சிவஞான சித்தியார், 5-2-6)

" நிலவுக்கதிர் முடித்த நீளிருஞ் சென்னி
உலகுபொதி யுருவத் துயர்ந்தோன் சேவடி " (சிலப், 26-கால்-54)

உலகு பொதியுருவம் - உலகையும் தன்னகத்துப் பொதிந்து மேலோங்கிப் பரந்து நிற்கும் பரவெளி வடிவம். உலகவுருவம் - கடத்துநிலை. உலகு பொதியுருவம் - கடந்தநிலை. கடத்துநிலை - உடனுதல். கடந்தநிலை - வேருதல். (கலப்புநிலை - ஒன்ருதல்).

முக்கண்ணான் முதன்மையினை வருமாறு காண்க:

" பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே " (புறநானூறு 6)

சிவபெருமானைச் செல்வன் என்றழைக்கும் சீர்மை வருமாறு காண்க: " செல்வ நெடுமாடம் " எனத்தொடங்கும் திருமாமறைக்கண் " செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே "

இச் சிவநெறிமுதல்வர் நால்வராவர். அந் நால்வரும் முறையே ஞான சம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர், மணிமொழியார் என வழங்கப்படுவர். இத் திருப்பெயர்கள் நான்கும் ஐந்தெழுத்தாலாகி அருமறையாகத் திகழ்கின்றன. இவை அடியார் நாமமந்திரமாகும். இவ்வுண்மை வரும் திருமாமறையாற் காணலாம்.

" மீனவன் செவியி னூடு மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம் பந்தர் என்னும் நாமமந்திர முஞ் செல்ல
ஆனபோ தயர்வு தன்னை அகன்றிட அமணராகும்
மானமில் லவரைப் பார்த்து மாற்றமொன் றுரைக்க லுற்ருன் "
(12 - சம்பந்தர் - 721)

† பெருத்தார் — உலகவுருவமானுர்,

இந் நால்வர் பெருமக்களும் அருளிச் செய்த திருமுறைகள் ஒன்றுமுதல் எட்டுமுடியவாகும். முதல் ஏழு திருமுறைகளும் மூவர்களால் அருளிச் செய்யப்பட்டன. இவற்றைத் தேவாரம் எனவும் அடங்கன்முறை எனவும் வழங்கிவருகின்றனர். இவ்வேழும் சிவநெறிச் செந்தமிழ்த் திருமாமறையாகும். இவை மூவர் முதலிகளால் அருளிச் செய்யப்பட்டமையின், இவை முறையே அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றனையும் ஒருபுடை யொப்பாக மிக்கெடுத்தோதுகின்றன எனலாம். மணி மொழியாரருளிய எட்டாந் திருமுறை செந்தமிழ்த் திருமாமறை முடிபாகும். இது வீட்டினை மிக்கெடுத்தோதுகின்றது. இதனோடியைந்த திருச்சிற்றம்பலக் கோவையார் திருவடிப்பேற்றின் சீர்மையினை ஓதுகின்றது. எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் செந்தமிழ்த் திருமாமறையாம் திருவைந்தெழுத்தை ஓதித் தொடங்குகின்றது. அது கொண்டு வீட்டினைக் கிளந்தோதும் மெய்ம்மையுணரலாம்.

மேலும் 'நம' எனக் குற்றெழுத்தில் தொடங்குகின்றது. இதன் பின்னுள்ள திருமுறைகள் நான்கும் குற்றெழுத்தை முதலாகக்கொண்டே தொடங்குகின்றன. அவை வருமாறு; கூ. ஒளிவளர் (பல்லாண்டு - மன்னுக) கய. ஒன்றவன்தானே, கக. மதிமலி புரிசை, கஉ. உலகெலாமுணர்ந்து என்பன. எனவே இவை ஐந்தும் செந்தமிழ்க் குறில் ஐந்தின் ஒருபுடை நினைப்பாகும். இவை இங்ஙனமாக, அடங்கன்முறை ஏழும் நெடில் ஏழின் நினைப்பாகும், எனவே திருமுறைகள் பன்னிரண்டும் செந்தமிழின் உயிரோடொத்தலின் இவை செந்தமிழ்க்கும் சிவநெறிக்கும் ஆருயிரேயாகும். மேலும் திருமுறைகள் ஓதுங்கால் எழுவாய் இறுவாயாகத் 'திருச்சிற்றம்பலம்' ஓதிக் கொள்ளு தன் மரபு. இப்பெருமாமறைக் கண்ணுள்ள எழுத்து ஒற்றுநீக்கி ஆறுகும். இவை இருகால் கூட்டப் பன்னிரண்டாகும். இக்குறிப்பும் பன்னிரு திருமுறையின் சீர்க் குறிப்பாகும். அடங்கன்முறையின் முதற்கண் 'தோடுடைய செவியன்' என நெடிற் றொடரால் தொடங்குவதாலும், அதுபோல் நான்காந் திருமுறைக்கண்ணும் 'கூற்று யினவாறு' என நெடிலால் தொடங்குவதாலும் நெடில் ஏழனோடொக்குமென ஒருவாறு கோடலுமாம். செந்தமிழிலக்கணம் சிவநெறி இலக்கணம் என்பதையொரு வெண்பா வடிவில் தருதும்.

"நேட்டுயிரேழ் ஏழ்முறையாம் நேர்குறிலும் ஐம்முறையாம்
கட்டுமலம் மும்மைமெய் கண்ணுதலோன்—மட்டில்
அகரவுயிர் ஆய்தமும் அம்மையடி இன்பம்
நுகருயிரும் குற்றுகரம் நோக்கு"

சிவநெறிக்கு உயிரெனத் திகழ்வது திருவைந்தெழுத்து. அவை நான்கு திருப்பதிகங்களான் ஓதப்பட்டுள்ளன. அவற்றைச் செந்நெறிச்செல்வர்கள் நாடொறும் வேளைக்கு ஒவ்வொன்றாக நான்கு வேளைகளிலும் தவறாது ஓதிவருதல்வேண்டும். அவ் வேளைகளாவன :- 1. இரவு இருபத்தைந்து நாழிகையிலிருந்து காலை ஐந்து நாழிகை வரை. 2. காலை ஐந்து நாழிகையிலிருந்து பகல் பதினைந்து நாழிகை வரை

3. பதினைந்து நாழிகையிலிருந்து பிற்பகல் இருபத்தைந்து நாழிகைவரை. 4. இருபத்தைந்து நாழிகையிலிருந்து இரவு ஐந்து நாழிகை வரை என்பன.

திருச்சிற்றம்பலமும் திருநீற்றுப் பதிகமும் ஓதிப் பதினாறு இடங்களில் திருநீறு குழைத்திடுதல் வேண்டும். திருவங்கமாலையினை ஓதி அதிற்குறித்தாங்கு ஒன்பது உறுப்புக்களையும் தொட்டுக்கொள்ளுதல்வேண்டும். இவையிரண்டுமே சிவ தீக்கைக்கு முதன்மையாய் இருகண்ணனைப்பனவாகும். திருத்தொண்டத்தொகை சிவனடியார்களின் திருவரலாற்றுக்குறிப்போதுதலின் அதனையும் நாடொறும் ஓதுதல் வேண்டும். 'வாழ்கவந்தணர்' எனத் தொடங்கும் திருப்பாசுரத்தால் சித்தாந்த சைவம் நிலைபெற்று விளங்குகின்றமையான் அதனையும் நாடொறும் ஓதிக்கொள்ளுதல் வேண்டும். இந்நாளில் பெரிதெனப் பிறரால் கொள்ளப்பட்டுவரும் ஆரிய வேதம் நிலைத்திருப்பதும், ஆளுடையபிள்ளையாரும் ஆளுடைய அரசரும் முறையே ஒறுத்தும் பொறுத்தும் சமணத்தை வென்றமையானன்றோ ? ஆளுடையவடிகள் புத்தத்தை வென்றமையானும் நிலைத்திருக்கின்றதென்பதை மறுப்பார் யார் ? இவ்வுண்மையுணர்வார் நன்றி கொல்லா நல்லாராதற் பொருட்டேனும் திருமுறைகளுக்குத் திருக்கோயில் முதலிய வழிபாட்டிடங்களில் எஞ்ஞான்றும் முதலிடங்கொடுத்துப் போற்றுதல் முறைமையாகும்.

சிவநெறியின் அருச்சனை செந்தமிழ்ப் பாட்டேயாதலால் 'போற்றி' என ஓதி மலர்தூவிப் போற்றுதல் வேண்டும். போற்றப்படும் கடவுள்திருக்கோலங்கள் படைத்தல் முதலிய தொழில்பற்றி ஐந்தாகும். அக் கோலங்கள் முறையே, 1. மூத்த பிள்ளையார். 2. இளையபிள்ளையார். 3. ஆலமர்கடவுள். 4. திருவருளம்மை. 5. சிவக்கொழுந்து என்பன. இவற்றிற்குப் போற்றித்திருத்தாண்டகம் ஐந்து அமைந்துள்ளன. ஐந்துஞ்சேர்ந்த ஒரு திருக்கோலம் கூத்தப்பெருமான். அதற்குவேண்டும் அருச்சனைக்கு எட்டாந்திருமுறைக்கண் 'போற்றித் திருவகவல்' அமைந்துள்ளது. மேலும், நாள் வழிபாட்டிற்கு ஐந்தாந்திருமுறைக்கண் சித்தத்தொகைத் திருக்குறுந் தொகையில் 'சிந்திப்பார் மனத்தான்' எனத் தொடங்கும் திருப்பதிகம் முப்பது திருப்பாட்டுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் முதற்றிருப்பாட்டினை வாழ்த்தாக அமைத்துக்கொண்டு பின் அகர வரிசையில் தொடங்கும் ஒவ்வொரு திருப்பாட்டினையும் நாளொன்றுக்கு ஒவ்வொரு திருப்பாட்டாக ஓதிவருதல் நன்னெறி நற்றவமாகும்.

இம்முறையாகச் சிவநெறியினைப் பேணி வளர்த்து வாழ்வுறுவோமாக. பெண்ணொருகூறன், கண்ணுதற்கடவுள், சிவபெருமான் திருவருள் புரிவானாக. கண்ணுதற்கடவுள் - திருவுள்ளத் திருக்குறிப்பால் செயல்புரிந்தருளும் சிவன். சிவநெறியினை மேற்கொண்டொழுகுவார்க்கு நன்னெறிப்பாகுபாடு நான்மையாகும். அவை முறையே ;- 1. சீலம். 2. நோன்பு. 3. செறிவு. 4. அறிவு என்பன. இவற்றின்

விரிவனைத்தினையும் மெய்கண்ட நூல்களுட் காண்க. மெய்கண்ட நூல்களும் திருமுறைகள் போன்று பன்னிரண்டாக அமைந்துள்ளன என்றலும் பொருந்தும். மெய்கண்டார் காலந்தொட்டுக் கணக்கிடிற் பன்னிரண்டேயாம். திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் திருமந்திரம் போன்று காலத்தான் முன்னுள்ளனவாகும். கனகாபிஷேகங் கொள்ளும் கயிலைக் குருமணியின் அருளுரைகளில் சாத்திர தோத்திரச் செந்நெறி மணப்பதை உலகறியும்.

"சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே" (10)

"வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே" (3 - 63 - 1

திருச்சிற்றம்பலம்

மாற்றம் காணு இடத்தில் மகிழ்ச்சி ஏது? உண்டதையே உண்டு, கண்டதையே கண்டு, உடுத்ததையே உடுப்பதில் உலகம் மகிழ்கிறதா? பரிணுமத்தில் அல்லவா களிபபைக் காண்கிறது!

— கயிலைக் குருமணி

சைவ சித்தாந்தம்

திரு. ப. இராமநாத பிள்ளை

சிர்சுப் பிரமணிய தேசிகரும் வெள்ளிமலை
ஏர்கண்டு மீண்டார் இணையடிகள் — பார்போற்றும்
போன்னடிகள் ஆதலினாற் போன் முழுக்குச் செய்யவன்பர்
உன்னினரவ் வேண்ணம்வாழ் க.

செம்பொருட்டுணிவெனினும், சைவசித்தாந்தம் எனினும் ஒன்றே. செம்பொருள் - சைவம். துணிவு - சித்தாந்தம். செம்பொருட்டுணிவு என்னும் சொல்லும் திருச்சிற்றம்பலம் போன்று ஒற்றுநீக்கி எண்ணின் ஆறெழுத்தாலாயது புலனாகும். இவ்வாறென்னுந் தொகைக்குறிப்புத் திருவடிசேரும் பெருநெறியின்பெற்றி விளக்குவதென்பது தானே போதரும். திருமுறை போன்று சித்தாந்த நூல்களும் ஓராற்றாற் பன்னிரண்டாக அமைந்த பாங்கும் உய்த்துணர்வார்க்குத் தெள்ளிதிற் புலனாகும். மெய்கண்டார் தம் கால்வழியாகத் தோன்றிய நூல்கள் மெய்கண்ட நூல்கள்.

இவ்வனைத்தும் செந்நெறிச் செல்வர்களின் செய்தவப்பேற்றால் செந்தமிழ் மொழியில் சிவனாரருளால் தோற்றுவிக்கப்பட்ட விழுமிய பொருள்நூல்களாகும். இவற்றுள் மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதம் முழுமுதல் நூலாகும். இந்நூல் பொருளுண்மை தேற்றுவதில் தனக்குத்தானே இணையாய தனிப்பெருநூலாகும். செந்தமிழ்ப் பொதுமறையாம் திருக்குறள் எத்துணைச் சிறந்ததோ அத்துணைச் சிறந்த தொன்றாகும். அம்மட்டுமன்று; அதனினும் விழுமியதுமாகும். திருக்குறள் உடலாகவும், சிவஞானபோதம் உயிராகவும் இயைந்து எழிலுற்றுத் திகழ்கின்றன. திருக்குறளின்கண் முப்பொருளுண்மை தொகையாகக் கடவுள் வாழ்த்தின்கண் ஒன்று (இறை) ஐந்து (தளை) ஆறு (உயிர்) என்னுந் திருக்குறள்கள் மூன்றானும் உணர்த்தியருளினர். அவற்றை வகையாகத் துறவு (உயிர்) மெய்யுணர்தல் (இறை) அவாவறுத்தல் (தளை) என்னும் அதிகாரங்களான் விளக்கியருளினர். மேலும் ஆருயிர்கள் திருவடிப் பேற்றினை எய்துதற்குரிய நற்றவ நன்னெறி நான்மையவென்னுங் குறிப்புக் கடவுள் வாழ்த்தில் தாள் என்னுஞ் சொல் இரண்டு, ஏழு, எட்டு ஒன்பது என்னும் நான்கு திருக்குறள்களில் ஓதியருளுகின்றமையானுணரலாம். ஆருயிர்ப்பகுப்புக்கள் மூவகைப்படும் என்ற குறிப்பு அடி என்னுஞ் சொல் மூன்று, நான்கு, பத்து என்னும் மூன்று திருக்குறள்களில் ஓதியருளுகின்றமையானுணரலாம். இறைவன் கட்டு (பந்தம்) ஒட்டு (விடு) என்னும் ஈரிடத்தும் ஆருயிர்களுடனியைந்து அவற்றைத் தொழிற்படுத்தி இன்புறுத்துகின்றனன் என்னும் குறிப்பு இறை என்னுஞ் சொல் ஐந்து, பத்து என்னும் இரண்டு திருக்குறள்களில் ஓதுதலானுணரலாம்.

எனவே திருக்குறள் ஒரு முதல், இருவகையருள், முப்பொருள், நாற்றவம், எண்குணம் இவைகளை விளக்குகின்றது. மேலும் உயிர்ப் பாகுபாடுகள் மூவகைய வென்பதையும் விளக்குகின்றது. இவற்றின் உண்மை இயைபுகளை ஆய்வு முறையான் வழியளவையின்வைத்து மறுக்கொணு மாண்புடன் வகைப்படுத்தி வலியுறுத்தி யோதுவது சிவஞானபோதச் செழுந்தமிழ்த்தனிமுதல் விழுமிய முழுநூல்.

காணப்படுங் காரியத்தைக்கொண்டு கருதப்படுங் காரணத்தைக் கட்டுரைப்பது வழியளவையாகும். வழியளவை எனினுங் கருதலளவை எனினும் ஒன்றே. இதுவே அனுமானப் பிரமாணமாம். நிலையாப் புகையாகிய காரியத்தைக்கண்டு நிலைக்குந் தீயாகிய காரணத்தைக் கருதுதல். இதுபோல் நிலையாக் காரியமாகிய உடல், உலகு, உண்பொருள்களைக்கண்டு நிலைக்குங் காரணமாகிய மாயையினைக் கருதுதல். ஒரு காரிய வெளிப்பாட்டிற்கு மூவகைக் காரணங்கள் ஒருங்கியைதல் வேண்டும் என்ப. அவை பொருண்முதல், துணை, வினைமுதல் என்பன. வினை முதலெனினும் நிமித்தகாரணமெனினும் ஒன்றே. துணைக்காரணம் அறிவுள்ளதும் அறிவில்லதும் என இருவகைய. முதற்காரணம் எனினும் பொருண்முதற்காரண மெனினும் ஒன்றே. அது அறிவில்லதேயாகும். உலகுடல்களுக்கு முதற் காரணம் மாயை - அஃதொன்றே. துணைக்காரணம் திருவருளாற்றல்; அஃதறிவுள்ளது. உடலுக்குத் திருவருளாற்றலுடன் ஆருயிர்கள் ஆற்றியுள்ள அறிவில்லனவாகிய இரு வினைகளும் துணைக்காரணங்களாகும். பொருள் முதற்காரணம் முழுமுதற் சிவ பெருமான் ஒருவனே.

காரியப்பாடாகிய நிலையிலா உலகுடற் பயன்களையும் காரணமாய் நிலையாயுள்ள திருவடிப் பேற்றினையும் இயைந்தெய்தி இன்புறும் ஆருயிர்கள் எண்ணில்லாதன. அறிவுடையன; சார்ந்ததன் தன்மைய; அழிவில்லன; இருவினைக்கீடாகப் பிறப்பு இறப்புக்களைப் பெறுவன; நற்றவ நான்மைவழித்தாய் இறைபணி புரிந்து பிறப்பு இறப்புக்களற்று, திருவடிச் சிறப்புற்று மீளாஆளாய்ப் பேரின்பப் பெருவாழ்வு நுகர்வன. முப்பொருள்களும் என்றும் அழிவில்லனவே; காரியப்பாடு ஒன்றே தோன்றி யொடுங்கும் தன்மையது. இவற்றின் விரிவெல்லாம் சிவஞானபோதத்துட் தெளியக்காண்க.

ஒரு முதல்; அந்தமாதி என்னும் முதல் நூற்பாவானறிக. இருவகையருள்; நீங்கு நிலைமையாகிய முன்னுறு நூற்பாவானும் நீங்கா நிலைமையாகிய பின்னுறு நூற்பாவானும் உணர்க. நீங்குநிலை - தடத்தம். நீங்காநிலை - சொரூபம். முப்பொருளுண்மை; முன் மூன்று நூற்பாக்கள். நற்றவநான்மை; சீலம், நோன்பு, செறிவு, அறிவு. எண்குணம் எட்டாம் நூற்பா.

உயிர்ப்பாகுபாடுகள் மூவகைய: வரும் சிவஞானபோத வெண்பாவான் உணர்க.

'' மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்
கஞ்ஞான வச்சகலர்க் கக்குருவாய் — மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான்குருவாய் முன் ''. (8. 2-1)

முப்பொருளுண்மை யுணர்த்தும் வெண்பா :

'' ஒன்றென்ற தோன்றேகா ணேன்றே பதிபசுவா
மோன்றென்ற நீபாசத் தோடுளேகா — ணேன்றின்ரு
லக்கரங்க ளின்ரு மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு ''. (2. 1-2)

திருக்குறள் கடவுள் வாழ்த்து இரண்டாந் திருக்குறள் தொழுகையினை வலியுறுத்துகின்றது. சிவஞானபோத இறுதி நூற்பாவும் தொழுகையினை வலியுறுத்துகிறது. அவை வருமாறு :

'' கற்றதனுல் ஆயபயன் என்கோல் வாலறிவன்
நற்றுள் தொழாஅர் எனின் '' (திருக்குறள். 2)

'' செம்மலர் நோன்ருள் சேர லோட்டா
வம்மலங் கழிஇ யன்பரோடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமு
மாலயந் தானு மரனேனத் தொழுமே '' (சிவஞானபோதம் 12)

சிவஞானபோதச் சீர்மை

'' மூவுயிர்க ளேன்றும் முதல்வ னடிதொழுஞ்சீர்
மேவ முதலிருய் மெய்கண்டார் — தாவில்
அவனவ ளஃதேன் றவைதொழு மேன்றே
சிவஞான போதஞ்சேய் தார் ''

சைவசித்தாந்தச் சால்பனைத்தும் சிவஞானபோதத்துட்கண்டு தெளிந்து கைக்கொண்டொழுகிக் கட்டற்றுக் கடவுட்டிருவடி யொட்டுற்று மீளா ஆளாய் இறவா இன்பெய்தி வாழவேண்டுவது பொதுவாக வையக மாந்தர் கடனுகும்.

சிவஞானபோதம்

தருமையாதினப் புலவர்

முதுபெரும் புலவர். முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

'கல்லா னிழல்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே'

உயிர்கள், தமக்கு இனம் ஆகிய சிவத்தைச் சார்ந்து அதன் நிறைவில் அடங்கி நிற்பது இயற்கை. தமக்கு இனம் அல்லாத பொருள்களைச் சார்ந்து அவற்றிற் கலந்து நிற்பது செயற்கை. (சிவஞானபோதமாபாடியம் சூ-6. அதி-2. அத்துவித ஆராய்ச்சி) அச் செயற்கையிலும் இயற்கையிலும் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் இயல்பு உயிர்கட்கே உண்டு. உயிர்கள் எவற்றோடு சார்ந்தாலும் அவற்றோடு சார்தல் மட்டுமே அத்துவிதம்; சார்ந்த உயிர்களைத் தத்தம் வண்ணமாகச் செய்யும் அவ்வவற்றை நோக்கின், உயிர்கள் பருமையும் அவை நுண்மையும் உள்ளனவாகும். பருமை-தூலம். நுண்மை-சூக்குமம். அவை வியாபகம். உயிர்கள் வியாப்பியம். கடல் போல்வது வியாபகம். நீர் அதிற்கலந்து நிறைந்து நிற்பது போல்வது வியாப்பியம். உப்பு அந்நீரிற் கலந்து அதனளவை மீறாது ஒப்ப நிற்பது போல்வது வியாத்தி. இவ்வாறு வியாபக வியாப்பிய வியாத்திகளுக்கு விளக்கம் உற்றால் போதும்.

சைவசித்தாந்தம் முப்பொருளுண்மை உணர்த்துவது. அம் மூன்று பொருளும் பதியும் பசுவும் பாசமும் ஆம். 1. 'பதி' ஒன்றே 2. பசுவோ பல. (எண்ணில்லாதன) 3. பாசம் ஆணவம், மாயை, கன்மம் என்னும் முத்திறம் உறும்.

பதியும் பசுவும் அறிவுடைய பொருள்; பாசம் அறிவில்லாப்பொருள். உயிர்கட்கு இனம் அல்லாதவை பாசம். இனம் ஆனது பதி. பதி சம்பந்தமே உயிர்க்கு இயற்கை. பாச சம்பந்தம் செயற்கையே. அச் செயற்கையிலும் மாயா சம்பந்தம் கன்மசம்பந்தம் ஆணவமல சம்பந்தம் என்று முத்திறம் உண்டு. அவற்றுள் ஆணவமல சம்பந்தம் அநாதி; ஆதி தெரியாது. அம் மலசம்பந்தத்தால் மாயா சம்பந்தம் உண்டாயிற்று. அம் மாயாசம்பந்தமே கன்ம சம்பந்தத்தை விளைத்தது. இவ்வுண்மையைச் சிவஞானபோதமாபாடியம், 'தனக்கு அந்நிய சாதியாகிய ஏகதேசப் பொருள்களைச் சார்ந்து அவற்றின் வியாப்பியமாய் நிற்றல் மலத்தான் ஆய செயற்கை' ஆன்மாவுக்கு என்று உணர்த்திற்று.

'சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறியும் அறிவாகிய தன்னை நோக்கச் சூக்குமமாய்த் தன் சாதியாகிய சிவத்தைச் சார்ந்து அதனின் வியாப்பியமாய் நிற்றல் இயற்கை' என்றும் அதில் அதைத் தொடர்ந்து உணர்த்தியிருக்கக் காணலாம்.

காணவே தமது இயற்கையை அடைய உயிர்கள் விரும்புவதும் இயற்கை என்பது தானே புலப்படும். படவே உயிர்கள் சிவத்தை அடைய 1. விரும்பி, அதற்கு உரிய வழியை 2. அறிந்து, அறிந்தவாறு ஒழுகி அச்சிவத்தை அடைதல் ஒன்றே தலைக்கடனாகிய 3. செயல் என்பது தானே விளங்கும். விளங்கவே, அவ் விருப்பும் அவ்வறிவும் அச் செயலும் உயிர்களுக்கு உள்ளன என்பது தோன்றும். விருப்பு எதனால் உண்டாகிறது? அறிவு எவ்வாறு நிகழ்கிறது? செயல் எப்படி விளைகின்றது? இம் மூன்று வினாக்கள் எழுதல் வேண்டும்.

உயிர்கட்கு உருவம் அம் மூன்றும் ஒன்றுசேர்ந்ததாய் அமைகின்றது. 'இச்சா ஞானக் கிரியாரூபி ஆத்மா.' இச்சையே விருப்பு, ஞானமே அறிவு, கிரியையே செயல். இம்மூன்றும் ஆன்மாக்களின் உருவாதலின், அவ்வான்மாக்களின் உடம்பினுள் அவற்றை வெளிப்படுத்த மூன்றுதிறமான கருவிகள் அமைந்துள்ளன. அவை :- (1) அந்தக்கரணம், (2) ஞானேந்திரியம், (3) கர்மேந்திரியம் என்ற பெயரால் குறிக்கப்படுகின்றன. அவற்றைச் சுருக்கமாகத் தெரிவிக்க மனம், வாக்கு, காயம் என்று மூன்று தலையான பொருள்கள் முன்நிற்கின்றன. அந்தக்கரணங்களுள் மனமே தலையானது. ஞானேந்திரியங்களுள் வாக்கே முதன்மையானது. கர்மேந்திரியங்களும் காயமும் வேறல்ல. அங்கம் கர்மேந்திரியம்; அங்கி காயம். மற்றைய மனமும் ஞானேந்திரியமும் காயமாகிய ஸ்தாநத்தில் ஸ்தாநியாக இருக்கின்றன. ஸ்தாநமும் ஸ்தாநியும் ஆகிய சம்பந்தம் உடையன அவை. கர்மேந்திரியமும் காயமும் அங்காங்கி சம்பந்தம் உடையவை.

உயிர்கள் இச்சையும் ஞானமும் கிரியையும் கலந்த உருவின என்றும் அவ் வுருவை உணர மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் அமைந்தவகையே அமையும் என்றும் உணர்ந்தோம்.

இச்சையையும் ஞானத்தையும் கிரியையையும் தன்னுடையனவர்க் கொள்ளும் போதம் 'பசு ஜீவபோதம்' எனப்படும். அம்மூன்றனையும் 'பதி' யினுடையபோதம் ஆகும் உண்மையை உணர்ந்து எல்லாம் சிவனுக்கு உடைமைப்பொருள் என்றும், அவற்றை உருவாகக்கொண்ட உயிர்களாகிய தாம் அச்சிவனுக்கு அடிமைப் பொருள் என்றும் உள்ள மெய்ந்நிலையை அறிந்து, எல்லாம் சிவதர்மம், எல்லாம் சிவஞானம், எல்லாம் சிவன் இச்சை ஆக இருத்தலைக்கண்டு ஒழுகுவதே சிவபோதம். சிவபோதம் பதிஞானம். ஜீவபோதம் பசுஞானம்.

1. பதி. 2. பதிஞானம். 3. பசு. 4, பசுஞானம். 5. பாசம். 6. பாசஞானம் என்று முப்பொருளும் அவற்றின் ஞானமும் ஆறுகக் கொள்ளப்படும். அவற்றுள், 6, 5 ஆம் எண் குறிக்கும் இரண்டும் அகலும். ஏனைய நான்கும் மூன்றாய் அடங்கும். அவை காண்பான், காட்சி, காணப்படும் பொருள். 3 ஆம் எண் ' காண்பான் ' என்ற வினைமுதலைக் குறிக்கும். 2 ஆம் எண் ' பதிஞானம் ' காட்சி என்ற வினை நிகழ்ச்சியைக் குறிக்கும். முதல் எண் குறிக்கும் ' பதி 'யே காணப்படும் பொருள். (1) காண்பான் - ஞாதா (ஞாதுரு). (2) காட்சி - ஞானம். (3) காணப்படும் பொருள் ஞேயம்.

" பதிபசு பாசம் முதிர்அறி வுகளுடன்
ஆறு முன்னர்க் கூறுப் பின்னர்
இருபொருள் நீத்துமற் றேருநால் வகையும்
ஈனம்இல் ஞாதுரு ஞானம் ஞேயம்என்று
இசைய மூன்றாய்ப் பசுபதி என்றவற்
றிரண்டாய் இரண்டும் ஒன்றின்ஒன் றாகத்
திரண்டாம் பயன்எனும் திருவருள் தெளியின்
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றும்
என்றிறை யியற்கை இயம்புதல் தகுமே."

(சங்கற்பநிராகரணத்தின் முடிவு)

" காண்பானும் காட்டுவதும் காண்பதுவும் நீத்துண்மை
காண்பார்கள் நன்முத்தி காணுர்கள் — காண்பானும்
காட்டுவதும் காண்பதுவும் தண்கடந்தைச் சம்பந்தன்
வாட்டுநெறி வாரா தவர் " (வினாவெண்பா- 11)

இந்த (1) ஞாதா (2) ஞானம் (3) ஞேயம் மூன்றும் பதிமார்க்கத்துக்குமட்டும் உரியன அல்ல. பாசமார்க்கத்துக்கும் உரியன ஆகும்.

பாசப்பொருள்கள் ஆகிய ஞேயம், பாசஞானம், பசு ஆகிய ஞாதா மூன்றும் அநுபவமாகும். ஒரு மாட்டை ஒருவன் பார்க்குங்கால், மாடு ஞேயம் ; பார்ப்பவன் ஞாதா; பார்வை ஞானம். அம்முறையில், ஆன்மாத்தன்னையே உணருங்கால், தானே ஞேயம், தனது ஞானமே ஞானம், தானே ஞாதா. இந்நிலையைத் துகளறு போதத்தில் சகல நிலைக்கும் சுத்த நிலைக்கும் இடைநிலையை உணர்த்தும் பகுதியால் அறியலாம். பதி சத்து, பாசம் அசத்து, பசு சதசத்து. அசத்தால் விளங்கி அசத்தை அறியும்போது அசத்தினிடத்தில் அது அதுவாய் அழுந்துவது செயற்கை; சத்தால் விளங்கிச் சத்தை அறியும்போது சத்தினிடத்தில் அந்தச்சத்தாய் அழுந்துவது இயற்கை. சதசத்தாகிய ஆன்மாவிற்குஇவ்விரண்டும்உண்டு. இது முன்னும் குறிக்கப்பட்டது. அச்செயற்கையே கட்டு(பந்தம்)இயற்கையே வீடு (மோக்ஷம்), கட்டு செயற்கையின் நீங்குவது பாசநீக்கம்; இயற்கையைப் பெறுவது சிவப்பேறு. கட்டுவிடுவது வீடு. சிவத்தைப்பெறுவது பேறு. இரண்டும் சேர்ந்ததே வீடுபேறு. வீடும் பேறும் ஆகிய இரண்டும் கலந்ததே,

ஆன்மலாபம். அதுவே, சிவபோகம். பாசவிடும் சிவப்பேறும் எனப் பயன்இரு வகைப்படும் என்னும் சிவஞான வாக்கியம் (மாபாடியம் சூ. 10. கருத்துரை விளக்கம்) இங்கு நோக்கத்தக்கது. துன்பத்தின் நீங்குதல் ஆகிய வீடும் இன்பத்தை உறுதல் ஆகிய பேறும் 7, 9 ஆம் சூத்திரங்களின் இயைபுணர்த்தும் இடத்தில் மாபாடியம் கூறுகின்றது. துக்க நிவிர்த்தி சுகப்ராப்தி என்னும் இரண்டும் மோட்சம் என்று பிறரும் உரைப்பர். 'பிரஹ்மப்ராப்தியும் அநர்த்த நிவிர்த்தியும் மோக்ஷத்தின் சொருபம் ஆம்' (விசாரசாகரம், 14 முமுக்ஷு-த்துவ லக்ஷணம்) சைவத்தில் பசுத்துவ நீக்கம் சிவத்துவ விளக்கம் எனலும் உண்டு. இரண்டும் இருள் நீக்கமும் ஒளி விளக்கமும் போல ஒருங்கே நிகழும். அவ்விருவகை முத்தியுள் வீடு (கட்டுநீக்கம்)

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலம் மாயை தன்னொடு வல்வினை இன்றே"

என்னும் பத்தாவது சூத்திரத்தால் அறிவிக்கப்பட்டது.

1. சிவன் வேறுகாணப்படாமல் ஜீவனேயாய் நின்றநிலை உயிர்க்குரிய கட்டுநிலை.

2. ஜீவன் ஜீவபோதம் நீங்கிச் சிவனேயாய் நின்றநிலை உயிர் கட்டுநீங்கிச் சிவத்தைப்பெற்ற நிலை.

இவ்விரண்டனுள் முதல் நிலையே இச்சூத்திரத்தில் 'அவனே தானே ஆகிய நெறி' ஆகும். இரண்டாவது நிலை 'அந் நெறி ஏகனாகி இறைபணி நிற்க' வாய்ந்த ஞானநிலை ஆகும். முதல் நெறியில் உயிரை மலமும் மாயையும் வினையும் நீங்காமல் இருக்கும். இரண்டாவது நெறியில் அம்மூன்றும் தமது வாசனையும் இல்லாமல் ஒழிந்துபோம். இதுதான் 'சிவயோகம்; அஃது 'அவயோகம்'.

"அம்மையிலும் இம்மையிலும் அச்சம் தவிர்த்தடியார்
எம்மையுமாய் எங்கும் இயங்குதலால் — மெய்ம்மைச்
சிவயோக மே யோகம் அல்லாத யோகம்
அவயோகம் என்றே அறி" (திருக்களிறு. 74)

இந்த யோகம் ஆன்மாக்கள் தம் செயலைச் சிவன் செயலாகவும், தம் நினைவைச் சிவன் நினைவாகவும் தம் அறிவைச் சிவனறிவாகவும் கண்டறிந்து நிற்கும் உண்மை யோகம் அங்ஙனம் நினைவும் (இச்சையும்) அறிவும் (ஞானமும்) செயலும் (கிரியையும்) சிவனுடையன என்று உண்மையிற் கண்டுணர்ந்து ஒழுகும்போது அக்கரணம் எல்லாம் பசுகரணம் அல்ல. சிவகரணமே ஆகும். அதையே சிவஞானசித்தியார் 'பசுகரணங்கள் சிவகரணமாகத் துன்னிய சாக்கிரம்' என்று குறிக்கிறது.

ஆன்மாவின் செயல், அறிவு, நினைவு மூன்றும் சிவனுடையன. ஆனுல், ஆன்மாவும் சிவனுகும். நம் செயல் அற்ருல் நாம் ஏன் இருப்போம். நம் செயல் அற்று நாதன் செயலானுல், நாம் நாதன் ஆவதில் என்ன தடை ? நம் செயல் தன் செயல் ஆயிற்று. நாம் நாதன் ஆனேம். ஆனக்கால் நமக்குத் தன்னையே நாதன் தந்தானுவான். தந்தது தன்னை. கொண்டது நம்மை. இவ்வுண்மையை,

'' நம்செயல் அற்றுஇந்த நாம்அற்றபின் நாதன்
தன்செயல் தானே என்று உந்தீபற
தன்னையே தந்தான் என்று உந்தீபற ''

'தன்னை எனக்குத் தருவது' எனச் சாத்திரமும், 'தந்ததுன்றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்' எனத் தோத்திரமும் உணர்த்துகின்றன.

நாதன் தன்னை நமக்குத் தந்ததால் உண்டான பயன் அழியாத பேரின்பம். நம்மை நாதன் கொண்டதால் ஒரு பயனும் இல்லை. அதனை, 'அந்தம் ஒன்றில்லா ஆநந்தம் பெற்றேன் யாது நீ பெற்றதொன்று என்பால்' என்று திருவாசகம் ஐயுருத ஒருவாசகமாகக் கூறிற்று. அந்தப் பேராநந்தத்தைப் பேராமை அடையும் நிலையே (சிவப்பேறே)

'' காணும்கண்ணுக்குக் காட்டும் உளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் சேலுமே ''

என்னும் பதினென்ருவது சூத்திரத்தால் உணர்த்தப்பட்டது. இதன் கருத்து, 'பரமேசுவரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல்' என்று ஆசிரியர் மெய்கண்டதேவநாயனுரே அருளினர். சைவசித்தாந்த முத்தியாகிய 'திருவடி சேர்தல்' இதிற் குறிக்கப்பட்டது. இம்முத்தியை எய்தினேரே 'பிறவிப் பெருங் கடல் நீந்துவர்'. 'இறைவனடி சேராதார் நீந்தார்'. இச்சூத்திரத்தில் இரண்டு பகுதி உண்டு. முதற்பகுதி 'காட்டல்' இரண்டாவதுபகுதி 'செல்லல்'. காட்டுவோன் சிவன். செல்லுவோன் ஜீவன் என்ற நிலைமை நீங்கிச் சிவன் ஆவோன். காட்டும் உதவிக்கு முன்பு காணும் உதவியும் நிகழும். கண்டு காண்டல், காட்டிக் காண்டல் இரண்டும் அவ்விருதவியும் இணைந்தவை.

காட்டும் உபகாரத்தை ஐந்தாவது சூத்திரத்தால் உணர்த்தினர் ஆசிரியர். இதிற்காணும் உபகாரம் மாத்திரம் கூறினர் (மாபாடியம் பார்க்க).

சிவனிடத்தில் ஒன்றியிருந்து அவன் அருளாலல்லது ஒன்றையும் செய்யாதும், அறியாதும் நினையாதும் நின்ற ஆன்மாவின்கண் அச்சிவன் அவ்வாறு கருணையால் உபகாரம் புரிந்துவரும் உரிமையில் உடன்நிற்பதே அத்துவிதம். அதை உடந்தை - (அத்துவிதம்) என்பர் தமிழந்தணர்.

'சங்கரனோடு ஒக்க உறைந்து இவர் அவனை அவன் இவரை விடாதே உடந் தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்' (சித்தியார். 281) 'கிடந்த கிழவி யைக் கிள்ளி எழுப்பி உடந்தை யுடனே நின்றுந் தீபற உன்னையே கண்டதென்றுந் தீபற' (15) 'நின்னோடு ஒருவுதல் இன்றி உடந்தையே ஆகும் பெருநிலை' (இருபா இருபஃது) என்னும் இடங்களில் 'அத்துவிதம்' என்னும் வடசொற்பொருள் 'உடந்தை' என்னுந் தமிழ்ச் சொற்பொருளில் அறிய நிற்றலை அறியலாம்.

உயிர்கள் கட்டுநிலையில் உணரும் விஷயம் பிரபஞ்சம்; (• விரியுலகம்) வீட்டு நிலையில் உணரும் விஷயம் சிவம். அதை ஆசிரியர் 'அவனும் அவற்றது விடயத்தை உணரும்' என்று விளக்கியருளினர். அதன் விளக்கத்தில் நம் மாதவப்பயனாகத் தோன்றிய சிவஞானமாமுனிவர் 'முதல்வன் தன்னை யறிதலும் ஆன்மாவின் பொருட்டு ஆன்மாவில் தங்கிநின்று அறியும்' என்று எழுதியருளினர்.

'அவற்றது' என்றதின் 'ஆருவது அறிதற் கிழமைக்கண் வந்தது' என்ற தால், 'உணரும்' என்றதன் விளக்கம் நன்கு உண்டாகும். இங்கு எவ்வளவு விளக்கினாலும் கற்போர்க்கு விளக்கம் சிறிதே எய்தும். மனமும் வாக்கும் செல்லாத நிலையில் உள்ள மெய்ப்பொருளின் உண்மையை எழுத்தால் உணர்த்தும் அளவு முற்ற உணர்த்தும் அளவாகாது.

1. முதல்வன் காணும் உதவியைச் செய்துவரும் உரிமையை நோக்குதல் (ஞானம்) அறிவு.

2. அதை நோக்குந்தோறும் அம் முதற்பொருளின்கண் செல்லும் இச்சை அடங்காது மீதூருதல் நினைவு.

3. அவ்விச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரின்பம் அநுபவிக்கப் பெறுதல் (கிரியை) செயல்.

இவ்வாறு ஞானம் இச்சை கிரியை மூன்றும் இம்முறைமையில் அம்முதல்வனை ஒருங்கே விஷயமாகக்கொண்டுநிற்றல் அதீத நிலையின் இயல்பு. இதை உணர்த்தியது இப்பதினொன்றுஞ்சூத்திரம்.

காணுங்கண்ணுக்குத்தான் உள்ளம் காட்டும். குருடன் உள்ளம் காட்டுதலில் குறைவில்லை. அவன் கண் காண்பதில்தான் குறையுளது. காணாக் கண்ணுக்குக் காட்டும் ஆற்றல் உள்ளத்திற்கு இல்லை. உள்ளம் காட்டுவது குருட்டுக் கண்ணுக்கு அன்று; காணுங்கண்ணுக்கே.

உவமானம் :

கண் உருவத்தைக் காணத்தக்க கருவி. அக் கண் உயிரை இன்றிக் காண்டல் அமையாது. அதாவது கண்ணின் பார்வைக்கு இன்றியமையாதது உயிர் என்றதாம். உயிர் என்றது ஆன்மாவை. உயிரின் அறிநிலை ஆன்மபோதம் என்பர். ஆன்மா, ஆன்மபோதம், கண், கண்ணொளி என்று நான்கு உள்ளன. கண் உருவைக் காணுங்கால், கண்ணொளியுடன் ஆன்மபோதம் வேற்றுமை இன்றி உடனாய் நின்று கண்ணுக்கு உருவத்தைக் காட்டுகின்றது. காட்டினாலும் கண் கண்டதா ? ஆன்மாக் கண்டதா ? இது கண்டது என்று பிரித்தறியப்படாது. கண்ணினது காட்சியும் ஆன்மாவினது காட்சியும் ஒன்றனை ஒன்று விடாமல் உடந்தையாய் (அத்துவிதமாய்) ஒருங்கே நிகழும்.

உவமேயம் :

அம்முறைமைபோல்வது இம் முத்திநிலையில் சிவன் ஆன்மாவுக்குச் செய்து வரும் காணும்உபகாரம்.

முதல்வனை இன்றி ஆன்மா ஒரு விஷயத்தை அறிதல் அமையாது. ஞானசத்தி முதல்வனுக்கும் உண்டு. ஆன்மாவிற்கும் உண்டு. ஞானசத்தி எனினும் சிற்சத்தி எனினும் ஒன்றே. சிவ சிற்சத்தி, ஆன்ம சிற்சத்தி இரண்டும் வேறுபடா வகை உடனாய்க் கலந்துநிற்க, சிவனும் ஆன்மாவும் அவ்வாறு கலந்து நிற்கின்றனர். அங்கனம், ஆன்மாவில் சிவன் கலந்துநின்று அறிவித்த விஷயத்தை ஆன்மா அறிந்ததா ? சிவன் அறிந்தானா ? யார் அறிந்தது ? இவன் அறிந்தான் என்று பிரித்தறியப்படுமாறு இல்லை. இருவேறு சிற்சத்தியும் (அறிவும்) ஒன்றனை ஒன்று விடாமல் அத்துவிதமாய் ஒருங்கே விஷயித்துச் செல்லும்.

இவ்வாறான முறைமை உயிர்க்குக் கட்டுநிலையிலும் உண்டு. கட்டு நீங்கிய நிலையிலும் உண்டு. பின்னிலையநுபவமே பேரின்ப நுகர்ச்சி. இப் பேரின்ப நுகர்ச்சியை விளக்குவதே இச் சூத்திரத்தின் உட்கிடை. இச் சூத்திரப் பொருளே 'சிவஞான போதம்' ஞானசாகரத்தைக் கடைந்து எடுக்கப்பெறும் ஆநந்தாமிர்தம்.

ஆநந்தாமிர்தத்தைத் துய்ப்பது ஆன்மா. ஆன்மா உண்டா ? இல்லையா ? ஆன்மா உண்டு என்பதை,

" உளது இலதென்றலின் எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் கண்படில்
உண்டிவினை இன்மையின் உணர்த்த உணர்தலின்
மாய வியந்திர தனுவினுள் ஆன்மா "

என்னும் (மூன்ருவது) சூத்திரம் அறிவிக்கின்றது. அவ்வான்மாவின் உண்மையையும் இலக்கணத்தையும் தொடர்ந்து விளக்குவது

" அந்தக் கரணம் அவற்றின் ஒன்றன்றவை
சந்தித்த தான்மாச் சகசமலத் துணராது
அமைச்சர சேய்ப்பரின் றஞ்சவத் தைத்தே ".

என்னும் நான்காவது சூத்திரம். கேவலம், சகலம், சுத்தம் என்னும் மூன்று காரணு வத்தைகளும் அவற்றின் காரியம் ஆன பதினைந்து அவத்தைகளும், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அவத்தைகளும் அவற்றின் ஸ்தான பேதங்களும் தெளிய அறிந்துகொள்ளல் நன்று. ஆன்மாவிற்குக் கட்டு ஆகும் பொருள் 'பாசம்' எனப்படும். அது உண்டா? இல்லையா? அதன் இயல்பு என்ன? இம்மூன்று வினவிற்கும் விடையாக விளங்குவன இரண்டும் ஐந்தும் ஆகிய சூத்திரங்கள். பாசம் உண்டு என்பது இரண்டாவதிலும், பதியினது காட்டும் உபகாரம் கூறும் முகத்தால் அதன் இலக்கணம் இன்னது என்பது ஐந்தாவதிலும் உணர்த்தப்பட்டன.

ஆன்மாவிற்குப் பாசத்தை நீக்கித் தன்னைத்தரும் பதி உண்டா? இல்லையா? இவ்வையத்தைப் போக்க வையத்தைக்காட்டி ஐயனை உணர்த்துவன முதலும் ஆறும் ஆகிய சூத்திரங்கள். 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றது முதற்சூத்திரம்.

அழிபொருளாகிய அசத்தும் (மும்மலகாரியம்) அழியாத சிவமாகிய சத்தும் வரை செய்துணர்த்துவது ஐந்தாவது சூத்திரம். இது பதிப்பொருளிலக்கணத்தைப் பாரிசேடப்ரமாணத்தால் உணர்த்துகின்றது. ஏழாவது சூத்திரம் ஆன்மாவின் சிறப்பியல்பை அப்பாரிசேடப்ரமாணத்தால் உணர்த்திற்று.

ஒன்றனை அறிந்தக்கால், அதனுல் வரும் பயனைப் பெறுதற்கு உரிய முயற்சி செய்யவேண்டும். அம்முயற்சியை மேற்கொள்ள எண்ணுவார் அதைச் சாதிக்கும் ஆற்றல் உண்டா இல்லையா என்று ஆராய்வர். உண்டானுல் சாதித்தால் வரும் பயனை ஆராய்வர். அப்பயனை அடைவிக்கும் சாதனத்தையும் அச்சாதனம் வரும் வழியையும் நாடி உணர்வர். அவற்றை உணர்ந்தால்தான் உளத்தில் ஊக்கம் எழும். சாதனம் செய்து பயன் பெறுதற்குரிய அதிகாரியை உணர்த்துவது ஏழாவதே.

பதிஞானத்தை உணரும் முறைமையை உணர்த்தும் எட்டாவது சூத்திரம் சாதித்துப்பெறும் பயனையும் அதற்குச் சிறந்த சாதனத்தையும் அது வரும் வழியையும் ஆன்மாவின் இருதிறனறிவுடைமையை விளக்குவது.

பாசஞானம் ஏகதேசஞானம்; பசுஞானம் பிராயிக (வியாபக) ஞானம். ஏகதேசமும் பிராயிகமும் ஒன்றற்கொன்று மறுதலை. இரண்டு ஞானமும் வீடுபேறு நல்கமாட்டா. சாதகத்தை நடைபெறுவிப்பது இது என்பதையும் அதைப் பெறுமாறும் நிலைபெறுமாறும் ஆகிய சாதிக்கும் உபாயத்தையும் உணர்த்துவது ஒன்பதாவது சூத்திரம்.

சிந்தையும் வாக்கும் செல்லாத நிலையனாகிய சிவனை அச்சிந்தையிலும் வாக்கிலும் எய்தக்கொண்டு வழிபடும் முறையை உணர்த்துவது பன்னிரண்டாவது சூத்திரம். அதில் உணர்த்தியவை :-

1. மும்மலத்தைக் களைக. களைந்தால் அஞ்ஞானம் அகலும். மெய்ஞ்ஞானம் மிளிரும்.

2. சிவபக்தர்களொடு இணங்குக. சிவபக்தியில்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர்; அவர் மும்மலங்களினும் கொடியர். சமயம்வாய்த்தால் அஞ்ஞானத்தை உணர்த்துவன மலங்கள். சமயம் உண்டாக்கிக்கொண்டு அஞ்ஞானத்தை உணர்த்துவர் சிவபத்தியில்லாதார்.

3. சிவபக்தரது திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமசிவம் என்று ஐயம் இன்றித் தெளிந்து வழிபடுக; அவ்விடங்களில் சிவம் பிரகாசிக்கின்றது. அல்லாத இடத்து அவமே விளைகின்றது.

"வேடம் பரவித்திரியுந் தோண்டர்
ஏதப்படாவண்ணம் நின்றார் போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீசனாரே" (6. 89. 6.)

முன்னர்ப் பெற்ற நலங்களை விட்டகலாது காக்கும் முறையை வற்புறுத்தி விதிக்க வேண்டி, அவ்விடங்களில் வழிபடுக என்று அருளினார் ஆசிரியர் மெய்கண்டநாதர்.

தசகாரியம்; இப்பன்னிரு சூத்திரங்களுள், 2 - தத்துவரூபம்; 5 - தத்துவ தரிசனம்; 6 - தத்துவசுத்தி; 7 - ஆன்மரூபம்; 8 - ஆன்மதரிசனம், சிவரூபம்; 9 - ஆன்மசுத்தி; 10 - சிவதரிசனம், சிவயோகம்; 11 - சிவபோகம்.

பன்னிரு சூத்திரங்களுள் முதல் மூன்றும் பிரமாண இயல்: அடுத்த மூன்றும் இலக்கண இயல்; மற்றைய மூன்றும் சாதன இயல். கடைசி மூன்றும் பயன் இயல். அவ்வியல்களுள் பிரமாணமும் இலக்கணமும் பொது அதிகாரம். சாதனமும், பயனும் சிறப்பதிகாரம். பொது பல பொருளுக்கு உரியது. சிறப்பு ஒரு பொருட்கே உரியது. பெத்தத்தில் நின்ற நிலைபற்றிக் கூறும் இலக்கணம் ஆகந்துகம் ஆகிய பொதுவியல்பு (தடத்தலட்சணம்) முத்தியில் நின்ற நிலைபற்றிக் கூறும் இலக்கணம் சகஜமாகிய சிறப்பியல்பு (சொரூபலட்சணம்). இப்பொதுவும் சிறப்பும் வேறு. அப்பொதுவதிகாரமும் சிறப்பதிகாரமும் வேறு. சொல்லொருமை மாத்திரத்தால் மயங்கலாகாது.

" எந்தை சனற்குமரன் ஏத்தித் தொழும்இயல்பால்
நந்தி அருள்செய்த ஞானநூல் — சிந்தைசெய்திப்
போதுரைத்தான் மெய்கண்டான் பூதலத்தோர் தாம்உணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று "


இது கனகாபிடேக விழாமலர்க்கு எழுதிய கட்டுரை. அக்கனகாபிடேகம் ஞானபிடேகம் பெற்று எழுந்தருளி விளங்கும் குருமாமணிக்கு நிகழ்வது. அந்த ஞானபிடேகமோ சைவசித்தாந்த ஞானபிடேகம். அதற்குரிய தலைமை திருக்கயிலாய பரம்பரைக்கு உரியது. அது மெய்கண்டதேவநாயனர் சந்தானத்தினது. அந்த நாயனர் அருளியதே சிவஞானபோதம். அதன் முடிந்த முடிபே இக்கட்டுரையின் பொருள்.

மெய்கண்டதேவர் மேன்கழல் போற்றி !
கயிலைக் குருமணி கழலிணை போற்றி ! !

உடல் பெற்ற பயன் எது ? பெருமானை வணங்குதல் ; கண்ணால் தரிசித்தல் ; வாயால் அவன் புகழைப் பாடுதல் ; கால்களால் வலம் வருதல் ; இக் காரியங்கள் இலேசான காரியங்களல்லவா ? இதற்குச் சிரமம் வேண்டுமா ? இவைகளைச் செய்வதால் வரும் பெரும்பயன்தான் திருவருள்.


— கயிலைக் குருமணி

சென்னையில்



தருமை ஆதின சமயப் பிரசார நிலையம் - வேளூர் இறைபணி மன்றம்

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை : திரியம்பகம் (கௌதமீதீரம்)



தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ திரியம்பகநாதரை வழிபடுதல்

ஜோதிர் லிங்க தரிசன யாத்திரை : குஸ்மேஸம்



தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
ஸ்ரீ க்ருஷ்ணேசுவரரை வழிபடுதல்

சிவபோகசாரம்

வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

பாரத நாட்டின் மிகப் பெருஞ்சமயங்களுள் ஒன்று சைவ சமயம். இதன் பெருமை உலகமறிந்ததாகும். வேத ஆகமங்களை அடிப்படையாகக்கொண்ட சைவ சித்தாந்தக் கொள்கைகள் மிகவும் எளிதாகவும், இறைவனை அடைதற்கேற்ற உறுதி உடையனவாகவும் இருந்தமையால் மக்களிடையே செல்வாக்குப்பெற்றது இச் சைவ சித்தாந்தம். சான்றோர் அருளிய சாத்திர தோத்திரங்கள் இதன்கண் விளங்கித்தோன்றி உறுதுணை நிற்கின்றன. சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கும் திருமுறைகள் பன்னிரண்டும் இந்நெறியில் உலகம் பெற்றிருக்கும் ஒப்பற்ற செல்வங்கள். இச்சாத்திர பரம்பரையிலே, தருமையாதீனத்தை நிறுவிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய நூல்கள் பல. அவற்றுள் இச்சிவபோகசாரம் மிகச் சிறந்த சாத்திர நூலாக மிளிர்கின்றது. இதன்கண் சைவசித்தாந்தக் கருத்துக்கள் மிக எளிய நடையில் ஐயந்திரிபற விளக்கப்படுகின்றன. சைவ சித்தாந்த அடிப்படைக் கருத்துக்கள் தெளிவுற உரைக்கப்படுகின்றன.

பதி, பசு, பாசம் எனக் கூறப்பெறும் முப்பொருள்களில் பதி அல்லது இறைவன், பசு அல்லது உயிர், பாசம் அல்லது உயிர்களைப் பிணைக்கும் கட்டு என அறிதல் வேண்டும். பதியாகிய இறைவன் தெய்வ வடிவோடு, எல்லாம் வல்லவனாய், கருணைக் கடலாய், எங்கும் நிறைந்தவனாய், நடுவுநிலைமை வாய்ந்தவனாய், பூரணனாய், அன்பு வடிவானவனாய், பாசத்திற்கு அப்பாற்பட்டவனாய், தன்னையடைந்த உயிர்கள் மீண்டும் திரும்பாதபடி நிறைவான இன்பம் அளிக்கும் முத்திப்பேருக விளங்குபவன். உயிர்களோ எண்ணற்றவை; படிகம்போன்றவை உயிர்கள்; இறைவனருளால் கிடைக்கும் பேரின்பத்தை நுகரவல்ல உயிர்கள் பாசத்தாற் கட்டுண்டு துன்பத்தில் மூழ்கியுள்ளன. இனிப் பாசம் மூவகைப்படும்; ஆணவம், கன்மம், மாயை என்பன அவை. மும்மலம் என்றும் இதனை மொழிவர். ஆணவம் அகங்காரம் எனவும் கூறப்படும். கன்மம் என்பது உயிர்கள் செய்த நன்மையும், தீமையுமாகியவற்றின் குவியல். பசுவும் பாசமும் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரித்துக் காண வியலாதபடி நெருங்கி இணைந்துள்ளன; ஆயினும் இவ்விணைப்பு நீங்க வியலாதது அல்ல. திருவருளால் உயிர் இக்கட்டினின்று விடுதலைபெறும். பின் இறைவனேடு இரண்டறக் கலந்து உய்திபெறும். இந்த அடிப்படைக் கொள்கைகளை நன்கு அறிதல் வேண்டும்.

இனி, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என்பவற்றின் வளர்ச்சி, கன்மம், சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம் என்னும் அதன் பாகுபாடுகள், தொண்ணூற்றாறு தத்துவங்களின் செயல்கள், ஆறு அத்துவாக்கள், ஐந்து கலைகள், ஆறு ஆதாரங்கள், மூன்று மண்டலங்கள், மூன்று முக்கிய அவத்தைகளும் அவற்றின் பிரிவுகளும், நான்கு மார்க்கங்களும், நான்கு பாதங்களுமாகிய விவரங்கள், தசகாரியத்தின் வகைகள், பஞ்சாட்சர இரகசியம், ஐவகைச்சுத்தி, தீட்சை வகைகள், சத்திநிபாதத்து நான்கு வகைகள், தசகாரியத்துள் மிக முக்கியமான சிவபோகம் - முதலியவற்றைத் தெளிவுற அறிந்து கொள்ளுதல் வேண்டும். ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் 'சிவபோக' சாரமாக இத்திருநூலை அருளியுள்ளார்கள். 139 திருவெண்பாக்களில் இந்நூல் இயற்றப்பெற்றுள்ளது.

அடிகள் வணக்கம், பெறுதற்கருமை, அறியும்பகுதி, உபதேச விளக்கம், அநுபூதிநிலை, உபாயநிலை, பணியறுத்தல், துறவின்பகுதி, அறிவோர் புகழ்ச்சி, மடவோர் பழிப்பு, பொதுநிலை - ஆகிய பதினொரு தலைப்புக்களில் இவ் வெண்பாக்கள் பகுக்கப்பட்டுள்ளன.

முதற்கண் தம் குருநாதராகிய கமலை ஞானப்பிரகாசர்மேல் வணக்கச் செய்யுள்கள் பாடியுள்ளார்கள். சித்தி, பத்தி, முத்தி, உண்மை ஆகிய நான்கையும் தரும் நாதன் நம் குருநாதனே என்று பெருமிதத்தோடு பாடித்துதிக்கின்றார்கள்:-

"சித்திதருநாதன் தேன்கமலை வாழ்நாதன்
பத்திதருநாதன் பரநாதன் - முத்திப்
பெருநாதன் ஞானப் பிரகாசன் உண்மை
தருநாதன் நங் குருநாதன்."

அரு, உரு, அருவுரு ஆகிய மூன்றும் அல்லாத ஒருவனாக உள்ள அப்பெருமான் உயிர்க்குயிராக ஓங்கி என்னை ஆண்டவன் என்றும், அக்குருநாதன் என்போல் வந்திருக்காவிட்டால் நீதிவழி, சித்திமுத்தி, நற்றவங்கள், அன்பு ஆகியவற்றை ஆரறிவார் என்றும், அரிக்கும் அயனுக்கும் அறியவியலாத பெருமான் பிறந்து துரியம் பெருக்குகின்றான் என்றும், இன்று ஆரூரில் ஞானப்பிரகாசனாக இருக்கின்றான் என்றும், அப்பெருமானைக் கண்டு பாசங்கழித்து, அமுதை உண்டு சுகானந்தத்துள்ளிருந்தேன் என்றும், உள்ளிருந்தே உணர்த்துகினும் கண்டிலர் உலகமக்கள் என்றெண்ணி உள்ளும் புறம்புமாயிருத்தற்கென மானிடச்சட்டை தாங்கிவந்து நமை யாண்டருள் புரிந்தான் என்றும், சூரியன் உதித்து இருளை ஓட்டுவதுபோல், அருளாகித்தோன்றி மருள் தொலைத்தவன் என்றும், ஒழியாத பேரின்பத்தின் உள்ளிருக்க வேண்டும் என்றும், பொருள் சிற்றறிவு பற்றுதல் ஆகிய அனைத்தும் பொய் என்று புகன்று என்னை அருளிற் கூட்டினான் என்றும், காண்பன, கேட்பன, காரியங்களாய் வருவன,

போகமாய்த் தோன்றுவன அனைத்தும் பொய்யாம் என்றும், இன்பவெள்ளமாகப் பொருந்தித் தன்னுட் குருநாதன் விற்றிருப்பதொன்றுமே மெய் என்றும் கூறுகின்ற வணக்கப்பகுதியினை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் தம் குருமூர்த்திகளிடம் இவர்கள் கொண்டிருந்த பக்தித்திறம் நன்கு புலனுகின்றது.

சிலர் இருக்கின்ருர்கள். ஒருகோடி என்னும்படி ஆகமங்கள் எல்லாம் கற்கின்ருர்கள். தவம் சித்தி அனைத்தும் பெறுகின்ருர்கள். குருவருளால் வைத்தபடி இருக்கும் தன்மை இவர்களுக்கு வருவதில்லை; ஐயோ! இவர்க்குச் சித்த சலனம் இல்லாத நாளே இல்லை. எப்போதும் இப்படியே (15) என்று அருளுகின்ருர்கள்.

யாருக்கு உபதேசம் புரிவது? அன்பு இருக்கவேண்டும். அங்கே விவேகமும் கலந்திருக்கவேண்டும். துன்பந்தரும் வினைகளைத் துடைத்துக்கொள்ளவேண்டும் என்றும், இன்பப் பேற்றுக்கு உரியவராதல் வேண்டும் என்றும் தாகமுண்டாயிருத்தல் வேண்டும்; அப்படி ஓடிவருகின்றவர்க்கே உண்மைப் பொருளை உபதேசம் செய்தல் வேண்டும் (16) என்றும் அருளுகின்ருர்கள்.

'எது சிவம்' என்று விடையருளுகின்ருர்கள் ஒரு திருப்பாடலில்:-

"உருவை அருவை ஒளியை வேளியை
இருளைச் சிவமேன் றிராதே! - மருளைப்
பிறிந்தறிவிற் கண்டதனைப் பின்னமற எங்கும்
சேறிந்தபோருள் தானே சிவம்." (17)

இதைவிடச் சிவத்தின் இலக்கணத்தை யார் கூறமுடியும்? விறகில் தீயும், தீயில் நீரும், தேனில் சுவையும், மலரில் மணமும், விசும்பிற் காற்றும், கண்ணில் ஒளியும் அத்துவிதமாய் நிற்றல்போல் ஆன்மாவும் ஈசனும் முத்தியிலே நிற்கும் முறை (19) என்று அருளியுள்ளார்கள்.

'இரவும் பகலும் அற்ற இடத்தில் திறமாக நில் என்ருன் ஞானகுரு; அது மட்டுமோ? மும்மலமும் கொல்' என்றும் கூறினுன் என்று தாம் பெற்ற உபதேச விளக்கத்தை உரைத்தருளுகின்ருர்கள். பதி பசு பாச விளக்கத்தைப் பின்வரும் திருப்பாடலில் தெளிவுறக் காணலாம்:-

"என்னை அறிவேன்ருன் என்னறிவில் ஆனந்தந்
தன்னைச் சிவமென்ருன் சந்ததமும் - என்னையுன்னைப்
பாரா மறைத்ததுவே பாசமென்ருன் இம்மூன்றும்
ஆராய்ந்தவர் முத்தராம்" (26)

தம் குருநாதர் பாசவினையை வாட்டியதுடன் மீட்டும் நான் வாராவகை அருளைக் காட்டினுன் கூட்டினுன் என்றும் அருளுகின்ருர்கள். (29) 'யார்க்குந் தெரியாத ஆனந்த இன்ப வெள்ள மேற்கொண்டு விடுகுதில்லை சிதம்பரநாதா'

யார்க்கும் தெரியாத பரப்பிரமம் சேர்ந்தாய் 'உனக்கு ஒப்பு யாரும் இல்லை' என்று (43) பாடித் தம் குருநாதரைப் பரவுகின்றார்கள்.

அநுபூதிநிலை எனுந்தலைப்பில் சிவபோக இன்பமாக அருளுவதை எழுத முடியுமோ? உள்ளம் கரைந்தது; உடல் கரைந்தது; ஆனந்தவெள்ளம் கரைபுரண்டு மேலாயிற்று; கள்ளமலம் பொய்யாயிற்று (44) என்றும், எவ்வெவற்றைச் செய்தாலும், எவ்வெவற்றைச் சொன்னாலும், எவ்வெவற்றை எண்ணியிருந்தாலும் எல்லாம் நின்செயலே என்று உணர்ந்தால் என்செயலை யான் காண்கிலேன் (45) என்றும் கூறியருளியுள்ளார்கள். குருநாதன் திருவடியைக் காணுமுன்னே 'ஈசன் அடியில் இருக்கையிலே எங்கெங்கும் ஈசன் அடிதேடி இளைத்தேன் நான்' (48) என்று இரங்குகின்றார்கள். எம்குருநாதன் தந்த ஞானவாள் என்னிடம் இருக்கும்போது யாரால் என்னை என்னசெய்ய முடியும்? (49) என்று இறுமாந்து பேசுகின்றார்கள். அநுபூதி கைவந்த பிறகு உலகம் எல்லாம் என்னசெய்யும்? பேசுகின்றார்கள் பெருமிதத்தோடு;

"இட்டசனம் எங்கே இதம் அகிதம்தானெங்கே
துட்டசனம் எங்கே தொழிலெங்கே—சிட்டருடன்
கூடியிருந்த தெங்கே குன்றுச் சிவாநந்தம்
நாடியது வாயிருந்த நாள்." **(54)**

இவ்வாறு சிவபோகத்தைப் புசிப்பதனாலும், எங்கும் வசிப்போம் ஆதலாலும், உலகில் வசியோம் ஆதலாலும், முசிப்பின்றி வாழ்வோம் ஆதலாலும், சிவத்தையுணர்ந்த குருநாதர் திருவடிக்கீழ்த் தாழ்வோம் ஆதலாலும் 'எமக்கு ஆர் சரி?' என்று இறுமாந்து (56) பேசும் திருப்பாடலும் இங்கு அறியத்தக்கது.

'மருள் தேகமாயடங்கினால் மாய்வாய் நெஞ்சே! நீ அருள்தேகமாக அடங்கினால் இன்ப அகத்துள்ளே இருக்கலாம்; எப்போதும் துன்பவினை உன்னைத் தொடராது' என்று உபாயம் உரைக்கும் நிலையையும் (68) இத்திருநூலினுட் காண்கின்றோம்.

எல்லாம் சிவன் செயல் என்று எண்ணவேண்டும். அவரவர்க்கு முன்னைப் பிறவியில் உள்ள வினைப்படி அவரவரைக்கொண்டு செயல் இயற்றுவன் இறைவன். ஆதலால் நல்லவர் என்றும் பொல்லாதவர் என்றும் போராடுவது ஏன் என்பது (73) ஓர் இனிய உபதேசப் பகுதியாகும். இந்த உணர்ச்சியோடு வாழப் பழகவேண்டும். என்னவருமோ எப்போதுவருமோ என்று ஏங்கி இளைக்கலாகாது. எல்லா உயிரையும் காக்க இறைவன் ஒருவன் உண்டோ இல்லையோ? அவ்வுயிரில் நாம் ஒருவர் அல்லவோ? ஆதலால் பொருமுவதும் புழுங்குவதும் ஒழிக; வருகுவது தானே வரும் என்பது (78) மறக்கவியலாத ஒரு மணிமொழியாகும். நாமெல்லாம் மரப்பாவைகள். நம்மைக் கன்மம் என்ற சூத்திரத்தாற் கட்டி அரன் நடத்துவிக்கிறான் என்ற (90) உண்மை நம்முள்ளத்திலே என்றும் இருத்தல்வேண்டும். இவ்வாறு கூட்டுவதும்

கூட்டிப் பிரிப்பதுவும் ஒன்றென்றை ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும், காட்டுவதும் காட்டி மறைப்பதுவும் கண்ணுதலோன் முன்னமைத்த ஏட்டின்படி என்று இருத்தலே (103) அறிவுடையோர் செயலாகும்.

துறவின் பகுதியில் உண்மைகள் பலவற்றைக் காண்கின்றோம். 'பிறப்பறுக்க லுற்றார்க்கு உடம்பும் மிகை' என்ற நெறியிலே துறவிக்கு 'அவ்வுடம்பே பகை. வேறு பகை உண்டோ' ஆதலால் 'அரியும் அயனும் அறியாத இறைவன்திருவருள் அல்லது ஒருவர் துணை வேறு உண்டோ சொல்' என்று (114) கேட்டருளுகின்ற இடம் மிக உருக்கம் உடைய பகுதியாகும். 'இந்த உடம்பு ஒரு சிறைச்சாலை. அந்தக்கரணங் களும் பிறவும் காவலாட்கள். போகமும் புவனமும் பொருந்துமிடம். இதனுட்கிடக்கும் உயிர்களுக்கு ஈடேற்றம் செய்வான் இறைவன்' என்று (118) அருளும் பகுதியை மறக்கவியலுமா ?

கற்றல் வேண்டும். தொல்லைகள் பல எய்தியும் மிகுதியாகக் கற்றல்வேண்டும். எதற்கு இக்கல்வி ? கற்றதனால் ஆகிய பயன் அநுபவத்தில் வேண்டும். அவ்வாறு அநுபவம் கொள்ளாது, தமக்குள்ளே வீணாகச் சச்சரவிட்டுக்கொண்டு வாழவேண்டா. நற்கருணை வெள்ளம் அடங்கும் விரிசடையாராகிய இறைவனுக்கு ஆளாகி உள்ளம் அடங்க அல்லவோ இக்கல்வி பயன்படவேண்டும் என்று மடவோர்ப் பழிப்பில் கூறும் அறிவுரையை (128) எத்தனைபேர் மறந்துவிடுகிறார்கள் ?

தன்னை அறிதலும், தலைவனை அறிதலும், முன்னைவினையின் முடிவு அறிதலும் ஆசாரியனுக்கு வேண்டுவன, (26) என்றும், நிலையில்லாததை நிலைத்தது என்று ஆதரிக்கும் பொல்லாத மனிதருடன்கூட மருவாது தனித்திருந்து சிவத்தில் மூழ்கி மலத்தை அறுத்து, ஆனந்தமாய் அழுந்துதலே அறிவோர் தன்மை (121) என்றும் கூறும் பகுதிகள் உள்ளத்தைத் திருத்தும் ஒப்பற்ற பகுதிகள்.

யார் யார் செயல்களை நீத்துவிட வேண்டும்? நீதியில்லாத அரசர் நாடு, நெற்றியிலே திருநீறில்லாதவர் செய்தவம், கழலறியா ஆசான், கற்பில்லாத மகளிர் - இவர்களை விழலென நீத்துவிடுதல் வேண்டும். (130) தீரவிசாரித்துச் செய்தல் வேண்டும் (131) என்றும் பரபரப்பு இன்றி ஒருவர்க்கும் தீங்கு நினையாது செய்ந் நன்றி குன்றாது ஏங்கி இளையாது இருத்தல் வேண்டும் (132) என்றும், ஆசையற்றுப் பாசம் விட்டுச் சிவபூசை செய்து திருவைந்தெழுத்துத் தியானம் புரிந்து சினம் தவிர்ந்து திருமுறைகள் ஓதி மனம் விளங்குதல் வேண்டும் (138) என்றும் அருளி யுள்ளார்கள்.


இச்சிவபோக சாரத்தின் நிறைவுத் திருவெண்பா சில சிவதலங்களைக் குறிப் பிட்டுக்கூறி இவற்றின் நாமமாத்திரையே முத்திப்பேறு எய்துவிக்கும் எனக்கூறியருள் கின்றது. அத்திருப்பாடல் :-


" தில்லைவனங் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் - நெல்லைகரை
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமேன் முத்திவரும் " (139)

இவ்வாறு உபதேசநெறி விளக்கும் ஒப்பற்ற ஞானப்பனுவலாக இச் சிவபோக சாரம் விளங்குகின்றது. எங்கள் கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது கனகாபிஷேக மலரில், இவ்வருள் நூலைப் பற்றிய இக்கட்டுரையினை எழுதத் துணை புரிந்த திருவருளையும் குருவருளையும் போற்றித் தொழுகின்றேன். ஆதிபரமாசாரிய சுவாமிகளின் அருட்கொடையாக விளங்கும் இவ்வருள் நூலைத் தமிழ் மக்கள் அன்றி உலக மக்கள் அனைவரும் கற்றுப் பேரின்பப் பெருவாழ்வு எய்துவார்களாக.

செல்வம் புண்ணியத்தைச் செய்யவும் அப்புண்ணியத்தால் விளையும் நல்ல இன்பத்தை அடையவும் கிடைத்தது. அதைப் பாவத்திற் செலவிடாமல், தெய்வ கைங்கரியத்தில் பயன்படச் செய்வது சிறந்தது. அழியும் செல்வத்தால் அழியாத சிவபுண்ணியத்தைத் தேடிக்கொள்வதே அறிவுக்குப் பொருத்தம் ஆகும்.

— கயிலைக் குருமணி





ஆதி சங்கரர் கூறும் சிவாத்துவைதம்

[illegible]

[illegible] M.A., Ph.D.

[illegible]

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदा
न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शंभो शिव तव पदाम्भोजभजनम् ॥

[illegible]

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில்

ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி

ஆதி சங்கரர் கூறும் சிவபரத்துவம்

வேதாந்தவித்தகர்
டாக்டர். டி. எம். பி. மகாதேவன் M. A., Ph. D.

ஆதி சங்கரர் இயற்றிய சிவானந்தலஹரி என்னும் அழகிய பாமாலையில் சிவபரத்துவம் என்ற நறுமணம் கமழ்கின்றது. பலகாரணங்களைக்கொண்டு சிவபரத்துவம் இந்நூலில் நிலைநாட்டப்படுகின்றது. அவரவர் தாம் வழிபடும் கடவுளை யாவர்க்கும் யாவற்றிற்கும் மேலான பொருளாக மதிப்பது ஹிந்துக்களின் மரபு. கடவுள் ஒன்றே; அவரது நாமங்கள் பல. ஆதி சங்கரர் அவதரித்த குலத்தின் தெய்வம் சிவம்; அவரே பரசிவத்தின் அவதாரம் என்றும் கருதப்படுகின்றார். சிவ மஹிமையை எடுத்துக்காட்டும் சிவானந்தலஹரியின் சில சுலோகங்களின் கருத்தை இங்கு விளக்குவோம்.

உலகில் அநேக தேவதைகள் உளர். வழிபடுவோர் விரும்பும் பலன்களை அளிக்கின்றனர்; ஆனால் அவர்களின் அஞ்ஞானத்தைப் போக்கும் சக்தியற்றவர். இந்தத் தேவதைகளைத் தாம் பின்பற்றுவதில்லை என்று சங்கரர் ஒரு சுலோகத்தில் கூறுகின்றார். "ஆயிரக்கணக்கான தேவதைகள் இருக்கின்றனர் இவ்வுலகில்; தாமே அறிவிலிகள்; அல்ப பயன்களை அளிப்பவர்; கனவில்கூட அவர்களைப் பின்பற்றவோ அவர்கள் அளிக்கக்கூடிய பலத்தையோ நான் விரும்பவில்லை. ஹே சம்புவே! † சிவமே! விஷ்ணு பிரம்மா முதலியவர் களாலும்கூட சுலபமாக அடையமுடியாததாகிய உம்முடைய செந்தாமரையொத்த பாதங்களைப் போற்றுவதை வெகுகாலமாக நான் யாசிக்கிறேன்".

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदा
न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शंभो शिव तव पदाम्भोजभजनम् ॥

மற்றொரு சுலோகத்தில், மற்ற தேவதைகளை வழிபடுவது மயக்கத்தினால் என்று சொல்லுகிறார் சங்கரர். "எவ்வாறு முத்துச்சிப்பியில் வெள்ளியென்றும், கண்ணாடியில் மணி என்றும், கானல் நீரில் ஜலம் என்றும் மயக்கம் ஏற்படுகின்றதோ,

---

† "நம்பனே யன்று வெண்ணெய் நல்லூரின் நாயினேன் தன்னையாட்கொண்ட
சம்புவேயும்பரார் தோழு தேத்தும் தடங்கடல் நஞ்சுண்ட கண்டா"
— சுந்தரர் (வடதிருமுல்லைவாயில்)

அதேபோல் பரம்பொருளாகிய தாங்கள் அல்லாதவற்றைத் தேவதை என்ற பிரமையினுல் மூட ஜனங்கள் பஜிக்கின்றனர். ஹேபசுபதியே! மஹாதேவனும் ஈசனுமாகிய உம்மை அவர்கள் மனதில் நினைப்பதில்லை.

यथा बुद्धिः शुक्तौ रजतमिति काचाश्मनि मणि-
र्जले पैष्टे क्षीरं भवति मृगतृष्णासु सलिलम् ।
तथा देवभ्रान्त्या भजति भवदन्यं जडजनो
महादेवेशं त्वां मनसि च न मत्वा पशुपते ॥

அல்ப பலன்கள் மற்றவர்களிடமிருந்து கிடைக்கும். ஆனுல் மோக்ஷம் என்ற மேலான பொருள் பரமசிவத்திடம்தான் பெறக்கூடும். "நீர் ஒருவர்தான் எல்லோருக்கும் மேலான பலத்தைக் கொடுப்பவர். திவ்யமான பதவிகளைத் தங்கள் மூலமாக வகிக்கும் விஷ்ணு முதலியவர்கள் தங்களை மறுபடியும் பஜிக்கின்றனர். என்னே உமது கருணை! எத்தகையது எனது அவா! அருள் நிறைந்த பார்வையோடு என்னை எப்பொழுது காப்பாற்றுவீர்?

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः ।
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ॥

விஷ்ணுவும், பிரம்மாவும் பரசிவத்தின் அடிமுடி காணுமற்போயினர் என்ற புராணக்கதையைப் பலமுறை உபயோகப்படுத்துகிருர் சங்கரர். இந்தப் பதவிகளே பரமேச்வரனின் அருளால் கிடைக்கின்றன. கிடைத்தும் அவற்ருல் மாத்திரம் ஈசுவர தத்துவத்தை அறியமுடியாது. "எங்கும் வியாபித்துள்ள பொருளே! உம்முடைய பூஜையை நான் செய்கிறேன். என் பூஜையின் பலனுகப் பிரம்மாவின் பதவியையோ விஷ்ணுவின் தன்மையையோ அளிக்கின்றீர். ‡ ஆனுல் மறுபடியும் உம்மைப் பார்க்க வேண்டி அவர்களைப்போல், பறவையாகவோ, விலங்காகவோ மாறுதல் அடைந்து ஆகாயத்திலும் பூமியிலும் தேடி, உம்மைப் பார்க்க முடியாமல் சோர்வு ஏற்பட்டால், அதை நான் எவ்வாறு சகிப்பேன், ஹே சங்கரா!

---

‡ "வானம் ஏத்தயான் வைகுந்த வாழ்வுபெற் றதுவும்
ஞான நான்முகன் சத்தியஉலகம் நண்ணியதும்
ஏனை விண்ணவர் தத்தமவாழ்க்கை எய்தியதும்
ஆனுயர்த்தவன் அருட்குறி அருச்சனைப் பயனுல்"

— சிவஞானமுனிவர் (காஞ்சிப்புராணம்)

करोमि त्वत्पूजां सपदि सुखदो मे भव विभो
विधित्वं विष्णुत्वं दिशसि खलु तस्याः फलमिति ।
पुनश्च त्वां द्रष्टुं दिवि भुवि वहन्पक्षिमृगता-
मदृष्ट्वा तत्खेदं कथमिह सहे शंकर विभो ॥

"ஹே கைலாசபதியே! உம்மைப்பார்த்து, உம்முடைய மேன்மையான பாதங்களைக் கைகளில் தாங்கித் தலையிலும், கண்களிலும், மார்பிலும் ஒத்திக்கொண்டும் ஆலிங்கனம்செய்து நேர்த்தியான அந்தக் கமலங்களிலிருந்து உண்டாகும் பரிமளமான வாசனைகளை முகர்ந்து, பிரம்மா முதலியவர்களுக்கும் கிடைக்கக்கூடாத இன்பத்தை ஹ்ருதயத்திலே எப்பொழுதும் நான் அநுபவிப்பேன்". §

कदा वा त्वां दृष्ट्वा गिरिश तव भव्याङ्घ्रियुगलं
गृहीत्वा हस्ताभ्यां शिरसि नयने वक्षसि वहन् ।
समाश्लिष्याघ्राय स्फुटजलजगन्धान्परिमला-
नलभ्यां ब्रह्माद्यैर्मुदमनुभविष्यामि हृदये ॥

உம்மை நான் எவ்வாறு பூஜை செய்வேன்! வஸ்திராலங்காரம் செய்வதற்குச் சூரியனுக்குரிய ஆயிரம் கைகள் இருந்தால், புஷ்பங்களை அர்ச்சிப்பதற்கு விஷ்ணுவின் சக்தி இருந்தால், சுவாசனையை அர்ப்பணம்செய்ய வாயுவின் தன்மை இருந்தால், நைவேத்யத்தைச் சமைப்பதற்கு அக்னியின் சாமர்த்தியம் இருந்தால், தகுதியும், ஹிரண்யகர்பனைப்போல் ஏற்படுமானால் உம்மைப் பூஜிப்பதற்கு நான் முயற்சிக்கலாம். ஹே! சந்திரசேகர, பசுபதி, சுவாமி, மூவுலகங்கட்கும் குருவே!

वस्त्रोद्धूत विधौ सहस्रकरता पुष्पार्चने विष्णुता
गन्धे गन्धवहात्मतान्नपचने बर्हिर्मुखाध्यक्षता ।
पात्रे काञ्चनगर्भतास्ति मयि चेद्बालेन्दुचूडामणे
शुश्रूषां करवाणि ते पशुपते स्वामिंस्त्रिलोकीगुरो ॥

சிவபரத்துவத்தை நிரூபிப்பதற்கு விஷமுண்டகண்டனாக விளங்குவதே போதும் என்று சங்கரர் கூறுகின்றார். "இந்த ஒரு பரமோபகாரம் போதாதா, ஹே பசுபதே! உம்முடைய வயிற்றிலுள்ளனவற்றையும், வெளியிலுள்ள பொருள்களையும், காப்பாற்றுவதற்காக, தேவர்களையும் ஓடும்படியாகச் செய்த தீப்பற்றி எரிந்து கொண்டிருந்த பயங்கரமான விஷத்தை உள்ளே விழுங்காமலும், வெளியே உமிழாமலும், கழுத்தில் வைத்துக்கொண்டீர்!"

§ "ஆனந்தவெள்ளத் தழுந்துமோ ராருயிர் ஈருருக் கொண்(டு)
ஆனந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோனருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாதிவ் வணிநலமே" -மணிவாசகர் (கோவையார்)

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनां पते
पश्यन्कुक्षिगतांश्चराचरगणान्बाह्यस्थितान्रक्षितुम् ।
सर्वामर्त्यपलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्णमेव त्वया ॥

சம்ஹாரமூர்த்தி பரசிவம், பிரளயகாலத்தில் எல்லாம் நாசமடைந்து மறைந்த பின் எஞ்சி நிற்கும் பொருள் அதுவே.‡ "ஹே பசுபதே சம்போ! உம்முடைய சாஹசத்தை என்னவென்று சொல்வது! உமது தைரியம் யாருக்கு வரும்? இப்பேர்ப் பட்ட உம்முடைய நிலையை மற்றவர் எவ்வாறு அடைவர்? தேவகணங்கள் தங்க ளுடைய உயரிய நிலைமையினின்றும் விழுகின்றனர். முனிவர்கள் நடுங்குகின்றனர். பிரபஞ்சம் முழுவதும் நசித்து லயமடைகின்றது. இதைப் பார்த்துக்கொண்டு, கொஞ்சமும் பயமில்லாமல், ஒருவராய், ஆனந்தத்தில் மூழ்கினவராய் நீர் விளையாடு கின்றீர்".

किं ब्रूमस्तव साहसं पशुपते कस्यास्ति शंभो भव-
द्धैर्यं चेदृशमात्मनः स्थितिरियं चान्यैः कथं लभ्यते ।
भ्रश्यद्देवगणं त्रसन्मुनिगणं नश्यत्प्रपञ्चं लयं
पश्यन्निर्भय एक एव विहरत्यानन्दसान्द्रो भवान् ॥

சிவதாண்டமும் சிவபரத்துவத்தைக் காட்டுகின்றது. "ஆதிபொருள் நீர், அளவுகடந்த செஞ்சுடர்; உம்மைச் சுருதி வாக்கியங்களால் அறியவேண்டும், அடையவேண்டும். ஞானமும், ஆனந்தமும் உம்முடைய சுவரூபம். மூவுலகங்களையும் காப்பதில் நீர் விழைவு கொண்டுள்ளீர். எல்லா யோகிகளும் உம்மைத் தியானம் செய்கின்றனர். தேவர்களெல்லாம் உம் புகழைப் பாடுகின்றனர். மாயைக்கு அதிபர் நீர். ஜடாதாரியாய் அழகிய தாண்டவம் புரிகின்றீர்.† சம்புவாகிய உமக்கு என் வணக்கம்".

---

‡ "பெருங்கடல்மூடிப் பிரளயம் கொண்டு பிரமனும்போய்
இருங்கடல்மூடி இறக்கும் இறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமும் கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"

— அப்பர் (தனித்திருவிருத்தம்)

† "ஆதியாய் நடுவுமாகி அளவிலாஅளவும் ஆகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகம்ஆகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப்பொதுநடம் போற்றி போற்றி"

— சேக்கிழார் (தில்லைவாழந்தணர்)

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
 विद्यानन्दमयात्मने त्रिजगतः संरक्षणोद्योगिने ।
ध्येयायाखिलयोगिभिः सुरगणैर्गेयाय मायाविने
 सम्यक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥

விஷ்ணு உயர்ந்த பூஜைக்கு உரியவராக ஏன் விளங்குகின்ருர் என்ருல், உம்மோடு அவர் நெருங்கி இருப்பதிஞல்தான். உம் கையில் அம்பாகவும், நீர் ஏறும் விருஷபமாகவும்,‡ உம்முடைய சரீரத்தின் பாதியாகவும், உமக்கு மனைவியாகவும், உம்முடைய பாதங்களைக் காண பன்றியாகவும், உம்மோடு தோழமைகொண்டும், நீர் தாண்டவமாடும்போது மிருதங்க வாத்தியத்தை முழங்கிக்கொண்டும் விளங்குகின்ருர். உம்முடைய பாதங்களில் தம்முடைய கண்ணையே மலராகவும் அர்ப்பணம் செய்தார். உம்முடைய தேகத்தின் ஒரு பாகத்தையும் பெற்ருர். ஆகையிஞல்தான் மற்ற தேவர்களுக்கெல்லாம் உயர்ந்து நிற்கின்ருர் மஹாவிஷ்ணு.

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
 घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादिरूपं दधौ ।
त्वत्पादे नयनार्पणं च कृतवांस्त्वद्देहभागो हरिः
 पूज्यात्पूज्यतरः स एव हि न चेत्को वा तदन्योऽधिकः ॥

அமரர்கள் எனப்படும் தேவர்களும் பிறந்து இறப்பவர்களே. அவர்களைச் சேவிப்பதால் கொஞ்சம் கூட சுகம் கிடையாது. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. எவர் பிறப்பிறப்பு அற்ற பரசிவத்தைப் பஜிக்கின்றனரோ அவரே இங்கு பேரின்பத்தைப் பெறுவர்; கடைத்தேறுவர்.

जननमृतियुतानां सेवया देवतानां
 न भवति सुखलेशः संशयो नास्ति तत्र ।
अजनिममृतरूपं सांबमीशं भजन्ते
 य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ॥

பூஜைக்கு வேண்டியனவற்றை நான் சேகரித்துவிட்டேன். ஆனல் எவ்வாறு நான் பூஜிப்பது. பறவையாகவோ, விலங்காகவோ நான் ஆக முடியாது; அந்த நிலைமை கிடைப்பது அரிது. உம்முடைய முடியையும் அடியையும் நான் காணமுடியாது. பிரம்மாவும் விஷ்ணுவும் பறவை - விலங்கு ரூபங்களை எடுத்தும்கூட காண இயலவில்லையே !

‡ "ஊனேறு வேலின் உருவேறு கண்ணி ஒளியேறு கோண்ட ஒருவன்
ஆனேற தேறி அழகேறு நீறன் அரவேறு பூணும் அரன்"
— சம்பந்தர் (தென்திருமுல்லைவாயில்)

पूजाद्रव्यसमृद्धयो विरचिताः पूजां कथं कुर्महे
पक्षित्वं न च वा किटित्वमपि न प्राप्तं मया दुर्लभम् ।
जाने मस्तकमङ्घ्रिपल्लवमुमाजाने न तेऽहं विभो
न ज्ञातं हि पितामहेन हरिणा तत्त्वेन तद्रूपिणा ॥

சிவானந்த லஹரியின் கடைசி சுலோகத்தில் சிவமஹிமையைப் பின்வருமாறு சங்கரர் கூறுகின்ருர் :-

" உம்மைப் புகழ்வதற்காக நான் பொய் சொல்லவில்லை. பிரம்மா முதலிய தேவர்களெல்லாம் உம்மையே, துதிக்கப்பட வேண்டியவர்களுள் முதல்வராகக் கருதுகின்றனர். யார் உயர்ந்தவர், பரம மஹத்துவம் பெற்றவர் என்று தான்யத்தை உமியினின்று பிரிப்பதுபோல் விசாரித்து உம்மையே யாவற்றிற்கும் மேலான பயனைக் கொடுக்கக்கூடியவராக அறிகின்ருர்கள் உம்முடைய சேவகர்கள் ".

स्तोत्रेणालमहं प्रवच्मि न मृषा देवा विरिञ्च्यादयः
स्तुत्यानां गणनाप्रसङ्गसमये त्वामग्रगण्यं विदुः ।
माहात्म्याग्रविचारणप्रकरणे धानातुषस्तोमव-
द्धूतास्त्वां विदुरुत्तमोत्तमफलं शंभो भवत्सेवकाः ॥

மனிதன் என்ருல் மனம் உடையவன் ; நினைப்பவன் என்று பொருள். நினைப்பது இறைவன் திருவடியேயாகும். திருவருளிருந்தாலன்றி அவன் திருவடி நினைக்கும்பேறும் மனிதனுக்குக்கிடையாது.

— கயிலைக் குருமணி

"சிலப்பதிகாரத்தில் சிவன்"

செந்தமிழ்க்காவலர்
டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார் எம். ஏ., எம். எல். சி.,

சிலப்பதிகாரத்தில் தெய்வங்கள் சில பேசப்படுகின்றன. கனுத்திறம் உரைத்த காதையில் பல தெய்வங்களுக்கு அமைந்திருந்த கோயில்களைப்பற்றிக் குறிப்புக்கள் கிடைக்கின்றன. இந்திரன் கோயில், பலராமன் கோயில், சூரியன் கோயில், சந்திரன் கோயில், ஐராவதக் கோயில் முதலிய கோயில்கள் பேசப்படுகின்றன. அக்கோயில் களுக்கு மாலதி என்ற பெண்ணொருத்தி திடீரென்று இறந்த தன் மாற்றாள் குழந்தைக்கு உயிர்வேண்டிச் சென்றாள் என்பதும், அக்கோயில்களில் அவள் முறையிட்டும் இறந்த மகவின் உயிரை மீட்டுப்பெறாது வருந்தினாள் என்பதும் சொல்லப்பட்டுள்ளன. இந்திரனுக்குரிய கோயிலொன்று புகார்நகரத்தில் அமைந்திருந்ததாக இந்திரவிழவூ ரெடுத்த காதையில் கூறப்பட்டுளது. வச்சிரப்படை வழிபட்ட கோயிலிலிருந்து முரசினை எடுத்து யானைத்தலையின்மீது ஏற்றி, ஐராவதம் நின்ற கோயிலுக்குக் கொண்டுபோய் அவ்விடத்தில் விழாத்தொடக்கத்தை ஊருக்கு அறிவித்து, கற்பகமரம் நின்ற கோயிலிற் கொடியேற்றி இந்திர விழாக் கொண்டாடினர் என்பது அக்காதையால் அறியப்படு கின்றது.

அக்காதையில் கடவுளர் சிலர் போற்றப்பட்டுள்ளார்கள். இந்திர விழா நாட்களில் வழிபாடு நடந்த கோயில்களாகக் குறிப்பிடப்பட்டவற்றுள் சிவன் கோயிலும் முருகன் கோயிலும், திருமால் கோயிலும், இந்திரன் கோயிலும் சிறப்புடையன. இவற் றைப்பற்றிக் கூறலுற்ற இளங்கோவடிகள் சிவன் கோயிலை முதற்கண்வைத்துக் கூறியது குறிப்பிடத்தக்கது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

என்று அக்கோயில்களின் வரிசை காணப்படுகின்றது. இவ்விடத்தில் முதற்கண் சிவபெருமான் கோயில் சொல்லப்பட்டுளது என்பதும், சிவன் "பெரியோன்" என்று சொல்லப்பட்டிருக்கிறான் என்பதும், அவன் பிறவாதயாக்கை உடையவன் என விதந்து ஓதப்பட்டிருக்கிறான் என்பதும் குறிப்பிடத்தக்கவை.

மற்ருேரிடத்தில் இளங்கோவடிகள் சிவபெருமானுடைய கோயிலை முன்னர் வைத்துப் பின்னரே கடவுளர்பிறர் கோயிலைப்பற்றிக் கூறியுள்ளார் என்பது அறியத் தக்கது. மதுரைக்காண்டத்தில் வரும் ஊர்காண் காதையில், மதுரையில் அமைந்திருந்த கோயில்களைப்பற்றிச் சொல்லவந்த இளங்கோவடிகள் சிவபெருமான் கோயிலையும், திருமால் கோயிலையும், பலராமன் கோயிலையும், முருகன் கோயிலையும் குறிப்பிட்டுள்ளார்.

" நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும் '

என்றவாறு இவ்வரிசை காணப்படுகிறது. இதனுள்ளும் சிவபெருமான் முதலிடத்தில் வைத்து ஓதப்பட்டுள்ளார் என்பது எடுத்துக்காட்டத்தக்கது. " நுதல்விழி நாட்டத்து இறையோன் " என்பது சிவனையே குறிப்பது. எனினும், நெற்றியில் அமைந்த விழி நாட்டத்தையுடைய சிவன் என்று பொதுவாகப் பொருள்கொண்டு நெற்றியில் மூன்ருவது கண்ணையுடைய சிவபெருமான் என்று பொருள் கூறுவது வழக்கம். ஆனல், அடியார்க்குநல்லாராகிய உரையாசிரியர் இச்சாதாரணப் பொருளுக்குமேல் ஒருபடி சென்று பொருள்கண்டுள்ளார். அதனல், இறைவி கண்ணைப் பொத்திய பொழுது நெற்றியிற் புறப்படவிட்ட கண்ணையுடைய இறைவன் என்று பொருளெழுதினர். மற்றையோர் " விழியாகிய நாட்டம் " என்று பண்புத்தொகைப் பொருள்கொள்வார்களாக; இவரோ " விழிக்க விடப்பட்ட நாட்டம் " என வினைத்தொகைப் பொருள் கொண்டார். எவ்வாருயினும், சிவபெருமானுக்கு இவ்விடத்தில் முதலிடம் தந்து இளங்கோவடிகள் பேசியுள்ளார் என்பது பெறப்படும். இவற்ருல் அறியப்படுவது என்னவென்ருல், சிலப்பதிகார காலத்தில் புகார்நகரத்திலும் மதுரையம்பதியிலும் சிவபெருமானுக்கு முதலிடம் தந்து வழிபட்ட மக்கள் பலர் என்பது.

ஆய்ச்சியர் குரவையில் திருமாலின் சிறப்புக்களைப்பற்றித் திருமால் அடியவர்கள் எடுத்தியம்பி மகிழ்தலைப்போலப் பலபாடல்கள் இளங்கோவடிகள் இயற்றியுள்ளார். அவ்வாறே, வஞ்சிக்காண்டத்திலுள்ள குன்றக்குரவையில் முருகன் அடியவர்கள் முருகக் கடவுளை எவ்வாறு போற்றிப் பரவினர்கள் என்பதை அழகுபட எடுத்துக்காட்டியுள்ளார். அன்றியும் மதுரைக்காண்டத்து வேட்டுவவரியில் ஐயையாகிய கொற்றவைக் கோயிலில் வேட்டுவர்கள் துர்க்கைக்கு எடுத்த வழிபாட்டினையும் தெளிவுபட எடுத்துச் சொல்லியுள்ளார். எக்கடவுளும் தக்க கடவுளே என்ற பொதுமையுணர்ச்சி இளங்கோவடிகளுக்கு உண்டென்பது இவற்ருல் அறியப்படும்.

சிவபெருமானுக்கு உரியவளாக மதிக்கப்படும் கொற்றவையென்னும் துர்க்கை சிவபெருமான் செய்த செயல்களையெல்லாம் செய்தவளாக வைத்து மதிக்கப்பட்டிருக் கிருள் என்பது வேட்டுவ வரிப் பாடல்களால் விளங்கும். அதனுல்தான், சிவபெருமான் நஞ்சுண்டதாகச் சொல்லப்படும் செய்தியைக் கொற்றவைக்கு ஏற்றிக் கூறியுள்ளார்.

'' விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய் ''

என்று கவிஞர் கூறிய நயம் வியக்கத்தக்கது. '' விண்ணோர்கள் அமுது உண்டார்கள் : நீயோ அமுது உண்ணவில்லை. அமுது உண்டவர்கள் உயிரோடிருப்பது எதிர் பார்க்கப்படுவது ; நஞ்சுண்டவர்கள் மாய்வதும் எதிர்பார்க்கப்படுவது ; விண்ணோர் நஞ்சுண்ணவில்லை ஆயினும் இறந்துபட்டார்கள் ; நீயோ நஞ்சுண்டும் உயிரோடிருக் கின்ருய். உயிரோடிருப்பது மாத்திரமல்லாமல் மற்றையோர்க்கு அருள் சுரக்கின்ருய். உன்னுடைய பெருமை இருந்தவாறு என்னே !'' என்று பொருள்செய்யக்கூடிய வகையில் இவ்விரண்டு அடிகளை எத்துணைத் திட்பமாகவும் நுட்பமாகவும் இளங் கோவடிகள் அமைத்துள்ளார் என்று எண்ணி இன்புறுதிருத்தல் ஆகாது.

சிவபெருமானுடைய பெருமையைக் கொற்றவைக்கு ஏற்றிக் கூறுகின்ற அளவில் இளங்கோவடிகள் நின்ருரல்லர். கொற்றவை மூவர்கட்கும் உரியவள் என்பதுபோலவும், முடிவில் மூவரும் ஒருவரே என்பதுபோலவும், மும்மூர்த்திகள் என்று பேசுவதெல்லாம் மூவர்க்கும் முதலாய் மூவருள் ஒருவராய் யாவர்க்கும் தலைவ ராய் உள்ள கடவுள் ஒருவரே என்பதை இன்னும் அறிந்திலாதார் கூறும் கூற்று என்பது போலவும் ; இளங்கோவடிகள் இயம்பியுள்ளார் என்பது எடுத்துக்காட்டத் தக்கது. கையிற் சங்கும் சக்கரமும் ஏந்திக் கொற்றவை உள்ளாள் என்று கூறுகின்ற அப்பாடலிலேயே அவள் இடபத்தின்மீதேறி நிற்கிருள் என்று கூறியுள்ளார். ஆதலின், சிவனும் திருமாலும் ஒருவரே என்பது குறிப்பிடப்பட்டது. மூவரும் ஒருவரே என்ற கருத்தினை வற்புறுத்த விரும்பிப்போலும் அரி என்றும் அரன் என்றும் பிரமன் என்றும் சொல்லப்படும் கடவுளருடைய நெஞ்சத் தாமரைமீது கொற்றவை பெருஞ் சோதியாக விளங்கியுள்ளாள் என்று கூறியுள்ளார்.

'' அரியரன்பூ மேலோன் அகமலர்மேல் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய் ''

என்று அவர் கூறியுள்ள இடத்தில் அவரது பொதுமையுணர்ச்சி தெள்ளிதின் புலனுகிறது. மூவரும் ஒருவரே என்று கொண்ட கருத்தினுலன்ரே, அம்மூவரது நெஞ்சகத் தாமரையில் துர்க்கை வீற்றிருக்கிருள் எனப் பொதுப்படச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இளங்கோவடிகளது சமயம் இன்னதென்பது தெளிவுபட இன்னும் நிறுவப் படவில்லை. எனினும், இளங்கோவடிகளின் தந்தை சைவன் என்பதும், தமையனாகிய செங்குட்டுவன் சைவன் என்பதும் சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றன.

" செஞ்சடை வானவன் அருளினில் விளங்கி
வஞ்சித் தோன்றிய வானவ கேளாய் "

என்று விசும்பியங்கும் முனிவர்கள் செங்குட்டுவனைப் பார்த்துக் கூறியதாக ஓரிடம் வஞ்சிக்காண்டத்தில் வருகிறது. இவ்விடத்தில் சிவபெருமான் அருளினால் வஞ்சிமா நகரின்கண் செங்குட்டுவன் தோன்றினான் எனக் கூறப்படுவதுகொண்டு செங்குட்டு வனது தந்தை சைவனாக இருந்திருத்தல் கூடும் என்பது ஊகிக்கப்படுகிறது. செங்குட்டுவன் சிவபெருமானுக்குப் பெருமதிப்புத் தந்தவன் என்பது கால்கோள் காதையில் வருகின்ற ஒரு செய்தியினால் விளங்குகின்றது. அவன் வடநாட்டு அரசரை வெல்லும் நோக்கத்துடன் புறப்பட்ட வேளையில், வஞ்சிமாநகரத்தை விட்டு நீங்கு கின்றவன் சில கோயில்கள் வழியே சென்றான். சிவபெருமான்கோயில் வழியே சென்றவன் அப்பெருமானது சேவடியிற் சேர்க்கப்பட்டிருந்த மலர்களைப் பெற்று மணிமுடிமேல் வைத்துக்கொண்டான் என்றும், திருமாலவன் கோயிலிற் கொடுக்கப் பட்ட சேடத்தை வாங்கித் தோளில் வைத்துக்கொண்டான் என்றும் இளங்கோவடிகள் கூறியுள்ளார். பிறருக்கு வணங்காத தலையினால் சிவபெருமானைச் செங்குட்டுவன் வணங்கினான் என்பதும் சொல்லப்பட்டுள்ளது. " இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி " என்று இச்செய்தியினைக் கவிஞர் கூறியுள்ளார்.

" தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
தாங்கினன் ஆகித் தகைமையிற் செல்வுழி "

என்று வருகின்ற இடத்திற் செஞ்சடைக் கடவுள் எனக் கூறப்பட்டவர் சிவபெருமான் என்பதில் ஐயப்பாடில்லை. அவரது சேவடியைத் தன் மணிமுடியில் முன்னரே வைத்துக்கொண்டுள்ளான் ஆதலின், ஆடகமாடத்தில் (திருவனந்தபுரத்தில்) அறி துயிலில் அமர்ந்தோனாகிய திருமாலது பிரசாதத்தை வாங்கித் தன் புயத்தில் வைத்துக் கொண்டான் என்பதுதான் இங்கே சொல்லப்பட்டுள்ளது. அதனால், செங்குட்டு வனுடைய சிந்தைக்கினிய கடவுளாகச் சிவபெருமான் இருந்தார் என்பது தெளிவு. மேலும், கண்ணகிக்கு எடுத்த கோயிலில் அவளது சிலையை வைத்து வழிபாடு வகுக்கும் வேளையில், நடுகல்லிற்குக் கடவுள்மங்கலம் செய்தற்கு முன்னால் தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமானைச் செங்குட்டுவன் வணங்கினான் என்பது சொல்லப் பட்டுள்ளது.

" இமையவர் உறையும் இமையச் செவ்வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசி "

என்று வந்துள்ள அடிகளில் " சிவபெருமானை வணங்கி " என்பது கூறப்பட்டுள்ளது. அவ்வழிபாட்டிற்குப் பிறகுதான் கண்ணகியின் படிமத்துக்கு அணிகலன்கள் பூட்டப் பட்டு அர்ச்சனை செய்யப்பட்டதென்பது தெளிவு.

இவைபோன்ற செய்திகள் சிலப்பதிகார காலத்திற் சிவபெருமானுக்கு இருந்த உயர்மதிப்பினை நிறுவ உதவுவன.

உயிர்கள் வாழ்வதற்காகவே உலகம் ஆக்கப்பெற்றது என்பது எவர்க்கும் புலனாகும். உலகம் தானே தோன்றியது அன்று. உலகம் அறிவில்லாதது; சடப்பொருளாகும். அதனால், அவ்வறிவில்லாத வொன்று ஆவதும் இருப்பதும் அழிவதும் உடையது. அது ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் படுவது. ஆதலால் உயிர்களாகிய நம்முடைய தேவைக்குத் தக்கவாறு இப்படி ஆக்க, காக்க, அழிக்க வல்ல ஒரு தலைவன் இருக்கத்தானே வேண்டும்? அவனே கடவுள்.

— கயிலைக் குருமணி

சிவஞானசித்தியார்

தருமையாதீனப்புலவர்
வித்துவான். சி. அருணைவடிவேலு முதலியார்

'உலகின்பம், வீட்டின்பம்' என மக்கள் அடையும் இன்பம் இரண்டு. அவற்றுள் உலகின்பம் துன்பத்தொடு விரவி, நில்லாது பெயரும் சிறுமையுடையது; வீட்டின்பம் அவ்வாறின்றி எஞ்ஞான்றும் நீங்காது நிற்கும் பெருமையுடையது. இவை இரண்டனையும் உணர்த்தும் நூல்கள் முறையே 'உலகநூல்' எனவும், 'மெய்ந்நூல்' எனவும் சொல்லப்படும். உலக இன்பத்தினும் வீட்டின்பமே சிறந்ததாகலின், உலக நூலினும் மெய்ந்நூலே சிறந்ததாகும். அத்தகைய மெய்ந்நூல்களுள் சிறந்த தனிப் பெருநூல் சிவஞானசித்தியார்.

'சிவஞானசித்தி' என்பதே இதன் பெயராயினும், 'திருக்கோவையார், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார்' என்பனபோல, உயர்திணைப் பன்மைக்குரிய 'ஆர்' என்னும் விகுதி சேர்த்து, 'சிவஞானசித்தியார்' என வழங்கப்பட்டுவருதலே இதன் உயர்வை விளக்கும். இன்னும் 'சிவத்திற்குமேல் தெய்வமில்லை; சித்திக்குமேல் நூலில்லை' என வழங்கும் பழமொழியாலும், "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே - ஓர்விருத்தப் பாதிபோதும்" என்னும் சிவபோகசார வெண்பாப் பகுதியாலும் இதன் பெருமை தெளியப்படும். இதுபற்றியே பழைய வெண்பா ஒன்று, தமிழ் மொழியிலுள்ள சிறந்த நூல்களையும், உரையையும் வரையறுக்கப் புகுந்து,

> "வள்ளுவர்நூல் அன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே
> தெள்ளுபரி மேலழகன் செய்தஉரை — ஒள்ளியசீர்த்
> தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
> தண்டமிழின் மேலாந் தரம்"

எனக் கூறிற்று. இவ்வெண்பாவினாலே, எல்லா நூல்களையுங்கற்று முடிவில் சிவஞான சித்தியைக் கற்குமிடத்தே தமிழ்ப் புலமை நிரம்புகின்றது என்பதும் பெறப்படும்.

'முதல்நூல், வழிநூல், சார்புநூல்' என்னும் மூவகை நூலுள், சிவஞான சித்தி வழிநூல் வகையைச் சார்ந்தது. இதன் முதல்நூல், இதன் ஆசிரியராகிய அருணந்தி சிவாசாரியர்க்கு ஆசிரியரும், சைவ சந்தான முதற்குரவரும் ஆகிய மெய்கண்டதேவ நாயனார் அருளிச்செய்த சிவஞானபோதம். அது, நூலின் இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாய், பன்னிரண்டே சூத்திரங்களை உடையதாய், மிகவும் சுருங்கித் திட்பநுட்பங்களைப் பெரிதுங்கொண்டுள்ளது. அதனால், பேரறிவாளராகிய ஒரு சிலர்க்கே அது பெரிதும் பயன்படுவதாகின்றது. ஆதலின், அதன் பொருளை

யாவரும் இனிதுணருமாறு விருத்தப்பாவினுல் எளிய நடையில் விரித்தல் யாப்பாற் செய்யப்பட்டது சிவஞானசித்தி. இதனுல், 'முதல்நூல்' என்னும் முறையிற் சிவஞான போதம் சிறப்புடையதேயாயினும், பயன்படும் முறையில் சிவஞானசித்தி சிறந்து விளங்குகின்றது.

மெய்கண்டநூல் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரிய நூலாகிய சிவஞான சித்தியார், 'பரபக்கம், சுபக்கம்' என்னும் இருபெரும் பிரிவுகளையுடையது. இப் பிரிவுகள் இரண்டும் இருபெருநூல்களாந் தன்மையையும் உடையன. அதனுல், ஒவ்வொன்றன் தொடக்கத்திலும், 'மங்கல வாழ்த்து, நூல் வழி, அவையடக்கம்' முதலியன கூறப்பட்டுள்ளன. பரபக்கம் முந்நூற்ளெரு செய்யுட்களையும், சுபக்கம் முந்நூற்றிருபத்தெட்டுச் செய்யுட்களையும் உடையன.

பரபக்கம் பிற சமயங்களை, மதமும் மறுதலையுமாக வைத்து மறுக்கின்றது. 'மதம்' என்னும் பகுதியுள், அந்தச் சமயத்தின் கொள்கைகள் அதிற் சொல்லப்படும் முறையிலே சொல்லப்படுகின்றன. 'மறுதலை' என்னும் பகுதியுள் அக்கொள்கைகள் தருக்க முறையில் தக்கவாற்ருன் மறுக்கப்படுகின்றன. இப்பைரபக்கப் பகுதி மறுப்பு நூலாய் அமைதலின், இதன்கண், நகைச்சுவை முதலிய இலக்கியச் சுவைகளோடு கூடிய பலவகைச் சந்தங்களால் அமைந்த பாடல்களைக் காணலாம்; எடுத்துக்காட்டாக,

உலகாயத மதங்கூறுமிடத்து, உலகாயதன் வருகையை, 'மகளிர் இன்பமே வீட்டின்பம்' எனக்கொண்ட அவன் கொள்கைக்கு ஏற்ப, "சந்தனை புயத்து மணமாலைகள் தயங்க - உந்தி உலகத்தில் உலகாயதன் உரைப்பான்" என வருணிக்கின்ருர் ஆசிரியர். அதனுள், 'மணமாலைகள்' என்பது 'வாசனை பொருந்திய மாலைகள்' எனப் பொருள் தரினும், 'பல மகளிர் சூட்டிய பல மணமாலைகள்' என்னும் நயத்தையும், 'உந்தி' என்பது, 'உரைப்பான்' என்பதனேடு இயைந்து "முற்பட்டு வந்து கூறுவானுயினன்' எனப் பொருள்தரினும், 'உந்தி யுலகத்தில் உலகாயதன்' என்று இயைந்து, மகளிரது 'உந்தி யுலகத்தில் மூழ்கிக்கிடக்கும் உலகாயதன்' என்னும் நயத்தையும் தந்து நகைவிளைத்தலைக் காணலாம். இன்னும் அப்பகுதியுள், அவன் கூறுங்கூற்ருக,

"வாழவே வல்லை வாமி வலக்கைதா; என்னு யிர்க்குத்
தோழன்நீர் உன்னை ஒப்பார் சோல்லிடின் இல்லை கண்டாய்!
கோழைமா னுடர்தீ தென்னுங் கோலைகள வாதி கோண்டே.
சூழும்வார் குழலார் மோய்ப்பச் சுடரேனத் தோன்றினுயே'

என்னும் செய்யுள் அறிஞர்கட்குப் பெருநகை விளைப்பதாகும். மற்றும் அதன்கண் இவ்வாறமைந்துள்ள பாடல்கள் பல.

இனி, மாயாவாதி மத மறுதலைக்கண், 'நானே பிரமம்' என்னும் கொள்கையின் மறுப்புக்குத் தோற்றுவாய் செய்துகொள்ளுமிடத்து, 'உயிரே கடவுள் எனின், பாச பந்தமும், அதனின்றும் விடுதலையடையச் செய்தற்குரிய சாதனங்களும், அச் சாதனங்களாற் பெறும் பயனும் அவ்வுயிர்க்கு வேண்டாவாய் முடியுமாதலின், அங்ஙனங் கூறுதல் பொருந்தாது' என்னுங் கருத்தினையுடைய,

" ஏகம் நானென இயம்பி இப்படி அறிந்து முத்தியடை மின்னேனும்
மோக மானஉரை சோகம்; இன்போடு முடிந்தி டாது.மல டாகிய
காக மானது கருங்க லின்தசை பறித்த மூங்கரிய குஞ்சுதன்
தாக மார்பசி தணிக்க வாயிடை கொடுத்த தென்றுரைசெய் தன்மையே "

என்னும் செய்யுள், எள்ளல் பற்றித் தோன்றும் நகைச்சுவையினை நன்கு விளக்குகின்றது. 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்னும் மகாவாக்கியத்திற்கு ஒரு ஞானசிரியன், 'உயிரே கடவுள்' என விளக்கங்கூறி உபதேசித்துத் தன் மாணக்கர்களை ஈடேற்ற நினைப்பின், அதனால் உபதேசம் செய்பவனும், அதனைப் பெறுபவனும் வேறு வேறு இல்லையாகப் பயனும் இல்லையாய் முடியும். முடியவே, வறியான் ஒருவன் முயன்று பொருள்தேடிச் செல்வனாகமாட்டாது, 'நானே செல்வமுடையேன்; செல்வமுடையார் என்னின் வேறில்லை' என்று எண்ணி வறுமைத் துன்பத்தையே செல்வத்தாற் பெறும் இன்பமாக நுகரும் முறைமைபோலப் பந்தத்தையே வீடாகப் பற்றிக்கிடக்கும் நிலையே உண்டாவதாகும் என்பது இச்செய்யுளின் பொருள். இவ்வாறே பரபக்கத்துட் காணப்படும் செய்யுட்கள் பற்பல.

சுபக்கம் தன் கொள்கையை விளக்குவதாகலின், அதன்கண் ஆழ்ந்தும் அகன்றும் உள்ள பொருள்கள் மல்கிக்கிடக்கின்றன. செய்யுட்களும் ஆற்றொழுக்குப் போலத் தொடர்ந்து ஒரேவகையான சந்தத்தில் அமைதியாகச் செல்கின்றன. மங்கல வாழ்த்தைத் தவிர்த்து, அடுத்த செய்யுள் முதல் இருநூற்றைம்பத்தொரு செய்யுட்கள் ஒரேவகையான அறுசீர் விருத்தங்களாய் உள்ளன. அளவையியலுள் ஒரு சில செய்யுட்களும், இடையில் ஒரு செய்யுளும் இசை சிறிது வேறுபட்ட அறுசீர் விருத்தங்களாகும். இருநூற்றைம்பத்திரண்டு செய்யுட்களுக்குப் பின்னுள்ளன யாவும் எண்சீர் விருத்தங்களே. இங்ஙனம் இறுதிப்பகுதியை எண்சீர் விருத்தங்களாகக்கொண்டு இயற்றியது அப்பகுதியிற் கூறப்படும் பொருள்கள் முன்னர்க் கூறிவந்த பொருள்களினும் சிறப்புடையனவாதல் பற்றியேயாம். "ஓர் விருத்தப்பாதிபோதும்" எனச் சிவபோக சாரத்துட் கூறப்பட்டது, இவ்வெண்சீர் விருத்தங்களின் ஒன்றாகிய, "அறியாமை அறிவகற்றி" என்னும் விருத்தமே எனக் கூறுதல் மரபு.

சுபக்கத்தின் தொடக்கத்தில், 'அளவை யியல்' என்னும் ஒரு பகுதியை அமைத்துள்ளார் ஆசிரியர். அது, சைவ சித்தாந்தத்தின் அளவை முறையை நன்குணரப் பெரிதும் பயன்படுவதாகும். 'வைசேடிகம், நையாயிகம்' என்னும் வடமொழி

இருவகைத் தருக்க நூல்களைப் பல்யாண்டு வருந்திக் கற்றுணரவேண்டுவனவற்றை இப் பகுதியால் மிக எளிதில் உணரலாகும். அன்றியும் தருக்கநூலின் சில பொருந்தாக் கொள்கைகளைப் பொருந்துவனவாகக் கொள்ளும் மயக்கவுணர்வும் இதனால் நீங்குவதாகும். இப்பகுதி, சிவஞான போதத்தின் முதல் இயலாகிய பிரமாண இயலின் பொருளை நன்குணர்தற்குக் கருவியாகச் செய்யப்பட்டது.

இதற்குப் பின்னர், முதல்நூலின் பொருளை முறையாக விளக்கத் தொடங்கி, அந்நூலின் ஒவ்வொரு சூத்திரப் பொருளை ஒவ்வோர் அத்தியாயமாகக் கொண்டு, அவ்வத்தியாயங்கட்கு, 'முதற்சூத்திரம், இரண்டாம் சூத்திரம்' என்பன முதலாகவே பெயரிட்டுப் பன்னிரண்டு அத்தியாயங்களால் அதனை முடிக்கின்றது. சூத்திரம் என்பது இதன்கண் இருமடியாகுபெயராய், முதற்கண் சூத்திரப் பொருளையும், பின்னர் அதனை விளக்கும் அத்தியாயத்தினையும் குறிக்கும்.

ஒவ்வோர் அத்தியாயத்திலும் முதற் செய்யுள், முதல்நூற் சூத்திரப்பொருள் அதில் உள்ளவாறே விருத்தயாப்பாற் சொல்லப்பட்டுப் பின்னர் விரிவான விளக்கங்கள் தடைவிடை முறையிற் கூறப்படுகின்றன. விளக்கங்கள், முதல் நூல் வார்த்திகத்துள் கண்ணழித்துரைத்தவாறே பல கூறுகளாக (அதிகரணங்களாக)ப் பகுத்துக்கொண்டு தரப்படுகின்றன.

இந்நூல், பரபக்கத்துள் பிறசமயங்களின் கொள்கைகளுக்குத் தான் தடைபல நிகழ்த்தியும், சுபக்கத்துள் தன் கொள்கைக்குப் பிறசமயத்தார் நிகழ்த்தும் தடைகளுக்குத் தான் தக்க விடைகளைக் கூறியும் செல்லுதலால், சில பொருள்கள் இரண்டிடத்திலும் ஒப்பக்காணப்படும். அவ்வாறு காணப்படினும் அவை ஆங்காங்கு வேறு வேறு போக்கிலும், நோக்கிலும் அமைந்துள்ளன என்க.

சிவஞானசித்தி வழிநூலாதலின், அதற்கேற்ற இயல்புகள் சிலவற்றைப் பெற்றுள்ளது. அஃதாவது, வழிநூல் முதல்நூற் பொருளையே விளக்குவதாயினும், காலத்திற்கு ஏற்பச் சில வேறுபாடுகளும் அதன்கண் சேர்த்துக் கூறப்படும் என்பது வழிநூற்கு இலக்கணமாக இலக்கண நூல்களுட் கூறப்படுகின்றது. அவ்வாறே இது, முதல்நூற் பொருளை விளக்குமிடத்து, அதனை வேறொரு நோக்கில் வைத்து விளக்குகின்றது.

சிவஞானபோதம், சைவசித்தாந்த உண்மைகளைச் சிவாநுபூதியைக் கூறும் முறையிலேயே கூறுகின்றது. அந்நூல் அநுபூதியையே பொருளாகக் கொண்டு எழுந்தது என்பது அவையடக்கச் செய்யுளில் "தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார் - எம்மை யுடைமை எமையிகழார்" எனச் சிவத்தைத் தலைப்பட்டுணரும் சிவாநுபூதிச் செல்வரையே தனது நெறிக்குத் தலைவராகக் குறித்தமையால் நன்கு பெறப்பட்டது. படவே, அதனுட் சிலசில ஆசங்கைகளை உட்கொண்டு கூறப்பட்ட

பகுதிகள் அவ்வநுபவம் வாய்க்கப்பெருது, தாம் தாம் தம் அறிவுகொண்டு அறிந்த வாற்ருற் கூறும் பொருள்கள் பொருந்தாமை காட்டும் நோக்கத்தோடே கூறப்பட்டன என்பது விளங்கும்.

அப்பொருளைச் சிவஞானசித்தி அக்காலத்துச் சமயவாதிகள் தம் தம் சமயங் களைக் கூறும் முறையுட்படுத்து விளக்குகின்றது. அக்காலத்துச் சமயவாதிகள் தம் தம் சமயத்தை 'இறைவனுவான் இவன்; அவனுல் இயம்பப்பட்ட நூல் இது; அதனுட் கூறப்பட்ட சமய ஒழுக்கங்கள் இவை; அவற்ருல் அடையப்படும் வீடு இன்னது' எனப் பகுத்து அவற்றைத் தாம் தாம் கொண்ட அளவை முறையால் விளக்கிப் பிறசமயக் கொள்கைகளை மறுத்து, தம் சமயக்கொள்கைகளை நிலைநாட்டுவர். அதனுல் இந்நூலாசிரியரும் சைவசித்தாந்தத்தினை அம்முறையிலேயே நாட்டுவா ராயினர். அஃது "இறைவனையும் இறைவனுல் இயம்பும் நூலும் - ஈண்டளவும் பொருளியல்பும் வேண்டும் செய்தி - முறைமைகளும் பெத்தமொடு முத்தி எல்லாம்...... துகள்தீர இந்நூலிற் சொல்லகிற்பாம்" என்னும் பரபக்கச் செய்யுளால் அறியப் படும். சிவஞானபோதநூலுள் இம்முறையாயினும், ஏதாவதொரு நூலாயினும் யாண்டும் கூறப்படாமை குறிக்கொண்டு நோக்கத்தக்கது.

அருளாசிரியர்கள் அநுபவமுறையாற் கூறப்படும் பொருள்கள் எஞ்ஞான்றும் ஒருபடியவாய்த் திரிபின்றி நின்று நிலவும். அவற்றை எவையேனும் சில நூல்மேல் வைத்துக் கூறுதல் காலவேறுபட்டால் வேறுபடும். ஆயினும், காலத்திற்கு ஏற்பக் குறிப்பிட்ட நூல்மேல் வைத்துக் கூறும் முறையே பலர்க்குப் பயன்படுவதாம். அநுபவ முறையாற் கூறுதலைத் தெளிதல் ஒருசிலர்க்கே கூடுவதாம். என்னையெனின் பிற சமய வாதிகள் மேற்கூறிய முறையில் தம் சமயங்களைப் பகட்டாகக் கூறி வாதிக்கும் முறையின் முன் அநுபவத்தாற் சுருக்கமாக உபதேச முறையிற் கூறும் சொற்களை அவற்றின் பெருமையறிந்து கைக்கொள்ளுதல் மக்களில் பலர்க்குக் கூடாதென்க.

இவ்வாற்ருல், இந்நூல் சைவசித்தாந்தத்தினைச் சமயநூல் முறையில், தந்துரைக்கவேண்டுவன பலவற்றையும் தந்து விரித்துரைக்கின்றது. அதனுல், இது, பிற சமயங்கள் பற்றி நிகழும் ஆசங்கைகளை நீக்கிச் செல்லுதலோடு, வேத சிவாகமங் களின் பொருள்பற்றி எழும் ஐயப்பாடுகளையும் நீக்கித் தெளிவிக்கின்றது. சிறப்பாகச் சைவசித்தாந்தத்திற்கு உரியநூல் சிவாகமங்களே எனக் கூறுமாற்ருல், இது சிவாகமப் பொருளைப் பலவிடத்தும் தந்துரைக்கின்றது. இதுபற்றியே, சிவஞானமுனிவரர் இந்நூலை 'சிவாகமங்களுக்கெல்லாம் உரையாணி' எனச் சிறந்தெடுத்துப் பாராட்டினர். ஆகவே, சிவாகமப் பொருள்பற்றிய ஐயங்கட்கு இந்நூலின்கண் முடிவுகண்ட பின்னர், மீண்டும் அதுபற்றி ஆராய்தலும், வேறு முடிபு கூறுதலும் கூடா என்பது பெறப்படும்.

வேத சிவாகமங்களின் பொருள்பற்றி முடிபுகூறும் அவ்வகையிலும் இந்நூல் ஒரு தனி முதன்மை பெற்றுத் திகழ்கின்றது. அம்முடிபுகள் பிற இடங்களிற் காணப் படாத அருமையும் பெருமையும் உடையனவாம். எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் கூறலாம்.

"பண்டைமறைகளும் அதுநான் ஆனேன் என்று பாவிக்கச் சொல்லுவது இப் பாவகத்தைக் காணே" என்பது வேதப்பொருளின் விளக்கம். 'இப்பாவகம்' என்றது சிவோகம் பாவனையை. காட்சியளவைகளுள், 'தன் வேதனைக் காட்சி' என்பதொன்று பௌட்கரம் முதலிய ஆகமங்களிற் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. இன்றியமையாத அதனை இந்நூலே நமக்குத் தெரிவிக்கின்றது.

இறைவன், கொள்ளுகின்ற திருமேனிகள் சுத்தமாயா தேகமோ அருட்டிரு மேனியோ என்பது சிவாகமங்கள் மட்டில் உணர்ந்தவர்கட்கு ஐயப்பாடாகவே உள்ளது. அதனை இந்நூல், 'அவை அருட்டிருமேனிகளே' எனத் திட்டவட்டமாக அறுதியிட்டுக் கூறித் தெளிவிக்கின்றது. அச்செய்யுட்பகுதி, "மூன்றும் நந்தங் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே" என்பது.

'உருவம் இல்லாத ஒருவன் உருவங் கொள்வானுயின், உருவம் என்பன யாவும் காரியப்பாடுடையனவே யாகலின், அருட்டிருமேனியாயினும் அத்தன்மை யுடையதே யாதல் வேண்டும். அதனுல், இறைவன் கொள்ளும் திருமேனிகள் 'விருத்தி, பரிணமம், விவர்த்தனம் என்னும் காரியப்பாடுகளில் எந்தக் காரியப்பாட்டி னுல் உளவாகும்?' என்னும் ஆசங்கையை, 'இவையெல்லாம் மாயாகாரியங்களாகிய பொருட்கு உரிய விதிகள்: அவை, மாயையுட்படாதவனும், இன்ன பெற்றியை உடையவன் என வரையறுத்து உணரப்படாதவனும் ஆகிய இறைவன் தனது இச்சையால், வேண்டுங் காலத்து வேண்டியபடியே கொள்ளும் திருமேனிகட்குப் பொருந்தா; ஆதலின், இந்த ஆசங்கையே இறைவன் திருமேனிபற்றி நிகழ்தல் இல்லை; ஆசங்கை இல்லையாகவே, அதற்குச் சொல்லப்படும் விடையும் இல்லை' என இந்நூல் இனிது விளக்குகின்றது. இது, வேத சிவாகமங்களிலோ, பிறவிடங் களிலோ அறியப்படாத அரியதோர் உயர்ந்த முடிபு. அச்செய்யுட்களையும் ஈண்டுக் காண்டல் இன்றியமையாததாகும்.

"பந்தமும் வீடு மாய பதபதார்த் தங்க ளல்லான்
அந்தமும் ஆதி யில்லான் அளப்பிலன் ஆத லாலே
எந்தைதான் இன்ன னென்றும் இன்னதாம் இன்ன தாகி
வந்திடான் என்றும் சொல்ல வழக்கொடு மாற்று மின்றே"

"குறித்ததோன் ருக மாட்டாக் குறைவில ளுதலானும்
நேறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமையானும்
வேறுப்போடு விருப்புத் தன்பால் மேவுதல் இலாமை யானும்
நிறுத்திடும் நினைந்த மேனி நின்மலன் அருளி ஞலே."

இப் பகுதிக்குச் சிவஞானமுனிவரர், "எந்தையாரவர் எவ்வகை யார் கொலோ!" என்னும் திருஞானசம்பந்தரது திருவாக்கையே பிரமாணமாகக் காட்டுதலின், இக் கருத்துப் பிற இடங்களிற் சொல்லப்படவில்லை என்பது தெளிவு.

இன்னும் இச்சிவஞானசித்தி சாத்திரமேயாயினும் சில இடங்களில் தோத்திரங்களைப்போல ஓதுவார் உள்ளத்தை உருக்கிப் பத்தி வெள்ளத்திற் படியச் செய்வதாய் உள்ளது. அவ்விடங்கள், இறைவனது அருட்டிருமேனியின் அருமையை விளக்குமிடம், பிறவி நீங்கி இறைவன் திருவடியை அடைந்து உய்யும் வழியைக் கூறுமிடம் போல்வனவாம்.

மேலும் உயிர்க்கு உறுதிபயப்பனவாய், மக்கள் இன்றியமையாது உணரற்பாலனவாகிய சில அரிய உண்மைகளை இந்நூல் ஆராய்ச்சி முறையில் தெளிவுபட உணர்த்துகின்றது. அவை, 'நாம் செய்யுஞ் செயல்கள் யாவும் ஈசன் இடும் பணியே' எனவும், 'அவற்றை நம் செயல்களாக நாம் கருதுவதனாலேயே அவைகள் வினையாய் முடிகின்றன' எனவும், 'அங்ஙனம் நினையாது அவன் பணியாக அறிந்து நடப்பார்க்கே வினை நீங்குவதாம்' எனவும், 'வினைகள் பயன்தருவது இறைவனாலே' எனவும், 'அவ்விறைவன், வினையாற் பிணிக்கப்பட்டு மாயா தேகத்தினையடைதலும், நீங்குதலுமாகிய பிறப்பிறப்புக்களில் எவ்வாற்றானும் எஞ்ஞான்றும் விழாதவனே' எனவும், 'அவ்வாற்றான் அவ்விறைவனை உணர்ந்தோர் செய்யும் செயல்களே அறமும், உணராதார் செய்யும் செயல்கள் பாவமும் ஆம்' எனவும் மற்றும் இன்னோரன்னவாகக் கூறும் பொருள்களாம்.

இவ்வாறு இந்நூல் சைவசித்தாந்தத்தினை எம்மருங்கும் பற்றி ஆராய்ந்து விரித்துரைக்கும் தனிப்பெருநூலாய் இருத்தலின் சிவஞானபோதத்திற்குச் செய்யுள் வடிவில் அமைந்ததொரு மாபாடியம் என்றே இதனைக் கூறலாம். சிவஞானபோதத்திற்குச் சிற்றுரை பேருரைகளை வகுத்தருளிய ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகளும், சிவப்பிரகாசம் முதலிய பிற நூல்கள் பற்றி அவ்வுரைகளை உரைத்தருளினராயினும், இந்நூலையே சிறப்பாகக்கொண்டு அவற்றை உரைத்தருளினர் என்பது வெளிப்படை. இதனால் இந்நூலையின்றிச் சைவசித்தாந்தத்தினை உணர்தல் என்பது இயலாத தொன்றேயாம்.

'சிவஞானபோதம்' என்பது சிவஞானத்தைக் கேட்பிப்பது எனப் பொருள்படும். 'சிவஞானசித்தி' சிவஞானத்தைப் பெறுவிப்பது எனப்பொருள்படும். அப்பொருட்கேற்றவாறே இந்நூல் சிவஞானத்தை நன்குணர்த்துவதாய் உள்ளது. இதனைத் தருமை யாதீனம் உபதேச நூலாகக்கொண்டுள்ளது; தாயுமான அடிகளுக்கு மௌனகுரு அளித்த உபதேச நூலும் இச் சிவஞானசித்தி என்றே சொல்லப் படுகின்றது.

இதனைத் தருமையாதீனத்தில் வந்த குருமகாசந்நிதானங்கள் யாவரும் சிறந்தெடுத்துப்போற்றி உபதேசித்து வந்துள்ளனர். அவ்வகையில், இஞ்ஞான்று அவ்வாதீனத்தில் ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்து ஞானச்செங்கோல் ஓச்சிவரும் 25 ஆவது குருமகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சிறப்பிற் சிறப்பாக இந்நூலை, மற்றைய சித்தாந்த நூல்களோடு அச்சிடுவித்து உதவியும், 'ஞானசம்பந்தம்' என்னும் ஆதீனத்து மாத இதழ் வாயிலாகக் கட்டுரைகள் பல எழுதுவித்தும், வகுப்புக்கள் பல நடத்துவித்தும் பலவாறு பரப்பி வருகின்றார்கள். அவற்றால் பக்குவான்மாக்களாகிய பலர்க்குச் சிவஞானம் சித்தித்தல் உறுதி.

ஆகவே, சித்தாந்த ஞானத்திற்கு உரியார் அனைவரும், 'எங்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் நீடூழி வாழ்க! வாழ்க!! என்று வாழ்த்துதலோடு தங்கள் பெருவந்தனையையும் அவர்கள் திருவடிகட்குச் செலுத்திக்கொள்ளும் கடப்பாடுடையராவர். யானும் அவ்வண்ணமே வாழ்த்தி எனது பெருவந்தனையை அவர்கள் திருவடிகட்குச் செலுத்திக்கொள்ளுகின்றேன்.

அன்புருவாகிய ஆண்டவனைக்காட்டும் கருவி மொழி; அதிலும் அநுபவ மொழி; அதிலும் அனைவருக்கும் தன் பொருளைத் தயக்கமின்றி அறிவிக்கும் தாய்மொழி வாயிலாக, நமது தமிழ் நாட்டில் வாழ்ந்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் கடவுளைக் கண்டார்கள். தாம் அடைந்த அன்பு வெள்ளத்தை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப்பெருக வைத்திருக்கிறார்கள்.

— கயிலைக் குருமணி

பிராசாத சட்கம்

தருமையாதீனப் புலவர்
பாலகவி. திரு. வே. இராமநாதன் செட்டியார்.

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீன ஸ்தாபனுசாரியராகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகள் நாமுய்ய அருளிய ஞானநூல்கள் பலவற்றுள் "பிராசாத சட்க" மும் ஒன்று. இது "சோடச கலாப் பிராசாத சட்கம்" எனவும் "சோடச கலாப் பிராசாத விருத்தம்" எனவும் வழங்கப்பெறுகின்றது. வடமொழியிலுள்ள "பிராசாத சட்சுலோகி என்னும் நூலின் பொருளைத் தெளிவுபெற அமைத்து நமது ஆசிரியப் பெருந்தகையார் பிராசாத சட்கத்தை நமக்கு வழங்கியுள்ளார். இந்நூல் ஏழு திருவிருத்தங்களால் ஆகியது. என்ருலும் முதல் நூலை ஒட்டிச் "சட்கம்' என்ற பெயரையே தனக்குக்கொண்டு விளங்குகின்றது.

பிராசாதம் என்பது பிரா+சா+த என மூன்று சொற்களாகப் பிரித்துப் பொருள் கொள்ளப்பெறும். பிரா-சிவஞானம். சா-கதி. த-தருவது=சிவஞானமாகிய உயர்கதியைத் தருவது எனவும், பிரா-சிவம். சா-சத்தி. த-தருவது = சிவசக்தியைத் தருவது எனவும் சுத்தாக்கியை வாதுள சுத்தாக்கியை முதலிய நூல்கள் பிராசாதத்திற்குப் பொருள் கூறுகின்றன. இன்னும் "பிராசாதம்" என்னும் சொல் கோயில் என்னும் பொருளை யுடையதாய்ச் சிவன் வெளிப்படுத்துவதற்குரிய இடமாகிய கோயில் போன்ற மந்திரத்தையும் குறித்து நிற்கின்றது.

பிராசாதம் இருபது, பதினுறு, பன்னிரண்டு, பத்து, ஒன்பது, எட்டு, ஆறு, ஐந்து கலைகளையுடையதாய்க் கலா பேதங்களால் எட்டு வகைப்பட இருக்கும் பரமசிவ வாசகமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தின் பீசமாய் நிற்பதே பிராசாத மந்திரமாகும். இப்பிராசாத மந்திரசெபம் சிவயோக மார்க்கமாகிய சகமார்க்கமெனப்பெறும். இதனை,

"ஆதார சோதனை யா நாடி சுத்திகள்
மேதாதி யீரேண் கலந்தது விண்ணுேளி
போதா லயத்துட் புலன் கர ணம்புந்தி
சாதா ரணங்கெட லாஞ்சக மார்க்கமே"

என்னுந் திருமந்திரத்தாலறியலாம்.

"பிராசாதம் அறியாதவன் குருவல்லன்" என்றும், "பிராசாதம் அறியாதார் சிவனை அறியார்" என்றும், மாத்திரை, ஒளி, காரணேசுரர், பெயர், சூனியம், அங்குலம், அத்துவா, சத்தி, ஆகிருதியாகியவற்றுடன் பிராசாத கலையின் வியாத்தியை உணர்ந்தவனே முத்திபெறுதல் கூடும்" எனவும் சிவாகமங்கள் கூறுகின்றன.

''பிராசாத சிகையின் முடிவில் நின்று தீக்கை புரியும் ஆசிரியனே தன் சீடரோடு சிவ சாயுச்சியமடைவானென்பதைத் துவிசதிகாலோத்தரம் என்னும் ஆகமம்,

प्रासादाञ्ज शिखान्तस्थो यस्तु दीक्षां करोति वै ।
आचार्यः सह शिष्यैः स शिवसायुज्यमाप्नुयात् ॥

என்று கூறுகின்றது. சிவபூசை, பிரதிட்டை முதலியவற்றில் சிவபெருமானை ஆவாகனம் செய்வதற்குப் பிராசாதயோகநெறி பெரிதும் வேண்டப்பெறும். சிவசத்தி சொரூபமான பிராசாதம் பதிந்தவனுடைய மனத்தில் மலமாகிய இருள் நீங்கிவிடும். அதனால் அவன் ஞானசொரூபியாகவும் நித்திய முத்தனாகவும் இருப்பான். சிவபெரு மானை அறிவதற்கு அவருடைய சிற்சத்தியொன்றே துணையாயிருந்து உதவுவது. அச் சிற்சத்தி வடிவமே பிராசாதமென்பதும் அதற்கு ஒப்பும் உயர்வுமுள்ளதாகப் பிறிதெதுவுமில்லை யென்பதும் அறிந்துகொள்ள வேண்டியனவாம்.

சிவஞான ரூபமாகிய பிராசாத மந்திரம், சுத்தப்பிராசாதம், மூலப்பிராசாதம், தத்துவப்பிராசாதம், ஆதிப்பிராசாதம், ஆத்துமப்பிராசாதம் என ஐந்துவகைப்படும். நாதம் என்னும் பெயரையுடைய ஹகாரம் சுத்தப்பிராசாதமாகும். சுத்தம் என்பது எந்தக் குற்றமுமில்லாத சிவம். அதனால் சிவ பீசமாகிய ஹகாரம் சுத்தப் பிராசாத மாயிற்று. ஹ்ரௌம் என்பது மூலப்பிராசாதம். எல்லாத் தத்துவங்களுக்கும் சிவ பெருமானே மூலமாகையால் சிவமூலபீசமென்றும் இது சொல்லப்பெறும். இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய மூன்று காலங்களிலுமுள்ள எல்லாப் பொருள்களும் மூலப் பிராசாதத்திலிருந்தே தோன்றுகின்றன. பஞ்சபூத சம்பந்தமான அகாரமுதல் க்ஷகாரம்வரையுள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களும் சிவனாகிய ஹகாரத்திற்குப் புரியட்டக தேகமெனப்பெறும்.

ஹம் என்பது தத்துவப் பிராசாதம். ஹௌம் என்பது ஆதிப் பிராசாதம். ஹம்ஸ என்னும் இரண்டு எழுத்துக்களும் ஆத்மப்பிராசாதம். இதய நடுவிலிருக்கிற இம் மந்திரம் சிவப்பிராசாதம் எனவும் சொல்லப்பெறும். இன்னும் சுத்தப் பிராசாத மாகிய ஹகாரம் மற்ற எழுத்துக்களுடன் கூடித் தாந்திரியாங்கப் பிராசாதங்களாகவும், வைதிகாங்கப் பிராசாதங்களாகவும், சகளம், நிட்களம், கமலாங்கிதம், க்ஷவணம், அந்தஸ்தம் முதலிய பிராசாதங்களாகவும் வரும். சோடச கலைகளுடன் கூடிய பிராசாதம் கலாட்டியப் பிராசாதம் எனப் பெறும். இந்தப் பிராசாதமே நமது ஞானா சாரியப் பெருந்தகையாரால் பிராசாத சட்க நூலில் எடுத்து விளக்கப்பெற்றுள்ளது.

சோடச கலைகள் அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோமரூபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை, என்பனவாம். பிராசாதசட்க முதற்பாடலால் இச் சோடச கலைகளின் நிறங்களையும், இரண்டாம் பாடலால் இவற்றிற்குரிய தானங்களையும்,

அளவுகளையும், மூன்றும் பாடலால் இவற்றின் வடிவங்களையும், நான்காம் பாடலால் இக்கலைகளின் தேவதைகளையும், ஐந்தாம் பாடலால் இக்கலைகளில் மலங்கள் நிற்கும் நிலையையும், ஆறும் பாடலால் அம்மலங்கள் சோதனைப்படும் முறையையும், ஏழாம் பாடலால் கலைகளின் மாத்திரைகள் சூனியங்களையும் ஆசிரியர் விளக்கிக் கூறுகின்றார். சிவாகமங்களையும் பத்ததிகளையும் முறையாகப் பலகாலும் பயின்று பெறும் தெளிவை இப்பிராசாதசட்கப் பயிற்சியால் ஒருவன் மிக எளிதில் பெற்றுவிட முடியும். இனி ஆசிரியரது குறிப்பின்வழியேகலைகளைப்பற்றிய விளக்கத்திற்கருத்தைச்செலுத்துவோம்.

சோடச கலைகளுள் அகாரம், உகாரம், மகாரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம் ஆகிய எட்டுக் கலைகளும் நாபி, இருதயம், கண்டம், புருவமத்தி, நெற்றிநடு, நெற்றிமேல், உச்சி, உச்சியின்பின் ஆகிய இடங்களை ஆதாரங்களாகக் கொண்டு ஆதாரகலைகள் என்று அழைக்கப்பெறும். சத்தி, வியாபினி, வியோமரூபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை ஆகிய எட்டுக் கலைகளும் உச்சிக்குமேல் துவாதசாந்தம் வரையுள்ள இடங்களை ஆதாரங்களாகக்கொண்டு நிராதார கலைகள் என அழைக்கப்பெறும்.

முதற் கலையாகிய அகாரகலையைச் சார்ந்து, அதன் இடமாகிய நாபிக்குக் கீழே மூலாதாரம்வரை பன்னிரண்டு அங்குல இடம்பெறுவது 'கோஷகலை' எனப் பெறும். மூலாதாரத்தில் நான்கு இதழ்களையுடைய வெண்டாமரையின் நடுவில் ஓங்கார வடிவமாகப் பாம்புபோலிருக்கும் குண்டலினி சத்தியின் நடுவில் தாமரை நூல்போல உடம்பிலுள்ள எழுபத்திராயிரம் நாடிகளுக்கும் அடிப்படையா யிருக்கும் சுழுமுனநாடி மத்தியில் "ஹ்" என்னும் அசபாமனுத்தோன்றும். இதனையே "குண்டலி யதனிற் கூடிய வசபை" என்று விநாயகரகவல் கூறியது. இவ்வசபாமனு மெய் மாத்திரமாய் ஒலிக்கவொண்ணுததாய் மூலாதாரக் கோஷகலையில் தோன்றுவதனுலேயே அக் கலை, பின்வரும் அகாரகலையோடு உடன்கூட்டி ஒன்ருக்கிக் கொள்ளப் பெறுவதாயிற்று. அசபாமனு மின்னல்போன்ற வடிவுடன் நாபியடியளவாகக் காமிய மலத்தில் தாவரங்களாகிய பத்தொன்பது லட்சம் யோனி பேதங்களும் சோதனைப்படப் பொருந்தும். இக்கோஷகலைச் சிறப்பு,

"நாபிக்குங் கீழே பன்னிரண்டங் குலம்
தாபிக்கு மந்திரம் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரம் தன்னை யறிந்தபின்
கூவிக்கோண் டீசன் குடிபுகுந் தானே"

என்று திருமூலதேவ நாயனுரால் உணர்த்தப்பெறுகின்றது.

அகாரம், உகாரம் ஆகிய இரண்டு கலைகளும் நாபி, இருதயம் ஆகியவற்றை இடங்களாகக்கொண்டு நான்கு, எட்டு அங்குல அளவுகளில் பிரம, விஷ்ணுக்களைத் தேவதைகளாகப்பெற்று அக்கினிக் கொழுந்து சந்திர சூரிய ஒளி நிறங்களுடன் அகர,

உகர, வடிவு தாங்கிப் பிரகிருதி மாயையில் ஊர்வனவாகிய பதினைந்து லக்ஷம் யோனி பேதங்களும் சோதனைப்பட மூன்று, இரண்டு மாத்திரை அளவுகளிற் பொருந்தும்.

மகாரம், விந்துவாகிய இரண்டு கலைகளும் கண்டம், புருவமத்தி ஆகியவற்றை இடங்களாகக் கொண்டு, எவ்வெட்டு அங்குல அளவுகளில் உருத்திரன், மகேசுவரனைத் தேவதைகளாகப் பெற்று மின்னொளி, விளக்கொளியின் நிறங்களுடன் மகரம், விந்துத் துளி வடிவுதாங்கி, அசுத்தமாயையில் நீர்வாழ்வன பத்து லக்ஷம் யோனி பேதங்களும் சோதனைப்பட ஒன்று, அரை மாத்திரை அளவுகளிற் பொருந்தும்.

அர்த்தசந்திரன், நிரோதினி ஆகிய இரண்டு கலைகளும் நெற்றிநடு, நெற்றி மேற்பகுதி ஆகியவற்றை இடங்களாகக் கொண்டு, மும்மூன்று அங்குல அளவுகளில் சதாசிவத்தைத் தெய்வமாகப் பெற்று வாளொலி, புகை நிறங்களுடன் பாதிப்பிறை, மேல் மூலையான முக்கோணவடிவு தாங்கி, மாயேயத்தில் பறப்பனவாகிய பத்து லக்ஷம் யோனிபேதங்களும் சோதனைப்படக் கால் அரைக்கால் மாத்திரைகளிற் பொருந்தும்.

நாதம், நாதாந்தமாகிய இரண்டு கலைகளும் உச்சி, உச்சியின்பின் ஆகியவற்றை இடங்களாகக்கொண்டு, மும்மூன்று அங்குல அளவுகளில் சதாசிவத்தைத் தெய்வ மாகப் பெற்று மாணிக்கப்பிரபை, இருமின்னற்பிரபை நிறங்களுடன் நடுவிற் கலப்பை யோடு இருவிந்து, வலப்புற விந்துவோடு கலப்பை வடிவுதாங்கிச் சுத்தமாயையில் நாற்கால் விலங்குகளாகிய பத்து லக்ஷம் யோனிகளும் சோதனைப்பட மாகாணி அரைமா அரைக்காணி, மாத்திரைகளிற் பொருந்தும்.

சக்தி, வியாபினி ஆகிய இரண்டு கலைகளும் உச்சிக்குமேல் நந்நான்கு அங்குல அளவுகளில், ஆகதசிவத்தைத் தெய்வமாகப்பெற்று நூருயிரங்கோடி சூரிய உதய காலப்பிரபை, நூருயிரங்கோடி சூரிய வட்டப்பிரபை நிறங்களுடன் நடுவில் விந்துவோடு இருகலப்பை, முடியில் இருவிந்துவுடைய திரிசூல வடிவுதாங்கித் திரோத மலத்தில் மானிடர் ஒன்பதுலக்ஷம் யோனிபேதங்களும், சோதனைப்படக் காணியே முந்திரி அரைக்காணியுங் கீழரை மாத்திரைகளிற் பொருந்தும்.

வியோருமபினி, அநந்தை, அநாதை, அநாசிருதை, ஆகிய நான்கு கலைகளும், வியாபினியில் அடங்கி, மன மிறந்து தியானிக்கப்பெறும் இடத்தில், பரமசிவத்தைத் தெய்வமாகப்பெற்று ஞானகாயம், ஞானவாரி, ஞானக்கண்ணுடி, இலக்கம் கோடி பூர்ண சந்திரப்பிரபை நிறங்களுடன், நான்கு திக்குகளிலும் நான்கு விந்து வடிவம் தாங்கி முந்திரியுங் கீழ்க்கால், கீழரையே அரைக்கால் கீழ்க்காலே மாகாணி, கீழரைக் காலும் அரைவீசம் மாத்திரைகளிற் பொருந்தும்.

சமனை, உன்மனை ஆகிய இரண்டு கலைகளும் துவாதசாந்தத்தின்கீழ், துவாத சாந்தம் ஆகியவற்றை இடங்களாகக்கொண்டு மூன்று, ஒன்று அங்குல அளவுகளில், அநாகத சிவத்தைத் தெய்வமாகப்பெற்று இலக்கம்கோடி சூரிய வெயில், இருள் நிறங்களுடன் இருதண்டின்மேல் இருவிந்து, ஒருவிந்து வடிவுதாங்கி, ஆணவ மலத்தில் தேவர் பதினெருகலையும் பேதங்களும் சோதனைப்படக் கீழொருமா வரையே முந்திரி கீழ் முக்காணியும் இம்மி ஐந்தேகால் மாத்திரைகளிற் பொருந்தும்.

ஆதார கலைகளில் மகாரம், நிரோதினி கலைகளுக்கு மேலே, இரு சூனியங் களும் நிராதார கலைகளில் சக்தி, வியாபினி, சமனை, உன்மனை கலைகளுக்கு மேலே நான்கு சூனியங்களும் இருக்கும்.

அகார கலையோடு கூடிய ஹகாரம், பூதங்களாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ; தன்மாத்திரைகளாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ; கன் மேந்திரியங்களாகிய வாக்கு, பாதம், பாயு, உபத்தம் ; ஞானேந்திரியங்களாகிய சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் ; அந்தக்கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கோடு வியாபகராய பிர்மாவை, அதிகார முதல்வராகப் பெறும்.

உகார கலையோடு கூடிய ஹகாரம் புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம் என்னும் வித்தியாதத்துவங்கள் ஆறோடு வியாபகராகிய திருமாலையும், மகாரகலையோடு கூடிய ஹகாரம் மாயை என்னும் வித்தியா தத்துவத்தோடு வியாபகராகிய உருத்திரரையும், விந்து கலையோடு கூடிய ஹகாரம் சுத்த வித்தை, ஈச்சுரம் என்னும் சிவதத்துவங்கள் இரண்டோடு வியாபகராகிய மகேசுவரரையும், அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்த கலைகளோடு கூடிய ஹகாரம் சாதாக் கியம், சத்தி என்னும் சிவதத்துவங்கள் இரண்டோடு வியாபகராகிய சதாசிவத்தையும், இவற்றின் மேற்பட்ட நிராதார கலைகளோடு கூடிய ஹகாரம், சிவதத்துவாந்தத்தோடு வியாபகராகிய பரசிவத்தையும் அதிகார முதல்வர்களாகப் பெறும்.

மனித உடலினது உயர அளவு தொண்ணூற்றாறு அங்குலம். அதில், மூலா தாரத்தின் கீழுள்ள நாற்பத்தெட்டு அங்குலம் நீக்கி, மேலுள்ள நாற்பத்தெட்டு அங்குலங்களில், நாபியில் அகார கலைமுதல், பிரமரந்திரத்தில் நாதாந்தகலை வரை எட்டுக்கலைகளும் வியாபித்திருக்கும்.

மூலாதாரத்திற் குண்டலினி சத்தியிற் பிறந்த ஹம்ஸ என்னும் ஒலியுடை யதும், சிவபீசமாகிய நாதம் என்னும் பெயருடையதுமான ஹகாரம், அகாரகலை முதலா கிய கலைகளின் வழியே சென்று பிரமரந்திரத்தின் அருகிலே நாதமாகி, அதன்மேல் நாதாந்தமாகி ஒடுங்கும்.

நாதாந்தகலை தன் காரணமாகிய சத்திகலையிலும், சத்திகலை அநாசிருதை யிருன நான்கு கலைகளைத் தன்னகத்தே அடக்கிக்கொண்டிருக்கின்ற வியாபினி கலை யிலும், வியாபினி சமனையிலும், சமனை உன்மனையிலும் ஒடுங்கும்.

இவ்வொடுக்க முறையில் தத்துவதாத்துவிகங்கள் எல்லாவற்றையும் கடந்து சென்று, அப்போது உண்டாகும் இச்சாஞானக் கிரியைகளோடு பராசக்தியை அடைந்து அம்மூன்று சக்திகளையும் விடுத்துப் பராசக்தியோடு தான்கூடியிருந்தலையும் சுட்டியறியாது நிற்றலாகிய உன்மனு கலையின் அநுபவம் பெற்றுப் பரசிவத்தோடு ஒன்றுபடுதலே சோடசகலாப்பிராசாதத்தால் பெறத்தக்க பெரும்பயனுகும். இதனைத் "தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி அத்தாயை மறந்து ஏயுமதே நிட்டை" என்று பட்டினத்தடிகள் அருளுவார்கள்.

இவ்வநுபவப்பயனை முறையாகப் பெற்று மகிழ்ந்து நூல் வாயிலாக விளக்கந் தந்த நமது குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகளின் திருவடிகள் நமது சென்னியிலும் சிந்தையிலும் தங்கி நின்று நல்லின்பத்தை நமக்கு வழங்குவனவாக!

"குருஞான சம்பந்தக் கோமானை அன்னேன்
பெருஞான பீடம் பிறங்க — வருஞான
தேசிகனை மாகயிலை சென்று தோழுதுவந்த
பூசுரனை வாயே புகல்",

உள்ளத்தில் கடவுளுணர்ச்சி மலர்கின்ற பொழுதுதான் மக்கள் மக்களாக வாழ்கிருர்கள். இஃது இந்திய நாட்டுப் பண்பாடு. இதன் அடிப்படையில்தான் இந்நாட்டுச் சமய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

— கயிலைக் குருமணி

முத்திநிச்சயம்

வித்துவான். ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

இந் ஞானப்பனுவல் தருமைக் குருமுதல்வரால் அருளப்பெற்றது. இதில் இருபத்திரண்டு வெண்பாக்கள் உள்ளன. அவற்றுள் மூன்ருவது முதல் இருபத் தொன்ருவது முடிய வெண்பாக்களால் பிறமதவாதிகளின் முத்தியை மறுத்து, இக் கடைசி வெண்பாவால்தான், சைவசித்தாந்த சுத்தாத்துவித முத்திநிச்சயத்தை உணர்த்திஞர் ஆசிரியர். அத் திருவெண்பா,

"உள்ள மலம்நீங்கி ஓங்கு சிவாநந்த
வெள்ளம் திளைத்ததுவாய் மேவுதலே — கள்ளவிழ்பூங்
கோத்தார் விரிசடையார் கூறு சிவாகமத்தின்
சித்தாந்த முத்திஎனத் தேறு"

என்பது உயிர்க்கும் கடவுட்கும் சித்துருவமே (ஞானரூபமே) ஆயினும், உயிர்க்குள்ள ஞானம் என்றும் ஒன்றுபோல விளங்குவதில்லை. முற்றும் மறைக்கப்படுதல், சிறிது விளங்குதல், முழுதும் விளங்காமை, மறைப்பும் விளக்கமும் மாறி மாறி அடைதல் முதலிய குறைபாடுகள் உயிரறிவுக்கு உள்ளன. கடவுளறிவு இக் குறைபாடுகளை என்றும் அடைதல் இல்லை.

உயிரறிவுக்கு மட்டும் இக் குறைபாடு ஏன் உண்டாகின்றது? உயிர்க்குப் பாசத்தொடர்பு உள்ளவரையில் 'பசு' என்னும் பெயர் உண்டு. அது நீங்கின் 'ஆன்மா' என்று வழங்கப்படும். வியாபகம் உடையதே ஆன்மா. பாசத்தொடர்பால் அவ்வியாபகம் அடைகின்றது. பாச சம்பந்தத்தால்தான் பசு ஆயிற்று. பசுத்துவம் நீங்கிஞல் சிவத்துவம் ஓங்கும். பசுவின் தன்மை பசுத்துவம். சிவத்தின் தன்மை சிவத்துவம். துவம் - தன்மை (த்வம்).

பசுத்துவ நீக்கமும் சிவத்துவப் பேறும் சேர்ந்தே வீடு பேறு ஆகும். பசுத்துவம் விடுதல் வீடு; சிவத்துவம் பெறுதல் பேறு. பந்த நிவிர்த்தியும் சுகப்ராப்தியும் சேர்ந்தே மோக்ஷம் என்பர் பிறமதத்தினரும்.

உள்ளமலம் நீங்கிவிடுதல் வீடு. உயிர்க்குச் சிவாநந்தம் ஓங்கி வளர்தல் பேறு. அச் சிவாநந்த வெள்ளத்தில் திளைத்தலும் திளைத்து அதுவாய் மேவுதலும் அந்த ஆநந்தம் ஓங்கி வளர்தலின் நிலையாகும்.

உயிர்க்குப் பசுத்துவம் எதனல் ஏற்பட்டது? ஆணவத்திஞல். ஆணவத்தால் ஏற்பட்ட பசுத்துவம் அகன்ருல் சிவத்தின் சார்பு உண்டாகும். ஆகவே சிவத்துவம் ஏற்படும்; சிவம் ஆகும்; சிவாநந்தம் ஓங்கும். அது வெள்ளமாகப்பெருகும்.

அவ்வெள்ளப்பெருக்கில் உள்ளம் திளைக்கும்; திளைக்கத்திளைக்க உள்ளம் உருகும். உள்ளம் உருக உருகச் சிவம் பெருகும், சிவம் பெருகப்பெருகச் சிவாநந்தமயமாகும் ஆன்மா. ஆநந்தமாய் மேவுதலே சித்தாந்தமுத்தி; மும்மலமும் நீங்கிச் சிவாநந்தம் ஓங்குவதே சித்தாந்தமுத்தி.

ஆன்மாவின் இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி மூன்றனையும் மறைப்பது ஆணவம். அம் மறைப்பு இல்லையேல் அம்மூன்று சத்தியும் எங்கும் வியாபகமாய் விளங்கும். அப்பொழுது அம்மூன்றும் சிவனுடைய இச்சாஞானக்கிரியைகளில் அடங்கும். ஆன்மாவின் இச்சை சிவனிச்சையாயும், ஆன்மாவின் கிரியை சிவக்கிரியை யாயும், ஆன்மாவின் ஞானம் சிவஞானமாயும் ஆவதே பசுகரணம் சிவகரணம் ஆதல் எனப்பெறும். அவ்வாறு ஆய்விட்டால், ஆன்மாவும் சிவமும் அத்துவிதமாகும். அந்த அத்துவிதமே கேவலம் விசிஷ்டம் இரண்டும் இல்லாத சுத்தம். அதனல் அதைச் சைவசித்தாந்தத்தில் 'சுத்தாத்துவித முத்தி' என்பர். அதுவே சிவாகம சித்தாந்தம். அதனுல்தான் இத்திருப்பாட்டில், 'சிவாகமத்திற் சித்தாந்த முத்தி' என்ருர் ஆசிரியர். அச்சிவாகமங்களைச் சிவபிரான் அருளினன். அக்காரணத்தால் "கள்ளவிழ் பூங்கொத்தார் விரிசடையார் கூறு சிவாகமம்" எனப்பெற்றது.

இம் முத்தி நிச்சயத்திற்கு வெள்ளியம்பலவாணர் அருளிய பேருரையில், "ஆன்மாவானவன் தனது சத்திநிரோதமான ஆணவமல முதலானவற்றை நீங்கி, ஒருகாலமும் குறைவுபடாத சிவாநந்தம் ஆகிய பெருங்கடலில் திளைத்து, அச்சிவனும் ஆன்மாவும் ஒன்றும் அன்றி இரண்டும் அன்றி நின்ற அத்துவித நிலையைப் பெறு தலே, மதுவொழுகும் பூங்கோதை அணியும் விரிசடைக் கடவுள் ஆன பரமசிவன் கூறும் காமிகாதி ஆகமத்தைச் சித்தாந்தமுத்தி எனத் தெளிவாயாக" என்று உளது.

"திளைத்தல், மிக அழுந்தியறிதல், சிவாநந்தவெள்ளம் - சிவரசசமுத்திரம். சிவானந்தம், சிவாநந்தாநுபவம், பிரமரசாநுபவம், பிரமரசம், நிரதியாநந்தம், சிவதரிசனம், சிவஞானம், திருவருள் பெறுதல், சிவயோகம், சிவபோகம், பிரமாநந்த யோகம், பிரமபதம், சிவப்பேறு, சிவசாயுச்சியம், ஆன்மாநந்தம், நிஜாநந்தம், ஆன்ம சுத்தி, ஆன்மலாபம், ஆன்மஞானம் எல்லாம் ஒருபொருட்கிளவி" இவற்றைத் தனித் தனியாக இப்பேருரை இருமொழியிலும் மேற்கோள்காட்டி விளக்கிற்று.

'பிரமரசாநுபவம் - பிரமரூபமாயுள்ள இனிமையை அநுபவித்து மகிழ்ச்சி அடைதல்'. அதைத் திருவாசகத்தில் 'தேனய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவ பெருமான்' என்றுள்ளதாலும் அறியப்படும்.

இம் முத்திநிச்சயப் பேருரையில், இதுவே சித்தாந்தமுத்தி எனக் கூற வேண்டும் இடத்தில் "இவ்வாறு சிவாநந்தம் ஆவதே சைவசித்தாந்தமுத்தி என்பது கண்டுகொள்க" என்று எழுதியபின்னர், உதாரணங்கள் பற்பல காட்டினுர் வெள்ளியம்பலவாணர். அவற்றுள் ஒன்ருக, "ஆனந்த வெள்ளத் தழுந்தும் ஓர் ஆருயிர்" எனத்தொடங்கும் கோவைத் திருவாசகம் உளது. இப்பொழுது கனகாபிஷேகம் கொண்டருளும் எங்கள் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத்திருக் கோவைப் பாடலைச் சொல்லி பொருள் கூறிப் பலரைப் பரவசப்படுத்தியருள்வது பலர் அறிந்த உண்மை. அவ்வுண்மையால் நாம் அறியக்கிடப்பது இந்நூலில் நிச்சயித்த சித்தாந்தமுத்தி வழிவழியாகக் காக்கப்பட்டு வருதலாகும்.

வாழ்க கயிலைக் குருமாமணி !

தெய்வத் தமிழோ கலைப் பொக்கிஷமாக விளங்குகிறது ; எடுக்க எடுக்கக் குறையாத பொருள்வளம் உடையது. நாம் காட்டு கின்ற மேற்கோள்கள் எல்லாவற்றிற்கும் இத் தெய்வத் தமிழ் இடந் தந்து நிற்கும். நம் நாட்டுக் கலைப் பொக்கிஷங்களைப் பிறநாட்டார் மொழிபெயர்த்தும், விரும்பிப் படித்தும் பயன்பெறுகின்றனர். ஆனுல் நாமோ நம்மிடம் உள்ள கலைப்பொருளை மறந்து பிறநாட்டு மொழியாசிரியர்கள் கூற்றை மேற்கோளாக எடுத்துக் கூறுகிறோம். நம்மிடம் சரக்கு இல்லையென்ருல் பிறர்கையை எதிர்பார்க்க வேண்டியதுதான். நம்மிடம் பழங்காலச் செல்வம் எவ்வளவோ இருக்கின்றது. அவைகளை வைத்துக்கொண்டு பிறர் கையை எதிர் பார்ப்பது கூடாதல்லவா ?

— கயிலைக் குருமணி

ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் சிவபாரம்யம்

பிரம்மஸ்ரீ. ய. மகாலிங்கசாஸ்திரிகள் எம். ஏ., பி. எல்.,

பதினாறுவது நூற்றாண்டில் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் அவதாரத்தை வர வழைக்கத்தக்கசூழ்நிலைகள் உருவாகிக்கொண்டிருந்தன. ராஜகுருவான தாதாசாரியரின் ஆவேசம் நிரம்பிய பிரசாரத்தினால் வைஷ்ணவமதம் விரிவாகப் பரப்பப்பட்டு வந்தது. விஜயநகரத்தரசனான ஸதாசிவராயனுக்கு ராமராயன் மந்திரியாகவிருந்து ஆட்சிபுரிந்துவந்தான். ராமராயன் வைஷ்ணவக் குருக்களின் கைப்பாவை. ராமராயன் காலத்திலும் தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பின்பு சிதைந்துபோன விஜய நகரத்தை ஆண்ட மன்னர்களின் காலத்திலும் வைஷ்ணவப் பிரசாரம் தீவிரமாக நடந்தது. கூட்டம் கூட்டமாக மக்கள் மதமாற்றத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். சைவமதத்தை நாட்டைவிட்டு விரட்டிவிடுவதென்று வைஷ்ணவகுரு கங்கணம்பூண்டார். தலைக்கோட்டை யுத்தத்தில் விஜயநகரம் தோல்வியடைந்ததன் பின் சின்னாபின்னமான ராஜ்யம் சிறுமையை அடைந்தது. சிற்றரசர்கள் தனித்தனியே தங்கள் கொடிகளை உயர்த்தலானார்கள். அவர்களுள் வேலூர் சின்னபொம்மநாயக்கன் முக்கியமானவன். வைஷ்ணவப் பிரசாரத்தைத் தடுக்கமுயன்ற ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதருக்கு சின்ன பொம்மன் தக்க உதவியளிக்க முன்வந்தான். சைவசாத்திரத்தை விளக்கவும், விஸ்தரிக்கவும் ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் கீழ்க்கண்டவைகளையும் மற்றும்பல கிரந்தங்களையும் எழுதினார்.

1. சிவகர்ணாம்ருதம். 2. சிகரிணீமாலா. 3. சிவதத்துவவிவேகம். 4. ராமாயணதாத்பர்ய ஸங்கிரகம். 5. பாரததாத்பர்ய ஸங்கிரகம். 6. பிரும்ம தர்க்கஸ்தவம். 7. பஞ்சரத்னஸ்துதி. 8. ரத்னத்ரயபரீக்ஷா. 9. சிவார்ச்சன சந்திரிகா. 10. சிவத்யானபத்ததி. 11. சிவமஹிமகலிகாஸ்துதி. 12. சிவபூஜா விதி. 13. சிவாத்வைதநிர்ணயம். 14. ஆனந்தலஹரீ. 15. நயமணிமாலா. 16. சிவார்க்கமணிதீபிகா. இறுதியில் கூறப்பட்டது மிகமிகப் பெரிய கிரந்தம். ஸ்ரீகண்டபாஷ்யத்தின் விரிவுரையாகும். மூன்று மதங்களைத் தவிர நான்காவது மதமாக சைவவிசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபனம்செய்த பெருமைபெற்றது. ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் சிவார்க்கமணிதீபிகையை ஐந்நூறு வித்வான்களுக்குப் பாடம் சொல்லிப் பிரசாரம் செய்ததாயும், இந்தப் பிரசாரத்திற்குச் சின்னபொம்மன் துணையாயிருந்து மேற்படி வித்வான்களுக்கு உணவு முதலிய வசதிகளைச் செய்துகொடுத்ததாயும் இறுதியில் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்வித்ததாயும் ஒரு கல்வெட்டு கூறுகிறது. பல நல்ல பணிகளைச் செய்துவருவதுடன் ஸ்ரீகயிலாய யாத்திரை செய்துள்ள தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களது

கனகாபிஷேக மலரில், கனகாபிஷேகம் கொண்ட ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களது வாக்கைப் பற்றி ஆராய்ச்சி செய்வதும் மிகப் பொருத்தமே யல்லவா ?

ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்களின் ஸித்தாந்தப்படி சைவமதம் அத்வைதத்திற்கு அடுத்த நிலையில் துணையாகி நிற்பதே. மற்ற இரு மதங்களும் கீழ்படிகளே. இம்மதங்களின் கூட்டுறவை ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் கண்டாரேயொழிய அவை பரஸ்பரம் விரோதிகள் என்று காணவில்லை. இம்மதப் பிரிவுகளை சமரஸப்படுத்தும் நோக்கே அவருடைய பெரும் நோக்கு. இந்த சமரஸப் புத்தியையே அவருடைய கிரந்தங்களில் பார்க்கிறோம். மதப்பாகுபாடுகளின் ஆக்ரஹத்தினால் கொந்தளிப்பு ஏற்பட்ட கொடிய காலத்தில் அமைதியையும், ஆறுதலையும், ஒற்றுமைமனப்பான்மையையும் நிலவச் செய்யப் பாடுபட்ட பெரியார் அவர்.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களை ஆதரிக்கும் பேறுபெற்ற சின்னபொம்மனை அக்காலத்துக் கவி ஒருவர் புகழ்ந்தார்.

नानादेशनरेन्द्रमण्डलमहायत्नातिदूरीभवत्
कादाचित्कपदारविन्दविनतेरप्पय्ययज्वप्रभोः ।
शैवोत्कर्षपरिष्कृतेरहरहः सूक्तैः सुधास्यन्दिभिः
फुल्लत्कर्णपुटस्य बोम्मनृपतेः पुण्यानि गण्यानि किम् ॥

பலதேசத்து அரசர்கள் பாதங்களில் விழுந்து பணியும் பொருட்டுக் காத்திருந்தும் எவருடைய தரிசனம் அரியதாயிருக்கிறதோ அப்பேர்ப்பட்ட பிரபுவான ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதரின் சிவோத்கர்ஷபரமான அமிர்தத்தைப் பெருகவிடும் திவ்ய கவிதைகளைத் தினந் தினமும் காதுநிரம்பக் கேட்டு மனம் பொங்கி ஆனந்திக்கும் பேறுபெற்ற பொம்மநரபதியின் புண்ணியங்களை யாரால் கணக்கிட முடியும் ?

சிவரஹஸ்யத்தில் ஸ்ரீ தீக்ஷிதருடைய அவதாரமும் சைவசாஸ்திரத்துக்கு அவரால் ஏற்பட்ட புனர் உஜ்ஜீவனமும் கூறப்பட்டுள்ளது.

शैवशास्त्रं तदा भूमौ लुप्तं विस्तारयिष्यति ।

சைவர்களுக்கு வைஷ்ணவப் பிரசாரகர்கள் இழைத்த தீங்குகளை ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் தன் நிக்ரஹாஷ்டகத்தில் விவரித்துள்ளார். சிவன் தாமஸகுணமுள்ள தெய்வமென்றும், சிவனின் பெருமையை எடுத்துரைக்கும் புராணங்கள் தாமஸ புராணங்கள் என்றும், அவைபிரமாணங்கள் இல்லை என்றும், சிவன் ஜீவகோடியில் சேர்ந்தவன் என்றும், நாராயணனே ஸத்வகுணசீலன் என்றும், அவனைப் புகழ்பாடும் புராணங்களே சான்றுகளாகும் என்றும், அவனே பரப்ரும்மமென்றும், இதையே வேதமும் உபநிஷத்தும் பிரும்மஸூத்ரமும் கூறுகின்றனவென்றும் மற்றும் பலவிதமான சிவநிந்தைகளையும்

வைஷ்ணவர்கள் பிரசாரம் செய்துவந்தார்கள். சைவர்களை இகழ்வதிலும் தேசப் பிரஷ்டம் செய்வதிலும் அவர்களுக்கு இடையூறுகள் பல விளைவிப்பதிலும் அல்லது அவர்களை வைஷ்ணவர்களாக மாறச்செய்வதிலும் ஆக்ரஹத்துடன் அரசனின் ஆதரவு பலத்துடன் தீவிரமாக முனைந்தார்கள். முன்னொருகாலத்தில் பௌத்தர்கள் ஜைனர் களால் சைவத்திற்கு ஏற்பட்ட இடுக்கண்களை நீக்க ஞானசம்பந்தர் மாணிக்கவாசகர் முதலியவர்கள் அவதாரம்செய்ததுபோல் பிற்காலத்தில் வைஷ்ணவர்களால் ஏற்பட்ட விபத்துக்களை எதிர்த்துப் போராடி சிவபாரம்யத்தை நிலைநாட்ட ஹரதத்தர் முதற் கொண்டு ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் இறுதியாகப் பல மகான்கள் அவதாரம் செய்தார்கள். சிவார்க்கமணி தீபிகை சைவர்களின் கற்கோட்டை, எதிரிகளால் தகர்க்கமுடியாத அரண், அதைச் சிருஷ்டித்தவர் ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷிதர், ஸ்ரீ தீக்ஷிதரின் இறுதியான கொள்கை அபேதவாதம் தான். அந்த நிலையில் விஷ்ணுவுக்கும் பிரும்மத்வம் உண்டு. பேதவாதம் பேசுமளவில் சிவனின் உத்கர்ஷந்தான் சுருதிபுராண வசனங்களால் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனல் வைஷ்ணவர்கள் சிவனை ஜீவகோடியில் சேர்த்துத் தாழ்த்திப் பேசுவதுபோல் அவர் விஷ்ணுவைத் தாழ்த்திப் பேசத்துணியவில்லை. விஷ்ணு சிவனின் சக்தி என்றும் அந்த சக்தி ஸ்திரீரூபத்தில் அம்பிகை என்றும் புருஷ ரூபத்தில் நாராயணன் என்றும் ரத்னத்ரய பரீக்ஷையில் தீர்மானித்திருக்கிறர். மற்ற கிரந்தங்களில் (பிரும்மதர்க்கஸ்தவம், ராமாயண தாத்பர்ய ஸங்க்ரஹம், பாரததாத்பர்ய ஸங்க்ரஹம், சிகரிணீமாலை, சிவதத்வவிவேகம், முதலியவற்றில்) வைஷ்ணவர்களின் சிவநிந்தைக்கு எதிர்வாதம் செய்யும் வகையில் சுருதிபுராணக் கோட்பாடுகளுடன் சிவ பாரம்யத்தை ஸ்தாபித்திருக்கிறர். ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் ஒரு பிரமாணத்தையும் ஒதுக்க வில்லை. சுருதி, ஆகமம், புராணம் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டே அவற்றிலிருந்து தன் சித்தாந்தங்களைக் கடைந்து எடுக்கிறர். பிரமாணங்கள் விஷயத்தில் பாரபக்ஷ மாகப் பேசுவதில்லை. இரண்டு கக்ஷிக்கும் உள்ள வாதங்களை அவரே எடுத்துக்கூறி பலாபலன்களைச் சீர்தூக்கிப் பார்க்கிறர். கக்ஷிமனப்பான்மையினல் ஆக்ரஹமோ த்வேஷமோ ஒளித்துப் பேசுவதோ திரித்துக் கூறுதலோ அவரிடம் கிடையாது. அதனல்தான் அவர் பெரியவர்.

சுருதியில் சிவனைக் குறிப்பிடவேண்டிய இடத்தில் பிரும்மபதப்ரயோகத்தையும் பிரும்மத்தைக் குறிப்பிடும் இடத்தில் சிவபதப்ரயோகத்தையும் காண்கிறேம்.

சுருதியில் உற்பத்தி ஸ்திதி பிரளயம் இந்த கிருத்யங்களுக்குக் காரணம் சிவனே என்று ரூபிக்கப்படுகிறது. சக்ரவர்த்திக்கு வெண்குடை லக்ஷணமாவதுபோல் பிரும்மத்தின் லக்ஷணம் இதுவே ஆகும். ஜகத்காரணத்தை ஹரன், சிவன், ருத்ரன் என்ற நாமாக்களால் சுருதி குறிப்பிடுகிறது.

एवं अथर्वशिखाद्यनुगृहीतैः श्वेताश्वतरोपनिषन्मन्त्रैः प्रेरितानि सदात्मब्रह्मादि-सामान्यशब्दयुक्तानि सर्वाणि कारणवाक्यानि शिवमेव जगत्कारणं परं ब्रह्मेति प्रतिपादयन्ति ॥

புராணங்களில் இந்த தத்துவத்தின் விரிவுரைகளைக் காணலாம். கூர்ம புராணத்தில்

पश्यन्ति शंभुं कविमीशितारं रुद्रं बृहन्तं पुरुषं पुराणम् ॥

சிவபுராணத்தில்

कारणानां च यो धाता ध्याता परमकारणम् । न संप्रसूयतेऽन्यस्मात् कुतश्चन कदाचन ॥
स सर्वैश्वर्य संपूर्णो नाम्ना सर्वेश्वरः स्वयम् । सर्वैर्मुमुक्षुभिर्ध्येयः शम्भुराकाशमध्यगः ॥

மஹாபாரதத்தில் தர்மமயமான விருக்ஷத்திற்கு मूलं कृष्णो ब्रह्म च ब्राह्मणश्च என்று கூறப்படும் வேர்கள் கிருஷ்ணன் சிவன் பிராம்மணர்கள் என்று விளக்கும் சந்தர்ப்பத்தில் பிரும்ம சப்தம் சிவனைத்தான் குறிப்பிடுகிறது என்று ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் விஸ்தாரமாய் வாதிக்கிறார்கள். மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கு உபகாரம் செய்வதில் கிருஷ்ணனைவிட பரமசிவனே முக்யமானவர் என்று பல சரித்திரங்களினால் நிரூபிக்கிறார்கள்.

பகவத்கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனின் வேண்டுகோளுக்கு இணங்க அவனுக்குக் காண்பித்த விசுவரூபம் விஷ்ணுவினுடையதல்ல. பரமசிவனுடையதே என்று தக்கசான்றுகளுடன் நிச்சயிக்கிறார்கள். கிருஷ்ணன் "ஈசுவரனை சரணம் அடை" என்று அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தார். அர்ஜுனன் அதை ஏற்றுக்கொண்டு சிவபூஜை செய்தானேயொழிய விஷ்ணுபூஜை செய்யவில்லை. ஆதலால் கிருஷ்ணனுடைய அபிப்ராயம் நன்கு விளங்கவில்லையா என்று கேட்கிறார்கள். கிருஷ்ணன் அர்ஜுனனுடன் கயிலாசம் சென்றபோது அர்ஜுனன் செய்த பூஜைகளெல்லாம் சிவன் சந்நிதியில் காணப்பட்டன என்று பாரதத்தில் வருணிக்கப்படுகிறது, இதற்கு மற்றொரு சான்று.

ருத்ரன் ஸம்ஹாரகாலத்தில் தமோகுணத்தை உடையவர் என்பது தூஷணமானால் சஸ்த்ரசிகித்ஸை செய்யும் வைத்யனும் தூஷிக்கத்தகுந்தவன். வைத்யன் ரணசிகித்ஸையின்போது கத்தியை உபயோகப்படுத்துவது வியாதிஸ்தனிடம் தயவின் பேரில் . அதுபோல் ஸம்ஸாரதுக்கத்திலிருந்தும் பிராணிகளை உத்தாரம் செய்து அவர்களுக்கு ஓய்வு கொடுக்கவே ருத்ரன் ஸம்ஹாரத்தை ஏற்றுக்கொள்கிறார். நிக்ரஹம் என்பது கீழ்ப்பட்டவர்கள் செய்யும்போது துவேஷபூர்வகமானாலும் ஈச்வரன் அதைத் தயவால் பிதா புத்திரனை சிக்ஷிப்பதுபோல் அன்பால்தான் கையாள்கிறான்.

सर्वोऽपि निग्रहो लोके न च विद्वेषपूर्वकः । नहिमद्वेष्टि पिता पुत्रं यो निगृह्यापि शिक्षयेत् ॥

சிவனே ஞானப்ரதனென்றும் ஸத்வகுணமூர்த்திஎன்றும் ஸ்ரீதீக்ஷிதர் அவர்கள் பல சான்றுகளை எடுத்துக்காட்டி நிரூபிக்கிறார்கள். எப்படி சத்திரத்தில் அன்னம் போடுபவன் அன்னதானக்கொடியைப் பறக்கவிடுகிறானோ அப்படியே ஞானப்பிரதனை

பரமசிவன் ஞான ஒளிக்கு அடையாளமான சந்த்ரகலையைத் தூக்கி சிரஸில் வைத்துக் கொண்டார் என்கிறார் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள்.

சுகத்தைக் கொடுப்பவரும் சிவனே. அவருடைய சம்பு, சங்கர, ம்ருட என்ற பெயர்களே இதைப் பறையறிவிக்கின்றன. சர்வமங்களங்களுக்கும் உறைவிடமும் அவரே. **स्वस्य निरतिशयसुखास्पदत्वेन तुच्छविषयसुखवैतृष्ण्यं ज्ञापयितुमेव विषयभोग लम्पटमूढादरणीयानि वस्त्रमाल्याभरण चन्दनाद्यनुलेपनानि विहाय गजचर्मभुजगास्थिभस्मानि तत्स्थानेषु परिगृहीतानि ॥** விஷயபோகங்களில் இச்சையுள்ளவர்கள் அல்லவா பகட்டானவஸ்த்ரம் புஷ்பமாலைகள் ஆபரணங்கள் சந்தனப்பூச்சு முதலியவைகளால் தன்னைத் தினமும் அலங்கரித்துக்கொள்வார்கள்! பரமசிவனோ வைராக்கியத்தின் அடையாளங்களான யானைத்தோல் உடை, பாம்புமாலை, எலும்பு, மண்டை ஓடு இவைகளாலான ஆபரணங்கள் சாம்பல்பூச்சு முதலியவைகளைத் தரிக்கிறார். நித்யமும் ஆத்மானந்தபரிதராய் மயானத்தில் திரிகிறார், துச்சவிஷயங்களால் சுகத்தை வரவழைத்துக்கொள்ளும் யத்னம் அவருக்குத் தேவையில்லை. பாகவதத்தில் இத்தகையஈச்வரதத்துவத்தை அறியாத மூடர்களை ஸ்ரீ சுகஸ்வாமி இழிவாகக் கூறுகிறார்.

हसन्ति यस्या चरितं हि दुर्भगाः स्वात्मन्रतस्याविदुषः समीहितम् ॥
यैर्वस्त्रमाल्याभरणानुलेपनैः श्वभोजनं स्वात्मतयोपलालितम् ॥

சரீரத்தை ஆத்மாவாக நினைக்கும் கேடுகெட்ட மாந்தர்கள்தான் சிவனுடைய ஆசாரங்களை தூஷிப்பர்.

एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति

என்ற சுருதியினால் ஹிரண்யகர்ப்பர் இறுதியாக சகலஜீவர்களும் அநுபவிக்கும் சுகமெல்லாம் பரமேச்வரனின் அப்ராகிருத அநந்த சுகசமுத்ரத்தின் திவலைகள். ஜாபாலோபநிஷத்தில் சிவநாம ஜபத்தினால் முத்தியடையலாம் என்று கூறப்படுகிறது. சிவாகம வித்வான்கள்,

विद्यासु श्रुतिरुत्कृष्टा तत्रैकादशिनी श्रुतौ। तत्र पञ्चाक्षरी तस्यां शिव इत्यक्षर द्वयम् ॥

என்று கூறுகிறார்கள். பாகவதத்தில் இதுவே கூறப்படுகிறது;

यद्द्व्यक्षरं नाम गिरेरितं नृणां सकृत्प्रसङ्गादघमाशु हन्ति तत् ।

ஒருதரம் சிவ என்று உச்சரித்தாலும் உடனே பாபங்கள் தொலையும். பாரதத்தில் சிவ என்ற நாமாவுக்கு மங்களத்தைச் செய்பவன் என்று கூறப்படுகிறது.

समेधयति यन्नित्यं सर्वार्थानामुपक्रमम् । शिवमिच्छन् मनुष्याणां तस्माद्देवः शिवः स्मृतः ॥

சிவன் பாரபக்ஷமில்லாமல் சகல பிராணிகளுக்கும் மங்களத்தைக் கொடுப்பவன். தேவர் களுக்கு மட்டும் அல்லாமல் அசுரர்களுக்கும் ஹிதமானவன் என்கிற வாக்கியம் பாரதம் கர்ணபர்வாவில் சிவனாலேயே சொல்லப்படுகிறது.

समा भवन्तु मे सर्वे दानवाश्चामराश्च ये । शिवोऽस्मि सर्वजन्तूनां शिवत्वं तेन मे सुराः ॥

ஜீவர்களுக்கு பசுத்வமும், ஈச்வரனுக்கு பசுபதித்வமும் ஸ்வதஸ்ஸித்தமாக ஏற்பட்டவை.

स्वतः सिद्धं पाशुपत्यं युष्माकं पशुतापि च । आत्मानः पशवः प्रोक्ताः सर्वे संसारवर्तिनः ॥
तेषां पतित्वाद्देवेशः शिवः पशुपतिः स्मृतः । ब्रह्माद्याः स्थावरान्ताश्च देवदेवस्य शूलिनः ॥
पशवः परिकीर्त्यन्ते संसारवशवर्तिनः । तेषां पतित्वाद्देवेशः शिवः पशुपतिः स्मृतः ॥
मलमायादिभिः पाशैः स बध्नाति पशून् पतिः । स एव मोचकस्तेषां भक्त्या सम्यगुपासितः ॥

முதலியன சிவபுராண லிங்கபுராண வாக்கியங்கள்.

பரமேச்வரனுக்குமேல் ஒரு தெய்வம் கிடையாது என்று சுவேதாச்வதர உபநிஷத் கூறுகிறது.


तमीश्वराणां परमं महेश्वरं तं देवतानां परमं च दैवतम् ।
पतिं पतीनां परमं परस्ताद्विदाम देवं भुवनेशमीड्यम् ॥

ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் பரமேச்வரனைத் துதிக்கும் மதுரமான ஸூக்திகளுடன் இக்கட்டுரையை முடித்துக்கொள்வோம்.


यस्याहुरागमविदः परिपूर्ण शक्तेरंशे कियत्यपि निविष्टममुं प्रपञ्चम् ।
तस्मै तमालरुचिभासुरकन्धराय नारायणीसहचराय नमः शिवाय ॥

आकर्णकृष्टधनुराहितमोहनास्त्रमाराद्विरीक्ष्य मदनं कुपितस्य किंचित् ।
शम्भोः समाधिसमये विकसत्कृशानुज्वालाकलापजटिलं निटिलं स्मरामि ॥

श्रीकान्तद्रुहिणोपमन्युतपनस्कन्देन्द्रनन्द्यादयः प्राचीना गुरवोऽपि यस्य करुण लेशाद्गता गौरवम् ।
तं सर्वादिगुरुं मनोज्ञवपुषं मन्दस्मितालङ्कृतं चिन्मुद्राकृतमुद्रपाणिकमलं चित्ते शिवं कुर्महे ॥



காளிதாஸன் கண்ட சைவம்



உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சோந்தமான

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி திருக்கோயில்

(வைத்தீசுவரன்கோவில்)

ஸ்ரீ தையல்நாயகி

காளிதாஸன் கண்ட சைவம்

ஸ்ரீ வத்ஸ. ஸோமதேவ சர்மா

வடமொழியிலே வல்லவன்; கவிகளிலே சிறந்தவன்; உவமையில் உவமையற்றவன்; இனிய சொல்லில் இணையில்லாதவன்; கவிகள் போற்றும் கவிதை நிறைந்தவன்; சமயப்பற்றுள்ளவன்; சைவப்பித்தன்; அரிய சிவதத்துவங்களை அள்ளி அளிப்பவன்; சிவபக்தரில் சிறந்தவன்; எங்கும் சிவத்தையே கண்டவன்; சிவ புராணங்களைச் சிறப்பாகக்கற்றவன்; கவிதைகளில் சைவத்தைத் திணித்தவன்; அதனுல் அழியாக் கீர்த்தி பெற்றவன் கவிகுல திலகம் காளிதாஸனே.

காளிதாசனது கவி எனில் ஏனைய கவிகள் அஞ்சலி செய்வர். திராக்ஷா பாகம்! சொல்நயம்! உயர் கருத்து, உவமை, இயற்கை, கற்பனைக் கெட்டாக் கற்பனை, நீதி, அறம், வீடு, விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் முதலியவைகளை வர்ஷிக்கும் காவ்யமியற்றினுன். அவைகளில் பெரும்பாலும் சைவ மணமே கமழும் சைவ புராணங்களைக் காணலாம். சிவமகிமை சிறந்தோங்கும் சைவர் கண்ணுக்கு உலகெலாம் சிவமே அன்றோ! ஊடுருவிப் பார்த்தால் ஒவ்வொரு நூலிலும் அவன் கண்ட சைவத்தை நாமும் காணலாம். அவனுக்கு ஈடு அவனே, அவன் நூலுக்கு ஈடு அவன் நூலே என்பது மிகைபடக் கூறுதலாகும்.

இவ்வளவு ஏற்றத்திற்கும் காரணம் அவன் கண்ட சிவனே. சுருதியில் சிவத்தைக் கண்டான். ஸ்மிருதிகளில் கண்டான். ஆகமங்களில் கண்டான். புராணங்களில் கண்டான். நாடெல்லாம் கண்டான். தான்கண்ட இன்பத்தை எல்லோரும் சுவைக்கவே நூல்களில் அதை நிரப்பினுன். எடுத்து அதை அருந்தாதவர் ஏமாந்தவரே. அவ்விலக்கியங்களில் முதலாவதான ரகுவம்சத்தைக் கவனிப்போம்.

वागर्थाविव संयुक्तो सदा खलु सती शिवौ । சிவபுராணம்.
वागर्थाविव संपृक्तौ वागर्थप्रतिपत्तये । ரகுவம்சம்.
जगतः पितरौ वन्दे पर्वती परमेश्वरौ । சிவபுராணமும் ரகுவம்சமும்.

சிவபுராணத்தில் ஆழ்ந்து மூழ்கி எழுந்த அவன் வாக்கில் சிவபுராணமே பிரதிபலிக்கின்றது. சொல்லமைப்பும் அங்ஙனமே விளங்கும். வியாஸரின் கவிதை இவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. மற்றெருு கவிதையின் சொற்களை அங்ஙனமே தன் சொல்லுடன் சேர்த்துக்கூற இவன் அஞ்சவில்லை. பெருமையும் பெற்றுன். சிவனும் சக்தியும் ஒன்றே என்று தனக்குவமையில்லாதவன் உருவைத் தக்க உவமையால் விளக்கிய பெருமை இவனுக்கே உரியது. சொல் இல்லாப் பொருள் இல்லை! பொருளில்லாச் சொல்லில்லை! சிவபக்தியும் சிவாநந்தஅநுபவமுமில்லாதவர் இங்ஙனம்

சொல்ல முடியுமா? ஒவ்வொரு சொல்லிலும் சிவனைக் கண்டான். ஒவ்வொரு பொருளிலும் அவனைக் கண்டான் கவி.

कैलासगौरं वृषमारुरुक्षोः पादार्पणानुग्रहतपृष्ठं ।
अवेहि मां किंकरमष्टमूर्तेः कुंभोदरं नाम निकुंभतुल्यम ॥

திலீபனெனும் வேந்தன் புத்திரப்பேறு பெற கோவிரதம் செய்கிறான். அந்தக்கோ வெறும் பசுவல்ல. கடலைக் கடைந்தபோது உண்டான காமதேனு. திலீபன் அதை உபாசித்துக்கொண்டிருக்கிறான் வனத்திலே. ஒரு ஸிம்மம் அதன்மீது பாய்கிறது அதைக்கொல்ல அரசன் அம்பை எடுக்கிறான். அவன்கை அசைவற்றுச் சித்திரத்தில் வரைந்ததுபோல் நிற்கின்றது. யாதுமறியாமல் வேந்தன் திகைக்கிறான். தேனு பேசுகிறது. "ராஜன்! யான் கும்போதரன் எனும் சிவகிங்கரன்! நிகும்பனுக்குச் சமமானவன்! கயிலைபோல் வெண்மை நிறம் வாய்ந்த விருஷபத்தின் மீது ஏறும்போது அஷ்டமூர்த்தி என்மீது கால் வைப்பார். அந்த பாத அநுக்ரகத்தால் எனது முதுகு பாவனமானது! என்றது சிங்கம். அது தன்பலத்தைக் கூறித் தான் சிவகிங்கரன் எனவுமறிவித்தால் போதுமே? சிவநாமம் சிந்தையில் வந்தவுடன் கவி சிவபக்தியில் தோய்ந்து விடுகிறான். தன் உள்ளத்தை வெளியிடுகிறான். பக்திப் பரவசனாகி பரமசிவத்தின் பெருமைவெள்ளத்தில் புகுகிறான். பலதத்துவங்களை வாரிவாரி இறைக்கிறான்.

अष्टमूर्तिरनेकात्मा सात्विकः शुद्धविग्रहः

அஷ்டமூர்த்தி அநேக வடிவன். ஸத்வம் நிறைந்தவன். சுத்தப் பால் நிறமுள்ளவன் என்று ஸ்காந்தம் கூறும் சிவநாம அஷ்டோத்ர நாமம் அவனை ஆட்கொண்டது. அதைக் காவ்யத்தில் அமைத்தான். அவரது விருஷபத்தைக் கூறினான். கயிலாசத்தைக் கூறினான். சிவபாத மகிமையை வெளியிட்டான். சிவபக்தியால்தான் உள்ளம் உடலுடன் சுத்தமாகும் என்றான். சிவத்தொண்டின் மேன்மையைக் கூறினான். சிவகைங்கர்யம் இம்மை, மறுமை இரண்டையும் தருமெனக் காட்டினான்.

மண்ணாய், விண்ணாய், நீராய், தீயாய், காற்றாய், சசியாய், ரவியாய், வேள்வி செய்வோனாய் இருந்து உலகைக் காண்கிறார் சிவன் என எண்பிக்கின்றான். ஜகத: பிதரௌ என்ற முதல் சுலோகத்தால் ஸ்ருஷ்டி கர்த்தா சிவனே என்றார். அஷ்டமூர்த்தி என்ற சொல்லால் பரிபாலிப்பவரும் அவரே என்றார். லயமூர்த்தி அவர் எனக் கூறவும் வேண்டுமோ? இங்ஙனம் மும்மூர்த்திகளாக உள்ளவன் சிவனே என எடுத்துக் காட்டுகிறான் கவி.

महेश्वरः त्र्यंबक एव नापरः (3-49)

மஹேச்வரன் முக்கண்ணனே. நூறு வேள்வி செய்தவன் சதமகனவான், திலீபனது நூறாவது அச்வமேத வேள்வியில் இந்திரன் அந்தக் குதிரையை அபகரித்த போது ரகுவோடு போர் நிகழ்கிறது. அச்சமயம் இந்திரன் வாயால் மஹேச்வரனது மகிமையை மற்றுமொருமுறை கூறிச் சிவாநந்தக் கடலில் முழுகுகின்றான் கவி.

यस्मिन् ईश्वर इत्यनन्यविषयः शब्दोयथार्थाक्षरः

சிவனிடமே ஈச்வர என்ற சப்தம் பொருந்தும் ; பொருள் உள்ளதுமாகும். மற்றவருக்கு அச்சொல் உரியதல்ல என்று மாளவிகாக்நிமித்ர நாடக மங்கள சுலோகத்தில் ஈச்வரனே சிறந்த தெய்வம் என ஊர்ஜிதப்படுத்துகிருன்.

या सृष्टिः - சாகுந்தல நாடக மங்களம்

वेदान्तेषु - விக்ரமோர்வசீயம்

एकैश्वर्ये - மாளவிகாக்நி மித்ரம்

மூன்று நாடகங்களிலும் சிவ வழிபாட்டையே மங்களமாகக் கொண்டான்; சிவனேயே துதிக்கிருன். சிவபக்தியிலீடுபட்டு குமாரசம்பவம் என்னும் சிவகுமார சரிதத்தை இயற்றினுன். சிவசம்பந்தம் பெற்றதால் பர்வதராஜன், பர்வதராஜகுமாரி, அவள் செய்த தவம், உமை எனும் சிறப்புப் பெயர், தோற்றிய காரணம், சிவதவம், உமாதேவியின் பாலலீலை, காமதஹனம், ரதிக்கு அபயமளித்தல், ஆதிதம்பதிகளின் மணம், முருகன் அவதாரம், அவனது பாலலீலை, சேநாபதியாதல், தாரகவதம் முதலிய சிவபுராண லிங்கபுராண ஸ்காந்தபுராண சாரங்களைப் பிழிந்தெடுத்து, , கவிதை எனும் பாலையும் விட்டுத் தெவிட்டாத தேவாமிருதமாக அமைத்தான்.

இன்பத்துப் பாலையே தனியாக வைத்து மேகதூதம் எனும் ஒரு சிறிய இலக்கியம் எழுதினன். அவனை அறியாமலே உள்ளத்தில் தேங்கி நிற்கும் சிவபக்தி ஊற்றெடுத்துச் சிலபாசுரங்கள் மூலமாக ஓடிப்பாய்கிறது.

சாபம்பெற்ற யக்ஷன்மனைவிக்கு மேகத்தைத்தூதுவிடுகிருன்என்னும் கற்பனைக் கதையில் பல விடங்களில் சைவத்தைப் போற்றுகிருன். ஓரிரு உதாரணம் மட்டும் காட்டுவாம். अप्यन्यस्मिन् (பூர்வமேகம் 33-34) அவந்தீ எனும் முக்தி க்ஷேத்ரத்திலே விசாலா எனும் நகரத்திலே பசுபதி விளங்குகின்ருர். கஜாசுரனைக் கிழித்து மேலே அணிந்து கிருத்திவாசர் எனும் பெயர் பெற்றவர். சந்த்யாகால சிவப்புடன் கலந்து கருமேகமான நீ அங்கு சற்று நின்ருல், ரத்தப் பெருக்குடன் யானைத்தோலை அணிந்த காக்ஷிகாணலாம். இவ்வாறுகவிகள்முன்னே சிவனது பற்பலலீலைகள் தோன்றுகின்றன. சந்தியா காலமும் சிவ பூஜையும் வாத்திய கோஷங்களும் அவனது உள்ளத்திலே ஊறிக்கிடக்கின்றன. ஓ மேகமே! சூலியின் சந்தியா காலபூஜை மிகச்சிறந்தது. சிவ பூஜையில் வாத்யம் வாசிப்பது ஒப்பற்ற சிவகைங்கர்யம்; அதைச் செய்விப்போர் பிறவியே பயனுள்ளதாம். உனது இடியை அங்கு மிருதங்கம்போல் சப்தித்துப் பூர்ண பலனைப்பெறு என, தான் அனுஷ்டித்து ஆநந்த மடைந்த சிவபூஜையில் வையகத்தவரையும் ஈடுபட அழைக்கின்ருன். சிறப்பான சூலி என்ற சொல்லைக்கூறி மாலையிலே சிவதாண்டவ ரகஸ்யத்தையும் குறிப்பிடுகிருன். பானைச்சோற்றிற்கு ஓரிசி பதம் பார்ப்பதுபோல் இதைக்காட்டினேம்.

இசை வெள்ளம்

செந்தமிழ்ச்செல்வர்

வித்துவான். கி. வா. ஜகந்நாதன் M.A.,

மழை பெய்து எங்கும் வெள்ளம் பெருகிக்கொண்டு வருகிறது. குளம், குட்டைகளையெல்லாம் நிரப்பி, மேலும் பெருகுகிறது வெள்ளம். கீழேகிடந்த கட்டைகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. வைக்கோற்போர்கள் மிதக்கின்றன. ஊர்வன, நடப்பன வாகிய விலங்குகளும் மேலே மிதக்கின்றன. இன்னும் வெள்ளம் ஏறிக்கொண்டே இருக்கிறது. வீட்டுக்கூரைகள் மிதக்கின்றன. மனிதர்கள் மிதக்கிருர்கள். ஆடு, மாடு, குதிரை, யானை எல்லாம் வெள்ளத்தின்மேலே மிதந்துகொண்டிருக்கின்றன. ஊர்வன, நடப்பன, கிடப்பன என்று வேறுபட்டிருந்தவையெல்லாம் இப்போது நீரின்மேல் மிதக்கின்றன. அவை இயல்பாகச் செய்யும் செயல்கள் நின்றன. செயலிழந்து ஒரே நிலையில் எல்லாப் பிராணிகளும் வெள்ளத்தில் மிதக்கின்றன. இது புனல் வெள்ளம். இனி மற்ருெரு வெள்ளத்தைப் பார்க்கலாம்.

அது இசை வெள்ளம். புனல் வெள்ளத்தில் எல்லாப் பிராணிகளும் உயிரை இழந்து பிணமாக மிதக்கின்றன. இந்த இசை வெள்ளத்தில் செயலிழந்து ஒருநிலைப் பட்டு மிதக்கின்றன. சேக்கிழார் அந்த வெள்ளத்தை ஓவியமாக்கிக் காட்டுகிருர்.

✻

சோழநாட்டில் திருவானைக்காவைச் சார்ந்த பகுதிகளுக்கு மழநாடு என்று பெயர். அந்நாட்டின் மேற்பகுதியை மேல்மழநாடு என்று வழங்குவார்கள். அங்கே திருமங்கலம் என்பது ஓர் ஊர். அவ்வூரில் ஆயர்குலத்தில் ஆனயர் தோன்றினர். ஆயர்குலத்தை விளக்கவந்து உதயம்செய்த அவர் சிவபிரானுடைய திருவடியையே எப்போதும் தியானித்திருக்கும் சீலம் உள்ளவர் ; திருநீறு பொலியும் திருமேனியுடையவர். காடு நிறைந்த முல்லை நிலத்திற்கு ஆவினத்தை அழைத்துச்சென்று இடையூறு ஒன்றும் நிகழாமல் பாதுகாத்து, வயிறு நிரம்பப் புல் உண்ணச் செய்து மாலையில் மீண்டும் ஓட்டிவருவார் அவர். கன்றுக்குட்டி, பால்மறைந்த பசு, கறவைகள், சினைப் பசுக்கள், கன்றுபோட்ட மாடுகள், காளைகள் என்று பலவகையாக உள்ள மாடுகளை மந்தை மந்தையாக அழைத்துப்போய் மேய்த்துவரும் கடமையில் இன்பம் கண்டார்.

காட்டுக்குச் சென்று மாடுகள் காலாற நடந்து மேயும்போது, அவர் புல்லாங் குழலை வாசித்து மகிழ்வார். பஞ்சாட்சரத்தைக் குழலில் வாசிப்பார். நாள்தோறும் இவ்வாறே செய்துவந்தார்.

கார்காலம் வந்தது ; அந்தப்பருவத்தில் கொன்றைமரம் மலர் குலுங்கும். ஆனய நாயனர் மாடுகளை மேய்க்கும் காட்டிலும் கொன்றை மலர்கள் பொன்னிறம் பொலியப் பூத்து விளங்கின. அந்த மரத்தைப் பார்க்கும்போது நாயனருக்குக் கொன்றை மலரைச் சடையில் அணிந்த சிவபெருமானுடைய நினைவு உண்டாயிற்று. அவர் உள்ளம் உருகியது. அன்பு ஊற்றெடுத்துப் பொங்கியது. கொன்றை மரத்தை அணுகி அங்கே நின்று புல்லாங்குழலை ஊதத் தொடங்கினர். அஞ்செழுத்தையே பாட்டாக வைத்து வாசித்தார். அவர் இசைத்த கீத ஒலி தேனும் அமுதும் கலந்தது போல எங்கும் பரவியது. அந்த இன்னெலி உயிர்க் கூட்டங்களின் காது வழியே புகுந்து உருக்கியது.

பசுக்கூட்டங்கள் அறுகம்புல்லைத் தின்றுகொண்டிருந்தவை, அசைபோடுவதை மறந்துவிட்டு அவரைச் சுற்றிச் செயலிழந்து நின்றன. பாலின் நுரை வாயில் வழியத் தாய்ப்பசுவின் மடியில் பால் குடித்துக்கொண்டிருந்த இளங்கன்றுகளும் பால்குடிப்பதை மறந்தன. வளைந்த கொம்பையுடைய காளைகளும், மான் முதலிய காட்டு விலங்குகளும் மயிர் சிலிர்க்க வந்து நின்றுவிட்டன.

ஆன்நிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பால்நுரைவாய்த் தாய்முலையில் பற்றும்இளங் கன்றினமும்
தான்உணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய.

[ஆன் இரைகள் - பசுவின் வரிசைகள். அசைவிடாது - அசை போடாமல், அயர - செயலிழந்து நிற்க. தடமருப்பின் - வளைந்த கொம்பையுடைய. முகிழ்த்து - சிலிர்த்து.]

விலங்கினங்களுக்கு எப்போதும் இரையிலே ஆசை இருக்கும். அத்தகைய உணவின்பத்தையும் மறந்து ஆனிரைகள் நின்றன. உணவு மறந்த யோகியரைப் போல இசைவெள்ளம் அப்பசுக்களை ஆக்கிவிட்டது. கீழ்நிலையில் உணவிலே தீராத ஆவலுடையனவாக இருந்த அவற்றை அவ்வெள்ளம் மேலே மிதக்கச் செய்தது. அப்படியே கன்றுகளும் தாயையும் தாயினிடம் பெறும்பாலையும் மறந்து நின்றன. விடைக்குலம் உணவை மறந்து, அருகில் பசுக்கள் இருப்பதையும் மறந்தது ; வயிற்றுப் பசியும், காமப்பசியும் இன்றி இசை வெள்ளத்தில் மிதந்தது. மான்கள் முதலிய விலங்குகளும் அப்படியே ஆயின.

❋

கார்காலம் வந்துவிட்டால் மயில்களுக்குக் கொண்டாட்டம்; தோகை விரித்து ஆடத்தலைப்படும். இங்கும் மயில்கள் ஆடிக்கொண்டுதான் இருந்தன; ஆனல் ஆனய நாயனர் குழலிலிருந்து புறப்பட்ட இசைவெள்ளம் அந்த மயில்களையும் இழுத்துக் கொண்டது. அவை ஆடுதலை மறந்து அங்கே வந்துவிட்டன. பறவைகள் பல

மேலே வானத்தில் பறந்து கொண்டிருந்தன. குழலின் இசை திசையெல்லாம் பறந்து மேலும் சென்று, பறவைகளின் செவிவழியே புகுந்து அவற்றின் உள்ளத்தை நிரப்பியது. அவைகளும் நிலத்துக்கு வந்து நாயனுருக்கு அருகில் படிந்து, தம் உணர்வையே இழந்து கிடந்தன. காட்டில் அங்கங்கே மாடுகளை மேய்த்துக் கொண்டும் வேறு வேலைகளைச் செய்துகொண்டும் இருந்த ஆயர்கள் காதிலும் இக் குழல் ஒலி விழுந்தது. அவர்களும் குழலை வாசிக்கிறவர்கள்தாம். ஆனல் ஆனுயர், ஊதிய குழலின் ஒலி அவர்களையும் மயக்கிவிட்டது. அப்படியப்படியே கையில் உள்ள வேலையைப் போட்டு நின்று விட்டார்கள். அவர்களுக்கும் சொந்த உணர்வே இல்லை,

ஆடுமயில் இனங்களும்அங் கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமோடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவண் கோவலரும் குறைவினையின் துறைநின்ருர்.

[அசைவு அயர்ந்து - அசைவதையும் மறந்து, மாடு - அருகில், குறைவினை யின் துறைநின்ருர் - குறையாக நின்ற தொழிலின் பகுதியிலே நின்ருர்.]

மாடுகளும் மான்களும் எளிதில் இசைக்கு வசமாகிவிட்டன. பறவைகள் சற்றுத் தூரத்தில் பறந்ததனுல் அப்பால் வந்தன. மனிதன் எளிதில் வசமாவதில்லை. விலங்கு மயங்கிப் பறவை மயங்கி வந்த பிறகே அவன் இசைவெள்ளத்தில் ஆழ்ந்தான்.

❊

இந்த இசைவெள்ளம் இம்மட்டோடு நின்றுவிட்டதா? பூவுலகத்தையும் கடந்து அதன் இனிமை படர்ந்தது. வெள்ளத்தின் ஈரம் பூமிக்கு அடியிலும் சென்று தாக்குவது போல, இவ்விசை பாதாள லோகத்துக்கும் சென்றது. நாக லோகத்தில் உள்ளவர்களையும் இசைவெள்ளம் இழுத்து வந்துவிட்டது. பிலங்களின் வழியே அவர்கள் மேலே வந்து இசையில் ஒன்றி நின்ருர்கள். மலைகளின்மேல் வாழும் தெய்வ மகளிர் வந்து மயங்கி நின்ருர்கள். அவர்கள் மிக மிக உயர்ந்த இசையை எழுப்பு கிறவர்கள். இந்த இசை அவர்களையும் மயக்கி இழுத்து வந்துவிட்டது. எப்போதும் இசைபாடும் இயல்புடையவர்கள் வித்தியாதரர்கள். கின்னரர்களும் அத்தகைய வர்களே. சாரணர்கள் விசும்பில் திரிந்து கொண்டே இருப்பவர்கள். தேவர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர்கள் கேளாத இசை இல்லை. இத்தனை பேர் களையும் மயக்கி இந்த இசை மிதக்க வைத்துவிட்டது. தம்தம் விமானங்களில் ஏறிக் கொண்டு, தம் வேலைகளையெல்லாம் மறந்து வானத்தில் வந்து நிரம்பிவிட்டார்கள்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி அந்தத் தெய்விக இசை எல்லோரையும் ஒரே நிலையில் நிற்கும்படி செய்துவிட்டது; ஒரே அநுபவத்தில் ஒன்றி மிதந்தார்கள்.

"பணிபுவனங் களில்உள்ளார் பயில்பிலங்கள் வழிஅணைந்தார்
மணிவரைவாழ் அரமகளிர் மருங்குமயங் கினர்மலிந்தார்
தணிவில்ஒளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரர்அமரர்
அணிவிசும்பில் அயர்வெய்தி விமானங்கள் மிசைஅணைந்தார்.

[பணிபுவனங்கள்-நாகலோகங்கள்; பணி-பாம்பு; பிலம்-குகை; அரமகளிர்-தெய்வப்பெண்கள்; விஞ்சையர்கள்-வித்தியாதரர்கள்.]

கற்பகப்பூஞ் சோலைகளில் தேவமகளிர் மனம் போனபடி விளையாடிக்கொண்டிருந்தனர். கிளிகளைக் கையிலே வைத்துக்கொண்டு பாலை ஊட்டிக்கொண்டிருந்தார்கள். அவை இடையிடையே இன்சொல்லைப் பேசக் கேட்டு இன்புற்றார்கள். ஆனாயர் குழலிசை அந்தக் கற்பகப் பூம்பொழிலிலும் புகுந்தது. அவர்களையும் கீழே இறங்கிவரச் செய்தது. கையிலே பிடித்த கிளிகள் அப்படியே இருக்க, வரும் வேகத்தில் கூந்தல் புரள, விமானங்களில் விரைவாக ஏறி, இங்கே வந்து ஏழிசையமுதத்தைச் செவியாலே பருகி நின்றார்கள்.

சுரமகளிர் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து
கரமலரின் அமுதூட்டும் கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுநறும் குழலலைய விமானங்கள் விரைந்தேறிப்
பரவியஏ ழிசையமுதம் செவிமடுத்துப் பருகினார்.

[சுரமகளிர் - தேவமகளிர். அமுது - பால்.]

இப்படியாக, ஆனாயர் குழலிலிருந்து புறப்பட்ட இசை வெள்ளம் காடு முழுவதும் பரவி விலங்கினங்களையும், பறவைகளையும், ஆயர்களையும் செயலற்றுப் போகச்செய்து தன்வயமாக்கியது; கீழுலகில் உள்ளோரை மேலே இழுத்துவந்தது: மேலுலகில் உள்ளோரையும் மயக்கிக் கவர்ந்து இழுத்துவந்துவிட்டது.

✽

ஆனாயர் குழலை வாசித்துக்கொண்டே இருந்தார். அவர் முன் விலங்கினங்களும், மக்கட் கூட்டமும் தம் இயல்பை மறந்து, தொழிலை மறந்து, இருக்கும் இடத்தை மறந்து, காட்சியையும் மறந்து, உணவையும் மறந்து நின்றன. அவை வந்ததைப் பார்த்தோம். இப்போது எப்படி இருக்கின்றன? இதென்ன, வியப்பிலும் வியப்பாக இருக்கிறதே! இது பூவுலகில் நடக்கிறதுதானா? பாம்புக்கும் மயிலுக்கும் பகையென்று கேட்டிருக்கிறோம். பாம்பு கண்ணிற் பட்டால் அதைக் குத்திக் கொன்றுவிட்டு மறுகாரியம் பார்ப்பது மயில். இங்கே, என்ன ஆச்சரியம்! பாம்பும் மயிலும் அருகருகே இருக்கின்றன. இசையிலே உருகிப்போய்க் கிடக்கின்றன. பாம்பு அந்த வகையில் அதிக ஈடுபாடு உடையதல்லவா? மேலும் மேலும் இசையலைகள் மோதும் போது பாம்பு மயங்கி மயிலின்மேலே விழுகிறது. தன்மேலே அது விழுவதனால் மயிலின் கவனம் கலைந்ததா? அதுதான் இல்லை. கலைந்தால் பாம்பைச் சும்மா விடுமா? பாம்பு விழுந்தது தெரியாமல் மயில் இசை வெள்ளத்தில் மிதக்கிறது.

இது கிடக்கட்டும். அதோ பெரிய பகை விலங்குகள் இரண்டைப் பாருங்கள். அது உண்மையான சிங்கம்தான். துள்ளிக்குதிக்கும் இயல்புடைய அது ஆடாமல் அசையாமல் சித்திரத்தில் அமைத்ததுபோல் இருக்கிறது. அதன் பக்கத்தில் யானை நிற்கிறது. வேறு சமயம் என்றால் சிங்கம் அதைச் சும்மா விடுமா? இப்போது அதன் கண்ணில் யானை படவில்லை. இசை வெள்ளம் அதன் கண்ணை அடைத்து விட்டது. சிங்கம் இப்போது சிங்கமாக இல்லை. அருகிலே சிங்கம் இருக்கிறதே என்று யானை நடுங்குகிறதா? அதற்கும் கண் மயங்கிவிட்டது; காது ஒன்றுதான் உணர்வுடையதாக இருக்கிறது.

இது மிகவும் விசித்திரமான காட்சி. கொடுமையான இந்தப்புலி இசையிலே ஈடுபட்டு வாயை ஆவென்று திறந்தபடி நிற்கிறது. அதற்குமுன் மான் நிற்கிறது. பக்கத்தில் அன்று; நேரே புலிவாயின் அருகில் நிற்கிறது; புலி உணர்வுடன் இருந்தால் அப்படியே விழுங்கிவிட எளிதான நிலை அது. புலியின் வாயில் அதற்குரிய இரை இருக்கிறது; ஆயினும் புலி அதைத் தொடவில்லை. அந்த மானின் வாயில் அதன் இரையாகிய புல் இருக்கிறது; கடைவாய் வழியே சோர்கிறது. பாதி புல்லைக் கடித்துக்கொண்டிருந்தபோதே இந்த இசைமயக்கம் வந்துவிட்டது. ஆகவே பாதி கடித்தநிலையில் அதன்வாயில் புல் தொங்கிக்கொண்டிருக்கிறது. புலி; அதன்வாய்முன் அதன் இரையாகிய மான்; அதன் வாயில் அதன் இரையாகிய புல். இந்தச் சித்திரம் எவ்வளவு அழகியது!

ஒன்றனை ஒன்று பகைக்கும் விலங்குகள் யாவும் தம் பகையை மறந்தன; உணர்வையே இழந்துவிட்டன; விலங்குணர்வை மறந்தன. ஆனால் எல்லாவிலங்கினிடமும் இப்போது ஒருணர்வுமாத்திரம் இருக்கிறது. மற்றவை தொழிற்படவில்லை. இசையை நுகரும் உணர்வுமாத்திரம் வேறுபாடில்லாமல் எல்லா விலங்குகளிடமும் ஒத்துநிற்கிறது. ஏனைய உணர்வுகள் இருந்தால் பாம்பு பாம்பாகச் சீறும்; மயில் மயிலாகக் கொத்தும்; சிங்கம் சிங்கமாகப் பாயும்; யானை யானையாக நடைபோடும்; புலி புலியாகக் கடிக்கும்; மான் மானாக மருளும். அவை அவற்றின் இயற்கையான செயல்கள். இப்போது அவையாவும் தோற்றத்தில் வேறு வேறாகத் தோன்றுகின்றனவேயன்றி, அநுபவநிலையில், இசையுணர்வு பெற்ற நிலையில், ஒரேபடியில் நிற்கின்றன. பிறவற்றைத் துன்புறுத்துபவையும், அவற்றால் துன்புறுபவையுமாக இருவேறு விலங்குகள் இங்கே இருக்கின்றன. நலிவது ஒருசாதி; மெலிவது ஒருசாதி. இப்போது உணர்வு ஒன்றாக இசையை நயந்து நுகரும் ஒரே சாதியாக நிற்கின்றன.

நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றா நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்;
சலியாத நிலையரியும் தடங்கரியும் உடன்சாரும்;
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.

[நலிவார் - துன்புறுத்துவார். எயிறு - பல். அரி - சிங்கம். புல்வாய புல் வாய் - புல்லை வாயிலேயுடைய மான்.]

இசை வெள்ளம் காதைத்தவிர மற்ற உணர்வு தோற்றும் வாயில்களையெல்லாம் அடைத்துவிட்டு, எல்லாப் பிராணிகளையும் ஒரே நிலையில் மிதக்கும்படி செய்தது. அவை தமக்கென ஒரு செயலுமின்றி இருந்தன.

*

ஓடியாடி அசையும் பிராணிகளிடம் இசை செய்த அற்புதத்தைப் பார்த்தோம். ஆனுயர் மேலும் மேலும் குழலை வாசித்துக்கொண்டே இருந்தார். இசை வெள்ளம் மேலும் மேலும் பரவியது. அசையாமல் நிற்கும் மரங்களும் அந்தத் தெய்வ இசையை உணரத்தொடங்கின. அதன்கனிவு மரத்தையும் ஈடுபடுத்தியது. காற்று அசைய வில்லை ; மரங்கள் கிளைகளை அசைக்கவில்லை. உயிரற்ற பொருள்களும் இசையினல் இயல்பினின்றும் மாறிநின்றன. மலையிலிருந்து விழும் அருவிகள் ஒலியடங்கின ; காட்டாறு வேகம் குறைந்து, ஓசை குறைந்து, மெல்லச்சென்றது ; அருவியும் கானும் ஓடாமலே நின்றுவிட்டனவோ என்று ஐயுறும்படி ஆகிவிட்டன.

வானவீதியில் ஓடிக்கொண்டிருந்த மேகங்கள் நின்றுவிட்டன. மேகம் ஓரிடத்தில் நின்ருல் கறுத்துப் பொழிவதுதானே இயற்கை? இங்கே அவை பொழியவும் இல்லை ; இடிக்கவும் இல்லை. கடல்கள்கூட அலையடங்கிக்கிடந்தன. இசையின் மாய சக்தியை என்னென்று சொல்வது ? உயிருள்ளவற்றை மயக்கியதுமாத்திரமன்றி உயிரில்லாத பொருள்களையும் அமைதியுறச்செய்தது.

மருவியகால் விசைத்தசையா ; மரங்கள்மலர்ச் சினைசலியா ;
கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் கலித்தோடா ;
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்பொழியப் புனல்சோரா :
இருவிசும்பி னிடைமுழங்கா ; எழுகடலும் இடைதுளும்பா,

[கால் - காற்று, விசைத்து - வேகமாக, சினை - கிளை, சலியா - அசைய வில்லை, கருவரை - பெரியமலை, கலித்து - ஒலித்து, புடைபெயர்வு ஒழிய - அசைத லின்றி, புனல்சோரா . நீர் சொரியவில்லை, இருவிசும்பு - பரந்த வானம்.]

இசை வெள்ளம் மெல்லமெல்ல உயர்ந்து உயிர்ப் பொருள்களையும் உயிர் இல்லாத பொருள்களையும் தன்பால் மிதக்கச் செய்துவிடுகிறது. அதில் அகப்படாத பொருளே இல்லையென்று சொல்லிவிடலாம். உயிர்க்கூட்டங்களை உருக்கிய அவ்விசை உயிரில்லாத பொருள்களையும் ஈடுபடுத்திச் செயலறச் செய்துவிட்டது. இவ்வாறு சேக்கிழார் வருணிக்கிருர்.

*

'இப்படி உண்மையிலே நடந்ததா?' என்ற கேள்வி உலகியலை மாத்திரம் நோக்குபவர்களிடம் தோற்றும். உலகியலோடு ஒட்டிய செயல்களையும் அவற்றோடு இசைந்த விளைவுகளையும், கண்டு பழகியவர்கள் நாம். இங்கே ஆனாய நாயனார் வெறும் இசைப் புலவராக இருந்து குழல் வாசிக்கவில்லை. சிவபெருமானுடைய திருவடித் தாமரையில் ஒன்றிய வண்டாக இருந்தது அவர் உள்ளம். அங்கே சொரியும் ஆனந்தத்தேனை நுகர்ந்தது. ஐந்தெழுத்தாகிய இன்னிசை அவ்வண்டினிடம் எழும்பியது. அதுவே குழல்வழியே மற்றவர்களும் கேட்கும்படி புறத்தே அலை அலையாகப் பரவியது. அந்த இசை தெய்விக சக்தி பெற்றது; சார்ந்த இடங்களிலெல்லாம் அமைதியை உண்டாக்குவது.

பொதுவாக இசை மனத்தில் அமைதியை உண்டாக்குவது. கொடுமை மனத்தினரையும் நெகிழப் பண்ணுவது. சங்க காலத்துப் பாட்டாகிய பொருநர் ஆற்றுப் படையில் வரும் செய்தி ஒன்று இக்கருத்தைத் தெளிவாக்குகிறது. முடத்தாமக் கண்ணியார் என்ற புலவர் பாடியது அது. அவர் யாழை வருணிக்கிறார். அதிலிருந்து எழும் இசையினால் உண்டாகும் விளைவைச் சொல்கிறார். பாலை நிலத்தின் வழியே பாணரும் அவர் மனைவியாராகிய விறலியரும் போய்க்கொண்டிருப்பார்கள். அந்நிலத்தில் பதுங்கிவாழும் வழிப்பறிக்காரர்கள் அவர்களை மறித்துக் கொள்ளையிடத் தொடங்குவார்கள். விறலி அந்த யாழை வாசித்துப் பாலைப் பண்ணை எழுப்பினால் அதுகேட்டு ஆறலைகள்வர் தம்கொடுஞ்செயலைச் செய்யாமல் அதில் ஈடுபடுவர். அவர்களிடம் உள்ள முரட்டுத் தனத்தையும் கொடுமையையும் அந்தப் பாட்டு மாற்றி விடுமாம். தம் கையில்உள்ள ஆயுதங்களைக் கீழேபோட்டுவிட்டு அந்தப் பாலைப் பண்ணில் மயங்கி நிற்பார்களாம்.

"ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" †

என்பது அப்பகுதி.

பாடுவதையே தம் தொழிலாகச் கொண்டு அதனால் தம் வயிற்றைக் கழுவிக் கொள்ளும் அவர்களுடைய பாட்டுக்கே இத்தகைய ஆற்றல் இருக்குமாயின் சிவனருளிலே மிதக்கும் உள்ளமுடைய ஆனாய நாயனார் இசைக்கும் இசைக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கவேண்டும்! ஆறலைகள்வர் படைகளை நழுவவிட்டதை முடத்தாமக் கண்ணியார் சொல்கிறார். சேக்கிழாரோ பசுக்கள் பசியுணர்வை நழுவவிட்டதைச் சொன்னார். கன்றுகள் தாயன்பை நழுவவிட்டதைச் சொன்னார். சிங்கமும் புலியும் தம் பகைமையையும் கொடுமையையும் நழுவவிட, யானையும் மானும் தம் அச்ச உணர்வை நழுவவிட்டன. மரமும் அருவியும் காற்றும் ஆறும் தம் செயலில் வேகத்தை நழுவவிட்டன.

---

† வழிப்பறிக்காரர்களாகிய கள்வர்கள் படைகளைக் கைவிடும்படியாக அவர்களிடம் இருந்த அருளுக்கு விரோதமாகிய கொடுமையை மாற்றும் கேட்பதற்கினிய பாலைப் பண். அருளின்மாறு - கொடுமை.

ஆனாய நாயனாருடைய தெய்வ இசை எங்கும் அமைதியை உண்டாக்கியது என்று உணர்த்த எண்ணினார் சேக்கிழார். அதை நன்றாக உணர்த்தவேண்டு மென்பது அவர் ஆர்வம். நாம் எதையேனும் வற்புறுத்திச் சொல்லவேண்டுமானால் கற்பனையைக் கூட்டிச் சொல்வது வழக்கம். நன்றாகப் பேசத் தெரிந்தவர்கள் அதைப் பின்னும் நன்றாகப் பயன்படுத்துவார்கள். ஒருவன் பேராற்றல் உடையவன் என்பதைத் தெரிவிக்க எண்ணினால், "அவன் உப்பில்லாமல் கலக்கஞ்சி குடிக்கிறவன்" என்று சொல்கிறோம். அந்தப் பேச்சில் ஒவ்வொரு சொல்லுக்கும் அப்படியப்படியே பொருள்கொண்டு குழம்பக்கூடாது. கலக்கஞ்சி என்ற அளவு அங்கே கணிதத்தில் வருவதுபோன்றதன்று. அது அவனுடைய ஆற்றலை எடுத்துக்காட்ட ஒரு கற்பனை வாய்பாடு. "அவன் மணலைக் கயிறாகத் திரிப்பான்" என்று சொல்கிறோம். அதுவும் அத்தகையதுதான். இத்தகைய பேச்சில் நாம் ஒருவனுடைய ஆற்றலைச் சொல் வதற்குச் சில கற்பனைக் காட்சிகள் அளவுகளாக, வாய்பாடுகளாக உதவுகின்றன. அந்தக் கற்பனைக் காட்சி நடக்கக்கூடியதாக இருக்கவேண்டும் என்பது இல்லை.

"உங்கள் வீட்டுச் சாப்பாடு அமுதமாகிறது" என்று சொல்கிறோம். அமுதத்தை நாமும் கண்டதில்லை; நமக்கு விருந்திட்டவரும் கண்டதில்லை. ஆயினும் நம் கற்பனையிலே உள்ள அது சிறந்த உணவில் சுவையைச் சொல்லிலே அளந்து காட்ட வாய்பாடாக உதவுகிறது. "குழந்தையின் முகத்தில் பால் வடிகிறது." என்றால் அழகை வெளிப்படுத்தும் வாய்பாடாக அதைக் கொள்ளவேண்டுமேயன்றி, "முகத்தில் பால் வடிகிறதாவது! வேர்வைதான் வடியும்!" என்று கற்பனை யுணர்வையும் ரஸிகத் தன்மையையும் துடைத்துவிட்டுச் சொல்லலாமா? உலகியலிலே பேச்சு வழக்கிலேயே, நாம் இத்தகைய கற்பனை அளவுகளை வழங்கும்போது, கற்பனையால் பேருலகங்களையே படைத்து நம்மை அவற்றில் குடியேற்றிவிடும் பெருங் கவிஞர்களின் ஆற்றலைச் சொல்லி வரம்புகட்ட முடியுமா?

இசையின் இனிமையையும் அதனால் உண்டாகும் அமைதியையும் நன்றாக வெளியிடக் கவிஞர் பயன்படுத்தும் அளவுகோலாக இந்தக் கற்பனைக் காட்சிகள் நிற்கின்றன. சொல்லுக்குச் சொல் வைத்து, பிரத்யட்சப் பிரமாணமாகிய அளவாக இவற்றை நினைத்துப் பார்த்தால் இங்கே இன்பம் பிறவாது; கவிச்சுவையை நுகரவும் முடியாது. ஆகவே சேக்கிழார் கவிஞர் ஆளும் கற்பனையளவு கொண்டு அழகிய படம் ஒன்றைத் தம் பாவினாலே எழுதிக்காட்டுகிறார். அந்தப் படம் உலக நிகழ்ச்சிகளில் எங்கேனும் இருக்குமா என்று பார்ப்பது சுவைக்கும் வழியல்ல. உலக நிகழ்ச்சியில் இசைகேட்ட மக்கள் செயலொழிந்து நிற்பதைப் பார்க்கிறோம். மாடுகள் தெம்மாங்குப் பாட்டில் மயங்கி வண்டி இழுப்பதைப் பார்க்கிறோம். பாம்பு மயங்குவதைப் பார்க் கிறோம். நாம் காணும் இந்தக் காட்சிகளைப் பின்னும் கற்பனை வண்ணத்தால் பெரியன வாக்கிக் காட்டுகிறார் கவிஞர். மற்றொரு நுட்பமும் இங்கே உண்டு.

ஆனய நாயனரை இறைவன் ஆட்கொண்டான். பெரிய புராணத்தில் வரும் நாயன்மார் அத்தனைபேரும் ஒவ்வொரு வகையில் தொண்டாற்றி இறுதில் அதன் பயனாக இறைவன் திருவடியை அடைகின்றனர்கள். ஆனய நாயனர் செய்த தொண்டு இசைத் தொண்டு. பிறர் உள்ளம் மகிழ வேண்டுமென்று அவர் குழலை வாசிக்கவில்லை. குயில் தானே பாடுவது போல வண்டு பிறரை நினைந்து பாடாமல் இயல்பாகவே பாடுவதுபோல அவர் குழல் இசைக்கிறார். அவர் இசைக்கலை வல்லவர் ; அதனால் அவர் இசை யாவரையும் மயக்கும் தன்மை வாய்ந்ததாக இருந்தது. அவர் கலைஞராக மட்டும் இருந்தால் பெரிய புராணத்தில் அவருக்கு இடம் இல்லை. இறைவனிடம் மாருத அன்புடையவர். அந்த அன்பு அவருடைய செயல்களில் கலந்து மணம் விசுகிறது. அவருடைய கலையிலும் கலந்து பொலிகிறது. மற்றவர்கள் இறைவனுடைய துதிப்பாடல்களை இசைக் கருவிகளில் வாசிப்பார்கள். அந்த உருப்படிகள் இன்றி வெறும் சுரங்களை வாசிப்பாரும் உண்டு. பாட்டின்றிப் பண்ணை வாசிப்பதும் உண்டு. ஆனய நாயனர் பஞ்சாட்சரத்தையே வாசித்தார். அது எப்படி முடியும் ? சுரங்களுக்குரிய அட்சரங்களையே வைத்துப்பாடுவதும், இசைக் கருவியால் வாசிப்பதும் இசைப் புலவர்களுக்கு வழக்கம். வெறும் சுரக்கோவை யாகவே பாட்டுக்கச்சேரிகளில் பாடி அடுக்கடுக்காகச் சுரவரிசைகளில் ராக அமைப்பைக் காட்டுவார்கள் அவர்கள். அங்கே சாகித்தியமே இராது. ஆனய நாயனரும் பஞ்சாட்சரத்தையே வைத்துக்கொண்டு குழலிசைத்தார். இது இசைக்கலைக்குப் பொருத்தமான செயலே.

பஞ்சாட்சரத்தைக் கொண்டு இசை பாடுவதற்குக் காரணம் ஆனய நாயனருடைய உள்ளநிலை. இறைவன் திருமுன் சென்று வழிபடுபவர்கள் அவரவர்கள் பக்குவத்துக்கு ஏற்ப வெவ்வேறு வகையில் வணங்குவார்கள். இறைவன் திருக்கோலம் கண்டு வியப்பார் சிலர் ; கீழே விழுந்து வணங்குவார் சிலர் ; உச்சிமேற் கைகூப்புவார் சிலர் ; வாயாரப் பாடுவார் சிலர் ; கண்ணீர்வாரத் தேம்புவார் சிலர்.

மனம் மொழி மெய் என்ற மூன்று கரணங்களாலும் செய்யும் வழிபாடு உண்டு. இம்மூன்றிலும் மனத்தால் செய்யும் வழிபாடு உண்டு. இம்மூன்றிலும் மனத்தால் செய்யும் வழிபாடு தியானம். அதுவே சிறந்தது. தியானம் செய்பவர்களுக்கு மந்திரம் பயன்படும். மனத்தால் நினைப்பாருடைய துன்பத்தைப் போக்குவது என்று அந்தச் சொல்லுக்குப் பொருள் கூறுவார்கள். வாக்கினல் வெளிப்படையாகச் சொல்லாமல் நாப்புரளும் அளவிலே மந்திரத்தைச் செபிக்கும் வழக்கத்தை நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் சொல்கிறார்.

ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி.

துதிப்பாக்களைவிட மந்திரங்கள் சிறப்புடையன. மந்திரங்கள் எல்லாவற்றிலும் பஞ்சாட்சரம் சிறப்புடையது. வாயாரப்பாடும் தொண்டர்களில் மந்திரம் செபிப்பார்

சிறந்தவர். அப்படியே பாட்டை இசைக் கருவியிலே பாடுகிறவர்களிலும் மந்திரத்தை இசைப்பவர் சிறந்தவர். அது எளிய காரியமன்று. அரிய செயலால்தானே பெரிய வர்கள் சிறப்படைகிருர்கள் ?

ஆனய நாயனர் உள்ளம் பஞ்சாட்சர மந்திரத்தைச் செபித்தது. அவர் வாய் குழல் வழியே வாசித்தது. அவர் இசை வழியே யோகம் பயின்ருர். அந்த யோகத் துக்குப் பயன் அருள இறைவனே எழுந்தருளி வந்தான். ஆனய நாயனருடைய வரலாற்றின் சாரமே அவர் ஐந்தெழுந்தைக் குழலிசையில் இணைத்துப் பாட, இறைவன் எழுந்தருளி வந்து ஆட்கொண்டான் என்பதுதான். அதைச் சொல்லவேண்டும். ‘ ஆனயர் ஐந்தெழுத்தைக் குழலிசையிலே பாடினர். இறைவன் அம்மையோடு விடை யின்மேல் எழுந்தருளிவந்து ஆட்கொண்டான் ’ என்று சொன்னல் அதில் சுவை யில்லை. சேக்கிழாராகிய கவிஞர் இந்த வரலாற்றைச் சுவைபடச் சொல்கிருர். இறைவன் இசை விரும்பும் கூத்தன். அவன் வருகிருன். அவன் வருவது எளிய செயலல்ல. அதற்குமுன் பல செயல்கள் நிகழவேண்டும். ஆனயர் இசை பசுக்களை தன்வசமாக்கிப் பின்னும் மேலே அலையோடிப் பசுபதியையும் இழுத்துவந்தது என்று கற்பனை செய்கிருர் சேக்கிழார். இசையில் வரவர மேலே எழும் ஆரோகணகதி இருக்கிற தல்லவா ? அதுபோலக் கவியில் படிகாட்டி உயர உயரச் செல்லுகிருர்.

ஆனயர் பெருக்கிய இசை வெள்ளம் இவ்வுலகத்தில் வாழும் சரங்களையும், அசரங்களையும் அமருலகத்தில் வாழும் விஞ்சையர் முதலியவர்களையும் தன்பால் இழுத்து ஒரே மட்டத்தில் மிதக்கவைத்துவிடுகிறது ; மேலும் உயர்கிறது ; அப்போது இறைவனும் வருகிருன்.

உண்மையான அன்பராகிய ஆனய நாயனர் உள்ளத்தே ஊற்றெடுத்த அன்பினல் விளைந்து புறப்பட்ட புல்லாங்குழல் ஓசையானது மண்ணுலகம் முழுவதை யும் நிறைத்து விண்ணுலகத்தையும் தன் வசப்படுத்தியது ; அப்பாலும் சென்று பொய்யன்புக் கெட்டாமல் பொன்மன்றத்தில் நடம்புரியும் ஐயனுடைய திருச்செவியி னருகே அணைந்தது ’ என்று சேக்கிழார் பாடுகிருர்.

மேய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து வானந்தன் வயமாக்கிப்
போய்யன்புக் கேட்டாத போற்போதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்சேவியின் அருகணையப் பேருகியதால்.

[மெய்யன்பர் - ஆனய நாயனர். பொற்பொது - பொன்னம்பலம்; குழலோசை பெருகியது.]

இறைவனுடைய திருச்செவியில் ஏறுவதற்குமுன் அந்த இசை எத்தனையோ படிகளில் ஏறவேண்டி இருந்தது. உலகில் பாடுவோருடைய இசை ஒன்றிரண்டு படிகூட ஏறுவதற்கு இயலாமல் நொண்டுகிறது. மனிதன் மனத்தையே உருகும்படி

செய்யமாட்டாமல் தாளம் போடுகிறது. ஆனாயர் இசையினால் விளைந்த விளைவைக் கற்பனை செய்வதற்கே ஒரு தனி உள்ளப்பாங்கு வேண்டும்; உயர்வுள்ளும் உள்ளம் வேண்டும். ஆரோகணகதியில் செல்லும் மனம் வேண்டும். சேக்கிழார் அத்தகைய உள்ளம் படைத்தவர். அதனால் அந்த இசையும் இசையின் விளைவைப் படிப்படியாகக் கோலம் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறார்.

அந்த இசை வெள்ளம் குழலிலிருந்து வெளியாயிற்று. ஆனால் அந்தக் குழலிலேயோ அது பிறந்தது? அன்று, அன்று. ஆனாயர் திருவாயினால் ஊதியதால் அவ்வோசை குழலில் பிறந்தது; ஆகையால் அது அவர் வாயிற் பிறந்ததென்று சொல்லலாகும்? அதுவும் சரியன்று.

கவிஞனுடைய கலை முதலில் அவன் உள்ளத்தில்தான் முளைவிடும். கலைக்கரு கலைஞன் உள்ளத்தில் தோன்றித் தங்கி ஊறி முளைவிடும். பின்புதான் அது உருப் பெற்று வெளியாகும். ஓவியனானாலும் முதலில் உள்ளந்தான் தொழிற்படும். சங்கீத வித்வான்கள் பாடும்போது, அவர்களுடைய மனோதர்மம் விரிந்தது என்று சொல்லு வார்கள். ஆகையால் இந்த இசை குழலிலும் பிறக்கவில்லை; ஆனாயர் வாயிலும் பிறக்கவில்லை; அவர் மனத்திலே பிறந்தது என்று சொல்லுவதுதானே பொருத்தம்? சேக்கிழார் அதற்கு மேலும் ஒருபடிபோய் நுட்பமாகச் சொல்லுகிறார்.

மனத்தின் நிலைபல. வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு நிலைகளை (moods) உடையது அது. ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வோர் எண்ணமும் அதற்கு ஏற்ற விளைவுகளும் உண்டாகும். ஆனாய நாயனார் உள்ளத்திலும் பல பகுதிகள் உண்டு. அவர் வாழ்கின்றவர்; வாழ்க்கையின் பல துறைகளில் படிந்த வாசனை அவர் உள்ளத்தில் இருக்கும். அந்த வாசனைகளும், உணர்ச்சிகளும் இப்போது தலை காட்டாமல் மங்கி நிற்கின்றன. எப்படி இசையில் ஈடுபட்ட பிராணிகள் யாவும் மற்ற இயல்புகள் எல்லாம் நழுவ உணர்வு ஒன்றாக நயந்தனவோ, அதுபோல மற்ற நிலைகளும் இயல்புகளும் நழுவ ஆனாய நாயனாருக்கு இப்போது இறைவன்பால் உள்ள அன்பு ஒன்றே தோன்றி நின்றது. அதைத் தூண்டிச் சுடர்விடச் செய்தது கொன்றை மரத்தின் தோற்றம். சிவபிரானை நினைக்கச்செய்ததல்லவா?

அந்த அன்புணர்ச்சியே வித்தாயிற்று. அது கலைஞருடைய உள்ளத்திலே தோன்றினமையால் கலைமணம்விசி முளைத்து, வளர்ந்து மலர்ந்தது. அவர் உள்ளத் திலே தோன்றிய அன்பூற்று, அவ்வுள்ளம் இசைக்கலை நிரம்பிய நிலமாதலால் இசை யாகப் பெருகியது. தனக்கென்று சுவையும் நிறமும் இல்லாத நீர்நிலத்தியல்பால் அவற்றைப் பெறுவதுபோல இசையாக உருப்பெற்றது. ஆதலால் இந்த இசை ஆனாய நாயனாருடைய மனதிலே பிறக்கவில்லை; அங்குள்ள அன்பிலே பிறந்த தாம். அன்பென்னும் ஊற்றுக்கண் இசையாகப் புறப்படக் கலை உள்ளத்திலே காலோடித் திருவாயிலே ஆறாகிக் குழல்வழியே வெள்ளப்பெருக்காக வளைந்து பரந்தது.

மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்த இசைக் குழலோசை

என்பது எவ்வளவு நுட்பமாக உணர்ந்துரைக்கும் பகுதி!

பொற்பொதுவில் நடம்புரியும் ஐயனுடைய திருச்செவியை எட்டியது இசை. மேட்டிலே ஒரு பொருள் இருக்கிறது. வெள்ளம் மெல்ல மெல்ல உயர்கிறது. மேட்டையும் எட்டுகிறது. அதிலுள்ள பொருளையும் எட்டுகிறது. பிறகு என்ன ஆகும்? அந்தப்பொருள் தன்னிடத்தினின்றும் நீங்கி வெள்ளத்தில் கலந்து மிதக்கத் தொடங்கிவிடும். இங்கே இசைவெள்ளம் ஐயனை அணுகித் தொட்டது. அவனும் அதில் ஈடுபட்டு வந்துவிட்டான்.

'ஆனுயர் குழலோசையைக் கேட்டருளி, கருணையே திருமேனியாக உடைய அம்பிகையோடு விடையின் மேல் ஊர்ந்து வான் வழியே வந்தணைந்தான் இறைவன்' என்று பாடுகிறார் சேக்கிழார்.

ஆனுயர் குழலோசை கேட்டருளி, அருட்கருணை
தானுய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானுதி காரணராம் கண்ணுதலார் விடைஉகைத்து
வானுறு வந்தணைந்தார் மதிநாறும் சடைதாழ.

[தவ வல்லி-இறைவி; கான ஆதிகாரணர்-இசைக்கு முதற்காரணமாக உள்ள சிவபிரான்; கண்ணுதலார் - நெற்றியிலே கண்ணை உடையவர்; விடை உகைத்து-இடப வாகனத்தைச் செலுத்தி; வானுறு - வானத்தின் வழியே; மதிநாறும் - சந்திரன் தோன்றும்]

கலையளவிலே இந்த இசை நின்றிருந்தால் உலகளவிலே அதன் விளைவும் நின்றிருக்கும். ஆனால் அன்பெனும் வித்திலிருந்து தோன்றியதாதலின் அருள் என்னும் கனியிலேபோய் நின்றது. கருணையினும் உயர்ந்த கருணையாகிய அருட் கருணையே தன் உள்ளமாகக் கொண்ட அம்மையுடன் இறைவன், எழுந்தருளுகிறான். தாயுமானார் தெய்வ அருட்கருணை, என்று ஒன்று சொல்லுவார்.

எவ்வுயிரும் என்உயிர்போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

என்பது காண்க. இங்கே தெய்வமாகிய இறைவனிடம் உள்ள அருளாய இறைவி யிடம் பழுத்த கருணையாகிய உள்ளத்தை இழுத்து வருகிறது இசை. 'அருட் கருணைதானுய திருவுள்ளமுடைய தவவல்லியுடன் கானுதி காரணர்' வருகிறாராம். இறைவன், அவன்பால் உள்ள தவ வல்லி, அவள் திருவுள்ளம் என்ற மூன்றையும் தெய்வம், அருள், கருணை என்று கொள்ளவேண்டும். தெய்வம் அருட்சக்தியுடன் இறங்கி வந்தான்; அருட்சக்தி கருணை உள்ளத்துடன் இறங்கி வந்தாள்.

ஆனாயர் மனத்து விளைந்த அன்பானது வித்து; அம்மையின் உள்ளக் கருணை விளைவு. வித்திலே முளைத்த மரத்தில் கனி விளைகிறது. அந்தக் கனியிலும் வித்து இருக்கிறது. ஆனாயர் அன்பு பெரிய அன்பாகிய கருணை என்னும் வித்திலே சென்று நிற்கிறது.

ஆனாயர் இசைத்த இசையின் பயனாக இறைவன் வந்தான். அந்த இசையை எழுப்புபவன் யார்? அவனும் அந்த இறைவனே. அவனே கானத்துக்கு ஆதி காரணன். ஆதிகாரணன் என்பது தானே காரியமாக உருப்பெறும். பானை காரியம்; அதற்கு ஆதிகாரணம் மண். அதுபோல, இசையாகிய காரியத்திற்கு ஆதிகாரணமாக நிற்பவன் இறைவன். இசையாக நிற்பவனும் அவன். அதன் பயனாக வருபவனும் அவனே. இசையின் முதலும் நடுவும் முடிவும் அவன்தான். நாதப்பிரம்மம் என்று சிலர் சொல்லுகிறார்கள் அல்லவா? "ஏழிசையாய் இசைப் பயனாய்" என்று சுந்தர மூர்த்திநாயனார் பாடுகிறார்.


கானாதி காரணனும் கண்ணுதல் இசை விரும்பும் கூத்தனாக, இசைக்குப்பயன் அருளும் வள்ளலாக, எழுந்தருளினான் என்று சேக்கிழார் பாடுகிறார். பாட்டு இல்லாமல் ஆட்டம் இல்லை. அவன் கூத்தனாகையால் இசையை விரும்பினான். இவ்வாறு எழுந் தருளிய பெருமான் ஆனாயரை நோக்கி மகிழ்கூர்ந்து, "இந்த நிலையிலே நம்பால் அணைவாய்" என்று திருவருள் பாலித்தான். ஆனாயர் அவ்வாறே 'ஐயர் திருமருங் கணைந்தார்'. இப்படி வரலாறு முடிகிறது.

நுட்பமான அன்பும் இசையும் இணைந்து எழுந்த நிகழ்ச்சியையும் அவற்றின் விளைவையும் கற்பனைக் காட்சியால் அளந்து காட்டிய அன்பரும் கவிஞருமாகிய சேக்கிழாருடைய கவிதை நுண்பொருளையும் பருப்பொருளாகக் காட்டி இன்புறுத்து கிறது.

கலை மக்கள்வாழ்க்கை - இவற்றினூடே பிணைந்திருக்கும் கடவுளுணர்ச்சியை எந்த விஞ்ஞானியும் பிரிக்கமுடியாது.

— கயிலைக் குருமணி

கயிலாயம் :



நந்திமுகம் (மேற்கு)

கயிலை மேற்குமுகம் :



வழிபாடு

கணவனைப் பேணுதல்

திருமதி. R. இராஜரெத்தினம் அம்மையார்.

உலகத்தில் மானிடராய்ப் பிறந்தோர் வாழ்க்கையின் பயனைத் துய்த்தற்கு 'இல்லறம்; துறவறம்' என்னும் இருவழிகள் உள்ளன. அவற்றுள் கணவனும் மனைவியுமாகிய இருவர்சேர்ந்து நடத்தும் வாழ்க்கையே இல்லற வாழ்க்கை எனப்படும். இல்லறத்தை இனிது நடத்துவதற்கு இருவரும் இன்றியமையாதவராவர். ஆகையால் தான் அவர்களைத் தலைவன் - தலைவி; கிழவன் - கிழத்தி; காதலன் - காதலி என்னும் ஒத்த பெயர்களால் அழைக்கின்றனர். அவ்விருவருள் கணவன் வெளியிற்சென்று பொருள்தேடுங் கடப்பாடுடையவன். மனைவிக்கோ எனில் மனையறத்தை மாண்புடன் நடத்துவதற்கு அரிய பல கடமைகள் உண்டு. அவற்றுள் தலையாயது கணவனைப் பேணுதலாகும். அக்கடமையினை ஈண்டுச் சற்று ஆராய்வோம்.

ஒரு பெண் ஓர் ஆடவனை வாழ்க்கைத் துணைவனாகப் பெற்று வாழ்கின்றாள். அவள் தன் கணவனது இன்பமே தனது இன்பமெனக்கொண்டு ஒழுகுகிறாள். அவனது துன்பத்தையும் அவள் அவ்வாறே கருதுதல் மரபு என்பதனைத் "தன் துயர்காணாத் தகைசால் பூங்கொடி" என்னும் சிலப்பதிகார வரிகள் வலியுறுத்தும். மனைவியானவள் தன் கணவனுக்குச் சமயம் நேர்ந்தபோது உயிர்கொடுத்தும் தனது கடமையை நிறைவேற்றவேண்டும். உதாரணமாகத் தன் கணவனுடன் உயிர்நீத்த பாண்டியன் நெடுஞ்செழியனுடைய மனைவியாகிய கோப்பெருந்தேவியைக் கூறலாம். அத்துயர நிகழ்ச்சியை விளக்கியவிடத்து இளங்கோவடிகள் "தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினாள்" என்று சிறப்பிக்கின்றார். அவ்வாறே ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் தேவியும் தன் கணவன் இறந்தபிறகு உயிர்வாழ விரும்பாது தீப்பாய்ந்தாள். அவளைத் தடுத்த பெரியோர்களை நோக்கி, "சான்றோர்களே! என்னை ஏன் தடுக்கிறீர்கள்? என்போன்றவர்களுக்கு இந்த ஈமப்படுக்கையும் குளிர்ந்த தாமரைத் தடாகமும் ஒன்றேயாகும்" எனக் கூறி உடன்கட்டை ஏறினாள்.

திருமணம் ஆவதற்கு முன்னமேயே தனக்கு நிச்சயம் செய்யப்பட்ட வீரராகிய கலிப்பகையார் போரிலே இறந்துபட்டார் என்பதைக் கேட்ட திருநாவுக்கரசரின் தமக்கையாகிய திலகவதியார் கைம்மை நோன்பை மேற்கொண்டு வாழ்ந்துவந்தார் என்று அறிகிறோம். இத்தகைய அன்பினை விளக்குவதற்காகவே தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும்.

"அன்பினுக்காக வாழ்பவரார் — அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவரார்"

என்று பெண்களைப் பாராட்டிப் பாடியுள்ளார். கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லறம் நடத்துகையில் கணவன் தூதுவனாகவோ, போரின்பொருட்டோ, பொருள்

தேடும் நிமித்தமோ, கல்வி கற்பதற்காகவோ மனைவியை விட்டுப் பிரிவான். அவ்வ மயம் தலைவி பிரிவினை ஆற்றியிருப்பாள். பரத்தையிற் பிரிவினல் தலைவியர் அல்ல லுற்றபோதிலும், அவர்கள் தங்கள் கணவனைக் கண்டவிடத்து அவர்களை இன்முகத் துடன் வரவேற்பர். உதாரணமாக, "குன்றத்தன்ன பொருளைத் தொலைத்துவிட் டேன்" என்று கூறித் தன் தவறினை உணர்ந்து கழிவிரக்கங்கொண்ட கோவலனைக் கண்ணகி நகைமுகங்காட்டி உபசரித்து "சிலம்புள கொண்ம்" எனக் கூறினள். மேலும் அவன் 'புறப்படு' என்றவுடனே அவனுடன் மதுரைக்குச் சென்ருள்.

ஓர் இல்லக்கிழத்தியானவள் தன் கணவனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்து மங்கலம் என்ற மனைமாட்சியைக் காத்து, அதன் நன்கலமாகிய நன்மக்களைப் பயந்து அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும்.

"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

எனப் பெண்ணிற்குரிய இலக்கணத்தினை வகுத்தார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். இதிலிருந்து ஒரு பெண் தன் கற்பைக் காத்தல், தன் கணவனைப் பேணுதல், தன் குடிக்கு இழுக்குவராமல் காத்தல் என்ற மூன்று விஷயங்களும் தெளிவாகின்றன.

உயிர் வாழ்தற்கு இன்றியமையாது வேண்டியது உண்டி. கொண்டவனின் குறிப்பறிந்து சுவைமிக்கதும், உடல் நலத்திற்கு ஏற்றதும், அவனது விருப்பத்திற்கு உகந்ததுமான உண்டியைச் சமைத்து உண்பித்தல் மனைவியின் முதற் கடமையாகும். வீட்டில் பணியாளர்கள் பலர் இருப்பினும் தானே பாகம் செய்து அவனுக்குப் பரிமாறுதல் சிறப்புடையதாகும். இதற்கு இலக்கியத்திலும் சான்று காணலாம். அருந்து மெல்லடகு யாரிட அருந்தும் என ஜானகி வருந்தியதையும், தான் படைத்த மோர்க் குழம்பைக் கணவன் இனிது என உண்பதைக்கண்டு மகிழ்ந்த குறுந்தொகைச் செல்வியையும் காண்கின்ரேம்.

கணவன் ஏழையாக இருந்த போதிலும் அவனை இகழாமல் அவனது இன்பத் திலும், துன்பத்திலும் பங்கு பெற்று வந்தனர் என்பதற்குக் கணவனுடன் காடு சென்ற தமயந்தி, சந்திரமதி முதலிய பெண்கள் எடுத்துக்காட்டாய் அமைந்தனர். இவ்வாறே சங்ககாலத் தலைவியும் வறுமையின் கொடுமையால் பட்டினிகிடக்க வேண்டிய நிலையிலும் கணவனுடனேயே வாழ விரும்பினள் என்று அறிகிரேம்.

வீட்டில் செல்வ நிலை எப்படி இருந்தாலும் இல்லறத்தார்க்குரிய கடமைகளுள் விருந்தெதிர்கோடலும் ஒன்ருகும். இதற்கு இளையான்குடிமாற நாயனரின் மனைவி யார் சிறந்த சான்ருகத் திகழ்வர். தன் வீட்டைத்தேடி வந்த விருந்தினருக்குச் சமைக்கப் பொருள் இல்லாத நிலையிலும் அன்று காலையில் வயலில் விதைத்த நெல்

விதைகளைப் பொறுக்கிவரச் செய்து, அதை அரிசியாக்கி உணவு சமைத்து நள்ளிர விலும் விருந்தினரை உபசரித்தார். வந்த விருந்தினரின் முகங்கோணுமல் அவரைத் தக்கவாறு உபசரிப்பதே ஒரு குடும்பப் பெண்ணின் கடமையாகும். 'இதனை வலி யுறுத்தவே வள்ளுவப் பெருந்தகையும்,

" மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து "

என்று கூறியுள்ளார். மேலும் மனைவிக்குரிய கடமைகளுள் கணவன் விரும்பிக் கேட்கும் பொழுது அவனுக்குச் சிறந்த ஆலோசனை கூறுவதும் ஒன்ருகும். எடுத்துக்காட்டாக, சேரன் செங்குட்டுவன் தன் மனைவியாகிய வேண்மாளிடம் " கண்ணகி, கோப்பெருந் தேவி ஆகிய இருவரில் சிறந்தவர் யார் ? " என்று கேட்டபோது அரசி " நம் நாடு நோக்கிவந்த பத்தினித் தெய்வமாகிய கண்ணகியைப் போற்றுதல் வேண்டுமென்று கூறிக் கோயில் கட்டுவித்தாள்.

இனிப் பழங்காலப் பெண்கள் எவ்வாறு தமது கணவரைத் தெய்வமாகப் பாவித்தனர் என்பதைப் பார்ப்போம். தேவந்தி என்ற பார்ப்பனத்தோழி கண்ணகி யைத் தெய்வ வழிபாடு செய்யும்படிக் கூறியபோது கண்ணகி, கணவனையன்றி வேறு தெய்வத்தை வணங்குவது கற்புடைய மகளிருக்குப் பெருமை தருவது அன்று என்று கூறினுள். " குலமகட்குத் தெய்வம் கொழுநனே " என்று குமரகுருபரரும் கூறி யுள்ளார்.

" கண்டார் இகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானையல்லால் அறியாக்குலமகள் போல் " என்ற வாக்கியமும் பெண்களுக்கு இருக்கவேண்டிய பதிபக்தியை வலியுறுத்தும். பெண்கள் பொறுமையைக் கடைப்பிடித்தல் வேண்டும். கணவனது விருப்பு, வெறுப்பிற்கேற்பத் தங்களுடைய விருப்பு, வெறுப்புக்களை மாற்றி அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே வெற்றிக் குரிய வழியாகும்.

கணவனும், மனைவியும் ஒத்த பண்புடையவராக அமைவார்களாயின் அவர் களுடைய வாழ்க்கை இன்பம் நிறைந்ததாக இருக்குமென்பது நிச்சயம். அதனுலன்றோ " இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் " என்று இராமர் கூறியிருக்கிருர். 'ஹென்றி போர்ட்' என்ற ஒருவர் " நான் மீண்டும் ஒரு பிறவி எடுக்க நேர்ந்தால் அப்பிறவியிலும் எனக்கிப்போதுள்ள மனைவியையே வாழ்க்கைத் துணைவியாகப் பெற விழைகின்றேன் " என்று கூறியுள்ளார். ஷாஜஹானுக்குத் தன் மனைவியிடம் இருந்த அன்பினை எடுத்துக்காட்டும் சின்னமாக விளங்குவதுதான் 'தாஜ்மஹால்' என்னும் அழகிய கட்டிடம்.

இக்காலத்தில் நவநாகரிகத்தில் திளைக்கும் சில பெண்கள் சரிநிகர் சமானமாக வாழ்வோம் என்று கூறிக்கொண்டு தமது கணவரையும், மக்கட் செல்வங்களையும் தாமே பேணுது அக்கடமையினைப் பணியாளர்வசம் ஒப்படைக்கின்றனர். இதன் விளைவாகக் கணவன் தீயநெறியில் செல்லநேரிடலாம். அதனுல் அவன் செல்வமும், உடல்நலமும் பாதிக்கப்படக்கூடும். ஆகையால் "நாய்க்குப்பின் தாரம்" என்ற முதுமொழிக்கேற்ப அவனுடைய உடல்நலத்தை மிக்க கவனத்துடன் மனைவிதான் பாதுகாக்கவேண்டும். கணவன் ஈடுபட்டுள்ள நற்பணிக்கு மனைவி உறுதுணையாக இருந்து உதவவேண்டும். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் நமது தேசத் தந்தையாகிய காந்தியடிகளின் மனைவியாகிய கஸ்தூரிபாய் அம்மையார் ஆவர். அவருக்குத் தெய்வபக்தியும், அருள் உள்ளமும் அமைந்திருந்தன என்பது யாவரும் அறிந்ததே.

பக்தியின் மூலமாகச் சிறந்த பேறுகளைப் பெறலாம். மங்கையர்க்கரசியார் தன் கணவனுகிய கூன்பாண்டியன் சமண சமயத்தைத் தழுவியதை விரும்பவில்லை. ஆயினும் தக்க சமயம் பார்த்திருந்து மந்திரியாகிய குலச்சிறையார் மூலமாகத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் உதவி பெற்றுத் தன் கணவனைச் சைவ சமயத்தைத் தழுவச் செய்தார். அதனுல் அவர்கள் இருவரும் சிறந்த சைவர்களாய்த் திகழ்ந்தனர். அதைக் கண்ணுற்ற பாண்டியநாட்டு மக்களும் சைவ சமயத்தையே மேற்கொண்டு ஒழுகிவந்தனர்.

அவ்வாறே இராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவியாகிய சாரதா தேவியார் தன்னுடைய கணவனின் பக்திமார்க்கத்திற்கு உறுதுணையாக இருந்தார். காளி பக்தியில் ஈடுபட்டிருந்த பரமஹம்சர் பின்னுல் புகழ்பெற்று விளங்கிய விவேகானந்தருக்குக் குருவானுர். இந்துமதம் உலகம் முழுவதும் பரவுவதற்குக் காரணமாகவும் இருந்தார். ஒவ்வொரு குடும்பத்திலும் தமக்காகவும் உலகநன்மைக்காகவும் நாள் தோறும் பிரார்த்தனை செய்தல்வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் பக்தி ஏற்படும். மேலும் தந்தையினிடத்தில் மதிப்பும், அவன்தான் குடும்பத்தின் முதல்வன் என்ற எண்ணமும் உண்டாகும். அதனுல் எல்லோரும் குடும்ப கௌரவத்தை நிலைநாட்ட முயல்வார்கள்.

கணவன் எவ்வளவு தவருன வழியில் சென்ருலும் மனங்கலங்காது இருத்தலே பெண்மைக்கு அணியாகும். "கொடியனுயினும் ஆகுக, அவனே தோழி என்னுயிர் காவலனே" என்று கூறும் மனத்திட்பம் மிக்கவர்கள் பெண்கள். "ஆடவர் மனம் சுழலும் காற்றுடி போன்றது. ஆனுல் பெண்கள் மனம் உறுதி நிறைந்தது," என்கிருர் மனோன்மணீய ஆசிரியர். அத்தகைய மன உறுதியுடன் ஆடவரின் புகழுக்குப் பாத்திரமாகும் முறையில் பெண்கள் நடந்துகொள்ளவேண்டும். அடக்கம், பொறுமை, தியாகம், இரக்கம், அழகு, ஒப்புரவு முதலியவற்ருேடு பெண்கள் திகழவேண்டும்.

படித்த மனைவியாக இருப்பின் கணவனுடைய வேலைகளில் உதவி செய்யலாம், இல்லையாயினும் அவனது வேலையைச் செவ்வனே செய்வதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தரலாம். மழலையொலிக்கும் செல்வங்கள் அவனது வேலைக்குத் தடை செய்யாமல் பார்த்துக்கொள்ளலாம். அவர்கள் குறுகுறுநடந்து சிறுகை நீட்டி அவனது பணிக்குரிய பொருள்களை உடைக்காமலும் கிழிக்காமலும் பாதுகாக்கலாம். அவன் அலுவலகத்தில் இருந்து சோர்ந்து வரும்போது உற்சாகமுறும் வகையில் வரவேற்றுக் களைப்பைப் போக்கலாம். அவன் குற்றங்குறைகளையே எப்பொழுதும் எடுத்துக்காட்டி நச்சரித்தல் கூடாது. மனைவியானவள் வீட்டு வேலையெல்லாம் முடிந்த பிறகு, இருக்கும் உடையைச் சுத்தமாகத் துவைத்து உலர்த்தி மடித்துவைத்து உடுத்துதல் வேண்டும். தூய தோற்றமும் சுறுசுறுப்பும் உள்ளவர்களாகக் காட்சி யளிக்கவேண்டும்.

சில சமயங்களில் மனைவி கணவனைக் காட்டிலும் கல்வி, செல்வம், அழகு முதலியவற்றில் சிறந்தவளாக அமைதல் உண்டு. அத்தகையவள் தன் மேம்பாட்டினுல் செருக்கடைந்து அவனை அவமதித்தல் கூடாது. கணவனது அன்பையே பெரிதாகக் கொண்டு வாழ்தல்வேண்டும். ஒருசில பெண்கள் தம்நிலைக்கு ஒவ்வாத ஆடம்பர வாழ்க் கையை மேற்கொண்டு கணவரைக் கடனாளியாக்குதல் கண்கூடு. அவர்கள்கேட்ட ஆடை ஆபரணங்களை வாங்கிக்கொடுத்து அதனுல் கடனாளிகளாய் அல்லற்பட்ட கணவன் மார்கள் பலருண்டு. தமது மனைவியரை மகிழ்வித்தற்பொருட்டு அன்னுர் எத்தகைய தகாத செயலிலும் ஈடுபடவும் கூடும். ஆனுல் சிக்கனம் என்று கூறி உலோபி யாக இருந்து இன்றியமையாத செலவையும் செய்யாது விடுதல் கூடாது. கூன் குருடு, வயதானவர்கள் முதலியவர்களுக்குத் தம்மால் இயன்ற அளவு உதவி செய்ய வேண்டும். விலைவாசிகள் அதிகரித்துள்ள இக்காலத்தில் பொருளாதார நிலையை உத்தேசித்து எளிய வாழ்க்கையை மேற்கொள்ளல் நல்லது. என்றைக்கும் நிலைத் திருக்கக்கூடிய ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டு அதற்கேற்றவாறு வாழ்க்கை நெறியை அமைத்துக் கொள்ளவேண்டும். கணவன் தொலைதூரத்திலுள்ள அலுவ லகத்திற்குப் புகைவண்டியின் மூலமாகவோ அல்லது வேறு வாகன வசதியைக் கொண்டோ செல்லவேண்டுமானுல் அதற்கேற்ப விரைவில் அவனை அனுப்புதல் வேண்டும். பகல் உணவுக்காக, அவன் உணவு விடுதி, அல்லது சிற்றுண்டிச்சாலை களில் சென்று உண்ணும்படி செய்தால் பொருள் முட்டுப்பாடு ஏற்படுவதோடு மட்டு மல்லாமல் அவன் உடல் நலமும் கெடும். ஆகையால் பகல் உணவையும் தயாரித்துக் கொடுத்தனுப்புவது நல்லது. அவன் அலுவலகம் செல்லாத விடுமுறை நாட்களில் அவனுக்கு எண்ணெய் தேய்த்துக்கொள்ள வசதி செய்துதந்து பூரண ஓய்வுபெறச் செய்யலாம். அவனுடைய சுற்றத்தாரைக் கண்டுவர அவன் விழையும்போது, மனைவி யும் உடன் சென்று அவர்களுடன் அளவளாவி வரலாம். அல்லது அவன் விரும்புவா னுயின் அவர்களைத் தம் வீட்டிற்கு அழைத்துவந்து உபசரிக்கலாம்.

ஒரு மனைவி பிள்ளைகளின் படிப்பை மேற்பார்வை பார்த்துவந்தால் அவர்கள் அதிகமாக வீண்காலம் போக்காது அக்கறையாகப் பாடம் படிப்பார்கள். கணவனும் தன் நேரத்தைப் பயன்படும் முறையில் செலவழிப்பான். பிறர் உள்ளத்தைக் கவரும் முறையில் உடைக்கோலம் செய்யும் பெண்மணிகளின் நிலையைக் குறித்து திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பெரிதும் இரங்கி எழுதியுள்ளார். ஆண் மக்கள் நெஞ்சை உடைக்கும் முறையில் பெண்கள் உடையணியக்கூடாது என்கிறார். மனைவி அறிவுள்ளவளாக இருந்தால் கணவனுக்கு ஏற்ற அறிவுரைகள் கூறலாம்.

கணக்காளர்களைப்போல வீட்டுக் கணக்குகளைச் சரிவர எழுதலாம். காவலர்களைப் போல வீட்டுப் பண்டங்களைப் பாதுகாக்கலாம். நல்ல அட்டில் தொழில் வல்லுனரைப் போல நாவிற்கினிய உணவுகளைச் சமைக்கலாம். மருத்துவரைப்போல உடல் நலத்தைப் பேணலாம். உற்ற நண்பரைப் போலத் தேவையானபோது உதவலாம். அவன் தவறான பாதையில் செல்லும்போது மந்திரிகளைப்போல நல்லறிவு கொளுத்தலாம்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

என்றதால் ஒரு மனைவி எல்லா மாட்சியும் வாய்ந்தவளாக இருத்தல்வேண்டும். அப்போதுதான் ஒன்றில் காலை அன்றில் போல வாழ்தல் கூடும். அவ்வாறு ஒற்றுமையுடன் வாழ்க்கையை நடத்துபவர் இல்லத்தில் இல்லாததொன்றுமில்லை என்று கூறவே தெய்வப்புலவர்,

"இல்லதேன் இல்லவள் மாண்பானால் உள்ளதேன்
இல்லவள் மாணாக் கடை."

என்று கூறியிருக்கிறார். எல்லாப் பெண்களும் கணவனுக்கு ஏற்றவாறு நடந்து இல்வாழ்க்கை நடத்தும் நாளே நமதுநாடு முன்னேற்றமடைந்து நாம் நல்வாழ்வு வாழும் நன்னாளாகும்.

கிருகஸ்தர்க்குச் சிரார்த்தமும், சந்நியாசிகட்குக் குருபூஜையும் நன்றியறிதலைக் கடைப்பிடித்துச் செய்துவரும் இன்றியமையாச்செயல்கள்.

— கயிலைக் குருமணி

ஆதீனக் கோயில்களின் ஆட்சி

திரு. தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் M. A.,

சுமார் முந்நூற்று ஐம்பது வருஷங்களுக்கு முன் பராக்கிரமன் என்னும் பாண்டியமன்னன் தென்காசியில் விசுவநாதருக்கு ஒரு ஆலயம் எடுக்க எண்ணுகிறான். கங்கைக்கரையிலே ஒரு காசி இருப்பதுபோல. சித்ராநதிக்கரையிலேயும் ஒரு காசி; ஆம்! அதுவே தக்ஷிணகாசி; தென்காசியாக இருக்கட்டும். அந்தக் காசியில் ஒரு விசுவநாதர் விசாலாக்ஷி என்றால் இங்கும் ஒரு விசுவநாதர் விசாலாக்ஷியைப்பிரதிஷ்டை செய்து, தொலைதூரத்தில் உள்ள அந்தக் காசி செல்ல இயலாதவர்கள் கண்டு வணங்க வகைசெய்ய எண்ணியிருக்கிறான். ஏழுவருஷகாலம் கோயில் கட்டிடவேலை நடக்கிறது. அழகான மதில், அடுக்கடுக்காய் மண்டபங்கள், முன்வாயில் கோபுரம் எல்லாம் சிறப்பாகக் கட்டுகிறான். கோயில் முன்மண்டபத்திலே கைதேர்ந்த சிற்பிகளைக்கொண்டு சிறந்த சிற்பவடிவங்களையும் செதுக்கி நிறுத்துகிறான். கருவறையில் காசி விசுவநாதரை இருத்துகிறான். இத்தனையும் செய்துவிட்டு கோயிலின் குடமுழுக்குக்கு ஒரு நல்ல நாளையும் குறிப்பிடுகிறான். கோயில் முற்றத்தில் எல்லா யாகசாலைகள் வேதமந்திர கோஷங்கள் நடக்கின்றன. குடமுழுக்கிற்குத் தலைநாள் மாலை வந்து ஏற்பாடுகள் எல்லாவற்றையும் கவனித்துவிட்டு, அரண்மனை செல்கிறான். பெரியதொரு திருப்பணியைச் சிறப்பாக நடத்தி மனநிறைவோடு செல்கிறான். மறுநாட்காலை, மந்திரி பிரதானிகள் புடைசூழக் கோயிலுக்கு வருகிறான். கோயிலிலும் கோயில் சுற்றுப்புறங்களிலும் ஒரே கூட்டம். எள்போட்டால் எள்விழாத கூட்டம். இவர்களை எல்லாம் கடந்து கோயில் முன்மண்டபத்திற்கு வந்துவிடுகிறான். அங்கே அவன் திடீரென்று தரையில் விழுந்து வணங்குகின்றான்.

அன்று அவன் யாரை விழுந்து அப்படி வணங்கினான்? என்பது கேள்வி. காசிவிசுவநாதரை - விசாலாக்ஷியை விழுந்து வணங்கியிருந்தால் அதை மகாமண்டபத்தில் செய்திருக்கலாமே. கோவில்கட்டத் துணைநின்ற சிற்பிகளை, கலைஞர்களை வணங்கினான் என்றால் அந்த வணக்கத்தை அரண்மனையிலேயே செய்திருக்கலாமே. இல்லை கோயில் கட்டுவதற்குப் பொன்னையும் பொருளையும் அள்ளிக்கொடுத்த மக்களை வணங்குவதென்றால் நின்றவாறே கைதூக்கி வணங்கி இருக்கலாமே. இப்படியெல்லாம் செய்யாமல் பலர் கூடிய பேரவையிலே, குறிப்பாக ஒருவரையும் கொள்ளாது பொதுவாகக்கீழே விழுந்து நாடாளும் மன்னன் வணங்கினான் என்றால், அந்த வணக்கம் யாருக்கு உரியது? என்பதுதான் கேள்வி - இந்தக் கேள்வி பலர் மனத்தில் எழுந்தது - பதில்தான் கிடைக்கவில்லை. அரசன் பக்கத்தில் ஒரு கவிஞர் வருகிறார். அவருக்கு மன்னனது மனநிலை எல்லாம் நன்றாய்த் தெரியும், அவருக்கு மன்னன்


மனத்தில் எழுந்த எண்ணமெல்லாம் தெரிகிறது. மன்னன் நினைத்திருக்கிறன். இப்படிப் பிரமாண்டமான கோயிலைக் கட்டியிருக்கிறேமே, இது பன்னெடுங்காலம் நிலைத்து நிற்கவேண்டுமே. இடையில் ஏதாவது இக்கோயிலுக்குப் பழுது நேர்ந்தால் அந்தப் பழுதைச் சீர்செய்து கோயிலைத் திரும்பவும் திருப்பணி செய்யும் அன்பர்கள் தோன்றுவார்களா? அப்படித் தோன்றத்தான் செய்வார்கள். கோயிலைக் கட்டுவதை விடக் கோயிலைப் பழுதுரு வண்ணம் பாதுகாப்பதுதானே முக்கியம், அந்தத் திருப் பணியில் ஈடுபடும் அன்பர்களை நினைந்து வணங்குவோம் என்று தான் எண்ணி இருக்கிறன் மன்னன்; அப்படியே விழுந்தும் வணங்கி யிருக்கிறன். இப்படி எண்ணிய மன்னனது எண்ணத்தை அந்த எண்ணத்தின் காரணமாக நிகழ்ந்த செயலைப் பாட்டாகவே சொல்லுகிறர் கவிஞர். பாட்டு இதுதான் :-

ஆராயினும் இத்தென்காசி மேவு பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் ஆங்கு வந்து அதனை
நேராகவே திருத்திப் புரப்பார் தமை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே.

என்று மன்னன் பாடும் பாணியிலேயே கவிஞன் பாட்டு எழுதுகிறன்; பாடுகிறன். மன்னனும் பாட்டைக் கோபுர வாயிலிலேயே கல்லிலே பொறித்துவைக்க உத்தர விடுகிறன்.

தென்காசி கோயில் கோபுரத்தின்மீது இடிவிழுந்து கோபுரம் சிதைந்து விட்டது பல வருஷங்களுக்கு முன். கோபுரம் மொட்டையாகவே சிதைந்தே நிற்கிறது. என்றலும் பராக்கிரம பாண்டியன் எதிர்பார்த்தபடி அதைத் திருத்திப் புரப்பார் ஒருவர் இன்றளவும் வரக்காணேம். ஆனல் தருமபுர மடாலயத்தில் நடக்கும் திருப்பணி களையும், அத்திருப்பணிகளை முன்னின்று நடத்தும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களையும் நினைத்தால் பராக்கிரம பாண்டியன் பாடல்தான் நினைவுக்கு வருகிறது. சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்ற உண்மையை விளக்கும் சைவம், சீகாழிப்பிள்ளை ஞானசம்பந்தரால் நாளும் வளர்க்கப்பட்ட சைவம், நலிகிற போது அதைப் பரிபாலிக்கும் பராக்கிரமராக ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் விளங்குகிறர்கள். அவர்கள் அறக்காவலில் இருக்கும் கோயில்கள் இருபத்தேழு. மேற்கே திருச்சியை அடுத்த கற்குடி என்னும் உய்யக்கொண்டான் திருமலையிலிருந்து கிழக்கே ஆச்சாள்புரம் என்னும் நல்லூர்ப் பெருமணம் வரை காவிரிக்கரையிலே கோயில்கள் அமைந்திருப்பதே ஓர் அழகு. சம்பந்தருக்கு ஞானப்பால் ஊட்டிய பெரியநாயகியுடன் எழுந்தருளியிருக்கும் பெரியநாயகர் சீகாழியில் கோயில்கொண் டிருக்கிறர். அந்தத் தோணியப்பர் கோயில் ஆதீனக் கோயில்களில் ஒன்று. தீரா நோய் தீர்த்தருள வல்லான் என்றும் புகழ்பெற்ற வேளூர் வைத்தியநாதன் கோயில் கொண்டிருக்கும் புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீஸ்வரன்கோயிலும் ஆதீனக் கோயிலே. அட்டவிரட்டத் தலங்களிலே சிறப்பான திருக்கடவூர், திருக்குறுக்கை,


வேளூர் :



தலவிருக்ஷம் (வேம்படிமால்)



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி



நீராழி மண்டப விநாயகர் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம்

திருப்பறியலூர் மூன்றும் ஆதீன ஆளுகையிலேயே இருக்கின்றன. இன்னும் மாயூரம் வள்ளலார், திருவையாறு ஐயாறப்பர், திருப்பனந்தாள் செஞ்சடையப்பர், திருபுவனம் கம்பஹரேசுவரர் எல்லோரும் ஆதீன நிர்வாகத்திலே இருப்பவர்கள்தான் என்ருல் அதிகம் சொல்வானேன்.

இக்கோயில்கள் இருபது வருஷங்களுக்கு முன் இருந்த நிலேயையும், இன்றிருக்கும் நிலேயையும் ஒப்பிட்டுப்பார்த்தால், இக்கோயில்கள் எவ்வளவு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அறிவோம். இந்த ஆலய பரிபாலனத்தில் ஆதீனகர்த்தர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்கிருர்கள். எந்த நேரத்தில் எந்தக் கோயிலுக்கு எழுந்தருளுவார்கள் என்பதைக் கோயில் நிர்வாகிகள் அறியமாட்டார்கள். அதுகாரணமாக எல்லாக் கோயில்களும் எக்காலத்தும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன என்பது பாராட்டுதலுக்கு உரியது. இன்று தமிழ்நாட்டில் எந்தக் கோயிலாவது சுத்தமாக வைக்கப்பட்டிருந்தால் அது தருமபுர ஆதீனத்துக் கோயிலோ? என்று கேட்கத் தோன்றுகிறது. அந்த அளவிற்குக் கோயில்களேச் சுத்தமாக வைத்துக்கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டுகிருர்கள் ஆதீன கர்த்தர் அவர்கள்.

இது தவிர • கோயில் கோபுரம் எல்லாம் பழுதுற்றிருந்தால் அதையெல்லாம் திருப்பணிசெய்து புதுப்பிக்கவும் தயங்குவதில்லே. புள்ளிருக்குவேளூர், சீகாழி, திருக்கடவூர், மாயூரம் வள்ளலார், குத்தாலம், சொன்னவாறறிவார் கோயில்கள் எல்லாம் சென்ற சில வருஷங்களில் புதுப்பிக்கப்பட்டுச் சீரும் சிறப்பும் பெற்றிருக்கின்றன. இத்துடன் மூர்த்திகளுக்கு வெள்ளி மஞ்சங்கள், தங்கக் கவசங்கள், தாடங்கங்கள் எல்லாம் செய்து அழகு பார்ப்பதில் ஆதீன கர்த்தர் அவர்களுக்கு அளவிலாத ஆனந்தம். இந்தப் பணியும் சிறப்பாக நடக்கிறது ஒவ்வொரு கோயிலிலும். கோயில் மண்டபங்களில் எல்லாம் தேவாரப் பாடல்கள் ஒலிக்கின்றன. 'இன்னிசை வீணேயர் யாழினர் ஒருபால் இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்று அன்று மணிவாசகர் பாடியதுபோலக் கோயில்களில் எல்லாம் தெய்வகீத முழக்கம், வேத மந்திர கோஷங்கள். கடவூர் அபிராமியின் சந்நிதியில் அபிராமி அந்தாதியைப் பள்ளிச் சிறுமியர் எல்லாம் பாடிக்கொண்டு நிற்கிருர்கள். இப்படியே ஆலய நிர்வாகம் அழகாக நடக்கிறது. எப்படி நடத்தவேணும் என்பதற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

ஆலயத்திற்குவரும்பணத்தைக்கொண்டு சமூகசேவையும்சமயத்தொண்டுகளும் நடக்கின்றன. அன்று எண்ணுயிரத்திலே, திருமுக்கூடலிலே எல்லாம் பள்ளிக்கூடங்கள் ஆஸ்பத்திரிகள் நடந்தன என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. அதுபோலப் பசுமடங்கள், அநாதைச் சிறுவர் இல்லங்கள் எல்லாம் நடப்பதுடன் சமயப் பிரசாரத்திற்கு எனவே ஒரு நிலேயம் சென்னேயில் 'வேளூர் இறைபணி மன்றம்' என்ற

பெயரில் வேலைசெய்து வருகிறது. சமயச் சொற்பொழிவுகள் விழாக்கள் எல்லாம் நடத்தி வருகிறது.

தமிழ் நாட்டில்தான் கோயில்கள் அனந்தம். ஆதலால் புதிய கோயில்கள் கட்டவேண்டிய அவசியம் இல்லைதான். என்றாலும் பழைய கோயில்களைப் புதுப்பிக்கும் பணி சிறப்பாக நடைபெறவேணும். கவிச்சக்கரவர்த்தி கம்பனும், இதனால்தானே 'ஆலயம் புதுக்குக' என்று தமிழ் மக்களை அன்றே கூவி அழைத்திருக்கிறான். காசி கண்ட பராக்கிரம பாண்டியனும் அப்படித் திருப்பணி செய்யும் அன்பர்களை நினைந்து அன்றே விழுந்து வணங்கியிருக்கிறான். அத் திருப்பணியாம் தெய்வப்பணியிலே ஈடுபட்டு நிற்கும் குருமகாசந்நிதானத்திற்குக் கனகாபிஷேகம் செய்து விழுந்து வணங்கி அருள் பெறுவோமாக.

ஆன்மாக்கள் அளவற்றன. அவை பிறவிப் பிணியில் அகப்பட்டுக் காற்றாடிபோல் சுழன்றுகொண்டிருக்கின்றன. அவை அந்தப்பிணியினின்றும் நீங்கவேண்டுமானால் அதற்கும் ஒரு மருந்து வேண்டும். அந்த மருந்துதான் பஞ்சாக்கரம். மெய்கண்டார் பஞ்சாக்கரத்தைப்பற்றிச் சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்துள் மிக அழகாகக் கூறுகின்றார். கண் இல்லாத குருடன் உலகைப் பார்த்துச் சொல்லுவான் ; என்ன 'எங்கும் ஒரே இருட்டாக இருக்கின்றது ; பொழுது விடிவதேயில்லையா' என்று. அதுபோலத்தான் ஞானக்கண் இல்லாதவனும் இறைவனைக் காணமுடியாது. காணுதற்கு உபகாரமாக இருப்பதுதான் பஞ்சாக்கரம்.

— கயிலைக் குருமணி

இறைவன் எங்குளான்?

திருமுருக. கிருபானந்தவாரியார்

இறை என்ற சொல் இறு என்ற சொல்லடியாகப் பிறந்தது. எங்கும் நீக்கமற நிற்பவன் இறைவன். ஒருகாலத்தில் வடமொழி தென்மொழி என்ற இருமொழி களிலும் வல்லவர்கள் ஒருங்கு கூடினார்கள். புலவர் மாநில மாநாடு. வெகு சிறப் பான ஏற்பாடு. மன்னர்கள், பெருநிலக்கிழார்கள், பெருந் தனவந்தர்கள் இருந்து அதனை நடத்தினார்கள். மாநாட்டுக்கு வந்த தகுதி வாய்ந்த பெரும் புலவர்களை மேளதாளத்துடன் இனிது வரவேற்கச் செய்தார்கள்.

ஒரு பெரும் புலவர் தலைமை தாங்கினார். புலவர் மாநில மாநாடு தொடங் கியது. மொழியைப்பற்றி, அறிவுநூல்களைப்பற்றி, சமயங்களைப்பற்றி இன்னோரன்ன பல பொருள்களைப்பற்றி அங்கு ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் இறைவன் எங்குமிருந்தாலும் சிறப்பாக எங்கிருக்கின்றான்? என்பதுபற்றிப் பெரும் ஆராய்ச்சி நடந்தது. ஒரு புலவர் இறைவன் திருக்கயிலாயத்தில் இருக்கின்றான் என்றார். ஒரு புலவர் இறைவன் வைகுண்டத்தில் இருக்கின்றான் என்றார். ஒரு புலவர் இறைவன் ஆதித்த மண்டலத்தில் நடுவில் இருக்கின்றான் என்றார். ஒரு புலவர் இறைவன் விண்ணுலகில் விளங்குகின்றான் என்றார். ஒரு புலவர் அமராவதியில் இறைவன் இருக்கின்றான் என்றார். ஒரு புலவர் மூதண்டத்தின் முடிவில் இருக்கின்றான் என்றார். ஒரு புலவர் வேத முடிவில் இறைவன் இருக்கின்றான் என்றார். இவ்வண்ணம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தையும் இயம்பித் தாம் தாம் கூறியதுவே உண்மை யென்று வாதிட்டார்கள்.

கற்றவர்கள் கூடி வாதிட்டால் அதற்கு முடிவு ஏது? கடல் கொந்தளித்தது போல் ஒலி முழங்கியது. வேதம், புராணம், இதிகாசம், தர்க்கம், நியாயம் முதலிய நூல்களைப் பிரமாணங் காட்டிப் பேசி ஆரவாரம் புரிந்தார்கள்.

முடிவில் ஒரு முதுபெரும்புலவர் "நாம் இப்படி வாதிப்பதில் பயன் இல்லை. இவ்வாதம் முடிவு பெறாது. காரைக்கால் என்ற ஊரில் ஒரு அம்மையார் இருக் கின்றார்கள். அவர்கள் நூலறியும் அநுபவ அறிவும் நிரம்பியவர்கள். திருவரு ளுணர்வு பெற்றவர்கள். அவர்களிடம் போய் நாம் சமாதானம் பெறலாம்" என்றார். புலவர் குழு புறப்பட்டது. காரைக்காலை யடைந்தார்கள். அம்மையார் உள்ளே சிவபூஜை செய்துகொண்டிருக்கின்றார்கள். அவருடைய கணவனார் பரமதத்தன் செட்டியார் திருமாளிகையின் முற்றத்தில் இருக்கின்றார். வந்தவர்களை அன்புடன் வரவேற்று அவர்கட்குப் பால் பழந் தந்தனர். நீவிர் யாவர்? இவந்தது என்ன காரியம் என்று வினவினர்.

" நாங்கள் புலவர்கள். ஒரு சந்தேகங் கேட்க வந்தோம். தங்கள் தரும பத்தினியார் புனிதவதி அம்மையார் எங்கே ? "

பரமதத்தன் வியப்புற்ருன். ஓ! நம்முடைய மனைவி பெரும்புலமையுடையவள் போலும்! இத்துணைப்பேர் அவளைத்தேடி வந்திருக்கின்ருர்களே! அப்படியானல் அவள் கூரிய ஞானமும், சீரிய அநுபவமும் உடையவளாக இருத்தல் வேண்டும். அதனை வெளிக்குக் காட்டாமல் அடக்கமே வடிவாக இருக்கின்ருள் என்று கருதினன்.

உள்ளே சென்று அம்மையாரைப் பார்த்து, " உன்னை நாடிப்புலவர் கூட்டம் வந்திருக்கின்றது " என்ருன். அம்மையார் புன்முறுவல் செய்து புலவர்கள் இருந்த இடத்தில் வந்து ஒருபுறம் ஒதுங்கி நின்று கை குவித்தார்கள்.

புலவர்கள் எழுந்து அவரை அன்புடன் தொழுது, அவர் அநுமதி பெற்றபின் அமர்ந்தார்கள். காரைக்காலம்மையார் உங்கள் வரவு நல்வரவு, நீங்கள் இங்கு எய்திய கருமம் யாது? என்று வினவினர்கள்.

" அம்மையே! அறிவின் சிகரமே! இறைவன் எங்குளான்? என்பதுபற்றி எங்களுக்குள் ஒரு பெரிய வாதம் நிகழ்ந்தது. வானத்தில் - அமராவதியில், கைலையில், பகிரண்டத்தில், மறைமுடிவில், இப்படிப் பலப்பல இடங்களில் இருக்கின்ருன் என்று வாதிட்டோம். முடிவுகாண முடியவில்லை தாங்கள்தான் இதற்கு முடிவுகூறவேண்டும், "

அம்மையார் புன்சிரிப்புடன் தலையசைத்து அடியிற்கண்ட அரிய வெண்பாவைக் கூறினர்கள்.

" வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர் கோன்
தானத்தான் என்பாருந் தாமென்க — ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மோய்யோளிசேர் கண்டத்தான்
என்னேஞ்சத் தான் என்பன் யான் "

இறைவன் வானத்திலே இருக்கின்ருன், அமராவதியிலே இருக்கின்ருன், பிற இடங்களில் இருக்கின்ருன் என்றெல்லாம் கூறுவோர் கூறட்டும்; ஆனல் ஐயன் என் நெஞ்சில் " இமைப்போதும் நீங்காது உறைகின்ருன் " என்ருர்கள். இந்த வெண்பாவைக் கேட்ட புலவர்கள் வியந்தார்கள். உரையில் நயந்தார்கள்.

முன்னஞ்சத்தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான். " இருளில் ஒளி " என்ற முரண்தொடையையும், இறைவன் நினைப்பவர் மனங்கோயிலாக் கொண்டவன் என்ற உண்மையையும் உன்னி உன்னி உணர்வுபெற்ருர்கள். இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்து நின்ருலும், சிவஞானிகளின் திருவுள்ளத்தில் விளங்கித் தோன்றிக் காட்சி தருகின்ருன்.

" இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க ".

திருக்கோவையார்

வித்துவான். ந. சேதுரகுநாதன்.

“ பாவை பாடிய வாயால் கோவைபாடுக ” என்று இறைவன் திருவாய்மலர்ந் தருள அடிகள் இயற்றிய நூலே திருக்கோவையார். இந்நூலில் அமைந்துள்ள நானூறு துறையமைந்த பாடல்கள் உலகியல் இன்பப் பொருளும் இறைவனையணைந் தோர் அடையும் பேரின்பப் பொருள் நலங்களும் ஒருங்கே அமைந்த உவட்டாத இன்பத் திருப்பாடல்களாக இலங்குகின்றன.

அரியமறைநூல்களை ஆராய்ந்த அந்தணர் இந்நூல் ஆரணம் என்று கூறுவர். ஆரணம் என்பது அரியமறை. யோகியர் ஆகம நூல்களின் காரணம் என்பர். தருக்கநூலோர் இது தருக்கநூலாகிய ஏரணநூல் என்பர். இனிய இலக்கண நூலறிஞர் இலக்கணநூலே என்பர். ஆனால் காமுகரோ அது காமநன்னூலே என்பர். இவ்வாறு தாம்தாம் கற்றுத்துறைதேர்ந்த கலைநலங்களெல்லாம் இந்நூல் ஒன்றிலேயே முற்றக்கண்டு தாம்தாம் கண்ட நோக்கத்திற்கேற்பவே நூலையும் பாராட்டாநிற்பர். தெய்வத்தன்மை வாய்ந்த திருச்சிற்றம்பலக்கோவை இவ்வளவு சிறப்புவாய்ந்த நூல்.

இந்நூலுக்கு நல்லுரை வகுத்த பேராசிரியர் உலகியற் பொருளை மட்டுமே எழுதியுதவினர். திருக்கோவையாருண்மை என்ற நூலாசிரியர் சிவமே தலைவி என்றும் உயிரே தலைவன் என்றும் கூறிப் பேரின்பக் கருத்து விளக்கும் கொளுவும் அமைத் தருளினர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்ற ஒழுக்கத்தில் அமைந்த அன்பின் ஐந்திணைச் சிற்றின்பப் பொருளும் ; நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் (சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) என்ற ஐவகை நிலையில் நிகழும் பேரின்ப ஐந்திணையொழுக்கமும் அமைந்த பாடல்களில் சிலவற்றை நோக்குவோம்.

பேரெழில் வாய்ந்த தலைவன் ஒருவன் தில்லைப்பெருமானுடைய மலைச்சாரலில் தன்னொடுவந்த குழுவினைப் பிரிந்து தன்னந்தனியனாய்ச் சென்று நின்றான். வான ளாவிய மரங்கள், பின்னிப் பிணைந்து தளிர்த்து அரும்பி மலர்ந்த பூங்கொடிகள், மாணிக்கப் பாறையில் அமைந்த வண்ண நீர்நிலைகள், மரகதவிளிம்பு அமைந்த தெண்ணீர்ச்சுனைகள், இவற்றைச் சுற்றி யாழ் முரலும் வண்டுகள், தோகை விரித்து ஆடும் நீலமயில்கள், பூந்தாதுபரந்து மெத்தென்று காணப்படும் இயற்கைப்பள்ளிகள், வானநீர்த் தடாகமும் வண்ணமலையின் தெண்ணீர்த் தடாகமும் ஒன்றையொன்று நோக்கிக்கொண்டு மேலும் கீழும் அமைந்த தோற்றங்கள், சுற்றிலும் அமைந்த சூழ்நிலை களில் புறத்தேயுள்ளார் அகத்தேயுள்ளவரை அறிய முடியாத அடர்த்திகள் ஆகிய

இவ்வளவும் அமைந்த அந்தச் சாரலில் தனித்து நின்ற தலைமகன் பொழிலின் ஓரத்தில் ஒரு பூவல்லியில் இறைவனது தில்லையில் மலர்ந்த தாமரைமலர் போன்ற ஒரு செந்தாமரைமலர் பூத்துநிற்கக் கண்டான். பூங்கொடியில்பூத்த தாமரையைக் கண்ட புரவலன் விருப்பம் மிகுந்து இது ஒரு திருவளர் தாமரை என்றான். மேலும் அம்மலரினிடத்தே தில்லையில் மலர்ந்த திருநீலப்பூக்கள் இரண்டும் மலர்ந்திருக்கக்கண்டு இவை சீர்வளர் காவிகள் என்றான். மேலும் நோக்கும்போது கருநீலப்போதுகளினிடையே பொன்னிறக் குமிழம்பூ ஒன்று மிளிர்கின்றது கண்டு இது, "ஈசர்தில்லைக் குருவளர் பூங்குமிழ்" என்றான். அவற்றின்கீழ்க் கோங்கின் அரும்புகள் இரண்டும் அரும்பிநிற்கக் கண்டு இவைகள் ஒப்பற்ற கோங்கரும்புகள் என்றான். அவற்றின் பக்கங்களிலே செங்காந்தள் மலர்கள் பாசடைகளினிடையே மலர்ந்துநிற்கக்கண்டு காந்தளும் பூத்து நிற்கின்றனவே என்றான். ஐவகை மலரும் பூத்த தெய்வ மருவளர் மாலை ஒருவல்லி போல் நுடங்கி அன்னத்தின் மென்னடை நடக்குந் தன்மைவாய்ந்து உருவளர்ந்து தோன்றி உருவில்லாத காமன் உருவுடன் இருந்த காலத்தில் உருவொடு விளங்கித் தோன்றிய வெற்றிக்கொடிபோல் ஒளிர்கின்றதே என்று நினைத்தான்.

தாமரை மலர் முகமாக; கருங்குவளைப் பூக்கள் கண்ணாக; பொன்னிறக் குமிழம்பூ மூக்காக; கோங்கின் அரும்புகள் கொங்கைகளாக; காந்தளின் மலர்கள் கைகளாக; நறுமணங்கமழுந் திருமேனியுடைய மாதரசியாகவாய்த்துநின்ற அருள்நிலை கண்டு வியந்து நின்றான். இந்நிலையினை,

"திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியின்ஒல்கி அனநடைவாய்ந்து
உருவளர் காமன்தன் வென்றிக்கொடிபோன்று ஒளிர்கின்றதே"

என்று பாடியருளினர். இந்தப் பாடல் குறிஞ்சித்திணையில் தலைவியைத் தலைவன் கண்ட காட்சி என்ற துறை அமைந்ததாகும். முதலிற் கண்ட காட்சியில் வியந்து உள்ளம் நெகிழ்ந்து காதலும் கொண்டது. இதுவரை காமன் அவனை எதிப்பட்டு மலர்க்கணை தொடுக்கவும் அஞ்சித் தோன்றாது மறைந்து தோற்றே நின்றான். ஆனால் இப்போது அவன்தன்னை வென்று வெற்றிக்கொடியும் நாட்டிவிடுவான் போலும். அந்த வெற்றிக்கொடிக்குக் காரணமாக நின்று ஒளிர்கின்றது இந்த மென் பூங்கொடி என்று கருதின தலைவன், "உருவளர் காமன்தன் வென்றிக் கொடிபோல் ஒளிர்கின்றதே" என்று நினைக்கின்றான். இதுவரை வேறுஒரு நங்கையையுங் கண்டு நெகிழாத உள்ளம் இப்போது நெகிழ்ந்ததன் காரணமாகக் காமனும் இதுவரைத் தோற்று நின்று இப்போது வெற்றி கொள்வான் என்று கருதினான். அது அவனது உள்ளத்தின் ஒப்பற்ற தூய வெற்றியை உணர்த்துகின்றது.

ஓங்கு தெய்வ மருவளர் மாலே என்பதுதான் உள்ளத்திற் கொள்ள வேண்டிய குறிப்பாகும். வெறும் மலர்மாலே அன்று மருவாகிய மணம் பொருந்திய மாலே. அதுவும் வாடாமாலே என்பது குறித்து வளர்மாலே என்று பாடினர். அதுவும் வெறும் மணமன்று தெய்வமணம். தெய்வமும் தாழ்ந்த தெய்வமன்று ஓங்கு தெய்வம். தெய்வத் தலேவியைக் குறித்த தீந்தமிழ்த் தொடர் இது. ஒளிர்கின்றதே என்பதில் குறித்த ஒளியும் ஓங்கு தெய்வ ஒளியே என்பது குறிப்பு. தமிழ் நலங்கனிந்த சொற் சுவையும் பொருட் சுவையும் ஆராயுந்தோறும் இனிதாக விளங்கும் எழில் நலமும் மிகுந்த பாடல் இது. குறிஞ்சியிற் பூத்த காந்தள் மலர்களும், பாலேயில் அரும்பிய கோங்கின் அரும்புகளும், முல்லேயில் மலர்ந்த குமிழம்பூவும், மருதத்தில் மலர்ந்த தாமரை மலரும், நெய்தலில் விரிந்த கருநீலப் பூக்களும் ஆகிய ஐந்திணேயில் தோன்றிய ஐவகைப் பொருள்களும் கொண்ட மாலே என்றதனுல் இந்தத் தலேவி புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்கல் ஆகிய ஐந்திணே யொழுக்கத்திற்கும் உரியவள் என்பது பெறப்படும்.

தெய்வக்காட்சியும் தீந்தமிழ் அணங்கின் காட்சியும் ஒருசேர விளங்கும் வண்ணம் அமைந்த பாடலின் நயம் வியக்கத்தக்கதே யாகும்.

ஐந்திணேயின்பமும் ஐம்புல இன்பமும் தரும் இயல்பு குறிப்பாக உணரக் கிடக்கின்றது.

ஒளிர்வது காட்சியின்பம்; மருவளர்தல் மூக்கிற்கின்பம். தெய்வ மருவளர் மாலேயில் பொருந்தித் தேனுண்ணும் திருக்கோத்தும்பியே தலேவனுதலின் மலரி னிடம் பொருந்திய தேனே நாவிற்கின்பம். மலர், அரும்புகள் இவற்றின் மென்மையே மெய்யின்பம். ஓசை ஒலியெல்லாம் ஆகி நிற்பது தெய்வமாதலின் தெய்வ மருவளர் மாலே என்பதில் அமைந்த தெய்வம் என்பது ஒலிக் குறிப்பினேயுணர்த்திச் செவிப் புல இன்பமும் குறிக்கின்றது.

இத்தகைய வியத்தகு காட்சியிற்கண்ட நங்கையை யார்கொலோ என்று ஐயுற்ற தலேவன் தெளிவடைந்து விரும்பி அவளது உட்கோள் அறிந்து தெய்வத்திறம் வியந்து இணக்கம் துணிந்து அமுதமும் அதனிடம் நிரம்பி நின்ற சுவையும் போலக் கலந்து மகிழ்ந்து நின்ருன். அதன் பின்பு இருவயின் ஒத்தல் என்ற துறைப்பாடல் வருகின்றது. அதன் அழகு நலனேயும் நோக்குவோம். இருவயின் ஒத்தல் என் பதற்கு இரண்டிடத்தும் அன்பு ஒத்திருத்தல் என்பது பொருள். கூட்டத்திற்கு முன்பு உள்ளம் முழுதும் நிரம்பிநின்ற வேட்கையன்பு கூட்டத்திற்குப் பின்பு குறைவுபடாமல் கூட்டத்திற் பெற்றுநின்ற இன்பநலன்களால் வளர்ந்து ஒரு தன்மையாய் நிற்றல். இத்தகைய அன்பு நிலேயும் இருவர்க்கும் ஒக்கும். இங்ஙனம் நிறைந்த அன்பில் வெளிப்படும் உணர்வு சான்ற துறைப்பாடலே நோக்குவோம்.

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கோவ்வைச்செவ் வாயிக்கொடியிடை தோள்
புணர்ந்தாற் புணருந்தோறும்பெரும் போகம் பின்னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழலாள் அல்குல்போல வளர்கின்றதே"

என்பது பாடல். இறைவனை அறிவுநிலையிற் காணுதல் அரிதே எனினும் உணர்வு நிலையில் அவன் வெளிப்பட்டுத் தோன்றுதல் ஒருதலை. அங்ஙனம் உணர்வுநிலையிலும் உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வாய் நிற்கின்ற அவன் வெளிப்பட்டுத் தோன்றினாலும் அவனை உணர்ந்தார்க்குப் பின்னும் உணர்தற்குக் கருவியாய் நிற்கின்ற சித்த விருத்தியும் ஒடுங்குதலினாலே மீண்டும் உணர்வதற்கு அரியவனாகவே இறைவன் நிற்கின்றான். அங்ஙனம் நிற்கும் அவன் தில்லைச் சிற்றம்பலத்துள் உருவத் திருமேனி கொண்டு ஒப்பற்றவனாகவும் நிற்கின்றான். அவனுடைய குணம் பேரின்பம். அத்தகைய பேரின்பம் வெளிப்பட்டு வந்தாற்போன்ற கொடியிடையாள் இவள். அத்தகைய இன்பமே கொவ்வைச் செவ்வாயும் கொடியிடையும் தோள்களும் கொண்டு தோன்றியுளது. அவளை யான் புணர்ந்தாலும் புணருந்தொறும் பெரிதாகிய இன்பம் முன்புபோலப் பின்பும் புதிதாய் இயற்கை மணம் தங்கிய சுருண்ட கூந்தலையுடையாளின் அல்குல் போல வளராநின்றது என்ற கருத்துக்கள் அமைந்த பாடல்.

இம்மையின்பமும் பேரின்பமும் இணைய உணர்த்திய திருப்பாட்டல் இது.

"பெற்ற சிற்றின்பமே பேரின்ப மதாக
முற்ற வரும்பரி சுந்தி பற
முளையாது மாயையென் றுந்திபற."

என்ற திருவுந்தியாரில் வருந் திருப்பாடலும், "அறிதோ றறியாமை கண்டற்றாற் காமஞ், செறிதோறுஞ் சேயிழை மாட்டு" என்ற திருக்குறளும் ஈண்டு நினைக்கத் தக்கன. இறைவனின், "குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடை" என்று தலைவியைக் கூறிய அருமை உணர்வதற்கு உரியது. பின்னரும், "ஆனந்த மாக்கடல் ஆடுசிற் றம்பலம் அன்ன பொன்" என்றே பாடியருளினர்.

அல்குல் போல என்பதன் கருத்து யாது என்பதுவே ஈங்கு நோக்கத்தக்கது. அல் என்பது அன்மை குறிக்கும் சொல். குல் என்பது குலவுதலாகிய வளைவு குறித்த சொல். ஆகவே அல்குல் என்பது அமைவுடைய உடம்பின் புறப்பகுதி என்ற பொருள்தரும். இலங்கிய புறப்பகுதிக்கு ஏன் அல்குல் என்ற பெயர் வந்தது என்று யாரும் ஆய்வது பொருத்தமே. ஆய்வதற்கு உரிய காரணமும் உண்டு. உலகியல் அறிவு உண்டாயின் ஏன் என்பது தோன்றிவிடும். உள்ளுறுபகுதிக்கு உரிய பெயரென்று எவரும் கருதக் கூடாது என்பதற்காகவே உலகில் 'அல்' என்ற அடைமொழி கொடுத்துக் 'குல்' என்ற சொல்லை அமைத்துள்ளனர். அன்மையுடன் கூடிய குலம் என்பதே அதன்பொருள். குலம் என்பது கூட்டம். புறப்பகுதி முழுதுமாகிய கூட்டம்

குல் என்பது முதனிலே. அம் குறைந்து நின்று அல் என்ற அடைமொழி பெற்று, ''அல்குல்'' என்று ஆயிற்று. அன்மை என்பது உடம்பின் அகம் அன்மை என்பது குறித்து நின்றது. அன்மொழித்தொகையில் தொகைச் சொல்லின் புறத்தே பொருள் சிறந்து நிற்பது போன்றே என்க. ஆகவே முழந்தாளுக்குமேல் இடைக்குக் கீழேயுள்ள புறப்பகுதி முழுதும் ஆகிய குலாவிய வளைந்த பரப்பு முழுதும் அல்குல் எனப்படும். ஆகவே அது தலைமகளிடம் இலக்கணக் குறைபாடின்றி வளர்கின்ற தன்மைபோன்று அவளொடு கூடிய கூட்டத்திற் பிறந்த இன்பமும் குறைபாடின்றியே வளரா நின்றது. எனவே அவள்பால் வைத்த அன்பும் குறைதலின்றி மனம் முழுதும் நிறைந்து ஒருபெற்றித்தாய் நின்றது என்பது குறிப்பு.

தெய்வக் காட்சியும், தீந்தமிழ்க் காட்சியும், சைவக் காட்சியும் ஒருங்கு சேர்ந்திலங்க ஓங்கிய கொள்கை உயர் தமிழ்ப்பாட்டில் உலகியலின்பமும், உயர் பேரின்பமும், உடையவன் அருளும், உடையவள் அருளும் பாவில் அமைத்துப் பாடியருளிய பண்பு நலன் எல்லாம் யாவரே எழுதிக் காட்டவல்லார். எல்லாம் உணர்ந்தார்க்கும் எழுதிக்காட்ட இயலாத இன்பப் பெருந்தேன்வெள்ளமே வாதவூரடிகளின் மலர்வாய்ப் பிறந்த திருக்கோவைப் பாடல்கள்.

பராசக்தியை வழிபடுதல் வேண்டும். வழிபட்டால் என்ன தருவாள்? தனம் தரும். பொருள் இருந்தால் போதுமா? அறிவோடு அதனைப் போற்ற வேண்டாமா? அதற்காகக் கல்வி தரும். அது போதுமா? அதனோடு மனம் கோழையாக இருந்தால் பயன்படுமா? ஒருநாளும் தளர்வறியா மனம்தரும். இவை எல்லாம் இருந்தாலும் ஒரு நல்ல தோற்றம் வேண்டாமா? தெய்வ வடிவும் தரும். இவ்வளவுமிருந்தும் நல்ல இனம் வேண்டாமா? நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும். இப்படியே ஒன்று ஒன்றுகச் சொல்வானேன். நல்லன எல்லாம் தரும்.

— கயிலைக் குருமணி

பெரியபுராணப் பெண்ணடியார்கள்

வித்துவான். தி. முத்துக்கண்ணப்பர், பி. ஏ., எம். எல். சி.

சமயத் தொண்டில் மங்கையர்மேற் கொண்டுள்ள பங்கு மகத்தானது. சைவ சமய மங்கையர் மணிகளுள் அவனருளாலே அவன்தாள் வணங்கி அவனுல் ஆட் கொள்ளப்பெற்ருர் ஒரு நங்கை. புறச்சமயச் சேற்றில் அழுந்திக் கொண்டிருந்த தம் கணவனை மீட்டு அவனுடன் தாமும் ஆண்டவனுல் ஆட்கொள்ளப்படக் காரணமா யிருந்தார் மற்ருெரு நங்கை. அருள் மகனை ஈன்று புறந்தந்து, கணவனுக்கும் கடவுள் நெறி காட்டித் தாம் மூவரும் ஒருங்கே ஆட்கொள்ளப் படுவதற்குக் காரணமாய்த் திகழ்ந்தார் வேருெரு நங்கை. சைவப் பெருநெறி தவறிச் சமணத்தீயில் வீழ்ந்த தம் தம்பியாரைக் கைதூக்கிவிட்டுத் திருவெண்ணீறளித்துத் தாமும் தம்பியாருமாய் ஆட் கொள்ளப்படுவதற்குக் காரணமாய் நின்ருர் மேலுமொரு நங்கை. இந்நான்கு நங்கையரும் முறையே காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார், இசைஞானியார், திலகவதியார் ஆகியோரே யாவர்.

இசைஞானியார் :

" மாதொரு பாகனுர்க்கு வழிவழியடிமை செய்யும் வேதியர் குலத்துள் தோன்றி மேம்படு சடையனுரின் " மேன்மைசால் மனைவியராய் விளங்கியவர் இசைஞானியார். இவர்களின் பெருந்தவப் புதல்வரே நம்பியாரூரர் என்னும் பிள்ளைத் திருநாமம் பூண்ட சுந்தரமூர்த்தி நாயனுர். 'தாயைப்போல் பிள்ளை நூலைப்போலச் சேலை' என்பது பழ மொழி. ஒரு குழந்தை செயற்கரியசெய்து ஓங்கும் பெரியனுகவோ, அன்றி நிலச் சுமையாய்க் கிடந்துழலும் சிறியனுகவோ மாறுவதெல்லாம் அவனை ஈன்று புறந்தரும் அன்னையைப் பொறுத்ததே. தாயின் உடல்நிலை, உள்ள நிலை, சூழ்நிலை, வளர்ப்புமுறை இவையே குழந்தையின் வாழ்வுக்கும் வீழ்வுக்கும் பெரிதும் காரணமாகின்றன. 'நிலத் தின் தன்மை பயிர்க்குளதாகு' மன்ருே ?

இசைஞானியார் சீரிய பழக்க வழக்கங்களும், பண்பாடும், நல்லொழுக்கமும் பூண்ட கற்புக்கரசியார். இறைவனிடத்து இடையரு அன்பு பூண்ட ஏந்திழையார். எனவேதான் கருவிலேயே திருவுடைய அருள் மகனை ஈன்ருர். மூலமான திருத் தொண்டத் தொகைக்கு முதல்வராய் ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி 'தம்பிரான் தோழர்' என்று புகழப்பட்ட சுந்தரமூர்த்தியடிகளாரை ஈன்றளித்தன் மூலம் சமய உலகினுக்கே பேருதவி செய்த சான்ருேரானுர். எண்டிசையும் புகழ் பரப்பிய இம் மங்கையர் திலகத்துக்கு இசை ஞானியார் என்ற பெயர் எவ்வளவு பொருத்தமானது.

அரனுரின் திருத்தொண்டர் திருக்கூட்டத்துள் ஒரு குடும்பம் முழுவதுமே இடம் பெற்றுவிட்டதென்ருல் அப்பெருமை அக் குடும்பத்தரசியார் - இணையில்லா மாதர் மணி இசைஞானியாரை யன்ருே சேரும்? அம்மையார் சடையனுராம் சான்ருேரை மணந்து, நால்வருள்ளும் நனிசிறக்கும் ஆரூர் அடிகளை ஈன்று, அவ்விருவரும் அருளடியாராய்த்தோன்றித்துலங்குதற்கு, அம்மையாரையே கண்ணுதற் பெருங்கடவுள் காரணமாக்கிய திருவிளையாடலை எங்ஙனம் எடுத்தியம்ப இயலும்! அவ்விருவரையும் ஆட்கொள்ள அம்மையாரை மூலமாக்கி அவரையும் உடன் ஆட்கொண்ட திறனை என்னென்பது! அம்மையாரின் இசையை, ஞானத்தை இனைத்தென்று எடுத்தியம்பல் எளிதோ! ஆதலால் அன்ருே,

"ஒழியாப் பெருமைச் சடையனுர் உரிமைச் செல்வத் திருமனையார்
அழியாப்புரங்கள் எய்தழித்தார் ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டியாரை என்சிறுபுன்
மொழியாற் புகழமுடியுமோ? முடியாதெவர்க்கும் முடியாதால்"

என்று பெரிய புராணம் பாடிய சேக்கிழாரடிகளே அம்மையாரது பெரும்புகழைப் பேச முடியாது மயங்கி ஒரே திருப்பாட்டோடு முடித்துக்கொண்டார்.

மங்கையர்க்கரசியார்:

மனைவியர் ஆண்களின் வாழ்க்கைத் துணைவியர். ஒரு மனைவி அவனது கணவற்குத் தோழியாகவும், துணைவியாகவும், மதியமைச்சாகவும், வழிகாட்டியாகவும், தாயாகவும் உதவிபுரியும் பெரும்பேறு பெற்றிருக்கிருள். சாந்தம், அமைதி, அன்பு, அடக்கம், பொறுமை, சகிப்புத்தன்மை, மறந்து மன்னிக்கும் மாண்பு இவையனைத்தும் திரண்ட எழிலுருவமே பெண் பிறவி எனலாம். ஓடித்திரியும் நெஞ்சை ஓடாது அடக்க இயலாது வருந்தியுழல்கின்ற கணவரின் மனத்தையும் அமையச் செய்து நன்னெறியில் செலுத்தும் ஆற்றல் கற்புக்கடம்பூண்ட மங்கையர்க்கரசிகளுக்கே உண்டு. கோவலனும், சாதுவனும் முறையே பத்தினித் தெய்வம் கண்ணகியாலும், 'வான்தரு கற்பின் மனையுறை மகளிரின், தான் தனியோங்கிய தகைமையளான' ஆதிரையாலும் திருந்திச் சிறப்புற வோங்கிய செய்திகளைப் பழம் பெருங்காவியங்களிற் காண்கிருேம். மங்கையர் மூலம் அவரது மணுளரை எம்பெருமான் ஆட்கொண்ட அருஞ்செயல்களைப் பெரிய புராணம் பேசுகிறது.

பாண்டியன் நெடுமாறன் என்பவன் பைந்தமிழ் மதுரையை யாண்ட பார்த்திபன். மாற்ருரை வலிதொலைத்து வாகை சூடிய வல்லவன். ஆனுல் வளைந்த புறமும் (முதுகு) அகமும் கொண்ட புன்மையன். எனினும், வீடெல்லாம், வீதியெல்லாம், நாடெல்லாம் அரனுர்க்கு நற்கோயில் எழுப்பிச் சைவம் தழைக்கச் செய்து தனிப்பெருமை பூண்ட சோழப் பெருங்குடி மகளான மங்கையர்க்கரசியினை வாழ்க்கைத் துணையாய்க் கொள்ளும் பேறு பெற்றவன்.

அந்நெடுமாறன், 'தடுமாறும் நெறியதனைத் தவம் என்று கொண்டொழுகும் சமணர்' சமயம் சார்ந்தொழுகி வந்தான். ஆதலால் மங்கையர்க்கரசியாம் மனைவியும், அறிவுசான்ற அமைச்சர் குலச்சிறையாரும் சொல்லொணுத் துயர்க்கடலுள் ஆழ்ந்து துடித்தனர். பரசமய கோளரியாம் காழியர்கோன் அந்நாளில் தென்னுட்டில் சுற்றுப் பயணம் செய்து சைவசமயச் சங்கநாதம் முழங்கி வந்தார். மங்கையர்க்கரசியார் அவரைத் தம் நாட்டுக்கு வரவழைத்தார். அவரது வரவை யறிந்த சமணர் உள்ளம் சாம்பினர். அவர் தங்கியிருந்த திருமடத்துக்குத் தீவைத்தனர். நாயனுரின் ஆற்ற லால் மடத்துத் தீயனைந்து வெப்பு நோயாக மாறி மன்னனைப் பற்றியது. வேதனை யடையும் மன்னனைச் சமணர் குழு அணுகியது. நோய் தணிக்கப் பெரு முயற்சி செய்தது. பயனில்லை. அடலேறனைய மன்னன் கடுஞ்சுரம் மிக்குப் படாத பாடுபட்டுப் பதறினுன். திருஞானசம்பந்தப் பெருமான் உடனே அங்கெழுந்தருளி மன்னற்குத் திருநீறு பூசி 'மந்திரமாவது நீறு' என்னும் அருட்பாட்டைப் பாடினுர். மாறன் குணமடைந்து குதூகலமுற்றுன். பிடிவாதம் கொண்ட அமணர்கள் பின்னும் அனல் வாதத்தும், புனல்வாதத்தும் ஈடுபட்டுப் படுதோல்வி யடைந்து மதியிழந்து வாயிழந்து கழுவேறி மாய்ந்தனர். பைந்தமிழ்ப் பாண்டியமன்னன்,

" ஆனபேர் இன்பம் எய்தி உச்சிமேல் அங்கை கூப்பி
மானமோன் றில்லார் முன்பு வன்பிணி நீக்கவந்த
ஞான சம்பந்தர் பாதம் நண்ணிநான் உய்ந்தேன் "

என்று கூறிப் புத்துணர்ச்சியும் புதுவாழ்வுமடைந்து பூரித்தான். சைவசமயம் பற்றிச் சீருடன் செங்கோல் ஓச்சி இறுதியில் சிவபதமடைந்து, சைவ மங்கையர்க்கரசியாம் மாண்புறு மனைவியோடு அறுபத்துமூன்று அடியார் திருக்கூட்டத்துள் நின்றசீர் நெடுமாறனுகத் திகழும் பேறும் பெற்றுன்.

அம்மையாரின் அருளாற்றலை வியந்தன்றே 'செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார்' அடிகள்,

'மங்கையர்க்குத் தனியரசி யெங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினுலே
இருந்தமிழ் நாடுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பினுரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்றலாமே "

என்று போற்றிப் பாடிப் பரவியுள்ளார்.

கடமை எது?

திரு. கே. கிருஷ்ணமூர்த்திப் பிள்ளை

தாமரை மலர் போன்ற அழகிய சிவந்த திருமுகம்; அருள்மடையுடைந்த எழில் விழி; புன்னகையாகிய நிலாவீச்சு; செவ்வானத்து வண்ணத்தையும் விஞ்சித் திகழ்ந்திடும் செஞ்சடைக்காடு; செஞ்சடைக் காட்டிற்கு அணிசெய்யும் செம்பொற் குழைகள் (குண்டலங்கள்); சின்முத்திரையைச் சித்திரிக்கும் மலர்க்கரம்; அத னிடையே ஐந்தெழுத்தின் தோழமை கொண்ட செபமாலை; மற்றொரு மலர்க்கரத்தில் ஐயம் அகற்றிடும் அருள் சிவஞானபோதம். சரற்கால மதிகோடி வெள்ளம் என நிறை வடிவோடு தவராஜயோகி ஒருவர் 'செந்நெலுங் கன்னலுஞ் சேருமெய்த் தருமையாம் ஞானப் பூஞ்சோலையிலே வீற்றிருந்து' தன்னடைந்தார்க் கின்பம் நல்கக் காத்திருக்கும் காண்பரிய காட்சி. எதிரில் அருள்நீர் பெருக்கி மெய்விதிர்ப்ப உள்ளங்கரைந்துருக புனையாவோவியம் போன்று நிற்கின்றது பிஞ்சுமேனியிலே பேரெழிலைத் தாங்கிய ஒருருவம்.

அவ்வுருவின் செவ்விதழ்கள் சொன்முத்துக்களை உதிர்க்கின்றன.

"திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தத்
திறவா நிலைமைபெற்றின்ப மார்ந் திருக்கும்
பிறவா நன்னெறி பெறப் புரிவதுவே
அங்கது புரிதற் கரிதேனின் இங்கொரு
சனனம் யான் வேண்டுவ தினிதருள்எனக்கே
....
.....................................வழுத்துநின்
பொன்னடித் துணைசேர் நின்னடித் தொண்டர்
திருவமு தார்ந்து தெருக்கடை யெறிந்த
பரிகல மாந்தியிப் பவக் கடலுழக்கும்
வரனுடை ஞமலி யாகி நின்
அருளையும் அயரா தவதரிப் பதுவே"

பேரின்பப்பொருள் நல்லின்ப ஒளி விசிடும் அம்முத்துக்களைப் பண்டார மும்மணிக் கோவையிலே பரப்பிவைத்திருக்கும் அழகின் ஒரு பகுதி இது.

17 ஆம் நூற்றாண்டிலே தருமை கண்ட காட்சியிது. குருமணியான அருள் மாசிலாமணி தேசிகப் பெருமான் முன்னர்க் கோலமயில் வாகனன் அருள்பெற்ற பால யோகி குமரகுருபரர் நிற்கும் காட்சியே மேலே சித்திரிக்கப்பெற்றுள்ளது. குருவருளின் பெருமையை இதனினுஞ் சிறப்பாக எவரும் கூறமுடியாது.

குருவருளால் நமக்கென்ன பயன்? வாருங்கள் ஆராய்ச்சிக் கூடத்தில் புகுவோம்! "தர்மம் சர" (धर्मम् चर) என்பது உபநிடத வாக்கியம். அதற்குக் கடமையைச் செய் என்பது பொருள். இன்னும் விளக்கமாகக் கூறினுல் கடமையைச் செய்துகொண்டேயிரு என்று கூறவேண்டும். கடமையைச் செய்யாமல் கடவுள்கூட இருக்கமுடியாது என்று கூறிக் கடமை செய்வதின் அவசியத்தை வலியுறுத்துகின்ருர் கண்ணன் கீதையிலே. "பார்த்தா! மூவுலகிலும் எனக்குக் கடமையொன்றுமில்லே. அடையாத ஒன்றை இனி அடைந்தாகவேண்டும் என்பதும் இல்லவேயில்லே. ஆயினும் நான் கர்மம் செய்துகொண்டேயிருக்கிறேன்".

"அருச்சுனு! நான் அயர்வின்றி எப்போதும் கர்மத்தில் ஈடுபடாவிடில் மனிதர்கள் என் வழியையே யாண்டும் பின்பற்றுவர். (சோம்பித்திரிதல், முயற்சி குன்றுதல், மேலோரிடம் இருக்கிறதெனக்கூறி வாழாதொழிதல் பலரது நோக்காகும்)" "யாண்டும் பற்றற்றுப் பண்புடன் பெருவினேயாற்றுக. பற்றற்றுப் பணிபுரிபவனே பெருநிலேயைப் பெறுகிருன்." ஓயாது இருதயம் இயங்கிக்கொண்டிருப்பதால் உடல் வாழ்க்கை நன்கு நடைபெறுகிறது. ஆனுல் இதயம் இயங்குவதை மனிதன் கருதுவதில்லே. அதுபோன்று பல கருமங்களேப் பற்றற்றுச் செய்யவேண்டும். "ஸ்வகர்மணு தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததிமாநவ:" स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः ஈசுவரனே சுயகர்மத்தால் வணங்கி மனிதன் மேன்மையையெய்துகிருன் என்கிறது கீதை. சுயகர்மம் அல்லது கடமை எது? நமது கடமை குறித்து விளக்கம் தரும் நூல்கள் சுருதியும், ஸ்மிருதியும் ஆகும். உபநிடதங்கட்குச் சுருதி என்று பெயர். காதால் கேட்டுக் காப்பாற்றி வைக்கப்பெற்றது என்ற காரணத்தால் அது சுருதி எனப் பெயர்பெற்றது. நெடுங்காலமாக ஒருவர்பின் ஒருவராகக் கேட்டு வந்தது எனினும் அதன் சொல் அமைப்பை யாரும் மாற்றிவிடவில்லே. எண்சுவடியை எங்ஙனம் யாரும் மாற்றமுடியாதோ அங்ஙனமே சுருதிப்பொருளே யாரும் மாற்றமுடியாது. மெய்ப் பொருளே விளக்குகின்ற சுருதிமொழி என்றென்றும் நிலேயானது.

ஸ்மிருதி என்பது நினேவுக் குறிப்பு. நினேவில் வைத்துக்கொள்ளப்பட்டது எனப்பொருள்படுகின்றது. சமூகவாழ்க்கையைப்பற்றிய சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் சேர்ந்து ஸ்மிருதி எனப் பெயர் பெறுகின்றன. ஆயினும் ஸ்மிருதிகள் பரதத்துவங்களே அடிப்படையாகக் கொண்டவை. ஸ்மிருதிகள் காலத்திற்கும் இடத்துக்கும் சூழ்நிலேக்கும் ஏற்ப மாறியமையும். சமூக நடைமுறைகளே நன்கு அறிந்துள்ள மறை வல்ல ஆன்ருேர் கூட்டம் ஸ்மிருதிகளேக் காலத்திற்கு ஏற்றவாறு திருத்தியமைத்துக் கொள்வதுண்டு. எனவே ஸ்மிருதியென்பது அப்போதைக்கப்போது மாறியமையும் தன்மையுள்ள சமூகக் கோட்பாடுகளாம்.

குழப்பம் நிறைந்த காலமிது. சுருதி, ஸ்மிருதிகளைப் படிக்க நேரமில்லை. படித்தாலும் பொருள் உணரப் பொறுமையில்லை. உலகியல் வாழ்க்கையில் அமைதி மறைந்துவிட்டது. இதற்கெல்லாம் காரணம் நாம் செய்யவேண்டிய கடமை குறித்து நமக்குத் தெளிவு இல்லை. என்ன செய்வது ? இப்படியெல்லாம் நிகழக்கூடும் என்பதனை நமது முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இன்றைய தேவையை அன்றே பூர்த்திசெய்து வைத்திருக்கின்றனர்.

மனிதன் செய்யவேண்டிய கடமைகளை வேதங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. வேதங்களைப் படிக்க நேரமில்லாவிட்டால் வேதங்களைக் கற்றறிந்த மேலோர் வகுத்த ஸ்மிருதிகளினின்று கடமைகளை உணரலாம். அதிலும் விளங்காவிடில் மனிதனுடைய வாழ்நாளில் திகழும் சீலர்களான குருமூர்த்திகள் அருளும் நெறியைப் பின்பற்ற வேண்டும் எனக் கூறிப் போந்தனர்.

மேட்டூர் அணையில் பொருத்தப்பெற்றுள்ள மின்பொறி மின்சக்தியை உற்பத்தி செய்ய, அது பல்வேறு சாதனங்கள் வழியாக நமது வீட்டில் அமைக்கப்பெற்றுள்ள விளக்குகளை எரியச் செய்கின்றது. நமது வீட்டில் ஒளி வேண்டுமானால் வீட்டிலுள்ள 'ஸ்விட்ச்' அல்லது பித்தானை அழுத்தினால் வெளிச்சம் கிடைக்கின்றது. மின்சக்தியின் தன்மையெல்லாம் உணர்ந்த பொறியரும் விளக்கை எரியச் செய்கின்றார். அத்தன்மை உணராதோரும் பித்தான் உதவியால் விளக்கின் பயனை அடைகின்றார்கள். அதே போன்று மின்சக்தியின் தன்மைபோன்று வேதவாயிலாகக் கடமையை உணரலாம். பித்தானைப் போன்ற குருவருளாலும் கடமையை உணரலாம். பின்னது இக் காலத்திற்கு ஏற்றது அல்லவா ?

இதனால் கடமைபற்றிக் குழப்பம் எழுங்காலோ அன்றிக் கடமை இன்னதென அறியவேண்டிய நேரத்திலோ ஆசான் அருளால் கடமையை எளிதில் உணரலாம் என்பது காணக்கிடக்கின்றது.

வேதத்தின் உட்பொருள் உணர்ந்து கடமையறியக் காலமும் பொறுமையும் இல்லாத இக்காலத்தில் குருவருள் வாயிலாகக் கடமையை அனைவரும் உணரச்செய்ய வேண்டும் என்ற எண்ணம் பல அறிஞர் உள்ளங்களிலே உறைந்து கிடக்கின்றது. குருவருள்பெறும் மறுமலர்ச்சி இந்நாட்டில் தழைக்கவேண்டும். சிதறுண்ட வகையில் சிற்சிலர் ஆங்காங்கே குருவருள் பெற்று நிற்பது போதாது. கூட்டங் கூட்டமாய்க் குருவருள் பெற்று உலகினர் உய்யவேண்டும். வாழ்வு நெறியில் நாம் தவித்ததைப் போன்று நமது வருங்காலச் செல்வங்கள் வாடக்கூடாது. செம்மையான வாழ்க்கையை நமது குழந்தைகள் நடத்துவதற்கான பாதையை வகுத்துத் தரவேண்டிய பொறுப்பு நமக்குஉண்டு. எனவே குருவருள்பெற்று மறுமலர்ச்சி காண முயற்சிசெய்யவேண்டும்.

அன்று ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகருக்கு ஒரு குமரகுருபர். இன்று ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு ஓர் அருணந்தி அடிகளார். பதினேழாம் நூற்றாண்டின் காட்சி இருபதாம் நூற்றாண்டிலும் காணப் பெறுகின்றது.


ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களின் அருளாசியைப்பெறப் பொன் - சொரி விழா நடத்தும் மெய்யன்பர்களின் இந்நிகழ்ச்சி இத்தகைய பல நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக விளங்கச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப்பெருமானைப் போற்றுகின்றேன்.

"கேட்டிடுஞ் செவியு மாசாணுமமே கேடாது காணு
நாட்டமு மாசான் மேனி நாட்டமே நவின்ற வாக்கிற்
கேட்டிடு முரையு மாசான் துதிகளே குணத்து மெய்யிற்
பூட்டுறு தொழிலு மாசான் வழிச்செயப் புகழாமன்றே."

மதஸ்தாபனங்களும் ஆலயங்களும் சமய வளர்ச்சிக்காகவே ஏற்பட்டவை. ஆனால் அவை சமய வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் மொழி வளர்ச்சிக்கும். சமூக வளர்ச்சிக்குமாகப் பயன்பட்டு வருதலை உணரவேண்டும். ஆலயங்கள் பொதுமக்களின் சேமிப்பு நிலையம். எத்தனையோ நூற்றுக்கணக்கான மக்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டு வாழ்கின்றனர். கோயிலின் வருமானமோ நிலமோ தனி ஒருவனுடைய நலத்திற்குப் பயன்படவில்லை. ஆனால் அதே நேரத்திலே அந்தச் சொத்து தனிப்பட்ட ஒரு மனிதனுடையதாக இருக்குமானல் அஃது அவனது சுயநலத்திற்கு மட்டுந்தான் பயன்படும் என்பதை அன்பர்கள் உணர்தல் வேண்டும்.

— கயிலைக் குருமணி

கயிலாயம் :



தெற்குமுகம் - தர்ச்சேன்

கயிலை யாத்திரை :



மானசசரோவரத்தில் திருமஞ்சனம்

கயிலை யாத்திரை :



ராக்ஷஸ்தால்

" வீறதேறும் தமிழால் வழி "

டாக்டர். வ. ஆ. தேவசேனபதி M. A., Ph. D.,

" உரையுணர்விறந்து நின்றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்கு மாறுணர்த்தே"

என்று மாணிக்கவாசகர் இறைவனிடம் வேண்டிக்கொள்கிறர். இறைவன் உண்டு என்பதனை உணர்வதும் உண்டு என உணர்ந்தால் அவ்வுணர்வை உரையால் வெளியிடுவதும் எளிதல்ல. எனினும் இறைவனை உணர்ந்து, தாம் அடைந்த இன்பத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதனல் அவர்களையும் அவ்வின்பத்தைப்பெற முயலச் செய்யவே மாணிக்கவாசகர் திருவாசகத்தை இயற்றியுள்ளார். திருவாசகத்தின் பெருமை உலகறிந்த ஒன்ருகும். திருவாசகத்தைப் போலவே தேவாரம், திவ்விய பிரபந்தம் முதலிய புகழ்நூல்களும் உள. தமிழ்மொழி மிகச் சிறந்த சமய இலக்கிய முடையது என்று அறிஞர்களால் போற்றப்பெறுகிறது. மேலும், இறைவன் அருள் பெற்று வீடு பேற்றினை யடைவதற்கு இம்மொழி துணை செய்கிறது என்னும் கருத்தைப் பண்டிதமணி. கதிரேசன் செட்டியாரவர்கள் பின்வருமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

'சைவ நூல்களை முறைப்படுத்திய நம்பியாண்டார் நம்பிகள் என்னும் புலவர் பெருமான், இறைவனையடைந்து பேரின்பம் துய்த்தற்கு வாயிலாகவுள்ள அறிவு மொழி இத்தமிழ்மொழியெனக் கண்டு, அக்காட்சியைத் திருஞானசம்பந்தப் பிள்ளை யார் பெருமை கூறுமுகமாக,

" ஆறதேறுஞ் சடையான் அருள்மேவ அவனியர்க்கு
வீறதேறுந் தமிழால் வழிகண்டவன்"

என்று வெளியிட்டருளினர். " சிவபிரானது திருவருட் பேற்றையடைய உலகத் தவர்க்குத் தமிழால் வழிகண்டவர்" என்னும் இதனல் இது ஞானமொழி என்பதில் ஒரு சிறிதும் ஐயமின்ரும். ஈண்டுத் தமிழைச் சுட்டுங்கால், " வீறதேறுந் தமிழ் " என்ருர். வீறு என்னும் சொல் " வேருென்றற்கில்லா அழகு " என்னும் பொருளதாம். இப்பொருள் சீவக சிந்தாமணியில் " வீறுயர் கலசநன்னீர் " என்புழி நச்சினர்க்கினியர் கண்டதாகும். வேற்று மொழிகட்கில்லாச் சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் முதலிய அழகுகள் இத்தமிழ்மொழிக்கண் மலிந்திருத்தலின் இச் சொற்பொருள் நச்சினர்க்கினியர் கண்ட அவ்விடத்தினும் இங்கு மிகவும் இயைபுடைத்தென்பது நன்கு விளங்கும்'

வீடு பேற்றுக்குத் தமிழால் வழி என்னும் கருத்து, ஆராயத்தக்கதாம். வீடு பேற்றுக்குவழியாக அறிவுநெறி (பக்தி மார்க்கம்), தன்னலமற்ற தொண்டுநெறி (கர்ம மார்க்கம்) என்பவை பேசப்பெறுகின்றன.

"... ... ... மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபேறும்"

என்னும் வெண்பாவில் வரும் கருத்து மொழியைச் சரிவர உணர்வதன் கட்டாயத்தை வற்புறுத்துகிறதெனினும், மொழிஅறிவு அல்லது இலக்கண அறிவு எம் மொழியிலும் கருவியாகக் கூறப்படுவதாகக் கொள்ளலாம். எனவே, தமிழ்மொழிவழிவீடுபேறு என்பது மிகத் தெளிவாகத் தமிழ்மொழியின் முதன்மையைக் கூறுவது புதிய கருத்தாகத் தோன்றுகிறது. மேலும், மொழியை முன்கூறிய மூன்று நெறிகளுள் யாதேனும் ஒன்றைக் கற்பிக்கப் பயன் படுத்தலாமெனினும் முதன்மை மொழிக்கே தரப்பெறுவது வியப்பை யுண்டாக்குகிறது. இதே கருத்து வேறு எங்கேனும் கூறப்பட்டுளதா என்று எண்ணும்போது,

"சித்தர் சித்தத்துறப்பற்றி மேத்தப் புகழ்ச்
செப்பு முத்தித் தமிழ்ப் பெருமாளே"

என்னும் திருப்புகழ் நினைவுக்கு வருகிறது.

'முத்தித் தமிழ்ப் பெருமாளே' என்பதற்கு 'முத்தியைத் தரவல்ல தமிழாம் தேவாரத்தை அருளிய பெருமாளே (அல்லது) முத்தியைத் தரவல்ல பெருமாளே! தமிழ் கடவுளாம் பெருமாளே' என்று தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் பொருள் கண்டுள்ளார்கள். 'ஞானசம்பந்தன் தமிழ் பத்தும் வல்லார் எய்துவர் வீடெளிதே' என்னும் வரியையும் திரு. பிள்ளை அவர்கள் அடிக்குறிப்பாகக் கொடுத்துள்ளார்கள்.

"செஞ்சொல் சேர் சித்ரத் தமிழாலுன்
சேம் பொனுர்வத்தைப் பெறுவேனோ."

"வாய்ப்புற்றத் தமிழ் மார்க்கத்திட் பொருள்
வாய்க்குச் சித்திர முருகோனே"

"குறுமுனிவ னிருபொழுதும் அர்ச்சித்து முத்திபெற
அறிவுநெறி தவநிலைகள் செப்புத் தமிழ்க்கினிய
குருகுமர பழனிவளர் வேற்புத்தனிற்றிகழும் பெருமாளே"

"அருணதள பாதபத்ம மதுநிதமுமே துதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா"

என்பன போன்ற திருப்புகழ் வரிகளும் ஆராயத்தக்கன.

" அவிழ்க்கின்றவாறும் அதுகட்டுமாறும்
சிமிட்டலைப்பட்டுயிர் போகின்றவாறும்
தமிழ்ச்சோல் வடசோல் எனுமிவ்விரண்டும்
உணர்த்தும் அவனை யுணரலுமாமே "

என்பது திருமந்திரம்.

" ஆதியிற்றமிழ்நூல் அகத்தியர்க்குணர்த்திய
மாதோருபாகனை வழுத்துதும்
போதமெய்ஞ்ஞான நலம்பெறற் போருட்டே "

என்னும் தொல்காப்பியப்பாயிரம் தமிழுக்கும் மெய்ஞ்ஞான நலத்துக்கும் உள்ள தொடர்பினைக் காரண காரிய முறையில் குறிப்பதாகவும் கொள்ள இடமிருக்கிறது.

சிவன், திருமால், முருகன் - இம்மூவரையும் வழிபடும் அடியவர்கள் இத் தெய்வங்களுக்குத் தமிழில் மிகுந்தஆர்வமிருப்பதாகவும் தமிழுக்கே இவர்கள் உறைவிட மாக - அல்லது தமிழே இவர்களுடைய உறைவிடமாக நினைத்துப் பாடி மகிழ்கிறார்கள். " அங்கண் முல்லையின் தெய்வம் என்றருந்தமிழ் உரைக்கும் செங்கண்மால் " என்று சேக்கிழார்கூறுவது நினைவுக்கு வருகிறது. செந்தமிழ்ப்பின் சென்ற கொண்டலாகக் குமரகுருபரர் கூறுவது கணிகண்ணன் வரலாற்றினைக் குறிப்பதாகும். " தமிழ் ஞானசம்பந்தன் " என்று பெருமிதத்தோடு ஞானசம்பந்தர் பாடுவதைப்போலவே பூதத்தாழ்வாரும் " பெருந்தமிழன் " என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொள்ளுகிறார். பொதுவாகத் திவ்யப்பிரபந்தத்தையும், சிறப்பாகத் திருவாய்மொழியையும் திருமால் அடியார்கள் பாராட்டிப் போற்றுகின்றனர்.

" ... ... குருகூர் நிமலன்
புனையுந் தமிழ்க்கவியா லிருணீங்கிப் பொருள்விளங்கி
வினையுந் திரிவுற்றன குற்ற நீங்கினவேதங்களே "

" மொழி பலவாயின செப்பம் பிறந்தது முத்தியெய்தும்
வழிபல வாயவிட்டோன்ரு யதுவழு வாநரகக்
குழிபல வாயின பாழ்பட்டன குளிர்நீர் பொருநை
சுழிபலவாயொழு குங்குரு கூரேந்தை தோன்றலினே "

" ... ...
செய்யதமிழ் மாலைகள் நாம் தேளியவோதித்
தேளியாத மறைநிலங்கள் தேளிகின்றோமே"

என்று தேசிகப் பிரபந்தத்தில் வருவன ஈண்டு நினைவு கொள்ளத்தக்கன. குறிப்பாகக் "குருகூரெந்தை தோன்றலின் மொழிபலவாயின செப்பம் பிறந்தது, முத்தி யெய்தும் வழிபல வாயவிட்டொன்ருயது" என்பதும் "செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே" என்பதும் பெரிதும் இன்பம் பயப்பனவாகும்.

மறைகளுக்கெல்லாம் வித்தாயும் விளைவாயும் உள்ள பிரணவத்தின் பொருளை இறைவனுக்கு முருகர் தமிழில் கூறினர் என்னும் கருத்து,

"கொன்றைச் சடையாற் கொன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் பகர்வோனே'

என்று திருப்புகழில் காணப்பெறுகிறது. கூடலில் தமிழாய்ந்த சிவனைப்போல முருகரும் முத்தமிழை ஆயும் வரிசைக்காரராகப் போற்றப் பெறுகிருர்.

மேற்கூறியனவற்ருல் விடுபேற்றுக்குத் தமிழை வழியாக நம் முன்னேர்கள் கொண்டார்கள் என்பது விளங்கும். மொழியைப் பற்றி விரிவான விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி மேல்நாட்டில் பல ஆண்டுகளாகவும் நம் நாட்டில் சில ஆண்டுகளாகவும் நடந்து வருகிறது. மொழிகளின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்வதோடு தனிப் பட்ட முறையிலும் ஒருமொழிக்கு என்ன சிறப்பு உளது என்று பார்ப்பது நலம். உலகியல் நுகர்ச்சிகளை வெளிப்படுத்த மட்டும் மொழி ஏற்பட்டதா? புறப் பொருள்கள் அல்லது வெற்றுநிலை உண்மைகள் (Abstract Truths) பற்றி விஞ்ஞான முறையில் விளக்கம் தரவும் மொழிக்கு ஆற்றலுண்டா? மற்றும், அக வுணர்வுகளையும் புலன்களுக் கெட்டா உண்மைகளையும் தெரிவிக்க மொழி உதவுமா? உதவுமெனின் விஞ்ஞான முறைக் கட்டுப்பாட்டுடன் அவ்வாறு செய்யமுடியுமா? இன்றேல் அவற்றின் மெய்ம்மை பொய்ம்மைகளை எவ்வாறு பிரித்தறிய முடியும்? இன்னபல கேள்விகள் தற்கால மெய் யுணர்வியலில் மொழிபற்றி எழுகின்றன. பண்டிதமணி அவர்கள், வேற்றுமொழிகட் கில்லாச் சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் முதலிய அழகுகள் இத்தமிழ் மொழிக் கண் மலிந்திருத்தலின் இச் சொற்பொருள் நச்சினர்க்கினியர் கண்ட அவ்விடத்தினும் இங்கு மிகவும் இயைபுடைத்தென்பது நன்கு விளங்கும்" என்கிருர்கள். (i) சுருங்கச் சொல்லல் (Brevity) (ii) விளங்கவைத்தல் (Lucidity) இவற்றுடன் கருக்காகச் சொல்லல் (Precision) என்பதும் விஞ்ஞானத்திற்கு மட்டுமன்றி மெய்யுணர்வியலிலும் சமய இயலிலும் வேண்டற்பாலன. ஆயினும் வெறும் அறிவு நிலைத்தெளிவுடன் நின்று விடாது உள்ளத்தை உருக்கும் தன்மையும் மொழிக்கு அமையவேண்டும். பகுத்துணர் வுக்கு விஞ்ஞானமுறை தேவைப்படுவது போலத் தொகுப்புணர்வுக்கு உள்ளுணர்வு முறை வேண்டற்பாலதாகிறது. இவை ஒன்றற் கொன்று மாறுபட்டவையாகக் காணப் படுவதால் இரண்டின் நலத்தையும் ஒருங்கே எவ்வாறு ஒருமொழியில் பெறமுடியும்?

அறிவு விளக்கம் தருகிற 'தெள்ளு தமிழ்பாடத் தெளிவோனாக' முருகர் கூறப் படுகிருர். உளத்தின் உருக்கமும் தமிழுக்கு உண்டென்பது திருவாசகத்தைப்பற்றிச் சிவப்பிரகாசர் முதலியோர் கூறுவனவற்ருல் அன்பர்களுக்குத் தெரியும். திருவாசகத் தைப் பாராட்டுவதுபோலவே திருவாய் மொழியையும் அறிஞர்கள் பாராட்டுவதற்கு எடுத்துக்காட்டாக,

" உயிர்த்தாரையிற்புக்குறு குறும்பாமோரு மூன்றணையுஞ்
சேயிர்த்தார் குருகைவந்தார் திருவாய்மோழி சேப்பலுற்றால்
மயிர்த்தாரைகள் போடிக்குங் கண்கணீர் மல்குமாமறையுள்
அயிர்த்தா ரயிர்த்தபோருள் வேளியா மேங்களந்தணர்க்கே "

எனக் கம்பர் கூறுவது நினைவுக்கு வருகிறது.

பண்டைக்காலமுதல் தமிழ்மொழியின் பெருமை பலவாருகப் பாராட்டப் பட்டுளது. இன்று நடைபெறும் மொழி ஆராய்ச்சியில் அதன் சிறப்பு (i) எழுத்துக் களின் ஒலியால் ஏற்படுவதா? (ii) சொற்களின் திறனல் உண்டாவதா? (iii) சொற் ரெடர்களின் அமைப்பால் விளங்குவதா? - இன்னபல கேள்விகளுக்கு விடைகாண இம்மொழியைப் பிறமொழிகளுடன் ஒப்புநோக்குவதுடன் இம்மொழியையே (i) உல கியல் (ii) விஞ்ஞானம் (iii) மெய்யுணர்வு ஆகிய மூன்று நிலைகளின் தேவைகளுக் கேற்ப எவ்வாறு அமைந்துளது என்று ஆராய்வதால் மிகுந்த பயன் உண்டாகும்.

அறிவு விளக்கத்தால் உருக்கம் ஏற்படுகிறதா? உருக்கத்தால் அறிவு தெளிவு அடைகின்றதா? ('கண்கள் நீர்மல்க, மாமறையுள் அயிர்த்தார் அயிர்த்த பொருள் வெளியாம்') அறிவுவழி உருக்கம் - அல்லது உருக்கத்தின்வழி அறிவு என்னும் இவ் வரிய நிகழ்ச்சியை உண்டாக்கும் தமிழ் 'சித்தர் சித்தத்துறைப்பற்றும் தமிழ்' 'அருள் மேவ வழியாம் வீறதேறும் தமிழ்' என்பதனை இக்கால மொழி ஆராய்ச்சியாளர் நிலை நாட்டினல் 'என்றுமுள தென்தமிழ்' என்பது வலியுறுத்தப்பெறும்.

பண்பட்ட மனம் இல்லாதவர்களுக்குப் பரமனே நேராக வந்தாலும் துணிவும் பணிவும் வரமாட்டா; பயன்கொள்ளவும் மாட்டார்கள்.

— கயிலைக் குருமணி

என்ன வேண்டும்?

திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை I. A. S.

அருள் வேண்டுமா அல்லது பொருள் வேண்டுமா? குணம் வேண்டுமா பணம் வேண்டுமா? மதி வேண்டுமா? கதி வேண்டுமா? நிதி வேண்டுமா? நீதி வேண்டுமா? ஞானம் வேண்டுமா? விஞ்ஞானம் வேண்டுமா? நமது நாட்டில் பலர் அருள் வேண்டுமென்பர். மேல்நாட்டில் பலர் வியத்தகு விதத்தில் முன்னேறுகின்றனர். பொருளாதாரமும் பெருகுகிறது. நமது நாட்டினரும் மேல் நாட்டவர் விஞ்ஞான முறைகளை எட்டிப் பிடிக்கின்றனர். இந்நிலையில் நமது நாட்டில் "விஞ்ஞானமும் பொருளாதாரமும் பெருகட்டும். ஆனால் அவை பண்டை நாளிலிருந்து வேரூன்றி நிற்கும் ஆன்மிகத்தை அழிந்தல் கூடாது. விஞ்ஞானமும் ஆன்மிகமும் இணைக்கப்பட வேண்டும்" என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். நமது நாட்டின் முன்னோர் வகுத்த சமய வாழ்வில் மக்கள் சிறப்புற வாழ்வதற்கான வாய்ப்புக்கள் எல்லாம் உள்ளன என்பது வெளிப்படை. மனித வாழ்வு பெறுதற்கரியது. அந்த வாழ்வு அரியதெனினும் மனிதர்களுக்கு உரியது. இந்த வாழ்வு மனித இனத்திலிருந்து பிரிவுபடாததாம். எத்தொழில் புரியினும், அன்பு, அருள், உண்மை, ஒழுக்கம் முதலிய பண்புகளுடன் இணைக்கப்பட்டது சமய வாழ்வு.

இத்தகைய சமய வாழ்வை நடத்திப் பெருவாழ்வு பெறுதற்குரிய மனிதன் பற்பல சூழ்நிலைகளால் பற்பல காரணங்களால் தனது அன்புப் பாதையிலிருந்து வழுக்கி விழுகின்றான். அப்பொழுது பெருங்கருணைப் பரம் பொருளாகிய இறைவன் வழுக்கி விழுந்த மனிதனுக்குக் கைகொடுத்து அவனைக் கரை சேர்க்கின்றான். வழுக்கி விழாமல் இருக்கும் மற்றவரை எச்சரிக்கின்றான். இத்தகைய உதவிகளை இறைவன் அடியார்கள் உருவம் தாங்கிச் செய்கின்றான். அடியார்கள் உடல் அவன் உறையும் கோயில். அடியார்கள் பேசும் அறிவுரைகள்-அருள் வாக்குகள் அவனுடையவையாம். திருஞானசம்பந்தர் தனது உரையை இறைவனது உரையே எனக் குறிப்பிடுகின்றார். தம்மைத் "தமிழ் மாலை பாடுவித்தான்" இறைவன் என்று கூறுகின்றார் திருநாவுக்கரசு நாயனார். அடியார்கள் தோற்றத்தால் இவ்வுலகம் இந்த அளவிலாவது இழிந்த நிலையடையாமல் நடைபெறுகின்றது. விவேகானந்த சுவாமிகள் திருவாங்கூருக்கு எழுந்தருளியபோது அவரை அங்கு அக்காலத்தில் விளங்கிய ஒரு பேரறிஞர் சந்தித்தார். இந்து மதத்தின் கோட்பாடு என்ன என்று சுவாமிகள் வினவியதும், அவ்வறிஞர் இரு சொற்றொடர்களால் விளக்கம் தந்தார். "பிரவர்த்தி" "நிவிர்த்தி" என்றாராம். துறவிகளும், தத்துவஞானிகளும் தவம் இயற்றித் தனித்திருந்து முக்தி பெறச் சக்தி பெற்றவர்கள் எனினும், அவர்கள் பிறர் நலம் காணும்பொருட்டு-பிறரை உய்விக்க உலகத்தாருடன் பழகி அவர்களுக்கு நல்லுபதேசம் செய்கின்றனர். இதுதான் பிரவர்த்தி

(உலகினில் புகுதல்). நல்லுபதேசத்தைப் பெற்ற மக்கள் உலகவாழ்க்கையே நிலையெனக் கருதும் பந்தத்திலிருந்து நிவிர்த்தி (விடுதலை) பெறுகின்றார்கள். இம்மாபெருஞ் சாதனங்களைச் செய்கின்றது சமய வாழ்வு.

நாளடைவில் சமய வாழ்வு தளர்வுற்று வருகிறது. உலகாயதம் மேலோங்கு கிறது. போக்குவரத்துச் சாதனங்கள் பெருகிவிட்டன. உலகினைச் சுற்றி விரைவினில் திரும்பத்தக்க வசதிகள் உள்ளன. கருத்துக்களும் பேச்சுக்களும் உடனடியாக உலகினில் பல இடங்களிலும் ஒரே சமயத்தில் கேட்க முடிகிறது. உலகம் ஒரு வகையில் ஒன்றாகத் திரண்டிருப்பதாகக் காட்சி அளிக்கின்றது. எனினும் மக்களுக்கு மக்கள் வேற்றுமை உணர்ச்சியைக் காட்டிக் கொள்கிறார்கள். "ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" என்று சமயம் கூறி வந்ததற்கு எதிராக மக்களை மக்கள் கண்டு அஞ்ச வேண்டியவர்களாக உள்ளனர். இதே நேரத்தில் ஒரு துயரக்காட்சி. நாட்டின் செல்வாக்கு வளர வளர நாட்டு மக்களின் தேகவன்மை குறையும் சூழ்நிலை ஏற்படு கிறது என மேல்நாட்டுப் பெருந்தலைவர் † அண்மையில் கூறினர். "தக்க உழைப் பில்லாமையும், பெருவாரியான பொருள் வளமும் மக்களது உடல் வன்மையை அரித்து விடுகின்றன. உல்லாசக் காட்சிகள் முதலிய சாதனங்கள் இளைஞர்கள் உடல் உழைப்பில் ஈடுபடாதவாறு தடுக்கின்றன. இதைப்பற்றி அறிவாளர்கள் சிந்திக்கக்கடவர். வாழ்க்கை சொகுசாகவும் இலகுவாகவும் மாறக்கூடாது" நமது நாட்டு நிலை மன நிறைவு அளிப்பதாக இல்லை. நமது நாட்டின் துணைத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் எடுத்துக் கூறியவை மிகமிகச் சிந்திக்கத் தக்கவை. * "இந்து மதத்திற்குச் சிறிய அளவில்தான் உயிர்ப்பு உள்ளது. ஒரு காலத்தில் உயிர்த்துடிப்புடன் மிளிர்ந்திருந்தது. இப்பொழுது ஒலி அடங்கிக்கிடக் கின்றது. எதிர்காலத்தில் நன்மை தரக்கூடிய மாறுதல் ஏற்படுமா என்று நாம் காலத்தைக் கடத்திக்கொண்டு வருகின்றோம். நாம் முன்னேறவில்லை. இப்போது சமயத்தில் உற்சாகம் இல்லை. ஆன்மீகம் குறைந்துள்ளது. அரசியல்களில் பல மாறுதல் ஏற்பட்டுள்ளன. நமது வளர்ச்சி நியதியில் நாம் அக்கறை கொள்ளவில்லை." இவர்கள் கூறுவதில் எத்துணையோ உண்மைகள் உள்ளன. சமயவாழ்வில் பற்றில்லாது போகவே, அன்பு முறையும், அருள்வழியும் மறைந்து சென்றுகொண்டிருக்கின்றன. வாழ்க்கையில் ஏமாற்றம், வெறுப்பு, ஒழுக்கக்கேடுகள், வேலைநிறுத்தம், வன்செயல்கள் ஆகிய இவைகளைக் காண்கின்றோம். இச் சூழ்நிலையைத் தவிர்க்க ஓராண்டுக்கு முன்னர் பம்பாய் மாநில ஆளுநர் திரு. ஸ்ரீ பிரகாசா அவர்கள் தலைமையில் ஒரு குழுவினர் தமது பரிந்துரையைத் தெரிவித்தனர். இந்நிலைக்குக் காரணம் மக்கள் சமயப்பற்றை இழந்ததே என்றும் புதிய புதிய கருத்துக்களை நன்கு ஆராய்ந்து

---

† அமெரிக்கநாட்டு ஜனாதிபதி அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் (சண்டேஸ்டாண்டர்டு 29—1—61 வார இதழில் வந்தவையாம்).

* டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் இயற்றிய "Hindu View of Life"

பாராது ஏற்றுக்கொண்டதும் ஆகும் என்றும், இக் குறையைப் போக்க வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலே அறநெறியையும் ஆன்மிக சக்தியையும் வளர்க்கவேண்டுமென்றும், இவைகளைக் கைவிடுவோம் எனில், நாம் இழந்த நாட்டினராவோம் என்று தெரிவித்தனர். புதிய புதிய கொள்கைகளுக்கு மனத்தைப் பறிகொடுத்துக் குழப்பத்தைத் தருவித்தல் தகுதியன்று என்றும் கூறினர்.

இதுவரை கூறியதிலிருந்து என்ன வேண்டும் என்பதற்குப் பொருத்தமான பதில் நாம் தரலாம் என்பதற்கு ஐயமில்லை. விஞ்ஞான வளர்ச்சியுடனும் பொருளாதாரப் பெருக்கத்துடனும் ஆன்மீகம் இணைக்கப்படவேண்டும். ஆன்மிகத்தை எடுத்துரைக்கவும் நல்லுபதேசம் செய்யவும் சமயத் தலைவர்கள் வேண்டும். இத்தகைய பெரும்பணிகளைச் செய்து வருகின்றன தருமை ஆதீனம் போன்ற மடங்கள் - சமய நிலையங்கள். இப்பொழுது எழுந்தருளியிருக்கும் 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சமயம், மொழி, இலக்கியம் முதலிய பல துறைகளிலும் அரும்பெரும் பணி ஆற்றி வருகின்றனர். அவர்கள் பணிகளைப் பாராட்டக் கனகாபிஷேகம் நடைபெறுகிறது. இத்தகைய பாராட்டுக்கள் ஆன்றோர்களுக்குத் தேவையில்லையெனினும் பல மக்களும் அவர்களைத் தெரிந்து அவர்களது நல்லுபதேசம் கேட்க வாய்ப்பளிக்கின்றன. அனுமன் சீதாப் பிராட்டியாரைத் தேடிச் செல்ல இலங்கைக்குப் புறப்படுமுன் அவன் வீரத்தைப் பலர் பாராட்டுகின்றனர். அவனது ஆற்றல் அவன் கண்முன் அவனுக்குத் தெரிகின்றது. அவனுக்குக் கடலைத்தாண்டும் சக்தி வந்துவிடுகிறது. பல பணிகளைப் புரிந்துவரும் மகாசந்நிதானம் அவர்கள் நமது நாட்டின் சிகரம் என விளங்கும் இமயத்தின் மேலுள்ள கயிலையைக் கண்டவர்கள். அரிய பெரிய நல்ல பணிகளைப் பாராட்டுவோமாயின் அவர்களிடம் இருக்கும் அரிய சத்தி அவர்களை இமயத்தை எட்டிப்பிடிக்கச் செய்ததுடன் நின்றுவிடாமல் கடல்கடந்து பல நாட்டாருக்கும் உதவிசெய்யத் தூண்டிவிடக்கூடும். எனவே இத்தகைய விழாக்களில் பெரும் பயன் உண்டு. பொன், வெள்ளி, இரும்பு ஆகிய இவற்றல் மூன்று அரண்களில் இருந்து பறந்துசென்று கிழிறங்கி உயிர்களுக்குக் கேடு செய்தனர் மூன்று அரக்கர்கள். அவர்களைப் பார்த்துச் சிவபிரான் சிரித்த அளவில் இம்மூன்று புரங்களும் எரிந்தன என்கிறது புராணம். சிவபிரானது நகைப்புத் தீயின்முன் திரிபுரம் நிற்கமுடியவில்லை. அன்று நடமாடிய மூன்று அரக்கர்கள் ஆணவம், கன்மம், மாயை என்ற உருவங்களில் இன்றும் தாண்டவம் ஆடுகின்றனர். திருமூலர் கூறுவதுபோல,

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனர்
முப்புர மெரிசெய் தனர்என்பர் மூடர்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் செய்தது யாரறிவாரே."

அவன் அருளேகொண்டு அவன் அடிகளைப் பின்பற்றும் ஞானிகளது ஞானத் தீயின் முன் ஆட்டி வைக்கும் " ஆட்டம் தீ (Atomic Bomb) நிற்கமுடியாதுதானே !

கனகாபிஷேகத்திற்குப் பொருள் உதவிசெய்கிறோம். இது வேண்டப்படுவதா என்று சிலர் ஐயுறக்கூடும். சிவபெருமான் சகல ஐஸ்வர்யமுடையவன். அவன் ஈசன், ஈஸ்வரன். அவன் பிச்சை ஏற்றான் முதலில் தாருகாவன முனிவர்களிடம். முனிவர்கள் கர்மத்தில் எதையும் சாதிக்கலாம் என்று எண்ணியவர்கள்-கர்மகாண்டிகள் சிவ பெருமானை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். சிவபெருமான் அவர்களை நல்வழிப்படுத்த வேண்டி, அவர்களிடம் பிச்சை ஏற்றான். அவர்கள் ஆணவம் ஒழிந்தது. தூயவர்கள் ஆனார்கள். ஆண்டவனுக்கு ஒன்றை ஈவதால் நமது அறியாமையைப் போக்கிக் கொள்ள வழியுண்டு.

"காராளும் மேனிக் கருணாகரமூர்த்திக்கு ஆராதனை என் அறியாமை ஒன்றே" என்று கம்பரும் கூறுகின்றார். அதேபோலவே குருவிற்கு ஒன்று ஈவது அவரது அருளாட்சிக்குள் நாம் அடங்கிக் கொள்ளுகிறோம் என்பதைத் தெரிவிக்கின்றது. எனவே நாம் நமது கடமையைச் செவ்வையாகச் செய்யவேண்டும். மகாசந்நிதானம் அவர்களின் பணிகளின் மகிமை அவர்களது சத்தி, ஞானம் இவையெல்லாம் நம் நாட்டில் பரவவேண்டும்; அயல் நாடுகளுக்கும் எட்டவேண்டும். இத்தகையோர் அயல் நாடுகளுக்கும் சென்று அங்கும் அருளைப் பரப்பி இக்காலத்திய பயங்கரச் சூழ்நிலையை மாற்ற எல்லாம் வல்ல சொக்கலிங்கப்பெருமான் அருள் வழங்கவேண்டும் என நாம் அவ்விறைவனிடம் முழுமனதுடன் வேண்டுவோமாக.

உடலுள்ளபோதே உயிர்ப்பயனைத் தேடி வைத்துக்கொள்ள வேண்டும். தரித்திரனுக்கு மாணிக்கம் கிடைத்தால் அவன் எவ்வாறு போற்றுவானோ அதைவிட அதிகமாகவே போற்றிக் கொள்ளவேண்டும். உயிர்ப்பயனை அடையும் வழிதான் இறை வழிபாடு. இறைவழிபாடு மக்களுக்கு இன்றியமையாதது.

— கயிலைக் குருமணி

திருமுறை இலக்கியச் சிறப்பு

வித்துவான். கே. எம். வேங்கடராமையா M. A.,

வித்தகப்பாடல் ; மூல இலக்கியம்

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் பட்டினத்தடிகள் தேவாரம் அருளிய மூவரை "வித்தகப் பாடல் முத்திறத்து அடியர்" என்றார். எனவே மூவர் பாட்டும் வித்தகப் பாடல் என்பது பெறும். அம்மூவருள்ளும் திருஞானசம்பந்தர் பாடியவை முதன் மூன்று திருமுறைகளாம். அவற்றுள் காணும் பல பதிகங்களைச் சேக்கிழார் சுவாமிகள் மூல இலக்கியம் என்பர்.

சேந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்றும்
வந்த சொற்சீர் மாலைமாற்றும் வழிமொழி எல்லா மடக்கும்
சந்த வியமகம் ஏகபாதம் தமிழ்இருக் குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு.

நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகு மிராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
மூல இலக்கிய மாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர் காழியாரைப் பாடினார் ஞானசம் பந்தர்.

பெரியபுராணத்துத் திருஞானசம்பந்தர் புராணத்துக்கண்ட மேற்படி 276, 277 ஆம் பாடல்களால், சில பதிகங்கள் பிற்காலத்துப் பாடப்பெற்ற பாடல் வகைகளுக்கு மூல இலக்கியமாய்த் திகழ்கின்றன என்பது வெள்ளிடைமலையென அறியப்பெறுகின்றது. இங்கு மூல இலக்கியம் என்று சேக்கிழார் குறித்தவை பின் வருவனவாம் :-

1. மொழிமாற்று ; 2. மாலைமாற்று ; 3. வழிமொழி ; 4. இயமகம் ; 5. ஏக பாதம் ; 6. இருக்குக்குறள் ; 7. எழுகூற்றிருக்கை ; 8. ஈரடி ; 9. ஈரடிவைப்பு ; 10. நாலடிமேல்வைப்பு ; 11. திருவிராகம் ; 12. திருச்சக்கரமாற்று முதலியன. "ஆதிவிகற் பங்கள் என்றமையால் திருக்கோமூத்திரி" முதலியன கொள்ளப்பெறும்.

மொழிமாற்று ; மாலைமாற்று

மொழிகளை மாற்றிப் பொருள் கொள்ள வைப்பது மொழிமாற்று எனப்படும். இது பொருள்கோள் வகைகளுள் ஒன்று. ஒரு பாடல் பின் வருமாறு :-

உரித்தது பாம்பை யுடன்மிசை யிட்டதோ ரொண்களிற்றை
எரித்ததோ ராமையை யின்புறப் பூண்டது முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை ஏந்திற்றுத் தக்கனை வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வேங்குரு வில்வீற் றிருந்தவரே.

களிற்றை உரித்தது ; பாம்பை உடல்மிசையிட்டது ; முப்புரத்தை எரித்தது ; இன்புறப் பூண்டதொராமையை; தக்கனை வேள்விசெகுத்தது; சூலத்தை ஏந்திற்று என்று மொழிகளைமாற்றிப் பொருள் கொள்க.

பாடலை முன்னிருந்து பின்படித்தாலும், பின்னிருந்து முன்னே படித்தாலும் பாடல் ஒன்ருகவே அமைப்பது, மாலைமாற்று எனப்பெறும். இது மிறைக் கவிகளுள் ஒருவகை. சம்பந்தர் பாடிய மாலைமாற்றில் முதல் திருப்பாடல் வருமாறு:-

யாமா மாநீ யாமாமா, யாழீ காமா காணுகா
காணு காமா காழீயா, மாமா யாநீ மாமாயா

வழிமொழி ; ஏகபாதம்

பெயர் வந்தவழியை மொழிவது, வழிமொழி எனப்பெறும். "சுரருலகு" என்ற பதிகம், வழிமொழித் திருப்பதிகம் ஆகும் என்பதைப் "பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழி தகையவே" என்பதால் அறியலாம். இங்ஙனமே திருஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகங்களுள் சிலவற்றுக்குத் தாமே பெயர் கொடுத்துள்ளார். "பிறையணி" என்று தொடங்கும் பதிகம் பிணமொழி எனப் பெறவேண்டும் என்பதை, "பெருகிய சிவனடி பரவிய பிணை மொழியன ஒருபதுமுடன் என்றதாலும், "அயிலுறுபடையினம்" என்றபதிகம் ஓலிமாலை எனப் பெறவேண்டும் என்பதை "ஞானசம்பந்தன் தமிழின், ஒலிகெழுமாலை யென்றுரை செய்த" என்றதாலும் அறியப்பெறும். மேல்குறித்த வழிமொழித் திருப்பதிகத்தை "நல்லுரை ஞானசம்பந்தன் ஞானத்தமிழ்" என்றமையும் காண்க. "இடரினும் தளரினும்" என்ற பதிகம் "நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன விலையுடை அருந்தமிழ்" ஆயினமையும் அறிதற்பாலதாகும். 'வாழ்க அந்தணர்" என்ற பதிகம் "திருப்பாசுரம்" எனப்பெறும். இதனைச் சம்பந்தர் "பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்" என்று கூறியுள்ளமையின் அறியலாம். ஒரு அடியே நான்கு தடவை மடங்கிவருவது ஏகபாதம். இது சொல்லணி வகைகளுள் ஒன்று." பிரமபுரத்துறை பெம்மான் எம்மான் " என்ற பதிகம் இதற்கு எடுத்துக்காட்டு.

திருஇருக்குக்குறள்

இருசீர்களாலியன்ற அடி குறளடி எனப்பெறும் ; இங்ஙனம் குறளடி பயின்ற மந்திரசக்தியுடைய பாடலாதல் பற்றித்திருஇருக்குக்குறள் எனப்பெற்றது. "அரனையுள் குவீர், பிரமனூருளெம், பரனையேமனம், பரவியும்மினே " என்பது திருப்பிரமபுரத்தில் (சீகாழியில்) அருளிச் செய்யப்பெற்றது ; இது குறிஞ்சிப் பண். இனிக் கச்சித் திருவேகம்பத்தைப் பாடிய " கருவார்கச்சித் திருவேகம்பத் தொருவாவென்ன மருவா வினையே " என்பது கொல்லிப் பண். " நீலமாமிடற் ருலவாயிலான் பாலதாயினர்

ஞாலமாள்வரே" என்ற பதிகம் திருவாலவாய் எனும் மதுரையிற் பாடப்பெற்றது. இங்ஙனமே திருவாரூரிலும், திருவீழிமிழலையிலும், திருவிடைமருதூரிலும், திருஅன்னியூரிலும் பாடியுள்ளார்.

திருஎழுகூற்றிருக்கை

இது இணைக்குறள் ஆசிரியப்பா ; இஃது 47 அடிகளைக்கொண்ட ஒரேஒரு பாட்டேயாகும். 1, 1, 2-1 ; 1, 2, 3-2, 1 ; 1, 2, 3, 4-3, 2, 1 ; என்று இவ்வாறு 1 முதல் 7 வரை வளர்ந்தும் குறைந்தும் எண் அலங்காரம் பொருந்தப் பாடப்பெறுவது "ஓருருவாயினை" என்று தொடங்கிய திருப்பாடல் சம்பந்தர் பாடியதாகும்.

திருஈரடி ; திருஈரடிமேல்வைப்பு

இரண்டடிகளையுடைய பாடல் ஈரடி எனப் பெற்றது. இதில் இரண்டாமடி இறுதிச்சீர் குறைந்துவரும். "வரமதேகொளா" என்ற திருப்பிரமபுரப் பதிகமும், "வேலினேர்தரு" என்ற திருவீழிமிழலைப் பதிகமும், "பரசுபாணியர்" என்ற திருப் பல்லவனீச்சரப் பதிகமும் திருஈரடி ஆகும்.

முதல் இரண்டடிகள் ஓர் எதுகைத்தாய் ஒரு சந்தத்துடனும், பின்னீரடிகள் வேறு எதுகைத்தாய், வேறு சந்தத்துடனும் அமைவது ஈரடிமேல்வைப்பு. சீகாழிப் பதிக முதற்பாடல் வருமாறு :-

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன்றானே.

நாலடி மேல்வைப்பு

நான்கடிகள் ஓரெதுகை ஒருசந்தமுள்ளதாயும், பின்னர் இரண்டடிகள் ஓரெதுகை ஒருசந்தமுள்ளதாயும் பாடப்பெறுவது. இங்ஙனம் திருப்புகலி எனும் சீகாழியில் பாடப்பெற்ற 'இயலிசையெனும்' திருப்பதிகமும், திருவாவடுதுறையில் அருளப்பெற்ற "விலையுடை அருந்தமிழ்" ஆகிய "இடரினும் தளரினும்" என்ற திருப்பதிகமும் இதற்கு உதாரணமாம்; இவை காந்தார பஞ்சமப் பண். இனி "வேத வேள்வியை நிந்தனை செய்துழல்" என்ற திருவாலவாய்த் திருப்பதிகமும் நாலடிமேல் வைப்பே ; ஆனால் அது பழம்பஞ்சுரப்பண் ஆகும்.

திருச்சக்கரமாற்று ; திருக்கோமூத்திரி

சக்கரவடிவமாக அமைத்துச் சுழன்றுவருவது போலப் பாடுவது சக்கரமாற்று. "விளங்கிய சீர்ப்பிரமனூர்" என்று சீகாழியில் அருளிய பதிகமும், "பிரமனூர்

வேணுபுரம்'' என்று மதுரையில் அருளியதும் திருச்சக்கரமாற்றுக்குதாரணங்களாம். சீகாழிப் பதிகத்தில் ''சக்கரஞ்சீர்த் தமிழ்விரகன்தான் சொன்ன தமிழ்'' என்று கூறியமையும் காண்க.

கோமூத்திர வடிவமாக அமைக்கப்பட்ட ரேகையில் எழுத்துக்கள் அமைத்துப் பாடப்பெறும் சித்திரகவிகோமூத்திரி. ''பூமகனூர் புத்தேளுக்கிறைவனூர்'' என்ற பதிகம் இதற்கு எடுத்துக் காட்டாகும். இப்பதிகத்துத் திருக்கடைக்காப்பில், ''வழிமுடக்கு மாவின்பாச்சல், தம்மான் ஒன்றிய ஞானசம்பந்தன் தமிழ்'' என்றது பதிக அமைதியைக் குறிப்பதாகும். (இப்பதிகப் பாடல்கள் தண்டியலங்கார மேற்கோள் பாடல் போன்று இல்லை என்பது இங்கு அறிதற்பாலதாகும்).

திருமுக்கால்

இரண்டாமடியும், நான்காமடியும் முச்சீரால் முடிவது திருமுக்கால் ஆகும். '' விண்ணவர் தொழுதெழு '' என்ற திருவெங்குருப் பதிகமும், '' எண்டிசைக்கும் '' என்னும் திருவம்பர்ப் பதிகமும், '' நெல்வெண்ணெய் '' என்ற திருநெல் வெண்ணெய்ப் பதிகமும், '' திடமலி '' எனும் திருச்சிறுகுடிப் பதிகமும், '' வெண் மதி '' என்னும் திருவீழிமிழலைப் பதிகமும், '' முரைசதிர்ந்து '' எனும் திருமுது குன்றப் பதிகமும் திருமுக்கால் ஆகும்.

திருவியமகம்

இயமகம் என்பது அடிதோறும் சீர்கள் மயங்கிவருவது. '' உற்றுமை சேர்வது மெய்யினையே '' '' ஆலநீழலுகந்த திருக்கையே '' முதலிய பல பதிகங்கள் இத்தகைய சொல்லணியமையப் பாடியனவாம்.

இங்ஙனம் தமிழ் விரகராகிய ஞானசம்பந்தர் பலவிதமான விகற்பச் செய்யுட் களைப் பாடி மூலஇலக்கியத்தை அமைத்தார் என்று தெள்ளிதின் அறிதற்பாலதாகும். காழியில் பாடிய விகற்பப் பாடல்கள் போலவே பிற தலங்களிலும் இவர் பாடினர் என்பது ஆங்காங்கு மேலே காட்டிய உதாரணங்களாலும் அறியப்படும். இங்ஙனம் சம்பந்தர் அரிய பாடல்கள் பாடியருளினர் என்பதை நம்பியாண்டார்நம்பிகள் தாம் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையில் பின்வருமாறு குறித்துள்ளார் :—

'' நீக்கரிய இன்பத் திராகம்இருக் குக்குறள்
நோக்கரிய பாசுரம்பல் பத்தோடும் — ஆக்கரிய
யாழ்முரி சக்கரமாற் றீரடிமுக்காலும்
பாழிமையாற் பாரகத்தோர் தாமுய்ய — ஊழி
உரைப்பமரும் பல்புகழால் ஓங்கஉமை கோனைத்
திருப்பதிகம் பாடவல்ல சேயை '' (83 - 85)

வித்தகப்பாடல் ; அற்புதம் நிகழ்த்தல்

மூவரும் திருப்பதிகங்கள் பாடிப் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர்.

" புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே புத்த னுர்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே "

என்ற பாடல் சம்பந்தர் தேவாரத்தின் அற்புதத்தன்மையை அழகுற விரிக்கும்.

" அணங்கமர் யாழ்முரித் தாண்பனை பெண்பனை ஆக்கியமண்
கணங்கழு வேற்றிக் கடுவிடந் தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீரெதிர் ஓடம் செலுத்தின வெண்பிறையோ
டிணங்கிய மாடச் சிரபுரத் தான்தன் இருந்தமிழே "

என்று ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் நம்பியாண்டார்நம்பி அருளியுள்ளார்கள்.

" புத்தன் தலையைப் புவிமேல் புரள்வித்த
வித்தகப் பாடல் விளம்பினுன் "

என்று ஆளுடையபிள்ளையார் திருத்தொகையில் சம்பந்தர்பாடலை, நம்பியாண்டார் நம்பிகள், வித்தகப்பாடல் என்றமையும் காண்க.

இனித் திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரம் அற்புதச் செயல்கள் நிகழ்த்தியமையைப் பின்வரும் பழம்பாடல் பகரும் :-

" தலைகோள் நஞ்சமு தாக விளையுமே தழல்கோள் நீறு தடாகம தாகுமே
கோலைசெய் ஆனை குனிந்து பணியுமே கோள ராவின் கொடுவிடம் தீருமே
கலைகோள் வேத வனப்பதி தன்னிலே கதவு தானும் கடுகத் திறக்குமே
அலைகோள் வாரியிற் கல்லு மிதக்குமே அப்பா செப்பும் அருந்தமிழ்ப் பாடலே '

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பாடற் சிறப்பு பின்வரும் பாடலால் அறியப் பெறும் :-

" வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே வெள்ளை யானையின் மீதேறிச் செல்லுமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே மருவி யாறு வழிபட நிற்குமே
செங்க லானது தங்கம தாக்குமே திகழும் ஆற்றிட்டுச் செம்பொன் எடுக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே துய்ய நாவலூர்ச் சுந்தரர் பாடலே,

இம்மூவர் தம் பாடல்கள் அற்புதம் நிகழ்த்தியமையைக் கொண்டே தமிழ்க்கு ஏற்றம் கூறினர் பரஞ்சோதி முனிவர். அப்பாடல் பின்வருமாறு :-

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்ட பாலனை யழைத்ததும் எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும்மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர் "

வித்தகப்பாடல் - தமிழோடிசை

தேவார மூவரும் தமிழோடிசை பரப்பிய உத்தமர்களாவர். "நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்" என்று சுந்தரர் கூறுவதினின்றும் அறியலாம். "தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்" என்ற அப்பர் வாக்கும், "ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ்மாலை" என்ற சம்பந்தர் வாக்கும், தேவாரங்கள் இசை வல்லாராலேயே பாடுதற்குரியன என்பதை வலியுறுத்தும். "இருந்துநீர் தமிழோடிசை கேட்கும் இச்சையால் நித்தங் காசு நல்கினீர்" என்ற சுந்தரர் தேவாரம், தமிழும், இசையும் கலந்த பாடல்களை அப்பரும், சம்பந்தரும் பாடினர் என்பதை வலியுறுத்தும். "மன்னுதீந் தமிழ்ப் பின்னையும் புவியின்மேல் வழுத்த" வே திருக்கயிலைக் காட்சி அப்பருக்குக் கிடைத்திலது என்றவிடத்திலும் தமிழ் பரப்பும் தொண்டு வலியுறுத்தப் பெற்றது. 'செந்தமிழ் உறைப்புறப்பாடி அடைப்பித்தார் உந்நின்ருர்' என்ற அப்பர் வாக்கும், சம்பந்தர் தமிழ்ப்பாடலின் திண்மையை எடுத்து உரைக்கின்றது.

வித்தகப் பாடல் – ஞானத்தமிழ்

திருமுறைகளை அருளிச் செய்தவர்கள் பதிகரணம் உடையவர்; அவர்களுடைய செயல்களெல்லாம் சிவச் செயல்களாம். இச் செய்திகளை,

"பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்
காலனை யன்றேவிக் கராங்கொண்ட — பாலன்
மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போ லல்லாமை காண்"

என்ற திருக்களிற்றுப் படியார் என்னும் சைவசாத்திரத்துக் கண்ட வெண்பாவானும்,

"என்பைப் பெண்ணுக்கி..................
கதவ மடைக்கக் கழறியது மேல்லாம்
பதிகரணம் என்றுணரப் பா"

என்றும்,

"நீற்றறையை வேகமற நீராகப் பாடியதும்
கூற்றுதைத்தான் போதம் எனக்கோள்"

என்றும்,

"ஆற்றிலிட்டு மீட்டும் அருங்குளத்திற் கண்டதுவும்
சாற்றிற் சிவகரணந்தான்"

என்றும் சிவஞானப் பிரகாசவெண்பாக்களாலும் அறியலாம். ஆகவே தேவாரத் திருமுறைகள் எல்லாம் பதிகரணமுடையவர்களால் பாடப் பெற்றன வாதலின் அவற்றை ஞானத் தமிழ் என்னல் வேண்டும். நம்பியாண்டார் நம்பிகளும் ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவையில்,

"பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்"

என்றுரைத்தார். காழித் தாண்டவராயர் தம் திருவாசக வியாக்கியானத்தில், "திரு மெய்ஞ்ஞானத் திருநெறித் தமிழாகிய தேவாரம்" என்றும், "திருஞானசம்பந்தர் முதலிய மூவரருளிய திருமெய்ஞ்ஞானந் திருநெறித் தேவாரம்" என்றும் இதனையே அருளிச்செய்தார்.

வித்தகப்பாடல் ; வரலாற்று மூலபண்டாரம்

சங்ககாலத்துக்குப் பிறகு, தமிழ்நாடு களப்பிரர் புகுவால் நலிவுற்றது ; தமிழ் நாகரிகமும் பண்பாடும் சிதறுண்டன; பழந்தமிழரது சமயம் ஆதரவிழந்தது; வேற்றுச் சமயமும், வேற்றுமொழியும் புகுந்தன ; இறைவன் திருவருளால் சம்பந்தரும் அப்பரும் தோன்றினர் ; மீண்டும் சைவசமயம் தலைநிமிர்ந்தது. இதனை இவர்தம் தேவாரத்தானும் கூர்ந்து அறியலாம். "ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்" என்றது போன்ற வரிகள் அக்காலத்துப் பேரரசர்கள் போர் செய்தமையை உணர்த்தும். சோழர்கள் சிற்றரசராக வாழ்ந்தமையும், அத்தகையகாலத்திலும் அவர்கள் பழையாறை போன்ற இடங்களில் முடியும் சேனையும் உடையவராய் இருந்தமையும் தேவாரங்களான் அறியப்பெறுகின்றது. நெடுமாறன் பாண்டிய அரசன். மங்கையர்க்கரசியாராகிய அவரது மனைவியார் மணிமுடிச் சோழனது மகள் என்பதுபோன்ற செய்திகளும் இவ்வித்தகப் பாடல்களுள் இடம் பெற்றுள்ளன. "கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்ற அப்பர் தேவாரம் காஞ்சிபுரத்தின் பெருமையைக் கூறும். "மாசில் வீணையும்.........போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்பதும், "பண் இயல் பாடல் அருத ஆலூர்" என்பதும், "மாதர் மைந்தர் இசைபாடும் பூம்புகார்" என்பதும் பிறவும் அக்காலத்துத் தமிழ்ப் பண்களும் தமிழிசையும் மேம்பட்டு விளங்கின என்பதை உறுதிப்படுத்தும். யாழ், வீணை, குழல், முரசம், உடுக்கை, துடி, முழவம் முதலிய வாத்தியங்கள் இருந்தமையும் தேவாரங்களால் அறியப்படுகின்றது. "வலம் வந்த மடவார்கள் நடமாட", "நடம் பயில்பவர் உறையும் புகார்" என்பன அக்காலத்து நடனக் கலைச் சிறப்பை உணர்த்துவனவாம். சமயகாலத்து நாயன்மார்கள் சரிதங்களையும், நிகழ்ச்சிகளையும் தேவார மூவர்கள் சமயம் வாய்ப்புழியெல்லாம் கூறியுள்ளார்கள். திருஞானசம்பந்தர், முருகனர், சிறுத்தொண்டர் முதலியவர்களுடைய வரலாறுகளை அழகுற அமைத்துள்ளார். திருநாவுக்கரசர்,

"ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே"

என்று நமிநந்தியடிகளையும்,

"அங்கோர் கோடரியால் இரும்பு பிடித்தவர் இன்புறப்பட்டார்"

என்று அரிவாட்டாயரையும்,

" அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி "

என்று அப்பூதியடிகளையும்,

' ... ... கழுமல ஊரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே "

என்று திருஞானசம்பந்தரையும்,

" கல்லினா லெறிந்து கஞ்சிதாமுண்ணும் சாக்கியனார் "

என்று சாக்கியநாயனாரையும், பிறரையும் கூறியுள்ளார்.

சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடி எல்லா நாயன்மார்களையும் குறித்தருளினர். " நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற - நின்றசீர் நெடுமாறன் " என்ற வரிகளில் கூறிய நெல்வேலிப்போர் வரலாற்றுப் பேராசிரியர்க்குப் பெருவிருந்தாய் அமைவதாயிற்று. திருநாவுக்கரசர் " இணைகொள் ஏழெழுநூறிரும் பனுவல் " பாடினர் என்றார் சுந்தரர். ஏயர்கோன் கலிக்காமரும், தண்டியடிகளும், நரசிங்கமுனையநாயனரும், புகழ்த்துணை நாயனரும், கோட்புலியாரும் இவர் வாக்கில் தவழ்ந்துள்ளனர். இங்ஙனம் பல்லவர் ஆட்சி ஓங்கிச் சோழர் பெருமை மறைந்திருந்த காலத்துக்குரிய தமிழக வரலாறு ஓரளவு தேவாரத் திருமுறைகளான் அறியப்பெறுவதாயிற்று.

' வேம்பந்தம் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந்தனை யருளால் சாருநாள் எந்நாளோ ?
ஏரின் சிவபோகம் இங்கிவற்கே என்னஉழ
வாரங்கோள் செங்கையர்தான் வாரம்வைப்ப தெந்நாளோ ?
பித்தரிறை என்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ ? " (தாயுமானவர்)

திருவருளே அழியாச் செல்வம் ; அதுவே நமக்கு அரண் ; மனிதமுயற்சி சதமில்லை என்பதே கயிலை யாத்திரை உலகுக்கு உணர்த்தும் படிப்பினை.

— கயிலைக் குருமணி

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்

புலவர். ந.ரா. முருகவேள் M. A., M. O. L.

முன்னுரை :

திருஞானசம்பந்தப் பெருமானுக்குப் பலதிறச் சிறப்புக்கள் உண்டு. அவற்றுள், அவர் "நற்றமிழ் வல்லவர்" என்பதும் ஒன்று. திருஞானசம்பந்தப் பெருமானே தம்மை "நற்றமிழ் வல்லவர்" எனப் பல விடங்களில் குறிப்பிட்டுக் கொள்ளுவதுடன், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அவ்வுண்மையை வழிமொழிந்து கூறி வற்புறுத்தி உணர்த்துகின்றார்.

நற்றமிழ் :

ஞானசம்பந்தர் நற்றமிழில் வல்லவர் என்பதனை நன்கினிது உணர்த்தும் நல்லபல சான்றுகள், அவர் தம் திருப்பாடல்களில் ஆங்காங்கே மலிந்து காணப் படுகின்றன. "நற்றமிழ்" என்னும் தொடருக்கு, எத்துணையோ பல இயைபுடைய பொருள்களைத் தத்தம் மதிநுட்பத்துக்கு ஏற்ப அறிஞர்கள் இனிதெடுத்து விளக்குதல் கூடும். ஆயினும், "பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்" என்னும் உத்திபற்றி, "நற்றமிழ்" என்றது ஈண்டுச் சங்கத் தமிழ் மொழியினைக் குறிப்பதாகக்கொள்ளலாம்.

> "பத்துப்பாட் டாதிமனம் பற்றினர் பற்றுவரோ
> எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.?"

எனப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கட்டுரைக்கும் திறம் கருதியுணர்ந்தால், சங்கத் தமிழ்மொழியை "நற்றமிழ்" எனக் கொள்ளுதலில் பிழையேதும் இன்றென அறிஞர்கள் அனைவரும் உடம்படுவர்.

> "சால்பாய மும்மைத் தமிழ் தங்கிய அங்கண் மூதூர்
> நூல்பாய் இடத்தும் உள, நோன்றது மேதி பாயப்
> பால்பாய் முலைத்தோய் மதுப்பங்கயம் பாய எங்கும்
> சேல்பாய் தடத்தும் உள. செய்யுள்மிக் கேறு சங்கம் "

> "மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேஅம் மூதூர்
> மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
> செம்மைப் பொருளும் தருவார்திரு வால வாயில்
> எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கம் இருந்த தென்றால் "

எனப் போதரும் பாடல்களால், சேக்கிழார் பெருமானும் சங்கத் தமிழின் சிறப்பினைப் பாராட்டி யுரைத்திருத்தல், நம் கருத்துக்குப் பெரிதும் அரண் செய்யாநிற்கும்.

சம்பந்தரும் சங்கத் தமிழும் :

ஞானசம்பந்தப் பெருமான் சங்ககாலத் தமிழ் மரபை நன்குணர்ந்து பாடுதலில் வல்லவர். சங்க காலத்தில் வழங்காத பல புதிய பாவினங்களை முதன் முதலில் ஞானசம்பந்தர் பாடியருளிப் பெருக வழங்கச் செய்தனர். ஆயினும் அவர் சங்ககாலத் தமிழ்மரபைப் பெரிதும் போற்றியவரேயாவர். ஞானசம்பந்தர்க்குச் சங்க காலச் சான்றோர்கள் மாட்டும், சங்ககாலத் தமிழ்ப்பண்பாட்டு மரபு நெறிகளிலும் மிக்க ஈடுபாடு இருந்ததெனத் தெரிகின்றது. தமது பாடல்களை "ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழ்கள்" என அவர் சிறந்தெடுத்து உரைத்தலால் இதனைத் தெளியலாம். மேலும், அவர் "பட்டிமன் தென்னன்" என்றும், "அந்தண் மதுரைத் தொகையாக்கினன்" என்றும் அருளிச் செய்திருத்தலும், ஞானசம்பந்தர்க்குச் சங்கத் தமிழின்பால் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பெருமதிப்பும் இனிது புலப்படுத்தும்.

ஞானசம்பந்தரின் பாடல்கள் எத்துணையோ பலப்பல நலங்கள் சான்றவை. அவர்தம் அழகிய இனிய பாடல்களில், ஆங்காங்கே சங்கநூற் சாயல்களும் கருத்துக் களும் மரபுகளும் வழக்காறுகளும் நிறைந்து காணப்பெறுகின்றன. அவ்வொப்புமைப் பகுதிகளைக் கண்டு சுவைத்து மகிழ்வதும், ஞானசம்பந்தரின் பாடல்களை நாம் ஆராய்ந் துணர்ந்து நலம்பெறத் தக்க பலதிற வழிவகைகளுள் ஒன்றாகும். அத்துறையில் ஈண்டு ஒரு சில ஒப்புமைப் பகுதிகளைமட்டும் கண்டு இன்புறுவோம்.

கோள்களும் மழையும் :

பண்டைச் சங்ககாலத் தமிழ்மக்கள் கோள்களின் நிலையில் இருந்து மழை முதலியவற்றை அறியும் குறிநூற் புலமை உடையவராய் இருந்தனர். சனி என்னும் கோள் பகைவீடுகளிற் சென்று மாறுபட்டாலும், தூமகேது தோன்றினாலும், சுக்கிரன் தென்றிசைக்கண் சென்றாலும் உலகில் மழை பெய்யாதெனப் பண்டைத் தமிழ்மக்கள் கண்டுணர்ந்திருந்தனர். இதனை,

"மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி ஓடினும்" (புறம் 117)

"கரியவன் புகையினும் புகைக்கோடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்" (சிலம்பு 10-102)

"வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்" (பட்டினப்பாலை 1-2)

எனவரும் சங்கநூல் வரிகள் உணர்த்தும். இவற்றினை நினைப்பிக்கும் வகையில்,

" விலங்கலமர் புபல்மறந்து மீன்சனிபுக்கு ஊன்சலிக்கும் காலங் தானும்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய மெய்யர்வாழ் கழுமலமே'

என ஞானசம்பந்தர் திருக்கழுமலப் பதிகத்திற் பாடியருளியிருத்தல் சிந்தித்து மகிழற்பாலதாகத் திகழ்கின்றது.

வேங்கை மரமும் புலியும் :

காடுகளில் வேங்கை மரத்தின் பூக்கள் கருங்கற் பாறைகளின் மீது உதிர்ந்து கிடக்கும் காட்சி, புலிக்குருளையைப் போலத் தோன்றும் எனச் சங்க நூல்களில் ஆங்காங்குக் குறிப்பிடப் படுகின்றது.

" கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையில் தோன்றும் காட்டிடை " (குறு-47)

' ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப்பொறி கடுப்பத் தோன்றின் " (அகம்-228)

" அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டோள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப்புறங் கடுக்கும் " (புறம்-202)

" கருங்கால் இளவேங்கை கான்றபூக் கன்மேல்
இருங்கல் வயவேங்கை ஏய்க்கும்." (திணைமாலை 26)

இச்சங்கநூல் வரிகளின் கருத்தை நினைப்பூட்டும் முறையில், திருஞானசம்பந்தப் பெருமான் திருக்கேதாரப் பதிகத்தில் பாடியிருக்கும் பின்வரும் வரிகள் அமைந்திருத்தல் அறிந்தின்புறற்பாலது.

", உடைந்த காற்றுக் குயர்வேங்கை பூத்துதிரக்கல் அறைகள்மேல்
கிடந்த வேங்கை சினமாமுகம் செய்யும் கேதாரமே "

மணம் புணரும் நாள் :

பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி நில மக்கள் வேங்கை மலரும் பருவத்தினைத் தினையறுக்கும் காலமாகவும், திருமணம் செய்தற்குரிய காலமாகவும் கொண்டிருந்தனர். இவ்வுண்மை,

" வேங்கையும் ஒள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களும் ஊர்கொண் டன்றே "

எனவரும் அகநானூற்றுப் பாடற் பகுதியானும், " இணர் விரிதலும் ஊர்கோடலுமாகிய இரண்டும் மணஞ்செய் காலம் இதுவென உணர்த்துதலாகிய ஒருபொருள்

குறித்து நின்றமையான், அவை ஒரு வினைப்பாற்படும் என்பது'' எனப் போதரும் சேனாவரையர் நச்சினார்க்கினியர் உரைகளானும் தெளியப்படும். இச்சங்க நூற் கருத்தினைத் தழுவி,

> புனவர்புன மயிலனைய மாதரொடு மைந்தரும் மணம் புணரும்நாள்
> கனகமென மலர்களணி வேங்கைகள் நிலவுகா ளத்தி மலையே

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளமை பெரிதும் சுவை பயக்கின்ற தன்றோ?

யாளியும் யானையும்:

'யாளி' என்பது பண்டொருகால் இருந்து, இஞ்ஞான்று இல்லையாய் மறைந்து போன ஒரு வகை விலங்கு. அவ்விலங்கு யானைகளையும் விடப் பெரியதாய், அவைகளைக் கொல்ல வல்ல பேராற்ற லுடையதாக விளங்கி யிருந்ததெனத் தெரிகின்றது. யாளிகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தால், அவற்றினிடமிருந்து தப்பும் பொருட்டு யானைகள் மலைகளைக் குத்திக் குடைந்து குகைகளை யுண்டாக்கிப் பாதுகாப்பாக இருந்து வருகின்றன.

> ''மத்தக் களிறுளி வரவஞ்சி மலை தன்னைக்
> குத்திப் பெருமழை தன்னிடை வைகும் கோடுங்குன்றம்''

எனவரும் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடலால், இச் செய்தியை இனிதுணரலாம். இவ்வரிகளின்படி யானைகள் யாளிக்கு அஞ்சும் இயல்பின என்பது,

> ''மழைவிளை யாடும் கழைவளர் அடுக்கத்து
> அணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
> கணஞ்சால் வேழம் கதழ்வுற் றாஅங்கு
> எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை'' (பெரும்பாண் - 257)

எனவரும் பெரும்பாணாற்றுப்படை வரிகளால் தெளியப்படும். இங்ஙனமே யானை குரங்கு முதலிய பல விலங்குகளைப் பற்றிய செய்திகளில் சங்க நூற் பாடல்களுக்கும் தேவாரப் பாடல்களுக்குமிடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை சிறந்து திகழ்கின்றது.

கிளிகளும் மறைகளும்:

கிளிகளும் வேதங்களை ஓதுகின்றன; அவற்றின் பொருளைச் சொல்லுகின்றன; அவற்றைப் பிழையாகச் சொல்லுபவர்களைத் திருத்துகின்றன என்பன போன்ற கருத்துக்கள், திருஞான சம்பந்தர் பாடல்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. வேத நெறி தழைத்தோங்கப் போந்தருளிய ஞானசம்பந்தர் இங்ஙனம் விதந்தோதுதலில் வியப்புண்டோ?

" சால நல்லார் பயிலும் மறைகேட்டுப் பதங்களைச்
சோலை மேவும் கிளித்தான் சொற்பயிலும் புகலியே "

' பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலையாமே "

" பெரிதிலங்கும் மறைகிளைஞர் ஓதப்பிழை கேட்டலாற்
கருதுகிள்ளைக் குலந்தெரிந்து தீர்க்கும் கடற்காழியே"

என்பன போன்று வரும் திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்கள்,

" வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்"

எனப் போதரும் பெரும்பாணாற்றுப் படைவரி (300) யினை நினைவூட்டுகின்றன.

பறவையும் பார்ப்பும்:

பறவைகள் தம்முடைய குஞ்சுகளுக்கு இரைதேடிக் கொணர்ந்து, அதனை இன்னருளோடும் அவற்றின் வாய்ப்பெய்து ஊட்டும் காட்சி எவருள்ளத்தையும் இன்புறுத்துவதாகும். குழந்தையாகிய ஞானசம்பந்தர் அவ்வழகிய காட்சியைக் கண்டு பெரிதும் களிப்புற்று,

" பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை ஏனற் கதிர்கொணர்ந்து வாய்ப்பெய்யும் கேதாரமே"

எனவரும் வரிகளில் அரியதொரு சொல்லோவியமாக அருளிச் செய்கின்றார். இவ் வரிகள் பின்வரும் சங்கச் செய்யுட்களை நினைப்பிக்கின்றன.

" அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற ஓங்கிய நெறியயல் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே" (குறு 92)

" உடங்கிரை தேரும் தடந்தாள் நாரை
ஐய சிறுகட் செங்கடைச் சிறுமீன்
மேக்குயர் சினையின் மீமிசைக் குடம்பைத்
தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்" (நற் 91)

தாழையும் கெண்டையும்:

தாழை மலரின் நிழலைக் குருகு என்று தவறாக நினைத்துக் கொண்டு, நீர் நிலைகளிலுள்ள மீன்கள் அவற்றிற்காக அஞ்சி, அங்குள்ள தாமரை மலரின் கீழே சென்று மறைந்து கொள்கின்றன. அவை மறையுந்திறம் கண்டு சிரிப்பனபோல முத்துக்கள் அங்கே ஒளிவீசுகின்றன.

"விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்வீண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்தம் நகைகாட்டும் காட்சியதே"

எனவரும் தேவாரப் பாடல்

"குருகுகோளக் குளித்த கெண்டை அயலது
உருகெழு தாமரை வான்முகை வெரூஉம்" (குறு 54)

"தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை" (குறு 226)

"கோடுங்கழி மருங்கின் இரைவேட் டெழுந்த
கருங்காற் குருகின் கோளுய்ந்து போகிய
முடங்குபுற இறவின் மோவாய் ஏற்றை
எறிதிரை தொகுத்த எக்கர் நெடுங்கோட்டுத்
துறுகடற் றலைய தோடுபொதி தாழை
வண்டுபடு வான்போது வெரூஉம் ..." (நற் 211)

என்னும் சங்கச் செய்யுட்களைத் தழுவிய சாயலுடையதாகக் காணப்படுகின்றது. இங்ஙனமே யானையின் துதிக்கையைப்போல வாழை மரங்கள் குலை ஈனுகின்றன என்னும் கருத்தமைந்த "மொய்சேர் வண்முண் மும்மத நால்வாய் முரண் வேழக் கைபோல் வாழை காய்குலை ஈனும் கலிக்காழி" என்னும் தேவாரப் பாடல்,

"முருகுறழ் முன்போடு கடுஞ்சினம் செருக்கிப்
பொருத யானை வெண்கோடு கடுப்ப
வாழை ஈன்ற வையேந்து கோழுமுகை"

என்னும் நற்றிணைப் பாடலின் (225) கருத்தை யுட்கொண்டுள்ளது.

முடிவுரை :

ஞானசம்பந்தர் ஓதாது உணர்ந்த ஒண்மையர் ;உவமையிலாக் கலை ஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் ஒருங்கே பெற்றொளிர்ந்த தவ முதல்வர். "கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற்கண்ட" அண்ணலாராகிய அவர்தம் அருமைத் தேவாரத் திருப்பதிகங்களை நாமும் "ஆயிர முகத்தால்" ஆராய்ந்து கண்டின்புறுதல் வேண்டும். அங்ஙனம் ஆயிர முகத்தால் ஆராய்ந்து அரும்பெறல் இன்பம் பெறுதற் குரிய ஞானசம்பந்தரின் பாடல்களை, இக்கட்டுரை ஈண்டு ஒரு முகத்தால் ஆராய்ந் துள்ளது. "நல்ல தமிழ்" வேண்டும் என இந்நாளிற் பெரிதும் ஆர்வம்கொண்டு கிளர்ந்தெழும் அறிவியக்க நண்பர்களுக்கு, ஞானசம்பந்தர் தேவாரம் "நல்ல தமிழ்க் கருவூலம் ஆகும்" எனக் கட்டுரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம். அன்றியும்,

திருநெறிய தமிழின் பெருமையை நன்குணர்ந்து, திருமுறை இலக்கியச் சிறப்புடையது என்றும் அத்தெய்வத்தமிழ் நற்றமிழ் என்றும் நாளும் அருளிவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் கனகாபிஷேக மலர்க்கு இது பெரிதும் ஆராய்தற்குப் பொருத்தமானது என்பது என் துணிவு. ஓதாது உணர்ந்த ஒண்மையராகிய ஞானசம்பந்தர் நமக்கும் முன்னே வாழ்ந்திருந்த சான்றோர்களின் நெறியினையும் வளர்த்தருளினர் என்பதனையும் இவ்வாற்றால் இனிதுணரலாம். * ஞானசம்பந்தப் பெருமானார் தமக்கும் முன்னர் வாழ்ந்திருந்த சான்றோர்களைப் பற்றி "அறிவார் சொலக் கேட்டு" அறிந்து கொண்டிருந்தார். அவ்வுண்மையினை அவர்தாமே.

" கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வேட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார்சொலக் கேட்டும் அன்றே "

என அருளிச் செய்திருப்பதுடன்,

" கருதும் கடிசேர்ந்த எனும்திருப் பாட்டில், ஈசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க் கோவல் முத்தி
தருதன் மையதாதல் சண்டீசர் தஞ்செய்கை தக்கோர்
பெரிதும் சொலக்கேட் டனம்என்றனர் பிள்ளை யார்தாம் "

என ஆசிரியர் சேக்கிழார் பெருமானும் அத்திருமொழிக்கு விளக்கம் செய்தருளியிருத்தல் ஈண்டுக்கருதி யுணரற்பாலது. அங்ஙனம் கருதியுணர வல்லோர்க்கு நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் அளப்பருஞ் சிறப்புக்களெல்லாம் விளக்கமாதல் திண்ணம். நற்றமிழ் வாழ்க! ஞானசம்பந்தர் வாழ்க!


* "A great poet is not an isolated fact. He has his affiliations with the present and the past; and through these affiliations he leads us inevitably to his contemporaries and predecessors......"
—W. H. Hudson.

தருமையில் குரு பூஜை விழா




ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள்
காவிரித் திருமஞ்சனத்துக்கு எழுந்தருளல்

தருமை மடாலயத்தில்



சென்னை முன்னாள் நீதிபதி திரு. A. S. P. அய்யரவர்கள்
தருமை ஆவணிமூல விழாவில்



பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு
"பல்கலைச் செல்வர்" பட்டம் வழங்குதல்

மடாலயங்களில் - சமுதாயநிலையங்களில் தமிழர் பண்பாடு

செஞ்சொல்மாமணி
திரு. ச. சிவகுமாரன் M. A.

இன்றைய உலகம் மிகச் சுருங்கியது. ஆயிரக்கணக்கான மைல்களைச் சில மணிநேரங்களில் கடந்துவிடுகிறோம். எந்தநாட்டின் பொருளாதாரமும் அரசியலும் சர்வதேசப்பிரச்சினைகள் ஆகிவிடுகின்றன. ஜனத்தொகை பெருகிவிட்டது. உலகத்திலேயே அன்றாட வாழ்வில் முன்னிருந்த நிதானம் அமைதி நிசப்தம் இன்று இல்லை. எங்கும்போட்டி; எங்கும்வேகம்; எங்கும்பரபரப்பு. குடும்பப்பொறுப்பு பெரிய போராட்டமாகிவிட்டது. இந்தநிலையில் மக்களிடையே மனிததர்மம் (Human Values) அந்தந்த நாட்டின் பண்பாடு நாகரிகத்தால் காக்கப்பட்டாலன்றி மனிதவர்க்கமே குறிக்கோளற்று வெறும் மாக்களாய்ச் சுயநலமிகளாய் மாறிவிடக் கூடும். இதைத் தவிர்க்க ஒவ்வொருநாடும் அவ்வப்போது தனது பழைய பண்பாட்டினை நினைவு கூர்தல் வேண்டும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலைத்துள்ள பண்பாடு நாகரிகம் கலாசாரம் உடைய ஒருசில நாடுகளில் நமது பாரதபூமி குறிப்பிடத்தக்கது. அதிலும் நமது தமிழ்நாடு நானிலம், ஐந்திணை, அகம், புறம், இலக்கணம், இலக்கியம், ஆன்மதத்துவவிசாரணை, விருந்தோம்பல், கற்பு முதலிய துறைகளில் தொன்றுதொட்டு வரும் தலைசிறந்த பண்பாட்டினை உடையது.

இப்பண்பாடு ஒருநாட்டின் பெருமையைக் காட்டுகிறது. இதனைத் தமிழ் நாட்டில் அரசர்கள், அரசியல் தலைவர்கள், மடாதிபதிகள், புலவர்கள், பொதுமக்கள் யாவரும் பேணிப் போற்றிவந்தனர். தமிழ் நாட்டு அரசர்கள் சிறந்த தெய்வபக்தி உள்ளவர்களாக இருந்தனர். சோழராஜாக்கள் பழங்கோயில்களைப் புதுப்பித்தும் புதுக் கோயில்கள் நிர்மாணித்தும் "கோயில் கலைஞர்கள்" (a nation of Temple Builders) என்ற சிறப்பையே நமக்கு ஆக்கித்தந்தார்கள்.

பதின்மூன்று பதினான்காம் நூற்றாண்டோடு சோழராட்சியின் பொற்காலம் (Golden Age of the cholas) முடிவுற்றது. தமிழ் நாட்டு அரசர்கள் தமக்குப் பல வேறு கவலைகளும் பொறுப்புக்களும் முன்னின்ற காரணத்தால் சமயம் வளர்க்கும் துறையில், முழு கவனத்தையும் நேரத்தையும் சமயப் பணிக்கே ஆக்கிய மடாதிபதிகளிடம் மானியங்களோடு ஒப்புவித்தனர். மடாதிபதிகளும் சமயத்தையும் திருக்கோயில்களையும் தமது உயிரினும் மேலானதாக எண்ணி அருளாட்சி புரிந்துவந்தனர்.

திருத்தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம், மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம், காஞ்சி காமகோடிபீடம், அகோபில மடம்' வானமாமலை ஜீயர் மடம், செஞ்சி சித்தாமூர் ஜைன மடம் முதலிய சமய ஸ்தாபனங்கள் மூலம் சமயமும் தமிழர் பண்பாடும் எத்துணையோ அரசியல் மாறுதல்கள் போராட்டங்களுக்கிடையேயும் பாதுகாக்கப்பட்டன.

மடாலயங்கள் தமிழ்கற்பித்தும் ஞானநூல்கள் இயற்றியும் போதித்தும் தமிழ் - சைவப் பண்பாட்டினை வளர்த்தன. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்கள் வாழ்க்கையும் அவர்களது வரலாற்று நூல்களும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

மடங்களின் சம்பிரதாயங்கள், நடைமுறைகள், சிஷ்யபரம்பரைகள், சிவபூசாக் கிரமங்கள் முதலியன சமயத்தின் அடிப்படையில் தமிழ்ப் பண்பாட்டை விளக்குவனவாகும். மடாலயங்களில் நிகழும் குருபூசைகள், பட்டணப்பிரவேசம், மாகேஸ்வர பூசை, பிரசாதம் வழங்கல், புலவர்களுடன் பேசி மகிழ்தல், இசைவளர்த்தல், நாதசுர வித்வான்களை ஆதரித்தல் போன்றவை மக்களிடையே குருபக்தி, தெய்வ நம்பிக்கை, எஜமானவிஸ்வாஸம், கலையுணர்ச்சி முதலிய நற்பண்புகளை வளர்த்தன.

மக்களின் வாழ்க்கையே முன்பெல்லாம், உழவு வாணிபம் போக, திருக்கோயில் வழிபாடு திருவிழாக்கள் இவற்றை முக்கியமாகக் கொண்டிருந்தது. பிரமோத்சவம் அதிகாரநந்தி அறுபத்துமூவர் என்றால் மயிலாப்பூரில் இருக்கிற உறவினர் விட்டிற்கு அவர் தம் உறவினரும் நண்பர்களும் வருவார்கள். அவரும் தன் விட்டிலேயே ஒரு சுபகாரியம் போலக் குடும்பத்தோடு குதூகலமாக யாவரையும் வரவேற்று விருந்தோம்பி மகிழ்வார். வந்தவர்களும் விருந்துண்டதோடு அன்பைக் கொண்டும் கொடுத்தும், உலாப்போந்த பெருமானைத் தரிசித்தும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் தத்தம் விடு திரும்புவர். இவ்விழாக்கள் மக்களிடையே நல்லுறவை வளர்த்தன ; விருந்தோம்பல் என்ற பண்புக்கும் உரம் ஊட்டின. தேர்த் திருவிழா என்றால் தேர் வடம் பிடிக்க ஒன்று திரளும் மக்கள் தத்தம் அந்தஸ்து படிப்பு பதவி பணம் முதலிய நிலைகளை மறந்து ரதாரோகணப் பெருமானின் கம்பீரத்தையே கண்டு கண்டு உள்ளத்தே உவகையும் பக்தியும் உந்தத் தேர் இழுத்து ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதைச் செயலில் காட்டுகின்றனர். சுருங்கச் சொன்னால் திருவிழாக்கள் தமிழரின் உள்ளத்தை வளம்படுத்தும் உவகைக் கடலாகும்.

பிரமோத்ஸவம் அல்லாத வேறு அபிஷேக காலங்களில் ஆண்டவனுக்கு அபிஷேகிக்கப்பட்ட பால் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படுவதையும் கர்ப்பிணியாக இருக்கும் பெண்களில் சிலரும் இறைவனை வழிபட்டு அவ்வபிஷேகப் பாலை வாங்கி அருந்துவதையும் இன்றும் வைத்தீஸ்வரன்கோயில் போன்ற திருக் கோயில்களில் காணலாம். ஏழைகளுக்குப் பிரசாதமாக எளிய விலையில் தரப்படும்

பட்டைசாதம் பலபேர் பசியைப் போக்குகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது, பாடல்பெற்ற க்ஷேத்திரங்களில் யாத்திரிகர்களுக்காகக் கட்டப்பெற்றுள்ள தர்ம சத்திரங்கள், திருக்குளங்கள், ஊருணிகள், விழாக்கள் நிகழும் ஆயிரக்கால் மண்டபங்கள், செவியமுது வார்க்கும் தேவாசிரியன் மண்டபங்கள் யாவும் தமிழர் சமுதாய வாழ்வின் சமதர்மப் போக்கிற்குச் சான்றுகளாகும்.

தமிழ் நாட்டின் மற்றொரு தனிச் சிறப்பு சத்சங்கங்கள். மதுரையில் தமிழ்ச் சங்கப் புலவர்கள் அரசனுக்கே அறிவுரை கூறிவந்தமை சரித்திரகாலத்திற்கும் முற்பட்ட பெருமையாகும். இராமநாதபுரம் சேதுபதி அரசர்கள் நான்காவது தமிழ்ச்சங்கம் நிறுவியதும் விவேகானந்த சுவாமிகள் அமெரிக்கா செல்ல ஆதரவு புரிந்ததும் அப்பண்டைய பண்பாட்டினைச் சுட்டும். வேதாந்த சங்கங்களும் சித்தாந்த சமாஜங்களும், வைஷ்ணவ சபைகளும், தமிழ்ப் பேரவைகளும் இவற்றினிடையே சமயவாதங்களும், மக்கள் இந்த அறிவுப்போட்டிகளில் காட்டிய ஊக்கமும், சதாவதானம் அஷ்டாவதானம் செய்யும் நுண்மாண்நுழைபுலனும் தமிழ் நாட்டின் பழைய வாழ்க்கை முறை விறுவிறுப்புக்களாகும். இதை மனத்துட்கொண்டு கம்பர்பெருமான் அயோத்திமா நகரத்தை வருணிப்பதாக,

"மன்னவர் தருதிறை யளக்கு மண்டபம்
அன்னமேன் னடையவ ராடு மண்டபம்
முன்னரு மருமறை யோது மண்டபம்
பன்னருங் கலைதேரி பட்டி மண்டபம்

என்று கூறியுள்ளார்.

பரந்த கல்வியில் நுனிப்புல் மேய்வதைவிட ஒரு மொழியாம் தாய் மொழியில் பழுத்த தமிழ்ப் புலமை பாலித்தவர்களாய் விளங்கினர்கள் நமது பெரியவர்கள்.

நல்லெண்ணம் நல்லொழுக்கம் நல்லறமாம் இல்லறம் குருபக்தி தெய்வபக்தி அன்பு அமைதி ஆகிய இயல்புகளில் ஓங்கி வளர்ந்து வந்த தமிழர் பண்பாடு மெல்லப் பழங்கதையாய்ப் போய்விடாமல் பாதுகாப்பது இக்கால இளைஞர்களின் முன்னணி வேலையாகும்.

கனகாபிஷேக சிந்தனை

கோவை. திரு. PL. கண்ணப்ப செட்டியார் (கடிதங்களிலிருந்து)

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களைத் திருக்கடவூர் ஸ்ரீ அபிராமிதேவி சந்நிதியில் முதல் முதல் சந்தித்தேன். அவர்கள் ஆத்ம சக்தி என்னை அவர்களிடம் மிகவும் ஈடுபடுத்திவிட்டது. சென்ற வருஷம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் கொங்கு நாட்டுக்கு விஜயம் செய்தபோது சிறிதளவு உபசாரம் செய்யும் பாக்கியத்தைப் பெற்றேன். கிடைக்கப்பெறாத - அருமையான ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தொடர்பை திருவருள் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அது தொடர்ந்து இருந்துவந்தால்தான் எனக்கு நிம்மதியும், சாந்தியும், சந்தோஷமும் ஏற்படும். அவர்கள் அருகில் இருப்பதையே நான் பெரும் பேருகக் கருதுகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் நடமாடும் தெய்வம். அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்து தரிசிப்பது நம் பிறவிப் பயனாகும். தஞ்சாவூர் ஜில்லா கனவான்கள், பக்தர்கள், இவர்களைத் தனி முழுமூச்சுடன் முயற்சி எடுத்து கனகாபிஷேக விழாவைச் சிறப்பிக்கவேண்டுமாகப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

கோவைப் பக்கங்களில் இதற்கு அமோக ஆதரவு இருக்கிறது. நம் முயற்சி தான் தேவை. ஒருவரையும் வற்புறுத்துவதில்லை. நோட்டிசைக் காட்டி விபரம் சொல்லுகிறோம். மக்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைப் புகழ்ந்து பேசி இயன்ற தொகையை முகமலர்ச்சியுடன் தருகிறார்கள். இதற்குக் காரணம் ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் ஆத்ம சக்திதான் என்று திடமாகச் சொல்லுவேன். நம் முயற்சி எந்த அளவில் இருந்தாலும் அவர்களுடைய சக்தியின் மகிமையால் விஷயம் நல்ல முறையில் நடந்து விடும். இருந்தாலும் நாமும் இத் திருப்பணியில் சேர்ந்து புண்ணியத்தையும் ஆத்ம திருப்தியையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் அனுக்ரகத்தையும் பெறவேண்டுமல்லவா? நான் மாயவரத்திலிருந்து புறப்பட்டது முதல் கனகாபிஷேக சம்பந்தமான ஞாபகம் அதே சிந்தனையில்தான் இருக்கிறேன். சில சமயங்களில் ராத்திரி நேரத்தில் ஞாபகம் வந்துவிடும். திரும்பத் திரும்ப அந்த விஷயந்தான் என் எண்ணத்தில் ஊறிவந்து கொண்டே இருக்கும், என் வாழ்நாளில் இதை ஒரு பெரிய பாக்கியமாகவும் கடமை யாகவும் கருதுகிறேன். இந்தவிழா சிறப்பாக முடிந்தபிறகுதான் நிம்மதியாயிருப்பேன்.

கனகாபிஷேக விழாவிற்கு என் திட்டம் ஒரு லட்சம். இது கைகூடும். இது வரை நான் நினைத்த நல்ல காரியங்கள் எல்லாம் தவறாமல் சிறப்பாகப் பூர்த்தியாகிக் கொண்டுதான் வருகிறது. இதையும் பரிபூரணமாக அப்பன் முருகன் பூர்த்திசெய்து வைப்பான் என்ற திட நம்பிக்கை இருக்கிறது. பல அன்பு உள்ளங்கள் சேர்ந்து முயற்சித்தால் எந்த நல்ல காரியம் தான் கைகூடி வாராது? முயற்சி செய்ய நாம் தூண்டிவிடவேண்டும். முருகா! முருகா!! முருகா!!!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம்

கனகாபிஷேக மலர்

தருமையாதீனம்

பதினொருண்டில் கண்ட வளர்ச்சி

பகுதி 3

தருமையாதீனம்

பதினுருண்டில் கண்ட வளர்ச்சி

திரு. அ. கல்யாணசுந்தர தேசிகர்

தருமையாதீனம் திருக்கயிலாய பரம்பரை, நந்திமரபில் - மெய்கண்டசந்தானத்தில் வந்த பெருமை உடையது. ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்று அவர்களின் நிலையான அருட்கொடையாகத் திகழ்வது. இதுவரை இருபத்துநான்கு குருமகாசந்நிதானங்களால் அருளரசுநடத்தப் பெற்றது. இப்போது இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஆட்சியில் இருந்துவருவது.

அண்மையில் திருக்கயிலாய தரிசனத்துக்கு எழுந்தருளிப்போந்து மகா கயிலாயக் காட்சியைக் கண்டு இந்தப் பரம்பரை வந்த வரலாற்றின் உண்மையை நிலைநாட்டிய பெருமையால் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் என்ற சிறப்புத் திருநாமம் தாங்கி எழுந்தருளும் இவர்கள் அருளாட்சியில் இவ்வாதீனம் அடைந்துள்ள வளர்ச்சிகள் பல. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் 20—5—1945 அன்று இந்த ஞான அரசை ஏற்றுர்கள்.

ஆட்சி முறை:

இவ்வாதீனத் திருமடம், இருபத்தேழு திருக்கோயில்கள் இவற்றின் ஆட்சி பல நூருண்டுகளாக இருந்துவருகிறது. திருமடத்தின் சார்பில் சில அறக்கட்டளைகளும் நடத்தப்படுகின்றன.

எல்லாவற்றிற்கும் ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்படக்கூடிய வரவு செலவுகள் அதற்கு முந்திய ஆண்டு மார்ச்மாதத்திலேயே திட்டம் வகுத்துக்கொண்டு அதன்படி நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை எல்லாத் திட்டங்களும் செல்வநிலை ஒத்து வளர வருமானம் மிகுத்தும் செலவு அதற்குள் அடங்கும்படியுமே வகுக்கப்பட்டிருக்கின்றன. கூடியவரையில் எதிர்பார்த்தபடியே வரவும் செலவும் நடத்தப்படுகின்றன. அரசாங்கத் தணிக்கையாளர்கள் இவை எல்லாவற்றின் கணக்குகளையும் தணிக்கைசெய்து அறிக்கை கொடுத்து வருகிருர்கள். பெரும்பாலும் நல்லமுறையிலேயே அந்த அறிக்கைகள் அமைந்துவிளங்குகின்றன. இவைஅல்லாமல் இப்பொழுது அமுலில்உள்ள அறநிலையச் சட்டப்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அவ்வப்போதும் வந்துவந்து பார்வையிட்டுவருகிருர்கள். அவர்களும் மிகவும் நல்லமுறையில் பாராட்டி எழுதுகிருர்கள்.

அந்தச் சட்டத்தின்கீழ்ச் செய்யவேண்டிய காரியங்கள் செம்மையானமுறையில் நடத்தி வரப்படுகின்றன. அரசாங்கச் சட்டம் எதுவானாலும் அதனதன்கீழும் செய்யவேண்டியவைகள் எந்தக் குறைக்கும் இடம் இல்லாமல் செய்யப்படுகின்றன. வீணான வியவகாரங்கள் எதுவும் இவர்கள் நிர்வாக காலத்தில் கிடையாது. குத்தகை வசூல் சம்பந்தமாகவும் ஏதாவது உரிமைகளைப் பாதிப்பதானால் அவைபற்றியே வியவகாரங்கள் நடத்தப்படும். அதுவும் அவசியம் நடத்தவேண்டியதாக இருந்தாலொழிய வியவகாரத்துக்குப் போவதில்லை. அதற்குமுன் பல வழிகளிலும் இந்த நல்ல அறவழிப் பணத்தை வழக்குகளில் செலவு செய்யாத நிலையில் அவரவரையும் அணுகிக் கேட்டுப் பேசி ஒருவழியிலும் கட்டுப்பட்டுவராத நிலையில் வேறு வழியில்லாதபொழுதுதான் வியவகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. அநேகமாகச் சட்டத்தின்படியே நடத்தப்படும் நிர்வாகம் ஆகையால் வழக்குகளில் இதுவரை தோல்வி என்பது இல்லாமலேயே இருந்துவருகிறது.


அநுபவம் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணிகள் சமயசம்பிரதாயங்களில் இக்காலமுறைக்கேற்ப மக்கள் பாராட்டும் முறையில் சில மாறுதல்களைச் செய்து அதன்மூலம் மக்களின் தொடர்பும் வெளியுலகத் தொடர்பும் மேலும் சிறந்து விளங்கச் செய்திருக்கிறார்கள். நாட்டின் பகுதிகள் பலவற்றிற்கும், இமயப் பெருவரையில் பல பகுதிகளுக்கும் அதற்கு அப்பாலும் உள்ள பெருந்தலங்களைத் தரிசிக்கும்பொருட்டு யாத்திரைகள் பல மேற்கொண்டு சென்று பலநாட்டு மக்களின் நிலையையும் பழக்க வழக்கங்களையும் அங்கங்குமுள்ள சமயநிலை முதலியவற்றையும் கண்டுவந்து இங்குள்ள நம் மக்களின் நிறை குறை தெரிந்து அதற்கேற்பப் பணிசெய்யும் முறைகளையும் அமைத்து விளங்கச் செய்திருக்கிறார்கள்.

சமயப் புரட்சி :

எளிய வாழ்க்கையும், உயரிய சிந்தனையும், செயல் திறமும், உயர்வுதாழ்வின்றி எல்லோருடனும் கலந்து பழகும் இனிய குண நலன்களும், ஜபம், தவம், பாராயணம், வழிபாடுகள் முதலிய ஆன்மிக வழிகளில் மிக விரிந்த - அழுந்திய ஈடுபாடும், பிறர் துன்பங்கண்டு கருணைகொண்டு இரங்குதலும், தளராத ஈகையும், மக்கள் நலன் சமுதாய நலன்களில் மாறாத ஈடுபாடும் கொண்டு விளங்குவதால் மக்களின் ஒருமுகப் பாராட்டுக்களைப் பெறும் வாய்ப்பைப் பெற்றவர்கள். எங்குச்சென்றாலும் ஆங்காங்குமுள்ளவர்கள் கண்டு வணங்கித் தம் குறைகூறி ஆறுதல் பெற்று நிறைவுகொண்டு செல்லும்படியான அருள்நலமுடையவர்கள். இதில் சமய சாதி வேறுபாடுகள் இல்லை. இது ஒரு சமயப் புரட்சி.

பாட்ஞ கண்காட்சிச் சாலையில்



15 கோடி வருஷமான மரம் (கல்லானது)

நேபாலத்தில்




ஸ்ரீ பசுபதிநாத் ஆலயம்



நேபாலம்

பூர்விக வைத்தியநாதம்




ஜோதிர்லிங்கத் தலம்

நேபாலத்தில்



தேவபட்டன்



வாஸ்மதிக்கரையிலிருந்து ஸ்ரீ பசுபதிநாதராலயம்

பழைய சம்பிரதாயங்களிலேயே ஊறிநிற்காமல் விடவேண்டியவற்றை விட்டு பல்வேறுபட்ட சமயத் தலைவர்களையும் திருமடத்திலும் ஆதீனத் திருக்கோயில்கள் போன்ற எல்லாஸ்தாபனங்களிலும் வரவேற்று உபசரித்து அவரவருடனும் கலந்து பேசிச் சமயப்பொதுநலங்காக்கும் பேராண்மை உடையவர்கள். திருக்கோயில் வழிபாடு களுக்கு எழுந்தருளுவதிலும், திருக்கோயில்களுக்குப் பழுது ஏற்பட்டகாலங்களில் உதவி செய்வதிலும் சைவ வைணவ வேற்றுமை கருதாது காலத்தில் முன்வந்து உதவி, பொதுமைநோக்குடன் நம்நாட்டுக் கோயில்கள் நல்லநிலையில் என்றும் விளங்கவேண் டும் அப்பொழுதுதான் மக்கள் தீதின்றி வாழமுடியும் என்ற அழுத்தமான நம்பிக்கை யிலும் தளராமை உடையவர்கள். திருக்கோயில் பூசை முட்டிடின் மாரிவளங்குன்றும்' மன்னர்க்கும் ஆகாது ஆகவே அது மக்களுக்குப் பெருந்தீமை விளைவிக்கும் அல்லவா? அக்குறை நம்நாட்டில் நம்மக்களுக்கு எப்பொழுதும் வரக்கூடாது என்று எப்பொழுதும் திருவுளக்கனிவு உடையவர்கள். சமய சாத்திர தோத்திரங்களில் நிறைந்த அறிவும் அனுபவ ஞானமும் கைவரப்பெற்றவர்கள். அவை மக்களுக்குப் பயன்படும் வழியில் உபதேசச் சொல்லாலும் செயலாலும் பல செய்து மகிழ்பவர்கள்.

கோயில்கள் புதுக்குதலிலும், கோயில் வழிபாடுகள் சிறப்பதிலும், கடவுளர்க்கு அணிசெய்து மகிழ்வதிலும், வேத சிவாகம, திருமுறை முழக்கங்கள் நாடு முழுவதிலும் அதற்கப்பாலும் கடல்கடந்தும் ஒலிக்கச்செய்வதிலும் பெருமுயற்சியும், மொழி, சமய வளர்ச்சியில் பெரும் ஊக்கமும், பாவலருக்கும் புலவர் பெருமக்களுக்கும் சிறப்புச்செய்வ திலும் இவைபோன்ற பலவற்றின் வளர்ச்சியிலுமே நாட்டமிகக்கொண்ட பொழுது போக்கு உடையவர்களாகத் திகழ்ந்து வருபவர்கள். ஆதீனத் திருமடத்தின் புகழும், இறைவன் திருநாமச் சிந்தனையும் மக்கள் உள்ளத்தே இப்பொழுது பெருகிவருவதற்கு ஒரு பெருந் தூண்டுகோலாக எழுந்தருளியுள்ளவர்கள். இவ்வாதீனத்தின் ஆட்சியில் இது ஒரு பொற்காலமாக வளர்ந்துவருகிறது.

ஞானத் துறவும் அதே நிலையில் ஞான வேந்தாக ஒரு பெரும் ஆட்சிப் பொறுப்பும் உடையவர்கள்; ஆகவே நமது பெருநூல்களில் சொல்லப்பட்டிருக்கும் விதிகளின் வடிவமாக, துறவும் ஆட்சியும் ஒன்றுகக்கூடிய திருவுருவமாக இன்று பலரும் வியக்கும் வண்ணம் எழுந்தருளியிருக்கிருர்கள். அதைக் கண்டு பொதுமக்கள் பலரும் பாராட்டும் வகையில், தங்கள் நன்றியைத் தெரிவிக்கும் வகையில் இப்போது கனகாபிஷேகம் செய்விக்க முன்வந்துள்ளார்கள். அதற்கேற்றவகையில் ஒரு பாமலரும் பூத்து வெளிவருகிறது. அதிலே பல பேரறிஞர்கள் எழுத்தும் அணிசெய்து விளங்கு கின்றது. அதில் இந்த ஆட்சியில் - ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் ஞான ஆட்சியின் கீழ் இவ்வாதீனம் அடைந்துள்ள வளர்ச்சியை ஓரளவே எடுத்துரைக்கக்கட்டுரைஒன்று வழங்கவேண்டுமென்று விரும்பினர்கள். அதன் விளைவே இது.

திருக்கூட்டம் :

பரம்பரைச் சைவ குலத்தில் வந்த சிறுவயதினர் இங்குத் தம்பிரான்களாக அவரவர் தகுதிதெரிந்து ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். துறவு மேற்கொண்டதும் அவர்களுக்குக் கல்விப் பயிற்சியும், சமய சாத்திரப் பயிற்சியும், ஆலய நிர்வாகமும், நல்ல பொருள்கள் பற்றிப் பேசும் ஆற்றலும் உண்டாகும்படி பல போதனைகளைக் கொடுத்துத் திறனும் பக்குவநிலையுங்கண்டு படிமுறையாலே தீட்சைமுதலியன அளிக்கப் பெறுவார்கள். ஆதீனத் திருமடத்திலும், திருக்கோயில்களிலும் பலபல பணிகளும் செய்து வருவார்கள். இவ்விதமாகப் பயிற்சிபெறும் இளவடியார்கள் மற்ற மாணவர் களோடு உடனுறைந்து படித்துக் கல்விகேள்விகளில் அறிவு பெறுதல்வேண்டும்; அப்பொழுதுதான் உலக மக்களோடு நெருங்கிய தொடர்பும், உலகியலில் உள்ள வைகளும் அறிய வாய்ப்பேற்படும் என்று திருவுளங்கொண்டார்கள். இதுவும் ஒரு சிறந்த மாறுதல்தான். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் ஆட்சியில் தம்பிரானுக ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் எல்லோருக்கும் இவ்விதமாகக் கல்விப்பயிற்சி அளிக்கப் படுகிறது. அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான்களாகத் தேர்ச்சியும் பெற்றிருக்கிருர்கள். அவர்கள் பெறும் இவ்விதமான பயிற்சியால் அவர்களுக்கு மிகுந்த நன்மை இருக்கிறது. மக்களுக்கு எடுத்துச்சொல்வதிலும் ஆற்றல் மிக்கவர்களாக விளங்குகிருர்கள். பலரும் பாராட்டும் வண்ணம் அமைந்து விளங்குகிருர்கள்.

கல்வி நிலையங்கள் :

தருமையில் ஒரு கல்லூரி - வடமொழி, தமிழ்மொழி பயிற்றும் கல்லூரி - இங்கு ஆதீன மடம் திருக்கோயில்களின் சார்பில் 2—8—1946 இல் தொடங்கப்பெற்றது. நக்கவர்கள் ஆசிரியர்களாக இருந்து பணி ஆற்றி வருகிருர்கள். இப்பொழுது 100க்குமேற்பட்ட மாணவர்கள்வரை பயிற்சிபெற்றுவருகிருர்கள். வித்துவான் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களும் உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுமே இங்குச் சேர்க்கப்படுகிருர்கள். பல மாவட்டங்களிலிருந்தும், கடல் கடந்த ஈழம், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும் இங்கு வந்து பயிற்சி பெறு கிருர்கள். இதில் சென்னைப் பல்கலைக்கழக 2 - D தமிழ் வித்துவான் தேர்வுக்கும், வட மொழி சாகித்ய சிரோமணித் தேர்வுக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தொடங் கியநாள்தொட்டு இக்கல்லூரியில் பயிற்சிபெறும் மாணவர்கள் பலரும் பாராட்டும் வண்ணம் சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வில் வித்துவான் பிரிவில் முதல்தரத்தில் தேர்ந்து பரிசில்கள் பெற்றிருக்கிருர்கள். முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புத் தேர்ச்சி களே அதிகம். தேர்வுக்கு அனுப்பப்படும் மாணவர்கள் தோற்றுவந்தார்கள் என்ப தில்லாமல் எல்லோரும் தேர்ந்துவிடுகிருர்கள். இவ்விதமாக இக்கல்லூரிக்கு நல்ல பெயரும் புகழும் கிடைத்துவருகிறது. அவர்களுக்குரிய பாடங்களோடு சமயசாத்திரத் திருமுறைப் பயிற்சிகளும், பேச்சுப் பயிற்சியும் இங்கு அளிக்கப்படுகின்றன

ஆகையால் இங்குப் பயிலும் திருக்கூட்டத்து அடியார்களுக்கும் நல்ல சேர்க்கை கிட்டுவதால் அறிவாலும் அனுபவத்தாலும் அவர்கள் சிறந்தவர்களாக வெளிவருகிருர்கள். அவர்களுக்குத் திருக்கோயில்களில் பணிபுரியும் அனுபவமும் அளிப்பதோடு ஸ்ரீ காசி முதலிய பெரும் யாத்திரைகள் செல்லும் வாய்ப்பும் அளித்துப் பொதுவாக உலக அனுபவமும் கிடைக்கும்படிச் செய்யப்படுகிறது.

மேலே சொல்லப்பட்ட கல்லூரியின் சார்பு நிலையங்களாக உயர்நிலைப் பள்ளியும், தொடக்கப்பள்ளியும் நடத்தப்படுகின்றன. இவற்றிலும் தக்க ஆசிரியர்கள் இருந்து கல்வி போதிக்கிருர்கள். மாணவர்களுக்கு மற்ற போதனையோடு வழிபாட்டு முறைகளும் போதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை அன்று ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் குழந்தைகள் கூடித் தோத்திரங்கள் சொல்லி வழிபாடுகள் நடத்துகிருர்கள். அப்பொழுது ஆசிரியர்களும் உடன் சென்று கண்காணித்துவருகிருர்கள்.

சமயக் கல்வி போதனைக்காகவும் ஆலய வழிபாட்டுப் பயிற்சிக்காவும் இரு பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. திருமுறைப் பயிற்சியும் சமயக் கல்வியும் பயிற்ற ஓதுவார் பயிற்சியும், ஆலய வழிபாட்டில் சிவாசாரியப் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேத சிவாகமப் பயிற்சியும் நடத்தப்படுகின்றன. இவ்விரண்டிலும்கூட சமய போதனைகள் தரப்படுகின்றன. சமயச் சொற்பொழிவுகளுக்கும் இவர்கள் பயிற்சி பெறுகிருர்கள். சமயம் மொழி இவற்ருேடு திருமுறை, வேத சிவாகமம் பயில்வதால் இவர்களுக்கு மொழி அறிவு வித்துவான் வகுப்புக்கு ஏற்றதாகவும் சிரோமணிக்கு ஏற்றதாகவும் ஆகிவிடுகிறது. ஆகையால் இம்மாணவர்களுக்கு முதலிடம் கொடுப்பதாகவே மேலே சொன்ன கல்லூரி தொடங்கப்பெற்றது. இதில் பயிற்சி பெற்று வெளியிடங்களில் ஓதுவார்களாகவும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களாகவும், பல ஆலயங்களில் பூஜகர்களாகவும், சிவாகம பாடசாலைத் தலைமை ஆசிரியராகவும் பல மாவட்டங்களிலும் பணி ஆற்றி வருகிருர்கள். இலங்கையிலிருந்தும் இங்குவந்து பயிற்சிபெற்றுப் போகிருர்கள்.

பிற உதவிகள் :

இவைகளல்லாது வெளிப் பள்ளிகளில் பயிலும் தகுதிவாய்ந்த சிறுவர்களுக்குப் பள்ளிப்படிப்புக்கு வேண்டிய சம்பளம், புத்தகங்கள் வாங்கவும், பரீட்சைக்கட்டணமும் கூட அளிக்கப்படுகின்றன. ஆதீன மடத்திலும் பெரிய தேவஸ்தானங்களிலும் தொடக்கப் பள்ளி மாணவர்கள் பலருக்கு நடுப்பகல் உணவு அளிக்கப்படுகிறது. உடைகள்கூட அளிக்கப்படுகின்றன. தமிழில் ஆர்வம் உண்டாவதற்காகத் திருச்சி, ஸ்ரீவைகுண்டம், சீகாழி, பேரூர், மாயூரம், ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய பல ஊர்களிலும் உயர்நிலைப்பள்ளி இறுதிவகுப்பிலும், கல்லூரிகளிலும் வகுப்பில் தமிழில் முதன்மையாகத் தேறும் மாணவர்க்குப் பொற்பதக்கங்களும் பரிசில்களும் வழங்கப்படுகின்றன. இவையல்லாது தொழிற்படிப்புப் படிக்கும் மாணவர்கள் சிலரும் உதவி அளிக்கப் பெறுகிருர்கள்.

திருமுறைப் பயிற்சி :

இந்த ஆதீனத்துக்குட்பட்ட பல ஆலயங்களிலும் திருமுறை ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக்கொண்டு அவ்வவ்வூரிலும் உள்ள சிறுவர்களுக்குத் திருமுறைப் பயிற்சி அளிக்கச்செய்து ஆண்டுதோறும் தேர்வும் வைத்து அதில் தேர்ச்சிபெறுவோருக்குப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இதில் நல்ல பயன்கள் இரண்டு ஏற்படுகின்றன. கட்டாயமாக ஒவ்வொருநாளும் கோயில் வழிபாட்டுக்கு வரும்படிச் செய்தலும், அத்தோடு இளம் உள்ளங்களில் கடவுள் சிந்தனை பதியச் செய்தலும் என்பனவாகும். அவற்றோடு அவர்களுக்கு பள்ளிப்புத்தகங்கள் எழுதுகருவிகள் முதலியனவும் வழங்கப்படுவதால் எங்கும் சிறுவர்கள் உற்சாகமாக இதில் வந்து பயிற்சி பெறுகிறார்கள். இவர்களுக்கும் சொற்பொழிவுப் பயிற்சியும் சுவாமி புறப்பாட்டுக் காலங்களில் திருமுறைப் பாராயணம் செய்யும் முறைகளும் கற்பிக்கப்படுகின்றன. இவ்விதமாக வெளிப்பிள்ளைகளுக்கும் திருமுறை ஓதுவதில் ஊக்கமுண்டாகும்படிச் செய்யப்படுகிறது. இதில் பெரும்பாலும் பெண்கள்தான் அதிகமாகப் பயிற்சிக்கு வருகிறார்கள். தாய்வழிகளில்தானே நல்ல செய்திகள் பரவவேண்டும்.

சென்னை - சமயப்பிரசார நிலையம் :

சமயப் பிரசாரத்திற்கென்றே வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் சென்னையில் ஒரு கட்டிடம் வாங்கப்பட்டிருக்கிறது. அது "வேளூர் தேவஸ்தான இறைபணிமன்றம்" என்ற பெயரோடு அரியதொண்டுகள் பல ஆற்றிவருகிறது. அங்கு சமயச் சார்பான இலக்கியங்கள் படித்துணர விரும்புவோருக்கு நல்லதொரு நூல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு வருவோருக்கு வேண்டும் நூல்களைக் கொடுத்து அங்கேயே படித்துவரச் செய்யப்படுகிறது. திருமுறைப் பயிற்சி, இசைப் பயிற்சி, சமயப் பயிற்சி, தமிழ் வித்துவான் தேர்வுக்கு இராப்பள்ளிகள், வாரத் தொடக்கத்தில் சமயக் கூட்டம், அவ்வப்போதும் சிறப்புக் கூட்டங்கள், மாநாடுகள், வடமொழிப் பயிற்சி இதுபோன்ற பல நற்செயல்கள் அங்கே ஆற்றப்படுகின்றன. மாதம் ஒருமுறை கூட்டு வழிபாட்டுக்குச் சென்னை நகரில் உள்ள பல சங்கங்களையும் அன்பர்கள் பலரையும் சேர்த்துப் பாடல்பெற்ற தலங்கள் தோறும் சென்று வழிபாடாற்றி வருவதற்குத் திட்டங்கள் அமைத்து அதன்படி நடந்துவருகிறது. இங்குள்ள சுவாமிகளும், திருமுறை ஆசிரியரும் பல வெளியிடங்களில் நடைபெறும் கூட்டங்களிலும் சொற்பொழிவு, திருமுறைப் பாராயணம் போன்றவற்றில் பங்கு கொண்டு தொண்டாற்றி வருகிறார்கள். இவர்கள் பேச்சுக்களும் பாராயணமும் வானொலி மூலமும் ஒலிபரப்பப்படுகின்றன.

இந்த ஆதீன சம்பந்தப்பட்ட பல ஸ்தாபனங்களின் செய்தி நிலையமாகவும் சமயப் பிரசார நிலையமாகவும் இது நடத்தப்படுவதால் ஆஸ்திக அன்பர்கள் பலருக்கு ஆதீனக் கோயில்களில் ஆங்காங்கும் நிகழ்கின்ற ஏறுபடி விழாக்களில் வந்து கலந்து பிரசாதம் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு அங்கங்கிருந்தும் பிரசாதங்கள் தக்கார் மூலம் அனுப்பி, இந்த நிலையத்திற்கு அவர்களை அழைத்து விநியோகம் செய்யப்படுகின்றது. நல்ல பயனையும் பாராட்டுதலையும் பெறக்கூடியதாக இருக்கின்றன இச்செயல்கள். இங்கு நம்நாட்டு அரசியல் தலைவர்கள் பலரும், சமயத் தலைவர்கள் பலரும், இசைப் புலவர்கள் பலரும் வந்து கலந்துகொள்கிறார்கள். இங்கு நிகழும் செய்திகள் பல பத்திரிகைகளில் பிரசுரமாவதால் வெளியிடங்களில் உள்ள பலரும் இதனால் பயன் பெறுகிறார்கள்.

ஆலயங்களில் விழாக்காலங்களிலும் ஏறுபடிகாலங்களிலும் பல புலவர்களைக் கொண்டு சொற்பொழிவுகளும் நல்லிசை முழக்கங்களும் செய்விக்கப்படுகின்றன. மாநாடுகள், திருமுறை ஊர்வலங்கள் இவைகளின் மூலமும் மக்களுக்குச் சமயக் கருத்துக்கள் பரவச் செய்யப்படுகின்றன. இவ்விதமாகத் தாகமிகவுண்டாய் ஓடிவரும் காரணர்க்கு உண்மை உணர்த்த எழுந்த இம்மடம் இப்போது அங்கங்கும் ஓடி ஓடிச் சென்று தன் பணியைச் செய்துவருகிறது.

ஞானசம்பந்தம் :

இவையல்லாது நூல்கள் பல வெளியிட்டு அன்பர்களுக்கும் நூல் நிலையங்களுக்கும் அனுப்பிச் சமயக் கருத்துக்கள் வளரச் செய்துவருகிறது. சமயஞானப் பத்திரிகையாக "ஞானசம்பந்தம்" என்றதொரு மாத இதழ் பிரசுரிக்கப்படுகிறது. இந்த வெளியீடுகள் நம் நாட்டின் பல பகுதிகளுக்கும் வெளிநாடுகளில் கடல் கடந்தும் அனுப்பப்படுகின்றன. திருமுறைப்பாடல்களை இசைத்தட்டுகளில் பதிக்கச் செய்து பல ஆலயங்களுக்கும் அன்பர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இவைகளும் கூடக் கடல்கடந்து செல்கின்றன.

நிர்வாகம் :

ஆதீன நிர்வாகம் ஆதீன மடம், கோயில்கள் என்ற இரண்டு பிரிவில் நடத்தப்படுகின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் மேலாளர் (மானேஜர்) ஒருவரும் நிர்வாகத்துக்கு வேண்டிய மற்ற சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தந்தக் கோயிலிலும் வேண்டிய அளவுக்குச் சிப்பந்திகள் நியமிக்கப்பட்டு உள்துறை, சொத்து நிர்வாகத்தை நடத்தப்படுகிறது. பல பெருங்கோயில்களில் ஆதீனத் திருக்கூட்டத்துத் தம்பிரான்களுள் ஒவ்வொருவர் மேலாளராக இருந்து பணியாற்றி வருவார்கள்.

வழிபாட்டிடங்கள், தெய்வத்திருமேனிகள், திருக்குளங்கள், பரிவட்டங்கள், பிரசாதங்கள் சமையல் இடங்கள், அவற்றில் பயன்படும் பாத்திரங்கள் முதலிய எல்லாம் மிகத் தூய்மையாக வைக்கப்பட்டிருக்கின்றன. நித்திய நைமித்திகங்கள், சிறப்பு விழாக் களெல்லாம் உரிய காலங்களில் மக்கள் பலரும் காணும்வண்ணம் நடத்தப்படுகின்றன.

சொத்துப் பராமரிப்பிலும் குடிபடைகளோடு அந்நியோந்நியமான நிலைமை நிடித்துவைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. குத்தகைகளை வசூலிப்பதில் யாருக்கும் துன்பம் இல்லாமல் நிலுவை தங்காதபடி அவ்வப்போதும் வாங்கிவிட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நிலுவை தங்கினல் குடிமக்களுக்கும் பின்பு நாளடைவில் பெருகிப் பெரும்பாரமாக ஆகிவிடுமல்லவா ? அப்பொழுது கேட்டு வாங்குவதைவிட அவ்வப்போதும் ஒவ்வொரு ஆண்டிலும் அந்தந்த ஆண்டுக் கடமைகளை அவ்வப் போதும் வசூலித்துக்கொள்வதால் இருசாராருக்கும் துன்பம் இல்லாது மனம்கோணுது நலமாகவே முடிகிறது. கூட்டுறவு முறையில் சாகுபடிவைத்துக்கொள்ள முன்வரும் குடிகளுக்கு அது நல்லமுறையில் நடக்கும்படியும் வேண்டிய உதவிகள் அளிக்கப்படு கின்றன. சில சந்தர்ப்பங்களில் தலைவர்கள் என்று பேர்சொல்லிக்கொள்ளுபவர்கள் சிலர் குறுக்கிட்டு நடுவில் பிளவு ஏற்படச்செய்யும் அப்பொழுதும் குடிகள் மனம் திருந்தும்வரை பொறுத்திருந்து திருந்திவந்ததும் அவர்களிடம் எவ்வித மாறுபாடும் இல்லாது சகஜ நிலைமையிலே பழகப்பட்டுவருவதால் முன்பு அவர்கள் வேறுபட்டுநின்ற தைக் குறித்து வருந்தியபின்னர் மிகவும் நல்லமுறையில் பழகத் தொடங்குகிறுர்கள்.

குத்தகையாளர், சாகுபடியாளர் சட்டங்கள், வாடகைக்கட்டுப்பாட்டுச் சட்டம் முதலிய எல்லாச் சட்ட விதிகளின்படியே யாருக்கும் துன்பம் இல்லாதபடி பார்த்து வரப்படுகிறது. சட்ட விதிகளுக்கு ஒத்த நிலையில் நிர்வாகத்தைத் திருத்தி அமைத்துக் கொண்டு சொத்துக்கள் அதற்கேற்ப நிர்வகிக்கப்படும். இதிலும் சிலசமயங்களில் வியவகாரங்கள் போடும்படி ஏற்படக்கூடும். அந்த நிலையிலும் அவ்விதம் செய்வதற்கு முன்னதாக அதனுல் பாதிக்கப்படுவோருக்கு நேரிய முறையில் முன்னறிவிப்புக்கள் கொடுத்துத் திருத்திக்கொள்ள அவகாசமும் கொடுத்து அவையெல்லாம் பயன் இல்லாமல் போனுலொழிய வியவகாரங்கள் போட்டு அதனுல் பிறருக்குத் துன்பமும் அறநிலையங்களின் நல்ல பணத்தை விண்விரயமும் செய்வதில்லை. இதுபோன்றே சொத்துரிமை வழக்கங்கள், உரிமைகளைப் பாதிக்கும்போதும் பொறுத்திருந்து பார்த்து வேறு வழியில்லாமலிருந்தாலொழிய நியாயஸ்தலங்களில் சென்று பரிகாரம் தேடுவது கிடையாது. ஆகையால் இவ்வளவு நிதானமாக எடுக்கப்படும் வழக்குகள் ஆதீனத்துக்குச் சாதகமாகவே முடிகின்றன. ஆதீன ஆட்சியில் உள்ள ஸ்தாபனங் களில் கடன் வாங்குதலும் பாக்கி தங்க இடங்கொடுப்பதும் இல்லை. அவ்வப்போதும் பணம் கொடுக்கப்பட்டுவிடும். பொருளாதார நிலை எப்பொழுதும் சீராக நல்லபடியா கவே இருக்கும், அதில் குறைபடுதல் கிடையாது. வரவு, செலவுகளில் வரவுக்குட்பட்ட

தாகவே செலவினங்கள் அமையும்படி பார்த்து வரப்படுகிறது. இவ்விதம் கண்காணிக்கப்படுவதால் எல்லா ஆலயங்களிலும் ஆதின மடத்திலும் பெருந்திருப்பணிகளும், திருவாபரணங்கள், தங்கம், வெள்ளிச் சாமான்கள் முதலியன செய்து இந்த நிலையங்களின் நிலையை உயர்த்துவதற்கு உதவியாக இருக்கிறது.

திருப்பணிகள் :

தருமையில் உள்ள ஆதின மடம், மற்றும் அதனைச்சேர்ந்த எல்லாக் கட்டிடங்களும் உள்ளூரிலும், வெளியூரிலும் நல்ல நிலைமையில் பழுதில்லாமல் காத்தலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உரியகாலத்தில் பார்த்துத் திருத்துதலும் முதற்பணியாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. செய்யவேண்டிய பெரும்பணிகளையும் அவ்வப்போதும் செய்ய முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

அவ்வகையில் தருமை ஆதின மடாலயத்தில் பூஜைமடம், அஷ்டலக்ஷ்மிக் கட்டு, நடுஹால் முதலிய இடங்களில் மொசைக்கற்கள் போட்டு வேலை செய்யப்பட்டன. மேலவீதியை ஒட்டி ஒரு பெரிய விருந்தினர் மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. முகப்பில் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றம் என்ற பெயரில் கீழே தளவரிசையிட்டு அகன்ற பெரிய மன்றம் (Hall) அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதின நூல்களைச் சேமித்துவைக்க நடுமுகப்பின் தெற்குப் பகுதியில் நூல்நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆதீனக் கல்லூரி முதலியவை வைத்து நடத்த மெய்கண்டான் நிலையம், அருள்நந்தி நிலையம், ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் பெயரால் நிலையங்கள், அமரநாதம், பசுபதிநாதம், கேதாரநாதம், கைலாசம் என்ற சிறந்த தல யாத்திரை நினைவு நிலையங்கள் ஆகியவை கட்டப்பட்டிருக்கின்றன. வடக்கு வீதியில் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியம் ஆர்ச், சுதைவேலை, கீழ வீதியில் ஸ்ரீ தருமபுரீசர் சந்நிதி, ஞானபுரீசர் சந்நிதிகளில் கைலாய யாத்திரை நினைவு வளைவுகள் கட்டப்பட்டு அணி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகம பாடசாலை வைப்பதற்கும் ஆதீனப் பணியாளர்கள் வீடுகளில் நிகழும் திருமணங்கள் நடத்துவதற்கும் கல்யாணக் கூடஅமைப்புடைய ஷண்முகவிலாச மண்டபமும் கட்டப்பட்டிருக்கிறது. பலதரப்பட்ட சிப்பந்திகளுக்கும் குடியிருப்புக்காக 25 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. வேலையாட்கள் குடியிருப்புக்கு 25 கூரை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சிப்பந்திகள் குடியிருப்பு வீடுகளில் மின் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஷண்முகம் (ஆர்ச்) வளைவிலிருந்து வரும் வழியில் இருபுறமும் வளைவுச்சுவர்களும், ஆரம்பப் பாடசாலையின் மேல்புறம், வடபுறம் வளைவுச் சுவர்களும் கட்டப்பட்டன. உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் கட்டப்பட்டது. சாணன் தோப்பு, தெற்குவீதி, கீழவீதிப் புறங்களில் சுற்றுச்சுவர்கள் கட்டப்பட்டன. மேலைக் குருமூர்த்த சுற்றுச்சுவர்கள் திருத்தப்பட்டன. ஷண்முகம் வளைவிலிருந்து மேலவீதி, ஒருபகுதி தாரிட்ட சாலை அமைக்கப்பட்டது. பழங்காவேரிக்கு ஒரு பாலமும், பிள்ளையார் குளத்துக்குக் கீழ்கரையும் கட்டப்பட்டன.

மேலக் குருமூர்த்தங்கள் மூன்றும் ஆலய அமைப்பாகக் கட்டப்பட்டன. வடக்குக் குருமூர்த்தத்தில் இப்போது ஆலயங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயம் வெளிப்பிராகாரத்தில் வடமேற்குப் பகுதியில் 18 திருக்கரங்களோடு கூடிய ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயமும் திருவுருவும் அமைத்துப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அதற்குக் கோபுரப் பார்வையுள்ள வாசலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சந்நிதியில் இதுவரை ஒன்றரைக் கோடிக்குமேல் அர்ச்சனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ ஞானபுரீசுவரராலயத்தில் வெளியில் பிராகாரம் உட்பிராகாரங்கள் தளவரிசையிட்டு விமானங்கள் கோபுரங்கள் புதுக்கி வர்ணம் வைத்து சுவாமி அம்பாள் கலசங்களுக்குத் தங்கமுலாமிட்டுச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. திருமடத்தின் முன்னுள்ள ஞானதீர்த்தம் பெரிதாக்கப்பட்டுத் தெற்குக்கரை வடக்குக்கரைகள் கட்டிவிடப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ தருமபுரீசுவரர் ஆலயத்திலும் வெளியில் பிராகாரங்கள் தளவரிசையிட்டும் விமானங்கள் புதுக்கி வர்ணம் வைத்தும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. உந்தூர்திகள் விடுவதற்கு 3 மண்டபங்களும் ஆதீனக் கூட்டுறவுப் பண்டகசாலையின் ஒரு பிரிவுக்கு இரு மண்டபங்களும் கட்டப்பட்டிருக்கின்றன.


வேளூர் :

ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயத்தில் அடியிற் கண்டவைகள் புதிதாகக் கட்டப்பட்டன. வடக்கு வெளிப்பிராகாரம் மதில், ஆலயத்திலிருந்து கழிநீர் வயலிடம் போக வடிகால், வாகன மண்டபம், மேலக் கோபுரத்தை ஒட்டி வடபுறம் சுவர், வேம்படிமாலில் காரியாலயம், பசுமடம், பண்ணைமாட்டுக் கொட்டகைகள், நெற்களஞ்சியங்கள், யாகசாலை முன்புறம் கீழக்கோபுரம் முன்புறம் யாத்ரீகர்கள் தங்கக் கொட்டகைகள், தெற்குவீதியில் யாத்ரீகர்கள் தங்கும் அறைகள் இரண்டு, வெளிப்பிராகாரம் கருங்கல் தளவரிசை, சித்தாமிர்தப் படித்துறை விஸ்தரிப்பு, திருக்குளத்தின் அடியிடத்தில் தளவரிசை - இவ்வேலைகள் நடந்திருக்கின்றன. அம்பாள் சந்நிதித் தட்டுச்சுற்றி மண்டபம், உள்கோயில் தளவரிசைகள், சண்முக விலாசப் பிரசாரசபா மண்டபங்கள் முதலிய எல்லாம் பழுதுபார்த்துச் செப்பனிடப்பட்டன. உள்மண்டபங்களிலும் தூண்களிலும் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. சுவாமி சந்நிதியில் அன்பர்கள் வழிபடக் கைப்பிடி அமைப்பும் அறுபத்துமூவர் சந்நிதி, தக்ஷிணாமூர்த்தி சந்நிதி, பொருளாளர் காரியாலயம், நூல்நிலையம், பழைய வாகன மண்டபம், ஆஸ்தான மண்டபங்களில் கம்பி அடைப்புச் செய்யப்பட்டிருக்கிறது. கட்டளைமடம் கட்டப்பட்டிருக்கிறது,

சீகாழி :

ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயத்தில் சுவாமிகோயில் திருச்சுற்றுமதில்கள் பழுது பார்த்துக் கோஷ்டமூர்த்தங்கள், மூலை பூதரிஷபங்கள் அமைத்து வேலைசெய்யப்பட்டன. கிழக்கு வெளிமதிலை ஒட்டிச் சந்நிதியில் இறக்கைச் சுவர், வடபகுதியில் பசுமடம்

ஐயாறு:



தேன்கயிலேயும் பிரதான ஆலய முன்மண்டபமும்

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்




திருக்குளம்



ஸ்ரீ வில்லேந்திய வேலவர்

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம் :



திருக்கோயில் - உள்தோற்றம்



ஸ்ரீ சரபர் சந்நிதி

திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம்:



ஸ்ரீ சரபமூர்த்தி

முதலியன கட்டப்பட்டன. ஆலயத்திலுள்ள எல்லா விமானங்களும் பழுதுபார்க்கப் பட்டு வர்ணம்வைத்து, சுவாமி, அம்பாள், திருஞானசம்பந்தர் விமானங்களுக்குத் தங்க முலாமிட்ட கலசங்கள் அமைத்து மிகச்சிறந்த முறையில் கும்பாபிஷேகம் நடத்தப் பட்டது. இப்போது கணநாத நாயனருக்குக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. வெளிப் பிராகாரம் கருங்கல் தளவரிசை இடப்படுகிறது. திருக்குளத்தில் திருஞானசம்பந்தர் திருமுலைப்பால் பெற்ற இடத்தில் அந்த ஐதிகம் விளங்க ஒரு வளைவும், அதன் எதிரே பெருமானும் பெருமாட்டியும் பால் வழங்க எழுந்தருளிவர ஒரு வாயிலும், அதன்மீது ஐதிகச் சுதையும் அமைத்துக் கட்டப்பட்டுள்ளன. தெற்குக் கோபுரத்தை ஒட்டியுள்ள விநாயகர் சுப்பிரமணியர் கோயில்கள், தேரடிவிநாயகர் ஆலயங்கள் புதுக்கப்பட்டன. திருக்குளக்கரை இடிந்துபோனதைப் பழுதுபார்த்துக் கட்டப்பட்டது. திருஞான சம்பந்தர்கோயில் திருமாளிகைப்பத்திகள் பழுதுபார்த்துத் தளவரிசையிடப்பட்டன. அம்பாள்கோயில் வடக்குத் திருமாளிகைப்பத்தி கட்டப்பட்டது. சிப்பந்திகளுக்கு வீடுகள் கட்டப்பட்டுவருகின்றன. ஆனைகட்டும் மண்டபம் கட்டப்பட்டது. தேரடிகள் பழுதுபார்க்கப்பட்டன.

ஆச்சாள்புரம் :

ஸ்ரீ சிவலோகத்தியாகராஜசுவாமி ஆலயத்தில் வெளிப்பிராகாரம் தளவரிசை யிடப்பட்டது. திருமடைப்பள்ளி பழுதுபார்க்கப்பட்டது. இராஜகோபுரத்தை ஒட்டி உட்புறத்தில் தென்புறம் தளவாடங்கள்போட இரும்புச்சார்பு அமைக்கப்பட்டிருக்கிறது. வடபுறம் குறடு கட்டப்பட்டிருக்கிறது. சாலவம் திருத்திக் கட்டப்பட்டு மழைத்தண்ணீர் சிறிதும் தேங்காமல் வெளியாக்கப்படுகிறது. விரிவான திருப்பணியைச் செய்து கும்பாபிஷேகம் செய்ய ஏற்பாடாகிவருகிறது.

திருமுல்லைவாயில் :

ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி ஆலயத்தின் விமானங்கள் புதுக்கி மதில்கள் மண்ட பங்கள் பழுதுபார்த்துப்பூசி, கிழவாயில் புறங்களில் உள்ள மதில்கட்டிக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. கோவில் குருக்கள், காரியஸ்தர் குடியிருப்பு வீடுகள் புதுக்கிக் கட்டப் பட்டன.

தலைஞாயிறு :

ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமி ஆலயத்தில் மலைக்கோயில் அடியிலிருந்து பிரித்துக் கட்டிச் சுதையில் உமாமகேசுவரர், சட்டைநாதர் திருவுருவங்கள் அமைத்து விமானங்கள், மண்டபங்கள் பழுதுபார்த்து வர்ணம் வைத்து, இராஜகோபுரம் புதுப் பித்துக் கட்டி வர்ணம் வைத்து, பிராகாரம் தளவரிசையிட்டுக் கும்பாபிஷேகம் செய் விக்கப்பட்டது. நந்தவனம் சுற்றுச்சுவர் எடுத்து நந்தவனம் அமைக்கப்பட்டது. பசு மடம், பிராமணப்பிள்ளை, ஆலயகண்காணிப்பாளர் குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டன.

குறுக்கை :

ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி ஆலயத்தில் வெளி திருச்சுற்றுமதில் அமைத்து இராஜகோபுரம், கட்டைக்கோபுரம், விமானங்கள் புதுக்கி வர்ணம் வைத்து, உள்பிரா காரம், மண்டபங்கள், இராஜகோபுரத்தை ஒட்டி உள்ளே உள்ள இடங்கள் தளவரிசை யிட்டு, கோவில் கிணறு பழுதுபார்த்து, சாலவம் நிருத்தி அமைத்து, இராஜகோபுரம் முன் இடம், திருக்குளம் படித்துறை திருத்திக் கட்டி வேலைகள் செய்யப்பட்டன. சிப்பந்தி குடியிருப்புக்கு இரண்டு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. காரியாலயம் திருத்திக் கட்டப்பட்டிருக்கிறது. உட்கோவிலில் கீழப்பிராகாரத்தை ஒட்டி மண்டபம் அமைத்துப் பரிவாரங்கள் எழுந்தருளப்பண்ணிவைக்கப்பட்டன. சந்நிதியில் அதிகார நந்திக்கு விமானம் கட்டிவைத்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

வள்ளலார்கோயில் :

ஸ்ரீ வதான்யேசுவரசுவாமி ஆலயத்தில் மேலவாயில் தெற்குவாயில் புதுக்கிக் கட்டி முன்னிடம் தளவரிசையிட்டும், ஆஸ்தான மண்டபம், விமானங்கள், இராஜகோ புரம் புதுக்கிக் கட்டி வர்ணம் வைத்தும், உட்பிராகாரம் தளவரிசை இட்டும், அம்மன் சந்நிதியில் ஆஸ்பெஸ்டாஸ்ஷீட் கொட்டகை அமைத்தும் வேலைசெய்து கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

மாயூரம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமிகோயில் :

ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி ஆலயத்தில் அடியிலிருந்து புதிதாகக் கருங்கல் திருப்பணிசெய்து சுற்று நீராழிமண்டபம் கட்டி விமானங்கள் அமைத்துப் புதிய ஆலய மாகத் திருப்பணி செய்யப்பட்டது. மேலப் பிராகாரத்திலும் மண்டபங்கள் கட்டிச் சுற்றுக்கோயில் மூர்த்தங்களும் மடைப்பள்ளியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. கல்கிணறு கட்டப்பட்டது. கோயில் அடியிடம் உயர்த்திக் கட்டப்பட்டிருக்கிறது. அம்மன் சந்நிதிக்குத் தெற்குவாயிலில் சுதை வேலைப்பாடுகளுடன் கட்டி இரும்புக் கதவுகளுடன் அழகிய வாயில் அமைக்கப்பட்டிருக்கிறது.

மாயூரம் குமரக்கட்டளை :

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் ஆஸ்தான மண்டபம் கட்டப்பட்டது. கருங்கல் தளவரிசை போடப்பட்டிருக்கிறது. குமாரவிலாசமண்டபம், ஸ்ரீ சுப்பிரமணியர் விமானம் பழுதுபார்த்துச் சுவாமி, அறுபத்துமூவர் மருந்து சார்த்திக் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. களஞ்சிய அறை, காரியாலயம் பழுதுபார்த்துச் செப்பனிடப் பட்டன.

விளநகர் :

ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார் ஆலயத்தில் விமானங்கள், இராஜகோபுரம் முதலியன பழுதுபார்த்துத் திருத்திச் சுதைபோட்டு வர்ணம் வைத்தும், வெளிப்பிரா காரம் உட்பிராகாரம் தளவரிசையிட்டும் கோயில் மதில்கள் பூசியும் பழுதுபார்த்தும் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது.

பறியலூர் :

ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமி ஆலயத்தில் விமானங்கள், கோபுரங்கள் பழுது பார்த்துப் புதுக்கி வர்ணம் வைத்தும், சந்நிதியில் ஒரு கொட்டகை அமைத்தும் வெளி மதில் உள்மதில் பழுதுபார்த்துப் பூசி வெள்ளை அடித்தும், காரியாலயம் புதிதாகக் கட்டியும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சந்நிதி விநாயகராலயமும் பழுதுபார்த்துத் திருத்திக்கட்டி வர்ணம் வைக்கப்பட்டது. திருக்குளம் படித்துறை பழுதுபார்க்கப் பட்டன.

திருக்கடவூர் :

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி ஆலயத்தில் எல்லா விமானங்களும், கோபுரங் களும் பழுதுபார்க்கப்பட்டு வர்ணம் வைக்கப்பட்டன. மண்டபங்கள் பழுதுபார்த்துப் பூசப்பட்டன். மதில்கள் பழுதுபார்த்துக் கட்டிப் பூசப்பெற்றன. சுவாமிகோயில் மேல வெளிப்பிராகாரம், உட்பிராகாரங்களில் கிழக்கு தெற்கு அம்மன்கோயில் பிராகாரங்கள், அர்த்தார்த்த மண்டபம் முக மண்டபம் கருங்கல் தளவரிசை இடப்பட்டது. நெற்களஞ் சியம், சுவாமிகோயில், அம்பாள்கோயில், ஆஸ்தான மண்டபம், நூற்றுக்கால் மண்ட பங்கள் பழுதுபார்த்துப் பூசப்பட்டன. சுவாமிகோவில் திருமாளிகைப்பத்திகள் இடிந்து போனவை எடுத்துக் கட்டப்பட்டன. சந்நிதியில் இரண்டு யாத்ரிகர் விடுதிகள் கட்டப் பட்டன. முன்புறம் சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. நந்தவனம் சுற்றுச்சுவர் எழுப்பப் பெற்றது. எதிர்காலேஸ்வரர் மற்றும் பிற கோயில்கள் ஆலய விமானங்கள் பழுது பார்த்துப் புதுக்கி வர்ணம் வைக்கப்பட்டன. மருந்து சார்த்திக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

திருவாரூர் இராஜன்கட்டளை :

கட்டளை சுவாமிகள் தங்குமிடம் எடுத்துக் கட்டப்பட்டது. மேல் புறத்தில் நூல்நிலையக் கட்டிடம் வேலை நடந்துவருகிறது. கிடாரங்கொண்டான் கிராமத்தில் உள்ள திருமதிற்சிறப்புடைய ஆலயப் புனருத்தாரண வேலை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திருக்குவளை :

ஸ்ரீ தியாகராஜசுவாமி ஆலயத்தில் இராஜகோபுரம் புதுக்கிக்கட்டிச் சுதை பூசப்பட்டது. உட்பிராகாரம் தளவரிசை செப்பனிடப்பட்டது. ஆஸ்தான மண்டபம் திருத்தப்பட்டது. பெருமளவில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பேரளம் :

ஸ்ரீ சுயம்புநாதசுவாமி ஆலயத்தில் இராஜகோபுரம் விமானங்கள் புதுக்கி வர்ணம் வைக்கப்பட்டது. இராஜகோபுரத்தை ஒட்டி நடப்புப் போடப்பட்டது. திருமதில் பழுதுபார்த்துப் பூசப்பட்டது.

காரைக்கால் தருமபுரம் :

ஸ்ரீ யாழ்மூரிநாதசுவாமி ஆலயத்தில் கோயில் விமானங்கள் பழுதுபார்த்துத் திருத்தி வர்ணம் வைக்கப்பட்டன. மருந்துசார்த்திக் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. ஒரு விடு வாங்கப்பட்டது.

குத்தாலம் :

ஸ்ரீ உக்தவேதீசுவரசுவாமி ஆலயத்தில் இராஜகோபுரம், உட்கோபுரம், விமானங்கள் திருத்திப் பழுதுபார்த்து வர்ணம் வைக்கப்பட்டன. சுவாமிகோயிலைச்சுற்றி ஐதிகச் சுதைவேலைகள் செய்யப்பட்டன. இராஜகோபுரத்தை ஒட்டி உள்ளே தளவரிசை இடப்பட்டிருக்கிறது. ஆஸ்தான மண்டபம் முதலியவை பழுதுபார்த்துப் பூசப்பட்டன. கோயிலின் வெளிப் பிராகாரத்திலிருந்த மண்மேடுகள் அப்புறப்படுத்தப்பட்டன. துவஜஸ்தம்பம் புதிதாக அமைத்து நந்தி மண்டபமும் கட்டப்பட்டது. காரியாலயம் புதியதாகக் கட்டப்பட்டது.

திருபுவனம் :

ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி ஆலயத்தில் உட்பிராகாரங்கள் தளவரிசையிடப் பட்டன. இராஜகோபுரத்திலிருந்து உட்கோபுரம் வரை கருங்கல் தளவரிசை இடப் பட்டது. காரியாலயம் கட்டப்பட்டிருக்கிறது. சிப்பந்திகள் குடியிருக்க 8 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இராஜகோபுரம் திருத்திக் கட்டிப் பழுதுபார்க்கப்பட்டு வருகிறது. மேற்கு வெளிப்பிராகாரத்தில் நந்தவனம், பழத்தோட்டம் அமைப்புக்குச் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருக்கிறது. பசுமடம் கட்டப்பட்டிருக்கிறது.

திருப்பனந்தாள் :

ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி ஆலயத்தில் காரியாலயம், களஞ்சியம் கட்டப் பட்டன. கீழே வெளிப்பிராகாரம் தெற்குப் பிராகாரங்களிலிருந்த மண்மேடுகளை அப்புறப்படுத்திப் பிராகாரம் தளவரிசையிடப்பட்டது. சுவாமி கோயில் உட்புறம் கருங்கல் தளவரிசையிடப்பட்டது.

திருவையாறு :

ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி ஆலயத்தில் பழனியாண்டவர் மண்டபம், நடப்புத் தளவரிசைகள் பழுதுபார்க்கப்பட்டன. சுவாமி சந்நிதி கட்டிடம் முன் முகப்பு வேலை செய்யப்பட்டது. தேருக்கு இரும்புத் தகட்டினால் அடைப்புப் போடப்பட்டது.

உய்யக்கொண்டான் :

ஸ்ரீ உஜ்ஜீவனநாதசுவாமி ஆலயத்தில் திருமடைப்பள்ளி திருக்குளம் படித் துறைகள் பழுதுபார்க்கப்பட்டன. விமானவேலைகள் நடைபெற்றுவருகின்றன. கோபுர வாயில்கள் முதலியன பழுதுபார்க்கப்படுகின்றன.

மணக்குடி :

ஸ்ரீ சுந்தரேசுவரசுவாமி ஆலயத்தில் உட்பிராகாரம் சுற்றுச்சுவர் பழுதுபார்க் கப்படுகிறது. விமான வேலை செய்து கும்பாபிஷேகம் செய்ய முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன.

கருங்குயில்நாதன்பேட்டை :

ஸ்ரீ சக்திபுரீசுவரசுவாமி ஆலயத்தில் பிராகாரம் தளவரிசை செய்யப்பட்டிருக் கிறது. குருக்கள் குடியிருப்புக்கு வீடு கட்டப்பட்டிருக்கிறது. நந்தவனம் புதிதாக அமைக்கப்பட்டிருக்கிறது.

திருநின்றியூர் :

ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி ஆலயத்தில் இராஜகோபுரம் விமானங்கள் பழுது பார்த்து வர்ணம் வைக்கப்பட்டன. இராஜகோபுரத்தை ஒட்டி வடபுறமுள்ள மண்டபம் பழுது பார்க்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தம் :

ஆதீன மடாலயம் கோயில்களின் நிலங்களில் அடியிற் கண்டவைகள் பண்ணையில் நேரடிச சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

ஆதீன மடம்	ஏ. 350
வேளூர்	ஏ. 428—30
சீகாழி	ஏ. 67—80
விளநகர் வார சாகுபடி.	ஏ. 12—90
திருக்கடவூர்	ஏ. 139—50

இராஜன்கட்டளை	ஏ. 191—10
திருக்குவளை	ஏ. 95—01
திருபுவனம்	ஏ. 106—56.
திருப்பனந்தாள்	ஏ. 18—17
திருவையாறு	ஏ. 39—66
மாயூரம் குமரக்கட்டளை	நஞ்சை 42—45 புஞ்சை 5—17 ஆக 47—62
மாயூரம் வள்ளலார்கோயில்	ஏ. 17—03

கூட்டுறவுச் சாகுபடிக்கு அடியிற்கண்ட கிராமங்கள் விடப்பட்டிருக்கின்றன.

திருபுவனம் தேவஸ்தானம்	
வக்காரமாரி	ஏ. 240—35
மேலராமன்சேத்தி நஞ்சை புஞ்சை	ஏ. 227—21
குத்தாலம்	செ. 114
திருவையாறு	ஏ. 114—86
திருக்குவளை	ஏ. 232—28
இராஜன்கட்டளை	
கிடாரங்கொண்டான்	ஏ. 71—36
கள்ளிக்காடு நஞ்சை	ஏ. 44—89 புஞ்சை ஏ. 8—71. ஆக 124—96.
வேளூர்	
கதிராமங்கலம்	ஏ. 193—85
மருவத்தூர்	ஏ. 130—94
சீகாழி	ஏ. 26—41
திருப்பனந்தாள்	ஏ. 67—53
திருக்கடவூர்	
வடக்குவெளி நஞ்சை	ஏ. 59—53½
நக்ஷத்திரமாலை நஞ்சை	ஏ. 68—74 புஞ்சை ஏ. 1—18 ஆக 129—45½

பல லட்சக்கணக்கான சவுக்கை, பல நூற்றுக்கணக்கான மா, பலா, பல ஆயிரக்கணக்கான தென்னை, மூங்கிற்கொத்து முதலிய தோப்புகள் அமைக்கப் படுகின்றன. எலுமிச்சை, நாரத்தை, பலா முதலிய அபிஷேகத்துக்கு உபயோகமாகும் பழ மரங்களும் நடப்படுகின்றன. நந்தவனங்கள் விரிவாக்கிப் பராமரிக்கப்படு கின்றன. பெரும்பாலும் எல்லாக் கிராமங்களும் நேரடிச் சாகுபடி செய்யுங் குடிமக்க ளுக்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பசுமடங்கள் :

கருங்குயில்நாதன்பேட்டை, மணக்குடி, திருநின்றியூர், திருமுல்லைவாயில் போன்ற மிகச் சிறிய ஆலயங்கள் தவிர மற்ற எல்லா இடங்களிலும் பசுமடங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆதீனமடாலயம், வேளூர், சீகாழி, இராஜன்கட்டளை, திருபுவனம், திருப்பனந்தாள் இவற்றில் உள்ள பசுமடங்கள் மிகப் பெரியவை. பொதுவாக அபிஷேகம் ஆனவுடன் அங்கங்கும் உள்ள சிறுவர்களுக்குப் பாலை வினியோகிக்கச் செய்திருக்கிறது. நீண்டகாலமாக நின்றிருந்த விழாக்கள் மீண்டும் சிறப்புற நடத்தப்படுகின்றன.

சீகாழி ஸ்ரீ முத்துச்சட்டைநாதர் அபிஷேகம், புறப்பாடு, திருஞானசம்பந்தர் அபிஷேகம். பேரளம், திருக்குவளை, பிரமோத்சவங்கள். திருமுல்லைவாயில் திருக்கார்த்திகை. கருங்குயில்நாதன்பேட்டை, குத்தாலம், பறியலூர் கார்த்திகைஞாயிறு. வேளூர் கார்த்திகைத் திருநாட்கள், ஆடி, தைமாத சுக்கிரவாரங்கள் முதலியன விரிவு படுத்தி நல்ல முறையில் நடத்தப்படுகின்றன.

திருவாபரணங்கள் :

ஆதீன மடத்திலுள்ள திருவாபரணங்கள் எல்லாம் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பட்டன. கிரீடம் ஒன்று கல்வைத்து இழைக்கப்பட்டது. புதிதாகவும் பல செய்யப்பட்டுள்ளன.

பூஜை மடத்து வாயில் நிலையும் கதவும் வெள்ளித் தகடு வேயப்பட்டன. தங்கக் குடம், வெள்ளிக் குடம், வெள்ளிச் சொம்புகள், வெள்ளி நாற்காலி சவாரி, ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு வெள்ளிக் குவளை, நந்திப் பார்வைத்தகடு, ஸ்ரீ மகாலட்மி துர்க்கைக்கு வெள்ளிக் கவசம் முதலியன செய்யப்பெற்றன.

வேளூர் :

தங்கத்தில் :- குடம் 3, அபிஷேக கலசம் 1, கற்பூரக் கிளை 1, பிரசாதத் தாம்பாளம் 1, சகஸ்ரதாரை 1.

கவசங்கள் :- சுவாமிக்கு நாகாபரணம், குவளை; அம்பிகை, ஆறுமுகக்குமாரர், விநாயகர் ஆகிய மூர்த்திகளுக்குக் கவசங்கள்.

வெள்ளியில் :- மண்டப விளக்குகள் 2, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி மஞ்சம் பார்வைத்தகடு, அபிஷேகவேதி, வெள்ளிக் குடங்கள், வெள்ளி அண்டாக்கள், சொம்புகள், கூஜா, பிரசாதத் தாம்பாளம், பூக்கூடலைகள்; ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிசந்நிதி நிலைக் கதவுகள், ஸ்ரீ அம்பாள்சந்நிதி நிலைக் கதவுகள்.

கவசங்கள் :- பழநியாண்டவர், அங்காரகன், துர்க்கை, தக்ஷிணாமூர்த்தி, உள்நந்தி, கண்ணாடி, அங்காரகன் உத்சவர், பள்ளியறைப்பல்லக்கு, மூஞ்சூர், ரிஷபம், தங்கமுலாமிட்ட மயில் வாகனம், ஸ்ருவம்.

இவைகளைப் பந்தோபஸ்தாக வைக்கப் பெரிய காட்ரெஜ் இருப்புப் பெட்டிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. மகத்துவஜத்திற்குப் புதுமரம் வாங்கி நிறுத்தித் தங்கமுலா மிட்ட குவளைகள் போடப்பட்டிருக்கின்றன.

சீகாழி :

தங்கக் கவசம் :- அம்பிகை திருஞானசம்பந்தர் முதலிய மூர்த்திகளுக்குச் செய்யப்பட்டன. தங்கக் குடம் 1, காசுமாலை, மாங்காய்மாலை, பதக்கங்கள்.

வெள்ளியில் :- சுவாமிக்குக் குவளை, நாகாபரணம், அம்பிகைக்குக் கவசம், திருஞானசம்பந்தருக்கு மஞ்சம், ரதம். குடம் 3, சொம்புகள் 8, சோடசோபசார சாமான்கள், தாம்பாளம்.

கோறுக்கை :

திருவாபரணம் :. மகரிமாலை, மகரித்தொங்கல், பதக்கம்.

வெள்ளியில் :- விபூதி மடல், கற்பூரக்கிளை, கமலத்தாம்பாளம், சம்ஹார மூர்த்திக்கு வெள்ளி மஞ்சம், பெருமானுக்கு நாகாபரணம், குவளை முதலியன அம்பிகைக்கு வெள்ளிக் கிரீடம்.

ஆச்சாள்புரம், முல்லைவாயில், நின்றியூர், காரைக்கால் தருமபுரம், தலைஞாயிறு; விளநகர், பறியலூர், குத்தாலம், திருக்குவளை, இராஜன்கட்டளை,

வெள்ளி விபூதி மடல், கற்பூரக்கிளை, கமலத்தாம்பாளம்.

வள்ளலார்கோவில் :

மேதா தக்ஷிணாமூர்த்திக்குத் தங்கக்கவசம்.

வெள்ளி :- மேதா தக்ஷிணாமூர்த்திக்கு திருவாசி, கல்லாலமரம். துர்க்கைக்கும், சனிஸ்வரபகவானுக்கும் கவசங்கள், கற்பூரக்கிளை, விபூதி மடல், கமலத்தாம்பாளம்.

திருப்பனந்தாள் :

வெள்ளியில் தாம்பாளம், குடம், திருவாசி முதலியன.

திருக்கடவூர் :

சம்ஹாரமூர்த்திக்குத் தங்கக் கவசம். அபிராமி அம்பிகைக்குத் தங்கக் கிரீடம் காசுமாலை, மாங்காய்மாலை, சக்ரதாடங்கம். ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்குத் தங்கத்தில் பூணூல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வெள்ளிக் கவசங்கள் :- கள்ளவாரணப்பிள்ளையார், பெருமானுக்குக் குவளை, பார்வைத்தகடு, ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி மஞ்சம், யானைவாகனம். சோடசோபசார சாமான்கள், கற்பூரக்கிளை, பிரசாதத் தாம்பாளம், விபூதிமடல், குடங்கள், விடங்கர் வெள்ளிப் பெட்டகம். வெள்ளித்தகடுபோட்ட மயில் வாகனம், மூஷிக வாகனம், பிரதோஷ ரிஷப வாகனம்.

திருபுவனம் :

திருவாபரணங்கள் :- வெள்ளி சோடசோபசார சாமான்கள், ஸ்ரீ சரபமூர்த்திக்கு வெள்ளிக் கவசம், வெள்ளிப் பார்வைத்தகடும், வெள்ளிக் குடம் மூன்றும் செய்து வாங்கப்பட்டன. தவிர கல்லிழைத்த பதக்கங்கள் 4 கொண்ட ஒரு செட்டும் செய்யப்பட்டது. ஸ்ரீ சரபமூர்த்தி உற்சவர்க்கு வெள்ளி மஞ்சம் ஒன்றும் செய்யப்பட்டுவருகிறது. வெள்ளி ரதம் ஒன்றும் செய்யப்பட்டுவருகிறது.

திருவையாறு :

திருவாபரணங்கள் :- பவுன் காசுமாலை 3, பவுன் யக்ஞோபவீதம் 2, மாங்காய்மாலை 1, வெள்ளி - தங்கமுலாம் பூசிய கிரீடம் 1 வெள்ளிப் பவுன் பதக்கங்கள் 3 செட்.

திருக்குவளை :

சுவாமிக்கு நாகாபரணம், வெள்ளிக் குடம், வெள்ளி மஞ்சம், வெள்ளிக் குத்துவிளக்கு.

பேரளம் :

நாகாபரணம் வெள்ளியில் செய்யப்பட்டிருக்கிறது.

குமரக்கட்டளை :

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தங்கக் கவசம்; அம்பாளுக்குக் கவசம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

பறியலூர் :

நாகாபரணம் வெள்ளியில் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

விளநகர் :

நாகாபரணம் வெள்ளியில் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

தேவாரப்பதிகம் கல்வெட்டு :

அடியிற்கண்ட தலங்களில் அவ்வத்தலப் பதிகம் பொறித்த கல்வெட்டுக்கள் பதிப்பிக்கப்பெற்றன. 1. வேளூர், 2. சீகாழி, 3. திருக்கடவூர்ப் பதிகமும் அபிராமி அந்தாதியும், 4. விளநகர், 5. பறியலூர், 6. கொறுக்கை, 7. ஆச்சாள்புரம், 8. திருக்குவளை, 9. திருவாரூர் (மீளா அடிமைப் பதிகம்), 10. மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம், 11. திருக்கழுக்குன்றம் மலைக்கோவில், 12. சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் ஆலயம், 13. திருவேட்களம் ஸ்ரீ பாசுபதேசுவரசுவாமி ஆலயம்.

மருத்துவம் :

சிங்கிப்பட்டி மகாத்மாகாந்தி நினைவு க்ஷயரோக நிவாரண விடுதிக்கு ரூ. 10,000 கொடுத்து ஒரு பெரிய வார்டு கட்டச்செய்யப்பட்டது. பின்னும் சில ஆண்டுகள் பராமரிப்பு செலவுக்குக்கூட ஆதீன மடம் கோவில் நிதியிலிருந்து உதவி அளிக்கப்பட்டது.

தஞ்சை தலைமை ராஜா சரபோஜி மிராசுதார் ஆஸ்பத்திரியில் நர்ஸ் விடுதிக்கு ரேடியோ வாங்கி அளிக்கப்பட்டது.

மாயூரத்தில் பெண்கள் குழந்தைகள் நலன்கருதி மகப்பேறு இல்லம் லக்ஷ ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் கட்டி 18 படுக்கைகளும் அவற்றிற்குவேண்டிய எல்லாக் கருவிகளும் உபகரணங்களும் வாங்கி அளித்திருக்கின்றார்கள். இப்பொழுது அது இந்தப்பகுதியிலேயே சிறந்த ஒரு மருத்துவ விடுதியாக விளங்கிவருகிறது. பின்னும் அதனை நடத்த மாயூரம் நகராட்சியாளருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 7500—00 வீதம் அளிக்கப்பட்டுவரப்பட்டது.

சிறுவார்தரு ஓமந்தூர் ரெட்டியார் மருத்துவ விடுதியில் ஒரு வார்டு கட்ட ரூ. 4000 நிதி உதவி அளிக்கப்பட்டது. இரண்டாவது உலகமகாயுத்தத்தில் மருத்துவ விடுதியில் பயன்பட ஆதீனத்திலிருந்த (Air Conditioning Unit) குளிர்பதன சாதனத்தையும் மோட்டார் வானையும் அளித்திருக்கிறார்கள்.

தஞ்சைப் புயல் நிவாரணம், ஆந்திரப் புயல் நிவாரணம், வெள்ளத்தில் துன்பங்கள் ஏற்பட்டபொழுதெல்லாம் வேட்டி புடவைகளும், சட்டைத்துணிகளும்

அரிசியும், பொருள் உதவியும் அளித்திருக்கிருர்கள். ஆயிரமாயிரமாக அகதிகளுக்கு நிவாரண உதவியும் அளிக்கப்பட்டது. பஞ்சநிலைமை ஏற்பட்ட காலங்களில் எல்லாம் அரிசியும் பொருள் உதவியும் அளிக்கப்பட்டன.

அன்னதானம் :

ஆதீன மடத்திலும், ஆலய விழாக்களிலும், மகாகும்பாபிஷேகக் காலங்களிலும் மக்களுக்கு அன்னம்பாலிப்பு நடத்தப்படும். திருநள்ளாறு சனிப்பெயர்ச்சி, வெளியார் நடத்தும் ஆராதனைகள், கும்பாபிஷேகங்கள் போன்ற நிகழ்ச்சிகளிலும் பெருமளவில் அன்னதானம் நடத்தப்படும். எளிய மக்களுக்கு அடிக்கடி எண்ணெய் முதலியன வழங்கி முழுகச்செய்து அன்னமளிக்கப்படுகிறது.

குடிதண்ணீர் வசதி :

தாமாய் இயங்குங்குழாய்கள் அமைத்து மக்களுக்குக் குடிதண்ணீர் உதவப் படுகிறது. 1. தருமபுரம், 2. வேளூர் (நான்குவீதிகளிலும்), 3. மாயூரம் குமரக்கட்டளை, பெண்கள் மருத்துவ விடுதி, 4. திருக்கடவூர், 5. திருவாரூர் இராஜன்கட்டளை, 6. திருபுவனம், 7. சீகாழி. பணியாளர், அகதிகள் முதலியோருக்கு ஓரளவு உதவிகள் அளிக்கப்படுகின்றன.

வார வழிபாடு :

பல இடங்களிலும் மக்களைத் திரட்டி வார வழிபாட்டு முறையில் ஆலய தரிசனம் செய்யும்படிச் செய்திருக்கிறது. அவற்றுள், குடந்தைச் சிவனடியார் திருக் கூட்டம், மாயூரம் ஸ்ரீகுருஞானசம்பந்தர் வார வழிபாட்டுக் கழகம், சென்னை மாதாந்தர வழிபாட்டுக் கூட்டம், நெல்லை - தருமை அருள்பெறு அருணகிரி இசைக்கழகம் முதலியன சிறந்து விளங்குகின்றன.

நிதி உதவி :

பொதுவாகக் கல்வி நிலையங்களுக்குக் கட்டிட நிதி, பராமரிப்பு நிதிகளுக்குப் பெருமளவில் நிதி உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. 1. கன்யா வித்யாலயம், காஞ்சிபுரம். ரூ. 5000. 2. ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர். 55,000. 3. மாவட்ட உயர்நிலைப்பள்ளி, வைத்தீசுவரன்கோயில். 4. தேசிகவிநாயகம் பிள்ளை கிழமூங்கிலடி, சிதம்பரம். 5. கஸ்தூரிபா கன்யா குருகுலம், வேதாரண்யம். 6. திரவியம் தாயுமானவர் ஹிந்து கல்லூரி, திருநெல்வேலி. 7. கோயம்புத்தூர் இராம கிருஷ்ண திருக்குறள் ரூ. 2500. 8. தமிழ் இசைச் சங்கம் ரூ. 750. 9. திருவள்ளுவர் ஆலயம் ரூ. 1000. இவைபோன்ற பல.

கட்டடத் திருப்பணி, கும்பாபிஷேகங்களுக்கு நிதி உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன :- 1. மதுரை ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம். 2. திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி ஆலயம். 3. பழநியாண்டவர். 4. பவானி. 5. நெல்லையப்பர்கோயில். 6. ஸ்ரீரங்கம் ரங்கநாதர் திருமேனி. 7. திருச்சி மலைக்கோட்டை .

தொண்டுகள் :

1. நித்திய பூஜை, ஏறுபடிகள், 2. திருப்பணி, 3. சொத்துப் பராமரிப்பு, 4. திருவாபரணம் வகையரா, 5. பொதுநலத்தொண்டு. 6. கல்வி நிலையங்கள் உதவி.

இவர்கள் காலத்தில் பட்டம் பெற்றவர்கள் :

தமிழ்நாடு அறநிலைய அமைச்சர், கனம். திரு. M. பக்தவத்சலம்	" நல்லறங்காவலர் "
திரு. R. P. சேதுப்பிள்ளை	" சொல்லின் செல்வர் "
திரு. T. P. மீனாட்சிசுந்தரம் பிள்ளை	" பல்கலைச் செல்வர் "
திருமதி. E. T. இராஜேசுவரி அம்மையார்	" விஞ்ஞானச் செல்வி "
வித்துவான், கி. வா. ஜகந்நாதன் M. A.,	" செந்தமிழ்ச் செல்வர் "
திரு. அ. சிதம்பரநாதன் செட்டியார்	" செந்தமிழ்க் காவலர் "
திரு. சிவராமன்	" சித்தாந்தச் செல்வர் "
திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்	" முத்தமிழ் வித்தகர் "
திரு. T. M. P. மகாதேவன்	" வேதாந்த வித்தகர் "
புலவர், சி. குழந்தையம்மாள் M L. A.	" செந்தமிழ்ச் செல்வி "
திரு. அ. ஸ்ரீநிவாசராகவன் M. A.,	" செந்தமிழ்ச் செம்மல் "
வித்துவான், சி. அருணைவடிவேல் முதலியார்	" ஆதீனத் தமிழ்ப்புலவர் "
திரு. S. ருத்திரபதி M. A.,	"
சிவத்திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்	" சிவாகம வித்துவான் "
பிர்மஸ்ரீ. K. முத்துஜோதிடர்	" ஜோதிஷார்ணவம் "
திரு. V. இராமநாத அய்யர்	" சிவநேசச் செல்வர் "
திரு. T. S. தியாகராஜ அய்யர்	" சிவார்ச்சனைச் செல்வர் "
திரு. எம்பார். விஜயராகவாச்சாரியார்	" தருமபுர ஆதீன வித்துவான் "
திருமதி. K. B. சுந்தராம்பாள்	" ஏழிசை வல்லபி "
திரு. M. K. தியாகராஜ பாகவதர்	" ஏழிசைச் செல்வன் "
திருமதி. N. C. வசந்தகோகிலம்	" கானசூடாமணி "
திரு. G. வரதராஜ பிள்ளை	" திருக்குறள் வேள் "
திரு. V. சுந்தரேச வாண்டையார்	" கல்வெட்டாராய்ச்சிக்கலைஞர் "

தேர்கள் :

ஆதீன மடத்திற்கு இரண்டு. வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு ஒன்று, திருக்கடவூருக்கு ஒன்று செய்யப்பட்டிருக்கின்றன.

பெரியோர் வருகை :

ஆதீனத் திருமடத்திலும் அதன் ஆட்சியிலுள்ள பல ஸ்தாபனங்களிலும் பல பெரியோர்கள் வந்து தரிசித்து மகிழ்ந்திருக்கிருர்கள்.

1. ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் காஞ்சி காமகோடி பீடம். 2. ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், சிருங்கேரி மடம், 3. திருவாவடுதுறை, குன்றக்குடி, மதுரை, சூரியனுர்கோவில், செங்கோல் ஆதீனம் முதலிய சைவப் பெரும் மடங்களின் மகாசந்நிதானங்கள். 4. மயிலம், சாந்தலிங்கமடம், கௌமார மடம், அம்பலத்தாடிகள் மடம் தலைவர்கள் (வீர சைவ மடங்கள்). 5. ஸ்ரீ சுவாமி. சிவாநந்த மகராஜ், சுவாமி வித்யானந்த சரஸ்வதி மகராஜ், ஸ்ரீ முக்தாநந்த சரஸ்வதி மகராஜ் முதலிய இமயப் பெரு முனிவர்கள். 6. இந்திய ஜனுதிபதி, உபஜனுதிபதி, அமைச்சர்கள், பாரதநாட்டு உயர்நீதிமன்ற நீதிபதிகள். 7. நமது ராஜ்ய கவர்னர், அமைச்சர்கள், நீதிபதிகள் 8. நாட்டுப் பேரறிஞர்கள், புலவர்கள் முதலியோர்கள்.

யாத்திரை :

யாத்திரையால் அநுபவம் பெருகும் என்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருவுளம்பற்றுதல் வழக்கம். பாடல்பெற்ற தலங்களில் ஈழநாட்டுத் தலங்களும் சோழநாட்டில் இரண்டு மூன்று நீங்கலாக மற்றவை முழுவதும் தரிசனம் பார்த்திருக்கிருர்கள். மலையாளநாட்டுத் தலங்களும், பன்னிரண்டு ஜோதிர்லிங்கத் தலங்களும் திருப்பதி, மைசூரில் சாமுண்டீஸ்வரி, நஞ்சன்கூடு, ஸ்ரீ ரங்கம், வடமதுரை, கல்கத்தா காளி, நேபாலத்திலுள்ள ஸ்ரீ பசுபதிநாதர், குஹ்யேஸ்வரி, காஷ்மீரத்திலுள்ள ஸ்ரீ அமரநாதம், ஜம்முவிலுள்ள சூரியர்கோயில் முதலிய பெருந்தலங்களையும் யாத்திரை சென்று தரிசித்திருக்கிருர்கள். இமயத்திலுள்ள கேதாரம், ரிஷிகேசம், வைத்தியநாதம், பாகேஷ்வரம், ஜாகேஷ்வரம், நந்தகோட், தார்தகுண்ட், நந்தாதேவி திரிசூலி, பஞ்சசூலி, கைலாசநாதம் முதலிய தலதரிசனம் செய்திருக்கிருர்கள்.

நம்நாட்டிலுள்ள சப்தநதிகளிலும், கீழ்கடல், மேல்கடல், குமரிக்கடல், மந்தாகினி, பாகீரதி, அமரநாதத்திலுள்ள அமராவதி, நேபாலத்தில் பாங்மதி, குஜராத்தியிலுள்ள சரஸ்வதி, சட்லீஜ், ஜீலம், செனுப், (சதத்ரு) சரயூ, கைலாசத்திலுள்ள கபிலைநதி, மானசசரோவம், ராக்ஷஸ்தால் முதலிய புண்ணிய நதிகளிலும், காவிரிப்பூம் பட்டினம், தனுஷ்கோடியிலுள்ள கோடி தீர்த்தத்திலும், திருச்செந்தூர் கடலிலும், தாம்ரவருணி, பாபநாசம், பொங்குமாகடல், வாணதீர்த்தம் முதலிய பல நதி தீர்த்தங்களிலும், கடல் துறைகளிலும், திருமஞ்சனம் செய்திருக்கிருர்கள்.

இந்தியாவிலுள்ள உலக அதிசயங்களான, தங்கக்கோவில், தாஜ்மஹால், குதுப்மினுர், அக்பர் கோட்டை, (அலகாபாத் ஆக்ரா) செங்கோட்டை,

இராமகிருஷ்ண மடம், சாரநாத் முதலிய பலவற்றையும் கண்டு வந்திருக்கிறார்கள். இமயமலையில் பல அற்புதக் காட்சிகளையும் கண்டிருக்கிறார்கள்.

இவ்விதமாக இமயமுதல் குமரிவரையிலும், இமயங்கடந்து அப்பாலும், கல்கத்தாவிலிருந்து சோமநாத் (குஜராத்) வரையிலும் இந்தப் பாரதபூமியிலுள்ள எல்லாப் பெருந் தலதரிசனமும், நதிகளில் திருமஞ்சனமும், இந்தநாட்டை முப்புறத்தாலும் சூழ்ந்துள்ள கடல்துறைகள் பலவற்றிலும் திருமஞ்சனமும் செய்திருக்கிறார்கள். தவத்திலும், குருவார மௌன உபவாசம், சஷ்டி ஆறுநாளும், மௌன உபவாசமும் கடைப்பிடித்து வருகிறார்கள்.

அடியார்களைக் கண்டால் அவர்களுக்கு நல்லாடையும், பொருள் உதவியும், அன்னமளித்தும் பாராட்டும் சீலமுடையவர்கள்.

ஸ்ரீ காசி விசுவேசரைப் பாலுள் மூழ்குவித்தும், லட்டால் அபிஷேகித்தும் மகிழும் செயலுடையவர்கள். திருப்பதியில் பெருமாளுக்குப் பால் அபிஷேகம் செய்து பாற்கடலில் திளைக்கச்செய்து மகிழ்ந்தார்கள்.

கோடி லட்சார்ச்சனைகள், பெருந் திட்டத்தில் அபிஷேகங்கள், ருத்ராக்ஷம் முதலியன வாங்கிவந்து அன்பர்களுக்கும் அடியவருக்கும் வழங்குதல், அடிக்கடி ஸ்ரீ காசி சென்று கங்கை எடுத்துவந்து ஆதின ஆலயங்கள், குருமூர்த்தங்களுக்கு அபிஷேகித்து மகிழ்தலும், கட்டிடங்கள் கட்டுதல், கோயில் புதுக்குதல், கும்பாபிஷேகங்கள் செய்தல், பெருமானுக்கு அலங்காரம் செய்து பார்த்தல், தங்கத்தாலும், வெள்ளியாலும், நவரத்தினங்களாலும், கவசங்கள், திருவாபரணங்கள், வாகனங்கள், பூஜா உபகரணங்கள் முதலியன செய்தல், செய்து பிறகோயில்களுக்கு அளித்தல். அன்னதானம், ஆடை அளித்தல், கல்விஸ்தாபனங்களைப் பராமரித்தல், வெளியாருக்கு உதவி நிதி அளித்தல், மாணவர்கட்கு உண்டி, பள்ளிச் சம்பளம், உடை வழங்குதல், திருமுறை கேட்டல், கேட்பித்தல், மாநாடுகள் கூட்டுதல், கூட்டுவோருக்கு உதவுதல், புத்தகங்கள் வெளியிட்டு வழங்குதல், புத்தக வெளியீட்டுக்கு உதவி இவைபோன்ற வழிகளில்தான் செலவு மிகுதியாக இருக்கும். தனிப்பட்டவர் நலம் மட்டிலும் உள்ளவைகளில் ஈடுபடா.

இறைபணி, மக்கள்பணி, கல்விப்பணி முதலிய தொண்டுகளில் இந்த நிலையில் நாளும் வளர்ச்சியும் பெறுகின்ற இவ்வாதீனம் மக்கள் பாராட்டும் பெற்றுப் பெருமை பெருகும் வழியில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் ஆட்சி ஓங்கி வருகிறது.

வாழ்க கயிலைக் குருமணி!

வளர்க அவர்கள் நல்லாட்சி!

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாங் கல்வி கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயோன் றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த் தொண்டர்களே.

திருவார் கமலைப் பதிவாழ்க அப்பதிசேரும் நின்றன்
மருவார் மரபும் திருநீறும் கண்டியும் வாழ்கஅருட்
குருவாகும் நின்றன் திருக்கூட்டம் வாழ்கநற் கோநிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான சம்பந்த தேசிகனே.